N211.32 N73
N74·111
6 3077

Iss.. d—10—1—1974]

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

TUESDAY 20th NOVEMBER 1973

Volume CXI—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

*Legislative Council Department*
*Fort St. George, Madras-9.*

PRICE 35 *Paise*]

# Tamil Nadu Legislative Council Debates

FORTY-SIXTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

20TH TO 24TH NOVEMBER 1973.

(*VOLUME CXI—Nos.* 1 *to* 5.)

TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| *Tuesday, 20th November* 1973 | |
| Personnel of the Government of Tamil Nadu .. | i–v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Council .. .. .. .. .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies .. .. | ix–xi |
| I Condolence Resolution *re* demise of Thiru R. Krishnaswamy Naidu, M.L.C. .. .. | 1–9 |
| II Announcement *re* deciision of the Business Advisory Committee .. .. .. | 10 |
| *Wednesday 21st November* 1973 | |
| I Questions and Answers .. .. .. | 11–46 |
| II Panel of Vice-Chairmen .. .. .. | 47 |
| III Calling attention to irregularities in muster rolls of Electricity Department and arrest of employees of Corporation of Madras .. .. .. | 47–53 |
| IV Discussion on the Tamil Nadu State Electricity Board Budget for 1973–74 .. .. .. | 53–90 |
| V Papers laid on the table of the House .. .. | 90–109 |

V211,32 N73
N74.111




| | PAGES |
|---|---|
| *Thursday, 22nd November 1973* | |
| I Questions and Answers .. .. .. .. | 125–171 |
| II Discussion on the Tamil Nadu Electricity Board Budget for 1973–74 and Supplementary Budget for 1972–73—*cont.* .. .. .. .. | 171–204 |
| III Papers laid on the table of the House .. .. | 204–206 |
| *Friday, 23rd November 1973* | |
| I Questions and Answers .. .. .. .. | 231–269 |
| II Adjournment motion *re* arrest of Law College students on 21st November 1973 .. .. | 269–275 |
| III Presentation of Twenty-third Report of the Committee on Government Assurances .. .. | 275–276 |
| IV Discussion on the Tamil Nadu Electricity Board Budget for 1973–74 and Supplementary Budget for 1972–73—*cont.* .. .. .. .. | 276–317 |
| V Papers laid on the table of the House .. .. | 317–319 |
| *Saturday, 24th November 1973* | |
| I Question and Answers .. .. .. .. | 363–373 |
| II Presentation of the First Supplementary Statement of Expenditure for 1973–74 .. .. .. | 373–379 |
| III Presentation of the Statement of Demands for Grants for Excess Expenditure for 1968–69 .. | 379 |
| IV Resolution *re* extension of educational concessions, scholarships and other benefits to all poor and socially downtrodden students irrespective of caste or religion .. .. .. .. | 380–418 |
| V Papers laid on the table of the House .. .. | 418–419 |
| Index .. .. .. .. | 425–480 |


63099

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu:

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge of Backward Classes, Information and Public Relations, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU, Minister in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASAMI, Minister in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர் :

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)** : கீழ்க்
ண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—பொதுத்துறை,
நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர்
தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி
(ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள்,
காவல் துறை, தேர்தல்கள், திரைப்படத் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—
தொழில் நுட்பக் கல்வி உள்பட கல்வி, ஆட்சிமொழி, சட்ட
மன்றம், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன் (நல்வாழ்வுத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—
பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்-குடி-நீர்
வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப்
பொறுப்பு வகிப்பார்.—பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி
விளம்பரம், பத்திரப்பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள்,
சேரணி, இளைஞர் அணி, பூதான-கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)** : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு
வகிப்பார்.—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனளம்,
இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள்,
கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள்,
அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகித கட்டுப்
பாடு, பயண அனுமதிச் சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (பொதுப் பணித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உள்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள் கனிப் பொருள்கள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்—பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (வருவாய்த் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் (வேளாண்மைத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மை பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—தொழிலாளர், வீட்டுவசதி, இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள்—அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், குடிசை மாற்று வாரியம்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—போக்குவரத்து, நாட்டுடமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்.—அறக்கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் உற்பத்தி, பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால் பண்ணை வளர்ச்சிக் கழகம்.

## தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முக்கிய அலுவலர்கள்.

### சட்டமன்ற மேலவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சிற்றரசு.

### சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. எஸ். டி. ஆதித்தன்.

திரு. என். வில்சன் அப்பலோஸ்.

திரு. எஸ். நாராயணசாமி.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்.

### சட்டமன்றச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

### விவாதப் பதிப்பாளர்

திரு. தா. கோதண்டராமன், பி.ஏ., பி.ஜி.எல்., பி.எல்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அப்துல் வகாப், கே. எஸ். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 2 அய்யணன் அம்பலம் | மதுரை உள்ளாட்சி மன்றம். |
| 3 அறிவழகன், கே., எம்.ஏ. | சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி. |
| 4 அறிவுடைநம்பி, புலவர் ஓ. | வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி. |
| 5 அனிபா, நாகூர், ஈ.எம். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல். | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 7 ஆறுமுகசாமி, எம். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 8 இராசகோபால், சி. வி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்). | மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 11 இராணி அண்ணாதுரை | சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ். | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 13 இராமசுப்பையா, காரைக்குடி | நியமனம். |
| 14 இராமநாதன், எம். | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி. | மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி. |
| 16 இராஜு, ஜி. என். | மாநிலச் சட்டப் பேரவை. |
| 17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்). | தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள். |
| 18 கணபதி, கே. எஸ். | தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள். |
| 19 கணேசன், சா. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 20 காட்டூர் கோபால் | மாநிலச் சட்டப் பேரவை. |
| 21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம். | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 22 குன்றக்குடி அடிகளார், தவத்திரு. | நியமனம். |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 23 கோலப்பா, சி. ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 24 சக்தி மோகன், ஆர். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 25 சங்கரலிங்கம் பிள்ளை, எம். .. | திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள். |
| 26 சந்தோஷம், டி., எம்.ஏ., பி.எல். | தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள். |
| 27 சாம்பசிவம், இரா. .. .. | தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 28 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்). | நியமனம். |
| 29 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 30 சுந்தரேசத் தேவர், என். .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 31 சுவாமிநாதன், ஜி., பி. பார்மஸி .. | தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள். |
| 32 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி. | கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 33 தங்கப் பாண்டியன், வி., பி.ஏ.,பி.டி. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 34 தாமோதரன், ஏ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்). | தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள். |
| 35 திருஞானசம்பந்தம், பி. .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 36 தென்னரசு, எஸ்.எஸ். .. .. | நியமனம். |
| 37 தேவராஜ், வி. எம். .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 38 நடராசன், என். வி. (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 39 நடராசன், எம். கே. டி. .. .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 40 நாராயணசாமி, பி. (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்). | மாநிலச் சட்டப் பேரவை. |
| 41 நாராயணசாமி, டி. வி. .. .. | நியமனம். |
| 42 நாராயணசாமி, எஸ். .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 43 பகவதி, டி. கே. .. .. | நியமனம். |
| 44 பக்கர், எம். எம். .. .. | நியமனம். |
| 45 பராங்குசம், ஜி. (அரசாங்க கொறடா). | மாநிலச் சட்டப் பேரவை. |

| தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும். | தொகுதி. |
| --- | --- |
| (1) | (2) |
| 46 பலராமன், எல். .. .. .. | வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 47 பொன்னுவேலு, டி. கே. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 48 மணி, கே. எஸ். .. .. .. | தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 49 மாசிலாமணி, எம். .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 50 முத்து, பி. டி. .. .. .. | சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 51 முத்து, எஸ். .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 52 முத்துகிருஷ்ணன், டி.வி. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 53 முத்துசாமி, எஸ். .. .. | சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள். |
| 54 ரசல்ராஜ் .. .. .. | நியமனம். |
| 55 வசந்தபாய், ஜி. .. .. .. | சென்னை மாவட்ட பட்டதாரிகள். |
| 56 வில்சன் அப்பலோஸ், என். .. | கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 57 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். .. | திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 58 வெங்கா, வி. .. .. .. | செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 59 வெள்ளபாண்டியன், எஸ். .. | திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 60 ஜனார்த்தனம், ஏ.பி. .. .. | நியமனம். |
| 61 ஜார்ஜ் கோமகன் .. .. .. | மாநிலச் சட்டப் பேரவை. |
| 62 ஜெயராம் ரெட்டியார், எஸ். .. | இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி. |
| 63 வெற்றிடம் .. .. .. | |

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் கூடும் சட்ட மன்ற மேலவையின் நாற்பத்தி ஆருவது கூட்டத் தொடர்.

செவ்வாய்க்கிழமை, 1973 நவம்பர் 20.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 1. இரங்கற் தீர்மானம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு, எம்.எல்.சி., அவர்கள் மறைவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** இம் மன்றத்தில் உறுப்பினராக இருந்த திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இயற்கை எய்தியது குறித்து ஆழ்ந்த வருத்தத்துடன் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, "1968 ஆம் ஆண்டு முதல் இம் மன்றத்தின் உறுப்பினராக இருந்த திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இயற்கை எய்தியதைக் குறித்து இந்த அவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது"

தலைவரவர்களே, நல்ல நாட்டுப் பற்றும், மொழிப் பற்றும் கொண்டு விளங்கியவரும், இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்திலே கலந்து கொண்டு பல முறை சிறை சென்றவரும், இந்த மாமன்றத்திலே அமர்ந்திருந்து பல்வேறு நல்ல கருத்துக்களை, அரிய ஆலோசனைகளை அரசுக்கு வழங்கியவருமான பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இயற்கை எய்தியது உள்ளபடியே தாங்கொணாத வேதனையை அவையிலே உள்ளவர்களுக்கு மட்டுமல்லாமல், தமிழ் நாட்டு மக்கள் அனைவருக்கும் அளித்துள்ள நிகழ்ச்சியாகும். அவர்கள் இந்த அவையிலே நல்ல திடாகாத்திரத்துடன் திடமான கருத்துக்களை, தயவு தாட்சண்ணியமில்லாமல் மிகுந்த துணிவோடு எடுத்துரைத்து,

அரசுக்கு உறுதுணையாக இருந்தார் என்று கூறும் அளவுக்குப் பணியாற்றினார்கள். திடீரென்று அவர்கள் நோய்வாய்ப்பட்டார்களென்று கேள்விப்பட்டதும், அவர்கள் எப்படியும் உயிர் பிழைத்து நம்மோடு இன்னும் பல ஆண்டுகள் இருந்திட வேண்டும், அப்படிப்பட்ட பெரியோர்களுடைய ஆலோசனைகள் அரசுக்கும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் மிக மிகத் தேவை என்ற உணர்வோடு நம்மால் இயன்ற எல்லா வகையான முயற்சிகளையும் மேற்கொண்டு கூட, இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்து விட்டது.

அவர்கள் 1902 ஆம் ஆண்டு பிறந்தார்கள். 1922 ஆம் ஆண்டிலே இந்திய தேசியக் காங்கிரசிலே, இளம் பிராயத்திலேயே சேர்ந்தார்கள். 1930 ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் ஓராண்டுக் காலம் சிறைப்பட்டார்கள். 1962 ஆம் ஆண்டிலிருந்து 6 ஆண்டுகளுக்கு தமிழ் நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவராகவும், தொடர்ந்து மாநில அரிஜன நலக் குழு, மாநில கிராமப் புற நல வாரியம், மாநில உணவு உற்பத்திக் குழு, தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு, மாநில் கல்விக் குழு போன்ற பல்வேறு குழுக்களில், நிறுவனங்களில் அவர்கள் பங்கு பெற்று, பணியாற்றியிருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் அவர்கள் நல்ல ஈடுபாடும், அனுபவமும், ஆற்றலும் கொண்டு விளங்கினார்கள். இலக்கியத் துறையிலும் சிறந்ததொரு கவிஞராகவும், எல்லா நூல்களையும் படித்தறிந்து, அவைகளைப்பற்றி விளக்குகிற ஆற்றல் படைத்தவர்களாகவும் திகழ்ந்தார்கள். அவர் இன்னும் பல ஆண்டுக்காலம் நாட்டிலே இருந்து, நமக்கு உறுதுணையாக இருக்க வேண்டியவர் ஆவர். அந்த நல்ல தேசத் தியாகியின் பிரிவு, நம்மையெல்லாம் இன்றைக்கு வேதனையிலே ஆழ்த்தியிருக்கிறது. இந்த மாமன்றத்தின் சார்பாக, தமிழ் நாட்டு மக்களின் சார்பாக, என்னுடைய ஆழ்ந்த இரங்கலை அவர்களுடைய குடும்பத்தாருக்குத் தெரிவித்து, இந்த இரங்கல் தீர்மானத்தை முன்மொழிகிறேன். வணக்கம்.

* **திரு. கே. ராஜாராம்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, நமது சாகாவாகவும், மேலவை உறுப்பினராகவும் இருந்த திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் காலம் சென்றது நம் எல்லோருக்கும் ஆழ்ந்த வருத்தத்தைக் கொடுத்தது. முதலமைச்சரவர்கள் இன்றைய தினம் இந்த இரங்கல் தீர்மானத்தைக் கொண்டு வருவார்களென்று, போன முறை நாம் இந்தச் சபை கலைந்து வெளியேறும் போது யாரும் எதிர்பார்க்கவில்லை. மறைந்த ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் என் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். சபை கலைந்தவுடன் அவரும் மற்றவர்களைப்போல் எழுந்து சென்றார். மறு நாள் காலையில் ரயிலில் செல்லும்போது திண்டுக்கல் ரயில்வே நிலையத்தில், அவருக்குப் பேச முடியாத நிலைமை ஏற்பட்டது என்று சொன்னார்கள். நான்



இங்கிருந்து மதுரை சென்று அவரைப் பார்த்தேன். அங்கேயிருந்து முதலமைச்சரவர்களுக்குத் தகவல் கொடுத்தேன். எனக்கு எவ்வளவு கவலையும், வருத்தமும் ஏற்பட்டதோ, அதைவிட அதிகமான வருத்தமும், கவலையும் முதலமைச்சரவர்களுக்கு ஏற்பட்டதென்பதை நான் உணர்ந்தேன். அவருக்கு வேண்டிய மருந்து நம் நாட்டில் இல்லை. எனவே வெளி நாட்டிற்குத் தகவல் கொடுத்து அந்த மருந்தைத் தருவித்துக் கொடுப்பதாகச் சொல்லி, மூன்று நாட்களுக்குள் அந்த மருந்தை என்னிடம் முதலமைச்சரவர்கள் சேர்ப்பித்தார்கள். அந்த மருந்தைக் கொடுத்ததும் அவர்கள் ஓரளவு சௌகரியமாக இருந்தார்கள். இங்கிருந்து மதுரை செல்லும் அமைச்சர்கள் எல்லாம் அவரைப் பார்த்தார்கள். தலைவர் காமராஜ் அவர்கள் இரண்டு முறை சென்று பார்த்தார்கள். ஆனால், அவர் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார் என்று யாரும் நினைக்கவில்லை.

அவர்கள் அவைக்கு உதவியாக இருந்தார்கள். எந்த ஒரு மசோதாவிலும், தீர்மானத்திலும் எழுத்துப் பிழைகளோ அல்லது 'கமா' போன்ற பிழைகளோ இருப்பின், அவற்றை மிகவும் சிரத்தையுடனும் அக்கறையுடனும் எடுத்துக் கூறுவார்கள். அதைத்தான் முதலமைச்சரவர்களும் குறிப்பிட்டார்கள். இது ஏதோ எதிர்க் கட்சி அரசாங்கமென்று அவர் நினைக்கவில்லை. அரசாங்கம், நமது அரசாங்கம், எந்தப் பிழையும் எதிலும் வந்துவிடக் கூடாது என்று அக்கறையுடன் கவனித்து வந்தார்கள். எந்த ஒரு தீர்மானத்தைப் பரிசீலிக்கும்போதும் அவர் அக்கறையுடன் அதிலுள்ள பிழைகளைக் கவனித்து எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் அவர் ஒரு நிபுணராக இருந்தார். இந்தத் துறைக்கு அவர் ஒரு 'கார்டியன்' ஆக இருந்தார்கள். அந்தத் துறையில் நிகழும் தவறுகளைக் கண்டு வருந்துவார்கள்.

மூன்று முறை அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 15 ஆண்டுகள் பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றினார்கள். அதற்குப் பின், இந்த அவையில் 5½ ஆண்டுகள் இருந்திருக்கிறார்கள். அவரைப்பற்றி முதலமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். நான் அறிந்த வரையில், மற்றவர்களிடம் இல்லாத ஒரு அருமையான குணத்தைக் கொண்டிருந்தார்கள். யாராக இருந்தாலும் அவர் மிகவும் நளினமாகப் பழகுவதோடு குற்றம் காணின் மிக்க கண்டிப்பாக இருப்பார். தவறை எங்கு கண்டாலும், கொஞ்சமும் சகிக்க மாட்டார். ஒரு தம்பிடி தவறான கணக்கு எழுதி வைத்தால் கூட, அவருக்குக் கோபம் வரும். தனக்கு வேண்டியவர்களாக இருந்தாலும், தவறு என்று அறிந்தால் கண்டிப்பார். அப்படிப்பட்ட ஒருவரை ஒரு ஸ்தாபனம் இழப்பது வருத்தத்திற்குரிய விஷயமாகும். அந்த அளவுக்கு அவர் எங்கள் காங்கிரஸ் ஸ்தாபனத்திற்கு உறுதுணையாக, இன்றியமையாதவராக இருந்தார். யார்

தவறாக நடந்தாலும், காரியக் கமிட்டிக் கூட்டத்தில் எடுத்துச் சொல்லத் தவற மாட்டார்கள். இன்ன உறுப்பினர், இன்ன இடத்தில் நடந்துகொண்டது சரியல்ல என்று கண்டிப்பாக எடுத்துச் சொல்வார்கள். எங்கள் காங்கிரஸ் ஸ்தாபனம் மிகவும் இன்றியமையாதவரை இழந்து விட்டது. அவரது இழப்பு பேரிழப்பாகும். நான், தனிப்பட்ட முறையில் மிகவும் வருத்தப்படுகிறேன். எனக்கு ஏற்பட்ட வருத்தத்திற்கு அளவே கிடையாது. சட்டசபையில் என் பக்கத்தில் இருப்பார். எங்கும் எழுந்து போக மாட்டார். அவர் இல்லாமல் நான் இருப்பது எனக்கு மிகவும் தனிமையைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. முதலமைச்சரவர்கள் அஞ்சலி செலுத்தித் தெரிவித்த அந்தக் கருத்துக்களோடு என்னுடைய சில வார்த்தைகளைக் கூறி அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கும் தீர்மானத்தில் என்னுடைய கட்சியின் சார்பாகவும் என்னுடைய சார்பாகவும் அனுதாபங்களைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

பி.ப. 4-10 *திரு. சா. கணேசன்: மாண்புமிகு தலைவரவர்களே, அமரர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களோடு நான் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகப் பழகியுள்ளவன். பல்வேறு துறைகளிலும் ஒன்றாக இருந்து பணி யாற்றிய நினைவெல்லாம் இப்போது எனக்கு வருகிறது. எவ்வளவு கடுமை யாகக் கருத்துக்களைத் தெரிவித்தாலும் அதை இனிமையாகத் தெரிவிக்கின்ற இயல்பு அவர்களிடம் எப்போதுமே இருந்து வந்தது. நல்ல தேச பக்தி, நல்ல மொழிப் பற்று, நல்ல தெய்வ நம்பிக்கை, அதே நேரத்திலே நிறைந்த சீர்திருத்த உள்ளம், ஜாதி, மதம், மொழி வேறுபாடுகளையெல்லாம் பாராட் டாத பெருந்தன்மை இவையெல்லாம் அவர் காந்தியடிகளிடமிருந்து பெற்ற பேறுகள். இந்த சபையிலும் சரி, வெளியிலும் சரி, என்ன கருத்தைச் சொன்னாலும் கொஞ்சம் கலகலப்பு ஏற்படுகின்ற நிலையை நாம் எப்போதும் கவனித்துக்கொண்டிருந்தோம். எந்தக் கருத்தைச் சொல்கின்றபோதும்கூட, யாரைப் பற்றிச் சொல்கிறார்களோ அவர்களுடைய மனம் புண்படாத நிலையிலே மிக்க பண்பாட்டோடு எடுத்து உரைக்கின்ற அந்த மரபு அல்லது நாகரிகம் நிரம்பியவராக அவர் விளங்கினார். அவர் என்றைக்கும், எதையும் தெரிவிக்க அஞ்சியதில்லை என்று நம் முதல்வர் அவர்கள் கூறினார்கள். முற்றிலும் உண்மை. அதே நேரத்திலே செம்மையாக, திறமையாக, புண் படாத நிலையிலே கூறிய அந்தச் சிறப்பு நம்மாலே பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.





அவருடைய இழப்பு இந்த சபைக்கு மட்டுமல்ல, எங்கள் மாவட்டத்திற்கு மட்டுமல்ல, பொதுவாகவே தொண்டுள்ளம் படைத்த பணி செய்கின்றவர்களுக் கெல்லாம் ஒரு பேரிழப்பு என்று சொல்லலாம். அவர் முழுக்க முழுக்க ஈடுபட்ட பணி, துறை கூட்டுறவுத்துறை என்பதையும், முன்னே பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் துறையிலே முழு நிபுணத்துவம் பெற்ற நிலையிலே முதிர்ந்து இருந்தவரை ஆண்டவன் அழைத்துக் கொண்டுவிட்டான். அந்தத் துன்பத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்திலே புலப்படுத்திய, காணப்படுகின்ற துயரத்திலே, சபை உறுப்பினர்கள் அவ்வளவு பேருடனும் நானும் கலந்து கொண்டு எனது சார்பாகவும், எனது கட்சியின் சார்பாகவும் என் இதயம் நிறைந்த அனுதாபத்தைத் தெரிவித்து, மறைந்த அமரர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கு எங்களுடைய வணக்கத் தையும் புலப்படுத்தி அமைகின்றேன். வணக்கம்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறைந்த எனது அண்ணன் ரா. கி. அவர்களைப்பற்றி என்னென்ன இந்த சபையில் நாங்கள் சொல்லவேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தோமோ அதையெல்லாம் தன்னுடைய பேச்சிலே நன்றாக விளக்கிச் சொல்லிவிட்டார்கள். அவர்களுடைய இழப்பை என்னைப் போன்ற வர்கள் குடும்பத்திலே இருக்கின்ற ஒரு பெரியவரை இழந்த மாதிரியாகக் கருது கிறோம். 1935-வது வருடத்தில் காங்கிரஸில் சேர்ந்த காலத்திலிருந்து அவரை நான் என் அண்ணனாகவே கருதினேன். காலஞ்சென்ற திரு. பி. எஸ். குமார சாமி ராஜா அவர்களுக்கு அவரும் நானும் இரண்டு கரங்களாக இருந்து கடைசி காலம் வரை வேலை செய்து வந்தோம். இராமநாதபுரம் மாவட்டத்திலேயும் சரி, மற்ற எந்த இடத்திலேயும் சரி, அவர் எந்தப் பணியில் ஈடுபட்டாலும், அந்தப் பணியைச் சீரும்சிறப்புமாகச் செய்து முடிப்பார். அவர் எந்தப் பணியில் ஈடுபட்டாலும், அந்தப் பணியில் எந்தவிதமான ஊழலும் இருக்கக் கூடாது என்பது அவருடைய விருப்பம். அதிலேயும் ரூபாய் அணா கணக்கு என்று இருந்தால், அந்த விஷயத்தில்தான் மிகக் கண்டிப்பாக இருந்தார். பொது நிதிகள் கணக்கு விஷயங்களில் சரியாக நிர்வாகம் செய்யப்பட வேண்டு மென்பதில் அவர் மிகவும் தீவிரமான ஈடுபாடுள்ளவர். கூட்டுறவுத் துறை இயக்கத்திலே அவர் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். விவசாய அபிவிருத்தி யிலும், கிராமப்புற மக்கள் எப்படி இருக்கவேண்டுமென்பதிலும், அம் மக்கள் எப்படி எப்படி வளர்ச்சியடையவேண்டுமென்பதிலும் தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருந்தார். எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டாலும், அதிலே மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தார். எனக்குத் தெரிந்த வரையிலே, அவர் தன்னுடைய குடும்ப வாழ்க்கையில் கவனமில்லாது குடும்ப வேலைகளையே

விட்டு விட்டார். அவர் பொது வாழ்வையே தன் வாழ்வாகக் கருதி, அதிலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். அப்பேர்ப்பட்ட அண்ணனை இழந்து விட்டேன். திரு. ராஜாராம் நாயுடு அவர்களும் நானும் மற்றவர்களும் அவர் இறந்த தினத்தில் அவருடைய ஊருக்குச் சென்றிருந்தோம். எல்லாக் கட்சிக் காரர்களும் அன்றைய தினம் அங்கு வந்திருந்தார்கள். கட்சி வித்தியாசம் இல்லாமல், யாருடனும் மனஸ்தாபம் இல்லாமல், அவர் செய்த பொது சேவையை, ஸ்ரீவில்லிபுத்தூரிலும், மற்ற பல இடங்களிலும் ஒவ்வொருவரும் மனதாரப் புகழ்ந்தார்கள். அதைப் பார்த்தபோது, இப்பேர்ப்பட்ட ஒரு நல்ல மனிதரை இழந்துவிட்டோமே என்று மிக வருத்தப்பட்டேன். திடகாத்திர மாகத்தான் இருந்தார்கள். அவர் ஒருபொழுதும் நோயுற்றவராகவே இருந்த தில்லை. ஒரே ஒரு தடவைதான் நோய்வாய்ப் பட்டார். அந்த நோயே கடைசியாகி, கடைசியில் அவரையே இறைவன் கொண்டுபோய் விட்டார். நம் முதலமைச்சர் அவர்கள், விசேஷ கவனம் செலுத்தி எப்படியாவது சிகிச்சை செய்து, அவரை நல்லபடியாக இந்த சபைக்கு மறுபடியும் கொண்டுவரவேண்டு மென்று தீவிர முயற்சி எடுத்ததையும் இந்த சந்தர்ப்பத்தில் நான் பாராட்டு கிறேன். ஆனால், ஆண்டவனுடைய இஷ்டம் அது. இந்த சபையில் அங்கத்தி னராக இருந்த காலத்திலேயே அவர் இறைவனடி போய்ச் சேர்ந்தார்.

பி. ப. 4–20 திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னமாதிரி, அவர் வகுத்த நல்வழிகளைப் பின்பற்றி அவர் காட்டிய நிலையிலே, நல்ல தன்மையிலே நாம் செல்ல வேண்டு மென்று விரும்புகிறேன். திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் எப்போதும் ஒழுக்கத்தின் அடிப்படையிலே காரியங்கள் செய்ய வேண்டுமென்ற விருப்பம் உடையவர்கள். அவருடைய வாழ்க்கையை முன்னோடியாக வைத்து நாமும் வாழ வேண்டும். அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்று ஆண்ட வனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** மாண்புமிகு தலைவர்களே, நம் அருமை நண்பர் திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். அவரது பிரிவுக்காக நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் அனுதாபத் தீர்மானத்தை முழு மனதோடு ஆதரிக்கிறேன். பிரிந்துவிட்ட நண்பர் அவர்களுக்காக முஸ்லீம் லீக் கட்சியினுடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதல்வர் அவர்கள் பேசும் போது, 20 வயது காலத்திலேயே அவர்கள் பொது வாழ்விலே ஈடுபட்டார்கள் என்று குறிப்பிட்டார்கள். சிறு பிராயத்திலேயே பொது மக்களுக்கு சேவை செய்வதற்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு, கடைசி மூச்சுவரைக்கும் அந்தப் பணியிலே அவர்கள் தொடர்ந்து இருந்தார்கள் என்பது ரொம்பவும்





பாராட்டத்தக்க அம்சமாகும். அவர் தேசப் பற்றும், மொழிப் பற்றும் கொண்டவராக இருந்தாரென்று முதல்வரவர்கள் சொன்னார்கள். அவருடைய பிரிவு தேசத்திற்கும், மாநிலத்திற்கும் பெரும் நஷ்டத்தை அளித்திருக்கிறது என்று சொன்னால், அது மிகப் பொருத்தமாக இருக்கும். சபையிலே பேசும் போது அவர்கள் தயவு தாட்சண்யமின்றி பேசக்கூடியவர்கள் என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். உண்மையிலேயே அவருடைய பேச்சுக்கள் கடுமை யாக இருக்கும். நாம் பேசிய பேச்சுக்குக் கடுமையாகக்கூட பதில் கூறிய துண்டு. ஆனால் வெளியே சென்றால் மிக இனிமையான குணத்துடன் நெருங்கிய நண்பரைப்போல அனுசரித்துப் பழகுவார். உண்மையிலேயே அவருடைய தனிப்பட்ட பண்பு அது என்று நான் சொல்லுவேன். அத்தகைய நல்ல பண்பாளர் நம்மை விட்டுப் பிரிந்தது உண்மையிலேயே நமக்குப் பெரும் நஷ்டம் என்று சொல்லி, அவரது பிரிவிற்காக மீண்டும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். எஸ். ராமசாமி படையாட்சி :** தலைவரவர்களே, நமது மன்றத்தில் பெரியவராகவும் அனுபவம் நிறைந்தவராகவும், இந்த மன்றத்தின் நிகழ்ச்சி களிலே எது ஒன்றிலும் கட்சிக் கண் கொண்டு பாராமல் பிரச்சினையில் உள்ள குறைபாடுகள்பற்றி அரசுக்கு விளக்கமாகக் கூறிக்கொண்டும், மக்களுடைய பிரச்சினைதான் தன்னுடைய பிரச்சினை, நாட்டின் பிரச்சினை என்று கருதி தனது வாழ்நாள் முழுவதும் தன்னையே மக்களுடைய நன்மைக்காக, நலன்களுக்காக அர்ப்பணித்துக்கொண்டும் இருந்த சிறந்த தேசத் தொண்டர் மறைந்த பெரியவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களோடு கடந்த 1952 பொதுத் தேர்தலுக்குப் பிறகு எனக்கு நெருக்கமான பழக்கம் உண்டு. எவ்வளவோ நல்ல குணங்களைக் கொண்டவர் அவர். யாரையும் ஆத்திரப்பட்டோ, அவசரப் பட்டோ எது ஒன்றையும் சொல்லமாட்டார், எவ்வளவுதான் கருத்து வேற்றுமை இருந்தாலும். இந்த மன்றத்தின் ஒவ்வொரு அங்கத்தினருடைய நன்மதிப் பையும் பெற்றவர் அவர். அவ்வளவு அனுபவம் மிகுந்த ஒரு பெரியவரை இந்த மன்றத்தில் நாம் இழந்துவிட்டது நமக்கெல்லாம் ஒரு பெரிய நஷ்ட மாகும். அவரது மறைவு ஈடு செய்ய முடியாத ஒரு நஷ்டமாகும். அப்படிப் பட்டதொரு பெரியவர் நம்மை விட்டுப் பிரிந்ததற்காக நமது முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து, எனது வணக்கத்தை மறைந்த அந்தப் பெரியவருக்கும், அவருடைய குடும்பத் தினருக்கு என்னுடைய இரக்கத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**• திரு. ஆர். சக்தி மோகன் :** மாண்புமிகு தலைவரவர்களே, நம்மிடையே சென்ற கூட்டம் வரையில் இருந்து இந்தக் கூட்டத்திலே நாம் எல்லாம் பார்க்க முடியாத நிலைமைக்கு அமரத்துவம் அடைந்துவிட்ட 'இராவன்னா, கினா' என்று

நம் எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுடைய மறைவினையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள இரங்கல் தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன்.

சுத்தமானதொரு தேச பக்தர், இன்றைக்கு இருக்கின்ற அரசியல் குழப்பங்களில் சிக்கிவிடாமல் இறுதிவரையில் ஒரே கட்சி, ஒரே கொள்கை, ஒரே தலைமை என்ற அடிப்படையில், முக்கால் பங்கு தேசபக்தராகவும் அந்த தேசபக்தியை நிறைவேற்றுவதற்காக கால் பங்கு அரசியல் வாதியாகவும் கடைசிவரையில் இருந்து இறைவனடி சேர்ந்திருக்கின்றார். அப்படிப்பட்ட பெரியவரைப் பற்றிப் பேசிய பெரியவர்கள் அவ்வளவு பேரும் அவருடைய சிறப்பியல்புகள் பற்றியெல்லாம் சொன்னார்கள். இந்த மன்றத்தில் அவர் நமக்கெல்லாம் தக்கதொரு வழிகாட்டியாக இருந்தார். நல்ல வாதத் திறன் பெற்றவர். நிர்தாட்சண்யமாகக் கருத்துக்களை வெளியிடுவதில் நமக்கெல்லாம் தெம்பூட்டியவர். அப்படிப்பட்டவர் இவ்வளவு விரைவில் அமரராகி விடுவார், அவருக்கு இந்த மன்றத்தில் இரங்கல் தீர்மானம் கொண்டு வருவோம் என்று நம்மில் யாருமே எண்ணிப் பார்க்கவில்லை, எதிர்பார்க்கவில்லை. அத்தகைய பெரியவர் நோய்வாய்ப் பட்டிருந்தார் என்று கேள்விப்பட்டவுடன் சென்னையிலிருந்து மதுரைக்கு வந்த அமைச்சர்களோடு, சட்ட மன்ற உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் எல்லாம் சாரிசாரியாக சென்று பார்த்து, அவர் உடல் நலம் தேறிக்கொண்டு வருவது கண்டு, அவர் எப்படியும் பூரண குணமடைந்து நம்மிடையிலே மீண்டும் வந்து கலந்துகொள்ளுவார் என்று நம்பிக்கொண்டிருந்ததற்கு நேர் மாறாக, அவரை இறைவன் அழைத்துக்கொண்டுவிட்டார். அவரது ஆத்மா அமைதியுற வேண்டும் என்று என் சார்பிலும் எனது கட்சியின் சார்பிலும் ஆண்டவனை வேண்டிக்கொண்டு இந்த இரங்கல் தீர்மானத்தை வரவேற்று அமருகின்றேன்.

* **திரு. ம. பொ. சிவஞானம்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்கள் முன் மொழிந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரிப்பதிலே மிகுந்த வருத்தத்தோடு பங்கு கொள்ள முன்வந்திருக்கின்றேன். மறைந்த அமரர் கிருஷ்ணசாமி நாயுடு அவர்களை முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக எனக்குத் தெரியும். 1938-ம் ஆண்டிலே ஜில்லா போர்டு தேர்தலுக்காக நான் அந்த மாவட்டத்திலே பிரச்சாரத்திற்காகச் சென்ற போதும், மீண்டும் 1952-ல் சட்ட மன்றத் தேர்தலுக்காகப் பிரச்சாரத்திற்காகச் சென்ற போதும், என்னை கிராமத்திற்குக் கிராமம் வழி காட்டி அழைத்துச் சென்றார். என்னுடன் தானும் வந்து, எனக்கு உபசாரங்கள் செய்து, நல்ல முறையில் வழி நடத்திச் சென்றார். அந்த நாட்களும், அந்த அனுபவங்களும், அப்போது அவர் காண்பித்த தோழமை உணர்ச்சியும் அவர் இன்று நம்மிடையிலிருந்து மறைந்ததால்



ஏற்பட்ட துக்கத்தை அதிகப்படுத்திக் காண்பிக்கின்றன. கடந்த ஆகஸ்டு 27-ம் தேதியன்று அவரை நான் மதுரை மருத்துவ மனையில் சென்று பார்த்தபோது, மிக அபாயமான நிலைமையில் இருந்தாலும்கூட, அவரை மருத்துவர்கள் எப்படியும் காப்பாற்றி விடுவார்கள் என்றுதான் கருதினேன். வயது 72 ஆகியிருந்தும்கூட, அவரது உடல் தோற்றம், உடற்கட்டு அப்படி ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது.

இருபது ஆண்டு கால 'பார்லிமெண்டரி' அனுபவமும், அரை நூற்றாண்டு காலமாக பொது வாழ்வில் அனுபவமும் பெற்றிருந்த ஒரு பெரியவரை, அனுபவஸ்தரை இந்த மன்றம் இழந்துவிட்டது. இந்த மன்றத்தில் வயது முதிர்ந்தவர்களிலே மூத்தவராக அவர் இருந்துகொண்டிருந்தார். இவ்வளவு பெரிய பண்பாளரை, அரசியல் வாதியை, பண்புள்ள பார்லிமெண்டரி அரசியல் ஊழியரை நாம் இழந்துவிட்டது நம் எல்லோருக்கும் வருத்தம் தரக்கூடிய ஒன்று. முதலமைச்சர் அவர்களும் எதிர்க் கட்சித் தலைவர்களும் தோழமைக் கட்சித் தலைவர்களும் தெரிவித்த அனுதாபத்தில் நானும் கலந்துகொண்டு அவருடைய ஆத்மா அமைதி பெறப் பிரார்த்திக்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பிற கட்சித் தலைவர்களும் தெரிவித்த துயர உணர்ச்சிகளில் நான் முழுமையாகப் பங்குகொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், 1952-லிருந்து 1967 வரை தமிழ் நாடு சட்டப் பேரவையின் உறுப்பினராகவும், 1968-லிருந்து இம்மன்றத்தின் உறுப்பினராகவும் இருந்தார். 1902 ஆம் ஆண்டில் பிறந்த இவர், 1922 ஆம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸில் சேர்ந்து, 1930 ஆம் ஆண்டில் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டு ஓராண்டு காலம் சிறைப்பட்டார். 1962 முதல் 1968 வரை தமிழ் நாடு காங்கிரஸ் குழுவின் தலைவராகப் பணியாற்றினார். கூட்டுறவு இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட இவர் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களில் இயக்குநராகவும் தலைவராகவும் பணியாற்றினார். அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறும், இத்தீர்மானத்தை நிறைவேற்றுமாறும் இம்மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)
தீர்மானம் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.

## 2. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு

MR. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3.30 P.M. today, the following programme of business has been decided:

| | | |
|---|---|---|
| 21—11—1973 (Wednesday) to 23—11—1973 (Friday) | | Discussion on the State Electricity Board Budget for 1973-74. |
| 24—11—1973 (Saturday) | .. | 1 Presentation of the First Statement of Supplementary Expenditure for 1973-74.<br>2 Presentation of the Statement of Demands for Grants for 1968-69.<br>3 Private Members' business. |
| 25—11—1973 (Sunday) | .. | Holiday. |
| 26—11—1973 (Monday) | .. | Discussion on the First Statement of Supplementary Expenditure for 1973-74, and the Statement of Demands for Grants for Excess Expenditure for 1968-69. |
| 27—11—1973 (Tuesday) | .. | Discussion on the State Electricity Board Budget for 1973-74 (Last Day). |
| 28—11—1973 (Wednesday) | .. | Appropriation Bills and other Official Bills. |
| 29—11—1973 (Thursday) | .. | No meeting. |
| 30—11—1973 (Friday) and 1—12—1973 (Saturday) | | Consideration of Official Bills. |
| 2—12—1973 (Sunday) | .. | Holiday. |
| 3—12—1973 (Monday) | .. | Consideration of Official Bills. |

The Council will meet at 4 p.m. daily. The Council will meet on 4th December 1973, if necessary.

மறைந்த திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களுக்கு அஞ்சலி செலுத்து
4-30 கின்ற வகையில் இந்த அவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு, மீண்டும் நாளை
பி.ப. (21-11-73) பிற்பகல் 4 மணி அளவில் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

## தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

புதன்கிழமை, 1973 நவம்பர் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

#### உடுக்குறியிட்ட வினாக்கள்

#### *Kallar Reclamation Schools*

*14 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether teachers serving in the Kallar Reclamation Schools are denied the Selection Grade scales of salary granted to teachers serving in other schools; and

(*b*) if so, the reason therefor?

#### கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகள்

**திரு. சி. வி. ராஜகோபால் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்):** மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கள்ளர் சீர்திருத்தப் பள்ளி ஆசிரியர்களுக்கு பிற பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுவது போன்று தேர்வுத் தர வீதங்களில் ( Selection Grade ) சம்பளம் வழங்கப்படுவதில்லையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) இல்லை. கள்ளர் சீரமைப்பின் கீழ் இயங்கி வரும் பள்ளிகளுக்கு தேர்வு நிலை ஆசிரியர் பதவிகள் உண்டு பண்ண அரசு ஆணை (பலவகை) 621, நாள் 16—7—1973-ல், ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

(இ) எனவே, கேள்விக்கு இடமில்லை.

### House Sites for Valaiyars

* 15 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(a) whether the Government have received any application from the Valaiyars of Thirumukkanippatti, Ramanathapuram District, requesting to provide them house sites; and

(b) if so, the action taken thereon by the Government?

### வலையர்களுக்குக் குடியிருப்பு மனையிடங்கள்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு பிற்பட்ட வகுப்பின் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருமுக்காணிப்பட்டி வலையர்கள், குடியிருப்பு மனையிடம் கேட்டு அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறார்களா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

### Changing the nomenclature of Piranmalai as "Parambumalai"

* 21 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state whether there is any proposal with the Government to change the nomenclature of Piranmalai in Tirupathur Taluk, Ramanathapuram District as "Parambumalai"?

### பிரான் மலையைப் "பறம்பு மலை" என்று பெயர் மாற்றம் செய்தல்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் தாலுக்காவில் உள்ள பிரான் மலையைப் "பறம்பு மலை" என்று பெயர் மாற்றம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.



### Renaming "Avudayar Koil" as "Thiruperundurai"

* 22 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any representation has been received by the Government to rename Avudayar koil, Thanjavur District as "Thiruperundurai", and

(b) if so, the action taken thereon by the Government?

### "ஆவுடையார் கோவில்" என்ற பெயரைத் "திருப்பெருந்துறை" என்று மாற்றம் செய்தல்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டம், ஆவுடையார் கோவில் என்ற பெயரைத் "திருப்பெருந்துறை" என்று மாற்ற அரசுக்குக் கோரிக்கை வந்ததா?

(இ) ஆமெனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) ஆவுடையார் கோவில் பஞ்சாயத்து "ஆவுடையார் கோயில்" என்ற கிராமத்தின் பெயரை "திருப்பெருந்துறை" என்று மாற்றும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. அத் தீர்மானம் தஞ்சை மாவட்ட ஆட்சியரின் பரிசீலனையில் உள்ளது.

### Hand Rickshaw Pullers Upliftment Fund

* 23 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether it is a fact that representation has been received by the Government from the Madurai–Ramanathapuram Chamber of Commerce during May 1973, regarding compulsion of business people by the officials of the Commercial Taxes Department, for big donations to Hand Rickshaw Pullers Upliftment Fund; and

(b) if so, the action taken thereon?

### கை ரிக்ஷா இழுப்போர் வளர்ச்சி நிதி

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர் கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கை ரிக்ஷா இழுப்போர் வளர்ச்சி நிதிக்காக பெருமளவு நன்கொடை கள் கோரி வணிக வரித்துறை அதிகாரிகள் வணிகர்களைக் கட்டாயப் படுத்தியது குறித்து 1973 மே திங்களில், மதுரை-இராமநாதபுரம் வர்த்தகக் கழகத்திடமிருந்து அரசுக்கு முறையீடு வந்துள்ளது உண்மையா?

(இ) ஆமெனில், அதையொட்டி எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) இப்புகாருக்கு எவ்வித ஆதாரமும் இல்லை எனத் தெரிய வந்துள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மதுரை-ராமநாதபுரம் வர்த்தகக் கழகம் என்பது நீண்ட நாட்களாக இயங்கி வருகிற ஒரு நல்ல வர்த் தகக் கழகமாகும். இந்த வர்த்தகக் கழகத்தினர் யாரும் சாதாரணமாக எந்த மாதிரிப் புகாரும் சொல்வதில்லை. இந்தப் புகாரிலே கை ரிக்ஷா இழுப்பவர் வளர்ச்சி நிதிக்காக வேண்டி விற்பனை வரி இலாகாவைச் சேர்ந்தவர்கள் வியாபாரிகளைக் கஷ்டப்படுத்தினார்கள் என்றும், அதுவும் இந்த பவர் கட் இருக்கக கூடிய சமயத்தில் மிகவும் அதிகமான பணத்தைக் கேட்டார்கள் என்றும் அவர்கள் உறுப்பினர்கள் எல்லோருக்கும் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் இது சம்பந்தமாக தந்திகளும் அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கி றார்கள். அது மாதிரி எவ்வளவு தந்திகள் வந்தன என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, இது ஆதாரத் தோடு உள்ள குற்றச்சாட்டு இல்லை. தந்திகள் வந்தன என்பது என்னவோ உண்மைதான். அப்படி அதிகாரிகள் சென்று வியாபாரிகளை நிர்ப்பந்தித்தார்கள் என்று ஆதாரத்தோடு தகவல் தருவார்களானால், நடவடிக்கை எடுக்க உதவும். ஆனால் அதிகாரிகள் நிர்ப்பந்தித்தார்கள், ரசீதே கொடுக்கவில்லை, பணம் வாங்கிக்கொண்டார்கள் என்றெல்லாம் சொல்வது சரியான குற்றச் சாட்டு அல்ல.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, உறுப்பினர்களுக்கு ரசீது கொடுக்கவில்லையென்று யாரும் எழுதவில்லை. அவர்கள் "There were compulsion and co-ercion of the merchants by the Commercial Tax Department" என்று தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக நூற்றுக்கணக்கான தந்திகள் அமைச்சரவர்களுக்கும்



வந்திருக்கும் என்று நினைக்கிறேன். இது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது வியாபாரிகளுக்கும் விற்பனை வரி இலாகாவில் இருப்பவர்களுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைத்துவிடும் என்பதை யொட்டி இது போன்ற நடவடிக்கைகளை அந்த இலாகா எடுக்காமலிருக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, விற்பனை வரி இலாகா இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் எங்கும் கட்டாயப்படுத்தப்பட்டதாக அரசுக்கு எந்தத் தகவலும் இல்லை.

### *Bus mishap on the Ghat Road from Ootacamund to Mettupalayam*

* 1 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether many women were killed on the Ghat Road from Ootacamund to Mettupalayam in a bus mishap about the 5th December 1972; and

(*b*) if so, the details thereof?

### உதகமண்டலம்-மேட்டுப்பாளையம் மலைச் சாலையில் பேருந்து விபத்து

**திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1972 டிசம்பர் 5 ஆம் நாள் அளவில், உதகமண்டலத்திலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் மலைச்சாலையில், பேருந்து விபத்து மூலம் மகளிர் பலர் உயிர் துறந்தனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம் உதகமண்டலத்திலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்லும் வழியில் குன்னூரிலிருந்து சுமார் ஒரு மைல் தள்ளி காந்திபுரம் அருகில் 1972 டிசம்பர் 5-ல் ஏற்பட்ட பேருந்து விபத்தில் நான்கு பெண்கள் உட்பட ஆறு பேர் இறந்தனர்.

(இ) இதுபற்றிக் கோரியுள்ள விவரங்கள் மேலவை முன் வைக்கப்படும் விவர அறிக்கையில் @ கொடுக்கப்பட்டுள்ளன.

---

@ 110 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## Freedom Fighters' Pension

*2 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the daughter of Late P. Jeevanandam has applied for Freedom Fighters' Pension; and

(b) if so, the action taken by the Government?

## தியாகி பென்ஷன்

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அமரர் ப. ஜீவானந்தத்தின் மகள், தியாகி மான்ய உதவி கேட்டு விண்ணப்பித்திருக்கிறாரா?

(இ) ஆமெனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்திய அரசு அறிவித்துள்ள தியாகி மானிய விதிகளின்படி அவர்கள் இந்த பென்ஷன் பெறுவதற்குத் தகுதி பெறவில்லை. எனவே தியாகி மானியம் வழங்க இயலாது என மத்திய அரசு செல்வி உமாதேவிக்கு அனுப்பிய பதிலின் பிரதி ஒன்று மாநில அரசுக்கு 10—11—1973-ல் கிடைத்துள்ளது.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, மத்திய அரசு நிராகரித்த பல காரியங்களை மாநில அரசு செய்ய முன்வந்து, இது போன்ற தியாகிகள் வீட்டாருக்கு உதவி செய்திருக்கிறது. அந்த அனுதாப எண்ணத்தோடு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பரிசீலனை செய்து, ஜீவா குடும்பத்திற்கு உதவி செய்ய அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. ஜீவா அவர்களுடைய துணைவியார் இப்போது 'உமன்ஸ் வெல்பேர்' டிபார்ட்மெண்டில் பணிபுரிந்து வருகிறார்கள். இப்போது வரையறுக்கப்பட்ட தகுதிகளின்படி 5 ஆயிரத்திற்கு மேல் வருமானம் உடையவர்களுக்கு இந்த மானியங்கள் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, ரூ. 5 ஆயிரத்திற்கு மேல் வருமானம் கிடைக்கக்கூடிய குடும்பத்திற்குத் தர இயலாது என்ற அடிப்படையில் தான் மத்திய அரசு நிராகரித்திருக்கிறது. அவர்கள் நிராகரித்ததற்குச் சொல்லப்படுகிற காரணங்கள் மாநில அரசுக்கும் பொருந்தும்.



## House Rent Allowance for Teachers

*3 Q.—THIRU N. SUNDARESA THEVAR: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the House Rent Allowance applicable to Municipal employees has not been given to the teachers working in the High School, Pattukottai from April, 1965 to October 1969;

(b) if so, the reasons therefor; and

(c) whether the Government will initiate action thereon?

## ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகைப் படி

திரு. என் சுந்தரேசத் தேவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1965 ஏப்ரல் முதல் 1969 அக்டோபர் வரை பட்டுக்கோட்டை உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு நகரசபை ஒட்டிய வீட்டு வாடகைப் படி கொடுபடாமல் இருக்கிறதா?

(இ) ஆமெனில், அதற்குக் காரணம் யாது?

(உ) அதன் மேல் நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) சென்னை நகருக்கு அருகிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் உள்ள அரசு (கழக) உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு 18—6—1970 முதல் தான் வீட்டு வாடகைப்படி கொடுக்க கல்வித்துறையின் 18—6—1970 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1031-ல் அரசு ஆணை வழங்கியிருக்கிறது.

(உ) நடவடிக்கை எதுவும் தேவையில்லை எனக் கருதப்படுகிறது.

## Trained Graduates

*4 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Graduates, who have undergone training in the Training Colleges in our State year-war during the last three years 1969-70, 1970-71 and 1971-72 in (a) Mathematics, (b) Physical Science, (c) Natural Science and (d) Humanities;

(*b*) the number of Graduates out of those trained who have been absorbed in the Secondary Schools in our State; and

(*c*) the steps, if any, that the Government propose to take to reduce unemployment among trained Graduates ?

### பயிற்சி பெற்ற பட்டதாரிகள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நமது மாநிலத்தில் உள்ள பயிற்சிக் கல்லூரிகளில், கடந்த மூன்றாண்டுகளில் அதாவது 1969-70, 1970-71, 1971-72-ஆம் ஆண்டுகளில், ஆண்டுதோறும் (i) கணக்கு, (ii) பௌதிக இயல், (iii) இயற்கை அறிவியல், (iv) கலைப்பாடங்கள் ஆகியவற்றில் பயிற்சி பெற்ற பட்டதாரிகள் எத்தனை பேர்?

(இ) அவ்வாறு பயிற்சி பெற்ற பட்டதாரிகளில் எத்தனை பேர் நமது மாநிலத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் ?

(உ) ஆசிரியப் பயிற்சி பெற்ற பட்டதாரிகளிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்க அரசு மேற்கொள்ளக் கருதியிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) :—

| | 1969–70 | 1970–71 | 1971–72 | Total |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| கணக்கு .. .. | 772 | 799 | 830 | 2,401 |
| இயல்பியல் .. .. | 610 | 607 | 626 | 1,843 |
| அறிவியல் (இயற்கை) | 536 | 569 | 649 | 1,754 |
| வரலாறு போன்ற பாடங்கள். | 729 | 692 | 705 | 2,116 |
| | 2,647 | 2,657 | 2,810 | 8,114 |

(இ) 1969–70 .. .. 1,919
1970–71 .. .. 1,712
1971–72 .. .. 1,476





(உ) மாநில அரசுத் திட்ட வேலைகளின் கீழ், கடந்த ஆறு ஆண்டுகளில் சுமார் 7,000 பி.டி. ஆசிரியர் பதவிகள் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. 1973-74-ல் 375 பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியர்கள் வேலை வாய்ப்பின்மையைப் போக்குவதற்கான மைய அரசுத் திட்டத்தின் கீழ் 1971-72, 1972-73 ஆண்டுகளில் சுமார் 1,000 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகள் உயர் தொடக்கப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டன. 1973-74-லும் சுமார் 900 பி.டி. தலைமை ஆசிரியர் பதவிகள் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும். 1970 அக்டோபரில் தொடங்கப்பட்ட தொழில்பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ் சுமார் 400 தொழில்பழகு பி.டி. ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர்.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, if the teacher-pupil ratio is reduced, the opportunities for employment may be increased.

MR. CHAIRMAN : The hon. Member's throat is not co-operating with him.

THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, if the teacher-pupil ratio is reduced, the opportunities for employment may be increased. At the same time, the quality of education may be improved and the standard of discipline may also be improved. So, will the Government consider reducing the teacher-pupil ratio from 1:40 to 1:30 ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, ஆசிரியர் மாணவர்கள் விகிதாசாரத்தைக் குறைத்தால் ஓரளவிற்கு அதிக ஆசிரியர்களை நியமிக்கலாம் என்பது உண்மைதான். ஆனால் அதற்கு அதிக நிதி வசதி தேவைப்படுகிறது. இருக்கிற நிதி வசதியைக் கொண்டு நாம் ஆசிரியர் எண்ணிக்கையைக் கணக்கிட வேண்டியிருக்கிறது. மாணவர்கள் எண்ணிக்கையை ஓரளவிற்குக் குறைத்தால், ஆசிரியர்கள் எண்ணிக்கை வளரும். ஆசிரியர்கள் எண்ணிக்கை வளர்ந்தால், அதற்கு அதிக நிதி வசதி தேவைப்படுகிறது. இப்போது இருக்கிற நிதி வசதியின் அடிப்படையில் போடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 5 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரவேண்டும் என்று மத்திய அரசாங்கம் கொடுத்த அறிவிப்பின்படி, 10,200 பல்வேறு வகையான ஆசிரியர்களுக்கு இடம் அளிப்பதில் 1,200 பி.டி. ஆசிரியர்கள் இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, எகனாமிக்ஸ் படித்த பட்டதாரி ஆசிரியர்களிடையே வேலையில்லை என்ற நிலைமை பரவலாக இருப்பது உண்மையா ? இது போன்ற ஆசிரியர்களின் மனுக்களை வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பரிசீலிப்பதில்லை என்ற குறை மாநில அளவில் இருப்பது அரசுக்குத் தெரியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த எகனாமிக்ஸ் படித்த ஆசிரியர்களுக்கு உயர் நிலைப் பள்ளிகளில் எகனாமிக்ஸ் ஒரு பாடமாக இருந்ததில்லை. அவர்கள் துணைப் பாடமாக எடுத்தது வரலாறு அல்லது வேறு பாடமாகத்தான் இருக்க வேண்டும். எகனாமிக்ஸ் படித்தவர்களை பி.டி. ஆசிரியர்களாக ஆக்கிவிட்டு பிறகு அவர்களுக்கு வேலையில்லையென்று சொல்ல வேண்டாம். யார் யார் எகனாமிக்ஸ் படித்து பி.டி. ஆசிரியர்களாக பாஸ் பண்ணியிருக்கிறார்களோ அவர்களுக்கு வேலை கொடுத்து ஏதாவது பாடத்திற்கு, வரலாறு போன்றவைக்கு உபயோகப்படுத்தலாம். இனிமேல் பி.டி. யில் சேர்க்கும்போது, எகனாமிக்ஸ் படித்தவர்களைச் சேர்க்காமலிருப்பது நல்லது என்று நினைக்கிறேன். ஏற்கெனவே இப்படிப் படித்தவர்களுக்கு கூடுமான வரையில் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரலாம் என்ற முறையில் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

## Sree Meenakshi Government College for Women, Madurai.

*5 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the subjects for the new Degree Courses in the Sree Meenakshi Government College for Women, Madurai started in July 1972;

(b) whether the existing buildings have been found to be quite inadequate after the starting of the new courses;

(c) whether new and additional buildings are under construction; and

(d) whether compound walls are being erected enclosing the portion till recently used as the Municipal Office?

### ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரி, மதுரை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 ஜூலையில் தொடங்கப்பட்ட மதுரை, ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கல்லூரியில் புதிய பட்ட வகுப்புகளுக்கான பாடங்கள் யாவை?



(இ) புதிய பாட வகுப்புகள் தொடங்கியதன் பிறகு, இப்போதுள்ள கட்டிடங்களே போதுமானதாகக் காணப்படுகின்றனவா ?

(உ) புதிய, கூடுதலான கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ?

(எ) நகராட்சி அலுவலகமாக அண்மைக் காலம் வரை பயன்படுத்தப் பட்டு வந்த பகுதியை உள்ளடக்கிச் சுற்றுச் சுவர்கள் கட்டப்பட்டு வருகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒன்றுமில்லை.

(இ) இல்லை.

(உ) ஆம்.

(எ) சுற்றடைப்புச் சுவர் தற்பொழுது கட்டப்படுவதில்லை. இதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## Women's College at Tiruchendur

*6 Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to start a Women's College at Tiruchendur during 1973; and

(b) if so, the details thereof ?

### திருச்செந்தூரில் மகளிர் கல்லூரி

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். வெள்ள பாண்டியன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்செந்தூரில், 1973 ஆம் ஆண்டில், மகளிர் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாக அலுவலர், ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி தேவஸ்தானம், திருச்செந்தூர், திருச்செந்தூரில் பெண்களுக்கு என ஒரு அரசு கலைக் கல்லூரி ஒன்றைத் தொடங்கும் திட்டம் ஒன்றை அரசுக்கு அனுப்பியிருந்தார். இந்த ஆண்டு அதற்கு ஒப்புதல் அளிக்க இயலவில்லை.

## Madras Museum

*7 Q.—Thiru SAW. GANESAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the present stage of the scheme of establishing a separate museum for displaying the exhibits of Department of Sculpture and Department of Archaeology now attached to the Madras Museum; and

(b) how long it will take for the successful implementation of this scheme?

## சென்னை மியூசியம்

**திரு. சா. கணேசன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மியூசியத்தில் உள்ள சிற்பத் துறை, பழம்பொருள் துறை ஆகியவற்றை பிறவற்றிலிருந்து வேறுபடுத்தித் தனிக் காட்சிக் கூடமாக அமைக்கும் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது?

(இ) இந்த முயற்சி பயன் பெற்றுச் செயல்பட எத்தனை காலம் ஆகும்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) சென்னை அருங்காட்சியகத்திலுள்ள சிற்பத்துறை பழம்பொருள் துறைகளை மற்றத் துறைகளிடமிருந்து வேறுபடுத்தும் திட்டம் ஏதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, பல முறை இந்தச் சபையிலே நான் கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்களும் அந்த மாதிரியான ஏற்பாடு அவசியம் என்ற நிலையை ஏற்றுக்கொண்டு பதிலும் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருக்க, இப்பொழுது வரலாற்றுத் துறை வளர்ந்து வருகின்ற இக் காலத்தில், அந்தத் துறையைப் பிரித்து, அதைச் செம்மைப் படுத்துவதற்கு திட்டமில்லாமலிருப்பது பொருந்துமா? இனியாவது அந்த வகையில் பிரித்து வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலில் தனிக்கூடமாக, அருங்காட்சியகமாக அமைக்கலாமா என்ற ஒரு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அது அருங்காட்சி இயக்குநர் அவர்களுடைய கருத்துக் கிணங்க கைவிடப்பட்டது. மறுபடியும் இப்பொழுது வெளிநாட்டுப் பயணிகளைக் கவரும் பொருட்டு சிற்பங்கள், சிலைகள், சித்திரம், கைவேலைப் பொருள்களை ... அமைக்கலாம் என்று இயக்குநர் பரிந்





துரை செய்துள்ளார். அதற்கு அரசாங்கம் ஒப்புதல் தந்தால் கருத்துரு ஒன்றை அனுப்புவதாகக் கூறியுள்ளார். அந்த அடிப்படையில் தனியாக அமைக்கலாமா என்பது அரசு பரிசீலனையில் உள்ளது.

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, இந்த அருங்காட்சியகம் உயிர் போன பிராணிகளையும் ஒன்றாக வைத்து, அதை நடத்துகின்ற இயக்குநர் உயிர் கலையிலே மட்டும் பயிற்சி பெற்றவராக இருப்பதால், சிற்பம், கலைத்துறையில் போதிய அக்கறை இல்லாமல் இருப்பதன் காரணத்தால், தனிப்படுத்துவதில் போதிய அக்கறை காட்டாமல் தனி அமைப்பு வேண்டும் என்ற நிலையை மறுத்தார் என்று பின்னால் இப்பொழுது அமைச்சர் அவர்கள் கூறியதிலிருந்து பரிந்துரை செய்திருப்பதாகவும் அறிகிறேன். "அரசு அனுமதித்தால்" என்று அமைச்சர் அவர்களே சொல்ல வேண்டாம். அரசு அனுமதித்து அதைச் செயல்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, முதலில் குறிப்பிட்டதற்குக் காரணம் நமது நாட்டிலிருக்கின்ற பிற அருங்காட்சியகங்களும் வெளிநாட்டிலுள்ள அருங்காட்சியகங்களும் பல்வேறு துறைகளைக் கொண்டதாக விளங்குகின்றன. புதைப்பொருள், சிற்பம், சிலை, மக்கள் நாகரீகம், புவியியல், தாவர இயல், விலங்கியல் போன்ற பிரிவுகள் அடங்கியதாக விளங்குகின்றன. அந்த முறையில்தான் கருத்து வழங்கப்பட்டது. இப்பொழுது தனியாக, அதற்கு உட்பட்ட அருங்காட்சியகமாக, சிற்பங்கள், சிலைகள், சித்திரங்கள், கைவேலைப்பொருள்கள் ஆகியவற்றை மட்டும் பிரித்து வைப்பதற்கு முயற்சி மேற்கொள்கின்ற அளவுக்கு அரசு அனுமதி கேட்கப்பட்டிருக்கிறது. அந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொண்டு, அந்த அளவுக்கு நிறைவேற்ற அரசு கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## Art Gallery, Thanjavur

*8 Q.—Thiru SAW. GANESAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether there is any proposal to take over the Art Gallery, Thanjavur under the direct control of the Government of Tamil Nadu, i.e., under the administrative control of Archaeological Department; and

(b) if so, the time within which the transfer will take

[1973 நவம்பர் 21

### தஞ்சைக் கலைக் கூடம்

திரு. சா. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சையில் உள்ள கலைக் கூடத்தை Art Gallery தமிழக அரசின் நேரடி நிர்வாகத்தில்—அதாவது பழம்பொருள் ஆய்வுத் துறை நிர்வாகத்தில் எடுத்துக்கொள்ளும் திட்டம் உண்டா?

(இ) ஆமெனில், எத்துணை காலத்தில் நிர்வாக மாற்றம் ஏற்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) தஞ்சையில் உள்ள கலைக் கூடத்தை தமிழக அரசின் நேரடி நிர்வாகத்தில் ஏற்கும் திட்டம் தற்போது இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, ஏற்கெனவே அங்கேயுள்ள ரெவின்யூ இலாகாவின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அதிலே ஏற்படுகின்ற புனருத்தாரண வேலைகள் அல்லது செம்மைப்படுத்துகின்ற வேலைகள், பிரசர்வேஷன், கன்சர்வேஷன் வேலைகள் செய்வதற்குப் போதிய பயிற்சி இல்லாதவர்களாக இருக்கிறார்கள். நான் குறைபாடு ஒன்றும் சொல்லவில்லை. அவர்களுக்குப் பயிற்சி இல்லை. ஆகவே அதைப் பழம்பொருள் ஆய்வுத்துறையோடு இணைத்தால், செம்மையாக, நிலையாக நின்று பயன்தரக் கூடியதாக இருக்கும் என்பதை உணர்ந்து ஏற்கெனவே அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறேன். அமைச்சர் அவர்களும் இந்தக் கருத்தை ஒத்துக்கொண்டிருந்தார்கள். அப்படியிருக்க, இப்பொழுது ஏன் வேண்டாததுபோல் குறிப்பிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது? இந்த அவசியத்தை, இன்றியமையாமையை உணர்ந்து அதைப் பழம்பொருள் ஆய்வுத்துறையோடு இணைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது தஞ்சை கலைக் கூடத்தின் நிர்வாகம் ஒரு செயற்குழுவின் மூலம் செவ்வனே பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தச் செயற்குழுவின் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆவார். ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கலந்துகொண்டுதான், அந்தக் குழு செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் இப்பொழுது அதன் நிர்வாக அமைப்பு ஒரு தனிக் குழுவினிடம் இருக்கிறது. அதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைவராக இருக்கின்றார். இதற்கான நிதி ராஜா டிரஸ்டிலிருந்தும், பார்வையாளர்களிடமிருந்து வசூலிக்கப்படுகின்ற



1973 நவம்பர் 21]

கட்டணத்தின் மூலமாகவும் கிடைக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், பராமரிப்பது, இன்னும் மற்ற வகைகளில் அந்தச் செயற்குழுவைச் சேர்ந்தவர்கள் கவனிக்க முடியுமா என்பதை ஆராய்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் கலந்து அதை ஒரு துணை தொல் பொருள் ஆய்வுக் கூடமாக அமைக்கலாமா என்ற கருத்து இருந்து வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கலந்து முடிவு எடுக்க முயற்சிக்கப்படும்.

### *College Text Books for Libraries*

* 9 Q.—Thiru C. V. RAJAGOPAL (on behalf of Thavathiru KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that College Text-Books have been purchased for the libraries of the Government High Schools; and

(b) if so, the reason for the same?

### நூலநிலையங்களுக்குக் கல்லூரிப் பாடத் தரமுள்ள நூல்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு உயர்நிலைப் பள்ளி நூலகங்களுக்குக் கல்லூரிப் பாட நூல்கள் வாங்கப் பெற்றிருக்கின்றன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) உயர்நிலைப் பள்ளிகளில் அமைந்துள்ள நூல் நிலையங்களுக்கென 1972-73-ல் சுமார் ரூ. 1 லட்சம் மதிப்புள்ள தமிழ் நூல்கள் அரசுச் செலவில் சுமார் 200 பள்ளிகளுக்கு வழங்கப்பட்டன. அவைகள் கல்லூரிப் பாடத் தரமுடையனவாய் இருப்பினும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் பயன்படுத்தித் தம் தகுதியையும் பொது அறிவையும் வளர்த்துக் கொள்ள உதவுவனவேயாகும்.

### *Age of Retirement of Teachers*

* 10 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that the Government of India have suggested in their letter No. F1-5/67 ESE-6, that the age of retirement of teachers, who have received National Awards may be extended by five years subject to their being found physically and mentally fit;

(b) if so, the action proposed to be taken thereon;

(c) whether there is any proposal to extend the services of teachers who have received State Awards at least by two years; and

(d) if not, the reasons therefor?

### ஆசிரியர்களின் ஓய்வு பெறும் வயது

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள், உடல் நலமும், மன நலமும் உடையவர்களாக இருக்கக் காணப்படின், அவர்கள் ஓய்வு பெறும் வயதை மேலும் ஐந்தாண்டுக் காலத்திற்கு நீட்டிக்கலாம் என்று இந்திய அரசு எப்.1-5/67, LSE 6-ஆம் எண்ணுள்ள தமது கடிதத்தில் கருத்து தெரிவித்துள்ளது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

(உ) மாநில விருது பெற்ற ஆசிரியர்களின் பணிகளைக் குறைந்தது மேலும் இரண்டாண்டுகளுக்காயினும் நீட்டிக்கும் செயற்குறிப்பு உண்டா?

(எ) இல்லையெனில், அதற்குக் காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) ஓய்வு பெறும் வயதை உயர்த்தத் தேவையில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

(உ) இக்கேள்விக்கு இடமில்லை.

(எ) பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையேயே இன்னும் வேலையில்லாத திண்டாட்டம் இருப்பதால், இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, இந்த தேசிய விருது பெற்ற ஆசிரியர்கள் மிகவும் குறைவானவர்களாகத்தான் இருப்பார்கள். அதுவும் மத்திய அரசாங்கம் கடிதம் எழுதியிருப்பதாகவும் கூறப்பட்டது. அவர்களுடைய அறிவும், ஆற்றலும், அனுபவமும் கல்வித் துறைக்குப் பயன்பட வேண்டும் என்ற கருத்தில்தான் சொல்லப்பட்டது என்று கருதுகிறேன். ஆகவே அந்த முறையில், அவர்கள் சிறிய அளவில் இருப்பதால், விருது பெற்ற ஆசிரியர்களுக்கு மட்டும் ஐந்து ஆண்டு பதவிக் காலம் நீடிக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டால், இன்னும் பல ஆசிரியர்கள் நல்ல பணி புரிய வாய்ப்பு ஏற்படும். இதை மனதில் கொண்டு அரசு அவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்க முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, விருது அளிப்பது என்பதே அந்த ஆசிரியர்களுடைய ஆற்றலைப் பாராட்டுவதற்காகத்தான். மத்திய அரசாங்கம் அப்படி ஒரு யோசனையைத் தெரிவித்திருந்தது. ஆனால் அவர்களை மேலும் ஐந்து ஆண்டுக்காலம் பதவியில் இருக்க அனுமதித்தால், சில நன்மைகள் ஏற்படும் என்பதோடு, தவறுதல்களும் ஏற்பட்டுவிடும். விருது பெற்ற ஆசிரியர்களுக்கு மேற்கொண்டு ஐந்து ஆண்டுக் காலம் எப்படியும் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில், 'பிரஷர்' போன்றவை இருக்கும். அந்த நிலையைப் பெறுவதற்காக ஒவ்வொருவரும் முயற்சிப்பார்கள். அதிலே ஏற்படுகின்ற கேடுபாடுகளைத் தவிர்க்க முடியாது. அவர்களிடையே நல்லெண்ணம் வளர முடியாமல் போய்விடும். அவர்களை வேறு வகைகளில் பாராட்டலாம். அவர்களை மேற்கொண்டு பதவியில் வைப்பதால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று கருதுவதால், மாநில அரசு அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, மற்ற வகைகளில் பாராட்டலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் அரசாங்கத்தால் வெளியிடப்படுகின்ற பாடப் புத்தகங்களை ஆராய்வதற்கு விசேஷக் குழு இருந்தால், அவைகளிலே இந்த விருது பெற்ற ஆசிரியர்களைப் போட்டு அவர்களுடைய ஆலோசனையைப் பெறலாம். இம்மாதிரியான ஆலோசனை அரசாங்கத்திடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எந்தெந்த வகைகளிலே எல்லாம் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியுமோ அந்தந்த வகைகளில் பயன்படுத்திக் கொள்ளப்படும். புதிய பாடத் திட்டங்கள்படி பாடநூல்கள் எழுதுவது, புதிய பாடத் திட்டங்களை உருவாக்குவது போன்ற பணிகளுக்கு விருது பெற்ற ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொள்ளப்படுவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Treatment of Chest Diseases*

*11 *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that some of the latest apparatuses necessary for the treatment of chest diseases are not available at the Special Chest Clinic, Stanley Hospital, Madras; and

(*b*) if so, the action proposed to be taken by the Government in the matter?

## இருதய நோய் சிகிச்சை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இருதய நோய் சிகிச்சைக்குத் தேவைப்படும், அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட சில கருவிகள், சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையிலுள்ள இருதய நோய் மருத்துவச் சிறப்புப் பிரிவில் இல்லையென்பது உண்மையா?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) தற்போது கோரிக்கை ஏதுவும் அரசிடம் இல்லை. மருத்துவக் கல்லூரி இயக்குநரிடமிருந்து அதற்கான வேண்டுகோள் வரும்போது அரசு பரிசீலனை செய்யும்.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, a proposal in this regard was given to the Estimates Committee. The members of the Estimates Committee felt that it would be useful to have some of the important apparatuses in the Hospital. In the Tamil translation, the name of the institution is given as "இருதய நோய் சிகிச்சைப் பிரிவு" In my original question, I have mentioned it as "Chest Clinic". It is a Chest Clinic for Tuberculosis and non-Tuberculosis diseases and it is only one of its kind in the whole State. Some of the important apparatuses like pumonary functional apparatus and other apparatuses for the revival of the patients when there is respiratory failure, etc., are not available in this particular Chest Clinic which is only one of its sort in the State. A memorandum was given to the Estimates Committee and the Estimates Committee also has considered this matter. Will the Hon. Minister consider this matter, since it has already been conveyed to the Estimates Committee?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, even though the matter has been considered by the Estimates Committee and it has recommended the proposal, the proposal is again to be formulated by the Dean. The Dean has proposed to get the necessary quotations for the proposal, which he would be able to get



within a reasonable time. After he gets the quotations, the proposals will be forwarded through the Director of Medical Education to the Government for approval.

## *Diabetes*

* 12 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether any survey or research into the incidence of Diabetes has been made in this State recently; and

(*b*) if so, the details thereof?

## நீரிழிவு நோய்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் நீரிழிவு நோய் குறித்து அண்மையில் ஆய்வு அல்லது ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## *Treatment of Cancer Patients*

* 13 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of cancer patients treated per year in the Radio Therapy Department attached to the General Hospital, Madras;

(*b*) the percentage of cure as per the records for different types of cancer;

(*c*) the number of Civil Surgeons attached to the above Department; and

(*d*) whether their number is found sufficient to the number of patients to be treated?

[1973 நவம்பர் 21

## புற்று நோயாளிகளுக்குச் சிகிச்சை

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, அரசினர் பொது மருத்துவ மனையோடு இணைந்துள்ள கதிர் வீச்சு சிகிச்சையியல் துறையில் ஆண்டொன்றுக்கு எத்தனை புற்று நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது?

(இ) சிகிச்சையளிக்கப்பட்ட பல்வேறு வகையான புற்று நோய்களில், ஆவணங்களின்படி, எத்தனை சதவீத நோயாளிகள் குணமடைந்தனர்?

(உ) மேற்கூறிய துறையோடு எத்தனை சிவில் சர்ஜன்கள் இணைந்துள்ளனர்?

(எ) சிகிச்சையளிக்கப்பட வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு சர்ஜன்களின் எண்ணிக்கை உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) கடந்த ஐந்தாண்டுகளில் சராசரி 2,741 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர்.

(இ) வாய்ப்புற்றுநோய் 17.6 சதவிகிதம்
தொண்டை 8.7 சதவிகிதம்
குரல்வளை 6.2 சதவிகிதம்
மார்பகப் புற்றுநோய் 14.9 சதவிகிதம்
கருத்துப்பாகப் புற்றுநோய் 4.2 சதவிகிதம்

(உ) இரு சிவில் மருத்துவர்கள் அத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

(எ) அவர்களது எண்ணிக்கை போதுமானது.

THIRU G. SWAMINATHAN : The Hon. Minister stated that about 2,700 patients are being attended on, by the above Hospital, every year. The norms followed in the U.K. are that there should be at least one Civil Surgeon for every 500 patients. The number of two Civil Surgeons looking after 2,700 patients here is inadequate. May I request the Hon. Minister to consider the appointment of two more Civil Surgeons ?

Again, Sir, the percentage of cure, compared to the other countries and other Hospitals is very low. From the figures given by the Hon. Minister, I understand that this is only anywhere



1973 நவம்பர் 21]

between 17 per cent and 17.25 per cent, while even at Adyar, they say that their percentage of cure is generally about 80 per cent. In the U.S.A., it is 86 per cent and in the U.K., it is 70 per cent generally and regarding the various categories, I have also got figures, which is three times more than what the Hon. Minister stated.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, டாக்டர்களுடைய பணியைப் பற்றி, எவ்வளவு நோயாளிகளுக்கு ஒரு டாக்டர் நியமிக்கப்படுகிறார் என்ற விகிதாசாரத்திற்கு 'யு.கே.' யை எடுத்துக்காட்டுவது பொருத்தமானது அல்ல. நம்முடைய நாட்டிலே எந்தத் துறையைச் சேர்ந்த டாக்டராக இருந்தாலும், அவர் பணியாற்ற வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை விகிதாச்சார அளவு அதிகமாகத் தான் இருக்கும். அவர்கள் எவ்வளவு திறமை மிக்கவர்களாக இருந்தாலும், அவர்கள் செலவிடுகிற நேரம் குறைகின்ற காரணத்தால், நோயாளிகளுக்குக் காட்டுகிற மிகக் கூர்ந்த கவனம் சற்று குறையத்தான் செய்யும். இந்த நாட்டின் நிலை வேறு, 'யு.கே.' போன்ற நாடுகளின் நிலை வேறு என்பதற்கு இது அடையாளமே தவிர, நமக்கு நல்லெண்ணம் இல்லை என்பதற்கான அடையாளம் வல்ல. இங்கே சிகிச்சை பெற்றவர்களில் பயன் பெற்றவர்கள் என்று நான் சொல்லும்போது, இந்தப் புற்று நோய் சிகிச்சை பெற்றவர்கள் பிறகு 5 ஆண்டுகள் வாழ்ந்தால், அவர்கள் தகுந்த சிகிச்சை பெற்றார்கள் என்று மதிப்பிடப்படுகிறது. வேறு சில மருத்துவ மனைகளில், அங்கே சிகிச்சை பெறுகிறவர்கள்—யு.கே. யாக இருந்தாலும் வேறு நாடாக இருந்தாலும்—ஆண்டு தோறும் தாங்களே அந்த மருத்துவ மனைக்குத் திரும்பச் சென்று, தங்கள் உடல்நிலையைப் பரிசோதித்துக் கொள்ளும் பழக்கம் இருக்கிறது; அதற்கான ஒரு மனப்பான்மை இருக்கிறது. இங்கே சிகிச்சை பெற்றவர்களில் பலபேர் சிகிச்சையில் நலமாகிவிட்டால் நிச்சயம் அவர்கள் திரும்ப வருவதில்லை. நலம் கிடைக்காவிட்டால் மட்டும் தான் திரும்ப வருகிறார்கள்—சிகிச்சைக்குப்பின் மூன்று ஆண்டுக் காலம் இருந்தவர்களின் எண்ணிக்கை தான், அந்த விகிதாச்சாரத்தில் தரப்பட்டிருக்கிறது; மருத்துவ மனைக்கு திரும்பி வந்தவர்களின் எண்ணிக்கை தான் 17.6 சதவிகிதம் வாய்ப் புற்று நோய் உள்ளவர்கள் என்று தரப்பட்டிருக்கிறது. அதனால் சிகிச்சை பயன் தரவில்லை என்பதல்ல. வேறு சில மருத்துவ மனைகளில் சிகிச்சை முடிந்தவுடனே எவ்வளவு பேர் வீடு திரும்பி நலம் பெற்றார்கள் என்பதை அவர்களுடைய சிகிச்சையின் பலன் என்பதற்கு அடையாளமாக வைத்து, அந்த விகிதாச்சாரம் அதிகமாகத் தரப்படுகிறது. சிகிச்சைக்கான வசதிகள் குறைவாக இருக்கின்ற நேரத்தில், இந்த விகிதாச்சாரம் என்பது அவ்வளவு முக்கியமானது அல்ல.

THIRU G. SWAMINATHAN: Mr. Chairman, Sir, cancer is a very deadly disease. I think it will be feasible to appoint two more Civil Surgeons in the Hospital. When it is possible for the Adyar Hospital, a private Hospital, to take out this enumeration, why should it not be possible for this Government Hospital ?

MR. CHAIRMAN: The answer may be too long, but the hon. Member's supplementary should be short.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Mr. Chairman, Sir, the Hospital is intended to give service to so many varied types of patients and we have got so many departments. The Adyar Institute specialises only in cancer and we are also attempting to have one such Institute at Kancheepuram in the name of Arighar Anna.

### *Development of the Arcot-Kannamangalam Highways*

*16 Q.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government have taken any steps to develop the Arcot-Kannamangalam Highways, North Arcot district; and

(b) if so, the estimated expenditure on this scheme?

### ஆற்காடு-கண்ணமங்கலம் நெடுஞ்சாலை அபிவிருத்தி

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வடாற்காடு மாவட்டம், ஆற்காடு-கண்ணமங்கலம் நெடுஞ்சாலையை அபிவிருத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டத்தின் மதிப்பீடு யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) இச்சாலையை பழுது பார்க்கவும், பராமரிக்கவும் நடப்பு ஆண்டில் ரூபாய் 1,18,350 ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.



### *Gang Mazdoors*

*17 Q.—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government received any representations requesting to make the workers who are involved in the work of road maintenance for many years drawing daily wages permanent; and

(b) if so, the steps taken thereon ?

### தினக்கூலி பெறும் தொழிலாளர்கள்

**திரு. காட்டூர் கோபால்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாலை பராமரிப்புத் தொழிலில் ஈடுபட்டு பல ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிற தினக்கூலி பெறுகிற தொழிலாளர்கள் நிரந்தரம் செய்யப்பட வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் முறையீடுகள் வந்துள்ளனவா?

(இ) ஆமெனில், அவற்றின் மீது மேற்கொண்ட நடவடிக்கை யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) & (இ): ஆம். பத்து ஆண்டுகட்கு மேல் பணிபுரிந்து நெடுஞ்சாலைக் கிராமப் பணித் துறையைச் சேர்ந்த காங் கூலிகளை நிரந்தரப்பணி உரிமை பெறும் தொகுதியின் கீழ் 1--4--1973 முதல் கொண்டு வர 26--6--73 தேதிய அரசு பொதுப்பணித் துறை ஆணை (பலவகை) எண் 1032-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. காட்டூர் கோபால்:** தலைவரவர்களே, இதே போன்று ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரிகின்ற ஊழியர்களும் நிரந்தரம் செய்யப்படுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

### *Opening of an Aerodrome near Salem or Ulundurpet*

*18 Q.—THIRUVALARGAL P. THIRUGNANASAMBANDAM AND V. ISVARMURTI: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Central Government have elicited our views with regard to the opening of an Aerodrome near Salem or Ulundurpet; and

(b) if so, the details thereof?

சேலம் அல்லது உளுந்தூர்ப்பேட்டைக்கருகில் விமான நிலையம்

திரு. பி. திருஞானசம்பந்தம் & திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலத்திலாவது, உளுந்தூர்பேட்டைக்கு அருகிலாவது விமான நிலையம் ஒன்று அமைக்க மத்திய சர்க்கார் நமது அரசின் ஆலோசனையைக் கோரியுள்ளதா ?

(இ) ஆமெனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை. சேலத்தில் தற்போது விமான தளம் அமைக்க இயலாது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. உளுந்தூர்ப்பேட்டைக்கு அருகில் விமான நிலையம் அமைப்பது பற்றி எவ்விதத் தகவலும் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, திருநெல்வேலிக்கு அருகாமையிலுள்ள கயத்தாரில் ஒரு விமான நிலையம் அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதுபற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கே விமான நிலையம் அமைப்பதுபற்றி எந்தத் தகவலும் இல்லை.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, சென்ற மகாயுத்தத்தின் போது கயத்தாருக்கு அருகில் ஒரு விமான நிலையம் ஏற்படுத்துவது குறித்து ஆராயப்பட்டது. அப்படி அங்கு ஏற்படுத்துவதாக இருந்தால், அரசிடம் அதுபற்றி ஏதாவது குறிப்பு இருக்கிறதா என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தூத்துக்குடி தொழிற்சாலையை ஒட்டி, அங்கே ஒரு விமான தளம் அமைப்பது நல்லது என்று இந்த அரசின் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி மத்திய அரசு முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஓடிக்கொண்டிருக்கும் விமானங்கள் கூட சரியாக ஓடுவதில்லை என்று பத்திரிகையில் பார்த்தேன். அது பற்றி அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் சொல்லுவது போல நானும் பத்திரிகையில் படித்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : விமானம் ஓடுவதில்லை, பறக்கிறது.



*Co-operative Spinning Mill*

* 19 Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Co-operative Spinning Mill is proposed to be started in Madurai district;

(*b*) if so, the details thereof; and

(*c*) the stage at which the scheme now stands?

கூட்டுறவு நூற்பாலை

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை ஏதேனும் தொடங்கக் கருதப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) நூற்பாலை தொடங்கும் திட்டம் இப்போது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) : இவ்வினாக்களுக்கு இடமில்லை.

*Assistant Public Prosecutors, Grade II*

* 20 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Assistant Public Prosecutors, Gade II, have been accorded Gazetted status;

(*b*) if so, whether there has been any increase in their scale of pay; and

(*c*) if not, the reasons therefor?

இரண்டாம் நிலை உதவி வழக்கு நடத்துநர்கள்

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தரம் II உதவி வழக்கு நடத்துநர்களுக்கு (Assistant Public Prosecutor, Grade II) அரசிதழ் பதிவு அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அவர்களது சம்பள விகிதம் ஏதேனும் உயர்த்தப்பட்டுள்ளதா?

(உ) இல்லையெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(உ) தற்போதைய நிலையில் இவர்களுடைய அந்தஸ்தை அரசிதழ் பதிவுற்றதாக மாற்றத் தேவையில்லை என அரசு நிர்மானித்துள்ளது.

## *Petition given by the Councillors of Thiruvannamalai Municipality*

*24 Q.—Thiru L. BALARAMAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether the Councillors of Thiruvannamalai Municipality have given any petition to the Government on or about 4th January 1973;

(b) if so, the details thereof; and

(c) the action taken thereon by the Government?

### திருவண்ணாமலை நகர மன்ற உறுப்பினர்கள்—புகார் மனு

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 4-1-1973-ஆம் நாள் வாக்கில் வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை நகர மன்ற உறுப்பினர்கள் அரசுக்குப் புகார் மனு ஏதும் கொடுத்தனரா?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது?

(உ) அதன் மீது, அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

## *Making Tiruchirappalli Municipality into a Corporation*

*25 Q.—Thiruvalargal S. VELLAPANDIAN AND G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to make the Tiruchirappalli Municipality into a Corporation; and

(b) if so, the stage at which the matter now stands?



### திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுதல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சிராப்பள்ளி நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆமெனில், இது தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

## *Election to the Madras Corporation*

*26 Q.—Thiru G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that the election to the Madras Corporation scheduled to be held in November is to be postponed;

(b) if so, the reason for such postponement; and

(c) when the election is likely to be held?

### சென்னை மாநகராட்சித் தேர்தல்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நவம்பர் திங்களில் நடைபெறவிருந்த சென்னை மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்படவிருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், அவ்வாறு ஒத்திவைக்கக் காரணம் என்ன?

(உ) அத்தேர்தல் எப்போது நடத்தப்படவிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மின்வெட்டின் காரணமாக வாக்காளர் பட்டியல் அச்சிடுதல் குறித்த காலத்தில் முடிவுபெறவில்லை. எனவே அக்டோபர் 73-ல் மாநகராட்சித் தேர்தலை நடத்துவது இயலாததாயிற்று. ஆதலின் மாநகராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(உ) மாநகராட்சித் தேர்தல் ஏப்ரல் 1974-ல் நடைபெறவிருக்கிறது.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, இந்த மின்சார இலாகா ஊழல் சம்பந்தமாக, நேற்றைய தினத்தில் நகரசபை கலைக்கப்படும் என்று அறிவிக்கப் பட்டது. அப்படியே நகரசபை கலைக்கப்பட்டு விடலாம் என்று தெரிகிறது. கலைக்கப்படுவதற்கு முன்பு இந்தத் தேர்தல் ஏப்ரலில் நடைபெறுவதாக இருந்தது. தற்போது கலைக்கப்பட்ட பிறகு ஏப்ரலிலேயே நடைபெறுமா அல்லது நீட்டித்துப் போகுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. CHAIRMAN : There is difference between the Corporation and Municipalities. The Hon. Minister answers with regard to the Corporation and not the Municipalities.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, நான் மாநகராட்சியைப் பற்றித் தான் கேட்கிறேன்.

*மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :* அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு அதைப்பற்றி முடிவு செய்யப்படும்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, நவம்பரில் நடக்கவிருந்த தேர்தல் ஏப்ரல் மாதத்திற்குத் தள்ளி வைக்கப்பட்டது ; தற்போது மாநகராட்சி கலைக்கப்பட்டு விட்டது ; அதற்குப் பிறகும் தேர்தல் ஏப்ரலில் நடக்குமா என்பது என் கேள்வி. அது ஆராய்ச்சியில் இருக்கிறதா, அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :* தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கலைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். கலைக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த மசோதா வரும் போது இதுபற்றி விவரமாக, தெளிவாக அறிக்கை கொடுக்கப்படும்.

*Pallavan Transport Corporation*

* 27 *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the Pallavan Transport Corporation has conducted an experiment on radial and feeder services in some parts of Madras City;

(*b*) if so, the routes in which such experiments were conducted; and

(*c*) the result thereof?





**பல்லவன் போக்குவரத்துக் கழகம்**

*திரு. ஜி. சுவாமிநாதன் :* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சென்னை மாநகரின் சில பகுதி களில் நேர்த்தடப் பணிகளை ( Radial Services ) கிளைத்தடப் பணிகளை (Feeder Services) சோதனை அடிப்படையில் செயல்படுத்தி வருவது உண்மையா ?

(இ) ஆமெனில், எந்தெந்த வழித்தடங்களில் சோதனை அடிப்படையில் அப்பணிகள் நடத்தப்பட்டன ?

(உ) அவற்றால் ஏற்பட்ட பலன் யாது ?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* (அ), (இ) & (உ) பல்லவன் போக்குவரத்துக் கழகம், சைதாப்பேட்டை பகுதியில் நேர்த்தட முறை (Radial Routes) கிளைத்தட முறை ( Feeder Routes ) ஆகியவற்றைச் சோதனைஅடிப்படையில் நடத்திவருகிறது. மொத்தத்தில் வெற்றி காமானதொரு திட்டமாகும்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, இந்தச் சோதனைக்குப் பிறகு சென்னையிலுள்ள மற்ற பகுதிகளுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கும் அபிப்பிராயம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அது எப்போது முதல் விஸ்தரிக்கப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :* தலைவரவர்களே, இத்தகைய வழித் தடங்களைச் சீர்படுத்துகிற முறையினை மற்ற பகுதிகளுக்கும் விஸ்தரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. படிப்படியாக அந்தத் திட்டம் மேற் கொள்ளப்படும்.

***City Buses***

* 28 *Q.*—THIRU R. SAKTHI MOHAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Government have any proposal to increase the number of City buses in Madurai City; and

(*b*) if so, the **details thereof** ?

### நகரப் பேருந்துகள்

**திரு. ஆர். சக்திமோகன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை நகரில் நகரப் பேருந்துகளின் ( City Buses ) எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசு திட்டம் ஏதும் வைத்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) & (இ) 17--1--72-ல் தனியாரிடமிருந்து தேசியமயமாக்கப்பட்ட பொழுது மதுரை நகரில் எடுத்துக் கொண்ட பேருந்துகள் 101. மதுரை நகரில் தற்பொழுது 139 பேருந்துகள் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தினால் ஓட்டப்படுகின்றன. அரசின் தேசிய மயத் திட்டத்தின் கீழ் இந்த எண்ணிக்கை படிப்படியாக 200 ஆக உயரும். மேலும் நகரில் உள்ள வழித் தடங்களில் போக்குவரத்துத் தேவைகளுக்குத் தக்கபடி பரிசிலனை செய்து ஒவ்வொரு மாதமும் பேருந்துகள் அதிகரிக்கப்படுகின்றன.

### *Scales of pay to all the Temple Staff*

* 29 Q.—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(a) whether there are proposals under the consideration of the Government to fix uniform scales of pay to all the temple staff under the control of the Hindu Religious and Charitable Endowments (A) Department in the State; and

(b) if so, the details thereof?

### ஆலயப் பணியாளர்களின் சம்பள வீதங்கள்

**திரு. எம். ஆறுமுகசாமி :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில், இந்து சமய அறக்கட்டளைத் துறை (நிர்வாகம்) கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆலயப்பணியாளர்கள் அனைவருக்கும் ஒரே சீரான சம்பள வீதங்களை வரையறுப்பதற்கான செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?



**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களையும் அதன் வருமானத்திற்கு ஏற்ப ஆறு தரங்களாகப் பிரித்து ஒவ்வொரு தரத்திலும் உள்ள ஆலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு ஒரே சீரான சம்பள விகிதத்தை நிர்ணயம் செய்யத்தக்க அறிவுரைகள் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரால் 2-4--73-ல் அனுப்பப்பட்டுள்ளன.

### *Details of the land declared as Temple Properties*

* 30 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the details of the 717-43 cents of land which have been declared as temple properties and mentioned in the Policy Note relating to the Hindu Religious and Charitable Endowments (Administration) Department?

### திருக்கோயில் உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலப்பரப்பின் விபரம்

**திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்) :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இந்து சமய அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் கண்டுள்ள, திருக்கோயில் உடைமைகளாக ஆக்கப்பெற்ற 717-43 செண்டு நிலப்பரப்பின் விபரம் யாது ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஒரு விபரப் பட்டியல் @ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### உடுக்குறியிடாத வினாக்கள்

#### வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் கலைக்கல்லூரிகள்

1. கே. **திரு. எல். பலராமன் :** மாண்புமிகு கல்விஅமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் கல்லூரி வாரியாக எவ்வளவு பேர் ?

---

@ 101-109 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(இ) இக்கல்லூரிகளில் அரசு விடுதிகளில் தங்கிப் படிக்க எத்தனை மாணவர்களுக்குக் கல்லூரி வாரியாக வசதி செய்து தரப்பட்டுள்ளது?

| கல்லூரியின் பெயர். | வடாற்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் கலைக் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள். | இக்கல்லூரிகளில் அரசு விடுதிகளில் தங்கிப் படிக்க வசதி செய்து தரப்பட்ட மாணவர் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| முத்துரங்கம் அரசினர் கலைக் கல்லூரி, வேலூர் | 1031 | விடுதி இல்லை |
| கலைஞர் கருணாநிதி அரசினர் கலைக் கல்லூரி, திருவண்ணாமலை. | 721 | 103 |
| அரசினர் திருமகள் கலைக் கல்லூரி, குடியேற்றம். | 894 | 114 |
| அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கல்லூரி, வாலாஜா பேட்டை. | 651 | 298 |
| அறிஞர் அண்ணா அரசினர் கலைக் கல்லூரி, செய்யாறு. | 1,417 | 207 |

### *Fly-over near the Gemini Studio*

2 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the parties from whom land was acquired for the construction of the fly-over near the Gemini Studio in Madras;

(b) the extent of land acquired and the amount of compensation paid;

(c) the contractors who have been entrusted with the work; and

(d) whether the work has been completed?



A.—(a) and (b).

The following lands from the parties noted against each have been acquired for the purpose :

| *Survey number.* | *Extent.* C. | G. | Sq. ft. | *Name of the land owner.* |
|---|---|---|---|---|
| R.S. No. 3/10 Pt. newly subdivided as R.S. No. 3/13 of Mylapore. | 0 | 03 | 1,312 | Thiru S. Balasubramaniam. |
| R.S. No. 48/6, pt. newly subdivided as R.S. No. 48/18 of Nungambakkam. | 0 | 02 | 2,076 | Thiru M. P. Damodharan, Rajah Sir Annamalai Chettiar Memorial Trust. |
| R.S. No. 48/10 pt. newly subdivided as R. S. No. 48/17 of Nungambakkam. | 0 | 00 | 189 | Thiru S. M. Palaniappa Chettiar. |
| R. S. No. 48/11, pt. newly subdivided as R. S. No. 48/16 of Nungambakkam. | 0 | 00 | 1,834 | Thiru S. M. Palaniappa Chettiar. |
| | 0 | 05 | 5,411 | |

As the award is yet to be passed, the compensation amount has not yet been paid.

(c) Messrs. East Coast Construction and Industries Limited have been entrusted with the work.

(d) The work was completed and the fly-over was thrown open to traffic on 1st July 1973.

### *Bagasse*

3 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to utilise the bagasse, a by-product of sugar mills for paper mills; and

(b) if so, the details thereof?

*A.*—(*a*) Yes.

(*b*) The Government of Tamil Nadu are examining the possibility of setting up a paper mill based on bagasse and a feasibility report has been got prepared for this purpose. Further action will be taken after the report has been examined.

### *Furniture Fabricating Unit, Kappalur.*

4 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Industries be pleased to state—

The investment made by the Tamil Nadu Small Industries Corporation Limited for the Furniture Fabricating Unit at Kappalur in Madurai District?

*A.*—Rs. 1,84,675.

### *Australian Cattle*

5 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether a large number of Australian cattle have arrived in the State during January 1973; and

(*b*) if so, the details thereof?

*A.*—(*a*) Yes.

(*b*) (1) Seventy-eight numbers of exotic cattle arrived in Madras Airport on 3rd January 1973. Out of 78 animals, 47 were intended for the Andhra Pradesh and the remaining 31 for the Government of Mysore. The animals intended for Mysore were taken delivery of immediately on arrival by the Officers of that State. The animals intended for Andhra Pradesh were re-allotted to the Government of Orissa.

(2) These animals were kept at the Salvage of Dry Cows Farm, Alamadhi, temporarily.

(3) None of the animals referred to was intended for this State. Being a convenient Air Port, the animals were disembarked at Madras and thereafter taken to Orissa State as ordered by Government of India. Immediately on receipt of all the animals, the Government of India were addressed to allot at least half the number of animals to this State, but the request was



not considered. This year no animals have been allotted to this State but the Government of India has promised that the requirements of this State will be considered in the future consignments.

### தொழில் வரி

6. கே. திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டில் ரூ. 300 வரை மாத ஊதியம் பெறும் ஊழியர்களுக்குத் தொழில் வரி விலக்கு அளித்துள்ள மாநகராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள் எவை எவை?

(இ) அவை எப்போதிருந்து அவ்விலக்கினை அளித்துள்ளன?

ப. (அ) & (இ) சென்னை மாநகராட்சியில் ரூ. 300 வரை மாத ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு 1—4—1970 முதல் தொழில் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மதுரை மாநகராட்சியில் ரூ. 200 வரை மாத ஊதியம் பெறும் ஊழியர்களுக்கு 1—4—1972 முதல் தொழில் வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### *Boat service run by the Slum Clearance Board*

7 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any boat service is run by the Slum Clearance Board between Nandanam and Adyar-Kottur in Madras;

(*b*) if so, the number of boats run;

(*c*) the crew employed in them; and

(*d*) the capacity of the boats ?

*A.*—(*a*) Yes.

(*b*) Two boats are in operation.

(*c*) Three men per boat per day.

(*d*) seven persons per boat.

### *Rose Wood Logs*

8 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether large quantity of Rose Wood logs were sold at the Government Timber Depot at Nagercoil in the Calendar year 1972; and

(*b*) if so, the details thereof?

ப. (அ) இல்லை.

(இ) 1972 ஆம் ஆண்டு நாகர்கோவிலிலுள்ள அரசு மரக்கிடங்கிலிருந்து 162.582 கன மீட்டர் செம்மரம் விற்கப்பட்டது. இதன் மூலம் அரசுக்குக் கிடைத்த வருவாய் ரூ. 4,13,760.40 ஆகும்.

### *State Transport Bus burnt at Palani*

9 *Q*.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether any State Transport Bus was burnt in front of the Palani Municipal High School about 9th January 1973 at Palani;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken thereon ?

A—(*a*) Yes, near Santhana Krishna Theatre.

(*b*) As a protest against the alleged Police excesses at the Clive's Hostel, Tiruchirappalli.

(*c*) The case is pending trial before the Sub-Divisional Magistrate, Dindigul.

### *Clash between students and bus crew*

10 *Q*.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Transport be pleased to state—

The incidents in which the students and bus crew clashed in Tirunelveli district during the Calendar Year 1972, month-wise?

A—There was no clash between the students and the bus crew in Tirunelveli District during the year, 1972.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]



### 2. மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

MR. CHAIRMAN : I have to announce to the House, that under rule 6 of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the following Members of the Legislative Council to be the panel of Vice-Chairmen for the 46th session of the Legislative Council under the Constitution of India :— பி.ப. 4-30

1. Thiru S. T. Adityan;
2. Thiru N. Wilson Appollos;
3. Thiru S. Narayanaswamy;
4. Thiru S. Jayarama Reddiar.

### 3. கவன ஈர்ப்பு.

### சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையின் தொழிலாளர் வருகைப் பதிவேட்டில் முறைகேடுகள் சம்பந்தமாக மாநகராட்சிப் பணியாளர்கள் கைது செய்யப்பட்டது குறித்து

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் :

"சென்னை மாநகராட்சிப் பணியாளர்கள் சிலரால், மாநகராட்சி நிதியில் பல கோடிக் கணக்கான ரூபாய் கையாடல் செய்யப்பட்டதாகக் கூறப்படுவது பற்றியும், மாநகராட்சி மின்சாரத் துறையின் தொழிலாளர் வருகைப் பதிவேட்டில் முறைகேடுகள் இருப்பதாகக் கூறப்படுவது பற்றியும், இது சம்பந்தமாக மாநகராட்சிப் பணியாளர்கள் சிலர் கைது செய்யப்பட்டது குறித்தும்" . . .

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி மின்சாரத் துறையில் பொய் வருகைப் பதிவேடுகள் தயாரித்துச் சரிவரச் சோதித்து ஆய்வு செய்யாமலேயே அவற்றின்பேரில் ஊதியம் கொடுக்கப்படுவதாக 1973 செப்டம்பர் முதல் வாரத்தில் மாநகராட்சி ஆணையாளருக்குச் சில புகார்கள் கிடைத்தன. மின்சாரத் துறையில் தொழிலாளர் வருகைப் பதிவேடுகள் தயாரித்து ஏற்பளிப்பதில் முறைகேடுகள் இருப்பது குறித்துச் சில கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு நேரடியாகப் பொறுப்பாக இருந்ததாகத் தெரியவந்த தட்டச்சர் திரு. எம். கண்ணப்பன் என்பவரைச் சென்னை மாநகராட்சி ஆணையாளர் உடனடியாக 11—9—1973 அன்று பதவியிலிருந்து

தற்காலிகமாக நீக்கிவைத்தார். 15—10—1973 அன்று அவர் 1973 ஏப்ரல் முதல் செப்டம்பர் வரையில் அனுமதிக்கப்பட்ட வருகைப் பதிவேடுகள் அனைத்தையும் முற்றிலும் பரிசீலிக்குமாறும் உடனடியாக அறிக்கை ஒன்றைக் கொடுக்குமாறும் அத் துறையிலேயே கணக்குகளைப் பரிசீலிக்கும் பொறுப்புடைய உதவிக் கணக்கதிகாரி திரு. ஏ. பாலசுப்பிரமணியம் என்பவரைப் பணித்தார். மாநகராட்சி நிதிகளை மோசடி செய்ய பொய் வருகைப் பதிவேடுகள் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுப்பதில் மின்சாரத் துறை அதிகாரிகள் செய்துள்ள பல முறைகேடுகளையும், ஊழல்களையும் இவர் மாநகராட்சி ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். மின்சாரத் துறையைச் சேர்ந்த மின்சாரப் பொறியாளர் திரு. ஆர். வாசுதேவன், 5 உதவி மின்சாரப் பொறியாளர்கள், 24 சார்நிலைப் பணியாளர்கள் ஆகியோர் மீது குற்றம் சாட்டியுள்ளார். அவர்கள் மீது விரிவான விசாரணை இன்னும் முடிவாகவில்லை. சென்னை மாநகராட்சி வரிவிதிப்பு, நிதிக் குழுத் தலைவர் திரு. எஸ். எம். கிருஷ்ணன் தம்முடைய 3—11—1973-ம் தேதிய கடிதத்தில் இப்பணக் கையாடல் பற்றி அரசின் நாட்டத்திற்குக் கொண்டு வந்தார். மாநகராட்சிப் பணிகளை ஆய்வு செய்வதற்காக, நகராட்சி ஆணையாளர் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் மேற்கொண்டதால், திரு. வி. கருப்பன் தற்காலிக ஆணையாளராக 18—10—1973-ம் தேதியன்று பொறுப்பேற்றார். அவர் இந்த வழக்குப் பற்றி மேலும் புலன் விசாரணை செய்து தொழிலாளர் வருகைப் பதிவேடுகள் சம்பந்தமாகப் பொய்க் கைச்சாத்துகள் தயாரித்தல், பொய் வருகைப் பதிவேடுகளைத் தயாரித்தல், வருகைப் பதிவேடுகளில் பெயர் இல்லாத நபர்களை இருப்பதாகக் காட்டி பணம் பட்டுவாடா செய்தல், தவறான தலைப்பின்கீழ் பணம் செலவு செய்தல் போன்ற பல முறைகேடுகளும் தவறான செயல்களும் செய்யப்பட்டுள்ளன என்று கண்டார். தற்காலிகப் பொறுப்பில் இருந்த ஆணையாளர், மேலும் புலன் ஆய்வு செய்வதற்குச் சாதகமாக இருக்கும் பொருட்டு உடனடி நடவடிக்கை எடுத்து, அடியிற்கண்ட நபர்களை தற்காலிகமாக வேலை நீக்கம் செய்துள்ளார் :—

மின்சாரத் துறை :—

1. திரு. கிரிகரி எஸ். ஜோசப், உதவிப் பொறியாளர்
2. திரு கே. நாராயணன் ஐயர், உதவிப் பொறியாளர்
3. திரு. எஸ். ராம்தாஸ், மேற்பார்வையாளர்
4. திரு. கே. எம். ராஜப்பா நாயர், மேற்பார்வையாளர்
5. திரு. எம். கண்ணப்பன், தட்டச்சர்



மத்தியக் கணக்குத் துறை :—

6. திரு. எஸ். ராஜன், உதவிக் கணக்கு அதிகாரி
7. திரு. பி. எம். கிருஷ்ணன், மேலாளர்
8. திரு. சி. இராமமூர்த்தி, மேலாளர்
9. திரு. எஸ். எப். சுந்தரம், கணக்காளர்
10. திரு. கே. கணேசன், கணக்காளர்

வருவாய்த் துறை :—

11. திரு. பி. முத்துசாமி, தலைமைக் காசாளர்
12. திரு. என். துரைவேலு, உதவிக் காசாளர்
13. திரு. கே. இராமச்சந்திரன், கொல்லா

இந்த முறைகேடுகளைப்பற்றி முழுமையாகப் புலனாயல், செய்ய ஏற்பாடு செய்யுமாறும், மாநகராட்சி நிதிகளைக் கையாடல் செய்த கடுங் குற்றத்திற்காக மின்சாரத் துறைத் தலைவரும் 1-ம் வகுப்பு அதிகாரியுமாகிய மின்சாரப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறும் மாநகராட்சி ஆணையாளர் அரசை வேண்டினர். மாநகராட்சி ஆணையாளருடனும், வருவாய் அதிகாரியுடனும், தலைமைகணக்கு அதிகாரியுடனும், உள்ளாட்சி நிதிக் கணக்குகள் பரிசோதகருடனும், ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறைச் செயலாளர் இது பற்றி முழுமையாகவும் விவரமாகவும் விவாதித்தார். தொழிலாளர் வருகைப் பதிவேடுகளின் அடிப்படையில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கான தற்போதைய முறையை முடுக்குவதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், இத்துறையில் தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதில் கையாளப்பட்ட மோசடிகள் மீண்டும் நிகழ்வதைத் தடுப்பதற்குத் தேவையான நடைமுறை மாறுதல்கள் ஆகியவற்றைக் குறித்து அக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மின்சக்தித் துறைத் தலைவர் திரு. ஆர். வாசுதேவனை இந்த முறைகேடுகளுக்கான பொறுப்பிலிருந்து நீக்க முடியாது என்றும், பணக் கையாடலில் அவரும் உடந்தையாக இருந்தார் என்பதை மறுக்க முடியாது என்றும் கருதப்பட்டதால், அவரை உடனடியாகப் பணியிலிருந்து தற்காலிகமாக நீக்கியும், மறு ஆணைகள் பிறப்பிக்கப்படும் வரையில் நீர்ப்பணிகள் பொறியாளராகிய திரு. பி. விஸ்வநாதனை மின் பொறியாளரின் பதவியை முழுக் கூட்டுப் பொறுப்புடன் வகித்து வருமாறு உத்தரவிட்டு 13—11—1973 நாளிட்ட அரசு ஆணை எண் 2443 வெளியிடப்பட்டது.

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1973 நவம்பர் 21

இக்கையாடல் எந்த அளவுக்கு நடந்துள்ளது என்பதைக் கண்டறிவதற்கும், இந்த மோசடியில் ஈடுபட்ட மின் துறையைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவர் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கும், இந்த வழக்கு குறித்து முழுமையாகவும் விரிவாகவும் புலனாய்வு செய்வது தேவைப்பட்டதால், இவ்வழக்கு சம்பந்தமாக புலனாய்வு லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டது. மின் பொறியாளர் திரு. ஆர். வாசுதேவன் மீதும் சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த ஏனைய 43 பேர் மீதும் இ.பி.கோ. 120 பிரிவின் கீழும், இ.பி.கோ. 167, 409, 420, 465, 467, 471, 477 பிரிவுகளின் கீழும் 1947-ஆம் ஆண்டு லஞ்சத் தடுப்புச் சட்டத்தின் (மத்திய சட்டம் 2/1947) 5 (1) (c), (d), 5 (2) பிரிவுகளின் லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறையைச் சேர்ந்த சென்னை மாநகர் பிரிவில் 5/AC/MCT/73 எண் உள்ள வழக்கு ஒன்று 15—11—1973-ல் பதிவு செய்யப்பட்டுள்ளதென்று, அதன் மீது புலனாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்குநர் தெரிவித்துள்ளார்.

இந்த ஊழல் குறித்து அரசின் நாட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட உடனேயே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது, அவர்கள் செய்த முறைகேடுகளுக்காக விரைந்தும் திறம்படவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை மேலே விளக்கப்பட்டுள்ள நிலையிலிருந்து அறியலாம். இந்த வழக்கில் கையாடல் செய்யப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு, இந்த மோசடி எவ்வளவு காலமாக மாநகராட்சியில் நிகழ்ந்து வந்துள்ளது என்பவை போன்ற விவரங்களை லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்குநரின் அறிக்கை வரப்பெற்ற பின்னர் தான் அறிய இயலும். சென்னை மாநகராட்சி மன்றம் கலைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சரும் தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையில் நேற்று அறிவித்துள்ளார். லஞ்ச ஊழல் ஒழிப்பு இயக்குநரிடமிருந்து அறிக்கை வரப் பெற்ற பின்னர், அச்சமோ, தயவோ இன்றி, திறம்பட பாரபட்சமின்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இப்பேரவைக்கு நான் உறுதியளிக்கிறேன்.

பி.ப. 4-40 * திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன். மாநகராட்சியின் மின்சாரத்துறையில் மட்டுமல்ல, வேறு பல துறைகளிலும் இந்த மாதிரிக் குறைபாடுகள் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே இப்போது லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறையின் மூலம் புலன் விசாரணை செய்வதோடு மட்டுமல்லாமல், இதற்காக ஒரு விசாரணைக் கமிஷன்



1973 நவம்பர் 21] [திரு. கே. ராஜாராம்]

சட்டப்படி ஒரு விசாரணைக் குழு நியமித்து, பூரணமாக இதைப் பற்றி விசாரணை செய்ய வேண்டும். மாநகராட்சியில் எந்தெந்தத் துறைகளில் இந்த மாதிரிக் குறைகள் நடந்திருக்கின்றன என்று அறிந்து, அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்க இந்தக் குழுவின் நியமனம் உதவியாக இருக்கும். ஆகவே அம்மாதிரி ஒரு விசாரணைக் குழு நியமிக்க அரசு எண்ணியிருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, நேற்றையதினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப்பற்றித் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். நானும் அதைப்பற்றி எடுத்துச் சொல்வது சரி என்று கருதுகிறேன். இந்த மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் மாத்திரமல்ல, எந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் இம்மாதிரிச் செயலில் ஈடுபட்டிருந்தாலும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் மீது எடுக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அல்லாது, லஞ்ச ஊழல் ஒழிப்பு அதிகாரியிடத்தில் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அதிகாரிகள் ரகசியமான முறையிலே வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கருதிக் கொடுக்கப்பட்டது. அந்த முறையில் நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. அதனாலே தனியாக ஒரு விசாரணைக் குழு போட வேண்டிய அவசியமில்லை என்று நேற்று பேரவையில் அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களும் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அதேமாதிரி கலைக்கப்படும் என்று அறிவித்த பிறகு, கலைக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளும் துரிதமாகச் செயல்படுத்தப்படும். இந்தத் தொடரிலே அதற்கென்று சட்டம் கொண்டு வரவும் இருக்கின்றோம். அப்படித் தனி அதிகாரி நியமிக்கின்றபோது, அந்தத் தனி அதிகாரி பொறுப்பேற்ற பிறகு, அதைப்பற்றி இன்னும் தீவிரமாக விசாரிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே இதற்காக என்று தனியாக ஒரு நீதிக் குழு போட வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டிற்காக தனியே ஒரு விசாரணைக் கமிஷன் தேவையில்லை என்று சொல்லுகிறார்கள். தனி நீதி விசாரணை நடத்தப்பட்டால்தான், குற்றவாளிகளைச் சரியான முறையிலே கண்டுபிடிக்க முடியும். ஏனென்றால் இப்போது விசாரணை செய்யப்போகும் அதிகாரிகள் எல்லோரும் சர்க்கார் கீழேதான் பணியாற்றுபவர்கள். இப்போது நடந்திருக்கும் குற்றங்கள், மாநகராட்சியில் பல வருடங்களாக நடந்து வருகின்றன

என்று தெரிகிறது. இதில் குற்றவாளிகள் என்று இருப்பவர்கள், கீழ்த்தர அதிகாரிகள், அசிஸ்டென்ட் இன்ஜினியர்கள், இன்ஜினியர்கள் என்று சொல்லி வருகிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** கீழ்த்தர அதிகாரிகள் என்பது அசிஸ்டென்ட் இன்ஜினியர்கள், இன்ஜினியர்கள் இவர்களா?

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** இல்லை. சிறிய அதிகாரிகள். கமிஷனர், பி. ஏ. போன்றவர்களுக்கும், பல வருடங்களாக வேலை பார்த்துக்கொண்டிருப்பவர்களுக்கும் பொறுப்பு உண்டு. அவர்கள் எல்லாம் இந்தப் பொறுப்பிலிருந்து தப்ப முடியும் என்று நினைக்கவில்லை. இதற்கு தனி விசாரணைக் குழு வைப்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. பாரபட்சமற்ற விசாரணைக் குழு இருக்க வேண்டும். தனிப்பட்ட முறையிலே, பாளையங்கோட்டை, கிளைவ் ஹாஸ்டல் விஷயங்களில் நடந்ததுபோன்று, பாரபட்சமற்ற ஒரு நீதி மன்றம் இருக்க வேண்டும். நம் மாநில அதிகாரிகளின் விசாரணையில் நல்ல முறையில் தீர்ப்பு வரும் என்றும் சரியான முறையில் நீதி ஏற்படும் என்றும் சொல்ல முடியாது. பாரபட்சமற்ற ஒரு நீதி மன்றம் போட்டு, அதிலேயும் கட்சிக் கலப்பற்ற ஒரு மெம்பர் இருந்தால்தான், சரியான முறையிலே விசாரணை நடப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லி, விசாரணைக் குழு வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்போது புலனாய்வு செய்து கொண்டிருக்கின்ற அதிகாரிகள் அத்தனை பேரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள், அரசாங்கத்திற்கு உட்பட்டவர்கள் தான். நீதித் துறையிலே இருப்பவர்களும் இந்த நாட்டிலே பிறந்தவர்களாகத்தான் இருக்க வேண்டும். இதற்காக வெளி மாநிலத்திலிருந்து நீதிபதிகளை வரவழைக்க முடியாது. அங்கத்தினர் அவர்கள் இந்த மாநகராட்சியில் இருக்கின்றவைகளைப் பற்றிச் சொல்கின்றார்கள். இந்த மாநகராட்சியில் இருக்கின்ற ஊழல்களைப்பற்றி ஓரளவுக்குத் தெரிந்துகொண்டு, விரைவிலே ஸ்ரீரங்க நகராட்சியிலும் பரிசீலனை செய்யச் சொல்லலாம் என்று இருக்கின்றேன். அங்கத்தினர் அவர்களுடைய தலைமையில் அது எப்படி இருக்கிறது என்றும் பரிசீலிப்பது நல்லது என்று கருதுகிறேன். பொதுவாக நீதி விசாரணைக்குழு போடுவோமேயானால், அதற்கு இன்னும் கொஞ்சகாலம் தாமதம் ஏற்படலாம். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால், இந்த லஞ்ச ஊழல் ஒழிப்புத் துறையினர் தீவிரமாகப் பணியாற்றி வருகிறார்கள். எனவே தனி நீதி விசாரணைக் குழு தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** ஸ்ரீரங்கத்தில் உறுப்பினர் அவர்கள் நகராட்சித் தலைவராக இருக்கின்றார்கள் என்பதற்காகச் சொல்கின்றார். கோபப்படவில்லை.

**திரு. கே. ராஜாராம்:** ஒரு உறுப்பினரைப் புண்படுத்தும் முறையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்க வேண்டிய அவசியமில்லை. பொதுவாகவே சொல்லியிருக்கலாம். ஸ்ரீரங்கம் என்று குறிப்பிடாமல் சொல்லியிருக்கலாம். அமைச்சர் அவர்களும் அந்த ஊர்க்காரர் என்ற முறையில் தமாஷாகவே சொல்லியிருக்கலாம். இந்த மாதிரி ஒரு அமைச்சர் ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைச் சொல்வது நல்லதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அங்கத்தினர் எங்கள் ஊர்க்காரர்தான். அவர் தலைமையில் உள்ள அந்நகராட்சி நன்றாக நடைபெற்றுவருகிறது என்ற நம்பிக்கையில் தான் சொன்னேன். மற்றவர்களுக்கு அந்நகராட்சி வழி காட்டியாக இருக்குமளவுக்கு நல்ல முறையில் நடந்துவருகிறது என்று காட்டவே சொன்னேனே தவிர, அவர் மனத்தைப் புண்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு சொல்லவில்லை.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** அமைச்சர் அவர்கள் சொல்வதுபற்றி நான் சந்தோஷப்படுகிறேன். அவரும் என் நண்பர்தான்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** On a point of order கவன ஈர்ப்பு முன்னறிவிப்பில் அமைச்சர் அவர்களின் விளக்கத்தின் மீது அங்கத்தினர் இரண்டு கேள்விகள்தான் கேட்கலாம் என்று மன்ற விதிமுறை இருக்கின்றது.

**திரு. கே. ராஜாராம்:** 'பர்சனல் எக்ஸ்பளனேஷன்' என்ற முறையில் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** ஆம். தனிப்பட்ட விதத்திலேதான் கேட்டுக்கொண்டேன்.

### 4. 1973-74 ஆம் ஆண்டிற்கான, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரவு செலவுத் திட்ட அறிக்கைமீது விவாதம்

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் பி.ப
அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74-ம் ஆண்டு நிதி நிலை 4-4(
அறிக்கையும், @ 1972-73-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையும் இம்

@ 120-123 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பி. இராமன்] [1973 நவம்பர் 21

மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை, இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுகின்றேன்.

2. 1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ் நாடு மின்சார வாரியக் கருத்துரைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், இந்த நிதி நிலை அறிக்கைகளை, அரசுக்கு தமிழ் நாடு மின்சார வாரியம் அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும், சட்ட மன்றத்தினுல் விவாதிக்கப்படலாம் என்ருலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவை அல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து, சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை, மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். கடந்த ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் பேரில் நடந்த விவாதத்தில் எடுத்துக் கூறப்பட்ட கருத்துக்களின் பேரில், மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

3. பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத அடித்தளமாகத் திகழ்கிறது மின்சாரம். மனித வாழ்வின் எல்லா அம்சங்களிலும் மின்சாரம் தேவைப்படுகிறது. தொடர்ந்து ஏற்பட்டு வரும் வளர்ச்சிக்கு, குறிப்பாக, தொழில் துறையிலும் வேளாண்மைத் துறையிலும் காணப்படும் வளர்ச்சிக்கு உறுதுணையாக மின்சக்தியும் வளர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்பதிலே இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டுள்ளது.

4. பதினேழு நீர் மின் உற்பத்தி நிலையங்களின் 1,224 மெகாவாட்டுகளும், நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 600 மெகாவாட்டுகளையும் சேர்த்து, எண்ணூர், பேசின் பிரிட்ஜ் ஆகிய இரு அனல் மின் நிலையங்களின் 430 மெகாவாட்டுகளையும் உள்ளடக்கி, தமிழ் நாடு மின் இணைப்பின் இன்றைய நிறுவனத் திறன் 2,254 மெகாவாட்டுகளாகும். 1951-ல் இருந்த நிறுவனத் திறனைவிட இது 14.45 மடங்கு அதிகமானதாகும். பாசனத்துடன் தொடர்ப்பு கொண்டுள்ள நிலையங்கள் கோடை மாதங்களில் மூடப்படும் பொழுது, சேமிப்புகளையும் சேர்த்து, தேவைப்படும் சுமார் 2,010 மெகாவாட்டுக்கு எதிராக உற்பத்தித் திறன் 1,371 மெகாவாட்டாக இருக்கும். கட்டுப்படுத்த முடியாத நிலையில் உள்ள எதிர்பார்க்கப்படுகிற 1,675 மெகாவாட்டு உச்சத் தேவையைச் சமாளிக்க வேண்டியுள்ளது. ஆகவே நடப்பாண்டில் உச்சத் தேவையைச் சமாளிக்க, மின்-உற்பத்தித் திறனில் ஏற்படுகின்ற பற்றுக்குறை 639 மெகாவாட்டுகளாக இருக்கும்.



1973 நவம்பர் 21] [திரு. ஓ. பி. இராமன்]

5. சென்ற ஆண்டு நவம்பரில், இந்த மாமன்றத்தின் முன்னுல் நிதி நிலை அறிக்கையானது விவாதத்திற்கு வைக்கப்பட்டபொழுது, 25 சதவிகித மின் வெட்டானது அமுலிலிருந்தது. அதைத் தொடர்ந்து மிக நெருக்கடியான ஒரு நிலை ஏற்பட்டு, 75 சதவிகித வெட்டு அமுல்படுத்தப்பட்டது. இப்படிப்பட்ட ஒரு நிலை உருவாக முக்கிய காரணங்கள் யாவை என்பதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். தமிழ் நாட்டில் மட்டுமல்ல, அண்டை மாநிலங்களான கேரளம், கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலும் தென்மேற்கு பருவமழை பொய்த்துவிட்டது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சாரத்தின் அளவு குறைந்துவிட்டது. தொடர்ந்து மின்சாரத்தின் தேவை பெருகிக்கொண்டே போவதினுல், வெளியிலிருந்து கணிசமான அளவுக்கு உதவியினையும் நாம் பெற முடியாமல் போய்விட்டது. இந்த மின் நெருக்கடி தமிழகத்தில் மட்டும் ஏற்படவில்லை. மத்தியப் பிரதேசம் தவிர, நாடு பூராவுமே இந்த நெருக்கடியான நிலை ஏற்பட்டது என்பதையும் உறுப்பினர்கள் அறிவார்கள்.

6. மிக நெருக்கடியான மின்வெட்டு இருந்தபொழுது, வாரியத்தின் அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தியை எவ்வளவு பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்குவதற்காக மின்சார வாரியமும், அரசும் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டன. 1973-ம் ஆண்டின் மிக நெருக்கடியான கோடை மாதங்களில் நெய்வேலி அனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தியானது கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டது. வாரியமும் அரசும் கேட்டுக்கொண்டதன் பேரில், நெய்வேலி நிலக்கரிக் கழகத்தின் நிலக்கரித் தூளிலான செங்கல் பாளங்கள் தயாரிக்கும் நிலையத்தையும், உரம் உற்பத்தி நிலையத்தையும் மூடிவிடுவதன் மூலமாக, நெய்வேலி நிலக்கரிக் கழகமானது அதிக அளவுக்கு மின்சாரத்தை நமக்குத் தந்தது. நெய்வேலியில் இரண்டு யூனிட்டுகளில் எண்ணெய் மூலமாக எரியவிட்டு மின் உற்பத்தி செய்யவும் நெய்வேலி நிலக்கரிக் கழகம் ஒத்துக்கொண்டது. இதன் விளைவாக, 1974-ம் ஆண்டின் முதல் இரண்டு கால் ஆண்டுகளில் கூடுதல் மின்சாரம் கிடைக்க ஏதுவாகும். இந்த மாற்றத்தினுல் கிடைக்கப்பெறும் மின் உற்பத்திக்காகும் அதிகப்படியான செலவினை தமிழ் நாடு மின் வாரியம் ஏற்றுக்கொள்ளும். பண்டமாற்று முறையில் மற்ற மாநிலங்களிலிருந்தும் கூடுதலாக மின்சாரம் பெறப்பட்டது. சிமெண்ட், நூல், டயர் ஆகியவற்றிற்குப் பதிலாக கேரளத்திலிருந்தும், டயருக்குப் பதிலாக கர்நாடகத்திலிருந்தும், சிமெண்ட், துணி பொறிவண்டியின் அடிச் சட்டங்களுக்குப் ( Chassis ) பதிலாக மகாராஷ்டிரத்திலிருந்தும் மின்சாரம் பெறப்பட்டது. இந்த ஏற்பாடுகளின் விளைவாக, 1973 மார்ச்-ஏப்ரலிலிருந்து தொடர்ந்து ஜூலை 1973 வரையிலும் ஒரு

நாளைக்கு சுமார் 5 இலட்சம் யூனிட்டுகள் என்ற அளவுக்கு மின்சாரம் பெறப் பட்டது. மகாராஷ்டிரம் மட்டும் 1973 மே திங்கள் முடிவில் தன் சப்ளையை நிறுத்திக்கொண்டது.

7. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வலுப்பெற்று, அதன் விளைவாக, நீர் மின் தேக்கங்களின் நீர்க் கொள்ளளவு நிறைவான முறையில் இருந்தது. இதனால் சிறு தொழில்களுக்கான 75 சதவிகித மின்வெட்டினை, 1973 ஜூலைத் திங்களில் 50 சத விகிதமாகக் குறைக்க நம்மால் முடிந்தது. அத்துடன், பாது காப்புச் சம்பந்தமான தொழில்கள், சிமெண்ட், துணி ஆலைகள் போன்ற குறிப்பிடத்தக்க பெரிய முக்கிய தொழில்களுக்கும், எண்ணெய் ஆலைகள், அரிசி மாவு ஆலைகளுக்கும் கணிசமான அளவுக்கு உதவி செய்ய முடிந்தது. வாரி யத்தின் அனல் மின் நிலையங்களிலும், நெய்வேலி அனல் மின் நிலையத்திலும் மின் உற்பத்தியானது பெருகியது; நீர்த் தேக்கங்களில் நீரின் கொள்ளளவு நிறைவு அளிக்கும் வகையில் இருக்கவே, எல்லாப் பயனீட்டாளர்கள்மேல் விதிக்கப்பட்டிருந்த மின் வெட்டானது 1973 ஜூலை 17 முதல் அறவே எடுக்கப் பட்டது.

8. 1972-73-ல் மின் சக்தியின் உச்சத் தேவையானது 1,190 மெகாவாட்டை எட்டியது. 1971-72-ல் பதிவான உச்சத் தேவையான 1,326 மெகாவாட்டை விட இது 10.2 சதவிகிதம் குறைவு. இந்தச் சமயத்தில் பல்வேறு கட்டுப் பாடுகள் மட்டும் விதிக்கப்படாமலிருந்திருந்தால், 1972-73-ன் உச்சத் தேவை யானது பதிவான உச்சத் தேவையைவிட நிச்சயம் அதிகமாக இருந்திருக்கும். 1960-61-லிருந்து 1971-72-ம் ஆண்டு வரை உள்ள காலத்தில் இருந்த விகித சராசரி உயர்வு உச்சத் தேவை 12.2 சதவிகிதமும், பயன்படுத்தப்பட்ட மின் சார அளவின் உயர்வு 10.7 சதவிகிதமும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது பொருத்தமுடையதாக இருக்கும் என நினைக்கிறேன். இந்த உயர்வினைக் கணக்கில் கொண்டு பார்த்தால், 1972-73-ம் ஆண்டுக்கு கட்டுப் படுத்த முடியாத தேவையானது 7,500 மிலியன் யூனிட்டுகள், 1,480 மெகா வாட்டுகளாக இருந்திருக்க வேண்டும். 1972-73-ல் மின் இணைப்பில் பயன் படுத்தப்பட்ட மின்சாரத்தின் அளவு 6,964 மிலியன் யூனிட்டுகளாகும்.

9. 1973 ஜூன் திங்களிலிருந்து 1974 மே திங்கள் வரையிலான காலத்திற்கு நிலைமையானது ஆய்வு செய்யப்பட்டபோது, தென்மேற்கு பருவ மழை அனு கூலமாக இருந்தது என்றாலும், மின்சக்தி உற்பத்தி குறைந்துள்ளது என்பது தெரியவந்தது. இருந்தாலும், பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ள நீர் மின் நிலையங்கள் முழு அளவில் இயங்கி வந்தபடியாலும், இரவு நேரங்களில் கர்நாட



கத்தில் கொஞ்சம் மின்சாரத்தை நாம் சேமித்து வைக்க முடிந்தபடியாலும், செப்டம்பர் 1973 வரை எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. கடந்த 5 ஆண்டுகளின் சராசரி அளவினைவிட செப்டம்பரில் நீர்க் கொள்ளளவு குறைவாகி விட்டது. அடுத்த தென்மேற்கு பருவ மழைக்காலம் வரையில் கிடைக்கின்ற நீரினைத் தேக்கி வைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன், நெய்வேலி நிலக்கரிக் கழகத்திலிருந்து கிடைக்கின்ற மின்சாரத்தின் அளவு குறைந்து விட்டது. 1973 ஜூலை 31-ம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தினால் எண்ணூரில் உள்ள 110 மெகாவாட் நான்காவது பிரிவு ஓடவில்லை. அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை முழுமையான அளவில் கருத்தில் கொண்டு, 1972 அக்டோபரிலிருந்து மின் சப்ளை வேண்டும் என்று காத்துக் கொண்டிருப் பவர்களுக்கு சப்ளை வழங்கப்பட வேண்டியது அவசியம் என அரசு கருதியது.

10. முக்கியமாகத் தொழில் வளர்ச்சியும், வேளாண்மைத் துறையில் வளர்ச்சியும் தடைபடாமல் தொடர்ந்து இருப்பதற்காக வேண்டி, 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள் முதல் குறைந்த அளவில் 15 சதவிகித மின்வெட்டானது விதிக்கப்பட்டது. மின் வெட்டு விதிக்கப்பட்ட பொழுது நமது நீர்த் தேக்கங்களில் இருந்த நீர்க் கொள்ளளவு 1971-ல் எந்த நிலையில் இருந்ததோ அதே அளவினதாகத்தான் இருந்தது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் 10 சதவிகித உயர்வு என்று எடுத்துக்கொண்டு, இவ்வாண்டு எதிர் பார்க்கப்படுகிற மின்சாரத்தின் தேவையோ 1971-ம் ஆண்டில் இருந்ததைவிட சுமார் 21 சதவிகிதம் அதிகமாக இருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மின் வெட்டு உள்ள காலத்திலும் புதிய மின் தொடர்புகள் கொடுக்கப்படு கின்றன. அப்படிக் கொடுப்பது இதுதான் முதல் தடவையாகும். வடகிழக்கு பருவ மழை ஏமாற்றம் அளிக்காமல் வழக்கம்போல் இருந்து அதனால் 1971-ல் இருந்தது போல நீர்த் தேக்கங்களில் நிறைவு தரும் வகையில் நீர்க் கொள் ளளவு இருக்கும் என வைத்துக்கொண்டாலும், எண்ணூரில் நான்காவது யூனிட் சீக்கிரமே செயல்பட்டாலும், கோளத்திலிருந்து 300 மிலியன் யூனிட் மின்சாரம் கிடைத்தாலும், அத்துடன் எண்ணூர், பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையங்கள் திருப்திகரமான நிலையில் இயங்கினாலும், இத்தனை இருந்தும், அக்டோபர் 1973 முதல் 1974 மே வரையிலான காலத்திற்கு 536 மிலியன் யூனிட்டுகள் பற்றாக் குறை இருக்கும் என்பதால், இந்த 15 சதவிகித மின் வெட்டு விதிக்கப்பட்ட தற்கான காரணங்கள் நியாயமானதேயாகும் எனத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். 1973 டிசம்பர் மத்தியில் மின் நிலையை பரிசீலித்துப் பார்த்து, எதிர்பார்ப்பதைவிட நிலைமைகள் திருப்திகரமானதாக இருப்பதாகத் தெரிந் தால், கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

[திரு. ஓ. பி. இராமன்] [1973 நவம்பர் 21

11. கேரளம், ஆந்திரப் பிரதேசம், மற்ற மாநிலங்களிலிருந்தும் மின்சாரத்தைப் பெற சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. இருபது சதவிகித மின் வெட்டு தொடர்ந்து கர்நாடக மாநிலத்தில் உள்ளதால், எந்த வித உதவியையும் அளிக்கத் தன்னால் இயலாது என்று கூறிவிட்டது. கொத்தகூடம் 3-வது நிலை 110 மெகாவாட் யூனிட் நிலையானதும், ஆந்திரப் பிரதேசத்திலிருந்து எவ்வளவு மின்சாரம் பெற முடியுமோ அதைப் பெற நாம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். 1974 மே வரை 300 மிலியன் யூனிட்டுகள் பெறுகின்ற வகையில் நவம்பர் 1973-ல் கேரளத்துடன் நாம் ஓர் உடன்பாட்டுக்கு வந்துள்ளோம். ஆந்திரப் பிரதேசம், கேரள மாநிலங்கள் பண்டமாற்று முறையில் நமக்கு மின்சாரம் வழங்க உறுதி அளித்துள்ளன. டயர்களுக்குப் பதிலாக 45,000 யூனிட்டுகள் தர ஆந்திரப் பிரதேசமும், இந்தப் பருவக் காலத்தில் கேரளத்திற்குத் தேவையான சிமெண்ட், நூல், டயர்கள், பொறி வண்டியின் அடித்தளங்களின் கூடுதல் உற்பத்திக்குத் தேவையான மின்சாரத்தினை முழுமையாகத்தர கேரளாவும் உறுதி அளித்துள்ளன. இரண்டு அரசுகளையும் மின்வாரியங்களையும் சேர்ந்த அதிகாரிகளினால் இதற்கான விவரங்கள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

12. 1973-ம் ஆண்டு ஜுலை திங்கள் 31-ம் நாள் அன்று எண்ணூரில் உள்ள அனல் மின் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக நான்காவது யூனிட்டின் மின் மாற்றி பழுதடைந்து மின்சார உற்பத்தி தடைப்பட்டது. மூன்றாவது யூனிட்டின் மின் மாற்றியின் புஷ்ஷிங்குகளையும் சோதனை செய்து தான் மறுபடி இயங்கவேண்டும் என்பதனால், இந்த யூனிட்டிலும் ஓரளவு தாமதம் ஏற்பட்டது. தீ விபத்தின் காரணங்களை அறிந்து அவற்றைத் தவிர்க்க, திரு. மகாலிங்கம் அவர்களின் தலைமையில் இன்னும் இரண்டு நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு நியமித்தது. குழுவின் அறிக்கை வரப்பெற்று, அதன் ஆலோசனைகளை நடைமுறைக்குக் கொண்டுவரவும், அவர்கள் கண்டறிந்த குறைகளுக்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் மின் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. போபாலில் உள்ள ஹெவி எலக்டிரிகல்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனத்தின்மூலம் சேதமடைந்துபோன மின் மாற்றியை பழுது பார்த்து சரி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 1974 முதல் கால் ஆண்டில் இந்தப் பொறி மறுபடியும் இயங்குகின்ற நிலையில் தயாராகிவிடும் என எதிர்பார்க்கலாம். எண்ணூர் அனல் மின் நிலையத்தில் கடல் நீரினை உப்பங்கழிக்குள் செல்லவிடாமல் தடுத்துவிடுகின்ற முறையில் மணல் தடுப்பு ஏற்பட்டு அதனால் ஏற்படும் சிரமங்களைப் பற்றி என்னுடைய கடந்த ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்டிருந்தது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நினைவிருக்கலாம். அங்கு நிறுவப்பட்டுள்ள



1973 நவம்பர் 21] [திரு. ஓ. பி. இராமன்]

இரண்டு மணல் ஏற்றுக் குழாய்களில் சில கருவி மாற்றங்கள் செய்வதன் மூலம் மணலை ஓரளவு எடுப்பதற்கான ஏற்பாடுகள் முன்பே செய்யப்பட்டுள்ளன. இந்த மணல் தடுப்பினை நீக்கத் தகுந்த டிரெட்ஜர் கருவி ஒன்றினை வாங்குவதற்காக வேண்டி, ஐரோப்பாவுக்கும், இங்கிலாந்து நாட்டுக்கும் மின் வாரியத் தலைவரும் வாரியத்தின் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரும் 1973 ஆகஸ்டில் அனுப்பப்பட்டனர் என்பதைக் குறிப்பிட விழைகிறேன். இந்த முயற்சிகளின் விளைவாக, ஹாலந்து நாட்டிலிருந்து சுமார் 70 இலட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள ஒரு டிரெட்ஜர் கருவியினை வாங்குவதற்கான பேச்சு வார்த்தைகள் இறுதி வடிவம் பெற்று வருகின்றன. இந்தக் கருவி வாங்குவதன் மூலம், எண்ணூரில் உள்ள மணல் தடுப்புப் பிரச்னை அறவே போக்கப்பட்டு விடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

13. ஒவ்வோர் ஆண்டும் சராசரி 12.5 சதவிகித உச்சத் தேவை Peak Demand உயர்வு ஏற்படலாம் என்றுள்ள நிலையில், ஐந்தாவது திட்டக்கால முடிவில் (1978--79) நம்முடைய தேவை 3,620 மெகாவாட்டுகளாக இருக்கும். ஐந்தாவது திட்ட முடிவில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தின் அளவுக்கும் 4–50
நம்முடைய தேவைக்கும் இடையே உள்ள இடைவெளி 2,189 மெகாவாட்டு பி.ப
களாக இருக்கும். இந்தப் பற்றாக்குறை நிலையினைச் சமாளிக்க பல புதிய மின் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. பாசனம், மின்சக்தி அமைச்சகத்தினால் செயல் படுத்த யோசனை கூறப்பட்டுள்ள மின் உற்பத்தித் திட்டங்கள் வருமாறு :—

| | மெகவாட். |
|---|---|
| 1 எண்ணூர் ஐந்தாவது யூனிட் .. .. .. | 110 |
| 2 குந்தா நான்காவது நிலை .. .. .. | 110 |
| 3 கல்பாக்கம் அணு மின் நிலையம் (400 மெகாவாட்டில்). | 300 |
| 4 சுருளியாறு .. .. .. .. | 35 |
| 5 காடம்பாறை குழாய் நீரேற்றுத் திட்டம் .. | 100 |
| 6 தூத்துக்குடி அனல் மின் திட்டம் .. .. | 400 |
| 7 நெய்வேலியில் 2 யூனிட்டுகளை எண்ணெய் மூலமாக எரியவைக்கும் முறைக்கு மாற்றுவதின் விளைவாகக் கிடைக்கும் கூடுதல் பயன். | 100 |
| மொத்தம் .. | 1, 55 |

[திரு. ஓ. பி. இராமன்] [1973 நவம்பர் 21

14. ஆண்டுதோறும் 12.5 சதவிகித உயர்வு இருக்கும் என்று வைத்துக் கொண்டு பார்த்தால், 1978-79-ல் நம்முடைய மின்சாரத் தேவை 15,490 மிலியன் யூனிட்டுகளாகவும், 1983-84-ல் 27,920 மிலியன் யூனிட்டுகளாகவும் இருக்கும் எனக் கணக்கிடப் பட்டுள்ளது. இப்பொழுது பணி நடைபெற்று வரும், அனு மதிக்கப்பட்டதுமான மின் உற்பத்தித் திட்டங்களைக் கணக்கில் கொண்டு பார்த் தால், மொத்தம் பற்றுக்குறை 1978-79-ல் 2,215 மிலியன் யூனிட்டுகளும் 1983-84-ல் 14,645 மிலியன் யூனிட்டுகளுமாகவும் இருக்கும்.

15. ஆக, நம்முடைய உச்சத் தேவை, மின்சாரத் தேவை சம்பந்தப்பட்ட மட்டில் மின் பற்றுக்குறை என்பது கணிசமான அளவுடையதாகும் என்பது மட்டுமல்ல, மிக நெருக்கடியான நிலையினைத் தோற்றுவிக்கின்ற ஒன்றாகும் என்பது நமக்குத் தெளிவாகப் புலனாகும். மின்சாரப் பற்றுக்குறை மாநிலத் தின் பொருளாதாரத்தை எந்த அளவுக்குப் பயங்கரமாகத் தாக்கக் கூடியது என்பதை கடந்த ஆண்டு நமது மாநிலத்தில் ஏற்பட்ட மின்சார நெருக்கடியும், பற்றுக்குறையும் நமக்குத் தெள்ளத்தெளிவாக உணர்த்திவிட்டுள்ளது. 1973 ஜூலைத் திங்களில் கொடைக்கானலில் நடைபெற்ற பாசனம், மின்சக்தி பற்றிய மாநில அமைச்சர்களின் 7-வது மாநாட்டிலும், அதைத் தொடர்ந்து அன்றைய மத்திய அமைச்சர் திரு. கே. எல். ராவ் அவர்களுடனும், திட்டக் குழுவி னிடத்தும், எந்தவிதத் தாமதமுமின்றி உடனே வேலை துவங்கப்படுவதற்கு வாய்ப்பாக, அனுமதி அளிக்கப்படாமல் உள்ள எல்லா நீர் மின் திட்டங் களுக்கும் உடனடியாக அனுமதி வழங்கப்படல் வேண்டும் என்ற கருத்தானது மாநில அரசினாலும், மின் வாரியத்தின் தலைவராலும் மிகவும் வலியுறுத்தப் பட்டது. 35 மெகாவாட் திறனுள்ள சுருளியாறு நீர் மின் திட்டம், 400 மெகா வாட் திறனுள்ள காடம்பாறை குழாய் நீரேற்று மின் உற்பத்தித் திட்டம், 400 மெகாவாட் திறனுள்ள தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஆகிய மூன்று திட்டங் களுக்கும் மத்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளது.

## ஆண்டிற்கான முக்கிய மின் திட்டங்கள்.

1973-74-ம் ஆண்டிற்கான பல்வேறு முக்கிய மின் திட்டங்கள் பற்றிய விவரங்களை சுருக்கமாக விவரிக்க விழைகிறேன்.

எண்ணூர் அனல் மின் திட்டத்தின் 110 மெகாவாட் 3-வது பிரிவு சம்பந்த மான பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. 1975-76 ஆண்டுத் துவக்கத்தில் இப்பிரிவு செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படு கிறது.



1973 நவம்பர் 21] திரு. ஓ. பி. இராமன்]

குந்தா நான்காவது நிலைக்குத் தேவையான மின் உற்பத்தி இயந்திரங்களை கனடா நாடு வழங்குவதற்கான உடன்பாடு ஒன்று 1973 ஜூலையில் கையெழுத் திடப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடுவட்டம் நீர்த் திருப்புத் திட்டப் பணிகள் 1974 மே திங்களுக்குள் முடிக்கப்பட்டு விடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

நானூறு மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட காடம்பாறை நீரேற்று மின் உற்பத்தித் திட்டத்திற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டு நடை பெற்று வருகின்றன. இத்திட்டத்தின்கீழ், முதல் பிரிவானது 1978-79-ல் செயல்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 35 மெகாவாட் திறன் கொண்ட சுருளியாறு மின் திட்டப் பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்திய அரசின் அனுமதி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையின் பேரில் சேர்வலாறு, நெல்லித்துறை ஆகிய இரண்டு மின் திட்டங்களின் பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

16. மத்திய அரசின் அனுமதிக்காக உள்ள திட்டங்கள் வருமாறு :—

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | நிறுவனத் திறன் மெகாவாட். | திட்டத்தின் எதிர்பார்க்கப் படும் திட்டச் செலவு. (ரூபாய் இலட்சத்தில்). | கிடைக்கக்கூடிய மின்சாரம் (மிலியன் யூனிட்டுகள்.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 சோழநாட்டிப்புழா* .. | 60 | 739 | 112 |
| 2 கூனூர்–கல்லாறு .. | 50 | 1,445 | 144 |
| 3 கீழ் மோயாறு .. | 30 | 1,336 | 102 |
| 4 நெல்லித்துறை .. | 50 | 758 | 134 |
| 5 பரளியாறு .. .. | 35 | 510 | 150 |
| 6 சேர்வலாறு .. .. | 20 | 681 | 75 |
| 7 சண்முகா நதி .. | 30 | 902 | 131 |
| 8 மேல் அமராவதி .. | 20 | 355 | 69 |
| 9 மேல் தாமிரபரணி (மற்ற 5 யூனிட்டுகள்). | 165 | 4,392 | 557 |
| 10 மேட்டூர் அணை மின் திட்டம். | 330 | 6,553 | 1,160 |

* மாநிலங்களிடையிலான திட்டம்.

17. முன்பே அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்ற திட்டங்கள்—அவை எந்தெந்த ஆண்டுகளில் செயல்படத் துவங்கும் என்பது பற்றிய விவரங்கள் வருமாறு :—

| ஆண்டு. | மெகாவாட். |
|---|---|
| 1975–எண்ணூர் 5-வது யூனிட் (2-வது நிலை). | 110 |
| 1977–குந்தா 4-வது நிலை .. .. | 110 |
| ,, கல்பாக்கம் அணு நிலையம் I-வது யூனிட். | 235 |
| 1978–சுருளியாறு நீர் மின் திட்டம் .. | 35 |
| ,, கல்பாக்கம் அணு நிலையம் 2-வது நிலை. | 235 |
| 1979–காடம்பாறை குழாய் நீரேற்று மின் உற்பத்தித் திட்டம் I-வது யூனிட். | 100 |
| (மொத்தம் .. 400) | |
| 1979–சேர்வலாறு நீர் மின் திட்டம் .. | 20 |
| 1979–நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. | 50 |
| 1979–தூத்துக்குடி அனல் மின் திட்டம் .. | 490 |

**மின் உற்பத்திக் கழகம்.**

மின்சாரத்தின் பலன்களைக் கால தாமதமின்றி துய்க்கின்ற வகையில், பெரிய மின் திட்டங்களில் ஆழ்ந்த அக்கறையும் கவனமும் செலுத்தி நடைமுறைப் படுத்தவும், நிறுவனங்களிலிருந்து எவ்வளவு நிதி வசதி கிடைக்குமோ அதைப் பெறுவதற்காகவும் மின்சார உற்பத்திக் கழகம் ஒன்றினை அமைப்பது என மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென்று தனி அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த மின் உற்பத்திக் கழகத்தினை அமைக்கின்ற பணியானது அவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



18. மேட்டூர் பகுதியில் ஏற்பட்டுள்ள பெரியதொரு தொழில் வளர்ச்சிக்கு நாம் மின்சாரம் வழங்க வேண்டியுள்ளது. அத்துடன் சேலம் இரும்பாலைத் திட்டமும் உள்ளது. இந்த நிலையில், மேட்டூர் அனல் மின் திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசுத் துறையின்கீழ் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்காக அனுமதி உடனடியாக வழங்கப்பட்டாக வேண்டும். 1,000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாவது அனல் மின் திட்டத்திற்கான முன்கூட்டிய தொடர் நடவடிக்கையினை துவக்குவதற்காக வேண்டி, இந்த இரண்டாவது சுரங்கம் வெட்டப்படல் வேண்டும். நெய்வேலி நிலக்கரிக் கழகம் தயாரித்துள்ள சாத்தியக் கூறு அறிக்கையின்படி, ஒவ்வொன்றும் 200 மெகாவாட்டுகள் திறன் கொண்ட 5 யூனிட்டுகளும் (அத்துடன் 200 மெகாவாட் யூனிட் பின்னால்) செயல்படத் தொடங்கக் கூடிய கால அளவு பின்வருமாறு அமையலாம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது :—

| | |
|---|---|
| முதல் பிரிவு இயங்க : | அக்டோபர் 1978. |
| இரண்டாவது பிரிவு இயங்க : | ஜூலை 1979. |
| மூன்றாவது பிரிவு இயங்க : | பிப்ரவரி 1980. |
| நான்காவது பிரிவு இயங்க : | ஜூலை 1980. |
| ஐந்தாவது பிரிவு இயங்க : | பிப்ரவரி 1981. |

இந்தத் திட்டமானது உடனடியாக அனுமதிக்கப்பட்டால், 5-வது திட்டக் காலத்தில் 200-லிருந்து 400 மெகாவாட்டுகள் வரை நிறுவனத் திறன் கொண்ட ஒன்று அல்லது இரண்டு யூனிட்டுகள் செயல்படத் துவங்கும்; அதனால் தமிழ் நாட்டிற்கு 180-லிருந்து 360 மிலியன் யூனிட்டுகள் மின்சாரம் கூடுதலாக கிடைக்கும் என நாம் எதிர்பார்க்கலாம். 1968-ம் ஆண்டில் மாநில அரசின் நான்காவது திட்ட வரைவின் செயற்குறிப்புகளை இந்த சந்தர்ப்பத்தில் உங்களுடைய நினைவிற்கு கொண்டுவருவது பொருத்தமுடையதே எனக் கருதுகிறேன். அந்தத் திட்ட வரைவில், கல்பாக்கம் அணு மின் நிலையத்தின் 2-வது பிரிவு துவங்கப்பட வேண்டும்; தூத்துக்குடி பகுதியில் இரண்டாவது அணு மின் உற்பத்தி நிலையம் துவங்கப்பட வேண்டும்; நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல்; நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்கான செயல் குறிப்புகளை மாநில அரசு வலியுறுத்தியுள்ளது. பம்பாய் அணுயியல் துறையின் இடம் தேர்வுக் குழுவானது, மின் சார வாரியமும், மாநில அதிகாரிகளும், திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பான

இடம் உள்ளது என்று தந்துள்ள விவரங்களை இப்பொழுது ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. வசதிகள் நிலையை முழுமையாக எடுத்துக்கொண்டாலும், தென் மாநிலங்களில் மின் நிலையங்களை அமைப்பதற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் கருத்தில் கொண்டு பார்க்கும்பொழுது, 5-வது திட்டக் காலத்தில் புதிதாக அணு மின் திட்டங்கள் அமைப்பது குறித்து பரிசீலிப்பதற்கில்லை என இந்திய அரசு அண்மையில் பதில் அனுப்பியுள்ளது. இருந்தாலும், தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இரண்டாவது அணு மின் நிலையத்தை அமைப்பது குறித்து சாதகமான ஒரு முடிவினை இந்திய அரசு விரைவில் எடுக்க வேண்டுமென தமிழ் நாடு அரசு மீண்டும் வலியுறுத்தும். இது மிகமிக இன்றியமையாத ஒன்றாகும்.

அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதும். மேலும் மின்சார உற்பத்திக்கான சாத்தியக் கூறுகள், வசதிகள் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. இந்த மாநிலத்தில் கிடைக்கின்ற எரிபொருள் நெய்வேலி நிலக்கரி ஒன்றுதான். மாநிலத்தின் அவசரத் தேவைகளைச் சமாளிக்கவும், எதிர்கால மின் தேவையைச் சமாளிக்கவும், அதற்காக வேண்டி, இந்த நிலக்கரியானது மின் உற்பத்திக்கு அப்படியே முழுமையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். அணு மின் நிலையங்களையும், புதிய அனல் மின் நிலையங்களையுமே அதுவும் குறிப்பாக பெரிய அளவிலான அனல் மின் திட்டங்களையுமே இந்த மாநிலம் நம்ப வேண்டியுள்ளது. இத்துடன் குறுகிய கால நடவடிக்கையாக 300 மெகா வாட் வரையில் திறனுக்கு கேஸ் டர்பென்களை நிறுவுவதற்கான தமிழ் நாடு மின்சார வாரியத்தின் செயற் குறிப்புகளையும் மத்திய அரசு ஒரு சிறப்பு நேர்வாகப் பரிசீலனை செய்து, அதற்குத் தேவையான இறக்குமதிப் பொருட்களுக்கு அனுமதியினை வழங்கிடல் வேண்டும்.

19. மின்சாரத்தினை அனுப்புதல், மின் விநியோகம் செய்தல் திட்டத்தில் ஒரு மிகப் பெரிய பின்னிப் பிணையப்பட்ட மின் இணைப்புத் தொடரை தமிழ் நாடு மின்சார வாரியம் தன்னகத்தே கொண்டுள்ளது. 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் அன்றுள்ள நிலவரப்படி, 63,323 கிலோ மீட்டர் நீளமுள்ள கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும், 1,78,605 கிலோ மீட்டர் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பித் தொடர்களும் உள்ளன. இவற்றில் 3,442 கிலோ மீட்டர் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பித் தொடர்களும், 17,451 கிலோ மீட்டர் நீளமுள்ள குறைவு அழுத்தக் கம்பித் தொடர்களும் 1972-73-ல் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன. 1972-73 ஆம் ஆண்டு இறுதியில், தமிழக மின் இணைப்பில் 262 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்த துணை மின் நியங்கள் உள்ளன.





மின் அழுத்தம் போதிய அளவு இல்லாது குறைந்துள்ள நிலையையும், மற்றும் மின் இணைப்பில் திருப்திகரமில்லாத சப்ளை நிலைமைகளையும் மின் வாரியம் கருத்தில் கொண்டு, பெருந்திட்டம் ஒன்றின்கீழ், ஷண்ட் கெபாசிட்டர்களை நிறுவும் பணியினையும், புதிய துணை மின் நிலையங்களையும் கம்பித் தொடர்களையும் ஏற்படுத்துவதற்கான பணியினையும் முன்பே ஏற்றுக்கொண்டு செயல்படுத்தி வருகிறது. புதிதாக மின் உற்பத்தி நிலையங்கள் செயல்படத் துவங்கும் நிலையில் மொத்தமாக மின் சக்தியை அனுப்புவதற்கு வழிவகை செய்வதற்காக வேண்டி., 230 கே.வி. அமைப்புக்கென மற்றொரு பெருந்திட்டத்தினைச் செயல்படுத்துவது என வாரியம் கருத்துகொண்டுள்ளது. 5–00 பி.ப.

மின்சக்தி அனுப்புதல், மின் விநியோகம் ஆகிய பணிகளில் வாரியம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 1973-74-ம் ஆண்டுக்கு ரூபாய் 11.00 கோடியில் ஏற்றுச் செயல்படவிருக்கும் மின்சக்தி அனுப்புதல், மின் விநியோகம் திட்டத்தினுல் மேலும் கூடுதலாக 230 கே.வி., 110 கே.வி. 11 கே.வி. மின் அனுப்புக் கம்பித் தொடர்கள், துணை மின் நிலையங்கள், மின் பங்கீட்டுக் கம்பித் தொடர்களை நிறுவும் பணிகளும் நடைபெறும். துணை நிலையங்களில் அதிகத் திறனுள்ள மின்மாற்றிகளை நிறுவுதல், தொடர்புப் பணிகளுக்காக கூடுதலாக கேரியர் வி. எச். எஃப் தொடர்புச் சாதனங்களை அமைத்தல் ஆகியவையும் இந்தத் தலைப்பின் கீழ் செய்யப்படும். 1973-74-ல் 2,600 கிலோ மீட்டர் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகள் புதிதாகச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

20. மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மிகப் பரந்த அளவிலான மின் அமைப்பு முறை உள்ளதும், மிகப் பிரம்மாண்டமான எண்ணிக்கை அளவில் மின் விசையேற்றங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நமது மாநிலத்தில், கம்பிகளில் ஏற்படும் இழப்புகள் அவ்வளவாகப் பொருட்படுத்தக்கூடியதாக இல்லை என்றாலும், வாரியமானது, இந்த இழப்புகளை மிகக் குறைந்த அளவுக்குக் குறைக்கவும், அதற்கான சரியான ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருகிறது. மின் விநியோகத்தில் ஏற்படுகின்ற கம்பி இழப்புகளைப் பற்றி ஆய்ந்தறிய இந்திய விஞ்ஞானக் கழகத்தின் சார்பில் பெங்களூரில் நடைபெற்ற விநியோக அமைப்பு ஆய்வுக் குழுக் கூட்டத்தில், வாரியம் கலந்து கொண்டது. துணை நிலையங்களிலும், பயனீட்டாளர் முனைகளிலும் ஷண்ட் கெபாசிட்டர்களை நிறுவுகின்ற பணியினை படிப்படியாகச் செய்கின்ற ஏற்பாடுகளையும் மின் வாரியம் ஏற்றுக்கொண்டுள்ளது. மூன்றாவது அனைத்துலக வளர்ச்சி ஏஜென்சி International Development Agency) யிலிருந்து கிடைக்கும் கடன் வசதியினைப் பயன்படுத்திக்கொண்டு,

மின் இணைப்பின் முக்கிய பாயிண்டுகளில் மின் கடத்திகளை நிறுவுவதற்கு வாரியம் நடவடிக்கைகள் எடுத்துள்ளது. ஐந்தாவது திட்டத்தில் 'மின் அனுப்புதல்-பங்கிடுதல்' என்ற தலைப்பின்கீழ் 90 கோடி ரூபாயினை ஒதுக்க உத்தேசித்துள்ளோம். செயல்படுத்த உத்தேசித்துள்ள மேம்பாட்டுப் பணிகளும், இழப்புகள் ஏற்படாமல் எச்சரிக்கையாக இருக்கும்படியான செயல் திட்டங்களும் இந்தத் திட்டத்தின்பாற் பட்டவையாகும்.

21. 1972-73-ல் மேலும் 7,782 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின் சக்தி வழங்கப்பட்டது. இதனால் 1973 மார்ச் திங்கள் 31-ம் நாளில் மின் சக்தி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் எண்ணிக்கை 60,325 ஆக உயர்ந்துள்ளது. வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பதில் இந்தியாவிலேயே தமிழ் நாடுதான் முதலிடத்தைப் பெற்றுள்ளது. 1972-73-ம் ஆண்டில் 55,072 வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. 1973-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் அன்றுள்ள நிலவரப்படி, தமிழகத்தில் மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை 6,49,241 ஆகும். 1973-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1-ம் நாள், இந்த எண்ணிக்கை 6,64,906 ஆக உயர்ந்துள்ளது. கிராமங்களை ஒட்டியுள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிப்பதற்கு முதன்மை இடம் தரப்பட்டுள்ளது. 1972-73-ம் ஆண்டில் 4,582 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கப்பட்டுள்ளது.

22. கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளித்தல் என்பது ஆதாயம் தரத்தக்க ஒன்றல்ல என்றிருந்தாலும், அடிப்படை வசதிகளான தெரு விளக்கு, வீட்டு விளக்கு வசதி முதலியவை கிராமப்புற மக்களுக்கு அளிக்கப்பட வேண்டும். எல்லாக் கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின் வசதி அளிப்பதென்ற இந்த இலட்சியப் பணி முழுமையாகச் செய்து முடிக்கப்பட்டு 1974-ம் ஆண்டு இறுதிக்குள் நிறைவு பெற்றுவிடலாம்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கூற்றுப்படி செயல்படுத்தப்பட்டு வரும் ஊரெல்லாம் ஒளி மயம் செய்திடும் கிராம மின் வசதிச் சிறப்புத் திட்டத்தை 1969 அக்டோபரில் நாம் தொடங்கிச் செயல் படுத்தி வருவதை மறுபடியும் உங்கள் நினைவுக்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகம் எங்கணும் தொழில் வளம் பெருகி, மக்கள் அடிப்படைத் தேவைகளைப் பெற்று வளமான தாயகத்தை உருவாக்க வேண்டும். அதற்கான வாய்ப்பான சூழ்நிலைகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்பதே இந்த அரசின் குறிக்கோளாகும். அச் சீரிய நோக்கத்தின் அடிப்படையில் எழுப்பப்படும் இச் சிறப்புத் திட்டத்தினால், கிராமங்களிலே எங்கு பார்த்தாலும் மின்வசதி கிடைக்கப் பெறுவதால், கிராமப்புறங்களிலே சிறு தொழில்கள் பல்கிப் பெருகவும், பரவலாகத் தொழிற்சாலைகள் கிராமங்களிலே அமையவும். வேளாண்மையிலே உற்பத்தி பெருகுவதற்கான விசையேற்றங்களுக்கு இலகுவிலே மின்வசதி கிடைக்கும் படியான ஒரு சூழ்நிலை ஆருவாகி, அதன் விளைவாக மக்களுக்கு பெருமளவு பயன் கிடைக்கும் என்பது உறுதி.



இத்துறையில் மகத்தான வெற்றியினை நாம் ஈட்டியுள்ளோம். கிராம மின்வசதித் திட்டம் என்ற சிறப்புத் திட்டமானது துவங்கப்பட்டபொழுது 24,867 நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களுக்கு மட்டுமே தெரு விளக்கு வசதி அளிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு 1973 அக்டோபர் திங்கள் 1-ம் நாள் வரையில் உள்ள இந்தக் குறுகிய காலத்தில், மேலும் 35,999 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் தெரு விளக்கு வசதி அளிக்கப்பட்டு, மொத்தம் இந்த எண்ணிக்கை இப்பொழுது 60,866-யினை எட்டிவிட்டது. எஞ்சியுள்ள கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும், தெருவிளக்கு வசதி விரைவில் அளிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 1973 அக்டோபர் திங்கள் 1-ம் நாள் வரையில் மின் வசதி அளிக்கப்பட்டுள்ள அரிசனக் குடியிருப்புகளின் எண்ணிக்கை 23,695. எஞ்சியுள்ள 806 அரிசனக் குடியிருப்புகளுக்கும் விரைவில் மின் வசதி அளிக்கப்பட்டுவிடும்.

23. 1973-74-ல் மின்சார வாரியத்தின் முதலீடு வரவினம் ரூ. 47.86 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 22.03 கோடி ரூபாய், திறந்த சந்தை, ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிகள், கிராம மின் வசதிக் கழகம் போன்ற மற்ற நிதி வாயில்களிலிருந்து பெறப்படும். இந்தத் தொகையும் ரூ. 47.86 கோடி ரூபாயில் சேர்ந்ததாகும். வாரியத்தின் உள் ஆதாரங்களிலிருந்து அதாவது தேய்மானக் காப்பிலிருந்தும் மற்றக் காப்புகளிலிருந்தும் கிடைக்கும் தொகை 23.26 கோடி ரூபாயாக இருக்குமென மதிப்பிடப் பட்டுள்ளது.

சேமிப்பில் ஏற்படும் உயர்வின் காரணமாக ரூ. 2.04 கோடி கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையில் அரசு ரூ. 3.65 கோடியினை கடனாக வழங்கியுள்ளது.

24. புது டில்லியில் உள்ள கிராம மின் வசதிக் கழகமானது ( Rural Electrification Corporation ) 1972-73-ல் ரூ. 10 இலட்சம் செலவில் அரிசனக் குடியிருப்புகளுக்கும், ரூ. 5,09.874 இலட்சம் செலவில் விசை

யேற்றங்கள், வீடுகளுக்கு மின் வசதி அளிக்கும் மற்ற ஒன்பது திட்டங்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. கிராம மின் வசதிக் கழகத்தின் மின் வசதித் திட்டம் தொடங்கியதிலிருந்து 1973 ஜூன் திங்கள் 30-ம் நாள் வரையில் மொத்தம் ரூ. 11.21 கோடி ரூபாய்க்கான திட்டங்களுக்கு அக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. 1973 ஜூன் திங்கள் 30-ம் நாள் வரையில் ரூ. 6.23 கோடி ரூபாயினை அக் கழகம் அளித்துள்ளது.

துணை நிலையங்கள் மேம்பாட்டுத் திட்டம், மின் அனுப்புச் சிறப்புத் திட்டம் என்ற இரண்டு புது வகையான திட்டங்களுக்கும் கடன் வழங்க கிராம மின் வசதிக் கழகம் முன்வந்துள்ளது. முதல் வகையின்கீழ் ரூ. 52 இலட்சம் செலவில் இரண்டு திட்டங்களுக்கு அக் கழகம் அனுமதி வழங்கியதுடன், அதற்காக வேண்டி 35 இலட்சம் ரூபாயினை வழங்கியுள்ளது. இரண்டாவது வகையின்கீழ், செயல் திட்டக் குறிப்புகள் தமிழ் நாடு மின் வாரியத்தினால் உருவாக்கப்பட்டு, அவை கிராம மின் வசதிக் கழகத்தின் பரிசீலனையில் உள்ளன.

25. 1973-74-ம் ஆண்டில் ரூ. 43 கோடி ரூபாய் மூலதனச் செலவுக்கு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு வழி வகை செய்துள்ளது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு 25 கோடி ரூபாய், மின் அனுப்புதல்-பங்கிடுதலுக்கு ரூ. 11 கோடி, கிராம மின் வசதித் திட்டத்திற்கு 6½ கோடி ரூபாய், கையகப்படுத்துவதற்கு 50 இலட்சம் ரூபாய் ஆகிய இவை, இந்த 43 கோடி ரூபாயினுள் அடங்குவன வாகும். மின் உற்பத்தி, கிராம மின் வசதிக்கான மதிப்பீட்டுத்தொகை மேலும் உயலாம்.

26. ஆண்டு நிதி நிலை அறிக்கையில் உள்ள விவர அறிக்கைகள் அ-III அ- IVகளில், 1973-74-ம் ஆண்டுக்கான மின் வாரியத்தின் மதிப்பீட்டு வருவாய் வரவினங்கள், வருவாய்ச் செலவினங்கள் பற்றிய விவரங்கள் தரப்பட்டுள்ளன.

91.28 கோடி ரூபாய் வருவாய் வரவினம் என எதிர்பார்ப்பது, 1973 மே வரையில் மின் வெட்டு அமுலில் இருக்கும் என்ற உத்தேசத்தின் பேரில் தான். மின் வெட்டின் விளைவாக வாரியத்தின் வருவாயானது ஓரளவு பாதிக்கக்கூடும். வருவாயினைப் பெருக்க எடுக்கப்பட்ட புதிய ஏற்பாடுகளின் விளைவாக, அதிகமாக 6 கோடி ரூபாய்க்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது.

27. செலவினங்களைப் பொறுத்த வரை, நெய்வேலி, கேரளம், கர்நாடகம் ஆகிய இடங்களிலிருந்து வாங்கப்பட்ட மின்சக்திக்கான செலவுத் தொகை 1972-73 தொடக்கத்தில் இருந்த விலை விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்



பட்டு, அதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது (அதாவது நெய்வேலியிலிருந்து பெற்றதற்கு ஒரு யூனிட்டுக்கு 8.1 பைசா; கேரளத்திலிருந்து பெற்ற மின்சாரத்திற்கு முதல் 150 மில்லியன் யூனிட்டுகளுக்கு ஒரு யூனிட்டுக்கு 6.25 பைசா, 150 மில்லியன் யூனிட்டுகளுக்கு மேல் சப்ளை செய்யப்பட்டதற்கு ஒரு யூனிட்டுக்கு 6 பைசா வாகும்). கேரளத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்கு, இவ்வாண்டில், முதல் 100 மில்லியன் யூனிட்டுகளுக்கு 7.8 பைசாவாகவும், 100 மில்லியன் யூனிட்டிலிருந்து 300 மில்லியன் யூனிட்டுக்கு 8 பைசாவாகவும் உயர்ந்துள்ளது. இதனால் தமிழ் நாடு மின் வாரியத்திற்கு கூடுதல் செலவு ஏற்படும்.

28. வழக்கம்போல், தேய்மானக் காப்புக்கும், மற்றக் காப்புகளுக்கும் ஒதுக்கியது போக, ஆயுள் காப்பீட்டுக் கழகம், வங்கிகள், பொதுமக்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கான வட்டி, மற்றும் நிர்ணயிக்கப்பட்ட வரிசைக் கிரமத்தில் மற்ற இனங்களுக்கும் வழி வகை செய்த பிறகு, வாரியத்திற்கு அரசு கொடுத்துள்ள கடன்களின் பேரில், அரசுக்கு வட்டி செலுத்துவதற்காகவேண்டி ரூ. 1.19 கோடி மீதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. வருவாயில் குறைவும் செலவினங்களில் அதிகரிப்பும் ஏற்படுவதால் அரசுக்கு வட்டி செலுத்துவதற்காக வேண்டிய தொகை சற்றுக் குறையும்.

29. மின் வாரியம் கடந்த ஆண்டில் தன்னுடைய பணியாளர்கட்கு மன மூவந்து வழங்கியுள்ள சலுகைகளைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.

(1) 1972 ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள்அன்று நான்கு ஆண்டுக் காலம் பணியில் இருந்து வந்துள்ள தற்காலிக தினக் கூலி வேலையாட்களின் பணிகளை ஒழுங்குப்படுத்தி சனவரி 1973-ல் வாரியம் ஆணை பிறப்பித்தது. இவ்வாணையின்படி, 1973-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாள் முதல் சுமார் 9,000 தற்காலிக தினக்கூலி வேலையாட்கள் முறையான பணி அமைப்பில் சேர்த்துக்கொள்ளப்படும் சலுகையை அடைந்துள்ளனர் 1973 மார்ச் திங்கள் 31-ம் நாள் அன்றைய நிலவரப்படி, வாரியத்தின்கீழ் பணியாற்றும் தற்காலிக தினக் கூலி வேலையாட்கள் 29,923 பேர் ஆகும். அவர்களுடைய பணிகளை படிப்படியாக ஒழுங்குப்படுத்துவதை, தேவை அடிப்படையை ஒட்டி, வாரியம் நிறைவேற்றி வைக்கும்

(1) (அ) 1971 ஆம் ஆண்டு கடைசியாக உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுப் பணிக்குப் பிறகு, 1972-ல் 25 பைசா அவர்களுடைய ஊதியத்தில் அதிகமாக தற்காலிக தினக்கூலி வேலையாட்களுக்கு கொடுக்கப்

பட்டுள்ளது. 1972-ம் ஆண்டு கடைசியாக ஊதிய உயர்வு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து மேலும் ஓராண்டுப் பணிக்குப் பிறகு அவர்களுக்கு அவர்களுடைய ஊதியத்தில் மேலும் 25 பைசா கூடுதலாக கொடுக்கப்பட்டுள்ளது.

(2) வாரியத்தின் எல்லா இடங்களிலும் உள்ள ரூ. 65–3—95—4—115 5–125 என்ற சம்பள விகிதத்தில் உள்ள லஸ்கர்கள் மஸ்தூர்கள் ஆகியோர்கள் பதவி இடங்கள், 1973 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் ரூ. 84-4-120-5-150 என்ற சம்பள விகிதத்தில் 'ஹெல்பர்' களாகவும், கிளீனர்கள் கிரேட் II, கிளீனர்கள் கிரேட் I ஆகவும் அதே அதிக சம்பளத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனர்.

(3) வீட்டு வாடகைப்படி.—அரசு அளிப்பது போலவே அதே விகிதத்தில் தங்களுக்கு வீட்டு வாடகைப்படி அளிக்கப்படல் வேண்டும் என்று வாரியத்தின் பணியாளர்கள் கேட்டுக்கொண்டு வந்துள்ளனர். மேற்சொன்ன கோரிக்கையை வாரியம் கனிவுடன் பரிசீலித்து, 1973 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 1 ஆம் நாள் முதல் கூடுதல் வீட்டு வாடகைப்படி அளிக்க உத்தரவிட்டது. 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் மேலும் அதை உயர்த்தியது. சென்னை நகர எல்லைக்கு 32 கிலோ மீட்டர்களுக்குள் உள்ள பணியாளர்கட்கும், மதுரை, கோயமுத்தூர் நகரங்களைச் சுற்றி 16 கிலோ மீட்டர்களுக்குள் உள்ளவர்களுக்கும், சென்னை, மதுரை, கோயமுத்தூர் நகரங்களுக்கு மாநில அரசு ஊழியர்களுக்கு என்ன வீட்டு வாடகைப்படி அளிக்கப்படுகிறதோ, அதே அளவு வீட்டு வாடகைப்படி வாரியத்தின் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

(4) அகவிலைப்படி.—மாதம் ரூ. 750 வரையில் சம்பளம் பெறும் எல்லாப் பணியாளர்களுக்கும் 1972-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் ரூ. 4.50 அகவிலைப்படியில் உயர்த்தப்பட்டது. 1973 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ம் நாள் முதல் மேலும் அது ரூ. 9.00 கூடுதலாக உயர்த்தப்பட்டது

(5) 1971-72-ஆம் ஆண்டுக்கு, பணியாளர்களின் சம்பளம், அகவிலைப்படியில் 8 1/3 சதவிகிதம், பூரிப்புத் தொகையாக 1972 நவம்பர் திங்களில் கொடுக்கப்பட்டது.





(6) 1972 நவம்பரில் இளநிலைப் பொறியாளர்கள் II வது பணிப் பிரிவு Class II/Status Gazetted ) நிலைக்கு உயர்த்தப்பட்டனர். அவர்களைப் போலவே மேற்பார்வையாளர்கள் கிரேட் I (மின்சாரம், பொறியியல், கட்டிடயியல்), மார்ச் 1973-ல், II-வது பணிப் பிரிவுக்கு உயர்த்தப்பட்டனர்.

(7) வாரியப் பணியாளர்களின் குடும்பத் திருமணங்களுக்கு ரூ. 2,000 விதம் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 14 ஆம் தேதியிலிருந்து கடன் கொடுக்கப்பட்டு வருகிறது.

(8) இடைநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் தங்களுடைய குழந்தைகளின் சிறப்புத் தொகை, புத்தகங்கள் வாங்குதல் போன்ற செலவுகளுக்காக, இரண்டாண்டுப் பணியில் இருந்து மாதம் 500 ரூபாய்க்குக்கீழ் அடிப்படைச் சம்பளம் உள்ளவர்களுக்கு, வட்டியில்லா முன்பணமாக ரூ. 100 அளிக்கப்படுகிறது.

(9) விநியோகப் பிரிவில் உள்ள லைன்மேன், வயர்மேன் ஆகியோர்கட்கு வழங்கப்படும் சைக்கிள்படியானது, ரூ. 4-லிருந்து ரூ. 6-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. விநியோகப் பிரிவில் உள்ள ஹெல்பர்களுக்கும் இப்பொழுது இச்சலுகை வழங்கப்படுகிறது.

(10) துணைப் பண்டகசாலைகளில் பணியாற்றும் பண்டகசாலைப் பணி பணியாளர்களின் வேலைச் சுமை அளவு ( work load ) நிர்ணயிக்கப்பட்டு கூடுதல் பணியாளர் இடங்களுக்கு ( Additional staff ) அனுமதி வழங்குவது குறித்து சங்கத்துடன் ஓர் உடன்பாடு பெறப்பட்டது. இதனால் பண்டகசாலைப் பணியாளர்கள் பதவி உயர்வுக்கான சாத்தியக் கூறுகள் அதிகம் ஏற்படும்.

(11) பணியாட்களின் மனமகிழ் மன்றங்களுக்கு கட்டுப்பாடுகளை தளர்த்தி தொடர் மானியங்களும், தொடரா மானியங்களும் அளிப்பதின் மூலமாக, வாரியமானது தன்னுடைய பணியாளர்களின் விளையாட்டு வசதிகளை ( Recreation facilities ) ஊக்குவித்து வருகிறது.

(12) வேலையாள் கல்வித் திட்டத்தின்கீழ், வேலையாட்களுக்கு கல்வி அளிப்பதைப் பெருக்குவதில் வாரியம் தொடர்ந்து அக்கறை காட்டி வருகிறது. யூனிட் அளவு வகுப்புகளில் அதிகமான அளவில் வேலையாள்-ஆசிரியர் பயிற்சி

[திரு. ஓ. பி. இராமன்] [1973 நவம்பர் 21

யாளர்கள் உள்ளார்கள் என்பதற்காகவும், வேலையாள் கல்வி பெறுவதிலும், வாரியமானது முதல் பரிசினையும் கேடயத்தையும் ஈட்டியுள்ளது.

30. வாரியத்தின் பணிகள் பெருகிக் கொண்டே போகின்றன. பணிகள் உடனுக்குடன் கவனிக்கப்பட்டு வேகமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்; இதைக் கருத்தில் கொண்டு உயர் மட்டத்தில், நிர்வாக அமைப்பு முறையை வாரியம் திருத்தி அமைத்துள்ளது.

நிர்வாகம்-பணி அமைப்பு கணக்குகள் குறித்த எல்லாக் காரியங்களைக் கவனிக்க தலைமைப் பொறியாளர் (பொது நிர்வாகம்) என்ற பதவியையும், விநியோகம், இயக்கம், பொருள்கள் வாங்குதல்-பண்டகசாலை, திட்டங்கள்-கட்டுமானம் ஆகியவற்றைக் கவனிக்க, தனித்தனியே ஒரு தலைமைப் பொறியாளர் என 5 பதவி இடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

31. பொதுமக்கள் நலனுக்காக வேண்டி, தனியார் மின் வழங்கு நிறுவனங்களை எடுத்துக் கொள்வது என்ற அரசின் கொள்கைக்கேற்ப, "1973-ம் ஆண்டு தமிழ் நாடு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப்படுத்துதல்) சட்டம்" என்ற புதிய சட்டம் ஒன்றினை தமிழ் நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. கீழ்க்கண்ட ஏழு தனியார் மின் நிறுவனங்கள் இன்னும் எடுக்கப்படாமல் உள்ளன :—

(1) கும்பகோணம் மின் நிறுவனம்.

(2) நாகப்பட்டிணம் மின் நிறுவனம்.

(3) செங்கோட்டை மின் நிறுவனம்.

(4) வேலூர் மின் நிறுவனம்.

(5) சேலம்-ஈரோடு மின் நிறுவனம்.

(6) திருநெல்வேலி-தூத்துக்குடி மின் நிறுவனம்.

(7) திருச்சிராப்பள்ளி-ஸ்ரீரங்கம் மின் நிறுவனம்.

புதிய சட்டத்தின் விதிமுறைகளுக்கொப்ப, 1973 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாள் இந்த நிறுவனங்களை அரசு ஏற்கும்.



1973 நவம்பர் 21] [திரு. ஓ. பி. இராமன்]

32. மின்சார வாரியத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றியும், அப்பிரச்சினைகளைப் போக்க தேவைப்படுபவை பற்றியும், நான் இந்த உரையில் விவரித்துக் காட்டியுள்ளேன். நிதி நிலை அறிக்கை பற்றி விவாதிக்கும்பொழுது, இந்த மாமன்றமானது தன்னுடைய அறிவுசால் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்குமுகத்தான் மின் வாரியம் மேலும் மேலும் பயன் உள்ள முறையில் ஆக்கரீதியாக மக்களுக்குப் பணியாற்ற உறுதுணையாக இருக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு, அவைத் தலைவர் அவர்கட்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தை தெரிவித்து முடிக்கிறேன்.

*THIRU S. NARAYANASWAMY : Mr. Deputy Chairman, Sir, I am happy for this opportunity to speak on the Electricity Board Budget and review the activities of the Board. The Tamil Nadu State Electricity Board is, I believe, the largest staffed agency of the State Government, and it is still a mystery to me what workloads there are in this Board, what work is going on there, and how the people are being served. We are bound to judge the work of the Board by what it does for the consumer. The consumer has not been getting his bills for months together. We are told that it is due to non-acceptance of workloads on the part of the clerical staff in the Board, that additional clerks were not being appointed and that they wanted overtime wages and such other things. But I was assured from time to time, at different meetings, that this situation would be remedied and that consumers would get bills regularly. I have not received any bill; a number of friends here told me that they had also not received their bills and such of those who had received bills, received them for large sums. The Electricity Board tells them that, if they are not able to pay the bills in one lumpsum, they can come to the Board and get permission to pay the amount in instalments, as though it were the consumers' fault that the bills got accumulated. It is an unnecessary torture inflicted upon the consumers for no fault of theirs, to go over to the Electricity Board Office and stand in queue outside the office to get permission for remitting the amount in instalments; they have much better work to attend to. I want to know from the Hon. Minister concerned and the Electricity Board whether is no other simpler procedure. I suggest that the Electricity bill might bear a foot-note at the bottom of the bill that the amount could be paid in three or four instalments

according to the choice of the consumer, it may be equal instalments, so that the procedure adopted is uniform. Nothing would make me happier than to be contradicted over these extremely disturbing facts.

I am told that a large number of these bills remaining unpaid has resulted in enormous backlog of unrealised moneys for the Electricity Board revenue, running to as much as between Rupees eight and ten crores; it may be either slightly more or a little less—that is not very important. But, this has resulted in some kind of financial paralysis in the biggest economic activity of the State Government. What attention has been devoted to this, I do not know. But, I think it is very important that this should be immediately attended to. I know for a fact and I stated at a meeting and it was resented by the then Chairman—who is no more there—that suppliers' bills had been held up indefinitely—when I say indefinitely, I mean several months at a stretch running to a very long period. Bills for supply of transformers and other gadgets have been held up for a long period on the ground that funds are not available with the Board. This is a very unhappy situation.

I would like to say that the Board should not get the reputation of being a chronically bad pay-master for goods that are produced at high costs, and even for paying wages the suppliers lack funds owing to non-payment of bills by the Electricity Board.

Now, I want to congratulate the Electricity Board and the Government on their efforts to increase electricity generation through getting Central Government's clearance for the Neyveli second mine-cut and also for installation of a thermal generation plant at Tuticorin. This is a very welcome development and as a large consumer of electricity, I have been particularly happy that these arrangements have been made. This shows the degree of economic awareness on the part of the Government and their efforts to increase the generating capacity of the State. I am also happy at the time by cordial relations that have developed between the Board and the Neyveli Lignite Corporation, in that the



Neyveli Lignite Corporation have promised to increase their efforts to generate more electricity. But what is important is that these attempts at increasing the generating capacity in this State and the arrangements made with the Kerala Government for supply of electrical energy which are all things I very heartily welcome are not adequate. The existing thermal units should be geared into full-rated capacity for production—and I particularly refer to the Ennore Thermal plant. I fully know the details regarding the difficulty in its being recommissioned quickly. I know about the breakdown and all that, that is going on. I hope, by March 1974, we will have at least 75 per cent of the rated capacity at Ennore. But, whatever it is, before we recommission the plant, the present 15 per cent power-cut might go.

The idea of the Electricity Board seems to be that the consumer must get permanently used to a power-cut of some kind. They seem to think that it is good for him—like taking castor-oil occasionally—and this must go on. I think this is a very wrong idea. It is a very wrong policy. It is retrograde and it is bad for the State. Though I know the condition in our State is better than in other Staes, the point is that we must deal with the situation and see whether we are able to lift the power-cut. We are having power-cut, and at the same time, we have invited medium and large-scale industrialists to establish new industries in our State. I am glad the new units that were started recently, both medium and large-scale, have obtained their requirements of electrical power, though not to the full extent. What is important is that the Ennore plant should be recommissioned quickly and thereafter, the generating capacity of all thermal units as well as hydel units must be kept at the highest level, and that the necessary technical staff alerted to do their best.

It is an open secret that there is considerable demoralisation in the working of the Electricity Board. This has caused widespread anxiety all over the State. I am getting a lot of letters about this. I am not making this statement, off my hat. There is demoralisation. The delay in sending bills to the consumers has created a lot of anxiety to everybody. On the question of suppliers' bills, I hope the functioning of the Electricity Board will improve. What is important is that the affairs of the

Electricity Board must be gone into quickly. I do not want a High Power Commission to be appointed because I know, by the time the High Power Commission gives its report, the entire situation would have changed, just as it happens in the case of the Pay Commission where before the report of the Commission is given, the prices of commodities would have gone up still higher. I do think that some agency will go in depth into the working of the Electricity Board.

பி.ப. 5-10 My estimate is that about 20 or 25 per cent of the staff do less than 25 per cent of the work today. I may be making an under-statement and not an over-statement. This is a very disturbing situation and I think the work-load business must be gone into thoroughly if we are going to do anything at all, because both the tax-payers' and consumers' money is involved in it. The consumer pays for the electricity and the tax-payers' money is involved to the extent the Government give subvention as grants, capital work-loans and such like things. The economics of the working should be gone into. I am reminded of one thing. People are coming and telling me that at the lower level, there is a lot of corruption, in getting their bills passed. I feel deeply distressed. A person like me does not talk about such things, but it has been brought to my notice forcefully by a large number of suppliers of goods that no bill gets passed except by some kind of regular bakshis at the lower level. Cannot something be done? Somebody manufactures the goods the hard way. He has got the factory. He pays wages. He has invested capital. He has borrowed money. He has labour trouble in his factory. He cannot get steel and at the end of all of it, for him to have to indulge in all sorts of spending sprees like this causes him a lot of distress. I think this must be gone into and you should see that suppliers' bills are paid promptly.

Now, Sir, the report is there. What is important is not the reports. What is important is what is today's situation. Enormous amount of outstanding bills is not collected and it is in arrears and on the other side, suppliers' bills are not paid. I think it is a very curious situation. Mr. Attlee was confronted in Parliament when he became the Prime Minister of the first Labour Ministry—Mr. Kattoor Gopal will be interested to know—the British TUC Secretary said—and this is stated in a cartoon,



"You, Mr. Prime Minister, promised us more wages for less work. We, for our part have put in less work. What about more wages?" Now, if this is the sort of attitude that the workers are going to adopt, the clerical staff is going to adopt and people at the top go on pleading absolute helplessness in the situation, don't you think, Mr. Chairman, that this situation calls for an investigation? If this is not done, what is happening elsewhere might happen here. It is happening in the Accountant-General's office today. Because the gentleman at the top is at Simla or Delhi, all the work comes to a standstill, so much so that the State Government have to take over the pay master 's department and do the payment themselves. I do not want a situation of administrative paralysis to creep into the Electricity Board. That is what I want. We are bound to do much better. Those at the top, and almost every official says that everything is alright in the Electricity Board. But I must look from consumer 's angle. As a user of electric power, not only of domestic power but also of industrial power, I am anxious that a higher calibre of working must be secured for the Electricity Board at the earlist. This cannot be done purely at the administrative level. Those at the very top, the entire cabinet must take a particular interest in the subject, if anything has to be done. If this is done, I have no doubt we would do a much better job.

There is a hue and cry about consumers' bill. I hope the Minister for Power will agree to abolish the system of people calling on the Board as though it were doing them a favour when it has accumulated the bills. Asking them to queue up for sanction to pay in instalments, I think, is pure sadism, Mr. Chairman, pure sadism. This is wrong and I think it must go.

Every time when I complained about the suppliers' bills, one Chairman at a confidential meeting said that I was unfair. I did not tell him that to my own company a large sum of money was due.

One more point and I have done. You keep changing the Chairman of the Electricity Board from time to time. My feeling is that it takes two years for the Chairman of the Electricity Board to know the entire ramification and the problems of electricity generation and distribution. If you keep him not for

three years, but five years, there is a chance that, that Chairman will function efficiently. You have to get a strong man; not only a strong man but you should want the gentleman to stay there, familiarise himself with the economics of the system, study it continuously and do the right thing, because it is a commercial wing of the Government. It is not merely an administrative matter. It takes a long time to understand the problems. We have been discussing endlessly and we have been congratulating ourselves on the fact that the line-loss is less than in some other States. If we could prevent this, we would never have been in need of any power cut. I have referred to the problem of pilferage. I am told not to refer to it. Pilferage must be stopped. One way of dealing with it is—it is purely technical—to have at every point, at every sub-station, energy meters, to measure the quantum of energy going into the sub-station in order to enable you to measure what possible leakage there is either through line-loss or pilferage. Please install this even as a temporary measure, and I want as a permanent measure, to have energy meters installed at every sub-station to measure this quantum. That is what I want. I would like administratively that this person, the Chairman, must be allowed to stay there for a period of five years. I know you will plead administrative complications but I hope you will do it. On this question of energy bills, for God's sake, Mr. Chairman, may I request the Minister to immediately issue orders to prevent the unwholesome queues, when they have better things to do, standing in line to seek permission to pay the bills in instalments, for the accumulation of which bills they are not responsible? I think it is basically unfair. I have received dozens of telephone calls and I hope you will act quickly.

Thank you very much.

* திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் நானும் பங்கு கொள்வதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மின் வாரியத் தினுடைய நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக் கின்றபோது, கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு நம்முடைய தமிழகத்தில் சார்பில் நெய்வேலி மின்சார உற்பத்தி கூடுதலாக்கப்படுகின்ற வகையில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடு





க்கும்படி தமிழ்நாடு சட்டப்பேரவை தீர்மானம் இயற்றியதையும், அது சம்பந்த மாக விரைவான நடவடிக்கைகளுக்கு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை அனுப்பி வைத்து டெல்லியில் அதைச் சேர்ப்பிக்க வைத்ததையும், அது அவசியம் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி யதையும் நான் இந்த நேரத்தில் கோடிட்டுக் காட்டி, மத்திய அரசினர் எந்தக் காரணத்தைக்கொண்டும் அதைத் தவிர்த்திடாத வகையில், தாமதித்திடாத வகையில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மின்சாரம் கடுமையான பற்றுக்குறைக்கு ஆளாகி, 75 சத வீதம் மின் வெட்டு இருந்தது. அந்தத் தருணத்தில் மின் வாரிய அதிகாரிகளும், ஊழியர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் தக்க முறையில் அதைச் சமாளித்தது பாராட்டத் தக்கது என்பதனையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். 75 சத வீதம் மின் வெட்டு இருந்தது. அப்படி இயற்கையின் கொடுமைக்கு ஆளாகியதாலும் நம்முடைய மாநில அரசு பல்வேறு திட்டங்களை அவசர அவசியமாக நிறைவேற்றியாக வேண்டும் என்று டெல்லியிலே தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தாலும்கூட, மத்தியில் ஏற்பட்டுவிட்ட தாம தத்தின் காரணமாகவும் மின் வெட்டு இந்த அளவுக்கு ஏற்பட்டு விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மின் வெட்டு பெருவாக நீக்கப் பட்டு இப்பொழுது சிறிதளவுதான் இருக்கிறது என்றாலும், இந்த மின் வெட்டு காலத்திலும் கூட புதிய இணைப்புகளுக்குத் தொடர்பு கொடுக்கப்பட்டு வரு கிறது. இந்த நிலைமை பெரிதும் வரவேற்கத் தக்கதாகும். இந்த நிதி நிலை அறிக்கையில் அப்படி மின் வெட்டு இருக்கின்ற காலத்திலும் புதிய இணைப்புகள் தருவதானது இப்பொழுதுதான் முதல் தடவை என்று அழகுபடத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. பற்றுக்குறை என்கின்ற நிலைமை இருந்தாலும் கூட, தொழில் வளம் பெருகுவதற்கு, புதிதாக தொழில் துவக்குவதற்கு இடையூறு இல்லை, அந்த முயற்சிகளுக்கு அரசின் ஆதரவு உண்டு என்பதை எடுத்துக் காட்டுவதாக இது அமைந்திருக்கிறது. 1973 ஆம் ஆண்டு டிசம்பர் மத்தியில் இருக்கிற மின் நிலைமையைப் பரிசீலித்து, ஒருகால் நிலைமைகள் சீரானால், தற் பி.ப. 5–20
போது இருக்கின்ற கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் என்று தெரிவித்திருப் பதானது, ஒரு நம்பிக்கையை ஊட்டுவதாகவும் மக்கள் மனத்திலே இருக்கின்ற அச்சத்தைத் தவிர்க்கின்ற வகையிலும் இருக்கிறது என்கின்ற நல்ல கருத்துக் களை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளம், ஆந்திரம் போன்ற பிற மாநிலங்களுடன் பண்ட மாற்று முறை களை அனுசரித்து, கடந்த ஆண்டில் இருந்த கடுமையான மின் வெட்டை நம்முடைய அரசு சமாளித்தது. இப்படி பண்ட மாற்று முறையில் அரசு சமாளித்த விதத்தை நான் பாராட்டுகிற அதே நேரத்தில் ஒன்றைக் குறிப்பிடு

வது அவசியமென்று கருதுகிறேன். கேரளாவில் அரிசி இல்லை. அதற்காக, தமிழகத்தில் முதல்வராக இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் இங்கேயிருக்கின்ற அரிசியை அங்கே அளிக்கலாம் என்ற நல்லெண்ணத்தில் அதை அளிப்பதற்கு முன் வந்தார்கள். ஆனால், அதே நேரத்தில், "என்னைக் கேட்காமல் கொடுப்பதா? என்னை அல்லவா கேட்டுவிட்டுத் தர வேண்டும்" என்று டெல்லி அரசு சொல்லுகிற வகையில்—அதிகாரம் இன்னும் வேண்டுமென்று மத்திய அரசு கேட்கின்ற தோரணையில்—இதற்கெல்லாம் கூட அங்கே கேட்டாக வேண்டிய கட்டாயநிலைமை இருப்பதை இந்த அரிசிப் பஞ்ச நேரத்திலும் கூடப் பார்த்தோம் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் கொள்கிறேன். இந்தப் பண்ட மாற்று முறையைக் கையாண்டு, கடுமையான மின்சாரப் பஞ்சம் நமக்கு இருந்தபோது கூட, இந்த அரசின் சாமர்த்தியமான பணிகளால் அதைச் சமாளித்தோம். அது போல மாநில அரசுகள், தங்களுடைய சாமர்த்தியமான, சாதுர்யமான நடவடிக்கைகளால், ஒரு மாநிலத்தோடு இன்னொரு மாநிலம் தொடர்பு கொண்டு தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கிற பரிவர்த்தனை நடவடிக்கைகளை சுதந்திரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அதிகாரம் கொடுத்துதவுவது அவசியமாகும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இதற்கெல்லாம்தான் நம்முடைய அரசு மாநில சுயாட்சி, அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று வலியுறுத்துகிறது என்பதைச் சொல்லி, அதன் மூலம்தான் நமக்கு இருக்கிற கஷ்டத்தைச் சுலபமாகப் போக்கிக் கொள்ள முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எண்ணூரில், நாம் எண்ணிய அளவில் மின்சார உற்பத்தி ஏறிவிடவில்லை. அதற்குக் காரணம், மணல் தடுப்பும் அதனால் ஏற்பட்டிருக்கின்றன பாதகமும் ஆகும். அதைத் தவிர்க்கின்ற வகையில், ஒரு நல்ல நம்பிக்கையின் அடிப்படையில், 70 லட்சம் ரூபாய் விலை மதிப்புள்ள ஒரு டிரெட்ஜர் வாங்குவதற்கான ஏற்பாடுகளைக் குறித்து இந்த நிதி நிலை அறிக்கையில் தெரிவித்திருப்பது மிக்க மகிழ்ச்சியை அளிப்பதோடும், மக்கள் மத்தியிலே இந்த அரசு, எதையும் சமாளிக்கும், எப்படியும் சமாளிக்கும், எண்ணூரில் மின்சாரம் கூடுதலாகக் கிடைக்கும் என்கின்ற நல்ல நம்பிக்கையைத் தோற்றுவித்திருப்பது வரவேற்கத்தக்கது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1973-74-ஆம் ஆண்டில் எண்ணூர் அனல் மின் திட்டத்தில் 110 மெகாவாட் 3-வது பிரிவு சம்பந்தமான பணிகளைத் தொடர்வது, குந்தா 4-வது நிலைக்குத் தேவையான மின் உற்பத்தி இயந்திரங்களை கனடா நாடு வழங்குவதற்கான உடன்பாடு ஏற்படுகின்ற நிலைமை இருப்பது, நடு வட்டம் நீர்த் திருப்புத் திட்டப்பணிகள் மே திங்களுக்குள் முடிகின்ற வாய்ப்பு இருப்பது, காடம்பாறை



நீரேற்று மின் உற்பத்திக்கான பூர்வாங்கப் பணிகள் தொடர இருப்பது, இவைகளெல்லாம், குறிப்பிடத்தக்கவையாகும், நமக்கெல்லாம் ஒரு நல்ல நம்பிக்கையைத் தருவனவாகவும் இருக்கின்றன என்பதைக் கோடிட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கையில் மத்திய அரசின் அனுமதிக்கான திட்டங்கள் என்று 10 திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. சோழாட்டிப்புழா திட்டம், கூனூர்-கல்லாறு, கீழ் மோயாறு, நெல்லித்துறை, பரளியாறு, சேர்வலாறு, சண்முகாநதி, மேல் அமராவதி, மேல் தாமிரபரணி, மேட்டூர் அனல் மின் திட்டம்—என்ற இந்தத் திட்டங்களையெல்லாம் உடனடியாக நிறைவேற்றுவதற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு அனுமதி அளிக்க வேண்டியது அவசரமானதாகவும் அவசியமானதாகவும் இருக்கிறது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் முக்கியமானதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது தவிர, தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பது குறித்து, மத்திய அரசு உடனே முடிவெடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் பேசுகிறபோது, ஒரு பெரிய பெருமையை இந்த வாரியம் இந்த நாட்டுக்கு அளித்திருக்கிறது, மாநிலத்துக்கு அளித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1973-ஆம் ஆண்டு துவக்கத்தில் போனஸ் சட்டத் திருத்தக் குழு சென்னையில் பரிசிலனைக்காக வந்திருந்தபோது, தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் சார்பில் நான் அங்கே சாட்சியம் அளிக்கச் சென்றிருந்தேன். பொதுத் துறையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குக் கூட போனஸ் வழங்க வேண்டுமென்று இந்திய நாட்டிலே இருக்கின்ற அனைத்துத் தொழிலாளர்களும் போராடிக் கொண்டிருக்கிற, வாதாடிக்கொண்டிருக்கிற நேரத்தில், அந்தக் குழுவினர் சென்னையில் பரிசிலனை நடத்தினார்கள். நான் சாட்சியம் அளித்துக்கொண்டிருந்தபோது, தமிழ் நாட்டில் 84 ஆயிரம் தொழிலாளர்களைக் கொண்டிருக்கின்ற இந்த மின் வாரியத்தில் முதன்முதலாக போனஸ் தருவதற்கான நல்ல காரியத்தை டாக்டர் கலைஞர் அவர்களின் கழக அரசு தான் செய்தது என்பதனை அந்த இடத்தில் தெரிவித்து, அதை மற்றவர்களும் ஒப்புக்கொள்கிற வகையில் அந்தக் குழுவில் தெரிவிக்கின்ற பெருமைக்குரிய வாய்ப்புக் கிடைத்தது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில், இந்த மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு போனஸ் சட்டமா, அது சட்டரீதியில் பொருந்துமா, பொருந்தாதா என்ற சந்தேகம் இருந்த நேரத்தில், இங்கே இருக்கிற அரசு, தொழிலாளர் நல அர

சாகவிருக்கின்ற காரணத்தால், போனஸ் கொடுப்பதை முதன்முதலாக அமுலாக்கிவிட்ட காரணத்தால், இந்தியாவில் இருக்கிற பல்வேறு மாநிலங்களிலும், இது தொடர வழி ஏற்பட்டது என்று அந்தக் குழுவில் தெரிவித்தார்கள். நான் இதனைக் குறிப்பிடுகிறபோது, இந்த நல்ல பெருமைவாய்ந்த காரியத்தை இந்த வாரியம் செய்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக்கொள்கிறேன். மின் உற்பத்திக் கழகம் அமைவதிருப்பது அவசியம். அதை அமைப்பதற்கான அரசின் முடிவு வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களுக்கு மின் வசதி அளித்து, தெரு விளக்கு வீட்டு விளக்கு ஆகிய வசதிகள் எவ்வளவு விரைவாகவும் வேகமாகவும் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுத்து, ஏழை எளிய மக்கள், சாமான்யர்கள், கிராமப்புற மக்கள் ஒளிமயத்தோடு நடமாட வழிவகைகளை உருவாக்கிய காரணத்தால், இந்தத் துறையில் இருக்கின்ற அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும், அதிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் என்னுடைய பாராட்டைத் தெரிவிப்பது என்னுடைய கடமை என்று தெரிவித்துக்கொள்கிறேன். 1972-ஆம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் தேதி வரையிருக்கின்ற கணக்கின்படி 60,866 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கின்றது, 23,695 அரிசன குடியிருப்புகளுக்கு மின்னொளி தரப்பட்டிருக்கிறது என்ற செய்தி இந்த நாட்டு மக்களின் மத்தியிலே நல்ல எழுச்சியை உண்டாக்குவதாகவும் இந்த அரசு நம்முடைய வாழ்விலே ஒளி தருகிறது என்கிற நம்பிக்கையை ஊட்டுவதாகவும் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எஞ்சியிருக்கின்ற 806 அரிசன குடியிருப்புகளுக்குக் கூட விரைவில் மின்சார வசதி பூர்த்தியாகிவிடும் என்று தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்கதாகும். 1973-ஆம் ஆண்டு ஜனவரி முதல் தேதி இந்த வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி, இன்றைய தினம் பொதுத் துறைகளில் தற்காலிக தினக் கூலிகளாகப் பணியாற்றுகிறவர்கள், எப்போதாவது தங்களுடைய வாழ்வில் ஏற்றம் கிடைக்காதா என்று எண்ணிப் பல ஆண்டுகளாக ஏங்கிக்கொண்டிருக்கிற வேளையில் 9,000 தினக் கூலித் தொழிலாளர்கள் முறைப்படுத்தப்பட்ட பணிகளில் பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்திருப்பது, வரவேற்கத் தக்க, பாராட்டத் தக்க, நல்ல முடிவாகும். அதோடு, இந்த நிதி நிலை அறிக்கையில், எஞ்சியிருக்கின்ற 29,923 தினக்கூலி வேலையாட்களின் பணியையும் கூட படிப்படியாக ஒழுங்குபடுத்துகிற முறை நீடிக்கும் என்கிற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறபோது, பழைய ஆண்டுகள் நிலைமை கவனத்திற்கு வருகிறது. எந்த ஆண்டிலும் இந்த தினக்கூலி பாட்டாளிகளுக்கு





நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கை இருந்ததில்லை. அது இப்போது தான் பிறந்திருக்கிறது. அதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தினக்கூலி உயர்வு, வீட்டு வாடகைப் படி, அகவிலைப் படி, திருமணக் கடன், பணியாளர்களுடைய குழந்தைகளின் கல்விச் செலவுக்கு உதவி, இவைகளெல்லாம் கொடுத்திருப்பது வரவேற்கத்தக்க, பாராட்டத்தக்க வகையில், தொழிலாளர்களை இந்த அரசு பந்தத்துடனும், சொந்தத்துடனும் பரிபாலிக்கின்ற வழிகளில் செல்கிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த மின் வாரியத்தில் பணியாற்றுகின்ற பணியாளர்களுடைய வேலைப்பளு, வேலை செய்கிற நிலைமைபற்றிக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு சித்ரா நாராயணசாமி அவர்கள், அங்கே பணியாற்றுகிற தொழிலாளர்கள், பட்டியல் 'பில்கள்' போடுவதில் தாமதம் செய்வதால் பொது மக்களுக்கு, உபயோகிப்பவர்களுக்கு இருக்கிற சங்கடங்கள்பற்றிச் சொன்னார்கள். அந்தச் சங்கடங்
கள் ஏற்பட்டதை இல்லையென்று சொல்லவில்லை. நம்முடைய அரசு காரியங்களை பி ப.
வெகு வேகமாகச் செய்ய வேண்டும், விரிவாகச் செய்ய வேண்டும்; அனைத்துக் 5–30
கிராமங்களுக்கும் மின்சாரம் விரைவில் தர வேண்டும்; தொழில்துறைகளிலும் வேளாண்மைத்துறைகளிலும் அனைத்து வகையிலேயும் பலன் தர வேண்டுமென்று எடுத்துக் கொண்ட எல்லா முயற்சிகளிலும், மின்சாரத் துறையில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் இணைந்து நின்று, பணியாற்றியிருக்கிறார்கள். அணைமையிலேதான் பல நூற்றுக் கணக்கானவர்கள் எழுத்தர் பணிக்கான வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். எழுத்துப் பிரிவில் கணக்கர் பிரிவில் உள்ள ஏனைய பணிகளும் வளர்ந்துகொண்டிருக்கின்றன; அதிகமான வேலைகள் இருக்கின்றன; ஆனால் அந்த அளவுக்குப் போதுமான ஆள் இல்லாத காரணத்தால் வேலையில் கட்டுப்பாடு ஏற்பட்டது; எங்களிடத்தில் எந்தவிதமான வேலைக் குறைபாடும் இல்லை என்பதை ஊழியர்கள் தெரிவிக்கிறார்கள். எனவே ஊழியர்கள் வேண்டுமென்றோ, பொது மக்களுக்குத் தொல்லைகள் தர வேண்டுமென்றோ இந்த அரசாங்கத்தின் பணிகளுக்கு இடையூறாக இருக்க வேண்டுமென்றோ நினைக்கவில்லை. நான் இதனைக் குறிப்பிடுவதற்குக் காரணம், பத்திரிகையில் கூட இதைபற்றி தவறாக ஒரு செய்தி வந்தது.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, சென்னை நகரத்தில்தான் இப்பிரச்சினை அதிகமாக இருக்கிறது, வளர்ந்து கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் அதிகமாக வளர்ந்திருக்கலாம். இந்தப் பிரச்சினை இங்கே ஏன் உருவாகிறதென்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. காட்டூர் கோபால்: எல்லாப் பணிகளுக்கும் சென்னை தலைமையாக இருந்து பணியாற்றுகிறது. மாநிலம் முழுவதற்கும் தலைமையாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் பணிகள் வளர்ந்துள்ளன. அதன் எதிரொலி சென்னையிலும் ஏராளமான பணிகள் வளர்ந்துள்ளன. உரிய ஆட்கள் தேவையென்ற அடிப்படையில்தான் அத்தகைய சிக்கல்கள் ஏற்பட்டிருந்தது என்று ஊழியர்கள் தாப்பில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அது பத்திரிகையில் தவறுதலாக வேறுவிதமாகத் தரப்பட்டிருக்கிறது. வேறு முறையில் பத்திரிகைகள் தெரிவிக்கிற காரணத்தால், முழுமையான விளக்கத்தை அதற்குச் சொல்வது தவிர்க்க முடியாத அவசியம், தவிர்க்க முடியாத கடமை என்கிற வகையிலே நான் இந்த விளக்கத்தைச் சொல்கிறேன். இப்போது இந்த ஊழியர்களுடைய எண்ணிக்கை ஓரளவுக்கு அதிகமாக்கப்பட்டிருக்கிறது. வாரிய நிர்வாகத்திற்கும், வாரியத்தில் பணியாற்றும் தொழிற் சங்கங்களுக்கும் இடையே உடன்பாடு கண்டு, முறையாக ஊழியர்கள் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிக்கல்கள் ஏற்கெனவே ஏற்பட்டவைதானே ஒழிய, இப்போது முறையாகவும் முழுமையாகவும் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், 84,000 தொழிலாளர்களைக் கொண்ட பெரும் அமைப்பு மின் வாரியம். 84,000 தொழிலாளர்களைக் கொண்டுள்ள அமைப்பில் ஏற்படும் பிரச்சினைகளை நீங்கள் முழுமையாகக் கவனித்துப் பார்க்க வேண்டும். உள்ளபடியே ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த வாரியத்தினுடைய நிர்வாகத்தினரும் ஊழியர்களும் எவ்வளவு நல்ல உறவோடு, நல்ல நெருக்கத்தோடு பணியாற்றுகிறார்கள் என்பதற்கு இவ்வளவு சிறப்பான வேலைகள் நடந்துள்ளன என்பதே ஒரு எடுத்துக் காட்டாகும். இங்கே தொழில் தகராறுகள் மிக மிகக் குறைந்து தொழில் அமைதியும், சுமுகமும் மேலோங்கி இருந்துவருகின்றன. இந்த வாரியத்தினுடைய நல்ல காரியங்களுக்கும், நல்ல பணிகளுக்கும் காரணமாக இருக்கின்ற மின் வாரியத்தினுடைய அமைச்சரவர்களுக்கும், அதிகாரிகளுக்கும், அதில் பணியாற்றுகிற 84,000 ஊழியர்களுக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பாராட்டுக்கள் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிரு தலைவரவர்களே, மின்சார வாரியத்தினுடைய நிதி நிலை அறிக்கை விவாதத்திலே நானும் கலந்து கொள்ளும் வகையிலே ஒரு சில கருத்துக்களைக் கூற முன் வருகிறேன். நாடு வளர்ந்து கொண்டு வருகிற நேரத்திலே, மக்களிடையிலே மின்சாரத்தின் தேவையும் வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. நாட்டிலே பிற பொருள்களின் உற்பத்திக்கு, மின்சாரத்தின் உற்பத்தி மிக மிக அவசியமாகும்.



சுதந்திரம் கிடைத்து 26,27 வருடங்கள் ஆகின்றன, மக்களிடத்திலே வாழ்க்கைத் தரம் மிக வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. அதே நேரத்தில் மின்சார உற்பத்தியின் தேவையும் அதிகமாகிவிட்டது. அந்தக் காலத்திலே சாப்பிட சாப்பாடு இருந்தால் போதும்; இருக்க ஏதாவது ஒரு வீடு இருந்தால் போதும்; உடுக்க ஏதாவது ஒரு உடை—4 முழம் வேட்டி—இருந்தால் போதும் என்று ஒரு மனிதனுடைய அடிப்படைத் தேவையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். இப்போது மனிதனுடைய அடிப்படைத் தேவைக்கு மின்சாரம் தேவை. வெளிச்சம் இல்லை யென்றால், நாட்டிலே விளம்பரம் இருக்காது. வெளிச்சம் இல்லை யென்றால் ஒன்றுமில்லை என்ற நிலை இருக்கிறது. நாட்டிலே பிள்ளைகளைப் பெறுவதற்குப் பற்றாக்குறையில்லை. (சிரிப்பு) அவ்வளவு அதிகமாகக் குழந்தைகள் பிறக்கின்றன. எவ்வளவு கட்டுப்படுத்திப் பார்த்தும் முடியவில்லை. (சிரிப்பு) அந்த வேகத்தை மட்டும் கட்டுப்படுத்த முடியவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, நம்முடைய திரு. தீக்ஷிதர் அவர்களுக்கு எவ்வளவு குழந்தைகள் என்று சொல்வாரேயானால், அதை வைத்து எதிர்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்க முடியும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, எனக்கு மொத்தம் 4 குழந்தைகள். மூன்று பெண்கள், ஒரு ஆண்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, உறுப்பினர் திரு. சி. வி. ராஜகோபால் அவர்களுக்கு எத்தனை குழந்தைகள் என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: எனக்கு 5 குழந்தைகள் தான்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, ஓரளவுக்கு நான் தேவலாம் என்று நினைக்கிறேன். பதினாறும் பெற்று நல் வாழ்வு வாழ வேண்டுமென்று அந்தக் காலத்தில் சொன்னார்கள். போதுமான அளவுக்கு மற்ற பொருள்களில் உற்பத்தி இல்லை. மின்சாரப் பற்றாக்குறை, சிமின்ட் பற்றாக்குறை என்று எங்கு பார்த்தாலும் பற்றாக்குறை இருக்கிறது. இப்போது ஜனங்களுக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறது என்று அறிக்கையிலே பார்த்தால் ஏராளமாக இருக்கிறது. 1978-79-ல் இன்னும் அதிகமாகத் தேவைப்படுகிறது; குறைவாக இல்லை. உற்பத்தியைப் பெருக்குவது ஆமை வேகத்தில் இருக்கிறது. இதற்கான மூலதனச் செலவு பல கோடி என்று இருக்கிறது. 1978-79-ல் நமக்கு இன்னும் எவ்வளவோ மெகாவாட்டுகள் மின்சாரம் தேவைப்படுகிறது. எந்த சர்க்கார் வந்தாலும் இந்தப் பற்றாக்குறை இருக்கும்போல்

இருக்கிறது. மக்களுக்கு மின்சாரத்தின் தேவை அதிகமாக இருப்பதால், அதனுடைய உற்பத்தி ஆமை வேகத்தில் இல்லாமல், உண்மையிலேயே வேகமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார உற்பத்திக் குறைவிற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒரு காரணம் அல்லது இரண்டு காரணங்கள் என்று சொல்ல முடியாது. தங்களுடைய நிர்வாகத்தைக் குறைத்துச் சொல்பவர்கள் எங்கேயும் இருக்க முடியாது. இன்னும் வேகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்வோம். எவ்வளவு உற்பத்தி செய்தாலும் பற்றாக்குறை இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதைக் கேட்டால்தான் வருத்தமாக இருக்கிறது. இப்போது விளக்கமாக திரு. சித்ரா ராமசாமி அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு சித்ரா நாராயணசாமி என்று சொல்லுங்கள்.

**திரு. ஒய் வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** திரு நாராயணசாமி என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** திரு. சித்ரா ராமசாமி என்று சொன்னீர்கள்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** அவர்கள் நல்லமுறையில் சொன்னார்கள். இதற்கெல்லாம் நிர்வாகம்தான் காரணம் என்று சொன்னார்கள். சரியான, திறமையான நிர்வாகம் இருந்தால், விநியோகத்தில் குறைபாடுகள் இருக்காது. 15 சதவிகிதம் வெட்டு கூடத் தேவையில்லை.

பி.ப.
5–40 லைன் லாஸ் பற்றியும் உறுப்பினர்கள் கூறினார்கள். உற்பத்தியில் குறைபாடுகள் இருக்கலாம், விநியோகத்தில் குறைபாடுகள் இருக்கலாம். லைன் லாஸ் இருந்தாலும் பரவாயில்லை. இந்தவிதமான குறைபாடுகளை யெல்லாம் சீர்திருத்தலாம். அவைகளை முறைப்படுத்தலாம். பலவிதமான ஊழல்கள் விநியோகத்திலே இருக்கின்றன என்று காதிலே கேட்டால், எனக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தால், அவைகளைச் சீர்திருத்தம் செய்துவிட வேண்டும். இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்திருந்தால், இந்த மின்தட்டுப்பாடு இல்லாமல் செய்திருக்கலாம். ஆறு மாதங்களாகத் தட்டுப்பாடு இல்லாமல் இருந்திருந்தால், மிக்க சந்தோஷமாக இருக்கும். அங்கத்தினர்கள் சொல்லியிருக்கின்ற குறைபாடுகளையெல்லாம் சீர்திருத்த சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.





முக்கியமாக இந்த 15 பர்சென்ட் மின்வெட்டின் காரணமாக விவசாயத் துறையிலே பலவிதமான கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மொத்தமாக இத்தனை மணி நேரம் மின்சார சப்ளை என்று கொடுக்கின்றார்கள். கொடுக்கின்ற மின்சாரத்தை நைட்டிலே, இரவிலே கொடுக்காமல், பகலிலேயே கொடுக்க வேண்டும். அப்போதுதான் விவசாயம் நல்ல முறையில் நடக்க முடியும். எப்போதுமே பயந்துகொண்டு பாம்பு, நண்டு, நத்தை, தேள்களுக்காக பயந்து வரப்பிலே நடந்து தண்ணீர் பாய்ச்சி உணவு உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. மேட்டு நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்ச எந்தவிதமான வசதிகளும் இல்லை. பாட்டரி லைட்டாவது கிடைக்கின்றதா என்றால், கிடைப்பதில்லை. எந்தவிதமான வசதியும் இல்லை. மோட்டார் இருக்கின்ற இடத்தில் மட்டும், பம்புசெட்டு இருக்கிற இடத்தில் மட்டும் 'லைட்' இருக்கின்றது. இங்கேயிருந்து இரண்டு ஏக்கர், நான்கு ஏக்கர் நிலத்தில் இருட்டில் பாம்பு, நண்டு, தேள் நம் காலையே சுற்றிக்கொண்டு வருகின்ற வரப்பில் நடந்து தண்ணீர் விட வேண்டுமென்றால், மிகச் சிரமம். மற்ற துறை உற்பத்தியாளர்களுக்கும் மேலாக, விவசாயத்திற்காக கரண்ட் கொடுக்கும் போது, எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாவிட்டால்தான் நல்லது. அவர்களுக்கு 'டைம்' கட்டுப்பாடு கூடாது. இத்தனை நேரம், நாள் என்று கொடுக்கக் கூடாது. அதோடு மட்டுமின்றி, இருளில் அல்லாமல் பகல் நேரத்தில் கொடுத்தால்தான், அந்த வேலையை நேரடியாக அவர்கள் செய்வதற்குத் தகுதியான வாய்ப்பு ஏற்படும்.

அடுத்தபடியாக, நமது மாநிலத்தில், தமிழகத்தில் சுமாராக 5 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள், விவசாயத்திற்காக பம்புசெட்டு வைத்துள்ள ஜனங்கள் மின்சாரத்தை உபயோகிக்கின்றார்கள் என்று தெரிவித்துக்கொள்கின்றேன். அவர்களுடைய பம்புசெட் ரிப்பேரானால், அவர்கள் ரொம்பச் சிரமப்படுகின்றார்கள். பட்டிக்காடாக இருக்கின்ற அவர்களுடைய கிராமங்களிலிருந்து போகக் கூட சரியான சாலை வசதி கிடையாது. அந்த பம்புசெட்டு எவ்வளவு கனமாக இருக்கின்றது ? ஒரு மூன்று ஆர்ஸ் பவர் மோட்டாரைக் கொண்டுபோய் காயில் போடுவது, ரீவைண்டிங் பண்ணுவது என்றால், மிகக் கஷ்டமாக இருக்கின்றது. பிரைவேட் பார்டிகள் கணக்கில்லாமல் கேட்கிறார்கள். இந்தக் காரணங்களால் பம்பு செட்டைக் கவனிக்காமல், ஒரு நான்கு நாட்களுக்கு ரிப்பேர் பண்ணாமல் போட்டுவிட்டால், பயிர் காய்ந்துபோகின்றது. இந்த மாதிரியான கஷ்டங்களைத் தவிர்க்க சர்க்காரே மாவட்ட ரீதியிலாவது தாலூக்கா ரீதியிலாவது வசதி செய்துதர வேண்டும். சர்க்கார் தரப்பிலே செய்தால், அந்த வசதி மற்றவர்களுக்கும், வேறு எந்தத் துறையினருக்கும்

நல்லது. இந்தச் சாக்கிலேயே அரைவை மெஷின், பவர் மெஷின் இவை வைத்திருக்கும் ஜனங்களுக்குக்கூட பயன் தரும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

விவசாயத்திற்கோ மற்ற எந்தக் காரணத்திற்காகவோ கரண்ட் சப்ளை மனுக் கொடுத்தால், மின்சார விநியோகம் வேண்டுமென்று மனுக் கொடுத்தால், கனெக்ஷன் கொடுப்பதற்கு ஆகின்ற காலதாமதம் கொஞ்சநஞ்சமல்ல. அது மாதக்கணக்கிலே ஆகின்றது. நாள் கணக்கிலேகூட அல்ல. இரண்டு மாதங்கள், ஆறு மாதங்கள், ஒரு வருடம் என்று காலதாமதம் ஆகின்றது. மின் இணைப்புகளைச் சீக்கிரமாகக் கொடுப்பதற்கு மின்சார இலாகாவினர் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, பில் கலெக்டர்கள் வசூலுக்காக 'பில்' போடுகின்ற சமாசாரம் கிராமங்களுக்குச் சென்று மீட்டரைப் பார்த்துக் கணக்கெடுக்க வேண்டியவர்கள், வீட்டிலிருந்தபடி கணக்குப் போட்டு அனுப்புவது என்ற ஒரு வழக்கம் வைத்துக்கொள்கிறார்கள். இவர்கள் ஒரு குறிப்பிட்ட விவசாயி களுக்கு மாதாந்திரக் கணக்கு இவ்வளவுதான் ஆகும் என்று வைத்துக் கொண்டு, 5 அல்லது 6 மாதங்களுக்குச் சேர்த்து ஆயிரக்கணக்கில் யூனிட்டுக்கள் கணக்கிட்டு நூற்றுக்கணக்கான ரூபாய்களுக்கு ஒரே பில்லை அனுப்பிவிடுகிறார்கள். விவசாயிகள் கடைசியில் பணம் சேர்த்துக் கட்டுவ தற்கே மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இந்த மாதிரியான குறைபாடுகளை யெல்லாம் நல்ல முறையிலே நிவர்த்திக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த நிர்வாகத்திலே, ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள். எங்களது போன்ற நகராட்சிகள் இவைகளுக்கு 'ஸ்டிரீட் லைட் மெயின்டினன்ஸ்' என்று இருக்கிறது. இது குறித்து டெவலப்மெண்ட் கவுன்சிலிலே திருச்சியிலே புகார் வந்திருக்கின்றது. அப்படிப் புகார்கள் வருவது கணக்கற்றவை. சேர்ந்தாற்போல் 20, 30 லைட்டுகள் நாட்கணக்கில், மாதக் கணக்கில் எரிவதில்லை, இரவிலே எரிவதில்லை. இதைப்பற்றிச் சரியாகக் கவனிப்பதும் இல்லை. சேர்ந்தாற்போல் 50 விளக்குகளில் 40, 45 விளக்குகள் சரியாக இல்லை. எல்லாமே மின் இலாகாவைச் சேர்ந்த விளக்குகள். அவர் களுக்கும் பொறுப்புண்டு. கிராமப்புற மக்கள் ரொம்பக் கஷ்டப்படுகின்றார்கள். உடனடியாக இதைக் கவனிக்க வேண்டும். மாதக்கணக்கில் கவனிக்கப் படாமல் இருக்கின்றது. பொதுவாக தெருவுக்குத் தெரு இந்த நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.



அடுத்தபடியாக, ஊராட்சிக்குக் கொடுக்கின்ற இந்த மின்சாரத்திற்கு அப்படியே மொத்தமாகக் கட்டணம் கட்ட வேண்டும். அணைந்திருக்கும் லைட்டுகளுக்கும் சேர்த்துக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. 50 லைட்டுகள் அணைந்துவிட்டிருந்தன. இதற்கும் சேர்த்து கணக்கிலே போட்டுக் கொடுக்க வேண்டியிருக்கின்றது. ஊராட்சி மன்றங்களுக்கும் கிராமங்களுக்கும் 'மீட்டர் சிஸ்டம்' இருந்தால், புகார் இருக்காது. 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த் தால், தன் பிள்ளை தானே வளரும்' என்ற கதை போல ஊராட்சியில், கிராமத்தில் 'மீட்டர் சிஸ்டம்' போட்டு அதன்படி பில்களைப் போட்டால், மிக நன்றாக இருக்கும். திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் சொன்னது போல், பில்கள் தயார் பண்ணுவதிலே, கணக்குகள் போடுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. காலி ஸ்தானங்கள் பல மாதங்களாகப் பூர்த்தி செய்யப்படாமல், கணக்காயர்களுக்கு வேலைப்பளு அதிகமாகியிருக்கின்ற காரணத்தினால், ஒழுங்கான முறையிலே காரியங்கள் நடக்கவில்லை. இதனால் பணக்காரர் களுக்கோ நிர்வாகத்தினருக்கோ கஷ்டம் இல்லை. கீழ் நிலையிலுள்ள மக்கள் தான் மின்சாரம் உபயோகிப்பவர்கள்தான் கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே உடனடியாக காலி ஸ்தானங்களைப் பூர்த்தி செய்து, கணக்குகளை முறைப்படுத்த வேண்டும். மின்சாரம் உபயோகிக்கின்ற மக்களுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாது உடனடியாக நடவடிக்கை எடுத்து, தேவையான அளவுக்கு இனிமே லாவது கொடுக்க வேண்டும். பற்றாக்குறை பற்றாக்குறை என்ற நிலை, வருகின்ற நிதிநிலை விவாதத்தின்போது நம் நாட்டிலே மாறியிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

திரு. சி. வி. ராஜகோபால்: துணைத் தலைவரவர்களே, இதற்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் ஸ்ரீரங்கத்தில் நகராட்சி மன்றத் தலைவராக இருக்கின்றார். அவரே நகராட்சித் தலைவராக பொறுப்பேற்றிருக்கின்ற, அவருடைய கண்காணிப்பிலேயே இருக்கின்ற ஸ்ரீரங்கத்தில் சுமார் 45, 40 லைட்டுகள் எரியவில்லை என்று வருத்தத்தோடு சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: எங்கள் நகராட்சி என்பதற்காகச் சொல்லவில்லை. எங்கள் நகராட்சியிலே, இதுவரையிலே 4, 5 நாட்களுக்குக் கூட லைட் இல்லாதிருந்ததில்லை. தனியார் பொறுப்பிலே எந்தவிதமான குறையும் இருந்ததில்லை. அப்படி எங்காவது விளக்கு சரியில்லையென்றால், அந்த விளக்கைச் சரி பார்த்துவிட்டுத்தான் வருவேன். எந்தவிதமான குறை பாடுகளும் அதிகமாக இருந்ததில்லை, இருக்க முடியாது. அப்படிக் கொஞ்ச நஞ்சம் இருக்கலாம். அதுவும் எனக்குத் தெரிந்தால், அதை உடனடியாகக் கவனித்துவிடுவேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: 40, 45 விளக்குகள் எரியவில்லை என்று எந்த அடிப்படையில் அவர் கூறினார் என்றுதான் எனக்குச் சந்தேகம்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவரவர்களே, ஜில்லா வளர்ச்சி மன்றத்திலே குறைபாடுகளைச் சொல்லியிருக்கின்றேன். ஞாயிற்றுக் கிழமை ஊருக்குப் போனதும், அந்தப் புகார்களைக் கொண்டுவந்து சமர்ப்பிக் கின்றேன். மூன்று மாதத்தில் ஊராட்சி மன்றத்திலே 100-க்கு 80 நாட்கள் சரியான முறையில் விளக்குகள் இல்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளை நேரடியாகக் கொண்டுவந்து இங்கு சமர்ப்பிக்கின்றேன் என்றும் உறுதி கூறுகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் நாளை பிற்பகல் 4 மணிஅளவில் கூடும்.

5-48 பி.ப. பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

5. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

*A. Statutory Rules and Orders.*

* 1. Order issued with G.O.R. No. 1080, Revenue, dated the 6th June 1973 exempting from liability to additional surcharge the exhibition of the cinematograph film 'Mahatma' a biographical documentary on the life of Mahatma Gandhi. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1973 (Tamil Nadu Act X of 1939)].

* 2. Notification issued with G.O. Ms. No. 2969, Revenue, dated the 29th May 1973 in regard to amendments to rule 3 (2) of the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. [Laid on the table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966)].

* 3. Notification issued with G.O. Ms. No. 581, Rural Development and Local Administration, dated the 28th March 1973 in regard to amendment to the Rural Development and Local Administration Notification II-2 No. 180 of 1963, dated the 4th April 1963, published at page 6 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



* 4. Notification issued with G.O. Ms. No. 580, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to amendment to the Rural Development and Local Administration Department Notification II-2, No. 479 of 1964, dated the 12th October 1964, published at pages 523–524 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 28th October 1964. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 5 Notification issued with G.O. Ms. No. 578, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2, No. 174 of 1963, dated the 4th April 1963, published at page 4 of Part II, section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*.6. Notification issued with G.O. Ms. No. 283, Excise and Prohibition, dated 13th October 1972, read with Government Memorandum No. 6260/E & P. IV/73-1, Excise and Prohibition, dated 28th April 1973, relating to the Tamil Nadu Spirituous Rules, 1972. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

* 7. Notification issued with G.O. Ms. No. 156, Rural Development and Local Administration, dated the 29th January 1973, in regard to amendments to the rules published with the Rural Development and Local Administration Department Notification S.R.O. No. A-193 of 1965, dated the 29th December 1964, published at pages 193 to 197 of Part V of the *Tamil Nadu Government Gazette*, dated the 17th February 1965. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 8. Notification issued with G.O. Ms. No. 2905, Revenue, dated the 26th May 1973, in regard to amendment to the Revenue Department Notification II-1, No. 3987 (b) of 1971, dated the 7th September 1971, published at page 2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette, Extraordinary*, dated the 8th September 1971. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

* 9. Notification issued with G.O. Ms. No. 1279, Public (Services-A), dated the 8th May 1973, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954 for exclusion of posts of Tourism Promotion Officer in Public (Tourism) Department from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

* 10. Notification issued with G.O. Ms. No. 949, Industries, dated the 25th June 1973, in regard to an amendment to rule VIII (a) of the Tamil Nadu Small Scale and Cottage Industries Loans and Subsidy Rules, 1956. [Laid on the table of the House under section 19 (*d*) of the Tamil Nadu State Aid to Industries Act, 1922 (Tamil Nadu Act V of 1923).]

* 11. Notifications issued with G.O. Ms. No. 263, Revenue, dated the 5th February 1973, in regard to an amendment to the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Rules, 1965. [Laid on the table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

* 12. Notifications issued with G.O. Ms. No. 209, Home, dated the 25th January 1973, in regard to an amendment to rule 194-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

* 13. Notification issued with G.O. Ms. No. 614, Home, dated the 6th March 1973, in regard to an amendment to rule 395 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]



* 14. Notification issued with G.O. Ms. No. 422, Home, dated the 15th February 1973, in regard to amendments to rules 456 and 458-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

15. Tamil Nadu Government's Review on the working of the Tamil Nadu Industrial Investment Corporation Limited for the year ended 30th June 1972 together with copies of Annual Report and Statement of Accounts. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

* 16. Notification issued with G.O. Ms. No. 598, Rural Development and Local Administration, dated the 29th March 1973, in regard to an amendment to rule 4 of the Tamil Nadu Panchayats Building Rules, 1970. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1959).]

* 17. Order issued with G.O. R. No. 3511, Revenue, dated the 15th June 1973, exempting from liability to additional surcharge all shows of the documentary films produced by the Films Division, Government of India. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

* 18. Notification issued with G.O. Ms. No. 1274, Rural Development and Local Administration, dated the 29th June 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 108 of 1966, dated the 12th April 1966, published at page 140 of Part II Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 20th April 1966. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 19. Notification issued with G.O. Ms. No. 577, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 449 of 1964, dated the 29th September 1964, published at page 2 of Part II—

Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 30th September 1964. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 20. Notification issued with G.O. Ms. No. 868. Rural Development and Local Administration, dated the 26th April 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2, No. 479 of 1964 dated the 12th October 1964, published at pages 523–524 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 28th October 1964. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

* 21. Notifications issued with G.O. Ms. No. 1866. Revenue. dated the 11th April 1973, in regard to amendments to the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Rules, 1969. [Laid on the table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act X of 1969).]

* 22. Notification issued with G.O. Ms. No. 3197, Revenue, dated the 5th June 1973, in regard to amendments to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]

* 23. Balance Sheet and Profit and Loss Account of the Tamil Nadu Warehousing Corporation for the year 1970–71. [Laid on the table of the House under section 31 (11) of the Warehousing Corporation Act, 1962 (Central Act 58 of 1962).]

24. Annual Report of the Tamil Nadu Public Service Commission for the year ending 31st March 1972 [G.O. Ms. No. 1715, Public (Services-A), dated 21st June 1973]. [Laid on the table of the House under Article 323 (2) of the Constitution of India.]

& 25. Notification issued with G.O. Ms. No. 582, Rural Development and Local Administration, dated the 28th March 1973, in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 171 of 1963, dated the 4th April 1963, published at pages 3–4 of Part II—





Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 6th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).].

& 26. Notification issued with G.O. Ms. No. 743, Revenue, dated the 22nd February 1973, appointing Thiru V. P. Ethirajan, Principal Subordinate Judge, Erode as Judicial Member, Sales Tax Appellate Tribunal (Additional Bench), Coimbatore. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 27. Notification issued with G.O. P. No. 3627, Revenue, dated the 19th June 1973, in regard to an amendment to the Tamil Nadu Sales Tax (Surcharge) Rules, 1971. [Laid on the table of the House under section 7 (3) of the Tamil Nadu Sales Tax (Surcharge) Act, 1971 (Tamil Nadu Act 24 of 1971).]

& 28. Notification issued with G.O. Ms. No. 740, Agriculture, dated the 22nd March 1973, in regard to an amendment to rule 210 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

& 29. Notification issued with G.O. Ms. No. 642, Home, dated the 8th March 1973, in regard to an amendment to rule 26 of the Rules for management of the Government Reception Homes, Madras, 1957. [Laid on the table of the House under section 44 (4) of the Tamil Nadu Children Act, 1920 (Tamil Nadu Act IV of 1920).].

& 30. Notification issued with G.O. Ms. No. 1301, Rural Development and Local Administration, dated the 2nd July 1973, in regard to an amendment to the Tamil Nadu Khadi and Village Industries Board Rules, 1960. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).].

& 31. Notification issued with G.O. Ms. No. 1302, Rural Development and Local Administration, dated the 2nd July 1973, in regard to extension of the term of office of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further

period of one month from 3rd July 1973. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).].

& 32. Notifications issued with G.O. Ms. No. 1086, Agriculture, dated the 2nd May 1973 relating to regulation of trade in groundnut, gingelly, castor, potato, cotton, sugarcane, jaggery, chillies, tamarind, arecanut, paddy, cumbu, cholam and ragi in Salem district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

& 33. Notifications issued with G.O. Ms. No. 764, Agriculture, dated the 23rd March 1973 relating to inclusion of paddy in respect of Andimadam Market in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

& 34. Order issued with G.O. Rt. No. 1345, Revenue, dated the 19th July 1973, exempting from liability to entertainments tax show-tax and additional surcharge one cinematograph film show organised by Mathar Nala Sangam, West Mambalam, Madras, at 10 a.m. on 19th August, 1973 at Noorjahan Theatre, Saidapet, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).].

& 35. Order issued with G.O. Rt. No. 1458, Revenue, dated the 3rd August, 1973 exempting from liability to entertainments tax, show-tax and additional surcharge one cinematograph film show held by the Muththamizh Mandram, Indian Institute of Technology, Madras on 29th July 1973 in the Open Air Theatre inside the campus of the Indian Institute of Technology, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).].

& 36. Notification issued with G.O. Ms. No. 274, Co-operation, dated the 21st July 1973 in regard to an amendment to rule 43-A of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).].



&37. Notification issued with G.O. Ms. No. 1926, Home, dated he 17th July 1973 exempting all vehicles belonging to the non-commercial Departments of the Government of Tamil Nadu from he tax payable under the Tamil Nadu Motor Vehicles Act. Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Act, 1931 (Tamil Nadu Act III of 1931).].

& 38. Notification issued with G.O. Ms. No. 467, Home, dated he 20th February 1973 in regard to amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).].

& 39. Notification issued with G.O. Ms. No. 751, Home, dated the 17th March 1973 exempting from payment of the tax payable in respect of the Truck-trailor bearing registration number MDY 1702 belonging to the Vivekananda Rock Memorial Committee, Madras. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

& 40. Notification issued with G.O. Ms. No. 957, Rural Development and Local Administration, dated the 11th May 1973 in regard to amendments to the Tamil Nadu Municipal Service Rules, 1970. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).].

& 41. Notification issued with G.O. Ms. No. 1557, Rural Development and Local Administration, dated the 2nd August 1973 in regard to an amendment to the Tamil Nadu Municipal General Service Rules, 1970 regarding enhancement of age limit. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).].

& 42. Notification issued with G.O. Ms. No. 1531, Agriculture, dated the 28th June 1973 in regard to an amendment to rule 21 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

& 43. Notification issued with G.O. Ms. No. 1581, Agriculture, dated the 4th July 1973 in regard to an amendment to rule 40 (3) of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).].

& 44. Notifications issued with G.O. Ms. No. 3998, Revenue, dated the 4th July 1973, in regard to appointment of Director of Settlements, Settlement Officer and Assistant Settlement Officer. [Laid on the table of the House under section 43 (5) of the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwar.) Act, 1972 (Tamil Nadu Act 11 of 1973).].

45. First Annual Report 1973 of the Pallavan Transport Corporation Limited. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).].

& 46. Notification issued with G.O. Ms. No. 1166, Rural Development and Local Administration, dated the 18th June 1973, in regard to amendments to the rules relating to the Establishments under the Municipal Councils. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

& 47. Notification issued with G.O. Ms. No. 4023, Revenue, dated the 7th July 1973, in regard to reduction in rate from twenty-four per cent to twelve per cent in respect of the tax payable by any dealer under the Tamil Nadu General Sales Tax Act on the sales of imported foreign liquor from bounded warehouses to ships calling at Madras Port. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

& 48. Notification issued with G.O. Ms. No. 585, Rural Development and Local Administration, dated the 28th March 1973 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 195 of 1963, dated the 10th April 1963, published at page 2 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated 11th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]



& 49. Order issued with G.O. Rt. No. 1674, Revenue, dated the 7th September 1973 exempting from liability to Entertainments Tax, show tax and additional surcharge, one cinematograph film show proposed to be held by the Regional Sports Committee, Food Corporation of India, Madras at 10 a.m. on 8th September 1973 at Rajakumari Theatre, Madras to raise funds for the sports, welfare and cultural activities of the staff of the Food Corporation of India. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 50. Order issued with G.O. Rt. No. 1508, Revenue, dated the 13th August 1973 exempting from liability to Entertainments Tax, show-tax and additional surcharge, the exhibition of eight films in the festival of Indian Films to be held by the Madras Film Society, Madras-17 during August. 1973. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 51. Order issued with G.O. Rt. No. 1469, Revenue, dated the 4th August 1973, exempting from liability to Entertainments Tax, show-tax and additional surcharge one cinematograph film show organised by the Iswari Prasad Dattatreya Orthopaedic Centre, Madras at 10 a.m. on 12th August 1973 at Shanthi Theatre, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 52. Notification issued with G.O. Ms. No. 587, Rural Development and Local Administration, dated the 28th March 1973 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 177 of 1963, dated the 4th April 1963, published at page 4-5 of Part-II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated 6th April 1963. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

& 53. Order issued with G.O. Ms. No. 4170, Revenue, dated the 11th July 1973 exempting from liability to additional surcharge, all film shows conducted by the Information and Public Relations Department of the Government of Tamil Nadu for the benefit of

Children at the Children's Theatre (Anna Kalai Arangam), Vellore. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 53-A. Notification issued with G.O. Ms. No. 1903. Rural Development and Local Administration, dated the 11th September, 1973 appointing 15th day of September 1973 as the date on which the said Act shall come into force throughout the State of Tamil Nadu other than the areas specified in the Schedule therein. [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

& 54. Order issued with G.O.R. No. 1457, Revenue, dated the 3rd August, 1973 exempting from liability to Entertainments Tax, show-tax and additional surcharge, three cinematograph film shows one each in Tamil, Hindi and English, proposed to be held by the Indian Institute of Technology Employee's Association on 12th August, 1973, 14th August, 1973 and 15th August, 1973 in the open Air Theatre inside the campus of the Indian Institute of Technology, Madras. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

& 55. Notification issued with G.O. Ms. No. 249, Co-operation, dated the 2nd July, 1973 in regard to an amendment to rule 85-NC of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

& 56. Notification issued with G.O. Ms. No. 1935, Public (Services-A), dated the 18th July, 1973 in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of the post of Reception Officer in Public (Information and Public Relations) Department from the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India)].

& 57. Notification issued with G.O. Ms. No. 486, Rural Development and Local Administration, dated the 16th March 1973, in regard to dissolution of the Sivakasi Panchayat Union



6 3099

Council with effect on and from the 17th March 1973. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 58. Notification issued with G.O. Ms. No. 1561, Rural Development and Local Administration, dated the 2nd August 1973 in regard to extension of the term of office of the Members of the Tamil Nadu Khadi and Village Industries Board for a further period of one month from the 3rd August 1973. [Laid on the table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959).]

£ 59. Notification issued with R. Dis. No. 44718/72, dated the 26th May 1972 in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920, to Anumandanpatti Town Panchayat in Madurai district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 60. Notification issued with R. Dis. No. 64317/72, dated the 26th May 1972 in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920 to Vallam Town Panchayat in Thanjavur district.

£ 61. Notification issued with G.O. Ms. No. 583, Rural Development and Local Administration, dated the 28th March 1973 in regard to an amendment to the Rural Development and Local Administration Department Notification II-2 No. 23 of 1966, dated the 7th February 1966, published at page 2 of Part II—Section 2 of the Extraordinary issue of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th February 1966. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 62. Notification issued with G.O. Ms. No. 1439, Agriculture, dated the 15th June 1973 relating to establishment of a regulated market at Manachanallur and exclusion of certain villages from Lalgudy Market of Tiruchirappalli district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 63. Notification issued with G.O. Ms. No. 1530, Agriculture, dated the 28th June 1973 relating to establishment of a regulated market at Usilampatti in Madurai district for paddy, cotton, groundnut and chillies. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 64. Notification issued with G.O. Ms. No. 1292, Agriculture, dated the 25th May 1973, in regard to exclusion of Singanallur and Pallapalayam villages from the notified market area of the Perundurai market of the Coimbatore district in respect of cotton, groundnut and tobacco. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 65. Notification issued with G.O. Ms. No. 1442, Agriculture, dated the 15th June 1973 relating to regulation of trade in Paddy and gingelly at nine places in Chingleput district. [Laid on the table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

£ 66. Notification issued with G.O. Ms. No. 169, Excise and Prohibition, dated the 2nd May 1973, in regard to an excise duty at the rate of rupees four per proof litre (Rupees two and paise sixty only per bulk litre) on 35 under proof arrack for the period from the 1st September 1973 to the 31st August 1974. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

£ 67. Notification issued with G.O. Ms. No. 276, Co-operation, dated the 23rd July 1973 in regard to amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

£ 68. Notification issued with G.O. Ms. No. 499, Rural Development and Local Administration, dated the 20th March 1973 in regard to amendments to the Madras Corporation Engineering Service Rules. [Laid on the table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Tamil Nadu Act IV of 1919).]



£ 69. Notification issued with G.O. Ms. No. 1899, Home, dated the 12th July 1973 in regard to an amendment to rule 215-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

70. Second Annual Report for the year 1972–73 of the Tamil Nadu Agricultural University, Coimbatore. (Tamil.) [Laid on the table of the House under section 49 (3) of the Tamil Nadu Agricultural University Act, 1971 (Tamil Nadu Act 8 of 1971).]

71. First Annual Report of the Tamil Nadu Theatre Corporation Limited, Madras for the year ended the 31st March 1973 containing the Audit Report and comments upon the audit report made by the Comptroller and Auditor-General of India. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

72. First Annual Report 1972 of the Pandian Roadways Corporation Limited. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

73. Second Annual Report 1973 of the Cheran Transport Corporation Limited. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

£ 74. Notification issued with Roc. No. 186939/72-F2, dated the 23rd June 1973 in regard to classification and alteration of the K. Abishekapuram Village Panchayat in Tiruchirappalli district as Town Panchayat with effect from 1st October 1973. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 75. Notification issued with G.O.P. No. 2764, Revenue, dated the 21st May 1973 in regard to amendments to the Revenue Department Notification III No. 311 of 1965, dated the 28th June 1965, published at page 1342 of Part III of the *Tamil Nadu Government Gazette*, dated the 14th July 1965. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

£ 76. Order issued with G.O. Ms. No. 5375, Revenue, dated the 3rd September 1973 exempting from liability to entertainments tax, show tax and additional surcharge, one benefit film show which may be conducted in the City of Madras and in the districts in connection with the National Teachers' Day Celebration on 5th September 1973. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 77. Order issued with G.O. Rt. No. 1653, Revenue, dated the 3rd September 1973 exempting from liability to entertainments tax, show tax and additional surcharge one cinematograph film show to be held by the Rotaract Club of Madras at Safire Theatre at 6-45 p.m. on 14th September 1973, to raise funds for its social, educational and charitable activities. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

£ 78. Notification issued with G.O. Ms. No. 1560, Rural Development and Local Administration, dated the 2nd August 1973 relating to delegation to Collectors of powers of the Government in regard to classification of lands vested in Panchayats and withdrawn under rule 72-A of the Tamil Nadu Panchayats Act, 1958. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 79. Notification issued with G.O. Ms. No. 1261, Rural Development and Local Administration, dated the 28th June 1973 in regard to amendments to rule 3 (1) of the Tamil Nadu Panchayats (Election of Vice-Presidents) Rules, 1961. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 80. Notification issued with G.O. Ms. No. 4594, Revenue, dated the 31st July 1973 in regard to amendments to the Tamil Nadu Agricultural Income-tax Rules, 1955. [Laid on the table of the House under section 61 (3) of the Tamil Nadu Agricultural Income-tax Act, 1955 (Tamil Nadu Act V of 1955).]



£ 81. Notification issued with Roc. No. 188059/72-E4, dated the 7th August 1973, in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920 to Madathukkulam Town Panchayat in Coimbatore district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 82. Notification issued with Roc. No. 56145/73-E4, dated the 10th August 1973, in regard to extension of section 286 and other relevant provisions relating to vital statistics of the Tamil Nadu District Municipalities Act, 1920 to Thiruthani Town Panchayat in Chingleput district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

£ 83. Notification issued with G.O. Ms. No. 612, Home, dated the 6th March 1973 in regard to an amendment to rule 454-A of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

&&& 84. 15th Annual Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1971–72 (Tamil). [Laid on the table of the House under section 79 (1) (A) of the Electricity (Supply) Act, 1948 (Central Act 54 of 1948).]

*B. Reports, Notifications and other Papers*

** 1. Report of the Committee on Public Accounts on the Accounts of the State of Tamil Nadu for the year 1969–70 (Part II).

@ 2. The Tamil Nadu Prohibition (Suspension of Operation) Amendment Ordinance 1973 (Tamil Nadu Ordinance No. 4 of 1973).

@ 3. The Tamil Nadu Excise (Amendment) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 5 of 1973).

* 4. Notification issued with G.O. Ms. No. 73, Labour and Employment, dated the 27th January 1973 in regard to an amendment to the Madras Shops and Establishments Rules, 1948.

*5. Notification issued with G.O. Rt. No. 285, Revenue, dated the 10th February 1973, exempting from the tax under the Central Sales Tax Act payable by Thiruvalargal Phillips India Ltd., Madras, in respect of the sale of a Music Relay Equipment to Gandhi Hill Society, Vijayawada, for being set up at Gandhi Hill, Vijayawada.

*6. Notification issued with G.O. Ms. No. 297, Labour and Employment, dated the 27th April 1973, making the Tamil Nadu Payment of Wages (Deduction for National Defence Fund and Defence Savings Scheme) Rules, 1973.

*7. Report of the Committee on Estimates for 1972-73 on Hospitals and Dispensaries.

@@ 8. The Tamil Nadu General Sales Tax (Amendment) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 6 of 1973).

@@ 9. The Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment) Ordinance, 1973 (Tamil Nadu Ordinance No. 7 of 1973).

&10. Notification issued with G.O. Ms. No. 4532, Revenue, dated the 30th July 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the Bonds to be executed by trained nurses who undergo training in family planning at the Regional Family Planning Training Centres for being appointed as Health Visitors.

&11. Notification issued with G.O. Ms. No. 4530, Revenue, dated the 30th July, 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the gift deed executed by Thiru R. K. Rangappachariar in favour of the Panchayat Union, Mandapam, Ramanathapuram district..

&12. Erratum issued with Memorandum No. 46763/VI/73-1, Revenue, dated the 6th June 1973 in regard to the Revenue Department Notification II-1 No. 5518 of 1972, dated the 1st November, 1972, published at page 982 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette*, dated 29th November, 1972.



&13. Notification issued with G.O. Ms. No. 408, Labour and Employment, dated the 12th June 1973 in regard to amendments to rule 21 (3) of the Tamil Nadu Plantations Labour Rules, 1955.

&14. Notification issued with G.O. Ms. No. 3206, Revenue, dated the 5th June 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the reconveyance deeds to be executed conveying an extent of 2.49 acres of lands in Town Survey No. 1184 and 1097 of Melveeraraghavapuram village, Tirunelveli taluk and district.

&15. Notification issued with G.O. Ms. No. 3497, Revenue, dated the 13th June 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central II of 1899) in respect of the sale deed to be executed by Thirumathi S. Padmini, wife of Dr. K. T. Ramachandran, Mylapore, Madras, in favour of Begum Shafia Nazir Hussain Trust, represented by its Secretary Thiru M. Bilal Hussain Sahib, son of late Alhaj Moulvi Nazir Hussain Sahib, Madras.

£16. Notification issued with G.O. Ms. No. 4881, Revenue, dated the 13th August, 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the indemnity bond to be executed by the Commissioner, Thellar Panchayat Union, North Arcot district for the purpose of issue of duplicate National Defence Certificates, the original having been lost.

&&17. "Tamil Nadu—An Economic Appraisal 1973" (Part I—Review and Part II—Statistical Tables).

18. Administrative Reforms Commission's Report on "Public Works Department Administration" (English and Tamil) (Volumes I and II).

19. Answers to Unstarred Questions Nos. 1 to 10.

20. Returns of Assets of the following Members of the Tamil Nadu Legislative Council as on 31st March 1973 placed on the table in pursuance of the Resolution passed by the Tamil Nadu Legislature on the 28th August 1969 :—

1. Thiru M. Rajah Iyer.
2. Thiru S. Narayanaswamy.

3. Thiru Kattoor Gopal.

4. Thiru M. Sankaralingam.

5. Thiru K. Rajaram.

6. Thiru Rama Subbiah.

7. Thiru Saw. Ganesan.

8. Thiru C. V. Rajagopal.

9. Thiru S. Jayaram Reddiar.

10. Hon. Thiru N. V. Natarajan, Minister for Backward Classes.

11. Thavathiru Kundrakkudi Adigalar.

&&& 21. Statement of action taken on the suggestions made by the Members of the Tamil Nadu Legislature during the discussion on the Annual Financial Statement of the Tamil Nadu Electricity Board for the year 1972-73 (English and Tamil).

&&& 22. Report of Thiru C. M. Kuppannan, B.SC., B.L., Commission of Inquiry (District and sessions Judge of West Thanjavur, Thanjavur) on the undesirable clashes between the Students, Busmen and the Police on 2nd, 3rd, and 4th December 1972 at Tiruchirappalli. (English and Tamil).

&&& 23. Report of Thiru T. C. R. Kothandarama Raju, B.A., B.L., Commission of Inquiry (Principal District and Sessions Judge, Tirunelveli) on the incidents from the assault on Professor A. Srinivasan at Palayamkottai on the night of 19th November 1972 to the death of student Lourdhunathan in Thambaraparani River at Palayamkottai on 21st November 1972. (English and Tamil).

24. Rejoinder by Thiruvalargal M. G. Ramachandran, M.L.A. and M. Kalyanasundaram, M.P., and reply thereto. (English and Tamil).



25. Speech of Hon. Thiru O. P. Raman, Minister for Electricity, initiating the discussions on the Annual Financial Statement for 1973-74 and the Supplementary Financial Statement for 1972-73 of the Tamil Nadu Electricity Board. (English and Tamil).

---

** Laid on the table of the House on 14th August 1973.
@ Sent by post to all M.L.Cs. on 4th September 1973.
* Sent by post to all M.L.Cs. on 14th September 1973.
@@ Sent by post to all M.L.Cs. on 10th October 1973.
& Sent by post to all M.L.Cs. on 11th October 1973.
£ Sent by post all M.L.Cs. on 15th November 1973.
&& Circulated to all M.L.Cs. on 20th November 1973.
&&& Circulated to all M.L.Cs. on 19th November 1973.

## இணைப்பு I

[15-ம் பக்கத்தில் 1-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

இருதய ராஜ், மோட்டார்ப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான எம்.டி.இ. 7922-ம் பதிவு எண்ணுடைய பேருந்து, 5—12—1972-ல் காலை 11.00 மணிக்கு அட்டவணை பயணப்படி குன்னூர் வழியாக கோயம்புத்தூருக்குச் செல்ல உதகமண்டலத்தை விட்டுப் புறப்பட்டது. இந்தப் பேருந்து 11.45 மணிக்குக் குன்னூரைப் போய்ச்சேர்ந்ததும், பயணிகளை ஏற்றிக்கொண்ட பிறகு வலவர், பயணித் துணையைச் சேர்க்காமல் மொத்தம் 40 பயணிகளுடன் கோயம்புத்தூரை நோக்கி பயணம் தொடக்க 12 மணிக்குக் குன்னூரை விட்டுப் புறப்பட்டது. சுமார் 12.15 மணியளவில் குன்னூரிலிருந்து ஒரு மைல் தள்ளி காந்திபுரத்திற்கு அருகில், பேருந்து சாலை வழியே சென்று கொண்டிருந்த இரண்டு பாதசாரிகளை இடித்துத் தள்ளி, சாலையின் இடப்பக்கத்தில் உள்ள ஒரு மரத்தின் மீது மோதி முடிவாக இடப்பக்கம் தலை குப்புறச் சாய்ந்தது. (ஒருவர் பேருந்துப் பயணி, மற்றொருவர் பாதசாரி ஆகிய) பெண்கள் இருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், இரு பெண்கள் (ஒருவர் பேருந்து மோதிய பாதாசாரி, மற்றொருவர் பேருந்துப் பயணி) மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லும் போது இறந்தனர். வலவர் உட்பட காயமடைந்த 16 பேரும் சிகிச்சைக்காக குன்னூரில் உள்ள அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். காயமுற்ற மேலும் ஒருவர் தாமாகவே உதகமண்டலத்திற்குச் சென்று உதகமண்டலத்திலுள்ள அரசுத் தலைமையிட மருத்துவ மனையில் தாமாகவே சேர்ந்து கொண்டார். சிகிச்சைக்காக குன்னூர் அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட காயமுற்றவர்களுள் இரு ஆண்கள் மரணமடைந்து விட்டனர். இவ்வாறாக இந்த விபத்தில் ஆறு பேர் (நான்கு பெண்கள், இரண்டு ஆண்கள்) உயிரிழந்தனர். அகநிலை நோயாளியாக இருந்து பேருந்து வலவர் கைது செய்யப்பட்டு பிணையத்தின் பேரில் விடுவிக்கப்பட்டார். இ.பி.கோ. 304.ஏ, 337-வது பிரிவுகளின்கீழ் 535/72-ம் குற்ற எண்ணில் குன்னூர் காவல் நிலையத்தில் காவலர் வழக்கொன்றைப் பதிவு செய்துள்ளனர். ரப்பர் குழாய் திடீரென்று வேலை செய்யத் தவறியதால் பிரேக் செயல்படத் தவறிவிட்டது என்றும், அதனால் விபத்து ஏற்பட்டது என்றும் மோட்டார் வண்டிகள் ஆய்வாளர் தெரிவித்துள்ளதால், இவ்வழக்கு உண்மை நிலையைத் தவறாகக் கொண்டதால் தொடரப்பட்ட வழக்கு எனக் கருதப்பட்டதென, காவல் துறை குப்பிரண்டு இப்போது தெரிவித்துள்ளார்.



## இணைப்பு II

[41-ஆம் பக்கத்தில் 30-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும், அறநிலையத்தின் பெயர், கிராமம், தாலுக்கா, மாவட்டம். | உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலங்கள். நஞ்சை ஏ. செ. | புஞ்சை ஏ. செ. | கூடுதல் ஏ. செ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 அருள்மிகு கன்னிகாபரமேஸ்வரியம்மன் கோயில், இராமநாதபுரம் நகரம், வட்டம் மற்றும் மாவட்டம். | .. | 0 04 | 0 04 |
| 2 அருள்மிகு கல்யாண விக்ருதீஸ்வரர் கோயில், வெஞ்சமன் கூடலூர், கரூர் தாலுகா, திருச்சி மாவட்டம். | .. | 2 89 | 2 89 |
| 3 அருள்மிகு கல்யாண நரசிங்கப் பெருமாள் கோயில், ராமகிரி, வேதசெந்தூர் தாலுகா, மதுரை மாவட்டம். | .. | 163 00 | 163 00 |
| 4 அருள்மிகு மீனாட்சி சொக்கலிங்கசுவாமி கோயில், சௌதார் பட்டி, திருமங்கலம் தாலுகா, மதுரை மாவட்டம். | .. | 26 66 | 26 63 |
| 5 அருள்மிகு அஹோபில நரசிங்கப்பெருமாள் கோயில், நிலக்கோட்டை நகரம் மற்றும் வட்டம், மதுரை மாவட்டம். | .. | 156 17 | 156 17 |
| 6 அருள்மிகு சுப்ரமணியசுவாமி கோயில், சிவன் மலை, தாராபுரம் தாலுகா, கோவை மாவட்டம். | .. | 56 22 | 56 22 |
| 7 அருள்மிகு ஆருத்ர கபாலீஸ்வரர் வகையறு கோயில், மடவிளாகம், தாராபுரம் வட்டம், கோவை மாவட்டம். | .. | 75 56 | 75 56 |
| 8 அருள்மிகு நற்றுணையசுவாமி கோயில், ஆண்டிபாளையம், கோபி வட்டம், கோவை மாவட்டம். | .. | 4 37 | 4 37 |

| வரிசை எண்ணும், அறநிலையத்தின் பெயர், கிராமம், தாலுகா, மாவட்டம். | உடமைகளாக ஆக்கப்பெற்ற நிலங்கள். நஞ்சை ஏ. செ. | புஞ்சை ஏ. செ. | கூடுதல் ஏ. செ. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 9 அருள்மிகு ஆதீஸ்வரர் சுவாமி கோயில், பெரிய களந்தை, பொள்ளாச்சி வட்டம், கோவை மாவட்டம். | .. | 35 33 | 35 33 |
| 10 அருள்மிகு குருஞ்சேரியம்மன் கோயில், குருஞ்சேரி, உடுமலைப் பேட்டை வட்டம், கோவை மாவட்டம். | .. | 33 94 | 33 94 |
| 11 அருள்மிகு அங்காளபரமேஸ்வரியம்மன் கோயில், கள்ளி வலசு, தாராபுரம வட்டம், கோவை மாவட்டம். | .. | 48 26 | 48 26 |
| 12 அருள்மிகு சேது பாவா அறக்கட்டளைகள், மன்னார்குடி நகரம் மற்றும் வட்டம், தஞ்சை மாவட்டம். | 42 75 | .. | 42 75 |
| 13 அருள்மிகு அய்யனார் கோவில், சப்பதன் இருப்பு, சீர்காழி வட்டம், தஞ்சை மாவட்டம். | 5 01 | .. | 5 01 |
| 14 அருள்மிகு ஆதிகேசவ பெருமாள் கோயில், குத்தாலம், மாயூரம் தாலுகா, தஞ்சை மாவட்டம். | 1 32 | .. | 1 32 |
| 15 அருள்மிகு வேணுகோபாலசுவாமி கோயில், திப்பிராஜபுரம், கும்பகோணம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 28 | .. | 0 28 |
| 16 அருள்மிகு காளஹஸ்தீஸ்வரமுடையான் என்ற அய்யனார் கோயில், கதிராமங்கலம், கும்பகோணம், தஞ்சை மாவட்டம். | 0 65 | .. | 0 65 |



| | | | |
|---|---|---|---|
| 17 அருள்மிகு கோதண்டராமர் கோயில், நல்லூர், மாயூரம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 38 | .. | 0 38 |
| 18 அருள்மிகு ஆதிகேசவபெருமாள் ஆலயம், மாணலூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 58 | .. | 0 58 |
| 19 அருள்மிகு பனங்காடி ஐயனார் ஆலயம், மாணலூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 47 | 0 47 |
| 20 அருள்மிகு வெங்கடாசலபதி பெருமாள் ஆலயம், ஒக்கூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 27 | 0 27 |
| 21 அருள்மிகு சோமேஸ்வரசாமி ஆலயம், ஆந்தகுடி, நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 16 | .. | 0 16 |
| 22 அருள்மிகு பின்னவனைதநாதசாமி ஆலயம், மாணலூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 01 | .. | 1 01 |
| 23 அருள்மிகு நாராயணேஸ்வரர் ஆலயம், நாரணமங்கலம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 03 | 0 03 |
| 24 அருள்மிகு அபிமுத்தீஸ்வரர்சுவாமி ஆலயம், பட்டமங்கலம், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 14 | .. | 0 14 |
| 25 அருள்மிகு குமரேசர் ஆலயம், சேங்காலிபுரம், நன்னிலம் வட்டம். | 0 01 | 0 03 | 0 04 |
| 26 அருள்மிகு காளகஸ்தீவரசாமி ஆலயம், பெரிய கண்ணமங்கலம், நன்னிலம் வட்டம். | 0 20 | 0 52 | 0 72 |
| 27 அருள்மிகு லெட்சுமி நாராயண பெருமாள் ஆலயம், கமலாபுரம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 12 | 0 12 |
| 28 அருள்மிகு நடுக்கந்தீர்த்த பிள்ளையார் ஆலயம், புத்தகரம், நன்னிலம் வட்டம். | 0 64 | 0 09 | 0 73 |
| 29 அருள்மிகு விசுவநாதசுவாமி ஆலயம், சோழங்கநல்லூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 42 | 0 53 | 0 95 |

| வரிசை எண்ணும், அறநிலையத்தின் பெயர், கிராமம், தாலுகா, மாவட்டம். | உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலங்கள் | | |
|---|---|---|---|
| | நஞ்சை | புஞ்சை | கூடுதல் |
| | ஏ. செ. | ஏ. செ. | ஏ. செ. |
| (1) | (2) | (3) | (4) |
| 30 அருள்மிகு சுதர்னேஸ்வரசாமி ஆலயம், தேதியூர், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 58 | .. | 0 58 |
| 31 அருள்மிகு அனந்த நாராயண பெருமாள் ஆலயம், ஆவராணி நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 09 | 0 06 | 0 15 |
| 32 அருள்மிகு கைலாசநாதசுவாமி ஆலயம், வடகுடி, நன்னிலம் வட்டம். | 0 93 | .. | 0 93 |
| 33 அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், மாங்குடி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 15 | 0 09 | 0 24 |
| 34 அருள்மிகு ராஜகோபாலபெருமாள் ஆலயம், கோமல், திருக்கோவாசல், நாகை வட்டம். | 0 75 | 0 86 | 1 61 |
| 35 அருள்மிகு மாரியம்மன் ஆலயம், கீழையூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 05 | 0 33 | 0 38 |
| 36 அருள்மிகு திரௌபதியம்மன் ஆலயம், அந்தணப்பேட்டை, நாகை வட்டம். | 0 04 | .. | 0 04 |
| 37 அருள்மிகு யாதவ நாராயணபெருமாள் ஆலயம், கீவளூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 16 | 0 16 |
| 38 அருள்மிகு மாரியம்மன் ஆலயம், ஆய்குடி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 25 | 0 95 | 1 20 |
| 39 அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், கழகாவதகுடி, நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 01 | 0 04 | 0 05 |
| 40 அருள்மிகு நயனவரதீஸ்வரசாமி ஆலயம், கண்கொடுத்த வனிதம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 19 | 0 09 | 0 28 |
| 41 அருள்மிகு நாராயணபெருமாள் ஆலயம், எண்கண், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 07 | 0 12 | 0 19 |
| 42 அருள்மிகு வரதராஜ பெருமாள் ஆலயம், பூந்தோட்டம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 18 | .. | 0 18 |
| 43 அருள்மிகு வாழ்முனீஸ்வரசாமி ஆலயம், மகிழி, நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 15 | 0 15 |
| 44 அருள்மிகு ராஜகோபாலசாமி ஆலயம், கண்கொடுத்தவனிதம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 2 50 | 0 22 | 2 72 |
| 45 அருள்மிகு பொன்னுவிநாயகர் ஆலயம், வெண்மணி, நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 58 | 0 33 | 0 91 |
| 46 அருள்மிகு அகஸ்தீஸ்வரசாமி ஆலயம், கீரங்குடி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 05 | .. | 0 05 |
| 47 அருள்மிகு சீனிவாசப் பெருமாள் ஆலயம், கீழ எருக்காட்டூர், நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | .. | 0 46 | 0 46 |
| 48 அருள்மிகு இராமலிங்கசாமி ஆலயம், மேலப்பிடாகை, நாகை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 1 11 | .. | 1 11 |
| 49 அருள்மிகு மாரியம்மன் ஆலயம், செம்பியன்மாதேவி, நாகை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 0 10 | 1 47 | 1 57 |
| 50 அருள்மிகு சௌரிராஜபெருமாள் ஆலயம், வைப்பர், நாகை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | .. | 0 05 | 0 05 |

| வரிசை எண்ணும், அற நிலையத்தின் பெயர், கிராமம், தாலுகா, மாவட்டம். | உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலங்கள் | | |
| --- | --- | --- | --- |
| | நஞ்சை | புஞ்சை | கூடுதல் |
| | ஏ. செ. | ஏ. செ. | ஏ. செ. |
| (1) | (2) | (3) | (4) |
| 51 அருள்மிகு அகத்தீஸ்வரசாமி ஆலயம், பழையவலம், நாகை வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். | 0 04 | .. | 0 04 |
| 52 அருள்மிகு கைலாசநாதசாமி ஆலயம், உபயவேதாந்தபுரம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 04 | .. | 0 04 |
| 53 அருள்மிகு பிரம்மபுரீசுவரசாமி ஆலயம், சலிப்பேரி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 42 | .. | 0 42 |
| 54 அருள்மிகு வரதராஜபெருமாள் ஆலயம், புதுப்பத்தூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 40 | 0 40 |
| 55 அருள்மிகு விசுவநாதசாமி ஆலயம், பட்டமங்கலம், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 07 | 0 07 |
| 56 அருள்மிகு பின்னவனநாதசாமி ஆலயம், புதுப்பத்தூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 5 25 | 1 78 | 7 03 |
| 7 அருள்மிகு கைலாசநாதசாமி ஆலயம், விக்ரபாண்டியம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 48 | .. | 0 48 |
| 58 அருள்மிகு வரதராஜ பெருமாள் ஆலயம், விக்ரபாண்டியம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 28 | .. | 0 28 |
| 59 அருள்மிகு கோதண்டராமசாமி ஆலயம், சேதினிபுரம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 95 | .. | 1 95 |
| 60 அருள்மிகு வேதபுரீஸ்வரசாமி ஆலயம், புலிவலம், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 04 | 0 04 |
| 61 அருள்மிகு கைலாசநாதசாமி ஆலயம், அரசவனங்காடு, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 22 | .. | 0 22 |
| 62 அருள்மிகு வரதராசபெருமாள் ஆலயம், உபயவேதாந்தபுரம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 15 | .. | 0 15 |
| 63 அருள்மிகு கைலாசநாதசாமி ஆலயம், பெருமங்கலம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 03 | 0 06 | 0 09 |
| 4 அருள்மிகு சௌந்தரேஸ்வரசாமி ஆலயம், ரவிசேக்கால், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 74 | 0 67 | 2 41 |
| 65 அருள்மிகு சுந்தரேஸ்வரசாமி ஆலயம், தில்லைவிளாகம், திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | 9 47 | 0 50 | 9 97 |
| 66 அருள்மிகு வடிவழகியம்மன் ஆலயம், தில்லைவிளாகம், திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 05 | 0 05 |
| 67 அருள்மிகு ராஜகோபாலசாமி ஆலயம், அடியக்கமங்கலம், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 42 | 0 42 |
| 68 அருள்மிகு மாரியம்மன் ஆலயம், பெருமங்கலம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 49 | 0 03 | 1 52 |
| 69 அருள்மிகு பிரமபுரீஸ்வரர் ஆலயம், பொழக்குடி, நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 22 | .. | 0 22 |
| 70 அருள்மிகு வேதபுரீஸ்வரசாமி ஆலயம், மூலமங்கலம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 04 | .. | 0 04 |
| 71 அருள்மிகு வீரபத்திரசாமி ஆலயம், பேரளம், நன்னிலம் வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 1 60 | 1 60 |

| வரிசை எண்ணும், அறநிலையத்தின் பெயர், கிராமம், தாலுக்கா, மாவட்டம். | உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலங்கள் | | |
|---|---|---|---|
| | நஞ்சை ஏ. செ. | புஞ்சை ஏ. செ. | கூடுதல் ஏ. செ. |
| (1) | (2) | (3) | (4) |
| 72 அருள்மிகு மாரியம்மன் ஆலயம், ஆலங்காடு, திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 53 | 0 68 | 1 21 |
| 73 அருள்மிகு ராமலிங்கசாமி ஆலயம், கீழப்பிடாகை, நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 07 | 0 15 | 0 22 |
| 74 அருள்மிகு கைலாசநாதசாமி ஆலயம், கள்ளிமேடு, திருத்துறைப்பூண்டி வட்டம்' தஞ்சை மாவட்டம். | 1 01 | 0 45 | 1 46 |
| 75 அருள்மிகு சந்திரார்க்க சூடேஸ்வரசாமி ஆலயம், கல்லிக்குடி, நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 32 | 0 30 | 0 62 |
| 76 அருள்மிகு வரதராஜபெருமாள் ஆலயம், தப்ளாம்புலியூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 3 60 | 3 60 |
| 77 அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரசாமி ஆலயம், வேளூர், திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 20 | 0 25 | 1 45 |
| 78 அருள்மிகு காளகஸ்தீஸ்வரசாமி ஆலயம், கரும்பியர், திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 17 | .. | 0 17 |
| 79 அருள்மிகு நீனெறிநாதசாமி ஆலயம், கண்டலேச்சேரி, திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | 0 31 | .. | 0 31 |
| 80 அருள்மிகு வீரமாகாளியம்மன் கோயில், செங்கந்தி, திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 40 | .. | 1 40 |



| வரிசை எண்ணும், அறநிலையத்தின் பெயர், கிராமம், தாலுக்கா, மாவட்டம். | நஞ்சை ஏ. செ. | புஞ்சை ஏ. செ. | கூடுதல் ஏ. செ. |
|---|---|---|---|
| 81 அருள்மிகு நாகநாதசாமி ஆலயம், இடையூர், திருத்துறைப்பூண்டி வட்டம், தஞ்சை மாவட்டம். | .. | 0 41 | 0 41 |
| 82 அருள்மிகு ராமசுவாமி பெருமாள் ஆலயம், வயலூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 5 82 | 0 88 | 6 70 |
| 83 அருள்மிகு அகஸ்தீஸ்வரசாமி ஆலயம், பழையனூர், நாகை வட்டம், தஞ்சை மாவட்டம். | 1 18 | .. | 1 18 |
| | 95 01 | 622 42 | 717 43 |

## மாவட்டவாரியான விபரங்கள்

| வரிசை எண்ணும், மாவட்டம். | கோயில் உடைமைகளாக ஆக்கப்பெற்ற நிலங்கள் | | |
|---|---|---|---|
| | நஞ்சை ஏ. செ. | புஞ்சை ஏ. செ. | கூடுதல் ஏ. செ. |
| (1) | (2) | (3) | (4) |
| 1 கோவை .. .. .. .. .. .. | .. | 253 68 | 253 68 |
| 2 தஞ்சை .. .. .. .. .. .. | 95 01 | 19 98 | 144 99 |
| 3 மதுரை .. .. .. .. .. .. | .. | 345 83 | 345 83 |
| 4 இராமநாதபுரம் .. .. .. .. .. | .. | 0 04 | 0 04 |
| 5 திருச்சி .. .. .. .. .. .. | .. | 2 89 | 2 89 |
| ஆக கூடுதல் .. | 95 01 | 622 42 | 717 43 |

இணைப்பு-III.

[43ஆம் பக்கத்தில் இனம் 4-க்கான அடிக்குறிப்பைக்காண்க]

இணைப்பு-1

கடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண் விவரங்கள். (1) | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). (2) | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). (3) | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்). (4) | மூன்றுவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). (5) | 1973 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி (உத்தேசமாக). (6) |
|---|---|---|---|---|---|
| **உற்பத்தி.** | | | | | |
| 1. நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டில்) .. | 156 | 256 | 560 | 1,070 +300 (நெய்வேலி). | 1,571 +600 (நெய்வேலி). |
| 2. மின்சக்தி உச்சத் தேவை (மெகாவாட்டில்) .. | 110 | 17 | 381 | 717 | *1,190 |
| 3. உற்பத்தி செய்த மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (பத்து இலட்சம் யூனிட்டுகளில்). | 630 | 1053 | 2,214 | 4,041 | 6,964 |
| **அனுப்புதலும் வழங்குதலும்.** | | | | | |
| 1. உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 63,328 |
| 2. குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,78,605 |
| 3. கூடுதல் உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள். | 31 | 48 | 70 | 98 | 143 |
| 4. உயர் அழுத்த மின்சக்தி துணை நிலையங்கள் .. | 25 | 41 | 73 | 103 | 119 |
| 5. பங்கீட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 33,548 |
| 6. மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சக் கணக்கில்). | 2·5 | 4·3 | 7·7 | 13·6 | 25·45 |
| 7. நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்). | 12 | 21 | 60 | 92 | 133 |
| **கிராமங்களுக்கு மின்சார வசதி.** | | | | | |
| 1. மின்சார வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | †60,325 |
| 2. மின் இணைப்பு அளிக்கப்பட்டவேளாண்மை விசை யேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 | 2,56,594 | 6,49,241 |
| **செலவும் வருவாயும்.** | | | | | |
| 1. மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்) .. | 23·82 | 54·01 | 133·21 | 253·28 | 523.35 |
| 2. மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்) .. | 3·18 | 5·94 | 15·82 | 34·67 | ‡78·71 |

* 75 சத விகித மின்வெட்டின் விளைவாக நிறுத்த வைக்கப்பட்ட தேவையின் அளவு.

† தெரு விளக்கு கொண்டு மின்வசதி செய்யப்பட்டது.

‡ அரசு உதவித் தொகை நீங்கலாக, மத்திய நிதி சரிக்கட்டலையும் சேர்த்து.

இணைப்பு 2.

1969-70, 1970-71, 1971-72, 1972-73, 1973-74 ஆண்டுகளில் சேர்க்கப்பட்டுள்ள மின் திட்டங்களுக்கான செலவு (ரூபாய் இலட்சத்தில்).

| எண். (1) | திட்டத்தின் பெயர். (2) | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. (3) | 1970-71-ல் ஏற்பட்ட செலவு. (4) | 1971-72-ல் ஏற்பட்ட செலவு. (5) | 1972-73-க்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. (6) | 1972-73-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு. (7) | 1972-73-ம் ஆண்டில் ஏற்பட்ட செலவு. (உத்தேசமாக). (8) | 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | உற்பத்தித் திட்டங்கள்—தொடர்ந்து வரும் திட்டங்கள். | | | | | | | |
| 1. | குந்தா நீர் மின்சாரத் திட்டம் 3-ம் நிலை. | —35·23 | 7·56 | 25·21 | 27·59 | 4·84 | —3·78 | 13·25 |
| 2. | பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின்சாரத் திட்டம். | 1,41·29 | 1,60·99 | 51·97 | —60·03 | 57·92 | 71·72 | 63·18 |
| 3. | கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் .. | 2,73·98 | 2,03·39 | 78·90 | —25·76 | 45·72 | 32·77 | 81·51 |
| 4. | சென்னை மின்சார நிலையம் விரிவுபடுத்துதல் 4-ம் நிலை. | 80·77 | 43·37 | 36·22 | 9·94 | 24·68 | 44·18 | 0·01 |
| 5. | எண்ணூர் அனல் மின் நிலையம் .. | 17,41·99 | 4,61·01 | 3,31·28 | 3,39·06 | 4,24·33 | 4,16·84 | 5,12·67 |
| 6 | எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்துதல். | .. | 50·00 | 67·10 | 2,18·53 | 2,93·26 | 2,99·11 | 11,65·77 |
| 7. | பாண்டியாறு புன்னம்புழா நீர் மின் திட்டம். | 44·29 | 7·02 | —33·09 | —1·84 | 3·70 | —0·96 | 10·00 |
| 8. | குந்தா நீர் மின் திட்டம் 4-ம் நிலை .. | .. | .. | .. | 50·00 | 75·00 | 74·42 | 1,00·00 |
| | புதிய திட்டங்கள். | | | | | | | |
| 1. | நடுவட்டம் நீர்த்திருப்புத் திட்டம் .. | 5·12 | 13·95 | 56·96 | 35·88 | 51·91 | 55·11 | 53·61 |
| 2. | சோழட்டிப்புழா நீர் மின் திட்டம் .. | .. | .. | | 5·00 | 0·001 | .. | .. |
| 3. | காடம்பாறை நீர் மின் திட்டம் .. .. | .. | .. | 0·73 | 5·00 | 11·50 | 4·03 | 1,50,003 |
| 4. | மேல் தாமிரவருணி நீர் மின் திட்டத்தின் கீழ் சேர்வலாறு மின் நிலையம். | .. | 0·95 | 12·15 | 15·61 | 25·24 | 33·70 | 25·00 |
| 5. | நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. | .. | 2·12 | 19·35 | 29·39 | 21·43 | 13·39 | 20·00 |
| 6. | பரளியாறு நீர் மின் திட்டம் .. .. | .. | .. | .. | 5·00 | .. | .. | 5·00 |
| 7. | சுருளியாறு நீர் மின் திட்டம் .. | .. | 0·80 | 20·04 | 50·00 | 50·00 | 66·92 | 2,00·00 |
| 8. | தூத்துக்குடியிலும், மேட்டூர் அணையிலும் அனல் மின் நிலையங்கள் அமைத்தல். | .. | .. | .. | 100·00 | .. | .. | 1,00·00 |
| | மொத்தம்—1. உற்பத்தித் திட்டங்கள் .. | 22,52·21 | 9,51·66 | 6,66·82 | 7,03·37 | 14,94·56 | 11,07·45 | 25,00·00 |
| | மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 5,79·07 | 10,98·85 | 7,89·03 | 10,00·00 | 11,00·00 | 9,53·22 | 11,00·0 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல் .. | 8,75·00 | 8,75·00 | 8,75·00 | 13,00·00 | 16,50·00 | 14,00·00 | 6,50·00 |
| | மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல் | —0·10 | 74·01 | 0·28 | 50·00 | 50·00 | 53·29 | 50·00 |
| | புதுத் திட்டங்கள் குறித்து ஆய்வு .. .. | 4·75 | 13·03 | 10·62 | 10·50 | 14·90 | 14·90 | 12·50 |
| | மின்சக்தி நிறுவனம்—ஆராய்ச்சிகள் .. | 0·33 | 0·48 | 0·56 | 2·00 | 2·00 | 1·02 | 3·00 |
| | மொத்தம்—1-லிருந்து 6 வரை .. | 37,11·26 | 30,13·03 | 23,42·31 | 30,65·87 | 43,11·46 | 35,29·88 | 43,14·50 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டத்தில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | 4,95·50 | 10,49·09 | 17,72·58 | 5,00·00 | .. | 6,89·87 | .. |
| | பெரு மொத்தம் .. | 42,06·76 | 40,62·12 | 41,14·89 | 35,65·87 | 43,11·46 | 42,19·75 | 43,14·50 |

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, இப்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு பள்ளித் துணை ஆய்வாளர் என்று ஏற்படுத்தும் போது, அவர்களை கெஸடெட் அந்தஸ்துக்கு உயர்த்துவதுபற்றி பரிசீலனை இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. எனவே அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பள்ளிகளைக் கவனிப்பதற்கு என்று கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள், 'எக்ஸ்டென்ஷன்' அதிகாரிகள் இருக்கின்றார்கள். கல்வி இலாகாவில் ஏற்கெனவே கல்வித் துணை ஆய்வாளர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் இருவருமே இப்போது அநேகமாக மாறுபட்ட நிலையில் இல்லாமல் ஒரேவிதமான ஆய்வுகளைத்தான் மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். இப்படி இந்த இரண்டு அதிகாரிகளுக்குமே வேலைகளைப் பகிர்ந்து அளிக்காமல் இருக்கும்போது, இதில் யாராவது ஒருவர் ஊராட்சி ஒன்றியங்களின்கீழ் உள்ள பள்ளிகள் சம்பந்தப்பட்ட அலுவல்களைக் கவனிக்க ஏற்பாடு செய்யும் வகையில் ஏதாவது செயற்குறிப்பு அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்த விஷயத்தில் அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும் என்ற கருத்து அடிக்கடி தெரிவிக்கப்பட்டு வருகின்றது. இதுபற்றி அரசும் ஆராய்ந்து வருகின்றது. ஆராய்ந்து அதுபற்றித் தக்க முடிவெடுத்த பின்னர், அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்படும்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, பள்ளித் துணை ஆய்வாளர்கள் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒருவர் வீதம் இருக்கின்றனரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே கல்வி விரிவு அதிகாரி என்று ஒருவர் இருக்கிறார். இப்போது நாம் குறிப்பிடுவது பள்ளித் துணை ஆய்வாளர்களைப் பற்றியதாகும்.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இப்போதுள்ள நிலையில், பள்ளித் துணை ஆய்வாளர்கள் பள்ளிகளை காலாகாலத்தில் ஆய்வு செய்ய முடியவில்லை. பள்ளிகளில் கல்வியின் தரம் குறைந்திருக்கின்றது என்ற நிலை இன்று இருக்கும்





போது, இப்போதுள்ள நிலையில் ஆண்டிற்கு ஒரு முறைதான் ஒரு பள்ளியை ஆய்வு செய்ய முடிகின்றது என்ற நிலை இருக்கும்போது, இந்த ஆய்வுகளை அதிகப்படுத்த முடியுமா என்று அரசு ஆராயுமா, இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நமது மாநிலத்தில் கல்வி நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதன் காரணமாக, பள்ளித் துணை ஆய்வாளர்களின் எண்ணிக்கையும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒருவர் என்ற வீதத்தில் இருக்க வேண்டும் என்பது கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே இந்த ஆய்வுகள் அடிக்கடி நடைபெற வேண்டும், மிகச் சிறப்பாகவும் விரைவாகவும் நடைபெற வேண்டும் என்பதுதான் அரசின் எண்ணம். அதற்கு ஏற்றபடி அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்பட வேண்டும் என்பதில் அரசு கவனம் செலுத்தி வருகின்றது என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. எஸ். வி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்:** தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்த வரையில், இப்போது அங்கே கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகள் இருக்கின்றார்கள். இவர்களைத் தவிர ஒன்றியங்களிலுள்ள பள்ளிகளை ஆய்வு செய்ய பள்ளித் துணை ஆய்வாளர்களும் இருக்கின்றார்கள். இப்படி ஒரே கல்வி நிலையத்தை ஆய்வு செய்வதற்கு இரண்டு அதிகாரிகள் தேவைதானா, இதில் சிக்கனத்தை முன்னிட்டு இதை ஒன்றுபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இதுபற்றி முதலிலேயே குறிப்பிட்டேன். இந்த இரு அதிகாரிகளுடைய பணிகள் எந்தெந்த முறையில் வரையறுக்கப்படலாம் என்பதுபற்றி கல்வித் துறை ஆராய்ந்து வருகின்றது. ஆராய்ந்து முடிவெடுத்த பின்னர், அவர்களுடைய பணிகள் வரையறுக்கப்படும்.

### *Revised Percentage of Grant to Aided Training Colleges*

* 34 *Q.*—THIRU SAW GANESAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether G.O. Ms. No. 575, Education, dated 2nd May 1972 laying down revised percentage of grant to Aided Arts and Science Colleges will apply to Aided Training Colleges also; and

(*b*) if not, the reasons therefor ?

# தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை

**வியாழக்கிழமை, 1973 நவம்பர் 22**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை **மண்டபத்தில்** பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் **தலைவர்** (**திரு. சி. பி.** சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

*Deputy Inspector of Schools in each Panchayat Union*

* 33. *Q.*—Thiru S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to open offices of the Deputy Inspector of Schools in each Panchayat Union in the larger interest of education; and

(*b*) if so, when such offices will be opened ?

**ஊராட்சி ஒன்றியத்திற்கொரு பள்ளித் துணை ஆய்வாளர்**

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் **கீழ்க்** கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வியின் பயன் கருதி, பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகங்களை ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்றாக, திறக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், அது எப்போது செயல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு தனி பள்ளித் துணை ஆய்வாளர் அலுவலகம் திறப்பதற்கான கோரிக்கை கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. இருப்பினும் நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

[1973 நவம்பர் 22

**மானியம் பெறும் பயிற்சிக் கல்லூரிகளுக்குத் திருத்த மானிய விதம்**

**திரு. சா. கணேசன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்வித் துறையின் 2—5—1972 ஆம் நாளிட்ட 575 ஆம் எண் அரசாணையில், மானியம் பெறும் கலைக் கல்லூரிகளுக்கும், அறிவியற் கல்லூரிகளுக்கும் விதிக்கப்பட்டுள்ள திருத்த மானிய விதம், மானியம் பெறும் பயிற்சிக் கல்லூரிகளுக்கும் பொருந்துமா?

(இ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்த அரசு ஆணை உதவி பெறும் பயிற்சிக் கல்லூரிகளுக்கு தற்போது பொருந்தாது. தனியார் பள்ளிகளுக்கான கட்டணங்களை வசூலிப்பது கல்லூரிக்குக் கல்லூரி வேறுபட்டு வருகின்றது. ஆகவே குறிப்பிட்டுள்ள அந்த ஆணை தனியார் பயிற்சிக் கல்லூரிகளுக்கு வறபுறுத்தப்படுவதில்லை.

**திரு. சா. கணேசன்:** தலைவரவர்களே, கலைக் கல்லூரிகளுக்கும் அறிவியல் கல்லூரிகளுக்கும் கொடுக்கப்படும் மானியத்தை, அதைவிட அதிகப்படியான கல்வைட். செலுத்தி ஆசிரியர்களைப் பயிற்சி செய்யக்கூடிய தனியார் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கு, மறுப்பது நியாயம் தானா, பொருத்தமானதுதானா, அதனால் ஏதேனும் நன்மையுண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இத்தகைய வேறுபாடுகள் இருப்பதன் காரணமாகத்தான் இந்த அரசு ஆணை அதற்குப் பொருந்தாது என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு விதமான கட்டணத்தை விதித்திருக்கின்றார்கள். சில கல்லூரிகளைப் பொறுத்த வரையில், கட்டணமே இல்லாமல் இருக்கின்றது. இதையெல்லாம் ஒருநிலைப் படுத்த வேண்டும் என்ற கொள்கைதான் கொள்ளப்பட்டிருக்கின்றது. அந்த நிலையில்தான் இந்தப் புதிய உத்தரவு இந்தக் கல்லூரிகளுக்குப் பொருந்தாமல் இருக்கின்றது. விரைவில் இதுபற்றி ஆராய்ந்து தக்க முடிவெடுக்கப்படும் என்று மட்டும் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** தலைவரவர்களே, பெரும்பாலான ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஆண்டிற்கு 'ஸ்பெஷல் ஃபீஸ்' ரூபாய் 75, 80, 90 என்று வாங்குகின்றதைத் தவிர வேறு கட்டணமே வாங்குகின்றதில்லை என்பதை அரசு நன்கு அறியும் என்று கருதுகிறேன். எனவே இப்படிக் கட்டணமே இல்லாத



1973 நவம்பர் 22]

ஆசிரியர்களைப் பயிற்சிவிக்கின்ற பொறுப்பு மிக்க அப்படிப்பட்ட கல்லூரிகளுக்கு—அதிலும் இப்படிப்பட்ட கல்லூரிகள் நமது மாநிலத்தில் மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கின்றன என்ற நிலைமையில்—இந்தச் சலுகையை அளிக்கும் வகையில் இதைப் பரிசிலித்துத் தக்க முடிவெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இது தனியாகக் கவனிக்கப்பட வேண்டும் என்ற முறையில்தான் இந்த ஆணை அதற்குச் செல்லாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபற்றி மேலும் தனியாக ஆராயப்பட்டு வருகின்றது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, கலைக் கல்லூரிகள், அறிவியல் கல்லூரிகள், இவற்றின் நிர்வாகத்தினரெல்லாம் இந்த அரசு ஆணை 575-ன் படி இதற்கு முன்னால் இருந்த மூன்றில் இரண்டு பங்கு கிராண்டு கொடுக்கும் காலத்தில் ரூபாய் 240 கட்டணம் வாங்கினாலும் அரசாங்கக் கணக்கில் ரூ. 90 வரவு என்று கணக்கிட்டு, அதைத்தான் வரவாகக் கொண்டு கிராண்டு வழங்கியது. நிர்வாகத்தினருக்கு இதற்கு முந்தைய ஆணைதான் நன்மை பயக்கக்கூடியதாக இருப்பதாகவும் இப்போதுள்ள இந்த ஆணை நன்மை பயக்கக்கூடியதாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சிக் கல்லூரிகளுக்கு முந்தைய ஆணை பயனுள்ளதாக இருக்கின்றது. எனவே பாதிக்கப்பட்டுள்ள இந்த நிலைமைகளை அறிந்து இதற்கு வேண்டியதைச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே 'நோஷனல்' என்று வைத்துக் கொண்டு உண்மையாக வாங்கும் பணம் ஒன்றாகவும் எழுதும் பணம் வேறு ஒன்றாகவும் இருப்பதால், அது எந்த வகையிலும் பொருந்தாது, நியாயத்தின் அடிப்படையில் அது அமைய வேண்டும் என்பதற்காக ஒவ்வொரு கல்லூரிக்கும் எவ்வளவு வரவு, எவ்வளவு செலவு என்பதையெல்லாம் பார்த்து, அதற்குப் பிறகு பற்றாக்குறை இருந்தால், அதில் ஒரு பகுதியை, 80 சதவிகிதத்தை அரசு கொடுக்கும் என்ற முறை வைக்கப்பட்டிருக்கின்றது. இதை மற்ற பயிற்சிக் கல்லூரிகளுக்கும் விரிவுபடுத்துவதுபற்றித்தான் இப்போது நம் முன்னுள்ள கேள்வி. இந்தப் பயிற்சிக் கல்லூரிகளும் பல்வேறு விதமாக இருப்பதால், அதுபற்றி ஆராய்ந்து அதைக் கொண்டுவருவதற்கான முறையில் அரசாங்கம் சிந்தித்து வருகின்றது. ஆராய்ந்த பின்னர் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

## *Vacancies of High School Assistants*

* 35. *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that vacancies of High School Assistants in ' B ' Wing schools in Chingleput District, for the academic year 1972–73, have not been filled up till August 1972;

(*b*) if so, the number of vacancies, and

(*c*) the reasons therefor?

### காலியாகவுள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பதவியிடங்கள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், 'பி' (B) பிரிவுப் பள்ளிகளில் 1972-73 கல்வியாண்டில் காலியாகவுள்ள உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் பதவியிடங்கள் 1972 ஆகஸ்டு திங்கள் வரையிலும் நிரப்பப்படாமல் உள்ளன என்பது உண்மையா?

(இ) ஆமெனில், காலியிடங்கள் எத்தனை?

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) 167 பணியிடங்கள்.

(உ) இவற்றிற்கு மாவட்ட வேலை தேடித்தரும் நிலையத்தாரால் அனுப்பப்பட்ட விண்ணப்பதாரர்களை நேரடித் தேர்வு நடத்தி, 6—8—1972-ல் 157 பேர்களை சென்னை முதன்மைக்கல்வி அலுவலர் நியமனம் செய்தார். மீதியுள்ள 10 கணக்கு ஆசிரியர் பதவிக்கு தகுதியானவர்கள் கிடைக்காததால், முழுத் தகுதியில்லாதவர்களால் 15—9—1972-ல் கணக்கு ஆசிரியர் பதவிகள் நிறைவு செய்யப்பட்டன.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, பள்ளிகளில் காலி இடங்கள் ஏற்படும்போது, அதைக் கணக்கிட்டு பின்னர் அதுபற்றி மாநில அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு, பின்னர் போஸ்ட்டுகள் 'ஸாங்ஷன்' செய்யப்பட்டு, இதற்குப் பின்னர் அந்தப் பள்ளிகளிலுள்ள காலி ஸ்தானங்களுக்கு ஆசிரியர்களைப் போடுவது என்ற நிலையில் காலி இடங்களை நிரப்புவதில் பெரும் காலதாமதம் ஆகின்றது. இதைத் தவிர்க்க பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்த்தவுடன், அதாவது ஜூன் மாத இறுதிக்குள் காலி இடங்களுக்கு ஆசிரியர்களை





நியமிப்பதற்கான நடவடிக்கைகள் முடிந்து பள்ளி திறக்கும்போது காலிஇடங்கள் நிரப்பப்படும் நிலையை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இதை உணர்ந்துதான், பள்ளிகள் ஜூன் திங்களிலேயே திறந்துவிடுவதன் காரணமாக, காலி ஸ்தானங்களின் எண்ணிக்கையை முன் கூட்டியே ஆராய்ந்து, பள்ளிகள் திறக்கப்பட்ட ஒரு திங்களுக்குள் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று இப்போது கூறப்பட்டுள்ளது. 24—6—1972-க்குப் பிறகு இதுபற்றிச் சொல்லப்பட்டு, நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்கு என ஒரு மாதம், பிறகு தேர்ந்தெடுப்பதற்கு ஒரு மாதம் என்று வீண் காலதாமதம் வேண்டாம் என்று சொல்லப்பட்டுள்ளது. இதுபற்றிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு விரைவில் இதை நிறைவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. வி. வெங்கா : மாண்புமிகு தலைவரவர்களே, முதன்மைக் கல்வி அதிகாரி இவ்வளவு ஆசிரியர்கள் தேவை என்று கணக்கிட்டு பின்னர் வேலை தேடித்தரும் ஸ்தாபனத்திற்கு எழுதி இவ்வளவு ஆசிரியர்கள் தேவை என்று கேட்கும் நேரத்தில், அவர்கள் சிலரை அனுப்புகின்றார்கள். அவர்களில் பலர் தகுதி பெறாதவர்கள் என்று கருதி, அவர்கள் வேண்டாமென்று திருப்பி அனுப்பப்பட்டு, பின்னர் தேர்வு பெறாத ஆசிரியர்களையும் நியமிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அதற்காக மீண்டும் ஒரு முறை வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தை அணுக வேண்டியுள்ளது. எனவே முதன்முறை அவர்களுக்கு எழுதும் நேரத்திலேயே தேர்வுபெற்றவர்கள் தேர்வு பெறாதவர்கள், ஆக இவர்கள் இருவரையுமே அனுப்புங்கள் என்று எழுதினால், இதில் ஓரளவிற்கு ஏற்படக்கூடிய கால தாமதத்தைத் தவிர்க்க முடியும் என்று கருதி, அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நாம் முதலில் கேட்கிறபோது, தேர்வு பெற்றவர்களுடைய பட்டியலை அனுப்பி வையுங்கள் என்று தான் கேட்க முடியும். அவர்களிலே போதுமான அளவிற்கு எடுத்துக்கொண்ட பிறகும், இடங்கள் காலியாக இருக்குமானால், தேர்வு பெறாதவர்களின் பட்டியலைக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. முதலில் இரண்டு பட்டியலையும் தாருங்கள் என்று கேட்பது முறையாக இருக்காது.

## *Organisation and Methods Cell in the Secretariat*

*31 Q.—THIRUVALARGAL V. ISVARMURTI AND M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the State Government have set up an Organisation and Methods Cell in the Secretariat; and

(b) if so, the details thereof?

### தலைமைச் செயலகத்தில் நிர்வாக அமைப்பு—நடைமுறைப் பிரிவு

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி & திரு. எம். ஆறுமுகசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) தலைமைச் செயலகத்தில் நிர்வாக அமைப்பு-நடைமுறைப் பிரிவு ஒன்றை மாநில அரசு அமைத்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) ஆம்.

(இ) நிதித் துறையின்கீழ், நிர்வாக அமைப்பு நடைமுறைகள் பிரிவு ஒன்றை அரசு அமைத்துள்ளது. இப்பிரிவு, முதுநிலைப் பகுப்பாய்வாளர் இருவர், நேரிடப் பணிப் பகுப்பாய்வாளர் ஐவர், செலவுப் புள்ளி விவாக் கணக்கு அதிகாரி ஒருவர் ஆகியோருடனும் அவசியமான துணைப்பணியாளர்களுடனும் செயல்பட்டு வருகிறது. பின்னர், இந்தக் குழுவுடன், முதுநிலைப் பகுப்பாய்வாளர்—நிர்வாகப் பொறியாளர் ஒருவர், ஒரு உதவிப் பொறியாளர், நேரிடப் பணிப் பகுப்பாய்வாளர்—வரையாளர் ஒருவர் ஆகியோரடங்கிய பொறியியல் பிரிவு ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. நிர்வாக நடைமுறைகளையும், பழக்கங்களையும் ஆராய்ந்து, அரசுத் துறைகளில் பின்பற்றும் நடைமுறைகளைச் சீரமைப்பதற்கான வழிவகைகளைக் குறித்து ஆலோசனை நல்கவும், இயலும் இடங்களிலெல்லாம் சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு செய்வதற்கும் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவு, "செயல் திட்ட மதிப்பீடு" போன்ற பொறியியல் குறித்த ஆய்வுகளை மேற்கொள்கிறது. ஐதராபாத்திலுள்ள நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் ஆலோசனை செய்முறை ஆராய்ச்சிப் பிரிவால், நிர்வாக அமைப்பு நடைமுறைகள் பற்றிய கோட்பாடுகளிலும், செயல்முறைகளிலும் இக்குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. "செயல் திட்ட மதிப்பிடுதல்—மறு ஆய்வு உத்தி" ( PERT பொருள் நிர்வாகம்" ( Materials Management ) குறித்து தேசிய உற்பத்தித்திறன் குழு நடத்தும் பயிற்சிகளிலும் இவர்கள் பயிற்சி



யளிக்கப்பட்டுள்ளார்கள். இப்பிரிவு அரசின் பல்வேறு துறைகள் குறிப்பிட்டுள்ள பல திட்டங்களில் ஏற்கனவே ஆராய்ச்சிகள் நடத்தி, அறிக்கைகளை அனுப்பியுள்ளது. ஆய்வுக்காகக் கூடுதலாகப் பல திட்டங்களை இப்பிரிவு எடுத்துக்கொண்டுள்ளது. இந்த ஆய்வுப்பணிகள் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அளித்த விடை விரிவாக இருக்கிறது. ஆனால் தெளிவாக ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை. சுருக்கமாகத் தெரிந்துகொள்ள விரும்புவது, இதனால் நிர்வாகச் சிக்கனம் ஏற்படுமா, நிர்வாகச் சிக்கனம் உண்டாக்குவதற்காகத் தான் இந்தக் குழு செயல்படுகிறதா என்று அறிந்துகொள்ள விரும்புவதோடு, இப்போது நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன் என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது, அந்தக் கமிஷன் இதன் ஆலோசனையின் பேரில் தான் அமைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சப்ளிமெண்டரி சுருக்கமாக இருக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் அறிய விரும்புவது, இந்த அமைப்பின் மூலமாக சிக்கனம் கடைப்பிடிக்கப்படுமாவென்பது. சிக்கனமான முறையில் காரியங்கள் நடைபெற வேண்டுமென்ற அடிப்படையிலும், நவீன நிர்வாக அமைப்பு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற அடிப்படையிலும் தான் 1—8—1970-லிருந்து நிதித் துறையிலே இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு அதனுடைய செயல் முறைகள் இப்போது வடிவம் பெற்று வருகின்றன. அதனுடைய சிபாரிசுகள் பலவற்றை இந்த அரசாங்கம் நிறைவேற்றியும், சிலவற்றைப் பரிசீலித்துக்கொண்டும் இருக்கிறது.

## *Economy in Government Departments*

*32 Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that a High Level Committee was appointed by the Government to effect economy in Government Departments; and

(b) if so, the recommendations of the above Committee?

[1973 நவம்பர் 22

## அரசுத் துறைகளில் சிக்கனம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) அரசுத் துறைகளில் சிக்கனம் ஏற்படுத்த வேண்டி அரசு உயர் மட்டக் குழு ஒன்றை நியமித்தது உண்மையா ?

(இ) ஆமெனில், மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) அரசின் பல்வேறு துறைகளின் நடைமுறைகளைச் சீரமைத்து சிக்கனத்தைக் கடைப்பிடிக்க நடத்தும் ஆராய்ச்சிகளில் நவீன நிர்வாக அமைப்பு நடைமுறைகள் பற்றிய கோட்பாடுகள் பின்பற்றப்படவேண்டும் என்று உயர்நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த ஆராய்ச்சிகளை நடத்தும் பொருட்டு அரசு 1—8—1970-லிருந்து நிதித் துறையில் நிர்வாக அமைப்பு நடைமுறைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்த உயர்நிலைக் குழு இதுவரை ஐந்துமுறை கூடி நிர்வாக அமைப்பு நடைமுறைகள் குழு அனுப்பிய பதினாறு அறிக்கைகளின்பேரில் முடிவு எடுத்துள்ளது. அவ்வப்போது நிர்வாக அமைப்பு நடைமுறைகள் குழு அனுப்பும் அறிக்கைகளைக் கருதிப் பார்த்து ஆய்வுக்கான புதிய துறைகளைச் சுட்டிக் காட்டவும் இக்குழு அவ்வப்போது கூடும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, துணைக் கேள்வி கேட்பதற்கு முன்னாலே ஒன்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்தக் கேள்வியை நான் 5—6—1970ல் அனுப்பினேன். 3½ ஆண்டுக் காலம் பதில் வருவதற்கு ஆகியிருக்கிறது. இன்னொரு கேள்வியைப் பார்க்கிறேன். 5½ ஆண்டுக் காலம் ஆகியிருக்கிறது. இதைப் பார்க்கும்போது, என்னுடைய பதவிக் காலம் முடிந்த பிறகு தான், என் கேள்விகளுக்குப் பதில் வரும்போல் இருக்கிறது.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** உங்கள் பதவிக் காலம் எப்போது முடிவடைகிறது ?

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, ஏப்ரல் மாதத்தில் முடிகிறது. அதற்குள்ளாக பதில்களை எதிர்பார்க்கிறேன்.

இந்தக் கேள்வியைப் பொறுத்து, சிக்கனம் ஏற்பட வேண்டுமென்பதற்காக உயர் மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குழு யாருடைய தலைமையில் இயங்குகிறது ? யார் அந்தக் குழுவினுடைய



1973 நவம்பர் 22]

உறுப்பினர்கள் ? எந்தத் துறையிலே சிக்கனம் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தின்படி இந்தக் குழு அமைக்கப்பட்டது ? அப்படி கடந்த 3½ ஆண்டுக் காலத்தில் அரசாங்கத் துறையிலே ஏதாவது சிக்கனம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இதனுடைய தலைவராக தலைமைச் செயலாளர் இருக்கிறார்—கேள்வி கேட்டு விட்டு கவனிக்காமல் இருந்தால் எப்படி—தலைமைச் செயலாளர் இந்தக் குழுவின் தலைவராக இருக்கிறார். அப்போது கூட்டுத் தலைமைச் செயலாளர் உறுப்பினராக இருந்தார். இப்போது அவர் இல்லை. நிதிச் செயலாளர் உறுப்பினராக இருக்கிறார். நிதித் துறைத் துணைச் செயலாளர் இதில் செயலாளராகப் பணி புரிகிறார். எந்தத் துறை சம்பந்தமாக பிரச்சினை வந்தாலும், அந்தத் துறையினுடைய செயலாளர் அந்த நேரத்தில் குழுக் கூட்டங்களின் போது உடன் இருக்கிறார். அப்படி நிர்வாகத் துறைக்கும் நிதித் துறைக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, நிதித் துறைச் செயலாளர் தன்னுடைய இசைவை அளிக்காதபோது அப்படிப்பட்ட செயற் குறிப்புகளின் மீது உயர்நிலைக் குழு முடிவுகளை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்த அமைப்பின் மூலமாக ஓரளவு சிக்கனம் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது என்றே அரசு கருதுகிறது.

**திரு. கே. ராஜாராம் :** தலைவரவர்களே, இந்தக் குழுவின் பரிந்துரைகள் ஏதேனும் அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்கின்றனவா ? இதனால் அரசாங்கத்திற்கு நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றனவா ? உருப்படியான சிக்கனம் ஏதேனும் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நான் இரண்டு கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொண்டிருக்கலாம். இதன் தொடர்பாக அமைக்கப்பட்டுள்ள, முதல் கேள்விக்குப் பதில் சொன்னேனே, அந்தக் குழு பல சிபாரிசுகளைச் செய்து, அவர்களுடைய பரிந்துரைகளெல்லாம் ஏற்கப்பட்டிருக்கின்றன. பொதுவாக ஊராட்சி ஒன்றியங்களில் நடைமுறைகளையும், கணக்கிடு முறைகளையும் சுருக்கமாக்குதல் பற்றி ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இது அரசால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அரசு மருத்துவ மனைகள் மருந்துப் பண்டங்களை மத்திய அமைப்பின் மூலமாக வாங்குவதற்கான பரிந்துரை வழங்கப்பட்டு, அதுவும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. குழுவால் இப்படி 16க்கு மேற்பட்ட விஷயங்களில் பரிந்துரைகள் செய்யப்பட்டிருக்கின்றன. அவைகளெல்லாம் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், பரிசீலனை செய்யப்பட்டும் வருகின்றன,

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, பரிந்துரைகளை அங்கத்தினர்கள் கவனத்திற்கு அவைமுன் வைக்க முடியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, பரிந்துரைகள்பற்றி தனியாகக் கேள்வி கேட்கப்பட்டிருந்தால், விவர அறிக்கை வைக்கப்பட்டிருக்கும். இப்போதும் எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கோரிக்கைக்கு இணங்க அறிக்கை வைப்பதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அலுவலகங்களில் தேவைக்கு அதிகமான ஊழியர்கள் அப்போதே இருக்கிறார்கள் என்றும், அவர்களைக் குறைப்பது பற்றியும், இனிமேல் நியமிப்பது பற்றியும் குழு ஆராயும் என்று சொல்லப்பட்டது. அப்படி அதிகமாக உள்ள ஊழியர்களைக் குறைத்தார்களா, அதற்கு மேல் நியமிப்பதை நிறுத்தியுள்ளார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, குறைப்பது என்றால், இருப்பவர்களையெல்லாம் விலக்கி விடுவது என்ற அடிப்படையிலே இந்தக் குழு அமைக்கப்படவில்லை. இனிமேல் பணிகளுக்கு அலுவலர்களை எடுக்கிற நேரத்தில் சீராகவும், தேவைப்படுகிற அளவிற்கும் எடுப்பதற்கு ஏற்ற சிக்கன முறைகளையெல்லாம் கடைப்பிடிக்க வேண்டுமென்ற வகையிலே தான் குழு ஆராய்ந்து வருகிறது. இந்த வகையிலே குழு செயல்பட்டு வருகிறது.

## *Kannagi Temple at Surulimalai*

* 36 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Education be pleased to state the present stage of the action taken by the Government to find out the age of Kannagi Temple at Surulimalai?

### சுருளிமலை கண்ணகி கோவில்.

**திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சுருளிமலை கண்ணகி கோவில் எத்தனை ஆண்டுகளுக்கு முந்திய கோவில் என்று அறிய அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை எந்த நிலையில் இருக்கிறது?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழ் நாட்டின் எல்லைக் கருகில் கேரள மாநிலத்தில் சுருளிமலைத் தொடரில் காணப்படும் பாழடைந்த கோவில் வரலாற்றுப்புகழ் பெற்ற கண்ணகியின் கோயிலாக இருக்கலாமென நம்ப இடமுள்ளது என்று கூறப்படுகிறது. இக் கோயிலை புதுப்பித்துச் சிறப்பிக்க இதை தமிழக அரசிடம் ஒப்படைக்கக் கோரி கேரள மாநில அரசுடன் இவ்வரசு தொடர்பு கொண்டுள்ளது. கேரள அரசின் இறுதியான பதில் இன்னும் கிட்டவில்லை.

**திரு. சா. கணேசன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே கேரள அரசு அந்த ஆலயத்தை நாங்களே புனருத்தாரணம் செய்து நிர்வகித்து செயல்படுவோம், இதில் தமிழக அரசுக்குத் தொடர்பு வேண்டாமென்பது போல கருத்து தெரிவித்து விட்டதாக பல பத்திரிகைகளில் கிட்டத்தட்ட 6 மாதம் அல்லது ஒரு ஆண்டுக்கு முன்னமேயே வெளி வந்தனவே, இது பற்றி ஏதாவது செய்தி அரசிடம் இருக்கிறதா, இதற்கு மேல் ஏதாவது அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, நமது மாநில முதல்வர் அவர்கள், கேரள மாநில முதல்வரவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். இந்தக் கோயிலைத் தமிழக அரசிடம் ஒப்படைத்தால், அது மேற்கொண்டு ஆராய்ச்சி செய்யும், அதைப் பாதுகாக்கும் என்று எழுதினார்கள். அவர்கள் ஆராய்ந்து அதிலே வேறு விதமான சரித்திரம் இருக்கிறதென்று தாங்களே பார்ப்பதாகச் சொன்னார்கள். மறுபடியும் நமது முதல்வரவர்கள், அதிலே வட்ட எழுத்துக்கள் இருக்கின்றன, தமிழகத்தினுடைய தொல்பொருள் ஆராய்ச்சியினர் சென்று ஆராய்ந்தால் இது பற்றிய முழு விவரங்கள் கிடைக்கக் கூடும், ஆகவே ஒப்படைத்தால் நலமாக இருக்குமென்று மீண்டும் வலியுறுத்தி எழுதியிருக்கிறார்கள். அதற்குக் கேரள அரசிடமிருந்து இன்னும் பதில் வரவில்லை.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, மதுரையிலே செல்லத்தம்மன் கோயில் தான் உண்மையான கண்ணகி கோயில் என்பதற்கு வரலாறு உண்டு. அது தான் கண்ணகி கோயில் என்பதை அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறதா அல்லது, புதிதாக கேரளாவில் இப்போது பிரச்சினையாக உள்ள கோயில் தான் கண்ணகி கோயில் என்று முடிவெடுத்திருக்கிறதா? இது பற்றி அரசின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இதிலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. தஞ்சைக் கரந்தைத் தமிழ்ப் புலவர் கோவிந்தராஜன் அவர்கள் இது கண்ணகி கோயிலாக இருக்கக் கூடும்

என்று யூகித்துச் சொல்கிறார்கள். ஏனென்றால், சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்காக கல் எடுத்தது வஞ்சிமா நகரில் என்பது தான் சிலப்பதிகாரத்தில் இருப்பது. வஞ்சிமா நகர் எது என்பதிலே புலவர்களிடத்திலே பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. கண்ணகி உயிர் விட்ட இடம் அதுவாக இருக்கும், அந்த இடத்திலே கண்ணகியின் நினைவாகக் கட்டப்பட்டிருக்கும் என்று புலவர்களிடையே வேறு ஒரு கருத்து இருக்கிறது. ஆகவே எல்லாக் கருத்துக்களிலும் எந்தக் கருத்து உண்மையான கருத்து என்று கண்டுபிடிப்பதற்கு இன்னும் மேற்கொண்டு ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியிருக்கிறது. அந்த ஆராய்ச்சியை தொல் பொருள் ஆராய்ச்சியினர் மேற்கொள்வார்களானால், உண்மையான ஒளி நமக்குக் கிடைக்கக் கூடும். ஆகவே தான் தமிழக அரசு அந்த இடத்தைத் தங்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்று கேரள அரசைக் கேட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கல்வெட்டினுடைய புகைப் படங்கள் எடுக்கப்பட்டுள்ளனவா ? அப்படியெனில் அதிலிருந்து ஏதாவது விளக்கம் கிடைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, கரந்தைத் தமிழ்ப் புலவர் கோவிந்தராஜன் அவர்கள் அங்கு போய்ப் பார்த்து விட்டு சில விவரக் குறிப்புகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அங்கேயிருக்கிற எழுத்து விவரக் குறிப்புகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தக் கல்வெட்டுகளில் புகைப்படம் அவர் எடுத்ததாகத் தெரியவில்லை. அவற்றை எடுக்க வேண்டுமானால், தொல் பொருள் ஆராய்ச்சியினரிடத்தில் ஒப்படைத்தால், அவர்கள் இதற்கான நல் முறைகளைக் கையாண்டு பரிசிலித்துப் பார்க்க வழி ஏற்படும்.

**திரு. சி. வி. இராசகோபால் :** தலைவரவர்களே, கண்ணகியைப் பற்றிச் சொல்கிறபோது, கண்ணகிக்காக கோயில் வேண்டுமென்று ஒரு இடம் கேட்ட போது, எத்தனை கண்ணகிகள் இருந்தார்கள் என்று இலக்கியத்தில் சொல்ல முடியவில்லை. கண்ணகி எங்கே இறந்தார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டபோது, கண்ணகி எங்கே இறந்தார்கள் என்பதை விட, எத்தனை கண்ணகி இருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, ராஜகோபால் என்று பல பேர்கள் இருந்தாலும், ஒரேயொரு ராஜகோபாலாச்சாரி தான் புகழ் பெற்றவராக இருந்தார். அதே போல கண்ணகி என்று பலர் இருந்தாலும், ஒரு கண்ணகி தான் புகழ் பெற்றவளாக இருந்தாள்.



**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, இப்பொழுது கண்ணகி கோவில் என்று பெயரிடப்படுகின்ற அந்த இடத்தை தமிழக அரசுக்கு கேரள அரசு ஒதுக்கிட இன்னும் அனுமதி கொடுக்காவிட்டாலும், நம்முடைய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை அங்கே அனுப்பி அங்கே என்னென்ன இருக்கின்றன, என்னென்ன எழுத்துக்களில் இருக்கின்றன என்று பார்த்து 'ஐ காபி', கண் படமாக அல்லது போட்டோகிராப் மூலமாகப் புகைப்படம் எடுத்து வருவதற்கு அரசு சார்பில் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன். அப்படி எடுத்துக்கொள்ளாவிட்டால், வெகு சீக்கிரத்தில் பழுதுபட்டு, சிதிலமாகிவிடும் என்ற அச்சம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்த முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நம்முடைய ஆராய்ச்சியாளர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று, அந்த இடத்தை ஆராய்ந்து, அந்த இடத்தில் கண்ணகி சிலை இருப்பதையும், அதற்கான சரித்திரக் கூறுகளையும் வாய்ப்புகளையும் ஆராய நமக்கு அனுமதி தரவேண்டுமென்று முதலில் கேரள அரசைக் கேட்டோம். அதற்குச் சரியான பதில் வராத காரணத்தால், நம்முடைய ஆராய்ச்சியாளர்களும் கேரள அரசினுடைய ஆராய்ச்சியாளர்களும்—இருவருமே சேர்ந்து அது பற்றிய முடிவினை வெளியிடலாம் என்பது பற்றியும் கேரள முதலமைச்சர் திரு. அச்சுதமேனன் அவர்களிடம் நான் நேரில் கூட குறிப்பிட்டேன். ஆனால் இதுவரை அதற்கான பதில் ஒன்றும் அங்கிருந்து வரவில்லை.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் :** தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பத்மநாபபுரம் அரண்மனை, அந்த மாவட்டம் தமிழகத்திற்கு வந்த பிறகும் கூட, கேரள அரசு பரிபாலித்து வருகிறது என்று அறிகிறேன். அவர்கள் அவ்வாறு அந்த அரண்மனை தங்களிடமே இருக்க வேண்டுமென்று சொல்லிக் கேட்டு பெற்றுக் கொண்டது போல், சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை ஏன் நமக்கு விட்டுக் கொடுக்கக்கூடாது ? அந்த மேற்கோளைக் காட்டி நாம் ஏன் வற்புறுத்திக் கேட்கக்கூடாது என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, வற்புறுத்துவது என்பதற்கு எனக்குப் பொருள் புரியவில்லை. நாம் இப்பொழுது கடிதப்போக்குவரத்து நடத்துகிறோம், பேச்சு வார்த்தை நடத்துகிறோம். நாம் அந்த பத்மநாபபுரம் அரண்மனையை அவர்களுடைய பிடிப்பில் இருக்க வேண்டுமென்கின்ற அளவுக்கு விட்டு வைத்திருக்கிறோம். அதுபோல் அவர்களுக்கு ஒரு

எண்ணம் ஏற்பட்டாக வேண்டும் என்பதில் ஐயமில்லை. அதற்காகத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். வலியுறுத்துவதற்கும் வற்புறுத்துவதற்கும் வேறுபாடு உள்ளது. ஆகவே வலியுறுத்தப்படுகிறது, வற்புறுத்தப்படவில்லை.

### *Quarrel between a Teacher and an Assistant to the Chief Educational Officer*

* 37. Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any Police action was taken in connection with the quarrel between a teacher and an Assistant to the Chief Educational Officer on 6th September 1972 in the Office of the Chief Educational Officer, North Arcot District; and

(*b*) if so, the reason for the quarrel ?

### கல்வி அதிகாரி உதவியாளர்—ஆசிரியர் தகராறு

**திரு. எல். பலராமன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி அலுவலகத்தில் (Chief Educational Officer) 6—9—1972 ஆம் தேதி முதன்மைக் கல்வி அதிகாரியின் உதவியாளருக்கும், ஆசிரியர் ஒருவருக்கும் தகராறு காரணமாக போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், தகராறுக்குக் காரணம் யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** 6—9—1972 புதனன்று வட ஆற்காடு முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளருக்கும் முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் திரு. சுந்தரேசன் என்பவருக்கும் தகராறு காரணமாக போலீஸில் புகார் செய்யப்பட்டு, பிறகு சமரச உடன்படிக்கை இருவருக்கும் ஏற்பட்டமையால் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியருக்கு மீண்டும் பணி தரப்பட்டு இருக்கிறது.

முதல் நிலைத் தமிழ் ஆசிரியர் திரு. சுந்தரேசன் ராணுவத்தில் பணி புரியும் தனது சகோதரர், திரு. சுந்தரேசனது மாற்றம் குறித்து எழுதியுள்ள கடிதம் பற்றி முதன்மைக் கல்வி அலுவலரது நேர்முக உதவியாளரிடம் கேட்டபோது இத்தகராறு ஏற்பட்டது.



**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பதில் கூறும்பொழுது, சமரசம் ஏற்பட்டு விட்டது என்று கூறினார்கள். இந்த சமரசத்தை ஏற்படுத்தியவர்கள் யார்? போலீஸுக்குப் போன பிறகு போலீஸாரால் செய்யப்பட்டதா அல்லது அதிகாரிகளுக்குள்ளாகவே ஏற்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சமரசம் ஏற்பட்டுவிட்டது என்று மட்டும் தெரிகிறது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் என்று குறிப்பு இல்லை. சமரசம் என்பதே, தகராறுக்குரிய இரண்டு பேரும் ஒத்துப் போன பிறகுதான் ஏற்படக்கூடியது. அந்த வகையில் போலீஸ் வழக்கு நிறுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இலாகா மூலமாக, ஒரு அரசுத் துறையினுடைய அலுவலர் ஒருவருடைய பணியைச் செய்ய விடாமல் தடுத்தார் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றிய விவரம் இப்பொழுது இல்லை.

### *Starting of a Law College in Madurai*

* 38. Q.—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Senate and the Syndicate of the Madurai University have recommended to the Government of Tamil Nadu to start a Law College in Madurai; and

(*b*) if so, the action taken thereon ?

### மதுரையில் சட்டக் கல்லூரி அமைத்தல்

**திரு. டி. சந்தோஷம் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக்குழு, நிர்வாகக்குழு ஆகியவை மதுரையில் சட்டக்கல்லூரி ஒன்றைத் தொடங்குமாறு அரசுக்குப் பரிந்துரைத்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, I was myself present at the meeting of the Senate at which this resolution was passed and I have a copy of the Syndicate resolution deciding to recommend it to the Government. May I, therefore, request the Hon. Minister to see if there is such a recommendation and take urgent action since the Madurai University may not be said to be complete without a Faculty of Law and a Law College?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு அல்லது செனட் குழுவிலிருந்து அரசாங்கத்திற்கு எந்தக் கடிதமும் வரவில்லை. சென்னை சட்டக் கல்லூரி இயக்குநர் அவர்கள் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்தலாம் என்ற ஒரு குறிப்பை அனுப்பி வைத்தார். அது முதலில், 1972-73-ல் ஆராயப்பட்டு, இப்பொழுது தேவையில்லை என்று தள்ளி வைக்கப்பட்டது. மறுபடியும் ஆராயப்பட்டு, மதுரையில் அதற்கான வசதிகள், கட்டிடங்கள் முதலியவை ஏற்படுத்த வேண்டியிருக்கின்ற காரணத்தால், அங்கே ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்துவது சம்பந்தமாக முடிவு தள்ளி வைக்கப்பட்டது. இப்பொழுது சென்னையில் படித்து வெளியேறுகின்றவர்களுக்கே வேலையில்லாத நிலைமை அதிகமாக ஏற்படுகின்றபோது, மேலும் ஒரு சட்டக் கல்லூரி ஏற்படுத்தும் யோசனை தள்ளி வைக்கப்பட்டது.

**திரு. எம். சங்கரலிங்கம்:** தலைவரவர்களே, தென் மாவட்டப் பகுதி மக்கள் சென்னையில் வந்து சட்டக் கல்லூரியில் படிக்க வேண்டுமானால், 500 மைல்களுக்கப்பால் வரவேண்டியிருக்கிறது. இதனால் பலவிதமான கஷ்டங்கள் அவர்களுக்கு ஏற்படுகிறது. மதுரைப் பல்கலைக்கழகம் பல்கலை நகருக்குப் போய் விட்டதால், அந்த இடம் இப்பொழுது காலியாக இருக்கிறது. நகரப் பூங்காவை ஒட்டிய, பழைய பல்கலைக் கழக இடத்தில் சட்டக் கல்லூரியை அமைக்கலாம். கோர்ட்டுகளுக்குப் பக்கத்தில் இருக்கிறது. மதுரை செனட், சிண்டிகேட் சபை, மதுரை மக்கள் எல்லோரும் விரும்புகிறார்கள். அரசாங்கம் ஏற்கெனவே முடிவு செய்திருந்தாலும்கூட, அதை மீண்டும் பரிசீலனை செய்து அதற்கு அனுமதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பை அறவே தள்ளிவிடவில்லை. தள்ளி வைத்துக்கொண்டிருக்கிறோம். மீண்டும் ஆராய்வதற்கு சூழ்நிலை வருமேயானால், அப்பொழுதே அதைப்பற்றி ஆராயப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



## *Saraswathi Mahal Library in Thanjavur*

* 39. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the total number of books available at Saraswathi Mahal Library in Thanjavur as at present;

(*b*) the steps taken to augment the library in 1972; and

(*c*) the number of visitors who visited the library during the calendar year 1972?

## தஞ்சாவூரிலுள்ள சரசுவதி மஹால் நூல் நிலையம்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூரிலுள்ள சரசுவதி மஹால் நூல் நிலையத்தில் தற்போதுள்ள புத்தகங்களின் மொத்த எண்ணிக்கை யாது?

(இ) இந்நூல் நிலையத்தைப் பெரிதாக்க 1972-ஆம் ஆண்டில் எடுக்கப் பட்ட நடவடிக்கைகள் யாவை?

(உ) 1972 ஆம் காலண்டர் ஆண்டில், இந்நூல் நிலையத்திற்கு வருகை தந்தோர் எத்தனை பேர்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) தஞ்சை சரசுவதி மகால் நூலகத்தில் 23,240 அச்சு நூல்களும் 35,130 கையேட்டுப்படிகளும், பல மொழிகளில் உள்ளன.

((இ) 1972 ஆம் ஆண்டு பல நூல்கள் வெளியிடப்பட்டன. சில நூல்கள் வெளியிடப்படும் நிலையில் அச்சகத்திலும் தொகுப்பாளரிடத்திலும் உள்ளன. நூலக வெளியீட்டில் 24வது தொகுதியில் 3வது எண்ணும், 25வது தொகுதியில் 1, 2, 3 எண்களும் வெளியிடப்பட்டன. 10 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 205 கையேட்டுப்படிகளும் சேர்க்கப்பட்டன. 130 அரிய நூல்கள் இந்த ஆண்டில் வாங்கப்பட்டன.

(உ) 1972-ல் 25,835 பேர் நூலகத்திற்கு வருகை தந்தனர்.

**திரு ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, தஞ்சை சரஸ்வதி மஹால் நூல் நிலையம் அரண்மனையைச் சேர்ந்த ஒரு பழைய கட்டிடத்தில் இருக்கிறது. அந்தக் கட்டிடத்தைப் புதுப்பித்து, புதிய முறையில் அமைப்பதற்கு அரசு

முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அங்கேயுள்ள 'செட்டியார்' நிதியிலிருந்து பணம் ஒதுக்கி அதைச் செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை அனுப்பியிருக்கின்றாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அதைப் பற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. நான் அந்த இடத்தைச் சென்று பார்த்த போது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அந்தக் கருத்தைத்தான் குறிப்பிட்டேன். அந்த நூலகத்திற்குச் செல்கின்ற வழி, மற்ற வசதிகளைப் பார்த்தால், எந்த வசதியும் இல்லை என்று தான் தெரிகிறது. படிப்பதற்கே வசதியில்லை. அதை இப்பொழுது நவீன முறையில் மாற்றலாம் என்று சொன்னார்கள். பழங்கால அரண்மனைக் கட்டிடமாக இருப்பதால், பழம் பெருமையைப்பற்றி எல்லோரும் தெரிந்துகொள்ள விரும்புவதால், அந்த நூலகத்தைச் சிறப்பான வகையில் அமைப்பது நல்லது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரங்கள் இப்பொழுது குறிப்பில் இல்லாததால், தனிக் கேள்வி போட்டால், மேற்கொண்டு விவரங்கள் சேகரித்துத் தெரிவிக்க முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, will the Government take steps to recover those palmyrah manuscripts which were taken by foreign scholars from this Library during the British period ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவைகள் எடுத்துச் செல்லப்பட்டனவா என்பதுபற்றி என்னிடம் விவரக் குறிப்புகள் இல்லை. பொதுவாகச் சொல்லப்பட்டு வருகிறது. பிரிட்டிஷ் மியூசியத்திலோ அல்லது வேறு இடத்திலோ இருந்தால், அதைக் கேட்டு வாங்கலாம். அதைப் பற்றி விவரக் குறிப்புகள் தெளிவாக இல்லை. ஆகவே நாம் எதை எங்கிருந்து வாங்குவது என்பதில் தெளிவு ஏற்படவில்லை.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, there are indications in the Library itself, in the placards that have been put up there, that some other manuscripts in palmyrah-leaf have been taken by German scholars and others and those spaces have been left vacant, saying that the manuscripts have been removed by the scholars.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, திட்டவட்டமாக அதை சரஸ்வதி மகாலிலிருந்து எடுத்துச் சென்றார்களா, இன்னார் எடுத்துச் சென்றார்கள், இந்த இடத்திலிருந்து எடுத்துச் சென்றார்கள், இந்த



இடத்தில்தான் இப்போது இருக்கிறது என்ற தெளிவு ஏற்படவில்லை. அந்தக் காரணத்தை வைத்து மீண்டும் கொண்டுவர வேண்டுமென்று நாம் கேட்கலாம். அப்படித் தான் பிரிட்டிஷ் மியூசியத்திலிருந்து இந்திய மியூசியத்திற்குக் கேட்கிறார்கள். அப்படியும் தெளிவு ஏற்படவில்லை. பொதுவாகச் சொல்லப்படுகிறது ஜெர்மன் அறிஞர்கள், மற்றவர்கள் எடுத்துச் சென்று விட்டார்கள் என்று கூறப்படுகிறது. திட்டவட்டமான, தெளிவான ஆதாரம் கிடைக்காத காரணத்தால், நடவடிக்கை எடுக்க வழியில்லை. அப்படி, ஏதாவது 'clue' கிடைத்தால் அதன்பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, இந்த நூலகத்தில், மக்கள் எல்லாம் பார்த்து வியக்கத்தக்க ஓலைச் சுவடிகள், படங்கள் இருக்கின்றன. நம்முடைய மத்திய அரசும் மாநில அரசும் பல பொருட்காட்சிகளை நடத்துகிறார்கள். அப் பொருட்காட்சிகளில், இம்மாதிரி சுவடிகளையும் படங்களையும் வைத்து, இது போன்ற பழம்பெரும் பொருட்கள் எங்களிடம் இருக்கின்றன என்று காட்டுவதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவை முக்கியமான சில பொருட்காட்சிகளில் இடம் பெறுகின்றன. உதாரணமாக, சென்னையில் நடைபெற்ற அகில உலகத் தமிழ் மாநாட்டில், இந்த சரஸ்வதி மஹாலின் சிறப்பான சுவடிகளின் பல்வேறு வண்ணப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. சமஸ்கிருதம், தமிழ், மராத்தி, ஹிந்தி, தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு, கிரீஸ், லத்தின், ஹிந்துஸ்தான், பெர்சியன், கனரிஸ், மலையாளம், குஜராத்தி ஆகிய மொழிகளிலே உள்ள நூல்களும் இருக்கின்றன. சுவடிகளும் இருக்கின்றன. அவைகளை முக்கியமாக பாதுகாப்பான இடத்தில் நாம் வைக்கலாம்.

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, இந்தச் சுவடிகள் மிக அருமையானவை. இவற்றைப் பாதுகாப்பது மிக அவசியமாகும். விரைவில் அவற்றிலே பல அழிந்துவிடும் என்று தோன்றுகிறது. ஆகவே, அவற்றை 'மைக்ரோ பிலிமிங்' எடுத்து பாதுகாப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளுடன் இந்தத் துறையில் ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்து அரசுக்கு உண்டு. அப்படி எடுத்து வைத்துவிடுவோமேயானால், பிறகு பயன்படும். 'போர்டு பவுன்டேஷனை'ச் சேர்ந்தவர்கள் இந்த நூலகத்தைப் பார்வையிட வந்திருந்தபோது, அவர்களிடம் இந்தக் கருத்தைத் தெரிவித்தேன். நாங்கள் எந்த வகையில் உதவி

செய்ய முடியும் என்று அவர்கள் கேட்டபோது, இப்படி ஒரு கருவியை வழங்கினால், அதை இந்த நூலகத்திற்குச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அது பற்றிய முழு விவரங்களையும் கேட்டிருக்கிறார்கள். நாம் அவற்றை எழுதி அனுப்பியிருக்கிறோம். அவர்களுடைய சலுகைகளைப் பெறுவோமேயானால், அக்கருவிகளைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்யலாம்.

MR. CHAIRMAN : Members are requested to cut short their supplementaries. There are only 20 minutes more.

**திரு. சா. கணேசன் :** தலைவர் அவர்களே, 'தாங்ஸ்'. போர்டு பவுண்டேஷன் டைரக்டரிடமும், கார்னிஜி பவுண்டேஷன் ஆட்களிடமும், நிர்வாகிகளிடமும் கலந்து பேசி, இவைகளை மைக்ரோபிலிமிங் செய்வதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அவர்கள் செய்து தருவதற்கு உடன்பட்ட நிலையில் கருத்து தெரிவித்தார்கள். அரசு அனுமதித்தால் நிச்சயமாக இதற்கு வழி பிறக்கும் என்று தெரிகிறது. இதை உடனே அனுமதிச் செயல்பட வேண்டுமென்று கேட்டு, செயல்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த அடிப்படையில் தான் முழு விவரங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

## *Non-teaching Staff working in Colleges*

* 40 Q.—THIRU KATTOOR GOPAL : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government have received any representation regarding the non-teaching staff working in colleges, especially the non-teaching staff working in the Jain College, Madras; and

(b) if so, the action taken thereon by the Government ?

**கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத ஏனைய பணியாளர்கள்.**

**திரு. காட்டூர் கோபால் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத ஏனைய பணியாளர்கள் சார்பாகவும், குறிப்பாக சென்னை ஜெயின் கல்லூரியில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத பணியாளர்கள் சார்பாகவும், அரசுக்கு முறையீடுகள் எவையேனும் வரப்பெற்றுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம்.

(இ) அந்த முறையீடுகளின் பேரில் அரசின் அதிகாரத்திற்குட்பட்ட விஷயங்களில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. காட்டூர் கோபால் :** தலைவர் அவர்களே, தனியார் துறையில் இருக்கின்ற கல்லூரிகளிலும், ஜெயின் கல்லூரிகளிலும், கொடுபட்டு வந்த சம்பளத்தைக் குறைத்துத் தருகின்ற முறைகள் பற்றி கல்லூரிக் கல்வி இயக்குநரோடும் பல்கலைக்கழகத் துணைவேந்தரோடும் தொடர்பு கொண்டதில், இதில் அரசு பரிந்துரை தான் செய்ய முடியும், சட்டபூர்வமான கட்டுப்பாடு செய்ய முடியாது என்று தெரிவிக்கிறார்கள். சட்டபூர்வமான கட்டுப்பாடு கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதுடன், அதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவரால், பணியாற்றும் தோட்டக்காரர், தண்ணீர் வைப்பவர்கள் போன்றவர்களுக்கு இவ்வளவு சம்பளம் கொடுக்கலாம் என்று நிர்ணயிக்கப்படுகிறது. அந்த அடிப்படைக்கு எக்காரணம் கொண்டும் குறையக்கூடாது என்று சொல்லலாம். அதற்கு அதிகமாகக் கொடுப்பது அவர்களுடைய இஷ்டத்தினைப் பொருத்தது. ஜெயின் கல்லூரியைப் பொருத்த வரையில் ஏற்கெனவே அதிகமாகக் கொடுத்து, இவ்வளவு இருக்கவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட பின்னர் குறைந்து விட்டதாகத் தெரிகிறது. கொடுக்க வேண்டிய அளவில் அவர்கள் நிற்கிறார்கள். கொடுத்து வந்த அளவைக் கொடுக்காமல் நிறுத்தி விட்டார்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அந்த வகையில் அவர்களை வற்புறுத்த முடியாது. பரிந்துரை செய்யலாம். கூடுதலாகக் கொடுப்பதைத் தடுக்க முடியாது. அடிப்படையாக இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது. அந்த வகையில் தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் அந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அரசுக்குச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. கல்லூரிகளில் அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய அதிகாரம் சட்டரீதியாக நமக்கு இல்லாமலிருக்கிற காரணத்தால், தொடக்கப் பள்ளி, செகண்டரி பள்ளிகள் தொடர்பாக சட்டம் கொண்டுவருவது போலவே, கல்லூரிகளின் நிர்வாகத்தையும் இதுபோன்று கட்டுப்படுத்துவதற்கு சட்டம் கொண்டு வருவதற்கு அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது உயர்நிலைப் பள்ளிகள், துவக்கப் பள்ளிகளைப் பொருத்தவரையிலும், சட்டம் கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். அதைக் கொண்டுவந்து வெற்றி பெற்ற பிறகு கல்லூரிகளைப் பொருத்த வரையில் ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** என்ன செய்யலாம், வயசான பையனுக்கு புத்திதான் சொல்லலாம்.

*Special Chest Clinic in Stanely Hospital, Madras*

* 41 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the number of beds attached to the Special Chest Clinic in Stanely Hospital, Madras;

(*b*) the strength of the personnel managing the same; and

(*c*) whether the same is found sufficient for the Clinic ?

**சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய நோய் சிறப்புப் பிரிவு**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை, ஸ்டான்லி மருத்துவமனையில் இருதய நோய் மருத்துவச் சிறப்புப் பிரிவில் எத்தனை படுக்கைகள் உள்ளன ?

(இ) இப்பிரிவில் பணி புரியும் பணியாளர்கள் எத்தனை பேர் ?

(உ) அப்பிரிவுக்கு இப்பணியாளர்கள் போதுமா ?

**மாண்புமிகு திரு. க அன்பழகன் :** (அ) பத்து.

(இ) ஐந்து.

(உ) ஆம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இந்த 10 படுக்கைகளும் ஒரே இடத்தில் இருக்கின்றனவா அல்லது பல ஆஸ்பத்திரிகளில் இருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, 'செஸ்ட் கிளினிக்' என்பதற்காக ஒதுக்கப்பட்ட படுக்கைகள் ஸ்டான்லியில் இருக்கின்றன. அவர்கள் கேட்டிருப்பது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியைத் தவிர வேறு இடங்களில் இது மாதிரி 'செஸ்ட் கிளினிக்' இருக்கிறதா என்று.



ராயப்பேட்டை மருத்துவமனை, கஸ்தூரிபாய் காந்தி ஆஸ்பத்திரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஆஸ்பத்திரி என்ற இடங்களில் இத்தகைய அமைப்பு இருக்கிறது.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I ask the Hon. Minister what is so special about the chest clinic?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஸ்பெஷல் செஸ்ட் கிளினிக் என்பது, சிறப்பாக டி.பி. சம்பந்தமான வியாதிக்கு மட்டுமல்லாமல் அதோடு கூட வேறு விதமான தொடர்பு கொண்ட வியாதிகளுக்கும் சிகிச்சை வழங்குவது. அதற்கான சிகிச்சை அளிக்கும் பகுதிக்கு ஒரு டாக்டர் போடப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை ஆற்றுவதற்கென சென்னை மாநகரப் பொதுமக்களுக்கு மாநகராட்சி மன்றத்தைச் சார்ந்த ஆறு டாக்டர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அதோடு ஹெல்த் விசிட்டர்கள்—ஏனென்றால் டாமிசைல்டு சிகிச்சை வழங்குவதற்கு—இருந்தார்கள். மாநகராட்சி டாக்டர்களை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அந்தப் பணியெல்லாம் இப்போது அரசாங்க டாக்டர்கள் மூலமாகத் தான் நிறைவேற்றப்படுகிறது. ஆனால், ஹெல்த் விசிட்டர்கள் ஹாஸ்பிடல் என்று அரசாங்க மருத்துவ மனைகளில் மாநகராட்சிப் பிரதிநிதிகளாக இருந்து பணியாற்றுகிறார்கள். அதையும் 'பரோவின்ஷியலைஸ்' செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. ஏனென்றால், பரவலாக மக்களுக்கு டாமிசைல்டு சிகிச்சை வழங்குகிற அளவுக்கு ஒரு தொடர்பு ஏற்படுத்துகிற நோக்கத்துடன் இது செயல்படுகிறது.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, is this treatment not available in the other hospitals?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Mr. Chairman, Sir, we cannot expect the same type of treatment in every hospital and every dispensary because certain clinics and departments are specialising in certain respects.

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, I am informed that there are ten beds in this clinic, but all these ten beds are not in one place and the beds have been provided in the various wards under the control of various people. So, there is no proper control and I have also been informed that about 17,500 old patients and about 1,750 new patients are being attended to. Will the Hon. Minister consider increasing the number of beds in the Hospital?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இதற்கு முன்னர் இந்த ஸ்டான்லி மருத்துவ மனையின் செஸ்ட் கிளினிக்கில் பேராசிரியராக இருந்தவரே அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கிறார். அவர் என்னைச் சந்தித்தபோது இந்த விவரங்களைச் சொல்லவில்லை. நண்பர் திரு. சுவாமிநாதனிடம் அந்தக் குறைகளைச் சொல்லியிருக்கக்கூடும். ஆனால் என்னைச் சந்தித்தபோது, அங்கே இந்த வசதிகள் இல்லையென்று சொல்லியிருந்தால், அவை பற்றி நான் கவனித்திருக்கக்கூடும். ஸ்டான்லி மருத்துவமனையைப் பொறுத்த வரையில், இடவசதியை இனிதான் விரிவுபடுத்த வேண்டும். இப்போது இருக்கிற இடவசதி மிகக் குறைவே ஆகும்.

## *Food Poisoning*

* 42. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Health be pleased to state the total number of cases of food poisoning reported to the Government Hospitals in Madras, during the calendar year 1972, monthwise ?

### உணவில் நச்சுக் கலப்பு

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1972 ஆம் ஆண்டில் (திங்கள் வாரியாக) உணவில் நச்சு கலந்ததனால் பாதிக்கப்பட்டவர்கள் மொத்தம் எத்தனை பேர் சென்னை, அரசினர் மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : A statement @ is placed on the table of the House.

## *Students belonging to the Vada Balija Community in Colleges*

* 43. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) the number of students belonging to the Vada Balija Community that were granted scholarships in Colleges during 1971–72;

@ 207 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



(*b*) the number out of those that were granted renewal of scholarships in 1972–73; and

(*c*) the reasons, if any, for the denial of renewal of scholarships?

### கல்லூரிகளில் பயிலும் வடபலிஜா வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) : மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72 ஆம் ஆண்டில் கல்லூரிகளில் பயிலும் வடபலிஜா வகுப்பினைச் சார்ந்த மாணவர்கள் எத்தனை பேருக்கு கல்வி உதவித் தொகை அளிக்கப்பட்டது ?

(இ) அவர்களில், 1972-73 ஆம் ஆண்டிற்கு கல்வி உதவித் தொகைகள் எத்தனை பேருக்குத் தொடர்ந்து அளிக்கப்பட்டது ?

(உ) கல்வி உதவித் தொகையைப் பெறுவதற்காக புதுப்பிக்க அனுப்பப்பட்ட விண்ணப்பங்கள் மறுக்கப்பட்டிருந்தால், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) மூன்று.

(இ) ஒன்று.

(உ) மீதி இரண்டு மாணவர்கள் படிப்பை முடித்துவிட்டு உதவித் தொகை புதுப்பிக்கக் கோரவில்லை.

## *Tamil Nadu Youth Service Corps*

* 44 *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVATHIRU KUNDRAKUDI ADIGALAR) : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether any representations were received by the Government requesting to provide for promotional opportunities to the Graduates serving in the Tamil Nadu Youth Service Corps; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

[1973 நவம்பர் 22

## தமிழ்நாடு இளைஞர் அணி

**திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்):** மாண்புமிகு பிற்பட்டோர் வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு இளைஞர் அணியிலுள்ள பட்டதாரிகளுக்கு முன்னேற்ற வாய்ப்புகள் ஏற்படுத்த வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதும் வந்ததா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு அரசு பணிக் கழகம் வழியாக அமர்த்தப்படும் சில குறிப்பிட்ட பணிகளில் பணிவிலக்கத்திற்குட்படப்போகும் இளைஞர் அணியில் உள்ளவர்களுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதுபற்றி விரைவில் திட்டவட்டமான முடிவு அறிவிக்கப்படும்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு:** தலைவரவர்களே, இளைஞர் அணியில் பணி புரிபவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் கண்காணிக்க முடியவில்லையென்ற கருத்து இருக்கிறது. ஆகையால் அவர்களை சர்க்கார் அலுவலகங்களில் போடுவதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய இந்த யோசனை, சமயம் நேரும்போது பரிசீலனை செய்யப்படும்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவரவர்களே, தற்போது இளைஞர் அணி அணியில் பணி புரிவோர் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் வேலை செய்கிறார்கள். அவர்களுக்குப் போதுமான காரியங்கள், வேலைத் திட்டங்கள் கொடுக்காத காரணத்தால், ஒன்றிய ஆணையாளரால் அவர்களைக் கட்டுப் படுத்த முடியவில்லை. எனவே அவர்களுக்கு எழுத்தர் போன்ற வேலைகளுக்கான வாய்ப்பு அளிக்கப்படுமாவென்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நாம் ஏற்று, சந்தர்ப்பம் வரும்போது, அது பரிசீலிக்கப்படுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இளைஞர் அணியில் பணி புரிபவர்களுக்கு அரசுத் துறைகளில் எதிர்காலத்தில் ஏற்படும் காலியிடங்களில் பதவிகள் அளிக்கும் முயற்சியை அரசு எடுத்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1973 நவம்பர் 22]

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே அவ்விதம் தரப்பட வேண்டுமென்பது பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில் இருப்பவர்களுக்கு என்னென்ன வேலைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன். அவர்கள் கிராமங்களில் வீட்டிற்குள்ளேயே இருப்பதை அரசு அறியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, அந்த அணியினருக்குக் குறிப்பிட்ட சில பணிகள் ஒதுக்கி வைக்கப்பட்டு, அவர்கள் அவற்றை நிறைவேற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவாக எந்த இடத்தில் இப்படி இருக்கிறதென்று தெரிவித்தால், அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்படும். கிராமீயத் திட்டங்களை நிறைவேற்றுவதும், அரசு செய்யும் காரியங்களை மக்களிடையே தெரிவிப்பதும், முதியோர் கல்வி புகட்டுவதும் அவர்களது காரியங்களாகும்.

**திரு. வி. வெங்கா:** தலைவரவர்களே, இளைஞர் அணியினால் கிராம மக்களிடத்தில் என்னென்ன மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளை எடுத்து விளக்கிக் கூறுவதும், அதே நேரத்தில் உடற் பயிற்சிக் கல்வி போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதும் அவர்களுடைய பணியாக இருந்து வருகிறது.

**திரு. சி. வி. ராஜகோபால்:** தலைவரவர்களே, இந்த அணியில் வேலை செய்பவர்களுக்குக் கடைசி வரையில் வேலை கொடுப்பதாக இருக்கிறதா அல்லது இடையிலேயே வீட்டுக்கு அனுப்புவதாக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, கூடுமான அளவுக்கு அவர்களுக்கு வேலை தரும்படியான முயற்சியில் அரசு ஈடுபட்டு, அது நிறைவேற்றப்பட இருக்கிறது.

[1973 நவம்பர் 22

*Damages to Anicuts due to rains.*

* 45. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the details of the anicuts which have suffered damages due to rains during November–December 1972; and

(*b*) the extent of the damage ?

*மழையினால் சேதமடைந்த அணைக்கட்டுகள்*

*திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) 1972 ஆம் ஆண்டில் நவம்பர்-டிசம்பர் திங்களில் பெய்த மழையினால் சேதமடைந்த அணைக்கட்டுகளின் விவரங்கள் யாவை?*

*(இ) சேதத்தின் மதிப்பு எவ்வளவு?*

THE HNO. THIRU P. U. SHANMUGAM: (*a*) *aand* (*b*) A paper is placed on the Table of the House.

*திரு. எஸ். எஸ். தென்னரசு: தலைவரவர்களே, வெள்ள நிவாரண நிதிக்கு மத்திய அரசிடத்தில் நமது அரசு எவ்வளவு கேட்டது, அதற்கு அவர்கள் எவ்வளவு தருவதாக வாக்கு அளித்தார்கள், எவ்வளவு கொடுத்தார்கள் என் பதை அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நாம் நிவாரண நிதியாக மத்திய அரசிடம் 30.16 கோடி ரூபாய் கேட்டோம். மத்திய அரசு 13.25 கோடி ரூபாய் கொடுப்பதாக ஒத்துக்கொண்டது. ஆனால் இதுவரையில் கடனாக 3.89 கோடி ரூபாயும், மானியமாக 87 லட்சம் ரூபாயும்தான் கொடுத் திருக்கிறார்கள். மிச்சம் கொடுக்க வேண்டிய பணத்தை அவர்கள் கொடுப்ப தாகத் தகவல் ஏதும் வரவில்லை. இருந்தாலும் நாம் மத்திய அரசைக் கேட் டுக்கொண்டிருக்கிறோம்; அவர்கள் கொடுப்பார்களா என்று சந்தேகமாக இருக்கிறது.*

*திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, இந்த 'வெல்ல' நிவாரண நிதித் திட்டத்தில் . . . .*

*மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'வெல்லம்' இல்லை 'வெள்ளம்'.*

---

@ 208–203 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



173 நவம்பர் 22]

*திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, வெள்ள நிவாரணத் திட்டத்திலே, ற்கெனவே எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகள், டெண்டர் விட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைகள், மத்திய அரசிடமிருந்து நிதி வராத காரணத் ால், கைவிடப்படும் நிலையில் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்பு கிறேன்.*

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசு காடுப்பதாகச் சொன்ன தொகையில் பெரும் பகுதியைக் கொடுக்கவில்லை. ானினும் துவக்கப்பட்ட வேலைகளைப் பூர்த்திசெய்ய வேண்டுமென்று ஆணை றப்பித்து, தமிழக அரசே மிச்ச வேலைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கான நிதியையும் நமது அரசே கொடுக்க வேண்டியுள்ளது. ஒத்துக்கொண்ட பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று நாம் மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் கொடுப்பார் களா என்பது சந்தேகமாக இருக்கிறது.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழில் சோதனையாக 'ள்' இருக்கிறது.*

*Construction of a Barrage across in Virisuzhi River in Thiruppathur Taluk.*

* 46. *Q.*—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government for the construction of a barrage across the Virisuzhi river in K. Vairavanpatti, Meyapatti, Thiruppathur taluk, Ramanathapuram District; and

(*b*) if so, the action taken thereon by the Government ?

*திருப்பத்தூர் வட்டம், விரிசுழி ஆற்றில் தடுப்பு அணை.*

*திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கே. வைரவன் பட்டி, மெய்யப்பட்டி கிராமம் விரிசுழி ஆற்றில் தடுப்பு அணை கட்டுவது பற்றி அரசுக்கு ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா?*

*(இ) ஆமெனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) கோரிக்கை ஏதும் அரசுக்கு வரவில்லை. ஆனால் தொழிற்துறை அமைச்சர் இவ்வட்டாரத்தில் சுற்றுப் பயணம் செய்யும்பொழுது விவசாயிகள் இத்திட்டத்திற்காக விண்ணப்பித்தார்கள்.

(இ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது.

*Vilangudi-Thirumanur Bridge, Thanjavur district*

* 47. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the construction of the Vilangudi-Thirumanur Bridge, Thanjavur District has been completed;

(*b*) if so, the reason for the long delay of its inaugural function; and

(*c*) the date from which buses will be premitted to ply through the bridge?

*தஞ்சை மாவட்டம் விளாங்குடி-திருமானூர் பாலம்*

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) தஞ்சை மாவட்டம் விளாங்குடி-திருமானூர் பாலம் கட்டி முடிக்கப் பட்டு விட்டதா?

(இ) ஆமெனில், அதன் திறப்பு விழா பல மாதங்களாக தாமதப் பட்டிருப்பதின் காரணமென்ன?

(உ) எப்பொழுது முதல் பேருந்துகள் அப்பாலத்தின் வழியே செல்ல அனுமதிக்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ), (இ) & (உ) ஆம். அணுகு சாலை இன்னும் பலதரப்பட்ட சில்லறை வேலைகள் உட்பட பால வேலை 10—8—1973 தேதி அன்றுதான் முற்றுப்பெற்றது. 19—8—1973-ம் நாளன்று இப்பாலத்தின் திறப்புவிழா நடைபெற்றது. 20—8—1973-ம் நாள் முதல் பேருந்துகள் செல்கின்றன.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, அந்தப் பாலம் திறக்கப்பட்டாலும்கூட, சென்ற மாதம் அதில் வருகிறபோது பாலத்திற்குப் பக்கத்தில் அணுகு பாலம் வேண்டுமென்ற காரணத்தால், அதில் கார்கள் போகாது என்று தெரிவித்தார்கள். அடிக்கடி இப்படிப்பட்ட இடையூறுகள் ஏற்படுவது அமைச்சரவர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, பேருந்துகள் செல்வதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் சொல்வது பற்றி விசாரிக்கலாம்.

*வினா எண் 48.*

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, வினா 48-ஐ நாளை வரையில் தள்ளி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Is not the answer to question 48 ready now?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Mr. Chairman, Sir I request the Hon. Chairman to postpone this question to to-morrow, as I do not find my reply in my file.

MR. CHAIRMAN: The Hon. Minister must ask the concerned department about this.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Mr. Chairman, Sir, may I reques that this question be postponed to to-morrow?

MR. CHAIRMAN: Yes.

*Production of Peat-based Inoculants*

*49. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Agricultural University, Coimbatore has undertaken the production of peat-based inoculants; and

(*b*) if so, the details thereof?

*மக்கிய தாவரங்களிலிருந்து பயிர்களுக்கு நுண்ணுயிர்களை உற்பத்தி செய்தல்*

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்--

(அ) கோயம்புத்தூரிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மக்கிய தாவரங்களிலிருந்து பயிர்களுக்கு நன்மை பயக்கும் நுண்ணுயிர்களை (Peat-based inoculants) உற்பத்தி செய்யும் பணியை மேற்கொண்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU V. ISVARMURTI: Mr. Chairman, Sir, I would like to know whether the Government have decided to extend the research activities of the Agricultural University throughout the State and, if so, the details of the decision.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Mr. Chairman, Sir, the question is about production of peat-based rhizobia. But, if a question is asked about extending the research throughout the State, then I will have to hazard an answer. I would, therefore, request the hon. Member to put a separate question on the research throughout the State. If any question is put regarding the production of peat-based rhizobia, I am prepared to answer.

*Attack on the Veterinary Doctor, Ramanathapuram*

*** 50. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—**

(*a*) whether it is a fact that a Veterinary Doctor, who took charge at Ramanathapuram recently, was bound and belaboured by the office staff during June this year;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken thereon?

**இராமநாதபுரம், கால்நடை மருத்துவ அதிகாரிமீது தாக்குதல்.**

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இவ்வாண்டு ஜூன் மாதத்தில், இராமநாதபுரம் கால்நடை மருத்துவ அதிகாரியாக அண்மையில் பொறுப்பேற்ற ஒருவரை அவ்வலுவலக ஊழியர்கள் கட்டி வைத்து அடித்தனரா?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் என்ன?

(உ) அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

---

@ 224-ஆம் பக்கத்தில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.



**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** (அ) அவ்வாறு ஒரு புகார் கிடைத்தது.

(இ) & (உ) புகாரை காவல் துறையினர் புலன் விசாரித்து வருகிருர்கள். தாக்குதலில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் கால்நடை உதவியாளர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அந்த மருத்துவ அதிகாரியை அந்த அலுவலக ஊழியர்கள் எதற்காகக் கட்டி வைத்து அடித்தனர் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவரவர்களே, அந்த அதி காரியை அடித்தார்களா, இல்லையா, அடித்திருந்தால் அதற்கு என்ன காரணம் என்பதெல்லாம் புலன் விசாரணையில் இருந்து வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இது கிட்டத்தட்ட 6—6—1973-க்கு முன்ன லேயே நடந்த நிகழ்ச்சி. புலன் விசாரணைக்குக் கொடுத்து ஐந்தாறு மாதங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலத்திற்குள் அவரை எதற்காக அடித்தார்கள், எந்தக் காரணத்திற்காக அடித்தார்கள் என்பதைக் கூடவா சொல்லக்கூடாது? இதுவுமா புலன் விசாரணையில் தெரியவேண்டும். இந்த விவரம் தெரியக்கூட ஐந்து மாதங்கள் வேண்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவரவர்களே, புலன் விசாரணை முடிந்த பிறகுதான், காரணங்கள் தெரியும். அந்த நிகழ்ச்சி என்ன காரணத் திற்காக, என்ன தன்மையில் நடந்தது என்பதைப்பற்றியெல்லாம் புலன் விசாரணை முடிந்த பிறகுதான் கூறலாமே தவிர, இதற்கிடையிலே இன்னின்ன காரணங்கள் என்று நாம் சொல்லக்கூடாது. இப்போது சொல்லிவிட்டால், மேற்கொண்டு புலன் விசாரணையில் சொல்லும் காரணங்களில் மாற்றமிருந் தால், தவறு என்று திரும்பச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிடும். ஆகவே புலன் விசாரணை முடிந்த பிறகு, இதற்கான காரணங்கள் தெரியக்கூடும்.

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, காரணங்களைப்பற்றி அவசிய மில்லை. இந்த நிகழ்ச்சி நடந்ததா இல்லையா என்பதாவது அரசுக்குத் தெரிந் திருக்கும். அதையாவது அரசு சொல்லக்கூடாதா என்று தலைவரவர்களின் மூலமாக கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் :** தலைவரவர்களே, நான் சொன்ன பதில், அவ்வாறு ஒரு புகார் கிடைத்திருக்கிறது என்று. அந்தப் புகாரிலே உண்மையிருக்கின்றதா, அது உண்மையில்லையா என்பதெல்லாம் விசாரணை முடிந்த பிறகுதான் தெரியவரும்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, அவரை எதற்காகக் கட்டி வைத்து அடித்தார்கள் என்று அந்தப் புகாரிலே சொல்லப்பட வில்லையா? அந்தப் புகாரில் என்னதான் சொல்லப்பட்டிருக்கிறது?

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* அந்தப் புகாரிலே எந்தவிதமான காரணமும் சொல்லவில்லை. அதில் காரணம் ஏதும் காணவில்லை. அடிபட்டவரே 10 பேர்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார். இதுதான் காரணம் என்று சொல்லவில்லை.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* அந்த அதிகாரியே புகார் கொடுத்திருக்கிறார். அந்த அதிகாரியை எதற்காகக் கட்டிவைத்து அடித்தார்கள் என்று புகாரிலேயே சொல்லாதபோது, அதை எப்படிப் புகாராக எடுத்துக்கொள்ள முடியும்? புகாரில் இன்னின்ன காரணங்களுக்காக என்று சொல்லாவிட்டால், அதை எப்படிப் புகார் என்று சொல்ல முடியும் என்றுதான் நான் கேட்கின்றேன்.

*மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :* அவரைக் கட்டிவைத்து அடித்ததாக புகாரில் சொல்லியிருக்கின்றார்கள். அவருக்குக் கீழ் இருக்கின்ற ஊழியர்களை, அதிகாரிகளைப்பற்றி இப்படிப்பட்ட புகார் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வளவுதான் அதிலிருக்கின்றது. மேற்கொண்டு விசாரணை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

## *Television Broadcasting Station*

* 51. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the towns in the State where television broadcasting stations are proposed to be located ?

## தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையம்.

*திரு. டி. சந்தோஷம் :* மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில், தொலைக் காட்சி ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கக் கருதியுள்ள நகரங்கள் யாவை?

*மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :* சென்னை மாநகரில் தொலைக்காட்சி நிலையம் ஒன்று அமைய உள்ளது.





THIRU D. SANTOSHAM : Mr. Chairman, Sir, Madurai is the second largest city in our State and it has been the cultural capital of Tamil Nadu since time immemorial. All these years, it has not had the advantage of having a radio broadcasting station. At least when television is introduced, will Madurai be considered for installing a television broadcasting station ?

*மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :* தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு 6 இடங்களிலே நிறுவலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த இடங்கள் எந்தெந்த மாவட்டம் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அப்படி முடிவு செய்யப்படுகின்ற நேரத்தில், மதுரை மாவட்டத்தைப்பற்றியும் கவனிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*திரு. ஜி. சுவாமிநாதன் :* தலைவரவர்களே, 6 இடங்களில் நிறுவலாம் என்று சொல்லுகின்றார்கள். அது தொலைக் காட்சி நடத்தக்கூடிய ஸ்டேஷன் என்று சொல்வார்களே அதுவா அல்லது பூஸ்டர் என்று சொல்வார்களே அதுவா என்று அறிய விரும்புகிறேன். அந்த ஆறு இடங்களிலும் ஸ்டேஷன் நிறுவப்படப்போகின்றதா என்றும் அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :* தலைவரவர்களே, மாவட்டத்திலே என்றால், சென்னை மாவட்டம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடங்களிலும், பள்ளிகளிலும் சென்னையிலுள்ள தொலைக் காட்சி நிலையங்களிலும் செயல்படவிருக்கின்றது. அது பற்றிய விவரமான அறிக்கை தற்போது இல்லை.

## *Development of Roads under the Rural Highways Scheme.*

* 52. *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the names of the roads proposed to be developed by the Government under the Rural Highways Scheme in North Arcot district; and

(*b*) the estimated expenditure therefor ?

கிராம நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் சாலைகள் அபிவிருத்தி

திரு. எல். பலராமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கிராம நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் எந்தெந்த சாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது?

(இ) அவைகளின் மதிப்பீடு யாது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஒரு விவர அறிக்கை @ சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இந்த விவரப் பட்டியலில் யூனியனுக்கு யூனியன் அதிகமான வித்தியாசம் உள்ள தொகை ஒதுக்கப்படுவதைத் தவிர்த்து ஒவ்வொரு யூனியனுக்கும் சமமாக ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். 'பல ஊர்களில் சாலையில்லாத பிரச்சினைகள் தீர இதுபோன்ற ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இப்போது ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூபாய் 22,333 விதம் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இந்த மாதிரி சாலைகளை அமைப்பதற்காக இந்தத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த ஆண்டிலிருந்து அந்தந்தச் சாலைகளினுடைய தரம், அவைகளின் அளவு இவைகளைப் பொறுத்து ஒதுக்கலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கின்றது.

*Co-operative Credit Bank for Employees.*

* 53. *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether employees working in W.S. Insulators of India Limited at Porur and Wigs India at Ambattur have applied to the Government, seeking permission to form a Co-operative Credit Bank; and

(*b*) if so, the action taken thereon?

@ 225-230 ஆம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.





தொழிலாளர்களுக்குக் கூட்டுறவு நாணய வங்கி.

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) போரூரில் உள்ள டபிள்யூ. எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆப் இந்தியா லிமிடெட், அம்பத்தூரில் உள்ள விக் இந்தியா ஆகிய தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்கள் கூட்டுறவு நாணய வங்கி வைத்துக் கொள்வதற்கு அனுமதி கேட்டு அரசுக்கு விண்ணப்பித்து உள்ளார்களா?

(இ) ஆமெனில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) விக் இந்தியா மற்றும் டபில்யூ எஸ். இன்சுலேட்டர்ஸ் ஆகியவற்றின் ஊழியர்களுக்காக கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க மாநில கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரால், செங்கற்பட்டு மாவட்டம் சைதாப்பேட்டை கூட்டுறவுச் சங்க துணைப்பதிவாளர் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

*Ration Shops in Madras city.*

* 54. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of Government Ration shops in Madras city; and

(*b*) whether their number is found sufficient to cater to the public of Madras City; and

(*c*) if not, the proposals the Government have to redress the difficulties of the public in the purchase of essential foodgrains?

சென்னை மாநகரிலுள்ள உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரிலுள்ள உணவுப் பொருள் பங்கீட்டுக் கடைகள் எத்தனை?

(இ) சென்னை மாநகர மக்களின் தேவையை நிறைவு செய்ய இவை போதுமானவையா ?

(உ) இல்லையெனில், இன்றியமையா உணவு தானியங்களை வாங்குவதில் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் களைய அரசு என்ன நடவடிக்கைகள் எடுக்கக் கருதியுள்ளது ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** (அ) தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகத்தால் நடத்தப்படும் 18 கடைகள் உள்ளன.

(இ) & (உ) சென்னை மாநகரில் அரிசி, சர்க்கரை போன்றவற்றை விநியோகிக்கத் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகம், கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் ஆகியோரால் நடத்தப்படும் 552 சில்லரை விற்பனை நிலையங்கள் இம்மாநகரில் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளன.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, may I ask a question whether the Government have taken over the distribution of sugar and rice by itself or whether it is also dealing in it through retail dealers in the City of Madras and elsewhere?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, சர்க்கார் அதை எடுக்க வேண்டுமென்று முயற்சித்து இப்போது உணவுப்பொருள் வழங்கு கழகத்தின் மூலமும், கூட்டுறவுத் துறையின் மூலமும் நடத்திக் கொண்டிருக்கின்றது. இன்னும் சில இடங்களில் தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அவைகளையும் எடுப்பதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, according to the Constitution, under Article 19 (1) (*g*), the State should pass a law before it establishes a monopoly. Will the Government say, Sir, whether the steps are in accordance with the Constitution? If it is to be taken over by an executive action, it would be in violation of the Constitution. Therefore, may I ask a question, Sir, whether the Government have passed any law or any order before they could take over distribution through any department of the Government, or whether it is by executive action alone ?





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, இது ஒரு சட்டப் பிரச்சினை என்ற நிலையில் இல்லாது இதை மக்களுடைய பிரச்சினையாக ஏற்றுக்கொண்டு மக்களுடைய நிலைமைக்கேற்ப அந்த விநியோகத்தை நிர்ணயிக்க சர்க்கார் பொறுப்பேற்றிருக்கின்றது. அத்தியாவசியமான பொருள்களைப் பெற்றுக் கொடுக்கின்றது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சென்னை நகரிலே உள்ள தனியார் கடைகள் அரசாங்க அனுமதியோடு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தக் கடைகளிலே கிட்டத்தட்ட 300-க்கும் அதிகமான கடைகள் சென்ற ஆண்டு மூடப்பட்டதாக அறிகிறேன். அதற்குப் பின்னர் இப்போது இருக்கின்ற கடைகள் போதுமானவையா ? மற்றும் சிவில் சப்ளைஸ் கடைகள் நல்ல முறையில் நடத்தப்படுகின்றன என்று சொல்கின்றார்கள். இந்தக் கடைகளுக்கு வரக்கூடியவர்கள் கியூவிலே நிற்கக்கூடிய அளவுக்கு அதிகமான பேர்களுக்குக் கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தனியார்களின் கடைகள் பல இடங்களில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறு இப்போது சர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கின்ற கடைகளில் எல்லாம் அதிகமான கார்டுகள் இருக்கின்றன என்ற குறை இருக்கின்றது. ஆகவே இந்த சர்க்காரால் நிர்வகிக்கப்படுகின்ற இடங்களில் இருக்கின்ற அதிகமான கார்டுகளை எடுத்துப் பிரிப்பதற்கு போதுமான கடைகள் கிடைக்கவில்லை. இதுதான் காரணம். அவைகளைப் பிரித்து சீக்கிரமாகப் பகிர்ந்தளிக்க ஏற்பாடு செய்யப்படும். தனியார் கடைகளை எடுத்ததற்காக அவர்கள் சுப்ரீம் கோர்ட்டு வரை சென்று வழக்காடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விஷயங்கள் எல்லாம் அநேகமாகத் தீர்ந்துவிட்டன. இனிமேல் சீக்கிரமாக கியூ வரிசை இல்லாத அளவுக்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, சென்னை நகர சர்க்கார் கடைகளில் மைதா, கோதுமை, சர்க்கரை இவைகளெல்லாம் சரிவரக்கிடைக்காமல் இருந்து வருகிறது என்று புகார் இருக்கின்றது. அதைப்பற்றி அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** சரிவர இல்லையென்று சொல்லப்பட்டிருப்பது போதிய அளவு கிடைக்காமல் இருப்பதால் இருக்கலாம். இப்போது 35 ஆயிரம் டன் கோதுமையில் மத்திய சர்க்காரால் இப்போது 10 ஆயிரம் டன்தான் கொடுக்கப்படுகிறது. இருந்தாலும் அதை

வைத்துக் கொண்டு பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. ரூ. 300 வருவாய் உள்ளவர்களுக்கு இரண்டு கிலோ சர்க்கரை, ரவா அல்லது மைதா ஒரு கிலோவும் ரூ. 300-க்கு மேல் ரூ. 499 வரை வருவாய் உள்ளவர்களுக்கு 4 கிலோ சர்க்கரையும், ஒரு கிலோ மைதா அல்லது ரவா, ரூ. 500-க்கு மேல் வருவாய் உள்ளவர்களுக்கு 6 கிலோ சர்க்கரையும், 2 கிலோ மைதாவும் கொடுக்கப்படுகிறது. ஆங்காங்கு மாவட்டங்களில் கிடைக்கும் பொருள்களுக்குத் தகுந்தாற்போல், இந்த மாதிரி 4 கிலோ வரையில் சர்க்கரை பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

### *Modernisation of Rice Mills.*

*55. *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Government have ordered the modernisation of rice mills ; and

(*b*) if so, the details thereof ?

### அரிசி மில்களில் நவீன இயந்திரங்களை நிறுவுதல்

**திரு. எல். பலராமன்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரிசி மில்களில் நவீன இயந்திரங்களை நிறுவ அரசு உத்தரவு இட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) 1968ஆம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் மூலம் 1958 ஆம் ஆண்டு அரிசி ஆலைத்தொழில் (முறைப்படுத்துதல்) சட்டத்தையும் 1970 ஆம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (முறைப்படுத்துதல்—உரிமம் வழங்குதல்) விதிகளின் மூலம் 1959ஆம் ஆண்டு அரிசி ஆலைத் தொழில் (முறைப்படுத்ததுதல்—உரிமம் வழங்குதல்) விதிகளையும் இந்திய அரசு திருத்தியமைத்தது. திருத்தச் சட்டமும் விதிகளும் 1—5—1970 முதற் கொண்டு செயலுக்கு வந்தன. திருத்தச்சட்டத்தின்படி, ஒன்றுக்கு மேற்பட்டு அரைவை இயந்திரங்களை உடைய அரிசி ஆலைகள் அனைத்தும், திருத்தச் சட்டமும் விதிகளும் செயலுக்கு வந்த நாள் முதற்கொண்டு மூன்று ஆண்டுகளுக்குள், தங்களது ஆலைகளில் உமி நீக்குவதற்காக பூமிக்கு அடியில் செல்லும் உமிநீக்கும் யந்திரத்தையும் நெல்லைப் பிரித்தெடுக்கும் கருவியையுமோ அல்லது நெல்லை புடைத்து எடுக்கும் கருவி அமைப்புடன் கூடிய ரப்பர் வளையத்தில் இயங்கும் உமிநீக்கும் யந்திரத்தையும் நெல்லைப் பிரித்தெடுக்கும்





கருவியையுமோ நிறுவவேண்டும். அரிசியைத் தீட்டுவதற்கு மட்டுமே அரவை யந்திரங்கள் பயன்படுத்தப்படவேண்டும். உமிநீக்கும் யந்திரம்—அரவை யந்திரத்திலும் உமிநீக்கும் யந்திரங்களிலும் நெல்லைப் புடைத்தெடுக்கும் கருவி அமைப்புடன் ரப்பர் வளையத்தில் இயங்கும் உமிநீக்கும் யந்திரமும் நெல்லைப் பிரித்தெடுக்கும் இயந்திரமும் நிறுவப்பட வேண்டும். இத்திருத்தச்சட்டம் மாவட்ட வருவாய் அதிகாரிகள் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. யந்திரத்தில் தேவையான மாற்றங்களைச் செய்து முடிப்பதற்காக 1—9—1970 முதல் மூன்று ஆண்டுக்கால அளவினை உரிமம் வழங்கும் அதிகாரி அதாவது மாவட்ட வழங்கல் அதிகாரி அனுமதிக்கலாம் என்று அவர்களுக்கு 1970 ஆகஸ்ட் திங்களில் தெரிவிக்கப்பட்டது.

MR. CHAIRMAN: Question time is extended.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இப்படி மாற்றியமைப்பதால், மாநில அளவில் கூடுதலாக எவ்வளவு அரிசி கிடைக்கும் என்று ஏதாவது கணக்கிடப்பட்டு, அதற்கான புள்ளிவிவரங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, நமது நாட்டில் பொதுவாக புழுங்கல் அரிசியைத்தான் விரும்புகின்றார்கள். இந்த ரப்பர் ரோலரை உபயோகிக்கும்போது, வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட ரப்பர் ரோலரை உபயோகிக்கும்போது, நன்கு பாலிஷ் ஏறியது. ஆனால் நமது நாட்டிலேயே உற்பத்தியாகும் ரோலரை உபயோகிக்கும்போது அரிசி சற்று பழுப்பு நிறமாகத்தான் இருக்கின்றது. சத்துள்ளதாக அமைந்தாலும், நிறம் பழுப்பு நிறமாக இருப்பதால், அதை மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. எனவே இதைப் பரிசீலிக்க வல்லுனர்களைக் கேட்டிருக்கின்றோம். இப்போது ஹல்லர் ரோலரை மட்டும் போட்டுக்கொள்ளுகின்றதா அல்லது ரப்பர் ரோலரைப் போட்டுக்கொள்ளுகின்றதா என்பது பரிசீலனையில் இருக்கின்றது. நண்பர் அவர்கள் இதுபற்றிக் கேட்பதற்கு முன்பே, இது விஷயத்தில் அடுத்த மார்ச் திங்கள் வரையில் அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

### *Cellular Concretes.*

*56 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether any survey has been conducted into the requirements of Cellular Concretes by (i) the Private Sector, (ii) the Government and (iii) the Public Sector, per year ; and

(*b*) if so, the details thereof ?

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வோர் ஆண்டின் தக்கைக் கல் தேவை குறித்து (i) தனியார் துறை (ii) அரசு, (iii) பொதுத்துறை ஆகியவை ஆய்வு நடத்தியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) 'பெருஞ் சென்னை' முழுவதிலும், அதாவது தக்கைக்கல் தொழிற்சாலை அமைந்துள்ள எண்ணூரைச் சுற்றி 80 கிலோ மீட்டர் தொலைவுள்ள பகுதியில், தக்கைக்கல் தொழிற்சாலைப் பொருள்கள் தோராயமாக எவ்வளவு தேவைப்படுகின்றன என்பதுபற்றி ஆய்வு செய்யும் பணியை, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், 'இப்கான்' தனியார் நிறுவனத்திடம் ஒப்படைத்தது.

(இ) வாலாயமான சுட்ட செங்கல் வழங்கும் நிலையில் 1971-76 வரையுள்ள கால அளவில் ஆண்டொன்றுக்கு 100 மில்லியன் செங்கற்கள் பற்றாக்குறை ஏற்படும் என்று மதிப்பிடப்படுவதால், 1.4 லட்சம் கனமீட்டர் தக்கைக் கற்கள் உற்பத்தி முழுவதற்கும் தேவையிருக்குமென இந்த 'ஆய்வு' புலப்படுத்துகிறது.

*Subscription to Workers Union.*

* 57. *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the scheme providing for taking over the responsibility of paying the subscription of the Industrial workers to their union by the management by reducing the subscription amount from their salaries is implemented in our State; and

(*b*) if so, the industries in which this scheme is implemented among the industries run by the Public Sector, Co-operative Sector and Private Sector?



**தொழிற் சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணம்**

**திரு. காட்டூர் கோபால்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தொழிலாளர்களுடைய சம்பளத்திலிருந்து அவர்களது தொழில் சங்கத்திற்கான உறுப்பினர் கட்டணத்தைப் பிடித்தம் செய்து தருவதை நிர்வாகத்தினரே ஏற்றுக் கொள்கிற வகையிலான திட்டம் நமது மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், பொதுத்துறைத் தொழில்களில், கூட்டுறவுத் துறைத் தொழில்களில், தனியார் துறைத் தொழில்களில் எவை எவைகளில் அமுலாக்கப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*State Housing Board*

* 58. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the State Housing Board has made any efforts to acquire the lands now in the occupation of the Madras Race Club, Guindy, for putting up housing projects ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) if not, the reasons therefor ?

**மாநில வீட்டு வசதி வாரியம்**

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, கிண்டியிலுள்ள சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தின் உடைமையில் தற்போதுள்ள நிலங்களைக் கையகப்படுத்த, மாநில வீட்டு வசதி வாரியத்தால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை, ஐயா.

(இ) வினாவிற்கு இடமில்லை.

(உ) இதற்கு குறிப்பிடத் தக்க காரணம் கூறுவதற்கு ஒன்றும் இல்லை.

*Cases filed before the Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department.*

* 59. Q.—THIRUVALARGAL S. VELLAPANDIAN AND V. ISVARMURTI: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the number of cases filed before the Commissioner of Hindu Religious and Charitable Endowments (Administration) Department during the years 1965, 1966, 1967, 1968, 1969, 1970, 1971 and 1972; and

(b) the stage at which the matter now stands?

**இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆணையாளர் முன் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள்**

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகத்) துறை ஆணையாளர் முன் 1965 முதல் 1972 வரை எத்தனை வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன?

(இ) இவ்வழக்குகள் தற்போது எந்நிலையிலுள்ளன?

**விடை**

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) ஒரு விவர அறிக்கை@ அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

*Renovation of Thiruvathigai Temple.*

* 60 Q.—THIRU C. V. RAJAGOPAL (on behalf of THAVA-THIRU KUNDRAKKUDI ADIGALAR): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) the date on which the renovation of Thiruvathigai Temple commenced; and

(b) the date on which it would be completed?

@ 229–230 ஆம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.





**திருவதிகைத் திருக்கோயில் திருப்பணி**

திரு. சி. வி. ராஜகோபால் (தவத்திரு குன்றக்குடி அடிகளார் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருவதிகைத் திருக்கோயில் திருப்பணி எப்போது தொடங்கப் பெற்றது?

(இ) அது எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) திருவதிகைத் திருக்கோயில் திருப்பணி 1—12—1966-ல் தொடங்கப்பட்டது.

(இ) அத்திருப்பணி 1973 ஆம் ஆண்டு இறுதியில் முடியும் என எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. சா. கணேசன்: தலைவரவர்களே, திருவதிகைத் திருக்கோயில் இராஜ கோபுரத்தின் உள்வாயில், மகேந்திர பரமேஸ்வரவர்மனுடைய தொன்மையான கல்வெட்டு ஒன்று, ஒன்பதடி நீளம் இரண்டரை அடி அல்லது மூன்றடி அகல முள்ள பெரிய பலகை போன்றதொரு கல் வாயில்படியாகப் போடப்பட்டு இன்னமும் அப்படியே அது உபயோகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. பல காலம் இந்தச் சபை மூலம் இதுபற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றேன். இப்போது இந்தத் திருப்பணி செய்யும் நேரத்திலாவது இதை எடுத்து அதற்குரிய இடத்திற்கு அதை அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, அது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் இதுபற்றிப் பரிசீலித்து தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN: Questions are over.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, 1972-73 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்—தொடர்ச்சி.

MR. CHAIRMAN: Now we resume discussion on the Electricity Board Budget.

[1973 நவம்பர் 22

திரு. எஸ். பலராமன்: மாண்புமிகு தலைவரவர்களே, இன்று இங்கே மின் வாரியத்தின் நிதி நிலை அறிக்கையினை நம் முன் வைத்திருக்கிறார்கள். இன்று உலகில் நவ நாகரிகத்தின் திறவுகோலாகவும் மனிதனுடைய வாழ்வின் அச்சாணியாகவும் இருப்பது மின்சாரம் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வளவு அத்தியாவசியமாக இருக்கக்கூடிய இந்த மின்சாரம் இன்றைக்கு மக்களுக்கு முறையாகக் கிடைக்கின்றதா என்று பார்த்தால், அதில்தான் மிகச் சங்கடமானதொரு நிலையை நாம் அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம். 1951-ல் நமது நாட்டில் ஒரு மனிதனுடைய சராசரி மின்சார உபயோகம் 12 யூனிட்டுகள் என்று இருந்தது மாறி, இன்றைக்கு சராசரி 133 யூனிட்டுகள் என்ற அளவிற்கு உயர்ந்து போயிருக்கும் நிலையைப் பார்க்கிறோம். இப்படி அதிகரித்துக் கொண்டே போகும் தேவையினைக் கணக்கிலெடுத்துக்கொண்டு, அதற்கேற்ப திட்டங்களைத் தீட்டியிருக்கின்றோமா என்று பார்த்தால், இல்லை.

(மாற்றுத் தலைவர் திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் தலைமை)

இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் வீற்றிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அன்றைக்குக் கூறினார்கள், "ஹொகனேக்கல் எங்கே, மற்ற மற்றத் திட்டங்கள் எங்கே" என்றெல்லாம் கேட்டார்கள். ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு அப்படியெல்லாம் கேட்டார்கள். ஆனால் அந்த ஹொகனேகல் திட்டம் என்ன ஆயிற்று என்று இப்போது எண்ணிப்பார்க்கும்போது, மிகவும் வேதனையாகவும் வருத்தமாகவும் இருக்கின்றது.

அதுபோக, கிடைக்கக்கூடிய மின்சக்தியையாவது இன்றைக்கு நாம் நல்ல முறையில் உபயோகப்படுத்துகிறோமா, அது கழிவு இல்லாமல் நஷ்டமில்லாமல் மக்களுக்கு வினியோகிக்கப்படுகிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கின்றது. இப்போது 94 மில்லியன் யூனிட்டுகள் கம்பிகளின் மூலம் வரும்போதே நஷ்டம் ஏற்படுவதாகக் கணக்கிட்டிருக்கின்றார்கள். இதைப் பார்க்கும்போது, இது மிகமிக அதிகம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த அளவிற்கு அது இயற்கையாகவே ஏற்படும் நஷ்டமாக இருக்க முடியுமா என்று பார்த்தால், இல்லையென்றுதான் கூறவேண்டியிருக்கின்றது. இன்று மின்சக்தி பல விதத்தில் களவு போகும் நிலை நாட்டில் பரவலாக இருந்து வருகிறது. இவ்வளவு பெரிய நிர்வாகம், பெருமைப்படக்கூடிய நிர்வாகமாக இருந்தாலும், அதன் கீழ் இவ்வளவு பயங்கரமான நிலைமைகள் இருப்பதை, 95,960 தொழிலாளர்களைக் கொண்டதொரு நிர்வாகத்தின் கீழ் இப்படி ஒரு நிலை இருப்பதை மிகவும் கண்காணிக்கவேண்டியதாக இருக்கின்றது. ஆரம்ப காலத்தில் இந்த வாரியம் மக்களுக்குப் பயன்தரக்கூடிய



ஒரு நிர்வாகமாக இருந்தாலும், இன்றைக்கு கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் நிர்வாகத்தில் பல சீர்கேடுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு முதன்மைப் பொறியாளர் இருந்த இடத்தில் இப்போது ஐந்து பொறியாளர்கள் இருக்கும் நிலை ஏற்பட்டிருந்தும்கூட, இந்த அளவிற்கு நிர்வாகச் சீர்கேடு ஏன் ஏற்பட்டுள்ளது என்றுதான் கேட்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இப்படிப்பட்ட நிர்வாகச் சீர்கேட்டிற்குக் காரணம் அங்கேயுள்ள அரசியல் தலையீடுகள்தான் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஆளும் பொறுப்பினை ஏற்கும் முன்பு 'ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்' என்றெல்லாம் இன்று ஆளும் கட்சியிலுள்ளவர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்று மின் வாரியத்திலுள்ள நிலை என்ன என்று பார்த்தால், பல சங்கங்கள் இருக்கின்றன. ஆனாலும் திராவிட முன்னேற்றக் கழகத்தினைச் சார்ந்துள்ள சங்கமாக இருந்தால்தான் அதிகாரிகள் அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். அதிகாரிகள் அச்சப்படும் நிலையினைப் பி.ப.
பார்க்கிறோம். விழுப்புரத்தில் ஒரு நிகழ்ச்சிபற்றிக் குறிப்பிட்டார்கள். 5–10
பத்திரிகை வாயிலாக அதுபற்றி நாம் அறிந்தோம். ஒரு எழுத்தரோ என்னவோ, 5 நாட்களாக என்ஜினியர்களுக்கெல்லாம் சம்பளம் தரக்கூடிய பட்டியலை எடுத்துக்கொண்டு ஊர் சுற்ற ஆரம்பித்தார் என்ற நிகழ்ச்சியைக் கண்டோம். அவர் யார் என்று பார்த்தால், தி.மு.க. தொழிற்சங்கத்தில் இருக்கக் கூடிய பொறுப்பு வாய்ந்தவர் என்று தெரிந்தது. அவர் கணக்குகளை ஏமாற்றக் கூடிய நிலையில் இருக்கிறார் என்ற சூழ்நிலையைத்தான் கண்டோம். அந்த அளவிற்கு நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள், அதில் பொறுப்பேற்கக் கூடியவர்கள், அரசாங்கப் பொறுப்பில் இருக்கிறவர்கள் இது போன்ற கட்சிக் கண்ணோட்டத்துடன் தொழிலாளர்களை வளர்ப்பது ஆபத்தானது, நாட்டிற்கும் ஆபத்து என்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். காசாளர்கள் சங்கம் என்று இருக்கிறது. அவர்கள் எதைக் கூறுகிறார்களோ அதுதான் நிர்வாகம் என்ற நிலைக்கு, முதன்மை என்ஜினியர்களாக இருக்கட்டும், நிர்வாக என்ஜினியர்களாக இருக்கட்டும், யாராக இருந்தாலும் பயப்படவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பரவலாகப் பேசப்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கமும் அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

விவசாய மின் இணைப்புகளைப் பொறுத்த வரை, நம் மாநிலத்தில் 22 லட்சம் கிணறுகள் இருந்தாலும், அதில் பாதி அளவிற்குத்தான், 50 சதவீத அளவிற்குத்தான் இன்றைக்கு மின் இணைப்பு வழங்கியிருக்கிறார்கள். இப்படி இருக்கும்போது, இன்றைக்கு மின் வாரியம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு

வழங்குவது சம்பந்தமாக திடீரென்று ஒரு உத்தரவு போட்டது. ஒரு கம்பத்திற்கு ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு எத்தனை கம்பமானாலும், ரூபாய் கட்டினால் தான் மின் இணைப்பு வழங்கப்படும் என்ற உத்தரவை எங்கள் மாவட்டத்தில் போட்டார்கள். இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவரையும், அதிகாரிகளையும் அணுகி, இது அநியாயம், அக்கிரமம் என்று கூறியதற்குப் பின்னால், இந்த உத்தரவை வாபஸ் பெற்றார்கள். விவசாயிகளுக்கெல்லாம் இது போன்ற ஒரு நிலையை ஏற்படுத்தி, மக்களிடையே பரவலாக ஒரு பீதியை உண்டாக்கி, எப்படி மின் இணைப்பு வாங்குவது என்ற நிலை ஏற்பட்டு, அதனால் பம்புசெட்டு போடுவதை நிறுத்திவிடக்கூடிய நிலை ஏற்பட்டு, அதற்குப் பிறகு அதை வாபஸ் வாங்கிக்கொள்வது நல்லதல்ல என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மின் இணைப்பு தருவதில் கூட ஐ.டி.எ. வங்கி மூலமாகக் கடன் வாங்கியதற்கும், மத்திய அரசு உதவி மூலமாக வாங்கியதற்கும், கூட்டுறவு வங்கிகள் மூலமாக வழங்கிய கடன்களுக்கும்தான் மின் இணைப்பு என்ற முறை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. இதையெல்லாம் தவிர்த்து, தனியாக ஏதோ காசு மிச்சம் பிடித்து, கடன் வாங்காமல், கடனாளி ஆகாமல் பம்புசெட்டு போட்டுக்கொண்டு மின் இணைப்பு வாங்கக் கூடிய விவசாயிகளுக்கு அரசாங்கம் தரக்கூடிய சலுகை என்னவென்று புரியவில்லை. இது போன்று பல பகுதிகளில் மின் இணைப்பு தராமலிருப்பதை கண்கூடாகக் காண்கிறேன் என்பதை இந்த அவையின் தலைவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உபகரணங்கள் கொடுப்பது சம்பந்தமாக கடந்த முறை ஒரு குற்றம் கூறினேன். மின் இணைப்பு தருவதில் விவசாய உபகரணங்கள் வழங்குவதில்லை என்ற நிலை ஏற்பட்டதனால், விவசாயிகள் தாங்களே பியூஸ் கேரியர், கனெக்ஷன் பைப் முதற்கொண்டு வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதைத் தவிர்த்து, மின் வாரியம் விவசாயிகளுக்கு இணைப்புத் தரும்போது, இந்த உபகரணங்களையெல்லாம் வாங்கி வழங்குவதற்கான நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது போன்று விவசாயிகள் வாங்கினால், மறுபடியும் அந்த அதிகாரிகள் ஸ்டோர் மூலமாக அதை வாங்கி துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது. இதையெல்லாம் தவிர்ப்பதற்கு வாரியம் என்ன செய்கிறது என்ற நிலை கூட இதில் காணப்படவில்லையென்று வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்று, கடைசியாக, டெயில் எண்டில் இருக்கக்கூடிய பம்புசெட்டுகள் தீய்ந்துவிடுவதைக் காண்கிறோம். அதுவும் இப்போது இருக்கக்கூடிய மோசமான நிலைமையில் வோல்டேஜ் வருவது குறைந்த அளவிற்கு



இருப்பதனால், பல மோட்டார்கள் தீய்ந்து விடுவதால், விவசாயிகள் பெருவாரியாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு 'ஷண்ட் கபாசிடர்ஸ்' கருவிகளை உபயோகப்படுத்தலாம் என்ற அபிப்பிராயம் கூறியிருப்பதாகத் தெரிகிறது. இதை விவசாயிகள் பொருத்த முடியுமா என்று பார்த்தால், அவர்கள் அதைச் செய்ய முடியாத நிலைமையில் இருப்பார்கள். இதன் விலை 250 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வரை இருக்கும் என்று கூறுகிறார்கள். இந்த மோட்டார்களை விவசாயிகளே போடுவது அவ்வளவு உசிதமாக இருக்காது என்று கூறிக்கொண்டு இதை வாரியமே வாங்கி வழங்கி இதற்கான தொகையைப் பிடித்தம் செய்து கொள்ளலாம் என்று வாரிய அதிகாரிகளுக்கு, தலைவரவர்களே, தங்கள் மூலமாகக் கூறிக்கொள்கிறேன். இதற்குரிய நடவடிக்கைகளை அமைச்சரவர்கள் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தமட்டில், பல மாதங்கள் பில் வராத நிலை பரவலாக ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் பார்த்தால் கூட, பல கோடி ரூபாய் அளவிற்கு வசூலிக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு அந்தந்த மாதாந்திர பில்களைக் கட்டுவதே சிரமமாக இருக்கிறது. மொத்த பில்களையும் ஒன்றாக இணைத்துக் கட்ட வேண்டுமென்றால், ஒரே மொத்தமாக வரும்போது பயங்கரமாக இருக்கிறது. எழுதித் தந்தால் மாதா மாதம் கட்ட தவணை தருகிறோம் என்று கூறுவது நல்ல முறையா? இப்படி சாதாரண விவசாயிகள் பல நூற்றுக்கணக்கான ரூபாய்களுக்குக் கடனாளியாக்கப்பட்டிருக்கிறார்கள். வாரியம் மேலும் நல்ல முறையில் நடக்குமா என்ற நிலையைப் பார்க்கும்போது, இது நல்ல முறையில் நடக்காது என்று தான் விவசாயிகள் பரவலாகப் பேசுகிறார்கள். அவர்கள் வாரியத்தின் மீது நம்பிக்கை இழக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு 'ஸ்பாட் பில்லிங்' முறையை ஏற்படுத்துவது மிகவும் லாபகரமாக இருக்கும், நியாயமான முறையாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த முறையில் வேலூர் எலெக்ட்ரிசிடி கார்ப்பரேஷன் செய்கிறது. பில் வசூலிப்பவர்களே வீட்டிற்கு வருகிறார்கள். மீட்டரைப் பார்க்கிறார்கள். எத்தனை யூனிட் என்று பார்த்து, அதற்குத் தகுந்தாற்போன்று பில்லைப் போட்டு, வீட்டுக்காரரிடமோ, அல்லது பம்பு செட்டுக் காரரிடமோ வசூலிக்கிறார்கள். இந்தச் சிறிய நிறுவனம் செய்வதைப் போல வாரியம் செய்தால், வேலை வாய்ப்பு ஏற்படும், சிக்கனம் ஏற்படும். இந்த நிலையைப் பரிசீலிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த பில் போடுபவர்களைப் பொறுத்தவரை, 400 பில்களைப் போடுவது அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வேலை, அவர்கள் 400 பில்கள்

போட வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அப்படி 400-க்கு மேற்கொண்டு சென்றால், 10 பைசா வழங்கப்படுவதாகக் கூறுகிறார்கள். இந்த காசாளர்கள் 40 பைசா அளிக்க வேண்டுமென்று இன்றைக்குக் கேட்டுக்கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்கு வாரியம் என்ன முடிவெடுத்ததோ, அது தெரியாத நிலையில் இருக்கிறோம். நல்ல முறையில் பரிசீலித்து சிக்கனமான முறையைக் கையாண்டு இவைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய மின்சாரம் சம்பந்தமாக எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விவசாயிகளுக்கு எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை என்று அரசும், வாரியமும் தெரிவித்தாலும், அங்கே ஒரு பகுதிநேரத்தில் தான் மின்சாரம் கொடுக்கப்படுகிறது. அரசாங்கம் மறைமுகமாக அவர்களுக்குத் தடை செய்கிறது. ஒரு வாரத்தில் பகல் 12 மணிக்கு மேலும், ஒரு வாரத்தில் காலையிலும், ஒரு சில நாட்களில் இரவிலும் மின்சாரம் வழங்கப்படுகிறது. இதனால் விவசாயம் பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், விவசாயிகள் சில புஞ்சைப் பயிர்களைப் பயிரிடும்போது பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசும் வாரியமும் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதைத் தவிர்த்து 24 மணி நேரம் இல்லாவிட்டாலும் பகல் நேரத்தில் பூராவும் மின்சாரம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல் கிராமப் புறங்களில் இருக்கக் கூடிய ரைஸ் மில் போன்றவைகளுக்கெல்லாம் 25 சதவீத மின் வெட்டு ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த 25 சதவீதக் குறைப்பைத் தளர்த்தி அவர்கள் உபயோகிக்கக்கூடிய அளவிற்கு, கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சிக்கு அனுகூலமாக இருக்கக் கூடிய வகையில் அதிகமான மின் யூனிட்டுகளைத் தர வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன். மின்வாரியம் என்றைக்குமே பொது மக்களுக்கு அவர்கள் வாழ்க்கைக்கு உதவக்கூடியதாகவும் தொழிலாளர்களுக்கு உதவக்கூடியதாகவும் இருப்
பி.ப. பதனால், இந்த நிர்வாகம் நல்ல முறையில் இயங்கிப் பயன்பட வேண்டுமென்று
5–20 கேட்டுக் கொள்கிறேன். ஜல மின்சாரத்தைப் போன்று அனல் மின்சாரத்தையும் நாம் உபயோகப்படுத்துவதற்கு ஆக்க பூர்வமாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான திட்டங்களோ அமைப்புகளோ ஏதும் இதுவரை காணப்படவில்லை. மின்சாரம் எங்கே என்று மாநில அரசாங்கத்தைக் கேட்டால், மத்திய அரசாங்கம்தான் பொறுப்பு என்று அமைச்சர்கள் கூறுவதும் அந்தத் துறையினர் கூறுவதும் நியாயமில்லை என்பதை உணர்ந்து மக்களுக்குச் செய்ய வேண்டிய பணி ஆக்க பூர்வமாக இருத்தல் வேண்டுமென்ற அடிப்படையில் அரசு செயல்பட வேண்டு



மென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போதுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப்புறங்களில் மின்சார விளக்குகள் எரிய முடியாத ஒரு நிலை இருந்து வருகிறது. அங்கேயெல்லாம் 'கேஸ்' விளக்குகள் ஏற்பாடு செய்து அந்த முறையிலும் மின்சாரத்தைக் குறைவாக உபயோகிக்க வழி செய்யலாம் என்று இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கிராமப்புறங்களில் பொருத்தப்பட்டிருக்கும் விளக்குகள் எரிந்தாலும் எரியாவிட்டாலும், பில்கள் கொடுக்கப்படுவது என்பது சர்வசாதாரணமாக இருந்து வருகிறது. இதைப்பற்றி மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் கூட்டங்கள் நடைபெறுகின்றபோது, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பல பஞ்சாயத்து யூனியன் தலைவர்களால் கூறப்பட்டிருக்கிறது. எரியாத விளக்குகளுக்கெல்லாம் சார்ஜ் செய்யும் நிலைமை பரவலாக எல்லா மாவட்டங்களிலும் ஏற்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்த்து, அவைகளுக்கான ஒரு மீட்டர் பொருத்துவதற்கு வாரியம் ஏற்பாடு செய்து எரிந்த விளக்குகளுக்கு மட்டும் சார்ஜ் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமங்களில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு (யூனிபார்ம்) சீருடை வழங்குவதுபற்றி இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. தகுதி உடையவர்களுக்குத்தான் வழங்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி தகுதி உடையவர்கள் என்று கூறும்போது, ஏதோ அதிகமான பேர் பயன் அடைவார்கள் என்று கருத வேண்டாம். ஒவ்வொரு கிராமத்திலும் ஒன்று அல்லது இரண்டு பேர்தான் பெறும் நிலையில் உள்ளார்கள். அந்த நிலையைத் தவிர்த்து, சாதாரண அடி மட்டத்தில் வேலை செய்யும் எல்லா அலுவலர்களுக்கும் ஒரு நிரந்தரமான யூனிபாரம்—சீருடை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, மழை காலங்களில் வெளியே சென்று வேலை செய்யக் கூடியவர்களுக்கு மழைக் கோட்டுகள் வழங்கி அவர்கள் பணியைச் செவ்வனே செய்ய உதவ வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். வாரியம், மக்களுக்கு நல்ல முறையில் பயன் கிடைக்குமளவுக்கு, ஆக்கப்பூர்வமாகச் செயல்பட வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு, நான் இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. எம். சங்காலிங்கம்:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டிருக்கின்ற மின்சார அறிக்கையின் மீது எனது கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி. மின்சாரம் ஒவ்வொரு மனிதனுடைய

வாழ்விலும் ஒரு இன்றியமையாத பங்காக மாறிவிட்டது என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டுகிறது, அதை நாடும் உலகமும் ஒத்துக்கொள்கிறது என்பதை முதலில் கூறிக் கொள்கிறேன். சென்ற ஆண்டு 75 சத விதம் மின்வெட்டு இருந்து வந்து வர, வர குறைக்கப்பட்டு, இப்பொழுது முழுதும் மின்சார வெட்டு இல்லை என்று சொல்ல முடியாவிட்டாலும் 15 சத விதவெட்டு சட்ட ரீதியாக இருந்து வருகிறது. இருந்தாலும் எல்லாப் பகுதி மக்களும் வெட்டு இருக்கின்றது என்று உணராத வகையில் நம்முடைய வாரியம் நல்ல முறையில் மின்சாரம் வழங்கி வருகிறது என்ற ஒரு சூழ்நிலையில் இந்த ஆண்டு வாரிய நிதி நிலை அறிக்கையை நாம் ஆராய்கிறோம்.

மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்காக எடுத்துக் கொண்டுள்ள பெரு முயற்சிகளைப்பற்றி இதிலே விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே நம்முடைய மாநிலம் ஏனைய மாநிலங்களை விட, அதனுடைய திறமை மிக்க நிர்வாகத்தாலும், மக்களுடைய நலனில் காட்டுகின்ற பெருந்த அக்கறையினாலும், எல்லாப் பகுதி மக்களுடைய வாழ்க்கைக்கும் இன்றியமையாத, தேவையான மின்சாரத்தைக் கொடுக்க அதனுடைய உற்பத்தித் திறனைப் பெருக்க நமது அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளை நாம் உளமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 17 நீர் மின் உற்பத்தி நிலையங்கள், இரண்டு அனல் மின் நிலையங்கள் மூலமும், நெய்வேலி அனல் மின் நிலையத்தையும் சேர்த்து, மொத்த உற்பத்தித் திறன் 2,254 மெகாவாட்டுகளாக இருக்கிறது. பல்வேறு சூழ்நிலையின்காரணமாக இந்த ஆண்டு உற்பத்தித் திறன் 1,373 மெகாவாட்டாக அமைந்திருக்கிறது. இந்த ஆண்டும் கூட பற்றுக்குறை 639 மெகாவாட்டாக அமைகிறது. அதை எப்படி மக்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் சரிப்படுத்திவிட முடியும் என்பது நிதி நிலை அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும் 5-வது ஐந்தாண்டுத் திட்டம் முடிவுறுகின்றபோது, நம்முடைய மாநிலத்தில் 2,189 மெகாவாட் மின்சாரம் பற்றுக்குறை ஏற்படுமென்று மதிப்பீடு செய்து அதனை ஈடு செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மின் உற்பத்தி செய்யும் பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சுருளியாறு நீர் மின் திட்டம், காடம்பாறை குழாய் நீரேற்று மின் உற்பத்தித் திட்டம், தூத்துக்குடி அனல் மின் திட்டம் ஆகியவற்றிற்கு மத்திய அரசின் ஒப்புதல் கிடைத்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இன்னும் சில ஆண்டுகளில் அவைகளின் மூலம் மின்சார உற்பத்தி ஏற்பட்டு மக்களுக்கு நல்ல முறையில் பயன் கிடைக்கும். அதே மாதிரி சேர்வலாறு, நெல்லித்துறை போன்ற திட்டங்களுக்குப் பூர்வாங்க



வேலைகள் தொடங்கப்பட்டு விட்டன. மத்திய அரசு ஒப்புதல் தரும் என்ற நம்பிக்கையில் அவை இரண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் சுமார் பத்து திட்டங்களுக்கு மேல் மத்திய அரசின் ஒப்புதல் பெறுவதற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். ஒப்புதல் கிடைக்குமென்று காத்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையின் 11-வது பக்கத்தில் மிகத் தெளிவாக அந்தத் திட்டங்களின் விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டால், ஏறக்குறைய 785 மெகாவாட் உற்பத்தி கிடைக்கக்கூடிய ஒரு அமைப்பு முறையை நாம் ஏற்படுத்திக்கொள்ள முடியும். நம்முடைய மாநிலத்திற்கு வேண்டிய மின்சார வசதியை ஏற்படுத்திக்கொள்வதற்கு மத்திய அரசு அனுமதி வழங்குவதில் காலம் தாழ்த்தி நம்மைக் காக்க வைத்திருப்பதை யாரும் புறக்கணிப்பதற்கில்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டி அதன் மூலமாக அனல் மின் உற்பத்தி செய்தால்தான், இந்த மாநிலத்தினுடைய மின்சாரத் தேவையை நாம் பூர்த்தி செய்துகொள்ள முடியும். அது போலவே இன்னும் தென் மாவட்டங்களில் சில அனல் மின் சக்தித் திட்டங்களை ஏற்படுத்தினால்தான் நமக்கு வரக்கூடிய பற்றுக்குறையை, அதாவது ஐந்து ஆண்டுகளுக்கு அப்பால் வரக்கூடிய பற்றுக்குறையை, நிவர்த்தி செய்ய முடியும். பல முறை மத்திய அரசைக் கேட்டும் அது காலம் கடத்திக்கொண்டு அனுமதி வழங்காமலிருந்து வருகிறது. தென்பகுதியில், திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளம் என்ற இடத்தில் அணு மின் நிலையம் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கின்றது என்று ஆராயப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு அணு மின் சக்தித் திட்டம் கூட அனுமதிக்கப்படவில்லை என்ற நிலைமை உருவாகியிருப்பதை நாம் பார்க்கிறோம். உண்மையிலேயே நமது மாநிலத் திட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று நான் குறிப்பிடுகிறேன். இந்த மாநில அரசும் இந்த மாநில மக்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு சக்தியாக, ஒரு குரலாக, மத்திய அரசு இப்படி வித்தியாசம் காட்டுகின்ற ஒரு நிலையை மாற்றும் சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்வேன். இந்த ஐந்தாண்டுத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்ற முறையில் ஏற்படுகின்ற கருத்து மாறுபாடுகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விளக்கி, ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய மாநிலத்திற்கு எவ்வளவு பணம் தேவை என்று சொல்லியிருக்கிறார். மத்திய அரசு சார்பில் அதற்கு பதில் அளிக்கின்றபோது, பின் தங்கிய மாநிலங்களுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கப்படும், தமிழகம் ஓரளவுக்கு பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்திருக்கிற மாநிலம் என்று சுட்டிக்காட்டியிருப்பதை நான் பத்திரிகை வாயிலாக அறிந்தேன். மத்திய அரசினுடைய நிதி ஒதுக்கீடு முறையைப் பற்றி 'இந்து' நாளிதழ் தலையங்கம்

ஆய்வு செய்கின்றபோது மத்திய அரசு, தொழிற் துறைகளிலும் மற்ற துறைகளிலும் முன்னணியிலிருக்கின்ற மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் குறைவு படுத்தக்கூடாது, பின் தங்கிய மாநிலம் என்று சொல்லி, அதிக நிதி ஒதுக்கீடு செய்கிறபோது, நிர்வாகத் திறமையின்மையின் காரணமாக என்றுமே பின்தங்கியிருக்கிற நிலையிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறது. நம்முடைய மாநிலம் மக்களுக்குப் பயன்படுகின்ற முறையில் நிதியைச் செலவு செய்து வருகிறது என்பது தெளிவு. தமிழகமும் மஹாராஷ்டிரம் போன்ற சில மாநிலங்களும் முன்னேற்றம் அடைந்திருப்பது திறமையான அமைப்பு முறைகள் கொண்ட நிர்வாகம் நடைபெற்று வருவதால்தான் என்று சுட்டிக் காட்டப்பட்டது. எனவே மத்திய அரசு நமது முன்னேற்றத்திற்கு ஒரு பெரும் தடையாக அமைவதாக இருந்தால், நாம் அதைச் சொல்லிக்கொண்டே இருக்கும் சூழ்நிலையில் இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது அரசு ஐந்து ஆண்டுகளுக்கு அப்பால் தேவைப்படுகின்ற 2,189 மெகாவாட் உற்பத்தித் திறனைப் பெருக்கிக்கொள்வதற்கு நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டி அனல் மின்சாரம் உற்பத்தி செய்வது தவிர திருநெல்வேலி மாவட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின்சக்தித் திட்டம் அமைப்பதற்கு நமது அரசு ஒப்புதல் எதிர்பார்த்திருந்தும், மத்திய அரசு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ள மறுத்துக் கொண்டிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்கது. இது இந்த மாநில மக்களுடைய வளர்ச்சியையும் இன்றியமையாத தேவையையும் புறக்கணிக்கும் நிலைமையில் அமைந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

நமது உற்பத்தித் திறனைப் பெருக்குவதன் மூலம் தான் மின்சாரத்தில் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்யமுடியும். பக்கத்து மாநிலங்களிலிருந்து ஓராண்டு, இரண்டு ஆண்டுகளுக்கு வேண்டுமானால், பற்றாக்குறைக் காலங்களில் மின்சாரம் வாங்கிக்கொள்ள முடியும். நேற்றைய தினம் என்னுடைய நண்பர் திரு. காட்டூர் கோபால் அவர்கள் குறிப்பிட்டது போல், அண்டை மாநிலங்களிலிருந்து நாம் மின்சாரம் வாங்குவதிலும் கூட நமக்கு இருந்த சுதந்திரத்தைப் பறித்துக் கொள்வதற்கு மத்திய சர்க்கார் முன்வந்திருக்கிறது. சென்ற ஆண்டு நாம் சிமிண்டு கொடுத்து, அரிசி கொடுத்து, அண்டை மாநிலங்களிலிருந்து மின்சாரம் அதிகமாகப் பெற்று ஓரளவு நமது மின்சார நெருக்கடியைத் தீர்த்துக் கொண்டோம். இப்போது மத்திய அரசு ஒரு தாக்கீதை அனுப்பியுள்ளதாகச் செய்தி வெளியானதைப் பார்த்தோம். ஒரு மாநிலம் இன்னொரு



மாநிலத்தோடு பண்டமாற்று முறையின் மூலம் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கூடாது, மத்திய அரசு மூலமாகத் தான் அதைச் செய்ய வேண்டும் என்று சுற்றறிக்கை வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி வந்திருப்பது உண்மையானால், அதனால் அதிகக் கால தாமதம் ஏற்படும். முதலில் நாம் நம்முடைய தேவையைத் தெரிவித்து, நம்மிடம் இருக்கிற மின்சார அளவைத் தெரிவித்து, அதன் பிறகு அவர்கள் மற்ற மாநிலங்களோடு தொடர்பு கொண்டு, நம்முடைய மின்சாரத் தேவை பூர்த்தியான பிறகு, மழை பெய்து பற்றாக்குறைச் சூழ்நிலை மாறிய பிறகு தான் அவர்களிடமிருந்து பதில் வரும். அந்த நிலைமை இருப்பது மாநிலங்களின் அதிகாரங்களில் அதிகமாகத் தலையிட்டு அவைகள் சுதந்திரமாகச் செயல்பட விடாமல் செய்வதாகும் என்று நான் நினைக்கிறேன்.

இத்தகைய சூழ்நிலையை ஆங்கிலத்தில் ஒரு அரசியல் நிபுணர் "apoplexy at the centre and paralysis at the end" என்று சொல்லுகிறார். ஒரு உடல் இயக்கத்திற்கு இரத்த ஓட்டம் அல்லது குருதி ஓட்டம் மிக இன்றியமையாதது. அது முறையாக ஓட வேண்டும். தலைப் பகுதியில் அது அதிகமாகப் போனால், அது apoplexy at the centre (மூளையில் அதிக இரத்தம் தங்குதல்) கை கால் பகுதியில் இரத்த ஓட்டம் இல்லாது இருப்பது paralysis at the end ' பக்கவாதம் என்போம். கைகால்களில் இரத்த ஓட்டம் இல்லாமல் உடல் நலம் குன்றி, உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படுகின்ற நிலைமை உண்டாகும். இப்போது நம்முடைய அரசியல் அமைப்பில் மத்திய அரசுக்கு அதிக அதிகாரங்கள் இருக்கின்றன. அது apoplexy at the centre என்கிற முறையில் செயல்பட முடியாத நிலையில் இருக்கிறது. நமக்கு, இங்கே மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களைத் தராமல் பொருளாதார நிலையிலும், முன்னேற்ற நிலையிலும் கஷ்டங்கள் ஏற்பட்டுக்கொண்டிருப்பதை நாம் அரசியல் ரீதியாகவும் சட்ட நுணுக்க ரீதியாகவும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த நிலையைத் திருத்த வேண்டியது நம்முடைய கடமை. இந்த மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையைக் கூர்ந்து கவனிக்கும் போது, 5 ஆண்டுகளுக்கு அப்பால் வரக்கூடிய நெருக்கடியை ஒரு 'ரெட் லைட்', ஒரு சிவப்பு விளக்கு போட்டுச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் என்று தான் குறிப்பிட நினைக்கிறேன். இதைத் திருத்துவதற்கு நாம் முயல வேண்டும். இதை மத்திய அரசு கவனத்தோடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென் மாவட்டங்களில் அணு மின் திட்டம் ஏற்படுத்துவதுபற்றி, இப்போது மத்திய அரசின் சார்பில் வந்த நிபுணர் குழு, தூத்துக்குடிக்குப்

பக்கத்தில் கூடங்குளம் என்ற ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்தது. அங்கு விரைவில் அணு மின் திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். அணு உற்பத்திக்குத் தேவையான மானேசைட் என்ற உலோகப் பொருள் குளச்சல் துறைமுகப் பகுதியில் நிறைய இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு அணு மின்சக்தித் திட்டம் துவக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பகுதியில் கடற்காற்று மிகுதியாக இருந்தால், குளச்சலிருந்து கிழக்குப் பகுதியில் கூடங்குளத்திற்கு மத்தியில் 'லீபுரம்' என்று ஒரு துறைமுகம் பழுதடைந்த நிலையில் இருக்கிறது. அந்தப் பகுதி காற்று மறைவுப் பகுதியாகவும் கப்பல் செல்வதற்கு வசதியாகவும் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில், திருநெல்வேலி-கன்னியாகுமரி மாவட்டத்தை இணைக்கின்ற கடலோரப் பகுதியில் ஒரு அணு மின்சக்தித் திட்டம் அமைப்பதற்கு வேண்டிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு, நமது அரசு தனது நிபுணர் குழுவை அனுப்பி, பரிசீலனை செய்து, மத்திய அரசிடம் பரிந்துரை செய்து அதை முறையாகச் செயல்படுத்துவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின் சக்தி உற்பத்தி நீர், அனல், அணு ஆகியவைகளால் முடியும். அனல் மின்சக்தி உற்பத்திக்கு நிலக்கரி தேவை. அதற்கு இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை நெல்வேலியில் வெட்ட வேண்டும். மற்ற மாநிலங்களிலிருந்து நிலக்கரியை எதிர்பார்த்துக்கொண்டு, சில நேரங்களில் நாம் ஏமாற்றம் அடைகின்ற நிலைமையைத் தவிர்த்து, நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத்தை வெட்டுவதற்கான வேலையை நாம் தொடங்க வேண்டும். நாம் அதிகமாகப் பயன்படுத்துவது நீர் மின்சக்திதான். 17 நீர் மின்சக்தித் திட்டங்களை நாம் வைத்திருக்கிறோம். அந்தத் திட்டங்களில் குறைந்தது 30 மெகாவாட், 35 மெகாவாட் தான் நீர் மின்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது. நான் அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், 30, 35 மெகாவாட் உற்பத்தித் திறனுக்கும் குறைவாக, 10, 15 மெகாவாட் உற்பத்தி செய்கிற சிறு அணைப் பகுதிகளிலும் மின்சக்தி உற்பத்தி செய்ய நாம் திட்டமிட வேண்டும் என்பது. ஏனென்றால் மேலும் 35 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி செய்கிற அணைப் பகுதிகள் நம்மிடம் இல்லை. இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில், மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியில் உலக்கருவி அருவி என்று ஒரு அருவி பாய்ந்துகொண்டிருக்கிறது. குடி நீர்த் திட்டத்திற்காக ஒரு அணை அங்கே கட்ட வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். அதையும் நமது முதல்வர் அவர்கள் ஒப்புக்கொண்டு பரிசீலனை செய்வதற்காக ஒரு ஆய்வுக்



குழுவை அனுப்பினார்கள். தோவாளை பஞ்சாயத்து யூனியனில் 45 ஆயிரம் ரூபாய் ஆய்வுக்கு வேண்டிய நிதியாக அளித்திருக்கிறார்கள். அது ஒரு குடிநீர்த் திட்டமாக இருந்தாலும், அதில் குறைந்த அளவில் மின்சக்தியை உற்பத்தி செய்வதற்கு நாம் முயற்சி எடுக்க வேண்டும். அதோடு, கோதையார் மின்சக்தி அணைத் திட்டம் இப்போது 100 மெகாவாட் நிறுவுவதை திறனைக் கொண்டதாகவும், 80 மெகாவாட் உற்பத்தித் திறனைக் கொண்டதாகவும் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நான் அறிகிறேன். கோதையாறு அணை, பேச்சிப்பாறை, பெருஞ்சாணி என்ற அணைகள் கட்டிய பிறகு, அவ்வணைகளின் மேற்பகுதியில் மின்சக்தி திட்டத்திற்காகக் கட்டப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய, 100 வருஷத்திற்கு முன் மிஞ்சின்துரை என்று ஆங்கிலேய இஞ்சினியர் "கோதையார் பேப்பர்ஸ்" என்று அவ்வணைப் பகுதியை ஆராய்ந்து நூல் ஒன்று எழுதி வெளியிட்டுள்ளார். நீண்ட நாள் அப்பகுதியிலே தங்கி ஆராய்ந்துள்ளார். காடு அடர்ந்த அப்பகுதியில் காடு கொன்று உள்ளே சென்று "பேச்சிப் பாறை" அமைத்தார். கடைசியில் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்க, இந்தப் பகுதியில் அவருடைய உடல் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றும் இதனை அங்குக் காணலாம். அந்த மிஞ்சின்துரையின் 'கோதையார் பேப்பர்ஸ்' என்பதில் 7 அணைத்திட்டங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அதிலே ஒன்று பேச்சிப்பாறை, மற்றொன்று பெருஞ்சாணி, இன்னொன்று சிற்றாறு அணை. தற்போது இம் மூன்று அணைகள் தான் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மற்ற நான்கு சிறு அணைத்திட்டங்களும் செயல்படுத்தப்படாமலிருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து, அந்த அணைத்திட்டங்களை எடுத்துக்கொண்டால், அதனால் சிறிது அளவு மின்சார உற்பத்தியும், சிறு அளவு குடிநீர் வசதியும், சிறு அளவு விவசாயப் பாசன வசதியும் கிடைக்கும். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். நம்மிடம் இருக்கிற 'ரிசோர்சஸ்' (வளம்) எல்லாம் பயன்படுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மின்சார வாரியம், நெருக்கடி நிலைமை இருந்தாலும்கூட, மின்சக்தி வெட்டு, பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியாத நிலைமை இருந்தாலும் கூட, கிராம மக்களின் நலனிலும் நல்வாழ்விலும் அக்கறை காட்டுகின்ற முறையில், 60 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களில் 40 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதோடு புதிய இணைப்புக்கள் கொடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதேபோல, பணிபுரிந்து வருகின்ற பணியாளர்களுக்கு, பல வித வசதிகளை வீட்டு வாடகை உயர்வு, அகவிலைப்படி, கடனுதவி போன்ற 15, 20 புதிய வசதிகளைச் செய்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் உண்மையில் மின்சாரத் துறையினரின் சாதனைகள், மின்சாரத் துறையின்

அமைச்சருடைய சாதனை என்பதை மறுப்பதற்கில்லை. இம்மாதிரி நெருக்கடி நிலைமை, வேறு எந்த மாநிலத்திலாவது ஏற்பட்டிருந்தால், வேறு ஒரு கால கட்டத்தில் ஏற்பட்டிருந்தால், அந்தச் சூழ்நிலையில் மக்கள் எவ்வாறு பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால், நமது சாதனையை உண்மையிலேயே புரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று கூறிக்கொண்டு, இத்தகைய சாதனையைப் பெறுவதற்கு உறுதுணையாக நின்ற மின்சார வாரியத்தினுடைய எல்லா மட்டத்தில் இருக்கின்ற ஊழியர்களுக்கும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், இவைகள் எல்லாம் முறையோடு இயங்குவதற்கு புதிய திட்டங்களை அளித்துவரும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த அமைச்சரவைக்கும் எனது நன்றியைக் கூறி, அமைகிறேன்.

THIRU V. ISVARMURTI: Mr. Chairman, while I would like to point out the good aspects of the Electricity Board, I have to do the unpleasant duty of highlighting some of the defects which have exercised the minds of the public and also the people who are working in the Electricity Board. I think I will not be exaggerating the situation if I say that the Electricity Board suffers from a chronic maladministration and the time has come to look at the working of the Electricity Board from an entirely new angle. Something has to be done so that the Electricity Board may not fall a victim in the way the Madras Corporation has gone. I like to point out here that the inter-union rivalries in particular have clogged the working of the Board to such an extent that it is the recurrence of violence unleashed by a section of a Union against the other personnel of the Board, and just to give an example of the state of affairs that prevails in the Electricity Board, I like to cite the things that occurred in Dharmapuri Electricity system. On 27th September 1973, it is stated :

"29—9—1973 அன்று 'குறைதீர முறையிடுதல்' என்ற போர்வையில் கணக்காயர் சங்கத்தைச் சேர்ந்த 100 பேர் எவ்வித முன் அனுமதியும் பெறுமல் அலுவலக நேரத்தில் சுமார் 11-30 மணிக்கு மேற்பார்வைப் பொறியாளரின் அலுவலக அறையில் நுழைந்து கூச்சலிட்டு அநாகரிக வார்த்தைகளை அள்ளி வீசி மேற்பார்வைப் பொறியாளரைத் தாக்க முற்பட்டனர்."

MR. CHAIRMAN : Is it a Press report ?

THIRU V. ISVARMURTI : It is a handout.



MR. CHAIRMAN : Wherefrom did the hon. Member get it? If it is a Press report, he cannot read it.

THIRU V. ISVARMURTI : It is not a Press report. This is just one example. Throughout the State several such instances of one section of the Union unleashing violence against the technical personnel have occurred. For example, on 7th July 1973 in Tirunelveli such an incident took place; on 26th July 1973 in Erode, on 1st August 1973 in Vellore, on 9th August 1973 at Ennore, on 30th August 1973 at Pudukkottai, and on 29th August 1973 at Villupuram, and also at Tirutturaipundi. This has assumed such a magnitude that unless the Government bestow their best attention and bring about an amicable settlement, I think the Electricity Board will soon go out of our hands and it will lead to several irregularities of a very serious nature. I would like to point out how this particular union is really holding the Board to ransom. Mr. Chairman, recently, to clear off arrears of the bills that had accumulated for the past six months, the Board entered into an agreement with this Union and according to this agreement, these arrears are all now distributed in the form of what is called block works among the staff. I want to give an example of what this block works means. In the Pykara Electricity System alone, I am told that Rs. 22 lakhs is being paid for the next two months as overtime payment. This is a very funny situation, because the House may be interested to know that this overtime work is not done outside the office hours in any place, because they say that they are on strike, but they continue to do the overtime work during office hours. I read the other day what had happened. This open squandering of public money is resorted to and this goes on under the full glare of the Chief Engineers of the Board. There is an Accounts Member who must be knowing the financial implications of all these things. You know, in Calcutta how the Naxalites went around offices threatening those who were working outside office hours, after 5-30, " This means you keep more people out of employment. Either you get out or get killed. ' That is how the situation here is also developing. We advertised for the filling up of the posts of clerks two years ago. These people, one lakh and forty thousand people, have not got any employment while we are shelling out lakhs and

lakhs of money that should actually go to proper utilisation in the Board. The House will be interested to know that one clerk is able to do about 5 to 6 block works in a day and the overtime payments for a particular clerk, of the clerical cadre, comes to some thousands. The clerks draw more than what the Superintending Engineer draws for a month by this method of overtime payment. Just to give another example, in a particular revenue unit, just to clear off the arrears bill amounting to Rs. 32 thousand, Rs. 18,000 has been paid as additional remuneration, apart from regular pay. I am highlighting the serious financial irregularities not to cast aspersion on any particular member of the Board. People are worried as to where this will lead to. This overtime payment is paid to a particular Union in the face of stiff opposition from other Unions. This has led to demoralisation and inter-union rivalries. This is rather ironical. In the revenue units where they have done the work properly, they feel aggrieved, because they say, 'We have cleared the arrears and we are not able to enjoy the benefit of overtime payment'. I would request the Government to just examine through the Accounts Member who should know the financial implication of the things, and work out the quantum of payment to be paid to realise the arrears outstanding. I am told that to collect the arrears of Rs. 16 crores, the Board is prepared to disburse Rs. 2 crores in preparing these bills and I would like to know how much it will cost to collect the exact sum over the next few months.

பி.ப. 5–50 This overtime payment to the employees belonging to a particular Trade Union is not the only funny thing. There is another funny thing that has happened recently and that is the payment of what is called 'Special Custody Allowance'. The Special Custody Allowance is paid to the Store Keeper whose job is to keep custody of the stores materials. Here is a funny situation where the Board pays at the rate of Rs. 75 for a Chief Storekeeper and Rs. 50 for Store-keeper. I am told that the drivers of the Board are going to demand a Special Allowance. They might demand the special allowance for changing gear; if the vehicle is driven in the first gear, we will be consuming so much of fuel and if the gear is changed to the second or the third, there



will be saving in the consumption of fuel and, therefore, they should be paid the amount of savings effected by their change of gears. We have to stop all this funny mismanagement of the resources of the Board. The Government have to give their best thought as to how this imbalance could be recified. This mismanagement of the finances is not the only problem that is now before the Board. For example, there is much talk about the power crisis. If you permit me, Mr. Chairman, to say certain things on this problem of power crisis, I have my own way of looking at it. Now they say that hydel reservoirs are full. The present problem is how to generate thermal power. The question is why the Ennore Power Station is not working. I would like to say that we have not given the best technical talent to solve this problem. Here I would like to say one or two things. Though the Board is having specialised technical people who ought to man these schemes, the Board is having people from other departments—I do not say that they are not competent in the respective department to which they belong—who are not fully qualified to handle technical jobs. For example, the Chief Engineer (Projects) is a Civil Man. How do we expect him to attend to this problem concerning electrical equipment? In this connection, I would like to request the Government to see whether the time has not come to consider the question of putting specialists in positions of responsibility. I would like to suggest that we should have a complete re-modelling of the working of the Electricity Board. We must have an Electrical Engineer as Chairman of the Board, an Electrical Engineer as Secretary of the Board and I would even go a step further and say that the Secretary of this Department also must be a technical personnel. These demands have already been accepted in Uttar Pradesh. I would request the Government to consider whether the time has not come to solve the controversy of Administrator *vs.* Technocrat and see that technocrats are put in key positions, so that our Electricity Board once again becomes a model for other States. In this connection, I would like to request the Government to give the Engineer the proper place in the working of the Board. We all know that the Engineers from our State do not get proper representation in Central Commissions like the Central Water and Power Commission, because our Engineers'

designations, as they are now, are a disadvantage to them. They should be re-designated. Junior Engineers should be designated as Assistant Engineers, Assistant Engineers should be designated as Executive Engineers, and Executive Engineers, as Deputy Superintending Engineers. This does not involve the expenditure of even a penny. By simply redesignating these posts, we will be helping our Engineers to get representation in Central Schemes and to some extent we will also be relieving the stagnation in the cadre here. In this connection, I would like to request the Government to see whether it is not feasible to have a common seniority list of Engineers in the different departments for avoiding stagnation in certain particular departments. If we have a common seniority list for Civil, Mechanical and Electrical Engineers, whenever there is an opportunity to go on deputation or promotion, we can make a selection from that seniority list. Then the Engineers would not feel that because they have chosen a particular department, they are doomed to stagnate. The other day when I was going through the Administrative Reforms Commission's Report, I found that they had recommended this—what is called "Deputation List". Because we do not have a list of Engineers who could be deputed to the Central Scheme whenever there is a request, many of our Engineers are left out from those opportunities. So, it has been recommended that a Deputation List might be prepared and I request the Government to see that our Engineers are given proper representation not only in the working of the Electricity Board but also in other schemes outside the State.

Finally, Mr. Chairman, I would like to request the Government to consider whether the time has come to give the Engineers a new status because of their specialisation. Their demand for parity with the I.A.S. is a just demand. I would like to request the Government to see that the Engineers are placed in positions of administration of the Electricity Board, so that the self-seeking individuals' group rivalries and the resultant politicalisation of the working of the Board may be avoided and the highly technical project may not fall a victim to mismanagement. With these words, I conclude my speech. Thank you, Mr. Chairman.





* திரு. எஸ். ஏ. இ. ராஜமாணிக்கம்: மேலவைத் தலைவரவர்களே, 1973-74ஆம் ஆண்டின் தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூறுவதற்கு வாய்ப்பளித்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முதலாவதாக, சென்ற ஆண்டில் ஏற்பட்ட கடுமையான மின்சார வெட்டின் போது ஏற்பட்டிருந்த நெருக்கடியை மிகத் திறமையாகச் சமாளித்ததற்காக மின்சார வாரிய அமைச்சர் அவர்களையும், தமிழ்நாடு அரசையும் மனதார நான் பாராட்டுகிறேன். இந்த ஆண்டிலும் சென்ற ஆண்டைப் போலவே நெருக்கடி ஏற்படும் என்று கருதி, முன்னெச்சரிக்கையாகவே இருக்கின்ற தண்ணீரைக் குறைவாகப் பயன்படுத்தி ஒரு 15 சதவிகிதம் மின்வெட்டு வருடம் பூராவிலும் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் வைத்திருப்பது உள்ளபடியே வரவேற்புக்குரிய ஒரு செய்கையாகும். இதைப் போலவே ஒவ்வொரு ஆண்டும் வருகின்ற தேவைப்படக்கூடிய மின்சாரத்தையும், அந்த ஆண்டில் நம்மிடத்தில் உள்ள மின் வசதிகளையும் கணக்கிட்டு அறிந்துகொண்டு, முன்கூட்டியே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருவது மிகவும் நல்லதாக இருக்கும் என்று நான் கருதுகின்றேன். புதிய தொழில்களுக்குப் புதிய இணைப்புக்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளது பாராட்டுக்குரிய ஒரு செய்கையாகும். பண்டமாற்று முறையில் பக்கத்து மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுவருகிறோம். இதை இன்னும் அதிக அளவிலே பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இன்னும் எந்தெந்தப் பண்டங்கள் மற்ற மாநிலங்களுக்குத் தேவையோ அவைகளை நாமாகவே கொடுத்துக்கூட அங்கிருந்து மின்சாரத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வது ஓரளவு மின்சார வெட்டைத் தவிர்ப்பதற்கு வசதியாக இருக்குமென்று கருதுகிறேன். நம்முடைய முயற்சி எவ்வளவு பெரியதாக இருந்தாலும்கூட, எண்ணூர் அனல் மின்நிலையமும் நெய்வேலித் திட்டமும் அதிகமான அளவிலே மின்சாரத்தை உற்பத்தி செய்தாலொழிய, 1976-க்கு முன்பாக புதிய திட்டங்களின் மூலம் நமக்கு மின்சாரம் கிடைப்பதற்கு எந்தவிதமான வாய்ப்புமில்லை என்று அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலிருந்து தெளிவாகத் தெரியவருகிறது. எனவே அடுத்த ஆண்டிலும் அதற்கு அடுத்த ஆண்டிலும் எண்ணூர் அனல் மின்நிலையத்திலிருந்தும் நெய்வேலித் திட்டத்தின் மூலமும் அதிகப்படியான மின்சாரம் கிடைப்பதற்கு அரசு தனி கவனம் செலுத்தியாவது தகுந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். புதிதாக ஏற்றுக்கொள்ள இருக்கின்ற தூத்துக்குடி அனல் மின்நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம், நெய்வேலியின் இரண்டாவது கட்ட சுரங்கத் திட்டம் முடிந்து அதிலே ஏற்படுத்தக்கூடிய அனல் மின் நிலையம் ஆகியவற்றிலிருந்து கிட்டத்தட்ட ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளிலாவது மின்சாரம் கிடைக்கும்

[திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்] [1973 நவம்பர் 22

வசதி நிச்சயமாக ஏற்படும் என்று நான் கருதுகிறேன். இந்த இடைப்பட்ட காலத்தில், மிகச் சிறிய திட்டங்களை, மிகக் குறைந்த காலத்தில், ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுக் காலத்தில் முடிக்கக்கூடிய நிலையிலுள்ள ஏழெட்டு அல்லது ஒன்பது திட்டங்களைப்பற்றி நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இதற்கு வேண்டிய அனுமதியை மத்திய அரசிடமிருந்து பெற்று இந்தத் திட்டங்களையெல்லாம் மிகக் குறுகிய காலத்திலேயே நம்மால் முடிக்க முடியும். முடிந்தால் 1976-ம் ஆண்டிற்குள் இத்தகைய சிறு திட்டங்களிலே நான்கைந்து திட்டங்களை நிறைவேற்றிவிட முடியும். அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு இந்தச் சிறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, மின் உற்பத்திக்கென தனியாக ஒரு வாரியத்தினை அமைப்பதற்கான அறிவிப்பினை அரசு வெளியிட்டிருப்பதானது வரவேற்கத்தக்கதாகும். மின் உற்பத்திக்கு என ஒரு தனி அமைப்பு மிகத் தேவையானது. அப்படி ஏற்படக்கூடியதொரு அமைப்பிலே மின் வாரியத்திலே பணிபுரிந்து ஓய்வுபெற்ற 'சீஃப் எஞ்சினீயர்கள்' அனைவரையும் கொண்டதொரு குழுவினை ஏற்படுத்திக் கொண்டால், உள்ளபடியே அவர்களுடைய திறமையை நாம் பயன் படுத்திக் கொள்ள பெரும் வாய்ப்பு ஏற்படும் என்று நான் கருதுகிறேன். இதையும் அரசு ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மின் உற்பத்திக்கென தனியாக ஒரு வாரியத்தை அமைப்பது என்ற யோசனையைப் பாராட்டும் அதே நேரத்திலே அதன் விநியோகம் பற்றியும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இப்போது மின்வாரியத்திடம் இருக்கும் விநியோக முறையை பஞ்சாயத்து யூனியன்களிடமும் நகர மன்றங்களிடமும் விட்டுவிட்டால், விநியோகம் இன்னும் திறம்பட அமைவதற்கு வசதியாக இருக்கும். இன்று தமிழகத்தில் ஏழு நகர மன்றங்கள் மின் விநியோகத்தை ஏற்று நடத்துகின்றன. இந்த நகர மன்றங்கள் ஏற்றுக்கொண்டுள்ள விநியோக முறையில் இதுவரையில் எந்த விதமான புகாருக்கும் இடமின்றி —மின் வாரியத்தில் உள்ள தொழிலாளர்கள் பிரச்சினைகள் வேண்டுமானால் இங்கும் இருக்கின்றனவே தவிர, வேறு எந்தவிதமான புகாருக்கும் இடமில்லாமல்—விநியோகம் நடைபெற்று வருகின்றது. இப்படி விநியோகத்தை பஞ்சாயத்து ஒன்றியங்களிடமும் நகர மன்றங்களிடமும் விட்டுவிட்டால். இப்போதுள்ள 'லைன் லாஸ்' ஐந்து அல்லது ஆறு சதவிகிதம் குறையக்கூடிய வாய்ப்புகள் ஏற்படும். அதனால் ஏற்படும் நஷ்டத்தைக்கூட ஓரளவிற்கு நாம் ஈடுபடுத்திவிட முடியும். கோவை நகர மன்றத்தில் பத்தாண்டுக்காலம் நான்



1973 நவம்பர் 22] [திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்]

அங்கத்தினராக இருந்திருக்கிறேன். அந்த நேரத்திலே, எந்தப் பகுதியிலும் மின் இணைப்பிலிருந்து கள்ளத்தனமாக மின்சாரத்தை எடுத்ததாக—அவர்கள் சிறிய மாவு அரவை மில்களை வைத்திருப்பவர்களாக இருந்தாலும் சரி, வேறு சிறு தொழிற்சாலைகளை வைத்திருப்பவர்களானாலும் சரி, நகர சபைகளின் பொறுப்பிலுள்ள இடங்களிலே இப்படிக் கள்ளத்தனமாக மின்சாரத்தை எடுத்ததாக—இதுவரையில் எந்தவிதமான புகாரும் இல்லை. நகர மன்றத்தில் 30, 40 அங்கத்தினர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் விநியோகத்தில் எந்த விதமான புகாரும் இல்லாதபடி கவனித்துக்கொண்டு வருகின்றார்கள். எங்கே யாவது மின் இணைப்பிலிருந்து நேரடியாகக் கள்ளத்தனமாக மின்சக்தியை எடுக்கின்றார்கள் என்றால், உடனடியாக நகர மன்ற உறுப்பினர்களிடம் அல்லது நகர மன்ற அலுவலர்களிடம் புகார் செய்தால், அப்படிக் கள்ளத்தனமாக மின் சக்தியை எடுப்பதைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்கத்தக்க அளவிற்கு அங்கே உறுப்பினர்களும் அலுவலர்களும் இருக்கின்றார்கள். அந்த முறையில் கள்ளத்தனமாக மின் சக்தியை எடுப்பதைத் தடுக்க முடியும். அதேபோல இன்று கிராமப் பகுதிகளிலே பல இடங்களிலே நேரடியாக மின்சாரக் கம்பிகளிலிருந்து பம்பு செட்டுகளுக்கு இணைப்புகளைக் கொடுத்து கள்ளத்தனமாக பம்பு செட்டுகளை ஓட்டுகின்றார்கள் என்று பரவலாகக் கேள்விப்படுகிறோம். இவற்றையெல்லாம் கண்காணிப்பதற்குப் போதுமான அளவிற்கு வசதிகளும் வாய்ப்புகளும் இன்றையதினம் அரசாங்கத்தின் வசமில்லை. மின்சார வாரியத்திடமும் இல்லை. எனவே, விநியோகத்தை பஞ்சாயத்துகளிடமும், ஊராட்சி ஒன்றியங்களிடமும், நகர மன்றங்களிடமும் ஒப்படைப்பதன் மூலம் இதில் ஒரு சிறந்த மாற்றத்தைக் காண முடியும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 200-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்து உறுப்பினர்கள் இருக்கின்றார்கள், இவர்கள் பெரும்பாலும் கிராமங்களிலேயே தங்கி இருப்பவர்கள், பொறுப்பானவர்கள். இவர்களால் இப்படிப்பட்ட மின்சாரத் திருட்டுகளைக் கண்டு பிடிக்க முடியும். ஊரிலே யாராவது மின்சாரத்தைத் தவறாக உபயோகிக்கின்றார்கள் என்றால், சாதாரணமாக போட்டி போட்டுக்கொண்டு ஊர் மக்கள் ஊர் பெரியவர்களாகிய இவர்களிடம் நிச்சயமாகச் சொல்வார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

இதுபோன்றே மின்சாரக் கட்டணத்தைப் பொருத்தமட்டில், இன்று வசூலிக்கப்படாமல் விடப்பட்டிருக்கும் தொகை கிட்டத்தட்ட 15 லிருந்து 20 கோடி ரூபாய் வரையில் இருக்கும் என்று சொல்லுகின்றார்கள். இது கவனிக்க வேண்டியதொரு பிரச்சினை. கோடிக்கணக்கில் பணத்தைச்

[திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்] [1973 நவம்பர் 22

செலவழித்து மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம். ஆனால், விநியோகத்திற்குப் பின்னர் கோடிக்கணக்கில் வசூல் பாக்கி நிற்கின்றது என்றால், அது வேதனைக்குரியதாகும். எனக்குத் தெரிந்த வரையில், ஈரோட்டில் ரங்கா ஆயில் ஜின்னிங் ஃபேக்டரியில் மட்டும் கடந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக அவர்களுக்கு பில் கிடைக்காமல் அந்த ஒன்றரை ஆண்டுக்காலத்திற்கான கட்டணமாக பல லட்சக்கணக்கான ரூபாய் மின்சார வாரியத்திற்கு பாக்கியாக நிற்கின்றது. அவர்களுக்கு பில்லே கொடுக்கப்படாத காரணத்தினால், அவர்கள் பணமும் கட்டவில்லை. மின்சார வெட்டுக்கான அளவும் அவர்களுக்கு நிர்ணயிக்கப்படவில்லை. அவர்களும் மின்சாரத்தை ஒழுங்காக உபயோகித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதுபோன்றே ஈரோடு பகுதியில் பல சிறு தொழிற்சாலைகளுக்கு கடந்த ஆறு, ஏழு மாத காலமாக பில் வரவில்லை, எனவே, பணமே கட்டவில்லை என்ற தகவல்கள் எனக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால், கோவை நகர மன்றம் நடத்தும் மின் விநியோக ஸ்தாபனத்தைப் பொறுத்தமட்டில், ஒவ்வொரு மாதமும் குறிப்பிட்ட தேதியில் முறையாக பில்கள் கொடுத்து அவர்கள் மின்சாரத்திற்கான கட்டணத்தைக் குறிப்பிட்ட தேதியில் கட்டவில்லையென்றால் மின் இணைப்பைத் துண்டித்து விடுகின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளுக்குப் பயந்து, கோவை நகர மக்கள் காலம் தாழ்த்தாது கட்டணத்தைக் கட்டி விடுகின்றார்கள். எனவே, இப்படிக் கட்டணத்தை முறையாக வசூலிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

இன்னும் 'லைன் லாஸ்' என்று சொல்லுகின்றார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இது இங்கே குறைவாக இருந்தாலும், அதுவே மிக அதிகம் என்பதுதான் என்னுடைய கருத்து. அப்படிப்பட்ட லைன் லாஸைக் குறைப்பதற்கும் விநியோகத்தைப் பொறுத்தவரையில் நகர மன்றங்களிடம் விட்டுவிட்டால் நல்ல பலனைக் காண முடியும். கிராமப் புறங்களைப் பொறுத்தமட்டில், இதை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைப்பது நல்லதாக இருக்கும். இதையும் அரசாங்கம் கருத்தில் கொண்டு, இது சாதகமாக இருந்தால், இதைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், நமது நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அனைத்தும் மேற்குத் தொடர்ச்சி மலைகளைச் சார்ந்துள்ளதாகத் தான் இருக்கின்றன. இந்த நிலையில் தென்மேற்குப் பருவ மழை முறையாகப் பெய்தால்தான், அந்த உற்பத்தி நிலையங்களும் முறையாகச் செயல்படும். ஆனால், கிழக்குத்



1973 நவம்பர் 22] [திரு. எஸ். ஏ. இராஜமாணிக்கம்]

தொடர்ச்சி மலைகளையொட்டி எந்தவிதமான மின் உற்பத்தி நிலையங்களையும் நாம் இதுவரை அமைத்திருக்கிறோமா என்றால், இல்லை. திரு. சங்கரலிங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, சிறிய அளவில் 15 மெகாவாட் அல்லது 20 மெகாவாட் அளவிற்கு குறுகிய காலத்தில் பல திட்டங்களை முடிக்கக்கூடிய வாறு திட்டங்களைத் தீட்டி செயலாற்ற முடியுமா என்று யோசிக்க வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். வட கிழக்குப் பருவ மழை பெய்யும் அக்டோபர் முதல் டிசம்பர் வரையில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்து ஏராளமான தண்ணீர் கடலில் வீணாகப் போய் விழுகின்றது. அப்படி வீணாகும் தண்ணீரை முறையாகத் தேக்கி வைத்து உபயோகித்தால், அது பாசனத்திற்கும் பயன்படும்; அதே நேரத்தில் அதைச் சிறிய அளவில் மின் உற்பத்திக்காகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். இப்படி வீணாகப் போகும் நீரைத் தேக்கிவைப்பதன் மூலம், சிறு மின் உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். உதாரணமாக, வடஆற்காடு 6–10 பி.ப.

மாவட்டத்திலுள்ள சாத்தனூர் அணையில் ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கின்றது. என்றாலும் அங்கே மிகச் சிறிய அளவில்கூட மின் உற்பத்தி செய்யத்தக்க ஏற்பாடுகள் கிடையாது. அதுபோன்று பவானிசாகரில், தமிழகத்தில் வேறு எங்கேயும் இல்லாத அளவிற்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் இருக்கின்றது. நீர்ப்பாசனத்திற்காக அந்த நீர் உபயோகப்படுத்தப்படுகின்றது. அந்த அணைக்கட்டில் மின் சக்தியை உற்பத்தி செய்வதற்கு எந்தவிதமான ஏற்பாடும் இல்லை. முதலில் ஏதோ ஒரு சில ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று சொல்லி குழாய்களைக்கூடக் கொண்டு வந்து பதித்தார்கள். ஆனால், இது வரையில் அங்கே மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் எதையும் செய்ததாகத் தெரியவில்லை. அதிகாரிகளைக் கேட்ட நேரத்தில், 'அதற்குத் தேவையான உயரம் இல்லை' என்று சொல்லிவிட்டார்களே தவிர, அது எப்படி மேட்டூரில் சாத்தியமாகி இருக்கின்றது என்று எண்ணிப் பார்த்தார்களோ இல்லையோ தெரியவில்லை. மேட்டூர் அணையில் ஆற்றுப்படுகை மட்டத்திலேயே 40 மெகாவாட் மின் சக்தி உற்பத்தி செய்யும் அளவிற்கு அந்தக் காலத்திலேயே ஒரு மின் உற்பத்தி நிலையத்தை அமைத்திருக்கின்றார்கள். அதேபோல சாத்தனூர் அணைக்கட்டிலும் பவானி சாகரிலும் ஏன் செய்யக் கூடாது என்பதை யோசித்துப் பார்த்து, திட்டங்களைத் தீட்டினால், நிச்சயமாக நீர் மின்சார உற்பத்தி சக்தியை நாம் இன்னும் குறுகிய காலத்திலேயே அதிகரிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இதை மின்சார வாரியமும் அரசும் கவனத்தில் எடுத்து, எந்தெந்தப் பகுதிகளிலே 15 அல்லது 20 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கு நிலையங்களை அமைக்க

முடியுமென்பதை ஆய்வு செய்து அந்தக் காரியங்களைச் செய்வது மிகவும் நலமாக இருக்குமென்று இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மின்சார இலாகாவைப் பொறுத்தவரையிலே, நான் தொழிலாளர் பிரச்சினையைப்பற்றிப் பேசுகிற நேரத்தில், தொழிலாள நண்பர்கள் நான் இந்த நேரத்தில் அவர்களுக்கு விரோதமாகப் பேசுவதாகக் கருதிவிடக்கூடாது, மின்சார இலாகாவிலே உள்ள தொழிலாளர்களுக்குத் தேவையான சகல வசதிகளையும், மற்ற இலாகாவிலே உள்ளவர்கள் பொறாமைப்படக்கூடிய அளவிற்கு தமிழக மின்சாரவாரியமும், அரசும் செய்து கொடுத்திருக்கின்றன, என்றாலும் கூட, அங்கேயுள்ள அதிகாரிகளைப் பார்க்கப் போகிற நேரத்தில், அது சென்னையாக இருந்தாலும், கோவையாக இருந்தாலும், எப்போதும் அங்கேயுள்ள தொழிலாளர் பிரச்சினைகள் தான் அந்த நேரங்களில் விவாதிக்கப்பட்டு வருகின்றனவே தவிர, வருகிற மக்களின் காரியங்களைக் கூட, செம்மையாக மேலதிகாரிகள் செய்வதற்கு அங்கேயுள்ள தொழிலாளர்கள் விடுவதில்லை. இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு மின்சார வாரியமும், மின்சார அமைச்சரவர்களும் வெகுவிரைவிலே முயற்சி எடுத்தால், அந்த இலாகாவில் ஒழுங்காக வேலைகள் நடக்க வாய்ப்பு இருக்கும். இதை இந்த நேரத்தில் என்னால் சொல்லாமலிருக்க முடியவில்லை. அதிலே வேலை செய்கிறவர்கள் கிட்டத்தட்ட அரசாங்க ஊழியர்களைப் போன்று, பணி செய்துகொண்டிருக்கிறார்கள். மின்சார வாரியம் தனியான அமைப்பு என்றாலும், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் போன்ற நிலையில் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதிலே உள்ள பில் கலெக்டர்களும், காசாளர்களும் நாங்கள் இவ்வளவு பில் தான் போடுவோம், அதற்கு மேல் வேண்டுமானால் ஓவர்டைம் வேண்டுமென்று கேட்பதும், அதற்கு மின்சார வாரியம் பணிந்து கொடுத்து, ஓவர்டைம் கொடுப்பதற்கு வசதி செய்து கொடுப்பதும், பில் கலெக்டர்கள் இவ்வளவு பில்களைத் தான் வசூலிக்க முடியும், அதற்கு மேல் வசூலிக்க முடியாது என்று சொல்வதும். இந்த நிலைக்கு மின்சார வாரியமும், அரசாங்கமும் ஒத்துழைக்கிறது என்றால், அது அரசாங்கத்தின் மற்ற பல்வேறு இலாகாக்களிலே உள்ள எழுத்தர்கள் இவ்வளவு ஃபைல்களைத் தான் பார்ப்போம், இவ்வளவு ஃபைல்களில் தான் குறிப்பு எழுதுவோம் என்று சொல்லக்கூடிய இக்கட்டான நிலைமை அரசாங்க அலுவலகங்களில் வெகு விரைவிலே ஏற்பட்டுவிடக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தும். மின்சார வாரியத்தில் வசூல் செய்வதற்கோ, பில்களைப் போடுவதற்கோ தேவையான கிளார்க்குகள் இல்லையென்றால், இன்னும் ஆயிரம் பேர்களை வேலைக்குச்



சேர்த்துக்கொள்ளலாம். இப்போது 25 கோடி ரூபாய் அளவிலே நிலுவை இருக்கிறதே, இதன் வட்டி நஷ்டத்தைக் கூட அவர்களுக்குச் சம்பளமாகச் கொடுத்துவிடலாம். இந்த நடைமுறை இந்தியாவில் எந்த அரசாங்க அலுவலகங்களிலும் இல்லாத ஒரு நடைமுறை. அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு ஓவர்டைம் பேமெண்ட் என்று சொல்வது மிகவும் வருந்தத்தக்க ஒரு செய்கையாகும். 'வொர்க்லோட்' என்று சொல்கிறார்கள். 'வொர்க்லோட்' என்று சொல்வது உடலுழைப்புக்குத் தான் பேசப்பட்டு வருகிறதே தவிர, கிளார்க்குகளுக்கு 'வொர்க்லோட்' என்று கூறுவது தவறு என்று நான் மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இது மிகவும் தேவையற்ற செயல். அரசாங்க இலாகாக்களிலே இன்னின்ன வேலை செய் என்று அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கிறார்கள். ஆனால் இந்த இலாகாவிலே 400-க்கு மேல் பில் போட்டால், 10 காசு போதாது, 40 காசு வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றால், இது வருந்தத்தக்க சூழ்நிலை. இந்தச் சூழ்நிலையை மின்சார வாரியம் உடனடியாக மாற்றித் தீர வேண்டும். இன்னும் ஆயிரம் பேர்களுக்கு வேண்டுமானால், வேலை கொடுத்துவிடுங்கள். இந்த நிலைமையை மின்சார வாரியத்தில் உண்டாக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மின்சார நிதி நிலையை வரவேற்று என்னுடைய சிற்றுரையை முடிக்கிறேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1973-74 நிதி நிலை, 1972-73 துணை நிதி நிலை அறிக்கைகளின் பேரில் சில கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு நண்பர்களெல்லாம் அழுத்தந்திருத்தமாகப் பேசிய பல கருத்துக்களை நானும் எண்ணி நினைந்து, இப்படியுமா நிலை என்பதைக் கண்டறிந்த பிறகு என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

உங்களுக்கெல்லாம் தெரிந்த கதை தான், 8 அல்லது 10 மாதங்களுக்கு முன்பு மக்கள் தங்களுக்கு கரண்டு கிடைக்கவில்லை என்று கஷ்டப்பட்டார்கள். கரண்டு கிடைக்கவில்லையென்று சொல்லும்போது, மின்சார வாரியத்தால் கிடைக்கவில்லையா, அல்லது அரசால் கிடைக்கவில்லையா என்பதை எண்ணிப் பார்க்கிறபோது, இயற்கை சதி செய்து விட்ட காரணத்தினால்தான், இந்த நிலை ஏற்பட்டது என்பதை நாடு அறியும். இயற்கை சதி செய்துவிட்ட காரணத்தினால், இயற்கையின் கோளாறால், அரசும் மற்ற எல்லோரும் அவதிக்

குள்ளாகியிருந்தோம். அந்த நேரத்தில் அரசு ஊண் உறக்கமின்றி செயபனிட வேண்டியவைகளைச் செப்பனிட்டு, அதிகாரிகளை விட்டு எங்கு கரண்டு கிடைக்குமோ அங்கே கரண்டு கிடைக்க வகை செய்தது. கரியை வட நாட்டிலிருந்து தருவிக்க வேண்டுமென்பதற்காக கப்பலை சொந்தமாகக் கட்டுவோமா, இரவலுக்கு வாங்கலாமா என்று எண்ணியது. ஏதோ ஒரு வகையில் சமாளித்தது. 75 சதவீத வெட்டு என்று பயந்த நேரத்தில் நமக்குச் சாதகமாக மழை பெய்த பிறகு, இப்போது 15 சதவீத வெட்டு என்று சொல்கிறார்கள். 15 சதவீத வெட்டு என்று சர்க்கார் சொல்கிறதே தவிர, நாட்டு மக்களுக்கு வெட்டு இருப்பதாகத் தெரியவில்லை. மக்கள் மின்சாரம் பூரணமாகக் கிடைத்து விட்டதாகக் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் 15 சதவீத வெட்டு என்பது மக்களைப் பாதிக்கவில்லை. அந்த இக்கட்டான நிலைமையில் சிரமப்பட்டு சமாளித்த ஆட்சிக்கு நன்றி தெரிவிப்பதோடு அதற்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகளுக்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய திரு. தீக்ஷிதர் அவர்கள் கூறினார்கள். 45 மின்சாரக் கம்பங்கள் இருந்தால், 5 விளக்குகள்தான் எரிகின்றனவேயொழிய 40 விளக்குகள் எரியவில்லை என்று கூறிவிட்டு விவசாயிகள் பம்புசெட்டுகள் போட்டுள்ள இடங்களில் விளக்குக் கம்பங்கள் போட வேண்டும். ஏனென்றால், அங்கே நண்டு, நட்டுவாக்களி, பாம்பு போன்றவைகள் இருக்கும் என்று சொன்னார்கள். அவைகளுக்கும் மின்சாரம் வேண்டுமென்ற வகையிலே அவர்கள் கூறினார்கள். எனக்குத் தோன்றுகிறது, திரு. தீக்ஷிதர் அவர்கள் உண்மையைத்தான் கூறுகிறார்கள். மக்கள் பயன் அடையவேண்டிய அளவிற்கு பயன் அடைகிறார்கள். இன்னும், நண்டு, நட்டுவாக்கிளி, பாம்பு இவைகளுக்குத்தான் மின்சாரம் வேண்டும். இவைகளுக்காக மின்சாரம் தேவை என்று வற்புறுத்துகிற மாதிரி இருந்தது. தலைவரவர்களே, ஒன்றை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மின்சாரத்தைப் பொறுத்தவரை, பல ஆண்டுக் காலமாக பப்ளிக் யுடிலிடிக்குத் தான் காரியங்களை ஆற்றிக் கொண்டு வருகிறோமே தவிர, எந்தக் காலத்திலும் இதை 'கமர்ஷியல் பிராஜக்ட்' ஆக்கி, லாபம் உண்டாக்கி, வாங்கியிருக்கிற கடனை அடைப்பதற்கு, கடனுக்கு வட்டி கட்டுவதற்கு வேண்டிய முறைகளை கையாள இருக்கிறோமோ, தெரியவில்லை. ஒவ்வொரு ஆண்டும் ரிசர்வ் பாங்கியிருந்தும், எல்.ஐ.சி.-யிலிருந்தும் கடன் வாங்குவதையும், பற்றாக்குறைக்கு சர்க்கார் கடன் கொடுப்பார்களா என்று எண்ணி கடன் வாங்குகிற தன்மையிலேயே காரியங்கள் நடப்பதையும்



நிச்சயமாக அரசு தடுத்தாக வேண்டும். அரசு எவ்வளவு காலத்திற்கு மேலும்
மேலும் பணத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்? மின் வாரியம் பி.ப.
பணம் சம்பாதிக்க வேண்டாமா? சர்க்கார் பணமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். 6–20
சர்க்காருக்குப் பணம் தர வேண்டாமா? பிரதமர் இந்திரா காந்தி பொருளாதார நிலைபற்றிப் பேசுகிறபோது, கஷ்டமான நிலை என்றுதான் சொல்கிறார்கள். தமிழ்நாட்டையும் இது ஓரளவுக்குப் பாதிக்கும் என்பதற்காகத்தான் கொஞ்சம் சிக்கன முறைகள் தேவை என்று எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் அனைவரும் சொன்னார்கள். செலவு அதிகமாகிறது, அது குறைக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

அடுத்தபடியாக, லைன் லாஸ்பற்றிச் சொன்னார்கள். இது ஏறக்குறைய 25 ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகின்ற ஒன்றாகும். இது நேற்று ஆரம்பித்து இன்று முடிந்துவிட்டது என்பதல்ல. நானும் இந்த அவைக்கு வந்து ஏழு, எட்டு வருஷமாகிறது. எல்லோருமே லைன் லாஸ், லைன் லாஸ் என்பதை வலியுறுத்திக் கூறி வருகிறார்கள். ஆனால் அதற்குச்செய்ய வேண்டிய காரியம் என்ன? நான் ஏதோ 'டெக்னிகல் எக்ஸ்பர்ட்' என்று தலைவர் அவர்கள் தயவுசெய்து கருதிவிட வேண்டாம். 18 சத வீதத்திற்கு லைன் லாஸ் இருப்பதாக நீண்டகாலமாகப் பேசப்பட்டு வருகிறது. எப்படிக் குறைப்பது என்று ஆராய்ந்திருக்கிறார்களா, அதற்கு ஆவன செய்திருக்கிறார்களா என்று பார்த்தால், இல்லை என்றுதான் தோன்றுகிறது. இப்படி அதிகமாகத் தான் இருக்கும் என்று டெக்னிகல் எக்ஸ்பர்ட்கள் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இது unavoidablt.

**திரு. சி. வி. ராஜகோபால் :** It is unavoidable என்று கூறிவிடலாம், தலைவரவர்களே. எதிர்பார்த்து ஏற்படுகின்ற பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே இது எதிர்பார்ப்பதுதான். இது எதனால் ஏற்படுகின்றது என்பதை எனக்குத் தெரிந்த அளவுக்குச் சொல்கிறேன். சில இடங்களில் மரங்கள் வெட்டப்படாததால், மரத்தின் தழைகள் மின்சாரம் ஓடுகின்ற கம்பிகளில் படுவதால் ஏராளமாக மின்சாரம் வீணாகும் என்று நிபுணர்கள் சொல்கிறார்கள். கம்பிகள் சிலவிடங்களில் தொங்கவிடப் படுவதாலும் இது ஏற்படுகிறது. 'டெக்னிகல் நாலெட்ஜ்' உள்ள எஸ்.ஈ. டி.ஈ. அல்லது நிபுணர்களுக்கு இது தெரியும். ஒரு இடத்தில் ஒரு ஜெனரேட்டரில்

லட்சம் யூனிட் மின்சாரம் கிடைக்கிறது, அதை வினியோகம் செய்கின்றோம். அதன் மூலம் எவ்வளவு செலவாகிறது, வருமானம் என்ன? பில்கள் போட்டுப் பார்த்து எவ்வளவு வருகிறது என்று கணக்குப் போட்டுப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்து 80,000 யூனிட்டுகள்தான் செலவாகியிருக்கிறது என்றால், 20,000 யூனிட் லைன் லாஸ் என்று பொருள். அப்படி ஒரு லட்சம் யூனிட் ஒரு ஐம்பது மைல் அளவுக்கு அல்லது 100 மைல் அளவுக்குக் கிடைக்கும்படி ஏற்பாடு செய்திருந்தால், அந்த இடத்தில் எவ்வளவு லைன் லாஸ் என்று கண்டு பிடித்துவிடலாம். லைன் லாஸ் என்ன என்று கண்டுபிடிக்க மீட்டர் காஜ் ஆங்காங்கே வைத்து கணக்கு எடுத்திருந்தால், நிச்சயமாக இந்த அளவுக்கு லைன் லாஸ் வரவே வராது. எத்தனையோ டிபெக்ட்ஸ், அதனால் ஏற்பட்டு விடும் என்று கூறலாம். நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன், அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு, அடுத்த தடவை இந்த அவையில் பேசுகிறபோது லைன் லாஸ் 6 சதவீதம் என்று சொல்லுமளவுக்கு வேலை செய்து காட்டச் சொல்ல வேண்டும். செய்து காட்ட முடியும், அரசு செய்து காட்டுமென்று மனப்பூர்வமாக நம்புகிறேன். அப்படி ஒரேயடியாக முடியாவிட்டால், 18 சத வீதம் என்பதை 12 சத வீதமாகக் குறைத்துக் காட்டுங்கள். பிறகு 6 சத வீதமாகக் குறைப்பதற்கு உங்களுடைய சாமர்த்தியத்தைக் காட்டுங்கள். நிபுணர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏறக்குறைய 10, 15 கோடி ரூபாய் அளவுக்கு இப்படி எனர்ஜி வீணாகிறது. இதைப் போக்க துரிதமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எல்லோரும் விளக்குகளைப்பற்றிச் சொன்னார்கள். கோவை ராஜமாணிக்கம் அவர்கள் மிக வருத்தத்தோடுதான் சொன்னார்கள். எனக்குத் தெரிந்த வரையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய குறிக்கோள், எண்ணம் எல்லாம் உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டுமென்பதுதான். இது அதனுடைய அடிப்படைக் குறிக்கோள். உழைக்காமல் ஊரை அடித்து உலையில் போட வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அல்ல. தகுதி படைத்தவன் தகுதிக்கேற்ப உழைப்பு, அதற்கேற்ப ஊதியம் தேவை என்பதுதான் கொள்கை. மவுண்ட் ரோடில் உள்ள மின்சார வாரிய அலுவலகத்தில் தொழிற் சங்கங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று இப்பொழுது சொன்னார்கள். அது அரசியல் அடிப்படையில் இருக்க வேண்டுமென்றும் சொல்வேன். அது இருக்கக் கூடாது என்று வாதிடுகிறவன் நான் அல்ல.



ஏழைத் தொழிலாளர்கள் மீது எங்களுக்கு இரக்கம் உண்டு. அவர்களுக்கு, எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்கள் சொன்னது போல், வீட்டு வாடகைப்படி, சைக்கிள் அலவன்ஸ், சீருடை வழங்குதல், இன்னும் எவ்வளவோ சலுகைகள் செய்து கொடுத்திருந்தாலும்கூட, அங்கேயுள்ள ஒரு பிரிவினர், கணக்காயர்கள், பில் எழுதுகின்றவர்கள் போன்றவர்கள் அவர்களுக்கு என்று நியமிக்கப்பட்ட பணிகளைச் செய்யவில்லை என்று சொல்கின்றபோது, குறை சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இந்தக் குறைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டிருக்கும் ஒரு நிர்வாகம் இதிலே தன்னுடைய ஆதிக்கத்தைச் செலுத்தி, டெக்னிக்கல் சைடில் இருக்கும் இன்ஜினியர்களுக்கு—யாருடைய மனமும் புண்படாமல் தெரிவித்துக் கொள்கிறேன்—கொஞ்சம் பிரெயின் பவர்—மரியாதை கொடுக்க வேண்டும்.

MR. CHAIRMAN : It is not brain power but mental power.

திரு. சி. வி. ராஜகோபால்: கணக்காயர்களுக்கும் நிர்வாகப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் இடையே இப்பொழுது போட்டா போட்டி நடக்கிறது. அந்தப் போட்டா போட்டியில் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அந்தத் தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் எதிர்க் கட்சியிலும் இணைந்திருக்கிறார்கள். எங்களுடைய கட்சியின் எண்ணம் உழைப்பு, உழைப்புக்கேற்ற கூலி. சில கட்சிகளுக்கு உழைப்பே இல்லாமல் ஊதியம் வாங்கலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அந்தக் கட்சிகளின் பெயர்களை இந்த அவையில் கூற நான் விரும்பவில்லை. அவர்கள் வேலையே செய்யாமல் கூலி வாங்க யத்தனிக்கிறார்கள். ஓவர்டைம் கூலி ரூபாய் 300, 350 என்று வாங்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஐந்து, ஆறு மாதங்களாக கட்டணத்திற்கான பில்கள் வழங்கப்படவில்லையென்று குறை சொல்லப்பட்டது. பல கோடி ரூபாய் இந்த வகையில் வசூல் செய்யப்படாமலிருந்து வருகிறது. இந்த நிலைமைக்கு யார் அடிப்படைக் காரணம்? அந்த பில் கலெக்டர்கள் மாதா மாதம் சம்பளம் வாங்கவில்லையா? இது அக்கிரமம் அல்லவா? இந்த நிலைமையைப் போக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனோ தானோ என்று இருந்து விட்டால், திரு. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் கூறியது போல், ஒரு நாள் அந்த வாரியமே இயங்காத நிலை வந்துவிடக்கூடும். எதிர்காலத்தில் அவ்வளவு பயங்கரமான சூழ்நிலை வந்துவிடலாம். ஆகையினால்தான் தக்க நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கணக்காயர்கள், பில் கலெக்டர்கள், இன்னும் மற்றவர்களும் நிர்வாகத்தோடு

[திரு. சி. வி. ராஜகோபால்] [1973 நவம்பர் 22

பி.ப. 6–30 எந்த முறையில் ஒத்துழைத்து வருகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுக்குத் தகவல்கள் வேண்டும் என்பதற்காக இரண்டு பேர் வைத்துக்கொள்கிறார்கள். டிரேட் யூனியனிடம் கேட்டுத்தான் எதையும் செய்ய வேண்டுமென்று 'பி.ஏ.' யை மிரட்டுகிறார்கள். இது நியாயம்தானா? நான் இம்மாதிரி முறையை வன்மையாகக் கண்டிக்கிறேன். டிரேட் யூனியன் என்று சொல்லிக்கொண்டு நிர்வாகத்தில் தலையிட்டு, அரக்கோணத்தில் இருக்கிறவனை செங்கற்பட்டில் போடு, இங்கேயிருக்கிறவனை அங்கே போடு என்று ஒரு பெரிய தோரணையில் நடந்துகொள்கிறார்கள். அந்த தோரணையை உடைத்து எறியவேண்டும். அவ்வாறு செய்யவில்லையென்றால், ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் என்ன, சம்பளம் வாங்காமலா வேலை செய்கிறார்கள். அவ்வாறு நடந்து கொள்ளுபவர்கள் மீது தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும். போனஸ் கொடுக்க வில்லை என்று கிளர்ச்சி செய்கிறார்கள். கிளார்க், அக்கௌண்டன்ட் என்று பல பேர்களைப் போட்டிருந்தும், 6 மாதம் என்ற அளவுக்கு பில் தயார் பண்ணி அனுப்பாமலிருக்கிறார்கள். அவர்கள் இஷ்டப்படி மேலே இருக்கிறவர்களைக் கீழே இறக்கவேண்டும். அவர்கள் தங்கள் காலடியில் விழவேண்டும். அது போன்ற போக்கை அரசு மிகச் சாதாரணமாக நினைத்து விட்டுவிடக்கூடாது. யாராக இருந்தாலும், கவலைப்படாமல் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நாட்டைக் கெடுத்துவிடக்கூடாது என்பதற்காகத் தான் இதை அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறேன். சமீபத்தில் ஒரு எஸ். ஈ. யை ஓட ஓட விரட்டியிருக்கிறார்கள். லக்ஷ்மிநாராயணன் என்பது அவரது பெயர். அவர் 8, 10 என்று யூனியன் வைத்துக்கொள்ளாதீர்கள், ஒரு யூனியன் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். பல மணி நேரம் அவர்களோடு பேசிப் பார்த்தார். அவரை அவர்கள் வெளியே விடமாட்டோம் என்று சொல்லி விட்டார்கள். 10 நிமிஷம் அவகாசம் கொடுங்கள், 'லட்ரின்' போய்விட்டு வந்து விடுகிறேன் என்று சொன்னாலும், அவரை அவர்கள் விடவில்லை. உங்கள் யூனியன் கோரிக்கைகளை எடுத்துக் கொள்ளுகிறேன் என்று கெஞ்சிக் கேட்டும், ஈவு இரக்கம் இல்லாமல் அவரைக் 'கேரோ' செய்து, அதற்குப் பின்னாலே 7, 7½ மணிக்குத்தான் அவர் வெளியே வந்தார். வெளியே வந்தவர் நேரே எலெக்ட்ரிசிட்டி போர்டுக்கு வந்து, என்னை வேறு இடத்துக்கு மாற்றுங்கள், இல்லாவிட்டால் ராஜினாமா பண்ணி விட்டுப் போகிறேன் என்று சொன்னார். இன்றைய தினம் காஞ்சிபுரத்தில் 3, 4 பேர் இருந்துகொண்டு தங்கள் இஷ்டம் போல் நடந்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் 300, 400 ரூபாய் என்று சம்பளம் வாங்குகிறார்கள். இன்று நாட்டில் 150 ரூபாய் கூடக் கிடைக்காமல்



1973 நவம்பர் 22] [திரு. சி. வி. ராஜகோபால்]

எத்தனையோ பேர் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்போது, இவர்கள் டிரேட் யூனியன் என்று சொல்லிக்கொண்டு பல கஷ்டங்களைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். நாட்டிலே வேலையில்லாமல் எவ்வளவோ பேர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் 300, 400 ரூபாய் என்று வாங்குகிறோமே என்ற பெருந்தன்மையான எண்ணம் இல்லாமல், அவர்கள் பில் சரியாக எழுவது இல்லை. 'ஓவர் டைம்' அலவன்ஸ் என்று கேட்கிறார்கள். ஆனால் 8 மணி நேரம் கூட சரியாக வேலை செய்வதில்லை. சரியாக வேலை செய்யாமல் ஓவர்டைம் அலவன்ஸ் கேட்பது என்ற போக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாராவது நல்லவர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த நல்லவர்களும் கொஞ்சமாகத்தான் இருக்கிறார்கள். ஒரு கிளார்க் 400 பில் போட்டால், உன்னை யார் 400 போடச் சொன்னது, போடு 200, பிறகு எழுந்து போ என்று சொல்லுகிறார்கள். எந்த இடத்திற்கு வேண்டுமானாலும், அமைச்சர் அவர்கள் ஒரு நாளைக்கு மிக ரகசியமாகப் போய்ப் பார்க்கட்டும் 11 மணிக்கு ஆபீசிற்கு வருவார்கள். 11¼ மணி வரை இருப்பார்கள். பிறகு வெளியே வந்து விடுகிறார்கள். உள்ளே போனால் அங்கே 50 நாற்காலிகள் இருந்தால், 4 பேர் தான் வேலை செய்கிறார்கள். ஏதாவது கேட்டால், தெரியாதா உன்னை, உன்னைத் தொலைத்துவிடுவேன் என்கிறார்கள். இது மிக வருத்தமாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. அதைத் துடைத்தாக வேண்டும். அங்கங்கே ஒரு யூனியன். அதற்கு ஒரு டெலிபோன் வசதி. இங்கேயிருந்து அங்கே பேசுவது. டிரங் கால்ஸ் வேறு. இது நியாயம்தானா என்று கேட்கிறேன். ஏதாவது கேட்டால் ஸ்ட்ரைக் என்று வந்துவிடுகிறார்கள். இம்மாதிரி எல்லாம் நடப்ப தற்கு, டிரேட் யூனியன் என்று சொல்லி 'அட்வான்டேஜ்' எடுத்துக்கொள்கி றார்கள். உங்களுக்கு நன்றாகத் தெரியும். இப்படித்தான் ராஜகோபாலாச் சாரியார் பீரியடிலே, போலீஸ்காரர்கள் எல்லாம் 'ஆகா' யூனியன் என்று சொன் னார்கள். அந்த உத்தமர் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் புத்திமதி சொன் னார்கள். நாட்டு மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவேண்டிய நீங்களே, இந்த மாதிரி ஸ்டிரைக் என்று ஆரம்பித்துவிட்டால், நாட்டு மக்கள் கதி என்னாவது; ஆகவே, உங்களுக்கு எல்லாம் யூனியன் கிடையாது என்று சொல்லி, உங்களை எல்லாம் 'எஸன்ஷியல் சர்வீஸ்' என்று ஆக்கிவிட்டேன் என்று சொல்லி விட்டார் போலீஸ்காரர்களின் கிளர்ச்சியைப் போலீஸ்காரர்களை வைத்தே அடித்து அடக்கிய வரலாறு சரித்திரம் இருக்கிறது. நான் ஏன் இவ்வளவு தூரம் இதை வற்புறுத்திச் சொல்கிறேன் என்றால், இம்மாதிரிக் காரியங்களால் நாட்டின் தொழில் உற்பத்தி கெட்டுவிடும்.

*[திரு. சி. வி. ராஜகோபால்] [1973 நவம்பர் 22*

இங்கே எலெக்ட்ரிசிட்டி போர்டு மௌண்ட் ரோட்டில் இருக்கிறது. அங்கே 50, 60 பேர் யூனியனைச் சேர்ந்தவர்கள் உட்கார்ந்து கொண்டு வேலை ஒன்றும் செய்யாமல் சிகரெட் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த சர்க்கார் தொழிலாளர்கள் மீது இரக்கம் கொண்ட சர்க்காராக இருப்பதால், அதிகம் நடவடிக்கை எடுப்பதில்லை. இதைச் சிலர் 'அன்டியூ அட்வான்டேஜாக' எடுத்துக்கொள்ளுகிறார்கள். அப்படி 4 பேர் நடந்துகொள்வதால் 400 பேர் செய்கிற காரியங்களைக்கூட மந்தப்படுத்துகிறார்கள். அவர்களுக்குத்தான் செல்வாக்கு இருக்கிறது. இஞ்சினியர் ஏதாவது சொன்னால், அவரை மாற்றிவிடுகிறார்கள். இந்த முறையை எல்லாம் தயவுகூர்ந்து சிந்தித்து, அதற்கு ஒரு கமிஷன் போட்டு சரிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இலாகா சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது திரு. சங்கரலிங்கம் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். திட்டங்கள் ஏராளமாகப் போட்டிருக்கிறோம். 1978-79-க்குள் ஏராளமான மெகாவாட் கரண்ட் உற்பத்தி செய்யவேண்டுமென்று போட்டிருக்கிறோம். அதற்கு டெல்லியில் இருக்கிற சர்க்காரிடமிருந்து அனுமதியை எதிர்பார்க்கிறோம் என்று கூறினார்கள். எந்தத் திட்டமாக இருந்தாலும், அது குறிக்கப்பட்ட காலத்திற்குள் செயல்படுத்தப்படவேண்டும். 2 வருஷத்திற்குள் அது செயல்படவேண்டுமென்றால் அதற்குள் அதை முடித்துவிடவேண்டும். அதற்கு மேல் போனால், 200 கோடிக்குத் திட்டம் போட்டால் 300, 400 கோடி ரூபாயில் வந்து முடியும். திட்டம் என்றால், குறிப்பிட்ட கால அளவுக்குள் அதை முடித்துவிடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற இந்த சர்க்காருக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். உரையை முடிப்பதற்கு முன் ஒன்றே ஒன்றைக் கூறிக்கொள்ளுகிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் கரண்டுக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்று எனக்கு முன்னே பேசிய உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் குறிப்பிட்டார்கள். விவசாய மக்கள் நிறைய நன்மைகள் பெற்றிருக்கிறார்கள். சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். எல்லோருக்கும் கஷ்டம் இருக்கிறது. ஒரு நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் தங்களுக்கு 'பாலாறு சர்டிபிகேட்' கிடைக்கவில்லை என்பதற்காக அல்லோலகல்லோலப்பட்டார்கள். நான் இந்த அரசை அணுகி ஒரே மணி நேரத்தில் செயலாளரை, துணைச் செயலாளரைப் பார்த்து வாங்கிக் கொடுத்தேன்.



*1973 நவம்பர் 22] [திரு. சி. வி. ராஜகோபால்]*

நான் மாண்புமிகு அமைச்சர் திரு. ஆதித்தனார் அவர்களிடம் சென்று பி.ப. 6-40
அந்த சர்ட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டேன். 'இப்போது எப்படி, என்னிடம் இல்லையே' என்று அவர்கள் சொன்னார்கள். விவசாயிகள் எல்லோரும் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னேன். நீங்கள்தான் சர்டிபிகேட் தரவேண்டுமென்று கேட்டேன். அவர்கள் என்னிடம் இல்லையே என்று சொல்லிவிட்டார்கள். வழக்கமாகவோ, பழக்கமாகவோ சொல்லிவிட்டார்கள். அதைக் குற்றம் என்று நீங்கள் எண்ணக்கூடாது. (சிரிப்பு) இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், உடனடியாக அந்த விவசாயிகளுக்கு 'பாலாறு சர்ட்டிபிகேட்' வாங்கிக் கொடுத்தால்தான் 'கரன்ட்' கிடைக்கும் என்ற நிலை ஏற்பட்டது. உடனடியாக சம்பந்தப்பட்ட செயலாளர், துணைச் செயலாளர் இவர்களைக் கண்டு, ஒரே ஒரு மணி நேரத்தில் 'பாலாறு சர்ட்டிபிகேட்' அளிப்பதற்கு அதிகாரிகள் உத்தரவிட்டு அனுப்பினார்கள். இனி எந்த விவசாயி 'பாலாறு சர்ட்டிபிகேட்' கேட்டாலும், உடனே வழங்கவேண்டுமென்று உத்தரவிட்டார்கள். ஒரு மணி நேரத்தில் 'பாலாறு சர்ட்டிபிகேட்' வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன் நான். சர்க்கார் அதற்கான மெமோராண்டத்தை எல்லா மாவட்டத் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதில்கூட திரு. சி. வி. ராஜகோபால் அவர்களது 'ரெபிரசென்டேஷன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'பாலாறு சர்ட்டிபிகேட், பாலாறு சர்ட்டிபிகேட்' என்று கூறுகிறார்களே, அது என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. சி. வி. ராஜகோபால் :** விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு பம்பு செட்டுகள் போடவேண்டுமென்றால், 'பாலாறு சர்ட்டிபிகேட்' கொடுக்க வேண்டும். அதாவது பாலாறுக்குப் பக்கத்தில் இருப்பதற்காக அந்த சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும். பாலாறு செங்கற்பட்டு முதல் வட ஆற்காடு வரையில் உள்ளது. அந்த சர்ட்டிபிகேட் இல்லாமல் பம்ப்செட் போட முடியாது. 'பாலாறு சர்ட்டிபிகேட்' கொண்டு வந்து கொடுத்தால்தான், கரன்ட் கொடுப்பார்கள். எனவே நான் சர்க்கார் அதிகாரிகளைக் கண்டு—திரு. சுலைமான் என்ற அதிகாரியைக் கண்டு, ஒரு மணி நேரத்தில் அதற்கான உத்தரவை வழங்க ஏற்பாடு செய்தேன். அந்த அதிகாரியும் இப்போதே தருகிறேன் என்று சொல்லி, உடனடியாக எல்லா மாவட்டக் கலெக்டர்களுக்கும் உத்தரவு அனுப்பினார்கள். இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை உங்களுக்குத் தெரிவித்து இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

பி.ப
6-45

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4.p.m. tomorrow.

The House then adjourned.

3. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

85. Notification issued with G.O. Ms. No. 320, Excise and Prohibition, dated the 30th August 1973 in regard to Prohibition of transport of toddy from any local area into any other local area in the State of Tamil Nadu on and from the 1st September, 1973. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

86. Order issued with G.O. R. No. 1683, Revenue, dated the 10th September 1973 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge on the benefit film show organised by Y's Men's International Service Club of Y.M.C.A. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

87. Notification issued with G.O. Ms. No. 313, Excise and Prohibition, dated the 27th August 1973 in regard to prohibition of possession of toddy absolutely within the State of Tamil Nadu from the 1st September 1973. [Laid on the table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

88. Notification issued with G.O. P. No. 4139, Revenue, dated the 10th July 1973 in regard to an amendment to rule 15 (4 BB) of the Tamil Nadu General Sales Tax Rules, 1959. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]



89. Order issued with G.O. Rt. No. 1776, Revenue, dated the 25th September 1973 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge one cinematograph film show organised by the Peace N-War Club, Madras, on 30th September 1973 at Ashok Talkies, Madras, to raise funds for the flood relief in Gujarat. [Laid on the table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act 1939 (Tamil Nadu Act X of 1939).]

90. Notification issued with G.O. Ms. No. 1752, Home, dated the 28th June 1973 in regard to an amendment to rule 160-B of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

91. Notification issued with G.O. Ms. No. 1533, Home, dated the 5th June 1973 in regard to an amendment to rule 299 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

92. Notification issued with G.O. Ms. No. 1460, Home, dated the 31st May 1973 in regard to amendments to rules 49-A and 68 of the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

93. Tamil Nadu Government's review on the working of the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited, Madras, for the financial year 1972–73 together with copies of Annual Report and Statement of Accounts. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

B. *Reports, Notifications and other Papers.*

26. Notification issued with G.O. Ms. No. 5062, Revenue, dated the 18th August 1973 in regard to exemption from payment of fees such as registration fees and search fees by Agriculturists obtaining loans from Agricultural Finance Corporation under section 78 of Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908).

27. Notification issued with G.O. Ms. No. 5687, Revenue, dated the 13th September 1973 in regard to reduction of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the sale deed to be executed by the Administrator-General and Official Trustee, High Court, Madras, in favour of the Correspondent, the Madrasa Murthuzavia High School, Madras, relating to the property in No. 10, Big Street, Triplicane, Madras, valued at Rs. 36,000 (Rupees thirty-six thousand only).

28. Notification issued with G.O. Ms. No. 4533, Revenue, dated the 30th July 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) in respect of the endowment deed to be executed by the Adheenakarthar of Kundrakudi–Tiruvannamalai Adheenam Mutt at Kundrakudi, represented by Sri La Sri Srimath Deivasigamani Arunachala Desigar Paramacharya Swamigal, in favour of Thiruvalluvar College, Pothigaiadi, Papanasam, Ambasamudram taluk, Tirunelveli district.

29. Notification issued with G.O. Ms. No. 1892, Health and Family Planning, dated the 1st August 1973 making the Tamil Nadu Municipal Public Health Service (Discipline and Appeal) Regulations, 1973.



## இணைப்பு I

[150–ஆம் பக்கத்திலுள்ள 42-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

The total number of cases of food poisoning reported to the Government hospitals in Madras during the calendar year 1972 month-wise are as follows :—

| *Name of month.* (1) | *No of cases.* (2) |
|---|---|
| January ... ... ... ... ... | 37 |
| February ... ... ... ... ... | 16 |
| March ... ... ... ... ... | 11 |
| April ... ... ... ... ... | 16 |
| May ... ... ... ... ... | 27 |
| June ... ... ... ... ... | 84 |
| July ... ... ... ... ... | 68 |
| August ... ... ... ... ... | 49 |
| September ... ... ... ... ... | 54 |
| October ... ... ... ... ... | 22 |
| November ... ... ... ... ... | 35 |
| December ... ... ... ... ... | 45 |

## இணைப்பு II

[154-ஆம் பக்கத்திலுள்ள 45-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) 1972 டிசம்பர் திங்களில் பெய்த மழையின் காரணமாக 85 அணைக்கட்டுகள் சேதமுற்றன. இந்த அணைக்கட்டுகளுக்கு ஏற்பட்ட சேதத்தின் விவரங்கள் பிற்சேர்க்கையில் (இணைப்பறிக்கையில்) குறிப்பிடப்பட்டுள்ளன.

(இ) தென்னார்க்காடு, சேலம், தர்மபுரி மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்கள் மிக அதிகமானவை. பிற மாவட்டங்களிலும் அணைக்கட்டுகளின் வெள்ளத்தடுப்புக் கரைகள் அவற்றின் முகப்பிலுள்ள தரைப்பகுதிகள் ஆகியவை உடைப்பு எடுத்துக் கொண்டன அல்லது வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. சேதமடைந்த அணைக்கட்டுகளைப் புதுப் பிப்பதற்கும், உடைப்புகளை மூடுவதற்கும் ஆகும் தோராய செலவு ஏறத்தாழ ரூ. 220 லட்சம் ஆகும்.

### பிற்சேர்க்கை.

| எண், மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர் | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | தோராய மதிப்பீடு. பழைய நிலைக்குக் கொண்டு வர. | பாதிப்பின் விவரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | **செங்கற்பட்டு.** | | | |
| | | ரூ. | ரூ. | |
| 1 ஸ்ரீபெரும்புத்தூர் .. | .. அரண்வாயில் அணைக்கட்டு. | 10,000 | .. | இடது, வலது, கரைகளில் உடைப்பு ஏற்பட்டது. |
| 2 மதுராந்தகம் .. | .. ஓங்கூர் அணைக்கட்டு .. | .. | 17,000 | வெள்ளத் தடுப்புக் கரைகள் பாதிக்கப்பட்டன. |
| | **வட ஆர்க்காடு.** | | | |
| 3 செய்யாறு .. | .. தண்டரை அணைக்கட்டு .. | .. | 77,400 | வெள்ளத்தடுப்புக் கரை இடது மணல் வாரி நீர் வழியாத பகுதிகள் பாதிக்கப்பட்டன. |
| 4 செய்யாறு .. | .. செய்யாறு அணைக்கட்டு .. | 3,000 | .. | வலது வெள்ளக் கரை பாதிக்கப்பட்டது. |
| 5 செங்கம் .. | .. தாண்டவராயன் அணைக்கட்டு. | .. | 47,000 | முட்டிடம் அடித்துச் செல்லப்பட்டது. |
| 6 செங்கம் .. | .. போந்தை அணைக்கட்டு .. | .. | 1,400 | வெள்ளக்கரை பாதிக்கப்பட்டுள்ளது. |
| 7 செங்கம் .. | .. மலையலூர் அணைக்கட்டு. | .. | 1,300 | பாதுகாப்பு வேலைகள் சேதப்படுத்தப்பட்டன. |
| 8 போளூர் .. | .. எலத்தூர் அணைக்கட்டும், வாய்க்காலும். | .. | 5,000 | வலது, இடது ஆகிய இரு பக்கமும் அணையிலும் கால்வாயிலும் உடைப்பு ஏற்பட்டது. |
| 9 வாலாஜா .. | .. பொய்னி அணைக்கட்டு .. | .. | 10,000 | அலைமடுகு வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளது. |
| 10 வாலாஜா .. | .. பாலாறு அணைக்கட்டு .. | .. | 20,000 | அணைக்கட்டின் கீழ் உள்ள சாலை, அணைக்கட்டின் தடுப்பு சுவரின் பகுதிகளும் அணைக்கட்டின் நீளமும் பாதிக்கப்பட்டுள்ளது. |

| எண். | மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர். | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | பழைய நிலைக்கு கொண்டு வர. | பாதிப்பின் விவரம் |
|---|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) | (5) |
| | | தென்னார்க்காடு. | ரூ. | ரூ. | |
| 11 | விழுப்புரம் .. | .. கொதம்பாக்கம் அணைக்கட்டு. .. | 18,000 | 25,000 | தலைமதகிற்கும் அணைக கட்டிற்கும் இடையே உள்ள கரை பாதிக்கப் பட்டுள்ளது. |
| 12 | திருக்கோயிலூா | .. திருக்கோயிலூர் அணைக்கட்டு. .. .. | 1,00,000 | 1,60,00,000 | சுமார் 1,500 அடி அடித் துச் செல்லப்பட்டது. தற்காலிக நீர்ப் பாசனத்திற்கு மண் கொரம்புகள் ரூபாய் ஒரு லட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இடத்தில் ஒரு பாரேஜ் (Barrage) கட்டுவதற்கு ரூ. 160 லட்சமும், அணைக்கட்டு கட்டுவதற்கு ரூ. 66 லட்ச மும் தோராயமாக செலவாகும். விரிவான ஆய்விற்குப்பின் திட்டங் கள் தயாரிக்கப்படும். |
| 13 | திருக்கோயிலூர் | .. எல்லிஸ் அணைக்கட்டு .. | 5,00,000 | 5,00,000 | வெள்ளக் கரைகள் பாதிக் கப் பட்டுள்ளன |
| 14 | கடலூர் .. | .. வானமாதேவி அணைக்கட்டு. | 1,20,000 | 1,50,000 | அணை பற்றுச் சுவரின் மேல், கீழ் ஆறுகள், வாய்க்கால் கரைகள் பாதிக்கப்பட்டன. |
| 15 | கடலூர் .. | .. சொர்ணவூர் .. .. | 2,00,000 | 2,50,000 | மேல், கீழ் ஆற்றின் அணை பற்றுச் சுவர்கள் வீழ்ந் துள்ளன. அணையின் முன்தளம் 100 மீட்டர் அளவுக்கு அடித்துச் செல்லப்பட்டது. |
| 16 | ஷை .. | .. திருவெந்திபுரம் அணைக்கட்டு. .. | 15,000 | 50,000 | வெள்ளக்கரைகள் அரிக்கப் பட்டன. |
| 17 | ஷை .. | .. திருவாட்டி அணைக்கட்டு .. | .. | 65,000 | வெள்ளக்கரைகள் அரிக்கப்பட்டன. |
| 18 | ஷை .. | .. செல்லன்சேரி அணைக்கட்டு .. | 1,00,000 | 2,00,000 | வெள்ளக்கரை, சிமெண்ட் பற்றுச்சுவர் அடித்துச் செல்லப்பட்டது. |
| 19 | ஷை .. | .. கீழ்குமாரமங்கலம் அணைக் கட்டு. | 50,000 | 2,00,000 | இடது வெள்ளக்கரை, பற்றுச்சுவர் அடித்துச் செல்லப்பட்டன. |
| 20 | விருத்தாசலம் .. | .. விருத்தாசலம் அணைக்கட்டு. | 5,000 | 70,000 | அணை முன்தளம், பற்றுச் சுவர் பழுதுபட்டன. |
| 21 | ஷை .. | .. மெமத்தூர் அணைக்கட்டு .. | .. | 40,000 | அணைமுன்தளம், நிலை தடுப்புச்சுவர் பழுது பட்டன. |

| எண், மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர் | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | பழைய நிலைக்கு கொண்டு வர. | பாதிப்பின் விவரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | |
| | **தென்னார்க்காடு—தொடர்ச்சி.** | | | |
| 22 விருத்தாசலம் .. .. | காட்டுமையிலூர் அணைக்கட்டு | .. | 40,000 | வெள்ளக்கரை 150 மீ. அடித்துச் செல்லப்பட்டது. பற்றுச்சுவர் இடிந்து வீழ்ந்தது. |
| 23 ஷை .. | பிலான்துறை மதகுப்பலகை. | .. | 1,00,000 | ஒழுங்கியக்கி, பயணச்சாலைகள் பழுதுப்பட்டன. |
| 24 ஷை .. .. | தீவலூர் அணைக்கட்டு .. | 3,000 | 5,000 | அணைக்கட்டு கரைக்கும் வரவுகாலுக்கும் செல்கிற அணுகுசாலை 0—1/3 மைல் வரைசேதப்படுத்தப் பட்டது. |
| 25 ஷை .. .. | தொழுதூர் மதகுகள் .. | 5,000 | 2,00,000 | இருபக்கமுள்ள பற்றுச் சுவர்கள் விழுந்தன. |
| 26 ஷை .. .. | கொருக்கன்வாடி அணைக் கட்டு. | .. | 25,000 | அணையின் சுவர்களும் முன் தளமும் பழுது பட்டன. |



| எண், மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர் | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| 27 ஷை .. .. | கலுதூர் ஓடை அணைக்கட்டு | .. | 5,000 | பக்கபற்றுச்சுவர் முன்தளம் பழுது பட்டன. |
| 28 கள்ளக்குறிச்சி .. .. | கள்ளக்குறிச்சி அணைக்கட்டு. | 10,000 | 10,000 | காப்புச்சுவர் பழுதுபட்டது. |
| 29 ஷை .. .. | தென்கீரோவூர் அணைக்கட்டு. | 5,000 | 8,000 | காப்புச்சுவர் பழுதுபட்டது. |
| 30 ஷை .. .. | நீலமங்கலம் அணைக்கட்டு. | 5,000 | 10,000 | மணல்தள்ளி, காப்புச் சுவர் பழுதுபட்டது. |
| 31 ஷை .. .. | பாக்கம் அணைக்கட்டு .. | .. | 25,000 | தளம் காப்புச் சுவர் பழுதுபட்டன. |
| 32 ஷை .. .. | பூட்டை அணைக்கட்டு .. | .. | 40,000 | தளம் காப்புச்சுவர் பழுதுபட்டன. |
| 33 ஷை .. .. | ஆதனூர் அணைக்கட்டு .. | .. | 40,000 | தளம், காப்புச்சுவர் பழுது பட்டன. |
| 34 ஷை .. .. | திருவரங்கம் அணைக்கட்டு. | .. | 10,000 | தளம், காப்புச்சுவர் பழுதுபட்டன. |
| 35 ஷை .. .. | தியாகராஜபுரம் அணைக் கட்டு .. | .. | 70,000 | நடுகாப்புச் சுவர் விழுந்து பட்டது. |
| 36 ஷை .. .. | சங்கராபுரம் அணைக்கட்டு .. | .. | 1,00,000 | காப்புச்சுவர், கீழோற்றுத் தளம் பாதிக்கப்பட்டன. |
| 37 ஷை .. .. | செல்லமுத்து அணைக்கட்டு. | .. | 1,00,000 | கீழோற்றுத்தளம் வெள்ள தடுப்புக்கரை பழுது பட்டன. |
| 38 ஷை .. | மூரார்பாத் அணைக்கட்டு .. | .. | 1,00,000 | கீழோற்றுத் தளம் வெள்ள தடுப்புச் சுவர் பழுது பட்டன. |

| எண், மாவட்டம்/வட்டம். (1) | அணைக்கட்டின் பெயர். (2) | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். (3) ரூ. | தோராய மதிப்பீடு. பழைய நிலைக்குக் கொண்டு வர. (4) ரூ. | பாதிப்பின் விவரம். (5) |
| --- | --- | --- | --- | --- |
| | தென்னார்க்காடு—தொடர்ச்சி. | | | |
| 39 கள்ளக்குறிச்சி .. | .. அக்ரவாதி அணைக்கட்டு .. | .. | 1,00,000 | கோற்றுத் தளம் வெள்ளத் தடுப்புச் சுவர் பழுது பட்டன. |
| 40 ஷை .. | .. ஸ்ரீபாதநல்லூர் அணைக்கட்டு. | .. | 1,00,000 | ஷை |
| 41 ஷை .. | .. பெண்ணடம் அணைக்கட்டு. | .. | 50,000 | ஷை |
| 42 ஷை .. | .. கரூர் அணைக்கட்டு .. | 5,000 | 15,000 | நடுச்சுவர், தளம் பாதிக்கப் பட்டன. |
| 43 ஷை .. | .. நாகனூர் அணைக்கட்டு .. | 5,000 | 15,000 | ஷை |
| 44 ஷை .. | .. சாத்தக்குடி அணைக்கட்டு. | 5,000 | 10,000 | வெள்ளத்தடுப்புக்கரை, நடுச்சுவர், தளம் சேதம் உற்றன. |
| 45 ஷை .. | .. பனையங்கல் அணைக்கட்டு .. | 5,000 | 10,000 | தளத்தில், வெள்ளத் தடுப்புக் கரையில் உடைப் பெடுத்தன. |
| 46 ஷை — | .. பல்லகச்சேரி அணைக்கட்டு. | 5,000 | 10,000 | களம் சேதமுற்றது. |



| | | | | |
| --- | --- | --- | --- | --- |
| 47 சிதம்பரம் .. | .. சேத்தியாத்தோப்பு அணைக் கட்டு. | 9,800 | 5,80,000 | அணை வெள்ளத்தடுப்பு கரையின்மேல், கீழ் பக்கங்கள் பாதிக்கப் பட்டன. |
| | திருச்சிராப்பள்ளி. | | | |
| 48 மணப்பாறை .. | .. சவரிமுத்துடையான் அணைக் கட்டு. | .. | 40,000 | அணையின் நடுச்சுவர் 10 மீ. அளவுக்கு உடைப் பெடுத்தது. |
| 49 துறையூர் .. | .. ஆதனூர் அணைக்கட்டு 2-ம் நம்பர். | .. | 15,000 | வெள்ளத்தடுப்புக்கரை பாதிக்கப்பட்டது. |
| 50 முசிறி .. .. | .. பேரூர் அணைக்கட்டு .. | 70,000 | .. | அணையின் நடுச்சுவர் 24மீ அளவுக்கு உடைப் பெடுத்தது. தளம் அடித்துச்செல்லப்பட்டது. |
| | தஞ்சாவூர். | | | |
| 51 பட்டுக்கோட்டை | .. பாப்பான் கன்னியார் அணை கட்டு. | .. | 35,000 | அணையின் நடுச்சுவர் இரு பக்கங்களிலும் பாதிக்கப் பட்டன. தளம் பக்க கல் பாவுக்கரை சேதம் உற்றன. |
| 52 ஷை | .. அமரசிம்மேந்திரபுரம் .. அணைக்கட்டு. | .. | 10,000 | தளம், கல்பாவுக்கரை சேதமுற்றன. |
| | சேலம். | | | |
| 53 ராசிபுரம் .. | .. மின்னக்கால் அணைக்கட்டு. | .. | 7,000 | இடது வெள்ளத்தடுப்புக் கரை, கண்மாய் எண் 1 அடித்துச் செல்லப் பட்டன. |

| எண், மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர் | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | தோராய மதிப்பீடு. பழைய நிலைக்குக் கொண்டு வர. | பாதிப்பின் விவரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | |
| | | சேலம்—தொடர்ச்சி | | |
| 54 ராசிபுரம் .. .. | பைரோஜி அணைக்கட்டு .. | .. | 5,000 | சுவர்ச்சரிவுதளம் சேதமுற்றன. |
| 55 ஆத்தூர் .. .. | அபினவம் அணைக்கட்டு .. | 25,000 | 12,000 | இடது பக்க அணை 20 அடி அடித்துச்செல்லப்பட்டது. |
| 56 ஆத்தூர் .. .. | கல்யாணகிரி அணைக்கட்டும் வாய்க்காலும். | 90,000 | 10,000 | அணையின் மேல் பகுதி அடித்துச் செல்லப்பட்டது தளம் பாதிக்கப்பட்டது. வாய்க்கால் வண்டலில் நிறைந்தது. |
| 57 ஆத்தூர் .. .. | கத்தம்பாடி அணைக்கட்டு. | 13,000 | 2,000 | இடது பக்க அணைக்கட்டு அடித்துச்செல்லப்பட்டது |
| 58 ஆத்தூர் .. .. | சின்ன சமுத்திரம் அணைக்கட்டும் வாய்க்காலும். | 85,000 | 15,000 | அணையின் உச்சி 40 அடி அளவுக்கு அடித்துச் செல்லப்பட்டது. தளம் பாதிக்கப்பட்டது. |
| 59 ஆத்தூர் .. .. | புத்தார் கவுண்டன் பட்டி அணைக்கட்டு. | 3,76,000 | 24,000 | அணை, நீர் தருவாய்க்கால் அடித்துச் செல்லப்பட்டது. |
| 60 ஆத்தூர் .. .. | பெத்தநாயக்கன் பாளையம் அணைக்கட்டு. | 60,000 | 15,000 | 75 அடி அளவுக்கு அணை அடித்துச் செல்லப்பட்டது. 80 அடிக்கு உடைப்பெடுத்தது. |
| 61 ஆத்தூர் .. .. | குமாரபாளையம் அணைக்கட்டு. | 90,000 | 10,000 | அணையின் பாதிப்பகுதியும் வெள்ளத்தடுப்புக் கரையும் அடித்துச் செல்லப்பட்டன. |
| 62 ஆத்தூர் .. .. | அணையம்பட்டி வாய்க்காலும் அணைக்கட்டும். | .. | 14,000 | 13 மீ. நீளத்திற்கு அணை சேதமுற்றது. |
| 63 ஆத்தூர் .. .. | பட்டத் துறை அணைக்கட்டு | .. | 10,000 | 13 மீ. நீளத்திற்கு அணை அடித்துச் செல்லப்பட்டது. தளம் நிலைகுலைந்தது. |
| 64 சேலம் . .. | பேளூர் அணைக்கட்டும் வாய்க்காலும். | .. | 50,000 | அணையின் வலதுபக்க சுவரின் உச்சி, முட்டிடம் உடைப்பெடுத்தன. |
| | | தர்மபுரி. | | |
| 65 ஹரூர் .. .. | பச்சம்பாடி அணைக்கட்டு | 10,000 | 15,000 | 25 மீ. நீளத்திற்கு அணை அடித்துச் செல்லப்பட்டது. வாய்க்காலில் வண்டல் நிறைந்தது. |

| எண், மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர். | தோராய மதிப்பபு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | பழைய நிலைக்குக் கொண்டு வர. | பாதிப்பின் விவரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) ரூ. | (4) ரூ. | (5) |
| | | **சீர்மபுரி—தொடர்ச்சி** | | |
| 66 ஹசூர் .. .. | கணக்கன் அணைக்கட்டு .. | 1,000 | 3,500 | அடித்தள ஆய்வகம் மணலால் நிறைந்தது. வாய்க்காலில் வண்டல் நிறைந்தது. |
| 67 ஹசூர் .. .. | கரப்பட்டி வாய்க்காலும் அணைக்கட்டும். | 5,000 | 20,000 | கால்வாய் அணை அடித்துச் செல்லப்பட்டது. வாய்க்காலில் வண்டல் நிறைந்தது. |
| 68 ஹசூர் .. .. | சின்னக்குப்பம் வாய்க்காலும், அணைக்கட்டும். | 1,000 | 6,700 | 100 மீ. அளவுக்கு சாய்தளப் பகுதி நிலை குலைந்தது. மற்றொரு 30 மீ. அடித்துச் செல்லப் பட்டது. |
| 69 ஹசூர் .. .. | குருவரஹல்லி அணைக் கட்டும், வாய்க்காலும். | 5,000 | 10,000 | தளமும், வாய்க்காலும் ஒவ்வொன்றும் 50 மீ. நீளத்திற்கு உடைப் பெடுத்தன. |
| | | **தர்மபுரி—தொடர்ச்சி.** | | |
| 70 ஹசூர் .. .. | கருடாவிஜயன் அணைக் கட்டும் வாய்க்காலும். | 1,500 | 3,500 | 50 மீ. நீளத்திற்குத் தளம் அடித்துச் செல்லப் பட்டது. 50 மீ. நீளத்திற்கு வாய்க் காலும் உடைப்பெடுத் தது. |
| 71 ஹசூர் .. .. | அண்ணாமலைஹல்லி அணைக் கட்டும் வாய்க்காலும். | 2,500 | 5,000 | தளம் நிலைகுலைந்தது 50 மீ. அளவுக்கு வாய்க்கால் உடைப் பெடுத்தது. |
| 72 ஹசூர் .. .. | குமரப்பட்டி அணைக் கட்டும் வாய்க்காலும். | 15,000 | 25,000 | வாய்க்கால் உடைப் பெடுத்தது. வண்டல் மண்ணால் நிறைந்தது. தொடர்கட்டுமான வேலை யும் பாதிக்கப்பட்டது. |
| 73 ஹசூர் .. .. | அலபுரம் அணைக்கட்டு .. | .. | 10,000 | 10 மீ. அளவுக்குத் தளம் கரை உடைப்பெடுத் தன. |
| 74 ஹசூர் .. .. | பிரமப்பட்டி அணைக்கட்டு .. | .. | 8,600 | 40 மீ. அளவுக்கு தளம் உடைப்பெடுத்தது. வாய்க்கால் வண்டல் மண்ணால் மூடப் பெற்றது. |

| எண். மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர். | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | பழைய நிலைக்குக் கொண்டு வர. | பாதிப்பின் விவரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | |
| | **தர்மபுரி—தொடர்ச்சி.** | | | |
| 75 ஹளூர் .. .. | எல்லப்புடையம்பட்டி அணைக்கட்டு. | .. | 18,000 | 75 மீ. அளவுக்கு அணையும் பாதுகாப்புப் பணியும் பாதிக்கப் பட்டன. வாய்க்கால் வண்டல் மண்ணால் இடப்பெற்றது. |
| 76 ஹளூர் .. .. | கோவிலூர் அணைக்கட்டு. | .. | 20,000 | 150 மீ. அளவுக்கு தளமும் தொடர் கட்டுமான வேலையும் பாதிக்கப்பட்டது. வாய்க்கால் வண்டலால் மூடப் பட்டது. |
| 77 ஹளூர் .. .. | நரிப்பள்ளி அணைக்கட்டு. | .. | 25,000 | உடைப்பு ஏற்பட்டது. வாய்க்கால் மண் மேடாயிற்று. |
| 78 ஹளூர் .. .. | வெங்கடசமுத்திரம் அணைக்கட்டு. | .. | 20,000 | அணை உச்சி 15 மீ. அளவுக்கு உடைப் பெடுத்தது. 50 மீ. அளவுக்கு கரை உடைப்பெடுத்தது. |
| | **கோயம்புத்தூர்.** | | | |
| 79 கோபிசெட்டிபாளையம். | காலிங்கராயன் அணைக் கட்டும் வாய்க்காலும். | 45,000 | 2,900 | தலைமைக் கண்மாய் மேலுள்ள கைப்பிடிச் சுவர் வெள்ளத் தடுப்புக் கரை முதலியன சேத முற்றன. |
| 80 பவானி .. .. | காலிங்கராயன் வாய்க் கால் அமைப்பு முறையில் உள்ள பிரதான அணைக்கட்டு. | .. | 7,000 | அணை உச்சி, தலைமை கண்மாய், தளம் சேதமுற்றன. |
| 81 பவானி .. .. | காலிங்கராயன் வாய்க் கால் அமைப்பு முறையில் உள்ள மத்திய அணைக்கட்டும் தலைப்பு வேலையும். | .. | 11,500 | அணை உச்சி, காப்புத்தளம் கல்பாவுக்கரை சேதமுற்றன. |
| 82 பவானி .. .. | முரியன் அணைக்கட்டு .. | .. | 17,300 | அணையின் நடுச்சுவர் பள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டன. தளம் காப்புச் சுவர் பாதிக்கப் பட்டன. |

| எண், மாவட்டம்/வட்டம். | அணைக்கட்டின் பெயர். | தோராய மதிப்பீடு. உடைப்புக் கரையை அடைக்கவும் உடனடி மராமத்து செய்யவும். | பழைய நிலைக்குக் கொண்டு வர. | பாதிப்பின் விவரம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. | ரூ. | |
| | | **இராமநாதபுரம்.** | | |
| 83 திருவாடானை .. | எழுவன்கோட்டை அணைக்கட்டு. | .. | 3,000 | வலது பக்க அணைக் கரை 50 மீ. அளவுக்கு அடித்துச் செல்லப்பட்டது. |
| 84 திருவாடானை .. | ஊஞ்சனை அணைக்கட்டு .. | .. | 15,000 | தலைமைக் கண்மாயில் வலது பக்க கல்பாவுக்கரை, முன் சுவர் சரிவு சரிந்தன. 30 மீ அளவுக்கு வலது பக்க அணைக்கரை, கல்பாவுக்கரை அடித்துச் செல்லப்பட்டது. |
| 85 திருவாடானை .. | ஹனுமந்தக்குடி அணைக்கட்டு. | .. | 15,000 | 35 மீ. அளவுக்கு காப்புச் சுவரின் சரிவுத் தளத்தின் முன் பக்கம் நிலை குலைந்தது. |
| | | 27,17,800 | 2,01,67,100 | |



தொகுப்பு.

| எண்ணும், மாவட்டமும். | அணைக்கட்டுகள். | தோராய மதிப்பீடு. உடைப்புக்கரையை அடைக்கவும் உடனடி மராமத்தும். | பழைய நிலைக்குக் கொண்டுவர. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| 1 செங்கற்பட்டு .. .. .. .. .. .. .. | 2 | 10,000 | 17,000 |
| 2 வட ஆர்க்காடு .. .. .. .. .. .. .. | 8 | 3,000 | 1,62,100 |
| 3 தென் ஆர்க்காடு .. .. .. .. .. .. | 37 | 10,70,800 | 1,93,28,000 |
| 4 திருச்சி .. .. .. .. .. .. .. | 3 | 70,000 | 55,000 |
| 5 தஞ்சாவூர் .. .. .. .. .. .. .. | 2 | .. | 45,000 |
| 6 சேலம் .. .. .. .. .. .. .. .. | 12 | 7,39,000 | 1,74,000 |
| 7 தருமபுரி .. .. .. .. .. .. .. | 14 | 7,80,000 | 3,14,300 |
| 8 கோயம்புத்தூர் .. .. .. .. .. .. | 4 | 45,000 | 38,700 |
| 9 இராமநாதபுரம் .. .. .. .. .. .. | 3 | .. | 33,000 |
| | 85 | 27,17,800 | 2,01,67,100 |

## இணைப்பு III

(158 ஆம் பக்கத்திலுள்ள 49 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

(ஆ) ஆம்.

(இ) லெக்யூம் (Legume) இனத்தைச் சேர்ந்த பயறு வகைப் பயிர்கள், மண்ணில் உள்ள 'ரைசோபியம்' என்னும் நுண்ணுயிர்களின் உதவியுடன் பரிமாற்றத்தன்மை மூலமாக காற்றிலுள்ள தழைச் சத்தினைப் பெறுவதாக ஆராய்ச்சிகளிலிருந்து தெரிய வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலுள்ள உயிரியல் துறையின் நுண்ணுயிரியல் பிரிவு குறிப்பான ரைசோபிய நுண்ணுயிர் வகைகளை அதிக அளவில் உற்பத்தி செய்து வருகிறது. வேர்க்கடலை, துவரை, பச்சைப்பயிறு, உளுந்து, கடலை, காராமணி (தட்டைப்பயிறு) முதலிய லெக்யூம் இனத்தைச் சேர்ந்த பயறு வகைகள், பச்சைப்பட்டாணி பிரெஞ்சு பின்ஸ் என்ற ஒருவகை அவரை போன்ற காய்கறிகள், சணல், செஸ்பேணியா, தக்கைப்பூண்டு கொழிஞ்சி முதலிய பசுந்தாள் உரப்பயிர்கள் ஆகியவற்றின் விதைகளுடன் கலப்பதற்காக இந்த நுண்ணுயிர் வகைகளை, மேற்படி பிரிவு தமிழ்நாட்டிலுள்ள உழவர்களுக்கு வழங்கி வருகின்றது. தமிழ் நாட்டில் உள்ள உழவர்களின் தேவையை நிறைவு செய்ய ரைசோபியம் நுண்ணுயிர் வகைகளை அதிக அளவில் உற்பத்தி செய்யப் பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது. மேற்கொண்டும் சோதனை ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.



## இணைப்பு IV

[162-ஆம் பக்கத்திலுள்ள 52 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

வடஆற்காடு மாவட்டத்தில் கிராம நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்ய எடுத்துக்கொள்ளப் பட்டுள்ள சாலைகள் அதற்கான மதிப்பீடுகள் கொண்ட விவரப்பட்டியல்.

| வரிசை எண். | ஊராட்சியின் பெயர். | ஊர்ச்சாலையின் பெயர். | சாலை நீளம் | மதிப்பீடு |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | **புது அமைப்புகள்.** | கி.மீ. | ரூ. |
| 1 | போளூர் | அலியப்பாடிக்கு சாலை | 2·4 | 1,43,000 |
| | | **மேம்படுத்தல்.** | | |
| 1 | அரக்கோணம் | முதூருக்கு சாலை | 7·6 | 2,56,800 |
| 2 | வாலாஜா | திருப்பாற் கடல் சாலை | 1·2 | 44,000 |
| 3 | ,, | பூண்டிசாலை | 2·4 | 92,000 |
| 4 | திமிரி | விளாப்பாக்கம் சாலை | 2·6 | 62,600 |
| 5 | ,, | புங்கனூர் சாலை | 2·0 | 85,000 |
| 6 | ,, | மூலையூர் சாலை | 3·0 | 77,000 |
| 7 | ,, | வலியாத்தூர் சாலை | 3·2 | 99,600 |
| 8 | ,, | சின்ன சமுத்திர சாலை | 2·4 | 96,300 |
| 9 | காட்பாடி | கலிருசூர் சாலை | 1·0 | 22,000 |
| 10 | ,, | ஜாப்பர்பெட் சாலை | 2·7 | 1,10,600 |
| 11 | ,, | வண்டரன்தாங்கல் சாலை | 0·8 | 37,800 |
| 12 | கே. வி. குப்பம் | கன்குப்பம் சாலை | 4·6 | 1,09,000 |
| 13 | ,, | குல்முத்துகூர் சாலை | 3·6 | 55,200 |

| வரிசை எண். (1) | ஊராட்சியின் பெயர். (2) | ஊர்ச்சாலையின் பெயர். (3) | சாலை நீளம். கி.மீ. (4) | மதிப்பீடு. ரூபாய் (5) |
|---|---|---|---|---|
| 14 | கே. வி. குப்பம் | பசுமுத்தூர் சாலை | 4·6 | 1,11,700 |
| 15 | ,, | பனமடங்கை சாலை | 7·4 | 1,72,300 |
| 16 | ,, | செஞ்சி சாலை | 1·6 | 41,300 |
| 17 | குடியாத்தம் | செட்டிகுப்பம் சாலை | 2·8 | 74,800 |
| 18 | ,, | செம்பேடு சாலை | 1·8 | 43,300 |
| 19 | திருப்பத்தூர் | புரம் சாலை | 6·0 | 1,53,700 |
| 20 | ,, | பெரும்பட்டு சாலை | 2·6 | 65,000 |
| 21 | நட்ராம்பள்ளி | பாச்சூருக்கு சாலை | 3·2 | 89,600 |
| 22 | கண்டிலி | காக்கன்கரை சாலை | 2·4 | 38,000 |
| 23 | ,, | குருந்தேரி சாலை | 2·2 | 50,000 |
| 24 | ஆலங்காயம் | வெள்ளக்குட்டை சாலை | 1·8 | 40,600 |
| 25 | வேலூர் | சடுப்பேரி சாலை | 3·0 | 83,500 |
| 26 | செய்யார் | முனுகப்பட்டு சாலை | 1·2 | 44,000 |
| 27 | ,, | விண்ணமங்கலம் சாலை | 2·6 | 67,600 |
| 28 | தெள்ளார் | நல்லூர் சாலை | 3·2 | 1,37,000 |
| 29 | ,, | ராமசமுத்திரம் சாலை | 0·8 | 37,000 |
| 30 | ,, | தெய்யார் சாலை | 3·8 | 1,85,500 |
| 31 | பெரணமல்லூர் | கோலப்பனூர் சாலை | 2·4 | 70,800 |
| 32 | ,, | நாமத்தோடு சாலை | 6·0 | 3,03,000 |
| 33 | சேட்பட் | கீழப்பட்டு சாலை | 1·4 | 68,500 |
| 34 | ,, | ஆத்துறை சாலை | 1·6 | 30,000 |
| 35 | ,, | ஓடலாடி சாலை | 1·6 | 92,900 |



[illegible]

| | | | | |
|---|---|---|---|---|
| 36 | சேட்பட் | மன்சூரபாது சாலை | 10·4 | 3,38,000 |
| 37 | தண்டராம்பட்டு | தேன் முடியனூர் சாலை | 4·4 | 1,20,900 |
| 38 | திருவண்ணமலை | பாவப்பட்டு சாலை | 3·8 | 61,700 |
| 39 | ,, | பவித்திரம் சாலை | 2·0 | 71,000 |
| 40 | ,, | பெருமானம் சாலை | 8·6 | 1,09,000 |
| 41 | ,, | மடலம்பாடி சாலை | 7·4 | 1,24,500 |
| 42 | வேம்பாக்கம் | நாட்டேரி சாலை | 1·6 | 58,400 |
| 43 | செங்கம் | குப்பனத்தம் சாலை | 4·4 | 1,68,500 |
| 44 | ,, | மேலவணக்கம் சாலை | 6·6 | 1,79,300 |
| 45 | ,, | பிஞ்சூல் சாலை | 3·6 | 85,000 |
| 46 | ,, | போரசப்பட்டு சாலை | 3·6 | 1,08,000 |
| 47 | நெமிலி | கீழ வேங்கடபுரத்துக்கு சாலை | 4·4 | 1,91,500 |

அரசு ஆணை (பலவகை) 1014, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித்துறை, நாள் 18—5—1973.
இரண்டாம் படிவத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட சாலைகள்.

**புது அமைப்புகள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வந்தவாசி | நெல்லூர் வேப்பன்காரனை சாலை | 6·0 | .. |
| 2 | போளூர் | ஹென்றிபட்டி எண்டால் சாலை | 1·4 | .. |

**மேம்பாடுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | வந்தவாசி | வாமூர் மறுதாடு சாலை | 4·4 | .. |
| 2 | ஆரணி | புதூர்—அட்டியூர் சாலை | 3·4 | .. |
| 3 | கலசபாக்கம் | லாடபுரம் சாலை | 5·8 | .. |
| 4 | புதுப்பாளையம் | பாண்டிச்சேரி—கிருஷ்ணகிரி குலாம் சாலை. | 8·0 | .. |

| வரிசை எண். (1) | ஊராட்சியின் பெயர். (2) | ஊர்ச்சாலையின் பெயர். (3) | சாலை நீளம். கி.மீ. (4) | மதிப்பீடு ரூபாய். (5) |
|---|---|---|---|---|
| 5 | கீழ்ப்பெண்ணத்தூர் | பாண்டிச்சேரி — கிருஷ்ணகிரியிலிருந்து கனைப்பாடி சாலை. | 6·0 | .. |
| 6 | ஆற்காடு .. | 2/8 ஆற்காடு கண்ணமங்கலம் சாலையிலிருந்து பிரியும் அருங்குன்றம் சாலை. | 4·6 | .. |
| 7 | காவிரிப்பாக்கம் | 15/2 அரக்கோணம் சோளிங்கர் சாலையிலிருந்து பர்வத்தூர் கிளை சாலை. | 5·4 | .. |
| 8 | சோளிங்கர் .. | 13/4 காட்பாடி வள்ளிமலை சாலையிலிருந்து மஹீமண்டலம் கிளை சாலை. | 3·0 | .. |
| 9 | காணியம்பாடி | 184/2 கி.மீ. கடலூர் சித்தூர் சாலையிலிருந்து எடையன்சாத்தூர் கிளை சாலை. | 1·6 | .. |
| 10 | அணைக்கட் .. | 3/2 கி.மீ. ஒதுக்கத்தூர் சாலையிலிருந்து சேரப்பாடி கிளை சாலை. | 2·0 | .. |
| 11 | மதனூர் .. | 64/2 கிருஷ்ணகிரி—ராணிப்பேட்டை சாலையிலிருந்து பெரியன்குப்பம் கிளை சாலை. | 2·0 | .. |
| 12 | பேர்ணும்பட்டு | ஆம்பூர் சாதூர் சாலையிலிருந்து பற்றபள்ளி கிளை சாலை. | 4·4 | .. |



| வரிசை எண். (1) | ஊராட்சியின் பெயர். (2) | ஊர்ச்சாலையின் பெயர். (3) | சாலை நீளம். கி.மீ. (4) | மதிப்பீடு ரூபாய். (5) |
|---|---|---|---|---|
| 13 | காட்பாடி .. | 4/8 காட்பாடி—வெங்கடகிரி கோட்டா சாலையிலிருந்து சென்னூர் கிளை சாலை 3/2. | 3·2 | .. |
| 14 | திருப்பத்தூர் | 224/4 வாணியம்பாடி—தர்மபுரியிலிருந்து மூக்கனூர் புதுபெட் கிளை சாலை. | 8·2 | .. |
| 15 | வெல்லூர் .. | பலமாதி வழியாக புங்கனூர் சாலை .. | 16·00 | .. |

## இணைப்பு V.

(170 ஆம் பக்கத்திலுள்ள 59 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

| (1) | 1965 (2) | 1966 (3) | 1967 (4) | 1968 (5) | 1969 (6) | 1970 (7) | 1971 (8) | 1972 (9) | மொத்தம் (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **அ. மேல்முறையீட்டு மனு—** | | | | | | | | | |
| வரப்பெற்ற எண்ணிக்கை .. | 100 | 92 | 71 | 57 | 52 | 101 | 86 | 146 | 705 |
| முடிவு செய்யப்பட்டவை .. | 100 | 92 | 71 | 57 | 52 | 101 | 86 | 139 | 698 |
| நிலுவையில் உள்ளவை .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 7 | 7 |
| **இ. மாற்று மேல்முறையீட்டு மனு—** | | | | | | | | | |
| வரப்பெற்ற எண்ணிக்கை .. | 113 | 125 | 150 | 190 | 168 | 194 | 215 | 201 | 1,356 |
| முடிவு செய்யப்பட்டவை .. | 113 | 125 | 150 | 190 | 168 | 194 | 208 | 196 | 1,344 |
| நிலுவையில் உள்ளது .. | .. | .. | .. | .. | .. | .. | 7 | 5 | 12 |

| (1) | 1965 (2) | 1966 (3) | 1967 (4) | 1968 (5) | 1969 (6) | 1970 (7) | 1971 (8) | 1972 (9) | மொத்தம் (10) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| உ. பல்வகை மனு— | | | | | | | | | |
| வரப்பெற்ற எண்ணிக்கை .. | 5 | 6 | 8 | 9 | 5 | 16 | 38 | 22 | 112 |
| முடிவு செய்யப்பட்டவை .. | 5 | 6 | 8 | 9 | 5 | 16 | 38 | 20 | 110 |
| நிலுவையில் உள்ளது .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 2 | 2 |
| ஏ. அகல் விண்ணப்பம்— | | | | | | | | | |
| வரப்பெற்ற எண்ணிக்கை .. | 3 | .. | .. | 1 | 1 | 1 | 1 | .. | 7 |
| முடிவு செய்யப்பட்டவை .. | 3 | .. | .. | 1 | 1 | 1 | .. | .. | 6 |
| நிலுவையில் உள்ளது .. | .. | .. | .. | .. | .. | .. | 1 | .. | 1 |

பதிவு செய்யப்பட்ட வழக்குகள் .. .. 2,180

முடிவு செய்யப்பட்ட வழக்குகள் .. .. 2,158

நிலுவையில் இருந்த வழக்குகள் .. 22

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை.

## வெள்ளிக்கிழமை, 1973, நவம்பர் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** வினாக்கள் 63-லிருந்து 70 வரை ஒத்தி வைக்கப்படுகின்றன.

### *Workshop on Health and Population Education in Schools.*

*71. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any "Workshop on Health and Population Education in Schools" was conducted by the State Government with the assistance of the Central Health Education Bureau in December 1972 in he State; and

(b) if so, the details thereof?

### பள்ளிகளில் சுகாதாரம்–மக்கள் தொகை கல்வி

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ் வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம் மாநிலத்தில், 1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மத்திய சுகாதாரக் கல்விப் பிரிவின் உதவியுடன், "பள்ளிகளில், சுகாதாரம்—மக்கள் தொகை கல்வி" குறித்து கருத்தரங்கு ஏதும் மாநில அரசால் நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) மன்றத்தின் முன் விவர அறிக்கையொன்று @ வைக்கப்பட்டுள்ளது.

@ 320-324-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 நவம்பர் 23

## Polio

*72 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any research has been conducted into the incidence of Polio cases in the State; and

(b) if so, the details thereof?

## இளம்பிள்ளை வாத நோய்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்தில் இளம்பிள்ளை வாத நோய் ஏற்படுவது குறித்து ஏதாவது ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** விவர அறிக்கையொன்று @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எல். பலராமன்:** தலைவரவர்களே, இந்த இளம்பிள்ளை வாதம் எதனால் உண்டாகின்றது? தற்போது அதிகமாக ஏற்பட்டுக் கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்குத் தீவிரமான நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கூறுகிறார்கள். வாக்சின் என்று இருப்பதாகச் சொல்கின்றார்கள். அந்த வாக்சின் மூலமாக அந்த நோயைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இது ஒருவிதமான 'வைரஸ் இன்ஃபெக்ஷன்' என்று மருத்துவர்கள் சொல்கிறார்கள். 'வைரஸ் இன்ஃபெக்ஷன்' ஏற்பட்ட பின்னர் தடுக்க தகுந்த மருந்து கண்டுபிடிக்கப் படவில்லை. 'வைரஸ் இன்ஃபெக்ஷன்' காரணமாக போலியோ நோய் பட்டவர்கள் இளம்பிள்ளை வாதத்திற்கு ஆளானவர்கள் நூற்றுக்கு ஒருவர்தான். நூறு பேர்களுக்கு இந்த வைரஸ் இன்ஃபெக்ஷன் வந்தால், அதில் ஒருவருக்கு என்ற விகிதாசாரத்தில் இளம்பிள்ளை வாதம் ஏற்படுகிறது. அதிலும் 5 வயதிற்குட்பட்டவர்களுக்குத்தான் இந்த போலியோ அதிகமாக வருகின்றது. எனவே, அவர்களுக்கு நோய்த் தடுப்புக்கு போலியோ வாக்சின் வழங்குவதற்கு ஆரம்ப சுகாதார நிலையங்களிலிருந்து மருத்துவ மனைகள் வரையில் பரவலாக ஏற்பாடு இருந்து வருகிறது.

@ 324-326-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1973 நவம்பர் 23]

**திரு. ஜி. சுவாமிநாதன்:** இந்த போலியோ வாக்சின் மருத்துவ மனைகளிலே வைக்கப்பட்டுக் கொடுக்கப்படுவதில்லை என்று அறிகிறேன். சென்னையிலுள்ள மருத்துவ மனைகளிலும் இல்லையென்று சொல்லப்படுகிறது. போலியோ வாக்சினை எல்லா மருத்துவமனைகளிலும் வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா? இரண்டாவதாக, பள்ளிப் பிள்ளைகளுக்கு, போலியோ வாக்சின் கொடுக்க அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இது பொதுவாக 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குத்தான் வருகிறது. பிள்ளைகளை பள்ளிகளில் ஐந்து வயதிலேதான் சேர்க்கின்றார்கள். ஆகவே ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், பெரும்பாலும் தாய்-சேய் மருத்துவ மனைகளிலும் அம்மருந்து வைக்கப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றது. போலியோ வாக்சினை இன்ஜெக்ஷன் முறையிலே கொடுப்பதன்றி, டிராக்ஸ் முறையில் கொடுப்பதும் இப்போது மேற்கொள்ளப்படுகின்றது.

**திரு. சா. கணேசன்:** 'சூடோ மஸ்குலர் டெஸ்ட்ராபி' என்ற இந்த மாதிரியான நோய் பிள்ளைகளைத் தாக்குகின்றது. இந்த வகையில் தாக்குகின்ற நோய்களைத் தடுப்பதற்கு அரசு ஏதாவது தடுப்பு முறைகளைக் கையாண்டு வருகிறதா, இல்லையா? அதற்காக என்ன ஆராய்ச்சி அரசு செய்திருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, எனக்குப் புரியாத கேள்வியாக இருக்கின்றது. பதில் கேட்டுத்தான் தெரிவிக்க வேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, நகராட்சி சுகாதார நிலையங்களுக்கு இந்த போலியோ வாக்சின் சப்ளை செய்யப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அதற்கான விவரம் அறிந்துதான் சொல்ல வேண்டும்.

THIRU G. SWAMINATHAN: Sir, the point on which I wanted to get a clarification from the Hon. Minister was whether the polio vaccine is stocked in the hospitals, and if not, whether the Government will take steps to stock polio veccine, oral or injectible, in the hospitals.

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, the hon. Member ought to have understood that it is only the preventive vaccine that is used generally and, therefore, it may not be of much use

in all hospitals, unless it is a Children's Hospital where it could be used for prevention of the disease. We can think of having it in Maternity Hospitals also.

*Siruvani Reservoir.*

*73. Q.—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the officials of the Kerala Government removed the sand bags piled across the Siruvani Reservoir for the provision of drinking water for Coimbatore town; and

(b) if so, the action taken thereon?

**சிறுவாணி நீர்த் தேக்கம்.**

*திரு. பி. திருஞானசம்பந்தம்:* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை நகர குடிதண்ணீர் வசதிக்காக சிறுவாணி நீர்த் தேக்கத்தின் குறுக்கே மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டதை கேரள அரசு அதிகாரிகள் அகற்றியது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்:* (அ) ஆம்.

(இ) இந்த ஏற்பாடுகளில் குறுக்கிடாதிருக்குமாறு கேரள அரசு தமது களப்பணியாளர்களுக்கு அவசியமான உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு கேரள அரசிற்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. இது கடந்த காலநிலை. அண்மையில் ஒப்பந்தம் ஒன்று நிறைவேறி, குடிதண்ணீர் தட்டுப்பாடு இன்றி கிடைக்க விரிவான முறையில் ஏற்பாடு செய்திருப்பதால் இப்பிரச்சினை எழாது என்று நான் நினைக்கின்றேன்.

*I.A.S. and Non-I.A.S. Officers.*

*61. Q.—THIRU M. ARUMUGASWAMI: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the Departments which have I.A.S. Officers as Heads of Departments; and

(b) the Departments where non-I.A.S. Officers are Heads of Departments?



**ஐ.ஏ.எஸ். & ஐ.ஏ.எஸ். அல்லாத அதிகாரிகள்.**

*திரு. எம். ஆறுமுகசாமி:* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைத் துறைத் தலைவர்களாகக் கொண்டுள்ள துறைகள் யாவை?

(இ) ஐ.ஏ.எஸ். அதிகாரிகளல்லாத பிறரை துறைத் தலைவர்களாகக் கொண்டுள்ள துறைகள் யாவை?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* (அ) & (இ) விவர அறிக்கை @ ஒன்று மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:* தலைவரவர்களே, இந்த அறிக்கையின்படி சில துறைகளுக்கு ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும், சில துறைகளுக்கு ஐ.ஏ.எஸ். அல்லாதவர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். எந்த அடிப்படையிலே இந்தப் பாகுபாடு செய்யப்படுகின்றது என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* இதற்கென்று தனிக் கட்டுப்பாடு எதுவும் இல்லை. துறைத் தலைவராக இருப்பவர்கள் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள். எந்தத் தனிக் கட்டுப்பாடும் அவர்களுக்கு என்று இல்லை. அவர்கள் அந்தப் பதவிகளில் 1954-ம் வருட, ஐ.ஏ.எஸ். ஊதிய விதிகள் மூன்றும் அட்டவணையில் பதவியின் தரத்தினையும், பொறுப்பினையும் பொறுத்து மாநில அரசு அறிவித்திருக்கின்ற உத்தரவுகளின் அடிப்படையிலே நியமிக்கப் படுகின்றார்கள்.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* சில துறைகளைப் பொறுத்த வரையில் அந்தந்தத் துறைகளில் நல்ல படிப்பும் வல்லுநருமாக இருப்பவர்களை அந்தத் துறைத் தலைவராக நியமிப்பதற்கு அபிப்பிராயம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன். பால் உற்பத்தி, பால் பண்ணைத் துறைகளில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ஏன் போட வேண்டும்? அதுவும் ஏன் அடிக்கடி அவர்களை மாற்ற வேண்டுமென்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* அது யோசிக்க வேண்டிய ஒன்று தான். சில நேரங்களில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை, அந்தத் துறைக்கென்றே வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்களை தலைவராக மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகின்றது. அதைப்பற்றி அரசு யோசிக்க வேண்டியது தான்.

---

@ 326-329-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

## State Raffles.

* 62. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the annual net receipts from the State Raffles from inception;

(*b*) whether the same is on the decline; and

(*c*) if so, the reason therefor and the action proposed to be taken by the Government in this regard?

### தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள்.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள் மூலம், அது தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, ஆண்டு தோறும் கிடைத்த நிகர வருவாய் யாது?

(இ அவ்வருவாய் குறைந்து வருகிறதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணம் யாது? இது குறித்து என்ன நடவடிக்கை அரசு எடுக்கக் கருதியுள்ளது?

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* (அ) தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அதன் மூலம் கிடைத்த ஆண்டு நிகர வருவாய் வருமாறு:—

| | ரூபாய். |
|---|---|
| 1968 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களிலிருந்து 1969 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை | 4,60,40,946.18 |
| 1969 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை | 3,70,80,989.21 |
| 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை | 4,36,05,638.37 |
| 1971 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை | 4,32,29,798.92 |
| 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து 1973 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை | 1,00,06,760.59 |
| மொத்தம் | 17,99,64,133.27 |



(இ) ஆம். 1972-73-ஆம் ஆண்டில் நிகர வருவாய் குன்றியுள்ளது.

(உ) தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகள் விற்பனை சரிவுக்கான காரணங்கள், விற்பனையைப் பெருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை இத்துடன் உள்ள இணைப்பில் @ கொடுக்கப்பட்டுள்ளன.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* தலைவரவர்களே, நமது மாநிலத்தில் மட்டுமின்றி எல்லா மாநிலங்களிலும் இப்படிப்பட்ட பரிசுச் சீட்டுத் திட்டம் துவங்கப் பட்டிருப்பதால் பொதுவாக பரிசுச் சீட்டுகளின் விற்பனை வெகுவாகக் குறைந்து வருகின்றதைப் பார்க்க முடிகின்றது. இதற்கு ஆகும் செலவோ அதிகம், கிடைக்கும் பணமோ சிறிது. அதுவும் பெரும்பாலும் ஏழைகளிடமிருந்து பெறப்படும் பணம். அதுவும் தற்போது ஒரு கோடி ரூபாய் அளவில் தான் வருகின்றது என்று சொல்லப்படுகின்றது. எனவே இந்தத் திட்டத்தையே கைவிட்டுவிடுவதுபற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:* தலைவரவர்களே, இது வலியின்றிப் பெறுகின்ற பணமாக இருக்கின்றது. நமக்கு 1968-ஆம் ஆண்டிலிருந்து இது வரையில் மொத்தமாக எல்லாச் செலவுகளும் போகக் கிடைத்திருக்கும் நிகர வருமானமோ பெரிது. எனவே இதை அவ்வளவு சுலபத்தில் விட்டு விடும் மனப்பான்மை குறைய வேண்டும். 1968-லே இது தொடங்கியதிலிருந்து இது வரையில் ரூ. 17,99,64,133 அரசுக்கு நிகர வருமானமாகக் கிடைத்திருக்கின்றது. இது நல்ல காரியங்களுக்காகப் பயன்படுத்தப் படுகின்றது; கிராமச் சீர்திருத்தம், கிராமங்களில் பள்ளிகள், மருத்துவ வசதிகள் இவற்றுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. சூது, மது என்று எல்லாவற்றையும் விட்டுக்கொண்டே போனால், பிறகு நமது வருவாய் குறைந்துவிடும். அதையும் மனத்தில் வைத்துக்கொண்டு சிந்திக்க வேண்டும்.

*திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:* தலைவரவர்களே, இப்படிப் பரிசுச் சீட்டுகளின் மூலம் கிடைக்கும் வருவாய் நல்ல முறையில் பயன்படுத்தப் படுகின்றது என்பது உண்மைதான். பிச்சைக்காரர்களுடைய மறுவாழ்வு போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் கிராமங் களிலிருந்து வரும் எங்களைப் போன்றவர்கள்தான், ஏழைகள்தான் இந்தச் சீட்டுகளை அடிக்கடி வாங்குகின்றார்கள். ஆகவே கிராம மக்கள்தான் இதில்

@ 329-330-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

அதிகமாக நஷ்டமடைகின்றார்கள் என்பதை எண்ணி, இதைப்பற்றி அரசு மீண்டும் புனராலோசனை செய்வார்களா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஏழை மக்களுக்காக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சீட்டுக்களை வாங்கி அவற்றின் மூலம் வரும் வருமானத்தை அவர்கள் பெறுமாறு செய்தால், அவர்களும் முன்னேற்றமடைவார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, இது ஏழை மக்கள் மீது விதிக்கப்படும் மறைமுகமான வரியாகாதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மறைமுகமான வரிகளைப் போடும் இடத்தில்தான் நமது தீக்ஷிதர் அவர்களும் இருக்கின்றார்கள்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, பரிசுச் சீட்டுகளை நமது மாநிலத்தில் விடுவது போல பல மாநிலங்களும் இப்போது பரிசுச் சீட்டுத் திட்டங்களை ஏற்படுத்தியிருப்பதால், பல மாநிலத்துப் பரிசுச் சீட்டுகளும் நமது மாநிலத்தில் விற்கப்படுகின்றன. ஆனால் நமது தமிழக பரிசுச் சீட்டுக்களின் விற்பனையை பிற மாநிலங்களிலே தடை செய்திருக்கும்போது பிற மாநிலப் பரிசுச் சீட்டுக்களை இங்கே விற்பதை நாம் ஏன் தடை செய்யக் கூடாது என்று அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மராட்டிய மாநிலத்தில் நமது மாநில பரிசுச் சீட்டுக்களை விற்கக்கூடாது என்று தடை விதித்திருக்கின்றார்கள். ஆகவே மராட்டிய மாநில பரிசுச் சீட்டுக்களை இங்கே விற்கக்கூடாது என்று நாமும் தடை செய்திருக்கிறோம். பிற மாநிலங்களோடு நாம் கொண்டிருக்கும் ஒரு ஒப்புதலின் அடிப்படையில் நமது மாநிலப் பரிசுச் சீட்டுக்களை அங்கே விற்பதற்கும் அந்த மாநிலங்களின் பரிசுச் சீட்டுக்களை இங்கே விற்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### *Burma Repatriates*

* 74. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether any scheme to construct houses for Burma Repatriates at Kanakkankulam, Madurai, has been inaugurated;

(*b*) if so, when ; and

(*c*) the present stage of the implementation of the scheme?



### பர்மா அகதிகள்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை கணக்கன் குளத்தில் பர்மா இந்தியர்களுக்காக வீடுகள் கட்டும் திட்டம் தொடங்கப் பெற்றதா ?

(இ) ஆமெனில், எப்பொழுது ?

(உ) திட்ட நிறைவேற்றம் எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1971-ஆம் ஆண்டு ஜூலை திங்களில்.

(உ) பர்மா அகதிகளுக்காக 407 வீடுகளைக் கட்டும் பணியை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மதுரைப் பிரிவு ஏற்றுக்கொண்டுள்ளது. இவற்றில் 100 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பர்மா அகதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இன்னும் 100 வீடுகளைக் கட்டும் பணி தொடங்கப் பெற்று வேலை நடந்து கொண்டிருக்கிறது. இப்பணி இந்த ஆண்டு அக்டோபர் திங்களுக்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### *Burma Tamilians Resettlement Scheme.*

* 75. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the Burma Tamilians Resettlement Scheme at Papakurichi, Tiruchirappalli district, which started in 1971, has been partly implemented and the balance of the work is at a standstill; and

(*b*) if so, whether there is any proposal with the Government to expedite the work ?

### பர்மா தமிழர் குடியிருப்பு திட்டப் பணி.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-ஆம் ஆண்டில் திருச்சி பாப்பாக்குறிச்சியில் துவக்கி வைக்கப் பெற்ற பர்மா தமிழர் குடியிருப்பு திட்டப் பணி ஓரளவு நிறைவேறி மேலும் நடைபெறாமல் தேங்கி நிற்பது அரசுக்குத் தெரியுமா ?

[1973 நவம்பர் 23

(இ) ஆமெனில், அந்தப் பணியை விரைவுபடுத்தி நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இருக்கிறதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) இப்பணியை விரைவுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

*Import and Export of Lac.*

* 76. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether Lac is being (i) imported into; or (ii) exported from this State;

(*b*) if so, the details thereof; and

(*c*) the value for which they are (i) imported or (ii) exported?

அரக்கு ஏற்றுமதி & இறக்குமதி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரக்கு இம்மாநிலத்தில் இறக்குமதி செய்யப்படுகின்றதா அல்லது இம்மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

(உ) இறக்குமதியாகும் அல்லது ஏற்றுமதியாகும் அரக்கின் மதிப்பு எவ்வளவு?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) வெளி மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டுக்கு அரக்கும், அவலரக்கும் இறக்குமதி செய்யப்படுகிறது. ஒரு சிறிய அளவு வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

(இ) 1970–71 ஆம் ஆண்டில்—

இறக்குமதி—2,497 குவிண்டால்.

ஏற்றுமதி—357 குவிண்டால்

(உ) இறக்குமதியின்மதிப்பு ரூ. 3,12,125

ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 44,625



1973 நவம்பர் 23]

*'Sons of the Soil' thesis for Employment Opportunities.*

*77. Q.—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government are aware of the 'Sons of the Soil' thesis propounded by some of the States like Bihar and West Bengal regarding employment opportunities in their States;

(b) if so, whether it is adversely affecting persons belonging to our State who seek employment elsewhere and also the children of Tamil parents who have settled in those States; and

(*c*) if so, the action proposed to be taken by the Government in the matter?

வேலை வாய்ப்பு சம்பந்தமாக 'தங்களது மாநிலம் தங்களுக்கே' என்ற கொள்கை

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பீகார், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்கள், தங்களது மாநிலங்களில், வேலை வாய்ப்பு சம்பந்தமாக, 'தங்களது மாநிலம் தங்களுக்கே' என்ற கொள்கையைக் கொண்டுள்ளதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், வேறு மாநிலங்களில் வேலை தேடும் நமது மாநிலத்தைச் சேர்ந்தவர்களையும், அம்மாநிலங்களில் குடியேறியுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த பெற்றோர்களின் குழந்தைகளையும் இது மிகவும் பாதிக்கிறதா?

(உ) ஆமெனில், இது குறித்து, அரசு எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ), (இ) & (உ) பொதுப் பணிகளில் நியமிக்கப்படுவது குறித்து மாண்புமிகு உறுப்பினரால் குறிப்பிடப்பட்ட கொள்கை பற்றி மாநில அரசுக்குத் தகவல் ஏதும் இல்லை. எனினும் "இந்தியக் குடிமகன் எவரும், மதம், இனம், சாதி, ஆண், பெண், பிறப்பு, பிறப்பிடம், குடியிருக்குமிடம் அல்லது இவைகளில் ஏதாவது ஒன்றால், ஒரு மாநிலத்தில் எந்தவொரு வேலைவாய்ப்பும் அல்லது எந்தவொரு வேலையும் பெறத் தகுதியுடையவர் இல்லை என்று கூறுவதை அல்லது அது குறித்துப் பாகுபாடு காட்டப்படுவதைத் தடுத்துத் தேவையான பாதுகாப்பளிப்பதற்கு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 16(2) பிரிவின் கீழ் வகை செய்யப்

பட்டுள்ளது". அதுபோன்ற பாகுபாட்டால் பாதிக்கப்பட்டவர் எவரேனு மிருந்தால், பொருத்தமானதும் தேவையானதுமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினைபற்றி அண்மையில் நமது முதலமைச்சர் அவர்கள்கூட பேசியதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அப்படி இருக்கும்போது, 'தகவல் இல்லை' என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று தெரியவில்லை. வங்காளம், பீஹார் மற்றும் மைசூர் மாநிலங்களிலே மாதம் 500 ரூபாய் சம்பளத்திற்குக் குறைவாக உள்ள வேலைகளெல்லாம் அந்த மாநிலத்தில் உள்ளவர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் மத்திய அரசுக்கும் எழுதி, அவர்களும் அதை ஒப்புக்கொண்டு முடிவு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா? இது விஷயத்தில் அங்குள்ள நமது தமிழ் மக்கள் பாதிக்கப்படாமலிருக்க மத்திய அரசுக்கு நமது அரசு ஏதாவது எழுத இருக்கின்றதா? இது விஷயத்தில் நமது அரசு என்ன கொள்கை கொண்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த முறையில் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று மேற்கு வங்காளத்திலும் மராட்டியத்திலும் செய்திகள் வந்தவுடன், நமது முதலமைச்சர் அவர்கள் இதுபற்றித் தெளிவுபடுத்தினார்கள். நமக்கு இந்தக் கொள்கையில் நம்பிக்கையில்லை என்றாலும்கூட, மற்ற மற்ற மாநிலங்கள் அப்படிப்பட்டதொரு கொள்கையை அனுசரித்தால், நாமும் அதைப் பின்பற்ற வேண்டிவரும் என்று சொல்லி, அந்த முறையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் முறைகளில் நமது அரசு கவனமாக இருக்கும் என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, நமது தொழிலமைச்சர் அவர்கள் வட இந்தியப் பகுதியிலுள்ள பல தொழிற்சாலைகளைப் பார்வையிட்டு வந்தார்கள். அவற்றில் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் பெரும் பதவிகளில் அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றார்களா என்று பார்த்தார்களா அல்லது அப்படி நமது மாநிலத்தவர்கள் அங்கே பணியாற்றுவதற்கு அங்கே உள்ள மாநில அரசுகள் தடை விதித்திருக்கின்றன என்று நமது மாநிலத் தொழிலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, வட மாநிலங்களிலே பணியாற்றும் தமிழர்களுக்கு ஆபத்தான சூழ்நிலை ஏற்படுவதாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது. ஐநூறு ரூபாய் சம்பளத்திற்குக் குறைவாக உள்ள



பதவிகள் அந்த மாநிலத்தைச் சார்ந்தவர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தப்படுவதாகவும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. இன்னும் ஒரு புதியதொரு நிலைமையையும் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. ரூர்கேலா உருக்காலை மத்திய அரசுக்குச் சொந்தமானதொரு தொழிற்சாலை. அதிலே பிறருக்கு வேலைபோட்டுக் கொடுக்கும் இடத்திலுள்ள ஒரு அதிகாரியாக அந்த மாநிலத்தைச் சார்ந்தவரைத்தான் போட வேண்டும் என்று வற்புறுத்தி மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதி, அதை மத்திய அரசும் ஏற்றுக்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட ஒரு புதிய முடிவை மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கின்றது. இதே போல ரூ. 500 சம்பளத்திற்குக் குறைவாக உள்ள வேலைக்கு ஒருவர் மனுப் போட்டால், அந்த நபர் அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்தான் என்று அந்த மாநில அரசு அதிகாரி ஒருவர் உத்தரவாதம் கொடுத்த பிறகுதான், அவருக்கு அந்தத் தொழிற்சாலையில் வேலை கொடுக்கவேண்டுமென்று கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. மத்திய அரசின் தொழிற்சாலையில் வேலை கொடுப்பதற்கு அங்கே இப்படி ஒரு முடிவெடுத்திருக்கின்றார்கள் என்பதைப் பார்க்கும்போதுதான், நமது மாநிலத்திலுள்ள மத்திய அரசுத் தொழிற்சாலைகளிலும் அப்படிப்பட்டதொரு கொள்கையைப் பின்பற்ற வேண்டும், 'எங்கள் மாநில அரசு அதிகாரிகளைத் தான் உங்கள் மத்திய அரசுத் தொழிற்சாலைகளிலும் போட வேண்டும். ரூ. 500-க்குக் குறைவாகச் சம்பளம் உள்ள வேலைகள் சம்பந்தமாக இந்த மாநிலத்தவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்க வேண்டும் என்று கேட்கலாம் என்ற யோசனை இருக்கின்றது. ஆனால் பொதுவாக அங்கே உள்ள நமது மாநிலத்தவர்கள் தங்கள் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற அச்சத்துடன்தான் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கவலை தெரிவித்தார்கள்.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவரவர்களே, இப்படி வெளி மாநிலங்களிலே உள்ள தமிழர்களுக்கு ஒரு சிக்கலான சூழ்நிலை இருப்பதை இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார் அவர்களுக்குத் தெரிவித்திருக்கின்றீர்களா? அந்த அம்மையார் என்ன முடிவெடுப்பார்கள் என்பதை நமது அரசு தெரிந்துகொண்டிருக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் இப்போது சொன்னேன்.

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விஷயத்தை யாரும் எளிதாகப் புறக்கணிப்பதற்கில்லை. அது மிகவும் முக்கியமான விஷயம். நமது மாநில மக்களை பாதிக்கக்கூடிய

விஷயமாக இருப்பதால், இது பற்றி நமது மாநில அரசு மத்திய அரசுக்கு எழுதுவதோடு விட்டுவிடாமல், பாராளுமன்றத்திலே உள்ள நமது மாநில உறுப்பினர்களுக்கும் இதுபற்றி விளக்கமாகத் தெரிவித்து, இப்படி சில மாநிலங்களிலே பாகுபாடு காண்பிப்பது என்பது அரசியல் சட்டத்திலே கொடுக்கப்பட்டுள்ள பாதுகாப்புகளுக்கே முரணானது என்பதை அவர்கள் அங்கே கண்டிப்பாக எடுத்துச் சொல்லவும் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி பாகுபாடு காண்பிக்கும் முறையில் மத்திய சர்க்காரே உத்தரவிட்டிருப்பதால், இதைக் கண்டிக்கத்தக்க முறையில், பாராளு மன்றத்திலே ஒத்திவைப்புப் பிரேரணை அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் கொணர்வது போன்ற நடவடிக்கைகளை எடுப்பது நலம். இதுபற்றி மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர நமது அரசாங்கம் மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கின்றது, அல்லது இதுவரையில் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இது விஷயத்தில் மாநில மக்கள் ஒருமித்த குரலை எழுப்ப வேண்டும் என்றுதான் எங்கள் தரப்பிலிருந்து வெகு நாட்களாகச் சொல்லிக்கொண்டு வருகின்றோம். இன்றைக்குத்தான் அப்படிப்பட்டதொரு அருமையான காட்சியினை எதிர்த் தரப்பில் பார்க்கின்றேன். இப்படி எல்லாக் கட்சிகளும் சேர்ந்து குரல் கொடுத்தால் நிச்சயம் மத்திய அரசு மாநில மக்களுடைய உரிமைகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்க முன்வரும். நமது மாநில மக்களுடைய உணர்வுகளை நிச்சயம் நமது பாராளுமன்ற உறுப்பினர்களும் அங்கே தெரிவிப்பார்கள், நமது அரசும் இதுபற்றிக் கவனிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**திரு. கே. ராஜாராம்:** தலைவரவர்களே, நமது மாநில மக்களின் குறைகள் களையப்படுவதில்லை, அவர்களுடைய நலன்கள் பாதிக்கப்படும்போது, என்றைக்கும் நாங்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு நடந்து கொண்டதில்லை. ஆகவே இந்த விஷயத்தில் தமிழ் நாட்டு மக்களின் உரிமைகள் வேறு மாநிலங்களிலே பறிபோகக்கூடிய நிலை ஏற்படுமானால், அதற்குப் பாதுகாப்புத் தேடுவதோடு, பாராளுமன்றத்திலும் நாம் எல்லோரும் சேர்ந்து இதற்கு வழி காண்பதற்கு, முதலமைச்சர் அவர்கள், அல்லது நமது அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய யோசனை மிகவும் சிலாக்கியமானது. அதை ஏற்றுக்கொள்ளுகின்றேன். அரசின் சார்பிலே மட்டுமில்லாமல் ஆளும் கட்சி சார்பிலேகூட அதை ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கின்றேன்.

பாராளுமன்றத்திலே எடுத்துச் சொல்லுவதைப் பொறுத்த வரையில், நம் காமராஜர் அவர்களுடைய தலைமையிலேயே அப்படி ஒரு தூதுக் குழுவினை அமைத்து எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து இந்திரா காந்தி அம்மையார் அவர்களைச் சந்தித்து இந்த நோக்கத்தை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். இப்போது அதற்கு நல்ல வசதி இருப்பதாகவும் நான் கருதுகின்றேன்.

**திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்:** தலைவரவர்களே, சமீபத்தில் மண்டபத்தில் பாம்பன் பாலத்தில் அடிக்கல் நாட்டுகிறபோது, தலைமையமைச்சர் வேண்டுமென்றே இந்த விஷயத்தைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லும்போது, டில்லியில் இருக்கிற தமிழர்கள் நல்ல வேலை செய்கிறார்கள், அவர்கள் வேலையைப் பாராட்டுகிறோம் என்று சொன்னார்கள். இப்படி இருக்கிற சூழ்நிலையில் அவர்கள் எப்படி இப்படிச் சொன்னார்கள் என்று புரியவில்லை. இந்த உத்தரவு எப்போது போட்டார்கள் என்று தெரியவில்லை, பின் ஏன் இப்படிப் பேசினார்கள் என்று விளங்கவில்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, இதற்குப் பெயர் தான் சொல்வது ஒன்று செய்வது ஒன்று ஆகும்.

**தவத்திரு குன்றக்குடி அடிகளார்:** தலைவரவர்களே, இந்திய ஒருமைப் பாட்டைப்பற்றி அதிகமாகப் பேசுகிற நடுவண் அரசு மாநிலத்திற்கும் மாநிலத்திற்குமிடையே வேலை வாய்ப்புப் பிரச்சினை சம்பந்தமாக மோத விடுகிறதே. இது குறித்துப் பேரவையிலும் மேலவையிலும் ஏகோபித்த தீர்மானம் போட்டு நடுவண் அரசுக்கு அனுப்புவதைப்பற்றி அரசு ஆலோசிக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, இதே மன்றத்தில் எல்லா தரப்பினரும் இந்தக் கருத்தை ஆதரிக்கிற காரணத்தினால், இதுவே அவர்களுக்குச் செய்தியாகப் போகும் என்று கருதுகிறேன். எல்லாத் தரப்பினரும் இந்தக் கொள்கையை வலியுறுத்தினார்கள் என்பதைத் தெரிவிப்போம்.

[1973 நவம்பர் 23

### *Petro-Chemical Project at Tuticorin.*

*78. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the chain of industries to be located around the Petro-Chemical Project at Tuticorin ?

### தூத்துக்குடி பெட்ரோல் இரசாயனப் பொருள்கள் திட்டப்பகுதி.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தூத்துக்குடி பெட்ரோல் இரசாயனப் பொருள்கள் திட்டப் பகுதியைச் சுற்றி அமைக்கப்படவிருக்கும் தொடர்பான பல தொழில்களின் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்கு அருகில் பின்வரும் தொழிற்சாலைகள் அமைக்கப்படும் :—

(1) சோடா சாம்பல், அம்மோனியம் குளோரைடு தொழிற்சாலை.

(2) கனநீர் தொழிற்சாலை.

சதர்ன் பெட்ரோ கெமிக்கல்ஸ் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன், தனது உரத் தொழிற்சாலைக்கு அருகில் பின்வரும் துணைத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

1. உரப்பைகள் தயாரிப்புத் தொழிற்சாலை.

2. சோடியம் சிலிகோ புளோரைடு/கிரயோலைட் தொழிற்சாலை.

3. ஜிப்சம் போர்டு தொழிற்சாலை.

4. தொழில்களுக்குத் தேவையான நீராக்கப்பட்ட சுண்ணும்புக் காளவாய்.

5. பொறியியல் பிரிவுகள் (இயந்திர உதிரிப் பாகங்கள் தயாரிப்பதற்கானவை, ரப்பர் உள் வரித்தையல், கெட்டியான குரோமிய முலாம் பூசும் தொழிற்சாலை, வெப்பந்தாங்கி கற்கள், மசக்கெண்ணெய் எடுத்தல் முதலியன)

மேற்படித் தொழிற்சாலைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் பற்றி ஆய்வு செய்யுமாறும் மற்றும் பொருத்தமான தொழிற்சாலைகள் அமைக்க ஏற்பாடு செய்யுமாறும் அறிக்கைகள் தயாரிக்குமாறும்; தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனமும் (சிப்காட்), சிறுதொழில் வளர்ச்சி நிறுவனமும் (சிட்கோ) கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.



1973 நவம்பர் 23]

### *Illicit Arrack Manufacturing Unit.*

*79 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any illicit arrack manufacturing unit has been detected at Samiparai on the banks of the Cauvery river near Erode on or about the 23rd November 1972; and

(*b*) if so, the details thereof ?

### கள்ளச் சாராயம் காய்ச்சும் பிரிவு.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 23—11—1972 ஆம் நாள் அல்லது அந்நாள் அளவில், ஈரோடு அருகே காவேரி ஆற்றுக் கரையில், சாமிப்பாறையில், கள்ளச் சாராயம் காய்ச்சும் பிரிவு ஏதேனும் கண்டுபிடிக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே,

(அ) ஆம்.

(இ) கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சியதாக தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்டம் 61 ஆவது பிரிவின்படி 4 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களில் மூவர் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். மற்றொருவர் சம்பந்தமான வழக்கு சங்ககிரி துணை மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணையில் இருக்கிறது.

### *Chola Period Idols.*

*80. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a number of Chola period idols have been unearthed at Tirukolam-pudur in Thanjavur district about the 11th of May 1973 ; and

(*b*) if so, the details thereof ?

சோழர் காலச் சிலைகள்.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருக்கோலம்புதூரில் 1973 மே திங்கள், 11 ஆம் நாள் வாக்கில், சோழர் காலச் சிலைகள் பல கண்டெடுக்கப் பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவை பற்றிய விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) ஆம்.

(இ) நன்னிலம் தாலுகா, திருக்களம்பூர் கிராமத்தில் 8—5—73 அன்று வில்வரன்யேஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான ரி. சர்வே எண் 75/1-ல் உள்ள நிலத்தில் வாய்க்கால் வெட்டும்போது சுவாமி சிலைகளும், இதர பூஜை சாமான்களும் கண்டுபிடிக்கப்பட்டன. புதையல் சட்டம் பிரிவு 7-ன் படி விசாரணை முடிந்து இறுதி நடவடிக்கை எடுக்கப்படுவது வரையில் இந்த பொருட்கள் அனைத்தும் நன்னிலம் தாலுக்கா அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன.

**திரு. சா. கணேசன் :** தலைவரவர்களே, இந்த விக்கிரகங்கள் முழுவதும் திருக்களம்பூர் தேவாலயத்தைச் சேர்ந்த அந்த இடத்திலிருந்து எடுக்கப் பட்டவை என்பதனாலே அந்த ஆலயத்திற்கே அவை கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, இப்புதை பொருள் சம்பந்தமாக புதையல் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு புதை பொருள் சட்டம் பிரிவு 7-ன் படி நன்னிலம் வட்டாட்சியார் அலுவலகத்தில் 28—11—73 அன்று விசாரணை போடப்பட்டுள்ளது. சென்னை அருங்காட்சியாக இயக்குநர், மேற்கொண்ட புதை பொருள் அனைத்தும் அருங்காட்சியகத்திற்குத் தேவையெனத் தெரிவித்துள்ளார். இந்து சமய அற நிலைய ஆட்சித் துறை ஆணையர் அரசுக்கு அனுப்பிய கடிதத்தில் புதை பொருள் அனைத்தையும் அருள்மிகு வில்வரன்யேஸ்வரர் ஆலயத்தில் வைத்து பூஜை செய்வதற்கு அனுமதி கோரியுள்ளார். புதை பொருள் சட்டத்தில் அருங்காட்சியாக இயக்குநர் கோரிக்கைக்கு இணங்க அனைத்துப் புதை பொருட்களையும் அருங்காட்சியகத்திற்கு ஒதுக்க வழி உள்ளதே தவிர, சென்னை இந்து சமய அற நிலைய ஆட்சித் துறை ஆணையர் கோரியுள்ளபடி புதை பொருட்களை அருள்மிகு வில்வரன்யேஸ்வரர் ஆலயத்தில் வைத்து பூஜை செய்வதற்கு அனுமதி வழங்க வழியில்லை. புதை பொருட்கள் அனைத்தும்



நன்னிலம் வட்டாட்சியார் அலுவலகத்தில் பாதுகாப்பாக உள்ளன. புதையல் சட்டம், பிரிவு 7-ன் படி 28—11—73 அன்று விசாரணை முடிவுற்ற பின் உள்ளபடி நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இது போன்று எடுத்துள்ள சோழர் காலச் சிலைகளை சென்னை மியூசியத்திற்குக் கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட சிலைகளெல்லாம் 6, 7 ஆண்டுகளாக மியூசியத்தில் வைக்கப்படாமல் இருட்டறையில் இருக்கிற நிலைமை இருக்கிறது. அவைகளை தஞ்சைக் கலைக் கூடத்திற்கு ஒதுக்க அரசு ஏற்பாடு செய்யுமா வென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, நாம் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், சட்டத்தில் இப்படித்தான் இருக்கிறது. அப்படி அந்த சிலைகள் இருட்டறையில் இருக்குமானால், அவைகளை வெளிச்சத்தில் வைக்க ஏற்பாடு செய்யலாம். இப்பேர்ப்பட்ட நல்ல சிலைகளை எல்லா மக்களும் பார்த்து அனுபவிக்கத் தக்க அளவிற்கு வைத்திருப்பார்கள் என்று கருதுகிறேன்.

*Panchayat Union Teachers.*

* 81. *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the total service put in by teachers who have been transferred from one Panchayat Union to another Panchayat Union along with their services, will be taken into account for being appointed as Headmasters ; and

(*b*) if not, the reasons therefor ?

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள்.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு பணிக் காலத்துடன் மாறுதல் பெற்று பணியாற்றும் ஆசிரியர்களின் மொத்த ஊழிய காலம் தலைமை ஆசிரியர் நியமனம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படுமா ?

(இ) இல்லையெனில், காரணங்கள் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) இடைநிலை ஆசிரியர்களை தலைமை ஆசிரியர்களாக பதவி உயர்த்தும்போது, அப்போது பணியிலுள்ள இடைநிலை ஆசிரியர்களுக்கிடையேயுள்ள முதுநிலை கவனிக்கப்படல் வேண்டுமென்று 6—10—71 நாளிட்ட கல்வித்துறை அரசாணை (நிலை) எண். 1722-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆசிரியர்களின் முதுநிலை கவனிக்கப்படும்போது, அவர்களில் வேறொரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து பணிமாற்றம் செய்யப்பட்டு வந்த ஆசிரியர்கள் இருந்தால் அவர்களுடைய முதுநிலையை கீழ்க்கண்ட முறையில் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று 24—7—73 நாளிட்ட ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை அரசாணை (நிலை) எண். 1475-ல் ஆணை வழங்கப் பட்டுள்ளது :—

( i ) மாற்றப்பட்ட ஆசிரியர் தமது சொந்த விருப்பத்தில் மாறுதலாகி வந்திருந்தால், பழைய ஒன்றியத்தில் அவர் இடைநிலை ஆசிரியராக பணி புரிந்த காலத்தைக் கணக்கில் கொள்ள வேண்டுவதில்லை. புதிய ஒன்றியத்தில் மாற்றப்பட்ட தேதியிலுள்ள மற்ற ஆசிரியர்களுக்குப் பின்தான் மாற்றப்பட்ட ஆசிரியரின் முதுநிலையை நிர்ணயம் செய்ய வேண்டும்.

( ii அவர் நிர்வாகக் காரணங்களுக்காக மாற்றப்பட்டிருந்தால், பழைய ஒன்றியத்தில் பணி முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து காலத்தைக் கணக்கில் கொள்ள வேண்டும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, மாவட்டக் கழகத்தின் காலத்திலேயே அப்பாயிண்ட்மெண்ட் செய்யப்பட்ட ஆசிரியர்கள் எல்லோரும் அந்த மாவட்டக் கழகம் கலைக்கப்பட்ட காலத்தில் எந்தெந்த ஊராட்சி ஒன்றியப் பகுதிகளுக்குச் செல்கிறார்கள் என்று வரையறுக்கப்பட முடியாத காரணத்தினால், பின்னால் ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்படுகிற நேரத்தில் அவர்கள் சர்வீசுடன் எந்த வித பாதிப்புமில்லாமல் எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள் என்று கவுன்சில் தீர்மானம் இயற்றியிருக்கிறது. ஆனால் நம்முடைய அமைச்சர் சொன்ன ஆணை தற்போது வந்திருக்கிறது. இதற்கு முன்னால் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆசிரியர்கள் சீனியாரிட்டி எந்த அடிப்படையிலே கணக்கிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, ஏற்கெனவே ஊராட்சி ஒன்றியத்திற்கு மாவட்டக் கழகத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட நேரத்தில் ஆசிரியர்களுக்கு மட்டுமல்ல, அதிலே பணியாற்றியவர்களுக்கு, அவர்களுக்கு எங்கெங்கே போக விருப்பமோ, அதைக் கேட்க வேண்டுமென்று





அப்போது ஏதும் விதி வைக்கப்படவில்லை. அப்போது அவர்கள் தங்களுடைய சொந்தப் பகுதிகளுக்குப் போக வேண்டுமென்று மாற்றிக்கொண்டு வந்தார்கள். ஆசிரியர்கள் மாத்திரமல்ல, அதிலே பணியாற்றி வந்த பல பிரிவுகளைச் சேர்ந்த அலுவலர்களும் மாற்றிக் கொண்டு வந்தார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், இப்போது ஆசிரியர்களுக்கு இந்த அரசாங்கம் அவர்களுடைய பதவிக் காலத்தை ஒழுங்குமுறைப்படுத்த விதி முறை செய்திருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பணியாற்றி வந்த கணக்கர்கள் போன்றவர்களின் சர்வீஸ் ரெகுலரைஸ் பண்ணப்படாதது மாத்திரமல்ல, அவர்கள் உள்ள இடத்தில் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்தவரை இந்த மாற்றம் இப்போது செய்யப்பட்டிருக்கிறது. ஓரளவு ஊதியம் உயர்த்தப்பட்ட பிறகுதான், இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று நான் கருதுகிறேன். மாவட்டங்களில் இப்படிக் கணக்கிட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, இந்த அரசு ஆணையை அமைச்சரவர்கள் விளக்கியதற்கு நன்றி. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் செய்யாறு கோட்டாட்சித் தலைவரவர்கள் அரசு ஆணையை நிராகரிக்கக் கூடிய நிலையும், ஆனால் திருவண்ணாமலை ஆர்.டி.ஓ. ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையும் இருக்கிறது. ஒரு பக்கம் அரசு ஆணையை ஏற்கக் கூடிய நிலையும் இன்னொரு பக்கம் ஏற்றுக்கொள்ளாத நிலையும் இருக்கிறது. இந்த நிலையைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார்களானால், நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை அரசாணை எண். 1475-ன் படி ஒரு ஆசிரியருக்கு ஒரு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றம் அளிக்கப்படும்போது, அவருக்கு என்ன பாதகம் ஏற்படவிருக்கிறது, அங்கு அவர் ஜூனியர் மோஸ்ட்டாக வைக்கப்படுவார் என்பது அந்த ஆசிரியருக்கு அறிவிக்கப்பட்டு, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைத் தெரிந்திருக்கிறேன் என்று எழுத்து மூலம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தெரிகிறது. அந்த ஆணைப்படி எழுதி வாங்காமலே, அவர்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்காமல் மாற்றப் பட்டிருப்பவர்களுக்கு அரசு பாதுகாப்பு கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1973 நவம்பர் 23

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நிர்வாக நலனை முன்னிட்டு இந்த மாற்றங்கள் செய்யப்படுகின்றபோது அவர்களுக்குப் பாதுகாப்பு உண்டு. அவர்களுடைய பழைய சர்வீஸ் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. எந்தக் குறிப்பிட்ட ஆசிரியராவது பாதிக்கப் பட்டிருந்தால், அரசு கவனத்திற்குக் கொண்டு வந்தால், அது பரிசீலிக்கப்படும்.

*Powers to reduce taxes for the Panchayat*

*82. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Town Panchayats were vested with the necessary powers to reduce the house-tax and profession tax assessed by the Executive Officers of the town Panchayats, on appeal;

(*b*) whether the Government have ordered that the Town Panchayats should not reduce the taxes by more than ten per cent;

(*c*) whether the Government will come forward to cancel that order; and

(*d*) if not, the reason therefor?

பஞ்சாயத்துக்களின் வரிக்குறைப்பு அதிகாரம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேரூராட்சிகளில் நிர்வாக அதிகாரிகளால் போடக்கூடிய வீட்டு வரி, தொழில் வரிகளை மேற்படி மன்றங்களுக்கு மனுச் செய்தால், அவைகள் விசாரணை செய்து குறைக்கக்கூடிய பூரண அதிகாரம் இருந்ததா?

(இ) மேற்படி மன்றத்தின் அதிகாரத்தில் 10 சதவிகிதத்திற்கு மேல் வரிகளைக் குறைக்கக்கூடாது என்று சர்க்காரால் உத்தரவு ஏதும் இடப்பட்டதா?

(உ) அவ்வுத்தரவை ரத்து செய்ய அரசு முன்வருமா?

(எ) இல்லையெனில், காரணம் என்ன?



1973 நவம்பர் 23]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம். அத்தகைய பூரண அதிகாரம் 25—3—1970 வரை இருந்தது.

(இ) ஆம்.

(உ) இல்லை.

(எ) பஞ்சாயத்துக்களின் வரிக் குறைப்பு அதிகாரத்தை ஒரு திட்ட வட்டமான வரையறைக்குள் சட்டரீதியாக உட்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனே, ஊராட்சிகளுக்கு வரக்கூடிய மேல் முறையீடுகள் மீது 10 சதவீதத்திற்கு மேல் வரி குறைப்பு செய்யலாகாது என்று உத்தரவிடப் பட்டது. ஆகவே, அதை ரத்து செய்யும் எண்ணம் இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, நகராட்சி போல் பஞ்சாயத்துகளிலும் ஜனநாயக முறையில் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களே இருந்து வருவதால், அந்தப் பஞ்சாயத்து கமிட்டிகளில் ஒன்றுக்கு அதிகாரம் கொடுக்கக்கூடாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்களின் வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று நினைக்கின்றபோது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு ஊர் வளர்ச்சியில் அக்கறை இருக்குமே தவிர வருமானத்தில் அவ்வளவு இருக்காது என்ற காரணத்தால் அப்படிச் செய்ய முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, அந்தந்த ஊர்களில் உள்ள ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை விட அதிகாரிகளுக்கு அதிக அக்கறை இருக்கும் என்று அரசு நம்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, 10 சதவீதத்திற்கு மேல் வரியைக் குறைக்கக்கூடாது என்று விதிக்கப் பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: தலைவரவர்களே, பேரூராட்சித் தலைவர் களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் சுயநலத்தின் காரணத்தால் இந்த வரி விதிப்பு முறையில் தலையிடுவார்கள் என்று சொல்லப்படுகிறது. ஜனநாயகத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தவர்களை நாம் நம்பி அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியது என்ற முறையில் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் குறை கூற வேண்டும் என்று சொல்லப்படவில்லை. விதி எப்படி இருக்கிறது என்று எடுத்துச் சொல்லப் பட்டது. எடுத்ததற்கெல்லாம் ஜனநாயகம் தலைவிரித்தாட ஆரம்பித்தால், ஊராட்சி மன்றங்கள் சரியாக இயங்குமா? ஊராட்சி, பேரூராட்சி இவைகளுக்கு வரி வசூல் செய்வதற்கு ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் சிற்றூர் ஆட்சிகளில் வரி வசூல் செய்யும் அதிகாரம் யாருக்கும் கொடுக்கப் படவில்லை. அந்தக் கிராமத்தின் கர்ணம், மணியம் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. தலைவர்கள் கூட தலையிட முடியாத நிலை இருந்து வருகிறது. இதனால் யாருடைய ஜனநாயக உரிமையையும் பறிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் 'ஜனநாயகம் தலைவிரித்தாட ஆரம்பித்தால்' என்று சொன்னார்கள். அதை 'ஜனநாயகத்தைத் தவறாகப் பயன்படுத்தினால்' என்று திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: Sir, the Government have placed certain restrictions on the powers of appeal of the Panchayat Presidents. May I know, Sir, whether similar rules had been issued to the Executive Officers of those Panchayats so that they may not abuse their authority and whether any limit has been fixed on the amount by which the tax could be increased by such Executive Officers?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தற்பொழுது இருந்து வரும் வரிகளை உயர்த்தி அதன்மீது ஆட்சேபனை வருமானால் பத்து சதவீதத்திற்கு மேல் குறைக்கக்கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

### *Financial Position of the Town Panchayats.*

*83. Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it has been brought to the notice of the Government that the financial position of the Town Panchayats is affected as a result of the orders of the Government enhancing the salaries of the employees and the scavengers working in those Town Panchayats;



(b) if so, whether any financial aid was being given to those Town Panchayats which were financially weak;

(c) whether that financial aid has been stopped now; and

(d) if so, the reason therefor?

### ஊராட்சிகளின் நிதி நிலைமை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பேரூராட்சிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும், தோட்டிகளுக்கும், அரசாங்கம் சம்பள உயர்வு கொடுக்க உத்திரவு இடுவதால், மேற்படி ஊராட்சிகளின் நிதி நிலைமை பாதிக்கப்படுவது அரசு கவனத்திற்கு வந்ததா?

(இ) ஆமெனில், பற்றாக்குறை நிதி உள்ள பேரூராட்சிகளுக்கு ஏற்கெனவே நிதியுதவி கொடுத்து வந்திருக்கிறதா?

(உ) அந்த நிதியுதவி தற்போது நிறுத்தப்பட்டு விட்டதா?

(எ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம். பேரூராட்சிகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும் துப்புரவு தொழிலாளர்களுக்கும் அரசாணை எண். 322 (ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறை) நாள் 9—2—1971-ல், 2—10—1970 முதல் சம்பள உயர்வு கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி ஊதிய உயர்வினால் ஊராட்சிகளின் நிதிநிலை பாதிக்கப்படுவதால் அவைகளுக்கு அளிக்கப்பட்டுவரும் நிதி உதவியின் அளவைத் திருத்தி நிர்ணயிக்க வேண்டும் என ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார். இந்த விஷயம் அரசுடைய பரிசீலனையில் இருக்கிறது.

(இ) ஆம்.

(உ) 1970–71-ம் ஆண்டிற்கு பேரூராட்சிகளுக்கு நிதி உதவி கொடுக்கப்படவில்லை. 2—10—70 முதல் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டதால் போதிய நிதி உதவி அளிக்க வேண்டி, அதற்குரிய விகிதம் நிர்ணயிக்கக் கோரி ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்குக் கோரியுள்ளார். அதுவும் அரசுடைய பரிசீலனையில் இருக்கிறது.

(எ) புதிய விகிதத்தில் நிதி உதவி அளிக்க ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பியுள்ள செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையில் உள்ளதால், பழைய முறையில் நிதி உதவி அளிப்பது தற்காலிகமாக நிறுத்தப் பட்டிருக்கிறது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: டவுன் பஞ்சாயத்துகளுடைய நிதி நிலை குறைவாக இருக்கிறபோது, அரசாங்கம் சம்பளம், பஞ்சப்படி என்ற முறையில் துப்புரவு சிப்பந்திகளுக்கு ஏற்றிக்கொண்டே போகும்போது, உதவி இல்லாமல் பஞ்சாயத்துகள் சமாளிக்க முடியுமா என்பதை அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மற்றவற்றிற் கெல்லாம் நிதி சரியாக இருக்கும்போது, துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மட்டும் கொடுப்பதால், அதிகமாகிவிடாது. மேலும் அவர்களுக்கு நீண்ட நெடுங்காலமாகக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளம் மிகக் குறைவாக இருந்த காரணத்தால், சமீபத்தில் சம்பளத்தையும் பஞ்சப்படியையும் இணைத்துக் கொடுக்கப்பட்டது. அது சம்பந்தமாக இப்பொழுது எவ்வளவு அதிகமாகி யிருக்கிறது என்பதைப் பற்றி நமது உள்ளாட்சித் துறை பரிசீலனை செய்து வருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, ஊராட்சியைப் பற்றி நான் கேட்கவில்லை. டவுன் பஞ்சாயத்துக்களைப் பற்றிக் கேட்கிறேன். துப்புரவுத் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகம் கொடுக்கக்கூடாது என்று சொல்லவில்லை. ஊராட்சிகளுக்குக் கொடுக்கின்ற காண்ட்ரிபூஷன் போல் டவுன் பஞ்சாயத்துகளுக்கும் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஊராட்சி களும் சில பேரூராட்சிகளும் சரியான நிதி வசதியோடு இயங்கி வரவில்லை என்பதை அரசு அறியும். நிதி நிலையில் பற்றாக்குறை உள்ள பேரூராட்சிகளுக்கு ஏற்கெனவே நிதியுதவி கொடுக்கப்பட்டுள்ளது. புதிய விகிதத்தில் நிதியுதவி கேட்கிற ஊராக வளர்ச்சி இயக்குநரின் கோரிக்கை பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, ஊராக வளர்ச்சி இயக்குநர் அவர்களின் பரிந்துரை பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எனக்குத் தெரிந்தவரை பேரூராட்சியில் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட பணம் இல்லாமல் ஒரு நிலை இருந்து வருகிறது. அது போன்றவற்றிற்கு அரசு முன்பணமாக ஏதாவது கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இப்படி எந்தெந்தப் பேரூராட்சிகள் இருக்கின்றன என்று அரசின் கவனத்திற்கு வந்தால் கவனிக்கப்படும்.



திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: தலைவரவர்களே, சிறிய பஞ்சாயத்துகள் எல்லாம் நகரப் பஞ்சாயத்துகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. பல பஞ்சாயத்துக்களில் ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படாமலிருக் கிறது. அப்படிப்பட்ட பஞ்சாயத்துகளுக்கு ஒன்று பஞ்சாயத்து யூனியன் மூலம் அல்லது நேரடியாக மேட்சிங் கிராண்ட் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் அமைக்கப்படுகின்றபோது சில மாற்றங்கள் செய்யப்பட்டன. உறுப்பினர்கள் அவர்கள் கூறியதைக் கருத்தில் கொண்டு, அவசியம் ஏற்படுகின்றபோது மறுபடியும் சிற்றூராட்சியாக மாற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி நேரம் ஒரு மணிதான் என்பதை உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

திரு. காட்டூர் கோபால்: தலைவரவர்களே, துப்புரவுத் தொழிலாளர் களுக்குச் சம்பளத்தை உயர்த்தியதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதனால் வருமானத்தில் அதிகச் செலவு ஏற்படும் ஊராட்சிகளுக்கு பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இது தான் பரிசீலனையில் இருக்கிறது என்று கூறினேன்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, பேரூராட்சியின் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அரசாங்கம் அதிகப்படி ஊதியம் தர வேண்டுமென்பது நியாயமானது, அதை எல்லோரும் வரவேற்கிறோம். ஆனால் சில ஊராட்சிகளால் அதைக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. என் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், சோளிங்கபுரம், கண்ணமங்கலம் ஆகிய இரண்டு பேரூராட்சிகளிலும் துப்புரவுத் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாமல் அவர்கள் வேலை நிறுத்தம் கூடச் செய்திருக்கிறார்கள். அந்த ஊராட்சிகளுக்குப் பணம் கொடுக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, குறிப்பிட்ட ஊராட்சிகள் பற்றி அரசுக்குத் தகவல் அனுப்பப்பட்டு ஊராக வளர்ச்சி இயக்குனர் சிபாரிசு செய்து அனுப்பினால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1973 நவம்பர் 23

## *Rent for the Panchayat Union Quarters*

* 84. *Q.*—THIRU S. MUTHUSWAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that rent is charged at 10 per cent of the pay from Women Teachers, irrespective of the fact whether they stay in the quarters of the Panchayat Union or not; and

(*b*) if so, whether the Government will issue an order not to collect rent from Women Teachers, who do not occupy the quarters of the Panchayat Unions?

### ஊராட்சி ஒன்றியக் குடியிருப்புகளுக்கு வாடகை.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியக் குடியிருப்புகளில் ஆசிரியைகள் குடியிருந்தாலும், இல்லாவிட்டாலும் சம்பளத்தில் 10 விழுக்காடு வாடகை வசூலிக்கப்படுவது உண்மையா?

(இ) ஆமெனில், ஊராட்சி ஒன்றியக் குடியிருப்புகளில் குடியில்லாத ஆசிரியைகளிடமிருந்து அக்குடியிருப்புகளுக்காக வாடகை வசூலிக்கக்கூடாது என அரசு ஆணை பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** (அ) & (இ) ஊராட்சி ஒன்றியத்தில் ஆசிரியைகளாகப் பணி புரியும் பெண்களுக்கென்று ஊராட்சி ஒன்றியங்களால் கட்டப்பட்டுள்ள ஒரு வீட்டில் ஊராட்சி ஒன்றிய ஆசிரியை ஒருவர் குடியிருந்தால் அந்த ஊராட்சி ஒன்றியம் வாடகை வசூலிக்கவோ அல்லது வசூலிக்காமல் விட்டுவிடவோ செய்யலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆகவே ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்பில் குடியிராத ஆசிரியையிடமிருந்து ஊராட்சி ஒன்றியம் வாடகை வசூல் செய்ய முடியாது. ஆயினும் அப்படி ஏதாவது ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் வாடகை வசூல் செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டுக் காட்டினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கக்கூடிய வீடுகளுக்கு வசூலிக்கக் கூடிய வாடகையைவிட குறைந்த வாடகைக்கு அந்த வீடுகளைவிட வசதியான வீடுகள் கிடைப்பதாலே அங்கே இருக்கிறார்கள். அந்த வீடுகள் ஆசிரியர்களுக்காகக் கட்டப்பட்டிருக்கிற காரணத்தால் கட்டாயம் ஆசிரியர்கள் 'ஆக்குபை' செய்ய வேண்டும், இல்லாவிட்டால் பணத்தைப் பிடிப்போம் என்று ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுவதை திறுத்துவதற்கு அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.



1973 நவம்பர் 23]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்காக வீடு என்று ஒரு குறிப்பிட்ட முறையிலே வீடுகள் கட்டி வைத்திருக்கின்ற காரணத்தாலே, வசதிகள் அதிகம் வேண்டும் என்பதற்காக பெரிய வீடுகள் தேவை என்றால், அதை அவர்கள்தான் கொடுக்க வேண்டுமே தவிர, அந்த விதியை மாற்றிக்கொள்ள முடியாது.

**திரு. செ. முத்துசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நகரத்திலே இருப்பவர்களுக்கும் 10 சதவிகிதம், கிராமத்திலே இருப்பவர்களுக்கும் 10 சதவிகிதம் வாடகை என்பது சரிதானா? கிராமப் பொருளாதாரமும், நகரப் பொருளாதாரமும் ஒரே மாதிரியாக இருக்கிறதா என்பதை அரசு பரிசிலிக்க முடியுமா? கிராமத்திலே குறைந்த வாடகைக்கு நல்ல வீடுகள் கிடைக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, கிராமத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும், நகரத்திலே இருக்கிற ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதாசாரம் ஒன்றுதான். நகரத்தில் வேண்டுமானால் நகர ஈட்டுப்படி கொடுக்கப்பட்டிருக்கலாம். சம்பளம் ஒரே விகிதாசாரத்திலே இருக்கிறது. அதனாலே உயர்வு தாழ்வு கற்பிப்பது சரியல்ல.

## *Aid from the Government of India for the Development of Panchayat Union Blocks*

* 85. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that aid from the Government of India for the development of Panchayat Union Blocks is to be stopped;

(*b*) if so, from when and the reason therefor; and

(*c*) the action proposed to be taken by the Government in the matter?

## ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களின் வளர்ச்சிக்கான மத்திய அரசு நிதி உதவி

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றிய வட்டாரங்களின் வளர்ச்சிக்காக மத்திய அரசு நிதி உதவி நிறுத்தப்படவிருக்கிறது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், எத்தேதி முதல் அந்த உதவி நிறுத்தப்படவிருக்கிறது? அதற்கான காரணங்கள் யாவை?

(உ) இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) முதல் (உ) வரை. சமுதாய வளர்ச்சித் திட்டம் நிலை I நிலை II ஆகிய இரண்டு நிலைகளில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நிலை வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும் ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 12.00 லட்சம் மத்திய நிதி உதவி பெறத் தகுதியுள்ளதாகும். ஐந்து ஆண்டுகள் முடிவடைந்த பின்னர், நிலை 1 வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும் மேற்கொண்டு ஐந்து ஆண்டுகள் கால அளவிற்கு ரூ. 5 லட்சம் நிதி உதவியுடன் நிலை II வளர்ச்சி வட்டாரமாக ஆகின்றன. பத்து ஆண்டுகள் முடிவடைந்த பின்னர், வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றும் நிலை II க்குப் பிந்திய வளர்ச்சி வட்டாரமாகக் கருதப்படுகின்றன. 1974-75-ஆம் ஆண்டிலிருந்து வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்தும் நிலை II க்குப் பிந்திய வளர்ச்சி வட்டாரங்களாக ஆகிவிடுவதால், சமுதாய வளர்ச்சித் திட்ட முறையின்கீழ் இந்த மாநிலம் மத்திய அரசிடமிருந்து உதவி பெறுவதற்கு உரியதாக இல்லை. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் மாநில அரசுத் திட்டங்களாகும். நான்காவது திட்டக் காலத்தில், மாநிலத் திட்டத்திற்கு ஒரு மொத்தக் கடன், ஒரு மொத்த மானியம் என்ற அடிப்படையில் மாநில அரசுத் திட்டங்களுக்காக மத்திய அரசு உதவி அளிக்கப்படுகிறது.

திரு. எல். பலராமன்: தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களை மாற்றி அமைப்பதற்காக ஒரு கமிஷன் அமைத்து அதன் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டது. அதன் பிரகாரம் பரிசீலித்ததை அரசு அறிவித்ததா, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, பிரிப்பதற்காக அந்தக் குழு அமைக்கப்படவில்லை. பல்வேறு வேலைத் திட்டங்களைக் கவனித்துக் கொள்ள குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கை இன்னும் வந்து சேரவில்லை. ஏற்கெனவே அறிவித்திருந்தபடி



375 ஊராட்சி ஒன்றியங்கள்தான் தமிழ் நாட்டிலே பிரிக்கப்பட வேண்டும் என்று விதி வகுத்த காரணத்தாலே, அந்த நேரத்திலே ஜனத்தொகை அடிப்படையைக் கொண்டும், வளர்ச்சிப் பரப்பளவைக் கொண்டும் ஒரு அளவு கணித்து தமிழ் நாட்டிற்கு 375 ஒதுக்கப்பட்டது. அந்த 375-ல் ஒன்று, கல்வராயன் மலை. அது தனியாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே 374 ஒன்றியங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டோடு மத்திய அரசு நிதி உதவி முடிவடைந்து விடுகிறது. பல ஊராட்சி ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்ட 374-க்கு மேல் இருக்கக்கூடாது என்று மத்திய அரசாங்கத்தின் ஆணையின்கீழ் பிரிக்கப்படாமல் இருந்தது. அடுத்த ஆண்டு அதற்கு ஏற்படுகிற செலவு அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருக்கிற காரணத்தால், பிரிக்கப்பட வேண்டியவற்றைப் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இப்பொழுதே எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, இன்று உள்ள நிலைமை என்னவென்றால், ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 9 பஞ்சாயத்துகள் இருக்கின்றன, இன்னும் சில பஞ்சாயத்து யூனியன்களுக்கு 50 முதல் 70 வரை பஞ்சாயத்துகள் இருக்கின்றன. அதனுடைய விஸ்தீரணமும் அதிகம். ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குப் போவதற்கு 30 மைல் ஆகும். புதுக்கோட்டையில் ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 30 மைல் அகலம் இருக்கிறது. இம்மாதிரி பெரிய விஸ்தீரணம் உள்ள பஞ்சாயத்து யூனியன்களை இரண்டாகப் பிரிப்பதற்கும், கம்பம் பஞ்சாயத்து யூனியன் போன்ற சிறிய பஞ்சாயத்து யூனியனை விரிவாக ஆக்கி, பெரிய பஞ்சாயத்து யூனியன்களாக ஆக்குவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? மத்திய அரசின் கட்டுப்பாடு இந்த வருஷத்தோடு முடிவடைந்து விடுகிறது என்று எண்ணுகிறேன். அடுத்த வருஷத்திலேயிருந்து மாநில அரசாங்கமே நேரடியாகக் கவனிக்க வேண்டியிருப்பதால், மாநில அரசாங்கம் மாற்றியமைக்க முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். தமிழ் நாட்டில் இப்பொழுது 10-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களுக்கு, 50, 60 ஊராட்சிகள் இருக்கின்றன. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்ட புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் 65 ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை ஊராட்சி ஒன்றியத்தில் 66 ஊராட்சி மன்றங்களும், பேரூர் ஊராட்சி ஒன்றியத்தில் 67 ஊராட்சி மன்றங்களும் இருக்கின்றன. இப்படி தமிழ் நாட்டில் 10 ஒன்றியங்கள் பிரிக்கப்பட வேண்டிய நிலையிலே

இருக்கின்றன. அதைப் போலவே பள்ளிபாளையம் ஊராட்சி ஒன்றியம் 14 ஊராட்சி மன்றங்களைக் கொண்ட ஊராட்சி ஒன்றியமாக இருக்கிறது. இந்த தாரதம்மிய வித்தியாசத்தைப் போக்க பல கோரிக்கைகள் வரப்பெற்றிருந்தும், இந்த ஆண்டோடு மத்திய அரசின் உதவி முடிகின்ற காரணத்தால், அந்த முழுப் பொறுப்பையும் தமிழ் நாடு அரசே ஏற்றுக்கொள்ள இருப்பதால், 1974–75-ல் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம் என்று இன்றைய தினம் பிரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு உதவி நிறுத்தப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நிறுத்தப் படக் கூடாது என்ற பிரச்சினைபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசிய வளர்ச்சிக் குழுவிலே பேசினார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இந்த ஊராட்சி ஒன்றியங்கள் இப்பொழுதுதான் பிரிக்கப்படுகின்ற காரணத்தாலும், இந்த நிதி உதவியை மத்திய அரசு நிறுத்துகின்ற காரணத்தாலும், அதிகமாக நிதி உதவி இந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அவர்களிடம் வைத்திருக்கிறோம். ஆகையினால் அதற்குப் பிறகு அதைப்பற்றி அறிவிப்பு செய்யலாம்.

## *Conference of Municipal Chairmen*

*86. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to convene a Conference of Municipal Chairmen to discuss the subject of giving more powers to Municipalities; and

(*b*) if so, when the Conference is proposed to be convened?

## நகராட்சித் தலைவர்களின் கூட்டம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நகராட்சிகளுக்கு மேலும் அதிக அதிகாரங்களை அளிப்பது குறித்து விவாதிக்க நகராட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உண்டா ?

(இ) ஆமெனில், அக்கூட்டத்தினை எப்போது கூட்டுவதாகத் திட்டமிடப் பட்டுள்ளது ?



**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஓர் இடத்திலே பேசும்போது நகராட்சிகளுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எந்தவிதமான அதிகாரங்கள் வேண்டுமென்று வரையறுக்க வேண்டும், ஆகவே அதைப்பற்றி ஒரு அதிகாரிகளைக் கொண்ட மாநாடு கூட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார் என்று "இந்து" பத்திரிகையிலே 23—8—73 அன்று செய்தி வந்தது. ஆகவே அமைச்சர் அவர்கள் எப்படி இல்லை என்று சொல்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவர் அவர்களே, மாநகராட்சி மன்றத்திலே பேசுகிறபோது, மாநகராட்சித் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவையென்று கேட்டிருந்தார்கள். அப்பொழுது நான் அந்தக் கூட்டத்திலே சொன்னது, எந்தெந்த அதிகாரங்கள் தேவை என்று கேட்கிறீர்கள், நிர்வாகம் சம்பந்தப்பட்ட வரையிலே மக்களுக்குத் தொண்டு செய்ய வேண்டியதற்காக பல அதிகாரங்கள் தேவையானால், கொடுக்கத் தயாராக இருக்கிறோம். இருப்பதிலே பலவற்றை எடுப்பதற்கும் இந்த அரசு தயங்காது என்று குறிப்பிட்டேன். அதற்குத்தான் பல விவாதங்கள் எல்லாம் ஏற்பட்டன. இப்பொழுதும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். மாநகராட்சிகளிலிருந்தும், நகராட்சிகளிலிருந்தும் அனுப்பியிருக்கிற தீர்மானங்களையும் பரிசீலனை செய்து, எந்தெந்த வகையிலே அதிகாரத்தைக் வழங்குவது, அல்லது குறைப்பது என்பதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் என்றேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** நகராட்சியைப் பொறுத்த மட்டில்,

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** மொட்டையாகச் சொல்லக் கூடாது, 'தலைவர் அவர்களே' என்று ஆரம்பிக்க வேண்டும்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நகராட்சியைப் பொறுத்தவரையில் ஒரு நகராட்சித் தலைவர் தான் நான் இருக்கிறேன்.

(குறுக்கீடு : இன்னும் சிலர் இருக்கிறார்கள்).

நகராட்சித் தலைவர்களுக்கு உள்ள அதிகாரம் இன்னும் குறைக்கப்படும் என்றார்கள். அவர்களுக்கு இப்பொழுது என்ன அதிகாரம் இருக்கிறது? இருக்கிற அதிகாரத்தையும் வருஷா வருஷம் பிடுங்கிக்கொண்டே வருகிறார்கள். இன்னும் குறைப்பது என்றால், நகராட்சியில் உட்காருவதற்குத்தான் அவருக்கு அதிகாரம் இருக்கப் போகிறது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இருக்கின்ற அதிகாரமே தெரியவில்லை என்று நகரசபைத் தலைவர் அவர்கள் சொல்வது வியப்பாக இருக்கிறது.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** குறைவாக இருக்கிறது என்றுதான் சொல்கிறேன். அதுவும் குறைக்கப்பட்டால் என்ன ஆவது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவர் அவர்களே, இருக்கின்ற அதிகாரங்களே சரியாகப் புரியாமல் இருக்கிறபோது, இன்னும் அதிகாரங்களைக் கேட்பதுபற்றி வருத்தப்படுகின்றேன். எனவே அவர்கள் என்ன என்ன அதிகாரத்தை நிறைவேற்ற முடியவில்லை என்று அறிவிப்பார்களானால், அவற்றை நிறைவேற்ற வேண்டிய யோசனையையாவது நான் சொல்கிறேன்.

**திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்:** தலைவரவர்களே, ஏற்கெனவே இருக்கிற அதிகாரங்கள் மிகவும் சொல்ப அளவில் இருக்கின்றன. இந்த அதிகாரங்களைக் கொண்டு எந்தவிதமான சௌகரியமும் செய்ய முடியவில்லை. எனவே ஆணையாளர்களைப் பின் தொடர்ந்து போக வேண்டிய நிலைமை இருக்கிறது. நகராட்சித் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் எந்தக் காரியத்தையும் செய்ய முடியாது. நகராட்சித் தலைவர்கள் எவ்வளவோ செலவு செய்து வருகிறார்கள். ஐந்து ரூபாய்க்கான செக்கில் கையெழுத்துப்போடக்கூட நகராட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் 5 லட்சம் ரூபாய்வரை ஆணையாளர்களுக்கு அதிகாரம் இருக்கிறது. அவர்களுக்கு எல்லா அதிகாரமும் இருக்கிறது. அவர்களைப்பற்றி ஏதாவது குற்றங்களைச் சொல்ல வேண்டுமென்றால், 200 மைல் தாண்டி வர வேண்டும். எனக்கு நகராட்சித் தலைவர்களின் அதிகாரம் புரியாமல் இல்லை. இல்லையென்றால் 10 ஆண்டுகள் அதில் இருந்திருக்க முடியாது. அமைச்சர் அவர்களுக்கும் அது நன்றாகத் தெரியும்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, பொதுவாக நகராட்சித் தலைவர்கள் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று பல லட்சக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து தலைவராக வருகிறார்கள். செலவு செய்துவிட்ட பிறகு, எவ்வளவு பணம் வருமென்று கணக்குப் பார்ப்பதில்லை. வரவு-செலவுக் கணக்கைப் பார்க்க ஆணையாளர்கள் இருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்கள் செலவு செய்யலாமென்று வரையறுத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகத்தில் ஏதாவது சிக்கல்கள் இருக்குமானால், அதற்குச் சட்டம் தேவையில்லை. விதி முறைகளைத் தளர்த்தி, அந்தக் காரியங்களைச் செய்யலாம். இப்போது அப்படித்தான் செய்கிறோம். உறுப்பினர் அவர்களுடைய நகராட்சியில்கூட குடி தண்ணீர் திட்டத்திற்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகையைக் கவனிப்பார்களேயானால், அது பல ஆண்டுகளுக்குக் கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பது தெரியும். அதையெல்லாம் அரசாங்கம் வழங்கியிருக்கிறது. தேவை ஏற்படும் நேரத்தில் நகராட்சிகளுக்கு தனி நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், அரசாங்கம் உதவி செய்து, தேவையான உத்தரவை இடுகிறது. அவர்கள் 5 லட்சம் ரூபாய்க்கு பதிலாக 7 லட்சம் ரூபாய் கேட்கிறார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த அளவுக்குத்தான் செலவு செய்யலாமென்று உத்தரவிடப்பட்டிருப்பதால், நிரந்தரமாக ஒரு 'ஸ்டேன்டிங் ஆர்டர்' போட முடியாதென்று தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இங்கே உறுப்பினரவர்களும், மாண்புமிகு அமைச்சரவர்களும் லட்சக் கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து, நகராட்சிக்கு வருவதைப்பற்றிச் சொன்னார்கள். அப்படி லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவு செய்து நகராட்சித் தலைவராக வருவதற்கு சட்டத்தில் இடம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** சட்டத்தில் இடம் இருந்தால், ஒத்துக் கொள்ளுவார்கள். நடப்பதைச் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, அதைப்பற்றி நான் சொல்லவில்லை. அவர்கள் சொன்னதற்கு விளக்கம் சொன்னேன். அதிகம் செலவு செய்து பழக்கப்பட்டவன் அல்ல நான்.

## *Rest House for Pilgrims*

*87. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any new Rest House has been constructed at Madurai for pilgrims; and

(*b*) if so, the details thereof?

### யாத்திரிகர்களுக்கு ஓய்வு இல்லம்

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

**(அ) மதுரையில் யாத்திரிகர்கள் தங்குவதற்கான ஓய்வு இல்லம் ஏதும் புதிதாகக் கட்டப்பட்டுள்ளதா?**

**(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?**

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.*

*(இ) மதுரையில் ஒரு புதிய தங்கும் விடுதி ரூ. 2,35,000 (இரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம்) செலவில் திரு. பிர்லா அவர்களுடைய நன்கொடையில் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. திரு. பிர்லா அவர்களின் வேண்டுகோளின்படி அந்த விடுதிக்கு 'பிர்லா விஷ்ராம்' என்று பெயரிடப் பட்டுள்ளது. அந்த மாளிகை 15 தங்கும் அறைகளைக் கொண்டது.*

### *Trustees for Arulmigu Sarangapani Temple, Kumbakonam*

* 88. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether Sri Sarangapani Temple at Kumbakonam is without trustees; and

(*b*) if so, the reasons therefor?

### *அருள்மிகு சாரங்கபாணி ஆலய அறங்காவலர்கள்*

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) கும்பகோணத்திலுள்ள அருள்மிகு சாரங்கபாணி ஆலயம் அறங் காவலர்கள் இல்லாமலுள்ளதா?*

*(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?*

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) & (இ) ஐந்து அறங்காவலர் களின் பதவிக் காலம் முடிவுற்றதால் தற்போது அந்தப் பதவிகள் காலியாக இருக்கின்றன. அந்தப் பதவிகளை நிரப்புவதற்குரிய பணிகள் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அருள்மிகு சாரங்கபாணி ஆலயத்தின் மதில் சுவரை எடுத்துவிட்டு, கடைகளைக் கட்டிவிட்டார்கள் என்ற பிரச்சினை எழுப்பப்பட்டதே, அதைப் பற்றி அமைச்சரவர்களின் அபிப்ராயம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மதில் சுவரை இடித்து, கடைகள் கட்டியதைத் தவறென்று அரசு சுட்டிக் காட்டி, அந்த அறங்காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. கட்டியிருக்கும் கடைகளை நீக்கி, மீண்டும் மதில் சுவரைக் கட்ட ஆணை இடப்பட்டுள்ளது.*



### *Financial Assistance for the Development of Temple Lands in Sakramanallur*

* 89. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any representation has been received by the Government seeking financial assistance for the development of temple lands in Sakramanallur, North Arcot district; and

(*b*) if so, the action taken thereon by the Government?

### *சக்கரமநல்லூரில் உள்ள திருக்கோயில் நில அபிவிருத்திக்கு உதவி*

*தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) வட ஆற்காடு மாவட்டம், சக்கரமநல்லூரில் உள்ள திருக்கோயில் நில அபிவிருத்திக்கு உதவி கேட்டு அரசுக்கு விண்ணப்பம் வந்ததா?*

*(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.*

*(இ) நில அபிவிருத்திக்கு உதவித் தொகை கொடுக்க இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் சட்டதிட்டப்படி வழிவகையில்லை. எனவே, நிலவள வங்கியிடம் இருந்து தேவையான தொகையை கடனுகப் பெற உரிய நடவடிக்கை எடுக்குமாறு திருக்கோயில் நிர்வாக அறங்காவலரை இந்து சமய அறநிலைய ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.*

### *Misappropriation of Funds of the Mudalaipalayam Palm Jaggery Co-operative Society*

* 90. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there was misappropriation of funds of the Mudalaipalayam Palm Jaggery Co-operative Society in recent years;

(*b*) whether a number of persons have been taken into Police custody in this connection; and

(*c*) if so, the details thereof?

முதலைப்பாளையம் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தில் பணம் கையாடல்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மை ஆண்டுகளில் முதலைப்பாளையம் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டதா?

(இ) இது தொடர்பாக பலர் கைது செய்யப்பட்டுள்ளனரா?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ஒருவர் மட்டுமே.

(உ) முதலைப்பாளையம் பனைவெல்லக் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் திரு. இராம நாடார் சங்கத்தின் கையிருப்புத் தொகையினை கையாடல் செய்து விட்டார். ஈரோடு சப்-டிவிசனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் செக்ஷன் 409 ஐ.பி.சி.-ன்படி ஒரு குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அவருக்கு மூன்று மாத சாதாரண சிறைவாச தண்டனை அளிக்கப்பட்டு தீர்ப்பாகியுள்ளது.

## *Soil Salinity Research*

†* 48 *Q*.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any Soil Salinity Research has been conducted in the State; and

(*b*) if so, the details thereof?

### மண் உவர் தன்மை ஆராய்ச்சி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் மண் உவர் தன்மை ஆராய்ச்சி ஏதேனும் நடத்தப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

† 22—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) தலைவரவர்களே, விவர அறிக்கை @ இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### நவம்பர் 21-ந் தேதி சட்டக் கல்லூரி மாணவர்களைக் கைது செய்தது குறித்து

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன்னறிவிப்பு கொடுத்துள்ளார்கள்—

"21-ம் தேதி முற்பகல் சட்டக் கல்லூரி மாணவர்களை நூற்றுக் கணக்கில் காரணமில்லாமலும், முன்னெச்சரிக்கை இல்லாமலும் கைது செய்ததைப் பற்றி பொது மக்கள் குழப்பம் அடைந்திருப்பதால் அதைப் பற்றி விவாதிப்பது குறித்து"
இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வருகிறது என்பதை உறுப்பினர் விளக்கும்படி கோருகிறேன்.

*திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மாண்புமிகு தலைவரவர்களே, 21—11—1973 ஆம் தேதி முற்பகல் சட்டக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாக வரும்போது, அவர்களைப் போலீசார் மறித்து, எந்த விதமான காரணமும் காட்டாமல், அவர்கள் தங்கள் கோரிக்கைகளைச் சர்க்காருக்குக் கொடுப்பதைத் தடை செய்யும் முறையிலே, நூற்றுக் கணக்கான மாணவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அதேமாதிரியாக பிற்பகலும் சில கல்லூரி மாணவர்களைக் கைது செய்திருக்கிறார்கள். அதன் காரணமாக தொடர்ந்து 22-ம் தேதியும், இன்றைய தினமும் (23-ம் தேதி) சென்னை நகரத்தில் மட்டுமல்லாமல், தமிழ் நாடு பூராவும் உள்ள மாணவர்கள் ஆங்காங்கே தங்கள் கோரிக்கைகளை சர்க்காரிடம் கொண்டுபோகும் அளவிலே ஊர்வலம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டு, விடப்பட்டிருக்கிறார்கள். ஜனநாயகத்திலே யாராக இருந்தாலும் சரி, தங்களுடைய கோரிக்கைகளைச் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு உரிமை இருக்கிறது. சாத்வீக முறையிலே,

@ 330-331-ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

காந்தியத்தின் அடிப்படையிலே இது மாதிரி ஊர்வலம் நடத்தி, தங்கள் கோரிக்கைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவதுதான் ஜனநாயக மரபு. அந்த அளவிலே, திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவத்திலும் திருநெல்வேலி சம்பவத்திலும் அளித்த தீர்ப்பின் எதிரொலியாக தமிழ் நாட்டிலுள்ள மாணவர்கள் தங்களுடைய சிந்தனையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காக ஊர்வலம் நடத்தினார்கள். காரணம் என்ன வென்றால். . . .

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அது பற்றி 'ஜட்ஜ்மென்ட்' கொடுத்தாகி விட்டது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, அதற்காக மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். ஏற்கெனவே கிளைவ் ஹாஸ்டல் சம்பவம்பற்றி முதலமைச்சரவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள். சென்ற வருஷம் இந்தச் சபையில் அவர்கள் போலீசார் மாணவர்களைப் பிரம்பால்தான் அடித்தார்கள், கடுமையாகத் தாக்கவில்லையென்று சொன்னார்கள். அதேமாதிரி பாளையங்கோட்டையில் பேராசிரியர் ஸ்ரீனிவாசன் அவர்கள் தாக்கப்பட்ட சமயத்திலே, இதுமாதிரியாக முதலமைச்சரவர்கள் பதில் உரைத்திருக்கிறார்கள். பல தடவை இதே மாதிரி சம்பவங்கள் நடந்து, அதற்கு முறையான தீர்ப்பு வந்ததாகத் தெரியவில்லை. இப்போது தீர்ப்பைப் பார்க்கும் போது, முதலமைச்சரவர்கள் சொன்ன வாக்குப்படியில்லாமல், தீர்ப்பு வேறு விதமாக இருக்கிறது. இதற்கு முன்னால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஒரு சம்பவம் நடந்தது. இறந்த மாணவர் திரு. உதயகுமார்.

5-00 பி.ப. மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான அவசியம் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, ஊர்வலத்திற்கான காரணத்தைத்தான் சொல்கிறேன். எந்தக் காரணத்தால் ஊர்வலம் நடத்தினார்கள் என்பதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : சொல்லுங்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இறந்தது உதயகுமார் இல்லை; அது உதயகுமாராக இருந்தால், பதவியை ராஜினாமா செய்கிறேன் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள்.



* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை நிரூபிக்க முடியுமா ? அப்படிச் சொன்னேன் என்று நிரூபிக்க முடியுமா ? ஏதேதோ வாயில் வந்ததையெல்லாம் பேசுவது என்ற அளவில் பேசுவது நல்லதல்ல. எதையும் பொறுப்பில்லாமல் சொல்லக்கூடாது.

(திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் இருக்கையிலிருந்து எழுந்தார்.)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : உட்காருங்கள்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உதயகுமார் அல்ல என்று நான் சொன்னதே கிடையாது. அப்போது படத்தைக் காட்டிப் பேசியபோதுகூட இது உதயகுமார்தானா என்ற சந்தேகம் இருக்கின்றது என்றுதான் சொன்னேன். அதற்காக நீதி விசாரணைக் கமிஷன்கூட போடப்பட்டது. அப்போது நான் சொன்னதேகூட அரசுக்கு வந்திருந்த தகவலை வைத்துத் தான். நாங்கள் அதற்கு நீதி விசாரணைக் கமிஷன் போட்டு விசாரணை நடத்தினோம். உதயகுமாராக இருந்தால், ராஜிநாமா செய்துவிடுகிறோம் என்று சொன்னதாகச் சொல்வது தவறு.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இப்படிப்பட்ட பலவிதமான சர்க்கார் அறிக்கைகளை மாவட்டத்திலிருந்து கொண்டுதான் தெரிந்து கொள்கின்றோம். அறிக்கைகள் உண்மையா இல்லையா என்பதும் தெரியாது. மந்திரி சபைக்குத் தகவல்கள் போலீசாரிடமிருந்து வருகின்றன. இந்த மாதிரி பத்திரிகைகளில் வரும் தகவல்கள் மூலமாகத்தான் நாங்கள் தெரிந்து கொள்ள முடிகின்றது. உதயகுமாரின் போட்டோ படத்தைப் பார்த்தா சொல்கின்றோம்? பத்திரிகைகளிலே இது மாதிரி வருவதைத்தான் நான் சொல்கின்றேன். கிளைவ் ஹாஸ்டல் மாதிரி சம்பவங்களில் சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசினர் தக்க நடவடிக்கை எடுத்தார்களா இல்லையா என்பதற்காக மாணவர்கள் ஊர்வலத்திலே ஈடுபட்டிருக்கலாம். திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் சம்பந்தப்பட்ட ஆர்.டி.ஓ.-வுக்கு அரசு பதவி உயர்வு கொடுத்தது. மாநில ரெவின்யு அதிகாரியாகப் பதவி உயர்வு கொடுத்திருக்கின்றதாக பத்திரிகையிலே பார்த்தேன். இந்த மாதிரியான நடவடிக்கைகளுக்கான காரணங்கள் சபையினருக்குத் தெரிவதில்லை. பத்திரிகைகள் மூலமாகத் தான் தெரிகிறது. பேரவை, மேலவை ஆகிய இரு அவைகளும் கூடி இருக்கின்றபோதும் பத்திரிகைகள் மூலமாகத்தான் தெரிந்து கொள்ள முடிகிறது. இவைகளையெல்லாம் கருத்தில்கொண்டு மாணவர்கள் விஷயத்தில் சர்க்கார் நடவடிக்கைகள் சரியல்ல என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

[1973 நவம்பர் 23

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் மாணவர்களுடைய ஊர்வலத்தைப்பற்றிச் சொன்னார்கள். அவர் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் சட்டக் கல்லூரி மாணவர்களைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டிருந்தாலும், மற்ற கல்லூரி மாணவர்களைப்பற்றியும், கிளைவ் ஹாஸ்டல் சம்பந்தமாக வைக்கப்பட்ட அறிக்கையைப் பற்றியும் அவர்கள் இங்கே விரிவாகப் பேசினார்கள். அவர்கள் கொடுத்துள்ள தீர்மானத்திற்கு ஏற்ற பதில் சொல்ல வேண்டுமானால், இதைத்தான் நான் சொல்ல வேண்டும். சுமார் 300 சட்டக் கல்லூரி மாணவர்கள் அவர்களுடைய கல்லூரியிலிருந்து ஊர்வலமாக வந்தார்கள். கோட்டைக்கு அவர்கள் வருகின்ற நேரத்தில் போலீசார் அவர்களை வழிமறித்தார்கள் என்றும், அதற்குக் காரணம் என்ன என்று சொல்லாமலே வழிமறித்தார்கள் என்றும் சொன்னார்கள். அது தவறு. சிடி போலீஸ் ஆக்ட் 41-வது விதியின்படி இங்கே ஊர்வலம் வரக்கூடாது, கோட்டையைச் சுற்றியுள்ள பகுதியில் ஊர்வலம் வரக்கூடாது என்ற விதிகளைப் பற்றிச் சொல்லி, நீங்கள் வேண்டுமென்றால் முதலமைச்சரையோ, மற்ற அமைச்சர்களையோ பார்த்துப் பேசுவதற்கு, மாணவர்களில் ஒரு சிலர் மட்டும் வந்தால், அதற்கான வழி வகுத்துத் தருகிறோம் என்று கேட்டுக்கொண்ட பிறகும் கூட, 41-வது விதியை மீறி வந்ததால் அவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாக அவர்கள் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள். யாரும் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்படவில்லை. பத்திரிகைகளில் ஆயிரம், இரண்டாயிரம், மூவாயிரம் மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்கள் எல்லாம் சிறையில் இருப்பதாகவும் செய்தி வந்திருக்குமானால், அது இந்த அரசாங்கத்திற்கு ஏதாவது சங்கடத்தை ஏற்படுத்த வேண்டுமென்று அரசியல் ரீதியில் செய்யப்படுகின்ற காரியங்களே அன்னியில் வேறு ஒன்றுமில்லை. பேரவையிலே உள்ள கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் என்னோடு வந்து எந்தச் சிறைச்சாலையிலே இந்த மாணவர்கள் இருக்கின்றார்கள் என்று காட்டுவார்களானால், அதற்கான நடவடிக்கை எடுக்கின்றேன், உடனடியாக அவர்களை விடுவிக்கின்றேன் என்பதையும் நான் பேரவையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். இப்போதும் இங்கு அதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். குறைகளைச் சொல்வதற்காக மாணவர்கள் வந்தார்கள் என்று திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அடிக்கடி சொன்னார்கள். என்ன குறை? கிளைவ் ஹாஸ்டலில் நடைபெற்ற சம்பவத்திற்காகவும், பாளையங்கோட்டைச் சம்பவத்திற்காகவும் நீதி விசாரணை வைக்கப்பட்டது. திரு. தீக்ஷிதர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் பழைய காங்கிரஸ் கட்சியின் ஆட்சி காலத்திலே இதைவிட பயங்கரமான சம்பவங்கள் நடந்தபோதிலும், நீதி விசாரணை என்று ஒன்று வைக்கவில்லை என்பதை அவர்கள் மறந்துவிடக்கூடாது. முதுகுளத்தூர் சம்பவம் நடை





பெற்றது. 40, 50 நாட்கள் தொடர்ந்து நடந்தது கலவரம். அந்தக் கலவரத்தில் பலர் கொலை செய்யப்பட்டனர். பல வீடுகள் தீக்கிரையாயின. அந்தச் சம்பவத்தைப் பொறுத்து அங்கத்தினர்கள், பல கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் கேட்டபோது, நீதி விசாரணை வைக்க மறுத்துவிட்டார்கள். அப்போது அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் திட்டவட்டமாகச் சொன்னார்கள். இதற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால், பிறகு போலீசார் தங்கள் கடமையைச் செய்யவே அஞ்சுவார்கள், ஆகவே நீதி விசாரணை வைக்க முடியாது என்று அப்போது அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சொல்லிவிட்டார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள் நடந்தபோது மாணவர்கள் அடிபட்டார்கள். தில்லியிலே மாத்திரம் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தார்களே தவிர, தமிழ்நாடு முழுவதும் நடைபெற்ற அந்த அமளியில் போலீசார் நடந்துகொண்ட விதம் பற்றி நீதி விசாரணை வைக்க வேண்டுமென்று எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் கேட்டுக்கொண்ட நேரத்திலும் நீதி விசாரணை வைக்கவில்லை. இந்த அரசுதான் சிறிய சம்பவங்களானாலும், எதிர்க் கட்சித் தலைவர்கள் கோரிக்கைக்கு இணங்கி, அரசுத் தரப்பிலே சொல்கின்ற வாதங்கள்தான் உண்மையானவை என்ற பிடிவாதம் காட்டாமல் நடுநிலைமையாளர்களுடைய தீர்ப்புக்கு அதை விடலாமென்ற அளவிலே நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்து, அந்த அடிப்படையிலேதான் கிளைவ் ஹாஸ்டல், பாளையங்கோட்டை சம்பவங்கள் பற்றிய நீதி விசாரணை முடிவுற்று அந்த அறிக்கைகள் இரு அவைகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறிக்கைகள் ஆகஸ்ட் மாதத்திலே வந்தன. அரசினுடைய பரிசீலனைக்குப் பிறகு அவைகள் எல்லாம் அச்சேற்றப்பட்டு 14—11—73 தேதியன்று, அதாவது அவை கூடுவதற்கு முன்பே, அந்த அறிக்கைகள் இரண்டையும் அமைச்சரவை அப்படியே ஏற்றுக்கொண்டு அவைகளின் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியையும் சொன்னோம். அவைகள் அப்போது கூடாத காரணத்தினால் பத்திரிகைகளுக்கு மட்டும் தகவல் கொடுக்கப்பட்டது. 14-ம் தேதி அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. 19-ம் தேதி இரு அவைகளிலும் அந்த அறிக்கைகள் வைக்கப்பட்டன. அமைச்சரவைக் கூட்டத்திலே தெரிவிக்கப்பட்ட, எடுக்கப்பட்ட முடிவினை அடிப்படையாகக் கொண்டு இப்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஒரு ரெவின்யு போர்ட் மெம்பர், அதே நேரத்திலே ஐ.ஜி. அவர்கள் ஆக இருவரும் தனி அதிகாரிகளாக நியமிக்கப்பெற்று, தவறுசெய்த ரெவின்யு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு போர்டு மெம்பர் திரு. கார்த்திகேயன் அவர்களும், போலீஸ் அதிகாரிகள்மீது நடவடிக்கைகள் எடுப்பதற்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் அவர்களும் 21-ம் தேதி நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 நவம்பர் 23

12-ம் தேதியே, டி.எஸ்.பி. ஒருவர் ஸஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கின்றார் இதற்கு முன்புகூட பாளையங்கோட்டை சம்பவம் பற்றிய அறிக்கையை அடிப்படையாக வைத்து பாளையங்கோட்டையிலே தவறு செய்தவர்கள் மீது கிரிமினல் வழக்கு தொடரப்பட்டு, அதற்குத் தனியாக ஒரு வக்கீலைக் கூட போட்டு நடைபெறுகின்ற வகையிலே காரியங்கள் எல்லாம் நடைபெற்று முடிந்திருக்கின்றன. நாம் ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். இதுவரையில் எந்த அரசும் செய்யாத ஒரு காரியத்தை, உடனடியாக நீதி விசாரணை போட்டு, அந்த அடிப்படையிலே எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டபிறகும் சில அரசியல் வாதிகள் மாணவர்களைத் தூண்டிவிடுவதும். அவர்களுடைய படிப்பைக் கெடுப்பதும் நல்லதல்லவென்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். ஆகவே இந்த அவையிலே இருக்கின்ற எதிர்க் கட்சித் தலைவர்களும், தோழமைக் கட்சித் தலைவர்கள் அனைவரும் மாணவர்கள் நலம் பெற அவர்களுக்கு வந்திருக்கின்ற இன்னல்களைக் களைகின்ற வகையிலே, இந்த அரசானது ஏற்பட்டுவிட்ட அசம்பாவிதத்திற்கு யார் யார் பொறுப்பாளிகளோ, அவர்களை விசாரிக்க வேண்டுமென்பதற்காக நடுநிலையாளர்களிடம் தீர்ப்புக்கு விட்டு அவர்கள் மீது நடவடிக்கையும் எடுத்திருக்கின்ற பெருந்தன்மையைப் பாராட்டுகின்ற அளவிலே, அரசியல் லாபத்திற்காக மாணவர்களைத் தூண்டிவிடுகின்ற நிலைமை அமையக் கூடாது என்று கேட்டுக்கொண்டு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை விவாதிப்பதற்கு அவசியமில்லை என்பதை அவர்களுக்கு, மாண்புமிகு தலைவரவர்களே, தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் விளக்கத்தை நான் வரவேற்கிறேன். நல்ல ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். அதே நேரத்தில் முதுகுளத்தூர் சம்பவத்தைப்பற்றியும் வேறு ஏதோ ஒரு சம்பவத்தைப்பற்றியும் நீதி விசாரணை போடவில்லை என்ற கருத்து பரவாமல் இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் நான் எழுந்து நிற்கின்றேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. நியாயாதிபதியைக் கொண்டு வேண்டுமானால் அப்போது விசாரணைக் குழு போடவில்லை என்று சொல்லலாம். ஆனால் ரெவின்யு போர்டு மெம்பர் ஒருவரை வைத்து விசாரணை செய்தார்கள். யாரும் நியாயாதிபதி ஸ்தானத்தில் இருந்து விசாரணை செய்யலாம். தனி நியாயாதிபதியைக் கொண்டு வேண்டுமானால் நீதி விசாரணை வைக்கவில்லை என்று சொல்லலாமே தவிர, விசாரணையே வைக்கவில்லை என்று சொல்வது தவறு. மேலும், தலைவரவர்களே, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அப்போதும் விசாரணை வைக்கப்பட்டது. அப்போது ஒரு போர்டு மெம்பரை வைத்து விசாரணை நடத்தினார்கள். இல்லை என்று சொல்வதற்கில்லை.



1973 நவம்பர் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் குறிப்பிட்டது 'நீதி விசாரணை' என்பதைத்தான். அதாவது ஒரு நீதிபதியைக் கொண்டு நடத்தப்படும் விசாரணை. இப்போதும் கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் அல்லது பாளையங்கோட்டைச் சம்பவம் பற்றி அப்படி ஒரு ரெவின்யூ போர்டு மெம்பரை நியமித்து விசாரணை செய்ய உத்தரவிட்டிருந்தால், நிச்சயமாக மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் வேறுவிதமாகத் தான் பேசியிருப்பார்கள்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே, இந்தப் பிரேரணையில் 5-10
கூட, நான் மாணவர்கள் கைதானார்கள் என்றுதான் சொன்னேனே தவிர, பி.ப.
கைதாகி அவர்களை ஜெயிலில் அடைத்தார்கள் என்ற வார்த்தையை நான் சொல்லவில்லை. பத்திரிகைகளிலும் அவர்கள் ஜெயிலில் அடைக்கப்பட்டதாகச் செய்தி வந்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கைது செய்து உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் 'மூவாயிரம் நாலாயிரம் பேர் கைது செய்யப்பட்டார்கள் என்று பத்திரிகையில் போட்டிருக்கின்றார்கள்' என்றுதான் சொன்னேன். திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னதாக நான் சொல்லவில்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: தலைவரவர்களே நான்கூட பத்திரிகையில் வந்தது என்றுதான் சொன்னேன். இந்தப் பிரச்சினை மிகவும் முக்கியமானது. ஆகவே இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை ஏற்று விவாதம் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதன்பேரில் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகும், இது சட்டம் ஒழுங்கு ஆகியவற்றிற்கு உட்பட்டதாக இருப்பதாலும், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

### 3. அரசாங்க உறுதி மொழிக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கையை அளித்தல்

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இப்பொழுது திரு. கே. ராஜாராம், அரசாங்க உறுதி மொழிக் குழுவின் தலைவர் அவர்கள், அரசாங்க உறுதி மொழிக் குழுவின் 23-வது அறிக்கையை அளிப்பார்.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, அரசாங்க உறுதி மொழிக் குழுவின் தலைவர் என்ற முறையில், அதன் 23-வது அறிக்கையை இந்த அவையின் முன்பு சமர்ப்பிக்கிறேன்.

4. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1973-74 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை, 1972-73 ஆம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை ஆகியவற்றின் மீது விவாதம்—தொடர்ச்சி.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, Sir, on all previous occasions, I think I have had the privilege of congratulating the Minister for Electricity. But, Sir, on this occasion, I feel that despite my bringing to the notice of the Hon. Minister on several occasions about the graduate employees in the Bills Department being superseded and others who are less qualified being put in their places and my having brought to notice the difficulty in which the members of the public are placed, the accounting in this Electricity Board is rather not in public interest.

(Thiru S. Jayarama Reddiar, Vice-Chairman in the Chair.)

Sir, I would like to say that for the last four months, we have not had our accounts and the recent accounts which have been sent to members of the public have been such that they do not elucidate matters fully and bring them to the knowledge of the consumers. For example, Sir, I am only referring to one of the accounts which have been received by one member of the public—it furnishes the readings and says: 116 units charged: Rs. 42.20; other items: Rs. 165.60; Total Rs. 207.80. One has to gather that this Rs. 165.60 relates to earlier months which have not been billed for. But how is one consuming electric energy to know how much of this amount relates to a particular month? It becomes impossible for him to assess this. I find today, in the morning paper, a notification to the effect that consumers of electricity can pay in instalments, the arrears for the past months. This sort of billing—omnibus billing involving amounts of more than Rs. 200 or Rs. 300 does not do credit to the accounting department of the Electricity Board. This department has been put in charge of persons who were originally in the mofussil and despite their lack of qualification, they have been absorbed into the department and this fact has been brought to the notice



of Government by me on the last several occasions. I find, Sir, there is no reference in the Budget speech to how the accounting department is manned, why these discrepancies arose and how it is that conditions have deteriorated in the accounting for electricity bills and there being arrears for the last four months. Sir, this being a matter relating to revenue for the Electricity Board, I commend to the Hon. Minister that he should put adequate accounting staff with appropriate qualifications in charge of the department and restore the same efficiency that existed three years back, and should not succumb to temptations of putting persons from the mofussil—who are accustomed only to billing on the meters or on a smaller scale in the mofussil—but should adopt better methods of accounting in the Electricity Department. Otherwise, there will be a serious crisis financially and it may go the same way as the Corporation of Madras has gone. Sir, this has been brought to the notice of the Minister on previous occasions. But even in this Budget speech, I do not find any reference about the graduate accounting staff of the Electricity Department. While so many references have been made regarding payment of bonus and other things to the staff, there is no reference to this aspect.

Sir, the next point I wish to submit is this. From the details about the expansion of rural electrification and other charts which have been given at the end of the speech, I find that there is a growth in peak demand and all along the demand has been increasing, except in one year. Now, Sir, there was a recent power-cut which was in effect since 1972. In 1973, despite heavy rains, the power-cut is still being re-introduced and the Hon. Minister has referred to the marginal power cut of 15 per cent imposed from 1st October 1973. Sir, may I point out to the Hon. Minister in this connection, that soon we will be facing an oil crisis? Soon, we will be facing a crisis whereby all oil-driven vehicles like petrol driven cars or buses will be affected. Oil, as a commodity, will be extinct within 25 years. Geologists say that there will be no oil after 25 years. It is, therefore, necessary that we should find out the means of putting locomotives in motion with the aid of electricity or by solar power. In this connection, Sir, I have always been stressing that the growth of forests must be taken on hand as a proposition of the Government and

[Thiru G. Vasantha Pai] [1973 நவம்பர் 23

that Government must bestow serious consideration on growth of forests because hydel power is required. Therefore, the growth of forests resulting in bringing in of rains to fill our reservoirs and improvement of our hydel projects is very necessary so that we may meet the present power crisis and also the oil crisis which is going to occur in the coming 25 or 50 years. Madras, which once had an electric tramway for use throughout the city, is no longer having it. Calcutta is the only city in India which, I think, is now having the electric tramway. Probably, unless new schemes are implemented and new types of electric buses
பி.ப. 5-20 are brought out, Calcutta also may have to stop it altogether, if it has not already stopped it. Further electrification has to be taken up and diesel engines have to be substituted by electric engines. Unless this is done, we will find it extremely difficult when we meet with an oil crisis. Therefore, the Electricity Department should give top priority to this, having in view what we will have to face, what the country will have to face in the future years to come. If our forests are cut down, if our trees are cut down and if all avenues of resources of water are going to be extinguished, we will find that we will have no electricity from hydel projects at all.

The speech of the Hon. Minister is illuminating in many respects. While I congratulate him on this, I feel, without meaning any disrespect, that there is a dearth of statesmanship and a dearth of forward-looking in his speech. It is not enough if you increase rural electrification; you must increase different means and different modes of conveyances based on electricity—electricity which is not generated through generating sets, but through hydel projects. So, I would commend to the Hon. Minister that he should take on hand this task, with some regular planning, having consultations, if necessary, on an all-India level This processing of hydel projects must be taken on hand having regard to the fact that oil is going to be no longer available with us for 50 years to come for certain. The topmost geologists of the world have spoken about it and we are not going to get any oil at one future stage. Probably, we may have to use coconut oil and other vegetable oils for purposes of meeting our needs for power generation and for that purpose, more coconut trees may



1973 நவம்பர் 23] [Thiru G. Vasantha Pai]

have to be cultivated. In these circumstances, Sir, I request the Hon. Minister to bestow his attention on the suggestion which I have made.

Sir, with the power cut, the situation of public lighting becomes very bad. Anywhere in the City of Madras you go, you either find the whole lights missing or you find the bulbs missing, or you find lamp-shades missing and you hardly find one light in complete shape in one big street. This may be due to hooliganism or vandalism, but nonetheless it exists. There seems to be no control on it. For example, from the Muthusami Iyer Bridge to the War Memorial, there is hardly one lamp-shade existing. Similarly, from Hotel Oceanic to the Rajah Annamalai Palace, you will find that most of the lights have gone with the wind. It is not known why maintenance is not done properly. Moreover, due to voltage fluctuation, we find electric bulbs going off, and to get hold of a person to give the proper connection, to go to the market and buy an electric bulb and fit it up, is all very difficult. The person who is to be approached is not able to do it when we approach him. I feel, Sir, that conditions are very bad today and there is a dislocation in the maintenance service, probably due to the lethargy generated by the power cut. I hope the Hon. Minister will kindly take note of this fact and see that this sort of lethargy is put an end to and the staff are made to wake up—if necessary, electric energy may be applied to them so that they are energised into doing their job more properly.

With these few wrods, I thank you for having given me this opportunity to speak on the Budget of the Electricity Board.

திரு. சா. கணேசன். தலைவரவர்களே, இந்த 15-ஆவது ஆண்டு மின் வாரிய அறிக்கையின் மீது என்னுடைய கருத்தை உங்கள் மூலமாக அரசுக்கு நான் புலப்படுத்திக்கொள்ளத் தொடங்குவதற்கு முன்னே இந்த அரசு இது வரையிலே செய்யாத நிலையிலே நீதி விசாரணை நடத்தி குற்றம் புரிந்தவர்கள் என்று அறிக்கையிலே புலப்படுத்தப்பட்டவர்கள் மீது தக்க சட்ட பூர்வமான நடவடிக்கை எடுப்பதற்கு ஆணை பிறப்பித்ததை ஜனநாயக முறையிலே சிறந்தபடி வளர்ச்சி என்று கொண்டு அதற்காக அரசை நான் மனமார முதலில் பாராட்டுகிறேன். பாராட்டி அதன் பிறகு எனது கருத்துக்களைத் தெரிவிக்க முன்வருகிறேன்.

மின்வாரியமானது வெறும் உற்பத்தி செய்கிற ஒரு துறை மட்டும் அல்ல, அல்லது வினியோகம் செய்கிற துறை மட்டுமல்ல, கொள்முதல் செய்கிற துறை மட்டுமல்ல, விற்பனை செய்கிற துறை மட்டுமல்ல, ஆனால் அவ்வளவையும் செய்கிற சமுதாய நலனுக்குரிய காரியங்களைச் செய்கிற ஒரு வாணிக நிறுவனமும் ஆகும். வாணிக அடிப்படையிலும், சமுதாய நலன் அடிப்படையிலுமே இதை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் கூற முன்வருகிறேன். பாதுகாப்பு, நீதி, சுகாதாரம், கல்வி போன்றவற்றிற்கு அடுத்தபடியாக மின்சாரத் துறை நின்று நிலவுகிறது என்று கூட நான் சொல்ல விரும்புகிறேன். அத்துணை இன்றியமையாத ஒரு இடத்தைப் பெற்று நிற்கிறது. விவசாயம், தொழில், வாழ்க்கை வசதி முதலிய பலவகைத் துறைகளுக்கும் அடிப்படையான இன்றியமையாத ஒன்றாக மின்வாரியம் அல்லது மின்சாரம் நிற்கிறதை நாம் மறந்துவிடப்படாது. அந்த நிலையிலே, அறிக்கையிலே காணப்படுகிற சில குறைகளை முதலில் சொல்கிறேன். இதிலே ஆலோசனைக் குழு என்று 14 பேர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அவர்களிலே மின்சாரம் பெறுபவர்களிலிருந்து 6 பேர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த 6-ம் சென்னையில் இருப்பவர்களுக்கு. தென் மாநிலத்திற்கு ஒருவர் கூடக் கிடையாது. இன்னொன்று, சென்னைக்கு அடுத்தபடி, முதன் முதலில் தென்னகத்திலே தென் மாநிலத்திலேதான் மின்சாரம் தொடங்கியது. அப்படியெல்லாம் இருக்கிற போது பல்வேறு பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்கிற முறையிலே அமையாமல் இருக்கிற ஒரு குறையை உங்கள் மூலமாக முதலில் புலப்படுத்திக்கொள்கிறேன்.

இனி, சென்ற ஆண்டிலே, இந்த விதமான அறிக்கைகளைத் தயாரிக்கிற போது வெறுமனே ஏதோ நடந்தது, வரவு, செலவு என்று இதையெல்லாம் காட்டினால் பயனில்லை, (அதற்குத் தகுந்தாற்போல) நாம் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் ஒவ்வொரு துறையிலும் மின்சாரம் தயாரிக்கிறபோது, உற்பத்தி செய்கிறபோது, ஒவ்வொரு இடத்திலும் என்னென்ன விகிதாசாரத்தில் அவை கிட்டுகின்றன, எல்லாவற்றையும் ஒட்டு மொத்தமாகக் கூட்டி சராசரியாகக் கவனிக்கிறபோது, எத்தனை சராசரி யூனிட் கிடைக்கிறது, கொள்முதலுக்கு எவ்வளவு கிரயம் ஆகிறது, வினியோகிப்பது எப்படி என்பவற்றைப்பற்றியெல்லாம் விவரம் தர வேண்டுமென்று கேட்டிருந்தேன். இந்த ஆண்டிலே இரண்டாவது பிற்சேர்க்கையிலே அதற்கு ஓரளவு உதவியிருக்கிறார்கள், அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இன்னும்



கேட்ட முழு விவரங்கள் வரவில்லை. என்றாலும் ஒரு படி வளர்ந்திருக்கிறது. முழுவதும் வளர்வதற்கு இது வித்தாக அமையட்டும் என்று கூறி மேலே செல்கிறேன்.

பக்கம் 6, மின்சார உற்பத்தி என்ற தலைப்பிலே எத்தனை யூனிட்டுகள் உற்பத்தி செய்யப்பட்டன என்பதில் நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யப்பட்டது, வெளியிலிருந்து வாங்கப்பட்டது, நெய்வேலியில் வாங்கப்பட்டது இவற்றையெல்லாம் கணக்கிடுகிறபோது, அந்த விகிதாசாரம் இருக்கிறதே, அதை எந்தக் கணக்குப்பிள்ளை போட்டாரோ தெரியாது, அத்தனை குழப்பமாக இருக்கிறது. உதாரணத்திற்குக் காட்டுகிறேன். 178-ஐக் கொண்டது 4.83 என்றும் 333-க்கு 2.85 என்றும் போடப்பட்டிருக்கிறது எப்படி இந்த பர்செண்டேஜ் வந்தது என்று தெரியாது. அச்சாபீசில் தப்பு ஏற்பட்டதா, டைப்பிஸ்ட் கீழ் பக்கத்தை மேல் பக்கமாக டைப் செய்தாரா, பி.ப 5 30 கணித்தவர் தவறு செய்தாரா என்று பார்த்தால், கணித்தவர் தவறு செய்திருக்கிறார் என்று தெரிகிறது. முதலில் போட்ட 55 சதவீதம் கரெக்ட். அதற்கடுத்து 9.08 என்பது 9.0767 என்று நான் கணித்து வைத்திருக்கிறேன். 28.19 என்பது 28.198, அடுத்தது 4.83 என்பது 2.843, அடுத்தது 2.85 என்பது 4.944, அடுத்தது 0.05 என்பது 0.044. இப்படிப் பார்த்தால்தான் கணக்குச் சரியாக வருகிறது. எப்படி கணக்குப் போட்டார்கள் என்று தெரியவில்லை. நான் சொல்வது சரியாக இருக்கிறதென்று சொல்வதற்கு எப்போதும் தயாராக இருக்கிறேன். இப்படியெல்லாம் குழப்பம். அதற்கும் மேலே மூன்றாவது பாராவிலே, உற்பத்தி செய்யப்பட்ட, வாங்கப்பட்ட மொத்த மின்சாரம், எத்தனை செலவழிந்தது, எத்தனை விரயம் என்று கூறப்பட்டிருக்கிறது. 18.8 சதவீதம் விரயம் என்று கூறப்பட்டிருக்கிறது. இது ஐந்தில் ஒரு பாகம். இப்படி விரயமானதை நான் புரிந்துகொள்கிறேன். காரணம் மற்றவர்களைப் போல் எனக்கும் தெரியும். இதையெல்லாம் கணக்கில் கண்டால் நியாயம் என்றே போடப்பட்டிருக்கும். இவ்வளவு விரயமானது நியாயம் என்று கொள்ளாமல் ஏதோ தவிர்க்க முடியாததாக இருக்கலாம் என்று போட்டிருந்தால், புரிந்து கொள்ள முடியும். இது நியாயம் (justifiable) ஜஸ்டிபியபிள் என்று சொன்னால், நம்முடைய நாட்டில் எப்படி நிர்வாகம் செம்மையாக நடைபெறும் என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னொன்றையும் இங்கு சொல்ல வேண்டும். இந்த அறிக்கைக்குள் சில இடங்களில் 'கோடி' என்று போடப்பட்டிருக்கிறது. சில பகுதிகளில் யாருக்குமே புரியாமல் 'மிலியன்' என்று போடப்பட்டிருக்கிறது. இந்த 'மிலியன்' தேசத்திற்கு தேசம் மாறுபடுகிறது. இன்னொரு பக்கத்தில் லட்சம்

என்று போடப்பட்டிருக்கிறது. பங்க்சுவேஷன், கமா போடுவது ஒரு பக்கத்தில் லட்சத்திற்கு, இன்னொரு பக்கம் மிலியனுக்குப் போடப்பட்டிருக்கிறது. இப்படி குழப்பம் இருக்கக் கூடாது. தமிழ் நாட்டில் கோடி, லட்சம் என்ற முறைதான் இருந்து வருகிறது. முன்னால் மூன்று காலத்திற்றுப் பின்னால் கமா போட்டுவிட்டு, அதற்குப் பின்னால் இரண்டு, இரண்டு ஸ்தானங்களுக்கு ஒரு 'கமா' போட்டு வந்தால், செம்மையாகப் படிக்கவும் புரிந்து கொள்ளவும் தெளிவாக இருக்கும். இப்படி போட்டுக் குழப்பக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மொத்தம் நமக்கு உற்பத்தியான மின்சாரத்தின் மதிப்பு 681 கோடி. அதிலே விற்றது 545 கோடி. பாக்கி விற்காமல் இருந்தது 135 கோடி. இதிலே சுமார் 9 கோடி நிலையம் பயன்படுத்தியது. பாக்கி 126 கோடி யூனிட்ஸ் சேதம் என்று போடப்பட்டிருக்கிறது. இது சேதமா? நான் சொல்கிறேன், இதிலே பாதிக்கு மேலே திருட்டுப் போனது. 5 சதவீதம், 6 சதவீதம், 7 சதவீதம் சேதாரம் வருவது என்பது தவிர்க்க முடியாதது, நியாயமானது, அதிலும் நாம் அலுமினியம் கண்டக்டர்கள் வைத்து மின்சாரம் கொண்டுபோவதால் சேதாரம் ஏற்படும் என்பதை நானும் அறிவேன். ஆனால் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பாகம் சேதாரம் என்று சொல்வது நியாயமான சேதாரம் அல்ல, திருட்டுப்போனது என்பதை மறுக்க முடியாது. அதைத் தடுப்பதற்கு வேண்டிய வழி வகைகளைத் தொடங்க வேண்டும். வெளிநாட்டிலே எங்கே பார்த்தாலும், இந்த அளவுக்கு சேதாரத்தைக் காண முடியவில்லை. நமது தேசத்தில் மட்டும் கிட்டத்தட்ட 18.8 சதவீதம், அதாவது 19 சதவீதம் என்று சொன்னால், அது ஐந்தில் ஒரு பாகமாகவிருக்கிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, விளக்கத்திற்காக ஒன்றைச் சொல்கிறேன். பொதுவாகவே இணைப்புகள் நீண்ட அளவுக்கு இருந்தால், இழப்பு அதிகமாக ஏற்படும் என்று சொல்லியிருக்கிறோம். ஹரியானாவிலும், பஞ்சாபிலும், தமிழ்நாட்டிலும்தான் அதிக நீளமுள்ள தொடர்புகள் இருக்கின்றன. அதன் அடிப்படையில் பார்த்தால், ஹரியானாவில் 29 சதவீதம், பஞ்சாப்பில் 34 சதவீதம் இழப்பு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ரேஷியோ போட்டு ஒப்பிட்டுப் பார்த்தால், தொடர் நீளங்கள், சப்-ஸ்டேஷன் இணைப்புகள் இவைகளைப் பார்க்கின்றபோது அதிகமில்லை, இன்டிஸ்பென்சிபிள் என்று சொல்லப்படுகிறது. ஒரு சதவீதம், இரண்டு சதவீதம் குறைக்கலாம் என்று சொல்லலாமே தவிர, மிக, மிக அதிகமானது என்று சொல்வது தவறானது.



திரு. சா. கணேசன்: பிற மாநிலங்களைப்பற்றிப் பேசுவது முறை இல்லாததால், நான் பேச விரும்பவில்லை. இருந்தாலும் பிற தேசங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், நம்முடைய மாநிலத்தில் சேதாரம் மிக அதிகம். இதைக் கண்காணித்து சீர்படுத்துவதற்கும் இதிலே உள்ள குறைபாடுகளைப் போக்குவதற்கும்தான் குறிப்பிடுகிறேன்.

இது ஒரு வணிகத் துறையாக இருப்பதால், உற்பத்தியையும் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்துச் செயல்பட வேண்டியிருப்பதால், தலைமைப் பொறுப்பில் இருக்கிறவர்களை, பிரசிடெண்டோ, சேர்மனோ, எந்தப் பெயரில் அழைத்தாலும், அவர்களை மற்ற இலாக்காக்களைப் போல் மாற்றம் செய்யாமல் தொடர்ந்து அங்கேயே பணியாற்ற விட்டால், விஷயங்களைப் புரிந்துகொண்டு எங்கெங்கே என்னென்ன இருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டு தெளிவாக, செம்மையாகச் செயல்படுத்த முடியும். குறைந்தபட்சம் பத்து ஆண்டுகளுக்கு அவர்களை மாற்றாமல் வைத்திருந்தால், அந்தத் துறை செம்மையாகவிருக்கும் என்பதை முதலில் குறிப்பிடுகிறேன்.

அடுத்தது, ஒவ்வொரு டிவிஷனுக்கும் தனியாக மீட்டர் வைக்க வேண்டும். அந்த டிவிஷனிலிருந்து ஒவ்வொரு யூனிட்டுக்கும், அதாவது ஒவ்வொரு சப்-ஸ்டேஷனுக்கும் தனி மீட்டர் வைக்க வேண்டும். அப்படி வைத்திருந்தால், உண்மையான சேதம் எவ்வளவு, இடையில் திருட்டு எவ்வளவு என்பதைச் செம்மையாக, தெளிவாகப் புலப்படுத்திவிட முடியும் என்பதையும் நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த மாதிரியான செயல்முறைகளில் நாம் ஈடுபட்டால், உண்மையிலேயே இந்த வாரியத்தினுடைய பற்றாக்குறை பெரிதாகக் குறைந்து, வாரியத்தினுடைய நஷ்டம் அனைத்தும் போய் லாபம் கூட வர முடியும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

அடுத்து, ஏற்கெனவே சென்ற ஆண்டு நான் கேட்டுக்கொண்டு அமைச்சர் அவர்களும் நியாயம்தான், செய்து விடலாம் என்று சொன்னதாவது, பம்ப் ஸ்டேஷன் அல்லது பம்ப் அறைக்குள் ஒரு விளக்கு போட்டுக் கொள்வதற்கு அனுமதி. அங்கே இருட்டில் போய் சுவிச் போட்டு ஆன், ஆப் செய்வதற்கு இன்னொரு மீட்டரிலிருந்து விளக்கு கொண்டு வருவது என்பது மிகவும் சிரமமாகத் தெரியும். விவசாயத்திற்கு தனியாக இருக்க வேண்டுமென்று இருந்தாலும், ஒரு விளக்கு வாட்டர் பம்புக்கு மட்டும்தான் உபயோகிக்க வேண்டும் என்று இருக்குமானால், அந்த பம்ப்செட்டை இயக்க விளக்கு ஒன்று அதிலிருந்து போட்டுக்கொள்ளக்கூடாதா? 50 வாட்ஸ், 40 வாட்ஸ் விளக்கு ஒன்று போட்டுக்கொள்வதால் பிரமாதமான கரண்ட் நஷ்டம் வந்துவிடாது.

சென்ற ஆண்டு அனுமதிக்கலாம் என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் இல்லாமல், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த கரண்ட் வெட்டு வருகின்றபோது, எதற்கு வேண்டுமானாலும் வெட்டு செய்யலாம் என்ற முடிவுக்கு வரக்கூடாது. குறிப்பாக சிமெண்ட் ஆலைகளுக்கு இருக்கக் கூடாது. அடுத்தபடியாக, நூற்பு ஆலைகளுக்கு இருக்கக் கூடாது. சிமெண்ட் ஆலைகள் பாதிக்கப்பட்டால், எத்தனை தொழில்கள் பாதிக்கப்படுகின்றன என்பதை சம்பந்தப்பட்டவர்கள்தான் அறிவார்கள். தச்சனுக்கு வேலை இல்லை, இது பார்ப்பதற்கு வேடிக்கையாகத் தோன்றும். மரத்தால் கதவு, வாசக்கால், ஜன்னல் முதலியவை செய்தால்தான், செங்கல்லும் சுண்ணாம்பும் சிமெண்டும் வைத்து வீடு கட்ட முடியும். ஆகையினால் கொல்லனுக்கும் வேலையில்லை, சித்து ஆளுக்கும் வேலையில்லை. இப்படி பல பேர்களுடைய உழைப்பு பாழ்படுத்தப்படுகிறது. ஆகவே சிமெண்ட் தொழிற்சாலை அருகே வரக் கூடாது. எனக்கும் சிமெண்ட் தொழிற்சாலைக்கும் சம்பந்தமே இல்லை, ஒரு பேச்சுக்குக்கூட தொடர்பு இல்லை. இருக்கின்ற நிலைமையைக் கூறுகிறேன். இப்பொழுதுள்ள தேசத்தின் பொருளாதாரச் சூழ்நிலைக்கு சிமெண்ட் தொழில் வளர்வது அவசியம் என்பதை மனதில் கொண்டு, குறைந்தபட்சம், சிமெண்ட் தொழிற்சாலைகள், நூற்பு ஆலைகள், இந்த இரண்டு தொழில்களுக்கு மட்டும் எதிர்காலத்தில் மின்வெட்டு இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் சொந்தத்தில் ஜெனரேட்டர் வைத்து தங்களுடைய குறைந்த தேவைக்கு மின்சாரம் உற்பத்தி செய்துகொள்கின்றவர்கள் வாரியத்திற்கு வருமானம் என்று சர்சார்ஜ், எக்சைஸ் டூடி என்று வரிகளைப் போட்டு, அந்தத் தொழில் இயங்க விடாமல், முடங்கிவிடச் செய்வது தேசத்தின் பொருளாதாரத்திற்குப் பொருந்தாது, பொருளாதார நியதிக்கும் பொருந்தாது என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நகராட்சிகளில் இந்த மின் துறை இயங்கும் நிலைமையை எடுத்துக் கொண்டால், காரைக்குடியைப் பொறுத்த வரையில், இப்பொழுது விளக்குகளே எரிவதில்லை. கேட்டால் ஏதாவது ஒன்றில்லை என்று சொல்வார்கள். இந்த நெம்பர் உள்ள போஸ்டில் ஒரு சாமான் இல்லையென்று, வேறு ஒரு போஸ்டிலிருந்து எடுத்துப் போட்டு அதை எரிய விட்டவுடன், அடுத்த போஸ்டில் விளக்கு மறுநாள் எரியாது. கடைசியில் கேட்டால், அந்தப் போஸ்டிலிருந்து பல்ப் அல்லது ஸ்டார்ட்டர் எதையாவது கொண்டுவந்து காட்டி, அது எரிந்து



போய்விட்டது என்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். இந்த மாதிரியான நிலைமைகள் ஏற்படாமலிருக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பலவிடங்களில் மீட்டர் கார்டே கிடையாது. பில்கள் போடப்படவில்லை என்பது மட்டுமல்ல. மீட்டர் கார்டே அந்த இடத்தில் இல்லை. மீட்டர் ரீடிங் எடுப்பார்கள், எவ்வளவு ஆயிற்று என்று கேட்டால் சொல்ல மாட்டார்கள். மீட்டர் கார்டு இல்லை, பழைய ரீடிங் எவ்வளவு என்று பார்த்து, அதிலிருந்து கழித்துச் சொல்ல வேண்டும், அதைப் பார்க்க கார்டு இல்லையென்று சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். பிறகு விதித்ததைச் சரி என்று ஏற்றுக்கொண்டு, கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் வந்து அப்படியே கட்ட வேண்டியிருக்கிறது.

இதற்கு மேலே பற்றுக்குறைபற்றியெல்லாம் பலர் பேசினார்கள். இதற்கு அனல் மின்சார நிலையத்தை நாங்குனேரி தாலுகாவிலே ஏற்படுத்துவதற்குரிய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் சொன்னார்கள். அமைச்சர் அவர்களுடைய பேச்சிலும், குறிப்பிலும் தரப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் கூடியவிரைவிலே செய்யலாம், ஏதோ மத்திய ஆட்சியின் அனுமதிக்காக அது காத்திருப்பது போன்ற குறிப்பு தந்திருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரையிலே, விரைவாக எதைச் செய்தாலும் சரி, எப்படிச் செய்தாலும் சரி, இந்த நாடு முழுதும் தேவையான அளவுக்கு மின்சாரம் கிடைக்க வேண்டும். போதிய அளவு மின்சாரம் கிடைக்கிற வரையிலே, தேவையில்லாத இடங்களிலே புதிய கம்பிகளை நீட்டி விரயத்தையும் ஜாஸ்தியாக்காமல், இருப்பதைக் கொண்டு உள்ளவர்களுக்குக் கொடுக்கின்ற நெறியிலே செயல்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். ஏற்கெனவே பல அறிஞர்கள் கடல் அலையின் மூலமாக மின்சாரத்தைப் பெறலாம் என்றார்கள். அதுபற்றி எவ்விதச் செய்தியும் கிடையாது. அது சாத்தியமா, சாத்தியமில்லையா? சாத்தியமானால் ஏன் அதை மேற்கொள்ளக் கூடாது? சாத்தியமில்லையென்றால், அப்படிச் சொன்னது சரியல்ல, சாத்தியம் இல்லாததனாலே நாங்கள் அதிலே தலையிடவில்லை என்ற கருத்துக்களையெல்லாம் நமக்குத் தந்திருக்கலாம். இப்படியெல்லாம் பல்வேறு நிலைகளிலே நம்முடைய இன்றியமையாத தேவையைப் பூர்த்தி செய்ய இந்தத் துறை செயல்பட்டு வருவதற்கு ஓரளவிற்குத் திருப்தியைத் தெரிவித்து, ஏற்பட வேண்டிய ஏராளமான முன்னேற்றங்கள், வளங்கள், வளர்ச்சிகள், ஆகியவற்றுக்காகவும் இந்தத் திருட்டு முதலியவற்றைக் கண்டுபிடித்து அவற்றுக்குத் தக்க தண்டனை கொடுக்கவும் காரியம் செய்ய முயல வேண்டும்.

இறுதியாக ஒன்று, இந்த கீழ்—கீழ் என்று சொன்னால்கூட தவறு—குறைந்த சம்பளப் பணத்திலே இருக்கிறவர்கள், எஸ். இ. போன்றவர்களையெல்லாம் மடக்குகின்ற, 'கெரோ' பண்ணுகின்ற, உதாசீனம் பண்ணுகின்ற நிலைமைகள் எங்கும் பரவலாக இருக்கின்றன. இது தேசத்தின் ஆட்சி முறைக்கும், தொழிலினுடைய நலத்திற்கும் நன்மை பயக்காது. எங்கும், யாராக இருந்தாலும், மேலதிகாரிக்குக் கீழே உள்ளவர்கள் கட்டுப்பட்டு பணிவாக, அன்போடு, அதே காலத்திலே மேலே உள்ளவர்கள் கீழே உள்ளவர்களிடத்திலே பரிவோடு அன்போடு நடந்துகொள்கிற ஒரு சுமுக சூழ்நிலையை அமைக்கா விட்டால், இது இந்தத் துறையையே பாழாக்கி, தேசத்தின் துய்ப்பவர்களுடைய நலன்களெல்லாம் கெடும்படியான நிலைமையை ஏற்படுத்தும். அதற்குத் தக்க நடவடிக்கைகளையும், அரசு மேற்கொண்டு மேலே இருக்கிறவர்களுடைய மானமும் மரியாதையும் அவர்களுடைய கவுரவமும், காக்கப் படுவதற்கு அரசு முழுக்க முழுக்க உறுதியும், அவர்களுக்கு உத்தரவாதமும் அளிக்கின்ற முறையிலே செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகின்றேன். வணக்கம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரிய நிதி நிலை அறிக்கையைக் குறித்து சில கருத்துக்களை இந்த சபையிலே கூற விரும்புகின்றேன். நம்முடைய தமிழக மின்சார வாரியமும், அந்த இலாகாவும், தமிழ் நாட்டினுடைய இன்றியமையாத தேவையாக இருக்கக்கூடிய மின்சாரத்தைச் சரியானபடி உற்பத்தி செய்யவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை இந்த அவையிலே நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன். நான் குற்றச்சாட்டு என்று கூறும்போது, ஏதோ நான் எதிர்க் கட்சி வரிசையிலே இருப்பதாலே கூறுகின்றேன் என்று எண்ண வேண்டாம். நம்முடைய ஆளும் கட்சி வரிசையிலே உள்ளவர்கள்கூட இந்த அறிக்கையை ஆதரிப்பதாகக் குறிப்பிட்டுவிட்டு, பல பெரிய குற்றச்சாட்டுகளையெல்லாம் இந்த அவையிலே கூறினார்கள். அவைகளெல்லாம் இன்று மட்டும் கூறப்படுவனவல்ல, இந்த ஆண்டு மட்டும் கூறப்படுவனவல்ல, ஒவ்வொரு ஆண்டும் கூறப்படக்கூடிய ஒரு சாதாரண விஷயமாக ஆகிவிட்டது. ஏதாவது ஒரு ஆண்டிலேயாவது கவனிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விஷயங்கள் கவனிக்கப் பட்டிருக்கின்றனவா என்று பார்த்தால், ஒரு விஷயம் கூட கவனிக்கப்படாத நிலையிலே போய்க்கொண்டிருக்கிறது. பல உறுப்பினர்கள் இதைக் குறிப்பிட்டே கூறியிருக்கிறார்கள். நான் தமிழகத்தினுடைய மின் உற்பத்தித் திறனைப் பெருக்குவதிலே அதிக அக்கறை காட்டவில்லை என்று கூறும்போது, ஏதோ மேலெழுந்தவாரியாகக் கூறுவதாக எண்ணக் கூடாது. நம்முடைய உற்பத்தித்





திறன் அளவுக்கு மின் நிலையங்கள் இன்றைய தினத்திலே மின்சாரம் உற்பத்தி செய்கின்றதா என்றால், அப்படிச் செய்யாத நிலையைப் பார்க்கின்றோம். சென்ற ஆண்டு எங்கே பார்த்தாலும் பருவ மழை தவறியதன் காரணத்தாலே, மின் நிலையங்கள் போதிய அளவு உற்பத்தித் திறன் அடைய முடியவில்லை என்று பருவ மழை தவறியதை சாதகமாக வைத்துக் கொண்டு, அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இந்த ஆண்டு, பருவ மழை பெய்து, எல்லா நீர்த் தேக்கங்களும் நிரம்பி இருக்கும்போதுகூட அதனுடைய உற்பத்தித் திறன் அளவுக்கு உற்பத்தி, ஆகியிருக்கிறதா என்று கணக்குப் பார்க்கும்போது, அந்த அளவுக்கு உற்பத்தி ஆகாத நிலையைக் காண்பது மிக வருந்தத்தக்க விஷயமாக இருக்கிறது. அது மட்டுமல்ல. நிர்வாகத்திலே பல கோளாறுகள் இருப்பதால், உற்பத்தித் திறன் குறைகின்றது. என்னூர் அனல் மின் நிலையத்திலே ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக உற்பத்தி குறைந்திருக்கிறது. அதற்காக ஒரு கமிட்டி பரிசீலனை செய்து அறிக்கையும் சர்க்காருக்குக் கொடுத்திருக்கிறது. அந்த அறிக்கையிலே அந்தத் தீ விபத்திற்குக் காரணம் ஏதோ இரண்டு பேர் என்று சொல்கிறார்கள். என்ன காரணத்தினாலோ தவறான காரியத்தைச் செய்தார்கள். அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பது கூறப்படவில்லை, அந்த அறிக்கையும் இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்படவில்லை. இப்படியெல்லாம் பணியாற்றக்கூடியவர்கள் செய்யக் கூடிய காரியத்தாலே மின் உற்பத்தி குறைகிறது. கால்வாயிலே மணல் தேங்கிக் கிடப்பதால், அடைத்துக்கொண்டிருக்கிறது, அந்த மணலை அகற்ற வேண்டும் என்பதற்கு எடுத்த நடவடிக்கை என்னவென்றால், பல ஆண்டுகள் கழித்துக்கூட, ஐரோப்பாவுக்கு என்ஜினீயர்களையும், மின்சார வாரியத்தின் தலைவரையும், ஒரு டிரட்ஜர் வாங்குவதற்கு அனுப்பியதாகச் சொல்லப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, டிரட்ஜர் ஏற்கெனவே வாடகைக்கு வாங்கப்பட்டு அது ஓடிக்கொண்டிருக்கிறது. மணல் குவியல் எதுவும் கிடையாது. சென்ற ஆண்டு வாடகைக்கு இருக்க வேண்டியதில்லை, சொந்தமாகவே வாங்க வேண்டும் என்று நிபுணர்கள் சொல்லியதால் அனுப்பப்பட்டார்கள். ஆகவே மணல் குவியல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, ஒரு டிரட்ஜர் விலை 70 லட்ச ரூபாய். மின்சார வாரியத்தின் செலவைப் பார்க்கும்போது, 70 லட்ச ரூபாய் பெரிய விஷயமல்ல. ஆனால் ஒரு டிரட்ஜர் வாங்குவதற்கு என்ஜினீயர்களும், மின்சார வாரியத்தின் தலைவரும் செல்ல வேண்டுமா என்பதுதான் கேள்விக்குரிய விஷயமாக இருக்கிறது. மின்சார உற்பத்தியைப்

பெருக்க, வேறு ஏதேனும் அபிவிருத்தி செய்வதற்கு மேல்நாடுகளுக்குச் சென்றால்கூட, பரவாயில்லை. ஒரு டிரட்ஜர் வாங்குவதற்காகச் செல்வதா என்பதுதான் கேள்வி.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, அது இண்டர் நேஷனல் டெண்டர் என்று வெளிநாட்டிலே கிடைக்கிறது. இங்கே கிடைக்க வில்லை. அதை வாங்கினாலும், அதை ஆப்பரேட் செய்வதற்கு இங்கே உள்ள நிபுணர்களை அங்கே அனுப்பி பல மாதங்கள் அங்கு இருந்து தெரிந்து வரவேண்டும். எனவே எங்கே உற்பத்தி செய்கிறார்களோ அங்கேயே ஆப்ப ரேஷன் எப்படி என்று நேரடியாகப் பார்த்து வாங்க வேண்டும் என்றுதான் அங்கே போயிருக்கின்றார்களே தவிர வேறு ஒன்றுமில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், அதைப் பயில்வதற்காக வேண்டுமென்றால் சம்பந்தப்பட்டவர்களை வெளியே அனுப்பலாம். இப்பொழுது உள்ள கஷ்டமான நிலையிலே மின்சாரம் குறை வாக இருக்கிறபோது, மின்சார வாரியத் தலைவரையும், சீஃப் என்ஜினீய ரையும் ஐரோப்பிய நாட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன என்று தெரியவில்லை. அது மட்டுமல்ல. மின்சார உற்பத்தியைப் பார்க்கும்போது, இந்த அரசாங்கம் பதவி ஏற்றபிறகு சரியான முறையிலே செயல்பட்டிருக்கு மானால், நல்ல நிலையங்களை ஏற்படுத்த திட்டங்களைத் தீட்டியிருக்குமானால், இந்த நிலை ஏற்பட்டிருக்காது என்று எண்ணுகிறேன். காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்திலே, 1966-லே அனுமதிக்கப்பட்ட பல மின் உற்பத்தி நிலையங் களெல்லாம், இன்றைக்குக்கூட உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்கிறது. அப்படியிருக்க, மத்திய அரசாங்கம் அனுமதி தர மறுக்கிறது என்று மட்டும் குறிப்பிடுவது பொருத்தமான விஷயமில்லை. மத்திய அரசாங்கத்திடம் சேர்ப்பித்த திட்டங்கள் எவ்வளவு, அவற்றை எதனால் எதிர்க்கிறார்கள், ஏன் அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள் என்ற விவரம் சொல்வதில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் கொடுத்த திட்டங்களிலே எங்கெங்கே உற்பத்தி காலதாமதமாக இருக்கிறது என்று குறிப்பிட்டு, திட்டங்களையெல்லாம் சொன்னால் நன்றாக இருக்கும். இவ்வாறு இல்லையென்று சொல்லியிருக்கிறேன். அவர்கள் கொடுத்த திட்டம் எந்த நாளில் புரொடக்ஷன் டேட்டுக்கு பின்னாலே காலதாமதமாகியிருக்கிறது.



என்று விளக்கம் சொன்னால் நல்லது. ஒவ்வொரு திட்டத்தையும் தமிழ் நாட்டில் முன்னாலேயே முடித்துக்கொண்டு வருகிறோமே தவிர, பின்னால் முடித்ததாக உதாரணம் காட்ட முடியாது.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவரவர்களே, நான் விரைவிலேயே 5-50 பி.ப.
முடித்து விடுகிறேன். அமைச்சரவர்கள் இதற்கான பதில்களையெல்லாம் கடைசியில் சொல்லலாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** 'கான்ட்ரவர்சி' இல்லாமல் பேசுங்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** தலைவரவர்களே, குறைகளைத்தான் நாங்கள் சொல்ல வேண்டும். மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதி மறுக்கப் பட்டதென்றால், என்ன காரணத்தால் அனுமதி மறுக்கப்பட்டதென்ற விஷயம் கொடுக்கப்பட்டிருந்தால், எந்தத் தொந்திரவும் வராது.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, ஏதோ நாங்களாகச் செய்கிற காரியத்திற்கு, அவர்களால் அனுமதி மறுக்கப்பட்டதென்பதல்ல. சேங்ஷன் ஆனால்தான் ஒரு பிராஜெக்டை நடத்த முடியும். அவர்கள், பிளானிங் முறைப்படி தான் சேங்ஷன் தர வேண்டும். அனுமதி மறுத்ததற்குக் காரணம் நிதிநிலை வசதி இல்லாமல் இருக்கலாம் அல்லது 'பாரின் எக்ஸ்சேன்சு' இல்லா மல் இருக்கலாம். எப்படியோ அனுமதி வழங்கப்படவில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** இந்த விளக்கங்கள் எல்லாம் அறிக்கையில் கிடையாது. அமைச்சரவர்கள் சொன்னதை ஒப்புக்கொண்டதாக நீங்கள் கருதக் கூடாது. ஒரு மில்லுக்கு லைசென்ஸ் வேண்டுமென்றால், ஹெல்த் ஆபீசர் சர்ட்டிபிகேட் வேண்டும். இல்லையென்றால், அந்த அப்ளிகேஷன் இல்லீகலாக இருக்கிறதென்று சொல்லி, அதற்கு லைசென்ஸ் மறுக்கலாம். அதைப் போல உங்களுடைய அப்ளிகேஷன் எப்படிப் போயிற்றோ தெரியவில்லை. உங்கள் நிதி நிலை அதற்கு இடம் கொடுத்ததா, அல்லது மத்திய அரசினுடைய நிதிநிலைக்கு ஏற்றவாறு நீங்கள் திட்டம் போட்டு அனுப்பினீர்களா என்ற விவரம் இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தபால் போய்ச் சேர்ந்ததோ, இல்லையோ என்று சொல்லவில்லை.

**திரு. என். சுந்தரேசத் தேவர்:** இந்த மாதிரியான விஷயங்களில் மத்திய அரசாங்கத்தின் மேலேயே ஒரு சாக்காகப் போடுகிறீர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எதைக் கேட்டாலும் மத்திய அரசாங்கத்தின் மேலேயே .......

[1973 நவம்பர் 23

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின்மீது புது உறவு ஏற்பட்டு, மத்திய அரசாங்கத்தைக் காப்பாற்ற திரு. தேவர் அவர்கள் முயற்சிக்கத் தேவையில்லை.

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, புதிய உறவுக்காக நான் பேசவில்லை. பொதுவாக இன்றைக்கு நாட்டிலே மின்சாரத்தின் தேவை மிகவும் அவசியமாக இருக்கிறது. எனவே அதில் இவ்வளவு கவனக் குறைவாக இருக்கிறீர்களே என்றுதான் உங்களிடம் சொல்கிறேனே தவிர, புது உறவை வளர்ப்பதற்காகவல்ல. மேலும் உற்பத்தி இவ்வளவு குறைவாக இருக்கிற நிலையில், எப்போதும் நெருக்கடி இருக்கும் நிலையில், வினியோகத்தில் ஏன இவ்வளவு ஆடம்பரம் பண்ணிக்கொண்டு, எங்கு பார்த்தாலும் கம்பிகளை இழுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். நமது நாட்டிலே விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம்; தொழில்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம்; அத்தியாவசியப் பொருள்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். இதை நாம் பல ஆண்டுகளாக வலியுறுத்தி, அவற்றை முந்தைய அரசுகளும் செய்தன; நீங்களும் பல காரியங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இன்று நடைமுறையைப் பார்க்கும்போது, எங்கேயாவது விளக்குப் போட வேண்டுமென்று சொன்னால், பல மைல்கள் மின்சாரக் கம்பிகளை இழுத்துக்கொண்டு போகிறீர்கள். அங்கே எல்லா ஆட்களையும் திரட்டிக் கொண்டு போய், அதற்கு ஒரு அமைச்சர் சென்று திறப்பு விழா செய்யும் போது, இந்த நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி வேலைகள் நடைபெறுகின்றன.

அது மட்டுமல்ல. தஞ்சையிலே இராஜ ராஜ சோழன் விழாவைப் பார்த்தேன். தஞ்சை நகரமே மின்சாரத்தினால் தீப் பற்றி எரிவதுபோல் இருந்தது. அது நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இருப்பதற்கான அறிகுறியாக இல்லை. உணவுப் பற்றாக்குறை இருக்கிறதென்றால், 7½ அவுன்ஸ்தான் சாப்பிட வேண்டுமென்று சொன்னால், அதைக் கடைப்பிடிக்கிறோம். அரிசி இல்லை கோதுமைதான் சாப்பிட வேண்டுமென்று சொன்னபோது, அதையும் நாம் கட்டுப்படுத்திச் சாப்பிட்டோம். அதைப் போன்று இன்று மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறதென்றால், என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நீங்கள் திர்ணயம் செய்ய வேண்டும். அப்படி திர்ணயம் செய்யாமல் காரியங்கள் செய்வதால், குறைவான மின்சாரம் ஓடினாலும்கூட, இந்த ஆடம்பரத்தை மக்கள் பார்க்கும் போது, மின்சாரப் பற்றாக்குறை இல்லைபோல்


அறிக்கை 1972–73 ஆம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை
ஆகியவற்றின் மீது விவாதம்



இருக்கிறதென்று நினைக்கிறார்கள், இது சரியான முறையல்ல. இதனால் என்ன நடக்கிறதென்றால், விவசாயம் பாதிக்கப்படுகிறது; தொழில் வளங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு கட்சிக்காரனென்ற முறையில் சொல்லவில்லை. உடனடியாக இந்த மின்சார வாரியத்தைக் கலைக்க வேண்டும். இதற்கு வேண்டிய 'ரீசன்ஸ்' இருக்கின்றன. ஏனென்று சொன்னால், மின்சாரம் நாட்டினுடைய .....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, வாரியத்தைக் கலைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு என்ன செய்வது?

திரு. என். சுந்தரேசத் தேவர்: தலைவரவர்களே, வினியோகத்தில் எந்த அளவுக்குத் தவறுகள் நிறைந்திருக்கின்றன என்பதை ஒவ்வொன்றாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். வினியோகத்தை எடுத்துக்கொண்டால், கம்பிகளில் 230 வாட்ஸ் கரன்ட் வர வேண்டும். ஆனால் 150 அல்லது 160 வாட்ஸ் கரன்ட்தான் வருகிறது. இதை அறியாத விவசாயிகள், பம்புசெட்டைப் போட்டுவைத்து, ஆடமேடிக் ஸ்டார்டரையும் போட்டுவைக்கிறார்கள். எனவே மோட்டார் எரிந்து விடுகிறது. இப்போது ஊருக்கு ஊர் 'ரீ-ஒயன்டிங்' பண்ணுகிறவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் லைன்மென்களையெல்லாம் தாஜா பண்ணி வைத்துக்கொள்கிறார்கள். லைனில் வருவதோ 160 வாட்ஸ் கரன்ட் தான். அப்பொழுது லைன் மென் போய் கேரியரைப் பிடுங்கிவிட்டால், அந்த வட்டாரம் பூராவும் ப்யூஸ் போய்விடுகிறது. மோட்டார் எரிந்துவிடுகிறது. அப்படிப்பட்ட ஒரு நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

நம்முடைய மதிப்பிற்குரிய சுதந்திராக் கட்சித் தலைவர் திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மையான விஷயமாகும். ஒரு மீட்டரில் சென்ற மாதம் முடிவடைந்த நம்பரை மீட்டர் கார்டில் போடுவது வழக்கம். சென்ற மாதம் முடிவடைந்தது 2,500 என்றால் அதைப் போடுவார்கள். இந்த மாதத்தில் முடிவு, 2550 என்றால் இந்த மாதத்தில் 50 யூனிட்கள் என்று போடுவது வழக்கம். இப்போது அப்படிப் போடுவது கிடையாது. யூனிட் நம்பரே போடுவது கிடையாது. குத்து மதிப்பாகப் போடுகிறார்கள். ஒரு மாதத்திற்கு 50 ரூபாய் வாங்குகிறார்கள்; அடுத்த மாதம் 250 ரூபாய் வாங்குகிறார்கள். இதை யாரும் கேட்க முடியாத நிலைமை இருக்கிறது. இவர்கள் சேதாரம் 18 விழுக்காடு என்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய திரு. சா. கணேசன் அவர்கள் 18 விழுக்காடு என்பது அநியாயம், அதிலே திருட்டு இருக்கிறதென்று சொன்னார்கள். உண்மையிலேயே சரியான முறையில் வினியோகம் நடைபெறாமல் போவதால், சேதாரம் 35-லிருந்து 40 விழுக்காடு

[திரு. என். சுந்தரேசத் தேவர்] [1973 நவம்பர் 23

[illegible]ரையிருக்கிறதென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதை நான் இந்தச் சபையில் சவால் விட்டுச் சொல்கிறேன். அவ்வளவு தவறுகள் ஏற்படுகின்றன. தெரு விளக்கெல்லாம் எரியாமலேயே பணம் வாங்குகிறார்கள். இதைப்பற்றி பஞ்சாயத்துக்களெல்லாம் பல ஆண்டுகளாகக் கூறி வருகின்றன. இதைப் பற்றி இந்தச் சபையில் கூறும் போது, அமைச்சரவர்கள் சென்ற ஆண்டு, 'அடுத்த மாதமே எல்லா ஊரிலும் மீட்டர் பொருத்தி விடுவோம்; மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்த மாதிரிப் பேச வாய்ப்பு ஏற்படாது' என்று சொன்னார்கள். மீட்டர் பொருத்தப்படுமென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றுவரை அது பொருத்தப்பட்டதா என்றால் இல்லை. அந்த எரியாத விளக்குகளுக்கு வாங்கும் கட்டணமும், எரியாத மின்சாரத்தின் சேமிப்பும் இருக்கிறதா என்றால், ஒன்றும் தெரியவில்லை. அவையெல்லாம் எந்தக் கணக்கில் போய் முடிகிறதென்றும் தெரியவில்லை. 250 வாட்ஸ் ஓட வேண்டிய லைன்களில் 150 வாட்ஸ்தான் ஓடுகிறது. அந்தச் சேமிப்பு எங்கே போகிறதென்று தெரியவில்லை. இதையெல்லாம் வைத்துப் பார்த்தால், மின்சார வினியோகத்தில் ஏற்படும் சேதாரம் 40 சதவிகிதம் இருக்குமென்று கூறலாம். இவையெல்லாம் மின்சார வாரியத்தின் திறமையற்ற போக்கால் ஏற்படுகிறதென்று சுட்டிக் காட்ட நான் ஆசைப்படுகிறேன். இது ஒரு அவசியமான சர்வீஸ். மருத்துவ சர்வீஸ் போல, உணவு . . .

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, சேதாரம் 45 சதவிகிதம் என்று சொல்வது தவறு. உற்பத்தி எவ்வளவு என்ற கணக்கு நம்மிடத்தில் இருக்கிறது. கன்சம்ஷன் பர்டிகுலர்சும் இருக்கிறது. இரண்டையும் பார்த்தால் எவ்வளவு இருக்கிறது இடையில் என்பது தெரிந்துவிடும். ஆதாரம் இருந்தால், சேதாரம் 40, 45 சதவிகிதம் என்று சொல்லலாம். எனவே மொத்தமாகச் சொல்வது சரியல்ல.

திரு. என். சுந்தரேசத் தேவர்: சேஷசாயி கம்பெனி இருக்கிறது. நமது மாநிலத்தில் பிரைவேட் கம்பெனிகள் இருக்கின்றன. அவர்கள் மீட்டர் நம்பர் போடாமல், கட்டணம் வசூல் செய்தால், அது கிரிமினல் குற்றம். கோர்ட்டில் போட்டு தண்டனை கொடுக்கலாம். ஆனால் அரசாங்கமே மீட்டர் நம்பர் போடாமல் வசூலிக்கும்போது, உங்கள் மீது கேஸ் போட முடிகிறதா? அப்படிப் போட முடியுமென்றால், வாரியத்தின் மீதும், அரசாங்கத்தின் மீதும் ஆயிரக் கணக்கான கேஸ்கள் போட முடியும். சர்க்கார் என்ற பெயரில், வாரியம் என்ற பெயரில் பண்ணுகிற அநியாயம் தாங்க முடியவில்லை. பெரிய மோசடியாக இருக்கிறது. சர்க்கார் நடத்துகிறதென்றால், ஒரு நம்பிக்கை.



1973 நவம்பர் 23] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

சர்க்கார் அலுவலர்கள் பில் கொடுத்தால், சாதாரண நிலையில் உள்ள கிராம மக்கள் அது நியாயமாக இருக்கும், சட்டப்படி இருக்கும் என்று கொடுக்கிறார்கள். ஒரு மாதம் 50 ரூபாய், அடுத்த மாதம் 250 ரூபாய் என்று பில் போட்டால், அந்த கிராம விவசாயி அவர்களிடம் சென்று முறையிடுகிறான். அதற்கு அவர்கள்; "அப்படித்தான் ஐயா இருக்கும்; போன மாதம் குறைத்து ஓட்டி இருப்பாய்; இந்த மாதம் கூட ஓட்டி இருப்பாய்" என்று சொல்லுகிறார்கள். எங்கு பார்த்தாலும் இந்த மாதிரியான நிலைமைகள் இருக்கின்றன. மின்சார வாரியம் பூராவும் ஊழல் மயமாக இருக்கின்றது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

அது மட்டுமல்லாமல் தெரு விளக்கு விஷயம் பெரிய மோசடி. தெரு விளக்கு எரிகிறதென்றால், பஞ்சாயத்து போர்டுத் தலைவர்கள் அதற்கு உண்டான தொகையைச் செலுத்தும் முறை முன்னடி இருந்தது. இப்போது ஒரு கிராமத்தில் 50 லைட்கள் இருக்கிறதென்றால், 250 ரூபாய் கட்ட வேண்டும். இதை மின்சார வாரியத்திற்கு கமிஷனரே கொடுக்கலாமென்று இருக்கிறது. அந்த 250 ரூபாயைக் கொடுக்க பஞ்சாயத்து போர்டின் அனுமதி தேவையில்லை. விளக்குகள் எரியாமலேயே எத்தனை லட்சம் வாங்குகிறீர்கள்; எத்தனை கோடி வாங்குகிறீர்கள்? ஒரு ஆண்டுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்திற்குமான கணக்கை எடுங்கள், இல்லையென்றால் பகிரங்கமாக 'டிக்ளேர்' பண்ணுங்கள். மின்சார வாரியத்தில் என்ன தவறு ஏற்பட்டாலும், அதன் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்; கோர்ட்டில் நீங்கள் தாவா பண்ணலாம் என்று 'டிக்ளேர்' பண்ணுங்கள். எவ்வளவு கேஸ்கள் வருகிறதென்று பார்ப்போம். பஞ்சாயத்துக்களில் ஒரு விளக்குக்கூட எரிவது கிடையாது. அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. பலாத்காரமாகப் பணத்தை வாங்கிக்கொள்கிறார்கள் . . .

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, நடைமுறைகளையெல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் வகுத்துக்கொள்ளலாம். சட்டத்திலே ஓட்டை வரும்போது, தவறு ஏற்படும்போது அதைக் கண்டிப்பதற்கு வழி முறைகள் வைத்திருக்கிறோம். விளக்கு எரியவில்லை என்றால், ஊராட்சித் தலைவரோ அல்லது உறுப்பினரோ அதிகாரிகளுக்கு எழுதிக் கொடுக்க வேண்டும். அப்படி எழுதிக் கொடுத்த தேதியிலிருந்து, போடுகின்ற தேதிவரை எவ்வளவு நாட்கள் இருக்கின்றதோ, அதைக் கேல்குலேட் பண்ணி, குறைக்க விதி முறைகள் இருக்கின்றன. சில இடங்களில் தவறு இருக்கிறதென்றால், அதைத் திருத்தலாம்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** தலைவரவர்களே, இதை நான் மாத்திரம் சொல்லவில்லை. மேலவையிலும், பேரவையிலும் எல்லோரும் சொல்கிறார்கள். ஊராட்சி சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அத்தனை பேரும்– ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும்—75 சதவிகிதம் விளக்குகள் எரியாமலேயே பணம் வாங்கப்படுகிறதென்று சொல்கிறார்கள். உங்கள் கட்சிக்காரர்களிடமே இது உண்மையா என்று கேட்டுப் பாருங்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** ஆதாரத்தைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** ஏதோ சில இடங்களில் எரியாமல் இருக்கலாம். எல்லாமே எரிகிறதென்று சொல்லவில்லை. உங்களுடைய கடமையைச் செய்து, எரியவில்லையென்று எழுதிக் கொடுத்து, இடையில் இருக்கிற நாட்களுக்குப் பணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறதா? நீங்கள் தூங்கிவிட்டால் அதற்கு நாங்கள் பொறுப்பல்ல. நீங்கள் உங்கள் கடமையைச் செய்து, விளக்குகள் இவ்வளவு நாட்கள் எரியவில்லை என்று சொன்ன பிறகு, கழித்திருக்கிறார்களா, இல்லையா?

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** அமைச்சரவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன். என்னுடைய பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திலே ஆணையாளருக்கு பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலே கட்டளையிட்டிருக்கிறது, மின்சார வாரியத்திலிருந்து வரக்கூடிய பில்லுக்கு பணம் கொடுக்கக்கூடாது என்று. உடனடியாகக் கொடுக்கவில்லையென்றால் அதன் மீது கலெக்டர் அவர்கள் ஆணையாளரை சஸ்பென்ட் செய்ய முடியும் என்று . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பணத்தைக் கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டால், அவர் கேட்க மாட்டார். அமைச்சர் குறிப்பிட்ட ஊராட்சி மன்றத்தில் எத்தனை விளக்குகள் எரியவில்லை, எரியாத போது எரியவில்லை என்று தகவல் தெரிவிக்கப்பட்டதா, அப்படித் தெரிவிக்கப்
பி.ப. 6-00 பட்டும் பில் போட்டார்களா என்று தான் கேட்டார்கள். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** நாங்கள் பல கூட்டங்கள் போட்டுப் பேசிப் பார்த்தோம். அப்புறம் டி.டி.சி. யில் புகார் சொன்னோம். கலெக்டர் கான்பரன்ஸ் போட்டு கூப்பிட்டு வைத்துப் பேசினார். அதனாலேயும் விமோசனமில்லை. அதற்குப் பிறகு ஒரு கார்டு சிஸ்டம் வைத்தோம். அத்தனை கார்டையும் லைன்மேன் பிரசிடண்டிடம் வாங்க வேண்டுமென்று சட்டம் வைத்தோம். கார்டையே வாங்குவதில்லை. ஒன்றா இரண்டா அதைப் பற்றிச் சொல்ல.



வருடக் கணக்கில் பேசுகிறேன். வருடக் கணக்கிலே லைட் எரியவில்லை. ஆனால் பணம் வாங்குகிறார்கள். நண்பர் திரு. வெங்கா அவர்கள் இந்த சபையில் இருக்கிறார்கள். அவருக்கும் தெரியும். இதை நான் ஒரு கட்சிக்காரன் என்ற கண்ணோட்டத்தில் சொல்லவில்லை. நீங்கள் இந்தமாதிரி எண்ணுவதால்தான் இம்மாதிரிப் பேசுகிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** அதிலே சிக்கல் என்ன? நடைமுறையில் எப்படி இருக்கிறது? ஊராட்சி மன்றங்கள் என்று சொன்னார்கள். ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தகவல் தெரிவித்தார்களா என்று கேட்கிறேன்.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** போன ஆண்டு, இந்த ஆண்டு டி.டி.சி. யில் எழுதிக் கொடுத்தோம். சீப் இன்ஜினியர், மின்சார வாரியத் தலைவர் அவர்களைக் கூப்பிட்டுச் சென்று ஊர் ஊராகப் போய்ப் பார்த்தும் என்ன பிரயோசனம்? உண்மையாகச் சொல்கிறேன். சேதுமகாசமுத்திரம் வட்டாரத்திலே சென்ற ஆண்டு மின்சார வாரியத் தலைவர் திரு. ரங்கபாஷ்யம் அவர்கள்கூட வந்திருந்தார்கள். ஒரு தெரு விளக்குக் கம்பம் நடு ரோட்டில் நடப்பட்ட காரணத்தால் பல வண்டிகள், கார்கள் சேதப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த நாள் வரையிலும் அந்த மின்சாரக் கம்பம் அகற்றப்படவில்லை. அரசாங்கமும், பஞ்சாயத்து மன்றமும் ஏற்பாடு செய்து எவ்வளவோ கஷ்டப்பட்டு ரோடு போடுகிறது. ஊழலே இல்லையென்று சொல்வார்கள். உண்மையில் உங்கள் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் இருக்கிறார்களா என்று எனக்குத் தெரியாது. உங்கள் மின்சாரத் தொழிலாளர்கள் செய்து வருகிறார்கள். அவர்கள் உங்களுக்கு போரபத்தையும் கெட்ட பெயரையும் சம்பாதித்துக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறேன். இதெல்லாம் எதிர்க்கட்சியிலுள்ள நான் தான் சொல்ல முடியும். திரு. வெங்கா இதையெல்லாம் சொல்வாரா? நான்தான் சொல்ல முடியும். அதனாலே என்மேல் ஆத்திரப்பட்டுப் பிரயோசனம் ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, உங்கள் மீட்டர்கள் மூலம் எவ்வளவு கூடுதலாக வசூல் பண்ணுகிறீர்கள்? நம் வீட்டு மீட்டரிலேயே 10, 50 யூனிட் வித்தியாசம் வருகிறது. விவசாயத்திலே இருக்கக்கூடிய நிலைமையைப் பார்த்தால் மிக மோசமாக இருக்கிறது. இந்த மீட்டரும் சரியாக இருப்பதில்லை. சரியாகப் பில்லும் போடுவதில்லை. எல்லா பல்புகளும் மோசமான பல்புகள். ப்யூஸ் போன பல்புகளைப் போடுகிறார்கள். நாம்கூட ப்யூஸ்போன பல்புகளை உலுக்கி இணைக்கம்பிகளை ஒட்டவைத்து இரண்டு நாட்களுக்கு எரியவைக்கலாம். அதைக்

கொண்டுவந்து மாட்டிவிட்டுப் போய்விடுகிறார்கள். திரு. சா. கணேசன் அவர்கள் சொன்னதுபோல், ஒரு டியூப் எரியவில்லையென்றால், இன்னொரு டியூப் லைட்டில் உள்ளதை மாற்றிக் கொண்டுவந்து போடுகிறார்கள். ஒரு நாள் எரிகிறது. அந்த லைட் எரியவில்லையென்று சொன்னோமானால், 'எழுதிப் போடுங்கள்' என்று சொல்லுகிறார்கள். மூன்று முறை டியூப்கள் மாட்டப்பட்டு எரியவில்லை. இம் மாதிரியான குறைகள் ரொம்ப எக்கச்சக்கமாக இருக்கின்றன.

அது மட்டுமல்ல. என் வீட்டிலே இருக்கின்ற விஷயத்தை நான் சொல்கின்றேன். வீட்டிலே ஃபேன் கொசு வருவதைத் தடுப்பதற்காகப் போட்டிருக்கின்றேன். அந்த ஃபேன் ஓடுகிறதா என்றால் அதுவும் இல்லை. எக்சிக்யூடிவ் என்ஜினியர் அவர்களிடமே கம்பிளெயின்ட் பண்ணி ஒரு நாள் அழைத்துவந்து பார்த்தேன். அங்கே இருக்கின்ற மீட்டரை வைத்து அதில் எவ்வளவு மீட்டர் ஓடுகிறது என்று பார்த்தால், 160 வோல்டேஜ் வருகிறது. இதையெல்லாம் சாதாரண விவசாயி எப்படித் தெரிந்துகொள்ள முடியும்? இந்த மாதிரி நிலைகள் எல்லாம் இருக்கின்றன. என் பட்டுக்கோட்டை வட்டாரத்திலே என்னுடைய பகுதி கடைமொடைநிலையில். அங்கு தண்ணீரே வராது. அப்போது இறைவை பம்பு வைத்துத்தான் நாற்று விடுகிறோம். கார்த்திகை ஐப்பசியில் தண்ணீர் வந்துவிடும். இப்போது என்ன என்று கேட்டால், அதிராம்பட்டணத்திற்குப் பக்கத்திலே 3 மைல் தூரத்திலிருந்து கனெக்ஷன் கொடுத்திருந்தார்கள், நன்றாக இருந்தது. அதில் 180–190 வோல்ட் வந்தது. இப்போது அந்த அதிராம் பட்டணத்தில் இருக்கின்ற காலேஜில் உள்ளவர்கள், அதைச் சேர்ந்தவர்கள் கம்ப்ளைண்ட் பண்ணுகிறார்கள் என்ற காரணத்திற்காக ஆலத்தூரில், 35 மைலுக்கு அப்பால் இருக்கின்ற ஒரு டிரான்ஸ்பார்மரிலிருந்து கனெக்ஷன் கொடுக்கின்றார்கள். இஷ்டப்பட்டால் எது வேண்டுமானாலும் செய்யலாமா. நீங்கள் எங்களை வைத்துத்தானே மின்சார வாரியம் நடத்த முடிகிறது. நாங்கள் கொடுக்கின்ற காசை நீங்கள் வாங்கவில்லையா? நாங்கள் உபயதாரராக இல்லையா? மக்களிடம் காசு வாங்கி, வரி வாங்கி அதைக் கொண்டு நடத்தப்படக்கூடியதாக மின்சார வாரியம் இருக்கின்றது. வியாபாரத் தன்மையிலே இல்லை. சர்க்காராக இருப்பதால் மக்களுக்காக எது வேண்டுமானாலும் செய்யலாமா? இந்த நிலைமையை நீடிக்கிறதா? நான் ரொம்ப வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களும் அரசாங்கமும் இந்த நிலையை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.



அடுத்தபடியாக, கிராமங்களுக்கு மின்சார வெட்டு என்று சொன்னார்கள். மின்சார வெட்டு கிராமங்களுக்குத்தான். அங்கெல்லாம் மின்சாரம் பகலிலே கொடுத்தால் இரவிலே கிடையாது. இரவிலே கொடுத்தால் பகலிலே கிடையாது. காலையிலே கொடுத்தால், சாயந்திரம் கிடையாது. சாயந்திரம் கொடுத்தால் காலையிலே கிடையாது. இது கிராமப் பகுதிகள் பூராவிலும் இருக்கின்றது. நகரப் பஞ்சாயத்துகளிலும், முனிசிபாலிட்டிகளிலும் எங்கும் ஜகஜ்ஜோதியாக எந்த நேரத்திலும் இருப்பதைப் பார்க்கலாம். நகரங்கள் வாழக்கூடிய நிலையை இந்த ஆட்சியிலேதான் பார்க்கிறோம். எதற்காக இந்த ஓரவஞ்சனை? கிராமங்கள் அழியக்கூடிய நிலையை நாம் இந்த ஆட்சியிலேதான் பார்க்கிறோம். 15 பர்சண்ட் மின்சார வெட்டு என்று சொல்லும்போது, எப்போதும் மின்சாரம் கிராமங்களுக்கு ரெடியாக இருக்க வேண்டியதுதானே. இந்தக் குறைபாடுகளை உடனடியாக நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, பஞ்சாயத்து போர்டிலே . . .

(குறுக்கீடு)

நான் சொல்வதெல்லாம் மிக முக்கியமான காரியங்கள். நான் சீக்கிரமாக முடித்துக்கொள்கின்றேன். பஞ்சாயத்துப் போர்டுகளில் தெரு விளக்குகள் எல்லாம் அரசாங்கத்தின் தெரு விளக்குகளாகத்தான் பொருத்திக்கொள்ள வேண்டுமென்று சட்டம் போட்டார்கள். முன்பெல்லாம், தெரு விளக்குகளைப் பொருத்துவது பஞ்சாயத்து போர்டு. அவைகளை மெயின்டெய்ன் பண்ணுவது கம்பெனி. அவர்கள் வசூல் மாத்திரம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இந்த லைட்டுக்கு வாடகை, அந்த பிட்டிங்குக்கு வாடகை, எரிவதற்கு மாதாந்திரத்திற்கு ஒரு பிக்ஸட் ரேட், அதாவது டியூப் லைட் போட்டு 5 ரூபாய் என்று இருந்தது. பஞ்சாயத்து போர்டிலே கம்பெனியிலிருந்து வாங்கிய டியூப் லைட்டுகள் 10, 15 வருடங்கள் முன்பு வாங்கியவை, பழமையானவை, எல்லாம் கன்டெம் செய்யப்பட்டவைகள். இவைகளை 'ஹாண்ட் ஓவர்' பண்ணும்போது, இது உங்கள் சாமான்கள், எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. திருப்பிக் கொடுக்கவும் இல்லை. உங்கள் வாரியத்திலே எடுத்துக் கொண்ட டியூப் லைட்டுக்களை, ஸ்ட்ரீட் லைட்டுகளை திருப்பிக் கொடுத்தீர்களா? திருப்பிக் கொடுத்துவிடுவதுதான் உலக மரபு. அந்த விளக்குகள் எல்லாம் இன்றைக்குப் போகுமோ நாளைக்குப் போகுமோ என்ற அளவில் இருப்பவை, அதையே போட்டு ஓட்டுகின்றார்கள். வாடகை வாங்கிக்கொள்கின்றார்கள். அதற்கு என்று சார்ஜ் வாங்கிக்கொள்கின்றார்கள். அவைகளை மாற்றி புதிய விளக்குகளாகப் போடக்கூடாதா? இதையெல்லாம் ரொம்பக் கண்டிப்பாகப் பார்க்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் விசாரணைக் கமிஷன் வைத்துப்

பண்ணுவதில், குறைகள் இருந்தாலும் கூட, எனக்கு அதிலே ஒரு திருப்தி. இந்த மாதிரியான குறைகளை சபையிலே அங்கத்தினர்கள் சொல்லும்போது 'நோட்' பண்ணி வைத்துக்கொள்ளுங்கள். சபையிலேயே எழுதி வைத்துக் கொள்ளுங்கள். எழுதி வைத்துக்கொண்டு இந்த மாதிரியெல்லாம் கம்ப்ளேன்ட் வருகிறதே, ஏன் என்று அதிகாரிகளைக் கேளுங்கள். அப்படியெல்லாம் இருந்தால், நான் அரசைப் பாராட்டிப் பெருமையாகக்கூடப் பேசுவேன். அதிலே ஒன்றும் சந்தேகப்பட வேண்டியதில்லை.

ஹரிஜனங்களுக்கு என்ற பெயரிலே கொடுக்கின்றார்கள். மின்சாரம் தொழில்களுக்கும், விவசாயத்திற்கும் ரொம்ப அவசியம். ஹரிஜனங்கள் இருக்கின்ற தெருவிற்கு, இரண்டு மூன்று வீடுகள் இருந்தால்கூட விளக்குப் போட வேண்டியது அவசியம் என்று ஒரு பெரிய பாடாகப்படுத்தி ஏற்பாடு செய்கின்றீர்கள். இப்படியெல்லாம் பண்ணுகிறீர்கள். தொழில்களுக்கும் விவசாயத்திற்கும் இந்த நெருக்கடியான நேரத்தில் முதலிடம் கொடுங்கள். தெரு விளக்குகள் போடுவதில் இவ்வளவு அவசரம் காட்டக்கூடாது என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் :** ஹரிஜனங்களுக்குச் செய்யக்கூடாது என்று சொல்ல வேண்டாம். கிராமங்களுக்கு என்று பொதுவாகச் சொல்லுங்கள். தனியாகப் பிரித்து ஹரிஜனங்களுக்கு என்று சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கிராமங்களுக்குத் தெரு விளக்குப் போடுவதை இவ்வளவு தீவிரமாகக் கண்டிப்பது சரியல்ல. பொதுவாக தெரு விளக்குப் போடுங்கள் என்று சொல்லட்டும். ஆனால் ஹரிஜனங்களுக்கு மட்டும் போடுகிறோம் என்று சொல்ல வேண்டாம். அதைத் திருத்திக்கொள்வார்கள் என்றுதான் சொல்கின்றேன். ஒரு வேளை அதுதான் அவர்கள் கட்சியினுடைய கொள்கை என்று சொன்னால், அதை நான் ஒத்துக் கொள்கின்றேன். அதற்குத் தயாராக இருக்கின்றேன். ஹரிஜனங்களைத் தனியாகக் குறிப்பிடுவது சரியல்ல.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** என் மேலேயே அப்படிக் குறை சொல்ல வேண்டாம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** திருத்திக்கொள்ளுங்கள் என்றுதான் நான் சொல்கின்றேன். பொதுவாக, கிராமங்களுக்குத் தெரு விளக்குப் போடுவது பற்றிச் சொல்லுங்கள்.



**திரு. என். சுந்தரேசத் தேவர் :** கிராமங்கள் என்று ஏன் சொல்கிறேன். கிராமங்களில் இரண்டே வீடுகள் இருந்தாலும்கூட, ஹரிஜனங்களுக்கு என்பதற்காக 10 மைல் தூரமாகயிருந்தாலும் கனெக்ஷன் எடுக்கின்றீர்கள் என்றுதான் சொல்கின்றேன்.

கடைசியாக, இந்த மின்சார வாரியத்தில் பணி செய்கின்றவர்கள் அவ்வளவு திருப்திகரமாக வேலை செய்யவில்லை என்று பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அரசாங்கத்திற்குக் குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். நான் ஒரு இன்சிடெண்டை, ஒரு பெரிய அபாயகரமான நிகழ்ச்சியைப் பற்றிக் கூறி என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். பி.ப. –106
என் ஊருக்குப் பக்கத்தில் மரவக்காடு என்று ஒரு கிராமம் இருக்கின்றது. அந்த கிராமத்தினுடைய ஸ்டிரீட் லைட்டினுடைய மின் இணைப்புக் கம்பி துண்டிக்கப்பட்டு நடு ரோட்டில் கிடந்தது. அந்தக் கிராமத்திலுள்ளவர்கள் என்னிடம் வந்து இதுபற்றி அதிராம்பட்டணத்தில் உள்ள ஜே.இ. யிடம் (ஜூனியர் எஞ்சினீயரிடம்) சொல்லுங்கள், அபாயம் ஏற்படக்கூடிய நிலையில் அது இருக்கின்றது என்று சொன்னார்கள். நானும் உடனடியாக அவரிடம் இதுபற்றிச் சொன்னேன். அவர் சொன்னார், 'ஆள் இல்லை, பிறகுதான் பார்க்க வேண்டும்' என்று. நான் அதனால் ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறிப்பிட்டு, 'ஆள் இல்லை என்றால், நீங்களாவது வந்து ஏதாவது செய்ய வேண்டும், ஃப்யூஸ் கேரியரையாவது எடுத்து விடுங்கள், ஏதாவது செய்யுங்கள்' என்று சொன்னேன். எவ்வளவு சொல்லியும் மூன்று நாள் கழித்து வந்துதான் அந்தக் கம்பியை மறுபடி இணைத்தார்கள்.

***மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அதைப்பற்றி இவ்வளவு சொல்லுகின்றார். ஆனால் உரிய காலத்தில் அதுபற்றி ஒரு 'கம்ப்ளெய்ண்ட்' எழுதி அனுப்பியிருந்தால், இப்படி தவறு செய்யும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்துக்கொள்ள உதவியாக இருந்திருக்கும். அவ்வப்பொழுது இவைபற்றி எழுதத் தவறி விடுவதன் காரணமாகத்தான் இப்படி தவறு செய்யும் அதிகாரிகளுக்கும் தைரியம் வருகின்றது.

**திரு. என். சுந்தரேசத் தேவர் :** ஏற்றுக்கொள்ளுகிறேன். அதற்கான கம்ப்ளெயிண்ட் செய்து, பிறகு அந்த ஜே.ஈ. யும் மாற்றப்பட்டுவிட்டார்கள். கம்ப்ளெயிண்ட் செய்வது, அதன்பேரிலே நடவடிக்கை எடுப்பது என்பது இப்போது பிரச்சினை இல்லை. ஒரு மிகப் பெரிய வாரியத்தில் இப்படி நடக்கின்றது. ஒரு அதிகாரியிடம் சொல்லியும்கூட மூன்று நாட்களுக்கு கம்பி

அதுவும் மின்சாரம் பாய்ந்துகொண்டுள்ள கம்பி ரோட்டில் அறுந்து தொங்கிக் கொண்டிருக்கின்றது, சொன்னாலும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதில்லையென்றால், அவர்களுக்கு பயம் இருக்கின்றதா என்றுதான் நான் கேட்கிறேன். பின்னால் அவர்கள் பேரிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதோ அல்லது வேறு இடத்திற்கு மாற்றிவிடுவதோ அதெல்லாம் வேறு காரியம். அந்தக் கம்பியில் ஒரு எருமைக் கன்றுக்குட்டி தீண்டி செத்து விட்டது. (சிரிப்பு) ஸார், இதை விளையாட்டாக எடுத்துக்கொள்ளாதீர்கள். இதையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன். அமைச்சர் அவர்கள் தயவுசெய்து என் பேரிலே வருத்தப்பட வேண்டாம். என் சுபாவம் இப்படிப் பேசுவது. இருக்கும் குறைகளைத்தான் எடுத்துச் சொன்னேன். கட்சி ரீதியில் எதையும் நான் சொல்லவில்லை. இதிலுள்ள குறைகளை நிவர்த்தி பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, நமது மின்சார வாரியத்தின் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் பேரிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏற்கெனவே இந்த விவாதத்தின்போது விறுவிறுப்பான கருத்துக்கள் அதிகமாகவே சொல்லப்பட்டு விட்டதால் நான் அப்படிப்பட்ட இடத்தை விட்டுவிட்டு ஆக்கபூர்வமாக என்னென்ன யோசனைகளைச் சொல்ல வேண்டுமோ அவற்றைச் சொல்லி, அதிலே அரசாங்கம் சற்று கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

முதலில் என்னுடைய ஒரு சின்ன அனுபவத்தை மட்டும் சொல்லிவிட்டு பிறகு விஷயத்திற்கு வரலாம் என்று நினைக்கிறேன். சில உற்பத்தித் தொழிற் சாலைகளிலே மின்சாரம் எவ்வளவு உபயோகித்திருக்கின்றார்கள் என்று பார்த்து, அதற்குத் தகுந்த அளவிற்கு அவர்கள் பொருள்களை உற்பத்தி செய்திருப்பார் கள் என்று கணக்கிட்டு அதன் பேரிலே ஸேல்ஸ் டேக்ஸ் அதிகாரிகள் விற்பனை வரியை விதிப்பதுண்டு. அப்படிப்பட்ட விற்பனை வரிக் கணக்கிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு சில இடங்களில் இந்த மின்சார வாரிய ஊழியர்களுடைய ஒத்தாசையுடன் மெயினிலிருந்து மீட்டர் வழியாக வராமல் நேரடியாகவே மின்சாரத்தை இணைத்துக்கொண்டு பொருள் களை உற்பத்தி செய்கின்றார்கள் என்று (சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. இப்படிச் செய்வதால் எவ்வளவு பொருள்களை, அவர்கள் உற்பத்தி செய்தார்கள் என்று விற்பனை வரி அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியாது. இப்படி நடை பெறுகிறதையெல்லாம் தடுத்து, நிறுத்தி, இப்படிப்பட்ட காரியங்களுக்கு



உடந்தையாக இருக்கும் ஊழியர்கள் பேரிலே, அதிகாரிகள் பேரிலே தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் இதைக் குறிப்பிட்டேன் என்றால், உற்பத்தியாகும் மின் சக்தியில் 18 சதவிகிதம் 'வேஸ்ட்' ஆகி விடுகின்றது என்று சொல்லுகின்றார்கள். அதில் இப்படித் திருடு போவதும் சேருகிறது என்பதற்கு ஒரு உதாரணமாகச் சொல்லுகிறேன்.

எப்படி உடலுக்கு உயிர் முக்கியமோ அது போல மனிதனுடைய வாழ்விற்கு மின் சக்தியானது உணவிற்கு அடுத்தபடியாக முக்கியமாக இருக்கிறது. அதிலும் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு அது ரொம்பவும் முக்கியமாக இருக்கிறது. மின்சாரம் இல்லையென்றால், என்ன பண்ணுவது என்ற நிலைக்கு வந்துவிட்டோம் இப்போது. தமிழ் நாட்டிலே தொழிலபிவிருத்தியும் விவசாயமும் மிக அதிகமாகப் பெருகிக் கொண்டு வருகின்றது. இரண்டு வாரங்களுக்கு முன்னால் விருதுநகரில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் அங்குள்ள வியாபார சங்கத்தில் பேசும்போது குறிப்பிட்டார்கள், இந்திய உப கண்டத்திலே பதினொரு லட்சம் விவசாய பம்புசெட்டுகள் இருக்கின்றன. என்றால், அவற்றில் மூன்றரை லட்சம் தமிழ் நாட்டிலேயே ஓடுகின்றன என்று. அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் அப்போது அங்கே இருந்தார்கள். அவ்வளவு மின்சார பம்புசெட்டுகள் கிராமப்புறங்களிலே இப்போது ஓடுகின்றன. இப்படி விவசாயத்திற்கும் தொழில்களுக்கும் நாளுக்கு நாள் மின்சாரம் அதிகமாகத் தேவைப்படுகின்றது. நமது மாநிலத்திலே உள்ள அவ்வளவு நீர் நிலையங்களிலும் எந்த அளவிற்கு மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவிற்கும் செய்துவிட்டோம். இன்னும் ஒகேனகல் திட்டம் ஒன்றுதான் பாக்கியாக இருக்கிறது. அந்தத் திட்டத்தைப் பூர்த்தி செய்தால் அதிலே நமக்கு ஒரு ஆயிரம் மெகாவாட் கிடைக்கும் என்று சொல்லுகின்றார்கள். எனவே, மைசூர் மாநில அரசாங்கத்தோடு இது விஷயத்திலே ஒரு ஒப்பந்தத்திற்கு வந்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், நமக்கு வேண்டிய மின் சக்தி கிடைக்கும். எனவே இதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த ஒகனேகல் திட்டத்தை முடித்துவிட்டால், பிறகு எல்லாம் சிறு சிறு திட்டங்கள்தான் இருக்கின்றன. பத்து மெகாவாட்ஸ், இருபது மெகாவாட்ஸ் என்று அந்த அளவில் உற்பத்தி செய்யக்கூடிய திட்டங்கள்தான் மிச்சமாக இருக்கின்றன. அடுத்து வரும் ஐந்தாண்டுக் காலத்தில், இப்போதுள்ள மின்சார உற்பத்தியை அதிகரிக்கவில்லை என்றால், பல தொந்தரவுகள் ஏற்படக் கூடும். எனவே, இப்போதுள்ள நீர் மின்சாரத் திட்டங்களோடு நின்றுவிடாமல்

மேலும் பல அனல் மின்சார நிலையங்களையும் அணு மின்சக்தி நிலையங்களையும் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக ஏற்படுத்த முடியுமோ அந்த அளவிற்கு ஏற்படுத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், இப்போது வந்த மின்சார வெட்டை அனுபவித்த பிறகு பின் மின்சாரம் இல்லையென்றால் பொருளாதாரம் எவ்வளவு சீர்கெட்டுவிடுகிறது, உற்பத்தி எவ்வளவு குறைந்துவிடுகின்றது, விலைகள் எந்த அளவிற்கு ஏறிவிடுகின்றன என்பதைப் பார்த்தோம். எனவே, இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, விவசாயத்திற்கு இப்போது மின்சாரம் தருகின்றார்கள். ஆனால் நேரத்தில் கொடுப்பதில்லை. 15 சதவிகிதம் வெட்டு என்று சொல்லி, ஒரு நாளைக்கு காலை 6 மணி முதல் 12 மணி வரையில், ஒரு நாளைக்கு பகல் 12 மணியிலிருந்து மாலை 6 மணி வரையில், இன்னொரு நாள் ராத்திரி 12 மணியிலிருந்து காலை 6 மணி வரையில் என்றெல்லாம் கொடுக்கின்றார்கள். இப்படிக் கொடுத்தால், தோட்ட விவசாயம் செய்கின்றவர்கள் என்ன செய்ய முடியும்? ராத்திரி வேளையில் எப்படித் தண்ணீர் பாய்ச்சுவது, எப்படி பாத்தி கட்ட முடியும்? ஆகவே விவசாயத்திற்கு பம்புசெட்டு வைத்திருப்பவர்களுக்கு 'கட்' இல்லாமல் பகல் முழுவதும் கொடுத்து ராத்திரி முழுவதும் நிறுத்திவிடுங்கள். இதிலும் வேளாண்மைக்கு வேண்டுமானால் ராத்திரி வேளையில் கொடுக்கலாம், ஆனால் தோட்டப் பயிர் வைப்பவர்களுக்கு பகலில் கொடுத்தால்தான் முடியும். இதைக் கவனிக்க வேண்டும்.

அடுத்து, தெரு விளக்குபற்றிச் சொன்னார்கள். நான் டி.டி.ஸி. மீட்டிங்கில் கூட இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். என் கிராமத்திலேகூட தெரு விளக்கே எரிவதில்லை. ஆனால் இருக்கும் விளக்குகள் எவ்வளவு என்று கணக்குப் போட்டு அவ்வளவுக்கும் 50 லைட் என்றால், ரூ. 150 என்று கணக்குப் போட்டு வாங்கிவிடுகின்றார்கள். நான் சொல்லுவது, ஒவ்வொரு கிராமத்திற்கும் தெரு விளக்குகள் மொத்தத்திற்குமாக ஒரு மீட்டர் போட்டுவிடுங்கள். எவ்வளவு மின்சாரம் செலவாயிற்று என்று கணக்குப் பார்த்து சார்ஜ் பண்ணிக்கொள்ளட்டும். அடுத்து, பல கிராமங்களிலே தெரு விளக்குகளே எரிவதில்லை என்று அடிக்கடி கம்ப்ளெயிண்ட் வருகின்றது. இந்தக் குறைகளையெல்லாம் கட்டாயம் நிவர்த்தி செய்ய வேண்டும்.

மேலும் கிராமங்களிலே உள்ளவர்கள் லைன்மேன்களைக் கண்டுபிடிப்பது ரொம்பவும் கஷ்டமாக இருக்கின்றது. அதுவும் 'கட்' என்று வந்துவிட்டால், கிராம மக்கள் அவர்களுடைய தயவில்தான் வாழ வேண்டியிருக்கின்றது.



பொதுவாக மின்சார வாரியம் நன்றாக இயங்கவில்லை என்று பரவலாகச் சொன்னாலும், பொதுவாக எவ்வளவோ முன்னேற்றமான காரியங்களைச் செய்துதான் இருக்கின்றார்கள். ஆனாலும் சில சிறு குறைகள் இருக்கின்றன. ஊழல்கள் இருப்பதாகவும் பரவலாகப் பேசப்படுகின்றது. இதையெல்லாம் அமைச்சர் அவர்கள் கவனித்து வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொண்டு மற்ற உறுப்பினர்கள் சொன்ன குறைகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

பி.ப
திரு. எஸ். சி. செங்கோட்டு வேலப்ப கவுண்டர்: மாண்புமிகு தலைவரவர் 6-20
களே, 1972-73 ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மின்சார வினியோகம் பற்றி எனக்கு முன்பு பேசிய பல நண்பர்களும் குறிப்பிட்டார்கள். விவசாயத்தைப் பொறுத்த வரையிலே, நம்முடைய அமைச்சரவர்கள் 6 லட்சத்திற்கு அதிகமான பம்பு செட்டுகள் இருப்பதாகக் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அப்படி விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்ட பம்புசெட்டுகளில் எத்தனை பம்புசெட்டுகள் சரிவர இயங்காமல் இருக்கின்றன. எத்தனை பம்புசெட்டுகள் போதிய மின்சார மின்றி இருக்கின்றன, அதனால் விவசாயிகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் முதலில் யோசித்துப் பார்க்கட்டும். ஏனென்றால், எனக்கு முன்பு பேசிய நண்பர்கள் குறிப்பிட்ட மாதிரி, இன்று நாட்டிலே தங்களுடைய காரியங்களைச் சுயமாக சாதித்துக்கொள்ள முடியாதவர்கள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் விவசாயிகள் தான். விவசாயிகள் எந்த சர்க்கார் அலுவலகத்திற்கும் சென்று தங்களுடைய சுய தேவையை, நியாயமான கோரிக்கைகளைப் பூர்த்திசெய்துகொள்ள முடியாத நிலைமையில் இருக்கின்றனர். அந்த மாதிரி விவசாயிகளுக்கு இந்த மின்சார வாரியத்தில் ஏற்படுகிற ஒரு சில தொல்லைகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயத்திற்காக கிணறுகளுக்கு மோட்டார் பொருத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அவைகளில் பெரும்பாலானவைகளுக்கு மீட்டர் பொருத்தப்படுவதில்லை. முதல் மாதம் 25 ரூபாய் அல்லது 30 ரூபாய் என்று வைத்துக்கொண்டால், மாதாமாதம் அந்தத் தொகையை வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். மழை பெய்திருக்கலாம், நல்ல நீர்ப்பாசனப் பிரதேசங்களாக இருக்கலாம், வாய்க்காலில் தண்ணீர் இருக்கலாம், மோட்டார் ஓடாமல் இருந்திருக்கலாம். மீட்டர் இல்லாத காரணத்தினாலே, எந்தத் தொகை போடப்பட்டிருக்கிறதோ அந்தத் தொகையை வசூலிக்கிறார்கள். இந்த நிலைமை எங்கள் பகுதியில் நீடித்துக்கொண்டு வருகிறது. இந்த நிலை அகற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

தெரு விளக்கைப்பற்றி நண்பர்கள் நல்ல முறையில் குறிப்பிட்டார்கள். மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் அந்த மாதிரி இருந்தால் எரியாத விளக்குகளுக்கு வசூலித்திருக்கமாட்டார்கள் என்று சொன்னார்கள். அமைச்சரவர்கள் இதைப் பற்றி சரிவர ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். காரணம், பஞ்சாயத்துத் தலைவர்களாகட்டும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாகட்டும், இதைப்பற்றிப் பேசாத இடமே கிடையாது. என்னைப் பொறுத்த வரையிலே சொல்ல வேண்டுமானால், எங்கள் பகுதியிலே கிட்டத்தட்ட ஒரு வருஷத்தில் 6 மாதம் தெரு விளக்குகள் எரிவதில்லை. பஞ்சாயத்தைக் கேட்டால், ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்க பணம் சரியாகப் போய்விடுகிறது என்கிறார்கள். மாதம் ரூ. 1,500 கட்டக்கூடிய பஞ்சாயத்திற்கு இந்த நிலை என்றால், சாதாரண பஞ்சாயத்தின் நிலை எவ்வாறு இருக்கும் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். மின்சார வாரியத்தைப்பற்றி, வினியோகத்தைப்பற்றிப் பல தடவை அனைவருமே எடுத்துச் சொல்லி அக்குறைகளுக்கு நிவர்த்தி தேட வேண்டுமென்று கேட்டு வந்திருக்கிறோம். எந்த மாதிரி விமோசனம் ஏற்பட்டது என்று தெரியவில்லை. விமோசனம் செய்திருக்கிறார்களா என்று கூடத் தெரியவில்லை. அரிஜன் குடியிருப்பைப் பற்றிச் சொன்னார்கள். அவர்களுக்கு தெரு விளக்கு கொடுக்க வேண்டியது அவசியம் என்று ஒப்புக்கொள்கிறோம். செய்கிற காரியம் சிறப்பாகச் செய்யப்படவேண்டும். அந்தக் காரியம் தொடர்ந்து நீடித்து, நல்ல பெயரோடு நிலைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு செயல்பட வேண்டும். விளக்குகள் போடுகிறார்கள், கம்பம் நடுகிறார்கள், ஆனால் அந்த விளக்கு பொருத்தி அது எத்தனை மாதம் சரியாக எரிகிறது, மக்கள் திருப்தியடைந்தார்களா என்று பார்க்கவேண்டும். செய்கிற காரியம் மக்களுக்கு உபயோகமாக, திருப்தியாக இருக்கவேண்டும். ஒரு படி மேலே சொல்வதானால், குறிப்பாக எங்கள் பகுதியைப்பற்றி இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஈரோட்டிலே சூப்பரிண்டெண்டிங் என்ஜினீயர் ஆபீஸ் இருக்கிறது. நாங்களெல்லாம் ஈரோட்டிலே இருப்பவர்கள். அந்த அலுவலகத்தில் கோரிக்கைகளுக்காகச் சென்று பார்க்க வேண்டுமானால் மிகவும் கஷ்டம். அங்கு போகும் போதெல்லாம் யூனியன்களைச் சேர்ந்த தலைவர்கள், காரியதரிசிகள் சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர் ஆபீசில் இருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்களே அதிகாரிகளைப் பார்க்க முடியவில்லை, பல தடவை பார்க்காமல் திரும்பி வந்திருக்கிறோம் என்று சொன்னால், சாதாரணமாக ஒரு விவசாயி கிராமப் பகுதியிலிருந்து வருகிறவர் அவர்களைப் பார்க்க முடியுமா என்று அமைச்சரவர்கள் யோசிக்க வேண்டும். சர்க்கார் அலுவலகம் என்பது மக்கள் குறைகளைச் சொல்வதற்கு நிவர்த்தி தேடிக்கொள்வதற்கு இருக்கிறது. மின்சார இலாகாவைப் பொறுத்த வரை, கணக்கர்கள் சங்கம், 



ஓயர்மென்கள் சங்கம், ஹெல்ப்பர்கள் சங்கம் இப்படி பல சங்கங்கள் இருக்கின்றன. நான் லேபர் யூனியன்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. அவசியம் வேண்டியது தான். அதற்காக, இந்த லேபர் யூனியன்களோடு அவர்கள் விவாதிப்பதற்கும், மற்றும் தங்கள் துணை அதிகாரிகளை வைத்து கூட்டம் கூட்டுவதற்கும் நேரம் சரியாக இருக்கிறது, வேறு வேலை செய்ய முடியவில்லை. இந்த மாதிரி நிலைமை இருக்கிறது. பல தடவை சிக்கலான சிரமங்களைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் கூட, அவர்களைச் சந்திக்க முடிவதில்லை. 10 தடவை போனால் ஒரு தடவை சந்திக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. இதை இன்னும் கூட விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மாநகராட்சியிலே மின்சார இலாகாவிலே தவறு நடந்தது. முதலமைச்சர் அவர்கள் மாநகராட்சியைக் கலைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை வரவேற்கிறோம். கலைக்கப்படும் என்று அறிவித்ததை வரவேற்கிறோம். தமிழ் நாட்டிலே பல பெரிய இலாகாக்களின் நிர்வாகங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. குறிப்பிடத்தக்க ஒரு அம்சம் இவ்வளவு பெரிய தவறு இந்த மாநகராட்சி மின்சார இலாகாவிலே நடந்திருக்கிறது. யார் பொறுப்பு என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். இந்த மாநகராட்சி கலைக்கப்பட்டது மட்டும் போதாது. இதே நிலை எல்லாப் பகுதியிலும் இருக்கிறது. மின்சார இலாகாவைப் பொறுத்த வரையில், தினக்கூலியை வைத்துக்கொண்டு வேலை செய்வது அதிகம். எங்கள் பகுதியில் கேட்டால், ஒரு வாரம் வேலை கொடுத்தார்கள், இன்னொரு வாரம் வேலை இல்லை என்று சொல்லக்கூடிய பல நண்பர்கள் இருக்கிறார்கள். ஒரு மாதம் வேலை இருக்கும், அப்புறம் இருக்காது, புதிதாக லைன் போட்டால் வேலை கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. இன்றையதினம் வேலையில்லாக் கஷ்டம் இருக்கிறது. இவர்களை நிரந்தரமாக ஒரு சூப்பிரண்டெண்டிங் என்ஜினீயர் அலுவலகத்திலோ அல்லது டிவிஷனல் என்ஜினீயர் அலுவலகத்திலோ வேலைக்கு வைத்துக் கொள்ளலாம்.

மாநகராட்சி மின்சார இலாகாவைப் பொறுத்தவரை, கையாடல் செய்தவர்களை, அதற்குக் காரணமாக இருந்தவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று சொல்வது பொருத்தமாகும். மின்சார இலாகாவில் தவறு நடந்திருக்கிறதென்று சொன்னால், அது ஒரு நாளில் அல்லது 20 நாளில் நடக்கக் கூடிய செயல் அல்ல, நீண்ட காலம் அவர்கள் இதிலே ஈடுபட்டிருக்க வேண்டும். மேலே உள்ளவர்களுக்கு கீழே உள்ளவர்களைக் கணக்குக் கேட்பதற்கு உரிமை இருந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இதில் யார் தவறு செய்தார்கள் என்பதை அமைச்சரவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். கோடிக்கணக்கான ரூபாய்கள் மோசடி என்று பத்திரிகையில் பார்க்

கிறோம். இங்கே கூட எல்லோரும் சொல்கிறோம். இதை ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்தில் செய்துவிடக் கூடிய காரியம் என்று சொல்ல முடியாது. நீண்ட நாட்களாக இந்தத் துறை கவனிக்கப்படாமல் இருந்திருக்க வேண்டும். இந்த மாதிரியான தவறால் அரசுக்கு மட்டும் கெட்ட பெயர் அல்ல, தமிழ் நாட்டிற்கே கெட்ட பெயர் என்று சொல்லித் தீரவேண்டியது அவசியமாகிறது. இந்த மாதிரியான நிலை ஏற்படும் அளவிற்கு நிர்வாக இயந்திரம் போய்விடக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று விவசாயத்தைப் பொறுத்தவரை, புதிதாக மின் இணைப்பு கொடுக்கப்பட்டு வருகிறது என்று சொல்கிறார்கள். ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தைப் பொறுத்த வரையிலே, பம்புசெட்டு போட்ட பிறகு 6 மாதமானாலும் கூட கனெக்ஷன் கிடைப்பதில்லை. இதைப் பற்றி கிராம விவசாயிகள் கொடுத்த மகஜரை அமைச்சரவர்களிடத்தில் கொடுத்தேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகளை விசாரித்தால் டிரான்ஸ்பார்மர் கிடைக்கவில்லையென்று சொல்கிறார்கள். தொழில்களுக்குப் புதிதாக மின் இணைப்புகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் விவசாயிகளிடத்தில் பாரபட்சம் காட்டப் படுவது நியாயமா என்று கேட்கிறேன். இந்த மாதிரியான காரியங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டியது அமைச்சரவர்களின் பொறுப்பு என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றொன்று, கூட்டுறவுத் துறையிலே விசைத் தறிகள் புகுத்தப்பட வேண்டுமென்பது அரசின் கொள்கை. எல்லா சங்கங்களுக்கும் பவர்லூம் கொடுத்திருக்கிறார்கள். பவர்லூமுக்காக அரசு கடன் கொடுத்திருக்கிறது. அதே சந்தர்ப்பத்தில் மின்சார இணைப்பு கொடுக்கப்படுவதில்லை. மின்சார இலாகாவிலே மேல்மட்டத்திலே உள்ளவர்களிடம் கேட்டால், அரசாங்கத்தின் பாலிசி கொடுக்கக்கூடாது என்கிறார்கள். அரசு உத்தரவு வந்த பிறகு தான், கொடுக்கப் படும் என்கிறார்கள். ஒரு பக்கம் விசைத் தறி புகுத்தப்பட வேண்டுமென்று பணம் கடன் கொடுப்பது, இன்னொரு பக்கம் மின் இணைப்பு கொடுக்கக் கூடாது என்று இந்த நிலைமை இருக்கிறது. இந்த மாதிரி நிலை இருப்பது சரியல்ல. ஒரு இலாகாவிற்கும் இன்னொரு இலாகாவிற்கும் உள்ள தொடர்பு சரியானதாக இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு பணம் கொடுத்த பின்பு, தறிகளையெல்லாம் வாங்கிப் பொருத்தி, 6 மாதம் 3 மாதம் சும்மா வைத்துக் கொண்டு பிறகு ஆயில் என்ஜின் வாங்கி ஓட்டி பிறகு, மின்சாரம் கொடுத்த பிறகு, ஆயில் என்ஜினை விற்றால், சங்கங்களுக்கு அதிக நஷ்டம் ஏற்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மற்றொன்றையும் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன்.





கல்வி ஸ்தாபனங்களைப் பொறுத்தவரையிலே, வீட்டிற்கு ஆகும் மின்சாரத்திற்கு யூனிட்டிற்கு எவ்வளவு தொகை என்று வசூலிக்கிறார்களோ அதையே கல்வி ஸ்தாபனங்களுக்கும் வசூலிக்கிறார்கள். என் சொந்த அனுபவத்திலிருந்து
சொல்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளை விட கல்லூரிகளிலே அதிகப்படியான 6-30
மின்சாரம் தேவைப்படுவதால், கட்டணம் மாதம் ஒன்றுக்கு 400 ரூபாய், 500 ரூபாய் என்ற அளவிலே வந்து விடுகிறது. கல்விக்கு முதலிடம் கொடுக்கப் பட வேண்டுமென்பது அரசின் கொள்கை என்று அமைச்சர்கள் எல்லோரும் சொல்கிறார்கள். இதை வரவேற்கிறோம். இதிலே வீட்டிற்கு என்ன கட்டணத்தை வசூலிக்கிறார்களோ அதே கட்டணத்தை கல்வி ஸ்தாபனங்களுக்கும் வசூலிக்கிறார்கள். ஒரு சில கல்வி நிலையங்கள் இதை ஏற்று சரியாக ஒழுங்காகச் செலுத்த முடியாத நிலையில், சிரம திசையில் இருக்கின்றன. இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மின் வாரியத்தைப் பொறுத்த வரையில், மின்சார இலாகாவைப் பொறுத்தவரையில், அங்குள்ள ஊழியர்கள் சுயமாகச் செயல்பட வேண்டும், அரசியல் தலையீடு இருக்கக் கூடாது. கீழே உள்ளவர்கள், ஒரு ஹெல்பர் அல்லது லைன்மேன், யாராகட்டும், மேலேயுள்ள அதிகாரிகள் போடக் கூடிய உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும். சில இடங்களில் பார்த்தால், இந்த நிலை இல்லை. இந்த இலாகாவில் இது வேகமாக வளர்ந்து வருகிறது. இதைத் தீர்க்க வேண்டுமென்றால், அமைச்சர் அவர்கள்தான் தலையிட வேண்டும். சூப்பிரெண்டெண்டிங் இன்ஜினியர், டிவிஷனல் இன்ஜினியர் போடும் உத்தரவுகளை கீழே உள்ளவர்கள் மதிக்கின்ற நிலைமை தமிழ் நாட்டில் நிச்சயமாக இல்லை. கீழே உள்ளவர்கள் சொல்வதுதான் கிராமங்களில் சட்டம். மின்சார வெட்டு என்று சொன்னால், கிராமங்களில் இந்தச் சிப்பந்திகளே யாருக்கும் தெரிவிக்காமல் பியூஸை எடுத்துக் கொண்டு போய்விடுவார்கள். மேலே உள்ளவர்களிடம் சொன்னால், அவர்களால் கண்டிக்க முடியாமல் போய் தங்களுக்குள்ளேயே மனக்குறையைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் அரசியல் உறவு அதிகமாக இருக்கிறது. அது வெளிப்படையாகவே சொல்லப்படுகிறது. கோடிக்கணக்கான ரூபாயைச் செலவு செய்கின்ற அரசாங்கம் நிர்வாகத்தைச் சீர்படுத்துவதோடு பல்ப், சோக், ஸ்டார்ட்டர் போன்றவற்றை வெளியிலிருந்து ஏன் வாங்க வேண்டும்? இவ்வளவு பெரிய துறை இந்தப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது? அரசே அவற்றை உற்பத்தி செய்ய முன்வந்தால், வெளியாரிடமிருந்து வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. அரசாங்கமே உற்பத்தி செய்து அந்தந்த இடங்களுக்கு அனுப்பி வைத்து, இந்தப் பொருள்கள் சரியாக இல்லை, நல்ல முறையில் கிடைக்கவில்லை என்ற குறையைப் போக்கவேண்டும். மின்சாரம் மனிதனுடைய வாழ்க்கையில் இன்றி

யமையாத உணவு, உடை போன்று அடிப்படையான அளவுக்கு, தேவைப்படுகிறது. மின்சாரத்தை உபயோகிக்கின்றவர்கள் மேலும் அதிகமாகி வருகின்ற இந்தக் காலத்தில் இந்த இலாகா திறம்படச் செயல்பட வேண்டும், அரசியல் குறுக்கீடு இல்லாமல் செயல்பட வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டு, இந்த அளவுக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. வெங்கா :** மாண்புமிகு தலைவரவர்களே, இன்றையதினம் இந்தச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள. 1973-74 ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையின் மீதும், 1972-73 ஆம் ஆண்டின் துணை நிதி நிலை அறிக்கையின் மீதும் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து எனது கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு பல துறைகளை நிர்வகித்து வந்தபோதிலும், இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்களில் ஒருவனாகிய நான் பல துறைகளைக் குறித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்தில் இந்த மின்சாரத் துறை மட்டும்தான் நாங்கள் சொல்லக்கூடிய ஆலோசனைகள் சாத்தியமாகக் கூடியவைதானா அல்லது செயல்படுத்த இயலாது என்று ஒரு குறிப்பினை ஆண்டுதோறும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கு அளித்து வருகிறார்கள். இதே நிலைமை வேறு துறைகளில் ஏற்படுமேயானால், சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன். எங்கள் ஆலோசனைகளுக்குப் பதில் கொடுக்கின்ற இந்தத் துறையினைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் மின்சாரமானது மனித வாழ்க்கையில் மிக மிக அவசியமானது என்பதை மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கூட இங்கே மிக நல்ல முறையில் எடுத்துச் சொன்னார்கள். நாம் திட்டங்களைத் தீட்டுவதற்கு முன்பாக, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் மனிதன் சராசரியாக 12 யூனிட்டுகள் உபயோகித்து வந்து இன்றையதினம் ஏறக்குறைய 133 யூனிட்டுகள் உபயோகிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கருத்தில் கொண்டு பார்ப்போமேயானால், மின்சாரமானது மனித வாழ்க்கையில் எப்படி எல்லாம் புகுந்திருக்கிறது, எப்படியெல்லாம் தேவைப்படுகிறது என்பதையெல்லாம் எண்ண முடிகிறது. இன்றையதினம் இந்த அரசு ஏற்பட்டதற்குப் பிறகு கிராமப்புறங்களில் மின்சாரம் கிடைத்தாக வேண்டும் என்ற ஒரு நல்ல திட்டத்தைத் தீட்டி நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அந்தத் துறையைத் திறமைப்படுத்தி அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதிலே இருபது வருஷமாக ஆட்சிப் பொறுப்பு நம்மிடம் இருந்தும், ஏறக்குறைய 22,000 கிராமங்களுக்கு மட்டும்தான் மின்சாரம் நாம் வினியோகம் செய்திருக்



கிறோம்; ஆனால் இந்த ஆறு, ஏழு ஆண்டுக் காலத்தில், ஏறக்குறைய கழக அரசு ஏற்பட்ட பிறகு, 60,000 கிராமங்களுக்கு மின் வினியோகம் செய்து விட்டார்களே என்ற பொறாமையின் காரணமாகத்தான் எங்கு பார்த்தாலும் லைன் இழுக்கிறார்கள், எப்படி, என்று இந்த மன்றத்தில் கேள்வி எழுப்பப்படுகிறதே தவிர, லைன்கள் அதிகமாகி அனைத்து கிராமங்களுக்கும் மின்சாரம் நாம் வழங்கியது சாலச் சிறந்தது, நியாயமான செயல் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுக்கொள்கிறேன். அவர்கள் உற்பத்தியானது அதிகமில்லை, உற்பத்தியில்லாமல் வினியோகத்தை அதிகமாக்கிக் கொண்டே சென்றால், எப்படிப் பொருத்தமாகவிருக்கும் என்ற வாதத்தை எழுப்புகிறார்கள். இது எப்படி இருக்கிறது என்றால், பத்து பேர் ஆண்டவன் கிருபையால் நான்கு வேளையும் சாப்பிட்டுக் கொண்டிருப்பார்கள், அவர்கள் தலையெழுத்து அப்படி. மற்றவர்கள் ஒரு வேளைக்குக்கூட இல்லாமல் பட்டினியாக இருப்பார்கள் என்று பழங்காலத்தில் சொல்லிக்கொண்டிருந்தார்களே, அது போல், எனக்கு முன்பே மின் இணைப்பு கிடைத்துவிட்டது, அனுபவித்துக் கொண்டே இருப்பேன், கவலையில்லை, ஆனால் மேற்கொண்டு இணைப்புகள் கொடுக்கக்கூடாது என்று சொல்லும் வாதமாக இருக்கிறது. கழக அரசைக் குறை கூற வேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் இதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அனைத்துக் கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டுமென்று பாடுபட்டு வருகின்ற கழக அரசின் கீழ் இயங்கும் மின்வாரியத்தையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் வேளாண்மைத் துறையில் பசுமைப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கு மிக மிக முக்கியமான காரணம் கழக அரசு தீட்டிய திட்டங்களைச் செயல்படுத்தியதுதான் என்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். ஒரு போக நிலங்களை இரு போக நிலங்களாக மாற்ற வேண்டும், இரண்டு போக நிலங்களை மூன்று போக நிலங்களாக மாற்ற வேண்டும் என்று திட்டமிட்டு வேலை செய்திருக்கிறது. ஆகவே அதற்காக பூமிக்கு அடியில் இருக்கின்ற நீரை மின் இணைப்பு மூலம் பம்ப்செட்டுகளை இயங்க வைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்தது. 1966-ஆம் ஆண்டு மார்ச் வரையில் இரண்டு லட்சத்தி ஐம்பத்தி ஆறாயிரம் பம்ப்செட்டுகள்தான் இருந்தன. கழக அரசு ஏற்பட்ட பிறகு, இன்றையதினம், சுமார் ஆறு, ஏழு ஆண்டுகளில் 6½ லட்சம் பம்ப்செட்டுகள் என்ற அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய 4 லட்சம் பம்ப்செட்டுகள் இந்த ஏழு ஆண்டுகளில் கழக அரசானது மின்சாரத்தின் மூலம் இயங்க இணைப்புகள் கொடுத்து விவசாயத்தைப் பெருக்கியிருக்கிறது. அதற்காக இந்தத் துறையைச் சார்ந்தவர்களை உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்த மன்றத்தில் ஒரு பொய்யான தகவலை வைத்துக் கொண்டு, தவறான தகவல்களை வைத்துக்கொண்டு சில உறுப்பினர்கள் பேசினார்கள். அதாவது உற்பத்தியே இல்லை, வினியோகம் மட்டும் செய்கின்றார்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 1966-ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் பார்க்கின்ற நேரத்தில் உற்பத்தி 1,370 மெகாவாட்டாகவிருந்தது, 1973 மார்ச்சில் 2,130 மெகாவாட்டாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆக இந்த ஆறு, ஏழு ஆண்டுகளில் 800 மெகாவாட் மின் உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. என்னென்ன சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்று ஆராய்ந்து அவற்றையெல்லாம் பயன்படுத்தி, மத்திய அரசு அனுமதி பெற்று 800 மெகாவாட் மின் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள் என்றால், அது சிறந்த சாதனை என்பதை உணர வேண்டும். இதற்கு முன்பு இந்த நடவடிக்கை எடுக்கப்படவில்லையே என்பதையும் பார்க்க வேண்டும். அப்பொழுதும் தெர்மல் ரிசோர்ஸஸ் இருந்தன. நீர் நிலையங்களும் இருந்தன. அவற்றை வைத்துக் கொண்டு திட்டம் போட்டார்களா? கழக அரசு நல்ல முறையில் திட்டமிட்டு 800 மெகாவாட் மின் உற்பத்தியை அதிகரித்திருக்கிறது என்றால், சாலச் சிறந்த சாதனைதான். அதற்காக அந்த இலாகா அதிகாரிகளை மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மின் வினியோக நிறுவனங்கள் குறைந்த தொகைக்கு மின்சாரத்தைப் பெற்று அதிகத் தொகைக்கு விற்று பெருத்த லாபம் பெற்றார்கள் என்பதற்காகவும், கிராமங்களுக்கு மின் இணைப்பு திட்டத்தை செயல்படுத்த மறுக்கிறார்கள் என்ற காரணத்திற்காகவும், சோஷலிச சமுதாயத்தை மின் வினியோகத்திலும் உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட இந்த அரசு ஏறக்குறைய 9 நிறுவனங்களைக் கையகப்படுத்தியது ஒரு சாதனை என்பதைச் சுட்டிக்காட்டி, அதற்காகவும் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சில உறுப்பினர்கள், பல ஊர்களுக்கு சாமான்கள் சரியாக வந்து சேராததால் விளக்குகள் எரியவில்லை என்றும் இன்னும் பலவிதமான குறைகள் ஏற்படுவதாகவும் சொன்னார்கள். அவற்றை அரசு கவனிக்காமலிருந்துவிடவில்லை. ஒரு தலைமைப் பொறியாளர் இருந்த இடத்தில், தனித் தனியாகப் பிரித்து, அவரவர்களுக்குத் தனியாக ஒரு துறை, வினியோகத்திற்கு ஒருவர், உற்பத்திக்கு ஒருவர், பொருள்கள் வாங்குவதற்கு ஒருவர், நிர்வாகத்திற்கு ஒருவர் என்று ஐந்து பிரிவுகளாகப் பிரித்து நிர்வாகம் செம்மைப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐந்து தலைமைப் பொறியாளர்களை நியமித்திருக்கிறார்கள். இங்கே இப்பொழுது சொல்லப்பட்ட ஒரு சில குறைபாடுகளும் அடுத்த ஆண்டில் நிச்சயமாக நிவர்த்தி செய்யப்படும் என்று நம்புகிறேன். அதோடு



மட்டுமல்லாமல், இந்த மின்சார வாரியமானது நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு மிக நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்வேன். இந்த வாரியத்தில் ஏறக்குறைய 30,000 பேர் தினக்கூலிகளாகப் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களைக்கூட நம்முடைய தொழிற்சங்கத் தலைவர் திரு. காட்டூர் கோபால் அவர்கள் நிரந்தரமாக்க வேண்டுமென்ற யோசனையை அரசுக்கு அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறார். நம்முடைய அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்கள் தனது உரையில் தேவைக்கு ஏற்ப எடுத்துக் கொள்கிறோம் என்ற அளவுக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். தேவைக்கு ஏற்ப என்பதை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், அனைவருமே எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், கடந்த ஆண்டு 75 சதவிகிதம் பி.ப. 6-40
நம்முடைய நாட்டிலே மின்சாரப் பற்றாக்குறை இருந்தது. அது அனைவரும் அறிந்ததுதான். அனைவரும் அது இயற்கையின் காரணத்தால் ஏற்பட்டது என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால் இருக்கக் கூடியதை நல்ல முறையிலே எப்படி வினியோகிப்பது என்று திட்டமிட்டு நம்முடைய வாரியமானது செயல்பட்டது. நம்முடைய அமைச்சர்களும் அண்டை மாநிலங்களுக்கும், வெளிமாநிலங்களுக்கும், கேரள மாநிலத்திற்கும், கர்நாடக மாநிலத்திற்கும் மகாராஷ்டிர மாநிலத்திற்கும் சென்று அவற்றிலிருந்து மின்சாரத்தை எந்த அளவுக்கு அதிகமாகப் பெற முடியுமோ அந்த அளவுக்குப் பெற்றிருக்கின்றார்கள். அதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பண்ட மாற்றுமுறையின் மூலமாக அதைப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நாள்தோறும் வாதங்கள் செய்து, எந்த அளவுக்கு அதிகம் பெற முடியுமோ அந்த அளவுக்கு பெற்றிருக்கிற காரணத்தால், அவர்களை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கழக அரசு ஏற்படுவதற்கு முன்பு ஒரு பழக்கம் இருந்தது. நான் ஒரு கிராமத்தில் வசிக்கிறேன். சிதாபுரம் கிராமம் என்று சொன்னால் அந்தக் கிராமத்திலே நான்கு பேர் பெரிய வீட்டுக்காரர்கள் இருப்பார்கள். ஒரு அரிஜனக் காலனி ஒரு புறத்திலே இருக்கும். தெருவிலே விளக்கு இருக்கும். ஆனால் அரிஜனக் காலனியிலே விளக்கு இருக்காது. பணம் கொடுத்தவர்களுக்குத்தான் லைன் இழுத்து விளக்குப் போடுவார்கள். அந்த நிலையைப் போக்க கழக அரசு இருக்கிற காரணத்தால், அதற்காக அரசாங்கத்திலே தனி

யாகத் திட்டம்போட்டு, முதலாவது அரிஜனக் காலனிக்குக் கொடுக்க வேண்டும், பிறகுதான் ஊருக்குக் கொடுக்க வேண்டும் என்று கலைஞர் அவர்கள் தலைமையிலே இயங்கக்கூடிய அரசானது செயல்படுத்தியிருக்கிறது. இந்த மனத் துணிச்சலைப் பெற்றதற்காக கலைஞர் அவர்களையும், அவரோடு சேர்ந்து பணியாற்றுகின்ற அமைச்சர்களையும், அந்த இலாகாவினரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே 24,000 அரிஜனக் குடியிருப்புகளுக்கு அவர்கள் மின் இணைப்பைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 800 அரிஜனக் குடியிருப்புகளுக்குத்தான் மின்சாரம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்று சுட்டிக் காட்டினார்கள். அதையும்கூட 1974-க்கு உள்ளாக முடித்துவிடுவோம் என்ற உறுதியையும் கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவுக்கு வேகமாகச் செயல்படக்கூடிய அமைச்சர் அவர்களுக்கு நான் உள்ளபடியே என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கேகூட எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் அடிக்கடி என்னுடைய பெயரைப் பயன்படுத்தி அவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்திருக்கின்ற காரணத்தால் அவர்கள் அதிகமாகச் சொல்ல முடியாது என்று சொன்னார்கள். நான் ஆளுங் கட்சியைச் சேர்ந்த உறுப்பினராக இருந்தபோதிலும், அவர்கள் எப்படி மனதில் பட்டதை தைரியமாகச் சொல்கிறேன் என்று சொன்னார்களோ, அதே போல் நாங்களும் கட்சி வேறுபாடின்றி ஒப்புக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே சொன்னாலும், இந்தச் சட்ட சபையிலே சொன்னாலும், எந்த விளக்கானது எரியவில்லை என்று எழுத்துமூலமாகப் புகார் செய்தாலும் அது மறுபடியும் குறைக்கப்படாமல் பில் வருகிறது என்று சொல்லப்பட்டது. அதைப்பற்றி அங்கேயெல்லாம் சொல்ல வேண்டியதில்லை. ஒரு 10 பைசா கார்டிலே இந்தக் கிராமத்திலே இத்தனை விளக்குகள், தெரு விளக்குகள் இந்தத் தேதியிலேயிருந்து எரியவில்லை என்று அக்கவுண்டிங் ஆபீசரிடத்திலே அனுப்பினால்தான் குறைப்பார்கள். அதை விட்டுவிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே போன ஆண்டும் சொன்னேன், இந்த ஆண்டும் சொல்கிறேன், அடுத்த ஆண்டும் சொல்கிறேன் என்றால், இதே வேலையைத்தான் செய்யவேண்டுமே தவிர, யார் செய்ய வேண்டுமோ அவர்களுக்கு எழுதியிருந்தால் நிச்சயமாகக் குறைத்திருப்பார்கள். என்னுடைய பகுதியிலே நான் எழுதி அதே மாதிரிக் குறைத்த அனுபவம் எனக்கு இருக்கிறது. இந்த 75 சதவிகிதம் மின்சார வெட்டு இருந்தபோது, என்னுடைய கிராமத்திலே ஊராட்சியின் தலைவன் என்ற முறையிலே சொல்கிறேன் காலையிலே 4 மணிக்குக் கொடுப்பார்கள், 8 மணி வரையிலே எரியும். ஆகையினாலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், முன் நேரத்திலே கொடுங்கள், மாலை 6 மணி முதல் 10 மணிவரை கொடுத்தால்கூட போதும் என்று சொன்னேன். இது ஷிஃப்ட் சிஸ்டம், ஒரு



ஃபீடரிலே அந்த டயம் இருக்கும், அடுத்த ஃபீடரிலே வேறு டயம். குறிப்பாகச் சொல்ல முடியாது என்றார்கள். எங்களுக்குத் தேவையான நேரத்திலே கொடுக்காது தேவையற்ற நேரத்திலே கொடுக்கின்ற காரணத்தால், எங்களுக்கு 100 சதவிகிதம் வெட்டுகூட அமல்படுத்துங்கள், அவர்களிடத்திலேயிருந்து பணம் பெறுகிறீர்கள் என்று எழுத்துமூலமாக ரெவின்யூ யூனிட்டுக்கு எழுதியிருந்தேன். அவர்களும் அந்தக் குறிப்பிட்ட 3, 4 மாதங்களுக்கு இணைப்புகளைத் துண்டித்துப் பணம் பெறாமலிருந்தார்கள். அதேமாதிரியாக என்னுடைய ஒன்றியத்தைச் சேர்ந்த பல ஊராட்சித் தலைவர்கள் புகார் செய்தபோது, அவர்களையும் இவ்வாறே அனுப்புங்கள் என்று சொன்னபோது, அவர்களும் அவ்வாறே செய்தார்கள். அதன் மூலமாக அந்த ஊராட்சியினுடைய பணமானது பாழடையாமல் அவர்களிடத்திலே தங்கியிருப்பதற்கு ஒரு வழி ஏற்பட்டது. ஆனால் இப்படி சட்டத்திலே வழிகள் இருந்தாலும், ஊராட்சித் தலைவர்களாக வருபவர்கள் எல்லாம் இதையெல்லாம் தெரிந்தவர்களா என்பதையும் அரசு யோசித்துப் பார்க்க வேண்டும். இந்தத் தெளிவு அறிவு இல்லாதவர்கள்கூட ஊராட்சித் தலைவர்களாக வரக்கூடிய வாய்ப்புகள் ஜனநாயகத்திலே ஏற்பட்டிருக்கிறது. அதையொட்டித்தான் கடந்த ஆண்டு நான் பேசுகிறபோது ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் மீட்டர் சிஸ்டத்தை கொண்டு வரவேண்டுமென்று குறிப்பிட்டேன். அதற்கு இலாகா பூர்வமாகக் கொடுத்த பதிலிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், ஒவ்வொரு ஊராட்சிக்கும் மீட்டரைப் பொருத்தினால் பல கோடிக்கணக்கான ரூபாய் செலவாகும் என்று. இன்றையதினம் மின்சார வாரியத்துக்கு இருக்கக்கூடிய நிதி நிலையிலே செய்வதற்கு சாத்தியமில்லை. இருந்தாலும் அரசு அது போன்ற ஆயிரம் யூனிட்டுகளைப் பயன்படுத்தக்கூடிய ஊராட்சிகளுக்கு வேண்டுமானாலும் செய்யலாம். சிறிய ஊராட்சிகளுக்கு செய்வதற்கில்லை. இருப்பினும் அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மேலும் ஒரு யோசனையைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊராட்சியே தன்னுடைய சொந்தச் செலவிலே அந்த மீட்டரைப் பொருத்துவதற்கு முன் வந்தால், இணைப்புகளைக் கொடுப்பீர்களா என்ற யோசனையை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி உங்களுக்குச் செலவில்லாமல் ஊராட்சியே அந்தச் செலவை ஏற்கின்ற நேரத்திலே அருள்கூர்ந்து அந்த இணைப்பைக் கொடுத்து அந்த மீட்டர் சிஸ்டத்திலே எங்கள் ஊராட்சியிலிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்றையதினம் பல சிறு சிறு ஊராட்சிகளெல்லாம் இருக்கின்றன. அந்த ஊராட்சிகளுக்குத் தெரு விளக்குகள் போடவேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. அதற்கு வரக்கூடிய வருமானம், மின்சாரக்

கட்டணத்தைச் செலுத்தக்கூடிய அளவிற்கு இல்லாத காரணத்தினால், பல ஊர்களுக்கு அட்ஜஸ்ட் செய்வதற்கு உத்தரவு போட்டிருக்கிறோம். உடனே மின்சார பில்லைச் செலுத்த வேண்டும், அப்படியில்லையென்றால் பொது நிதியிலிருந்து செலுத்திவிட்டு பஞ்சாயத்து நிதியிலிருந்து அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறார்கள். ஆனால் வரியே வர மாட்டேன் என்கிறது. அதனால் ஊராட்சி ஒன்றியங்கள் கட்ட வேண்டுமென்று பில்லை அனுப்புகிறார்கள். ஊராட்சி ஒன்றியத்திலே நிதியிலே சரி செய்துவிடலாமென்று கட்டி விடுகிறோம். பிறகு பஞ்சாயத்துகளுக்கு வருமானமே வராத காரணத்தினால், ஊராட்சி ஒன்றியத்திற்குத் திரும்பி வருவதேயில்லை. இந்த நிலையிலே எல்.எஃப். ஆடிட்டர்கள் வருகிறார்கள். ஏன் இது வரையில் 'ரெகவர்'' செய்யவில்லையென்று கேட்கிறார்கள். மின்சாரமானது அத்தியாவசியமானது, தெரு விளக்குகள் அவசியம். குடி தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதோடு, இப்போது வேகமாக ஏழை எளிய மக்களுக்கு, குடியானவர்களுக்கு வசதியாக குடியிருப்பு பட்டா வசதிகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கக் கூடிய கழக அரசானது தெருவிலே விளக்குகளும் அத்தியாவசியம் என்று கருதுகிற காரணத்தினால் அந்தத் தெரு விளக்குக்கு ஏற்படக்கூடிய செலவினங்களை ஏற்றுக் கொள்ள முன்வந்தால், அது நல்ல முறையில் அமையும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் ஊராட்சிகளிலே குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்காக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளையும் அடுத்து அழுத்த நீர்த் தேக்கத் தொட்டிகளையும் கட்டியிருக்கிறார்கள். அதற்கு மின் இணைப்பு வேண்டுமென்று சொல்கிறபோது, என்ன சொல்கிறார்கள் என்றால், எஸ்டிமேட் போட்டு எவ்வளவு செலவாகுமென்று பார்க்கிறார்கள். அந்தச் செலவைப் பொருத்து, அதன் மூலமாக அது அடக்கமாக இருந்தால், இணைப்புகளைக் கொடுக்கிறோம், இல்லையென்றால் இணைப்பைக் கொடுக்க முடியாது என்று மின்சாரத் துறையைச் சேர்ந்தவர்கள் சொல்கிறார்கள். அப்படி அடக்கமாக வந்தால் கூட, தொலைவைப் பார்த்து இத்தனை கம்பங்கள் நடவேண்டும், இவ்வளவு லைன் இழுக்க வேண்டியிருக்கிறது, இவ்வளவு ஒயர் செலவாகிறது, எனவே ரூபாய் 7 ஆயிரம் கட்டினால் தான் முடியும் என்கிறார்கள். சாதாரண கிராமப் பஞ்சாயத்துக்களிலே ஆயிரம் பேரை ஜனத் தொகையாகக் கொண்ட கிராமங்களிலே வருமானம் வீட்டு வரியிலிருந்து வருகிறது. கிராமத்திலே இருக்கக் கூடிய வீடுகள் குடிசை வீடுகளாக இருக்கிற காரணத்தினால், மதிப்பீட்டைக் கொண்டு வீட்டு வரி போடுகின்ற காரணத்தினால், அதனால் வருகின்ற வருமானம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால், அந்த இணைப்புகளைப் பெற முடியவில்லை. இது ஒரு பொதுக்



காரியத்திற்காக ஊர்ப் பொது மக்களுக்காகப் பஞ்சாயத்து செய்கிற காரணத்தினால், அவர்களிடத்தில் சிறிது அக்கறை காட்டி என்ன லேபர் சார்ஜ் ஆகிறதோ அதை மட்டும் பெற்றுக்கொண்டு தொலைவைக் கணக்கிடாமல் செய்ய வேண்டும். இதற்கு அரசு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மின்சார வாரியம் என்பது கமர்ஷியல் லைனிலே தான் செயல்பட வேண்டும். லாப நஷ்டமின்றிச் செயல்பட வேண்டும் என்று விவசாயத்திற்குக் கொடுக்கக்கூடிய மின்சாரமானது குறைந்த அளவிலே கொடுக்கின்றீர்கள். அதனால் நஷ்டம் வருகிறது. ஆகவே ஏன் அதை உயர்த்தக் கூடாது என்று யோசனை சொல்லியிருந்தேன், அந்த நோக்கிலே விவசாயிகள் கொடுப்பதே அதிகம் என்று சொன்னபோது கூட உயர்த்தலாம் என்றேன். அதற்கு வாரியத்தைச் சேர்ந்தவர்கள் விவசாயிகளுக்கு அத்தியாவசியப் பண்டமாகிய உணவை உற்பத்தி செய்யவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினால், ஆண்டுதோறும் 12 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டபோதிலும் இந்த அளவிலே தான் கொடுக்கின்றோம், எனவே உயர்த்துவதற்கு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பன்னிரண்டு கோடி ரூபாயை அரசு மானியமாகக் கொடுக்கிறதென்றும் சொல்லியிருக்கிறார்கள். எனவே அப்படி விவசாயத்திற்குப் பன்னிரண்டு கோடி ரூபாய் மானியமாக அரசு வாரியத்திற்குக் கொடுத்து, விவசாயிகளுக்குக் குறைந்த செலவில் மின்சாரம் வழங்குகின்றது. அதே போன்று இந்த ஊராட்சிகளின் தெரு விளக்குகளுக்கும், மேல்நிலைத் தொட்டிகளுக்கும் இணைப்புக் கொடுக்க, வேண்டிய நிதியை அரசு மானியமாகவோ அல்லது வேறு வழியிலோ கொடுத்து, அவைகளுக்கு இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை அடுத்து பெரிய தொழில்களுக்கு நாம் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கிறோம். குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கக் கூடாது; அவர்களுக்கு அதிகக் கட்டணத்தில் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று சொல்கிற நேரத்தில், "வெளி மாநிலங்களில் அந்தத் தொழில்களுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் கொடுக்கிறார்கள்; நம்முடைய மாநிலத்தில் அதிகமாகக் கேட்டால் அந்த அதிபர் இந்த மாநிலத்தை விட்டுவிட்டு அண்டை மாநிலத்திற்குச் சென்று தொழிலை ஆரம்பித்து விடுவார்கள்;. ஆதலால் நமது மாநிலத்தின் பொருளாதாரம் பாதிக்கப்படும்" என்று சொல்கிறார்கள். தொழிலை ஆரம்பிக்கும்போது சலுகை கொடுக்கலாம். தொழில் ஆரம்பித்து 10 அல்லது 15 ஆண்டுகளுக்குப் பிறகு அவர்கள் லாப நஷ்டக் கணக்கு காண்பிக்கிறார்கள். அவர்களுக்குக் கோடிக் கணக்கான வருவாய் ஒரு ஆண்டில் கிடைக்கிறது. அப்படிப்பட்ட வருவாயைப் பெறும் படியானவர்களுக்கு அதிக அளவில் லாபம் வருகிறது. மின்சார வாரியம்

[திரு. வி. வெங்கா] [1973 நவம்பர் 23

நஷ்டத்தில் இருக்கின்றதால், அவர்களுக்கு அளிக்கும் 'டேரிப்பை' அதிகமாக்க அவர்களுடன் பேசி, அதை உயர்த்த வேண்டுமென்று அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்..

இன்றையதினம் நம்முடைய மின்சார வாரியம் நிதி நெருக்கடியின் காரண மாக பல பிரச்சினைகளில் ஈடுபட்டிருக்கிறது. இணைப்புகள் கேட்கின்ற நேரத்தில், பல்பு இல்லை, சோக் இல்லை, தேவையான கம்பங்கள் இல்லை, ஒயர்கள் இல்லை என்று சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். இதையெல்லாம் நல்ல முறையில் செய்வதற்காகத்தான் துறையைப் பிரித்திருக்கிறார்கள். எல்லாக் கருவிகளும் இல்லையா என்றால் இருக்கிறது. ஒரு இடத்தில் கம்பம் இருக்கிறது, ஒரு இடத்தில் ஒயர் இருக்கிறது. லைட் வேண்டுமென்று கேட்டால், ஒரு இடத்தில் டியூப் இருக்கிறது, மற்றொரு இடத்தில் சோக் இருக்கிறது. அனைத் தையும் ஒருங்கிணைக்க வேண்டும். பற்றாக்குறை இருக்கலாம். 100 பல்புகள், 100 சோக்குகள் இருந்தால், அந்த இரண்டையும் ஒன்றாக்கி ஒருவருக்குக் கொடுக்கலாம். அந்தத் துறையில் உள்ள வேலைப் பளுவைக் குறைப்பதற்காக அதைப் பிரித்திருக்கிறார்கள். இனிமேல் நல்ல முறையில் செயல்படுமென்று நம்புகிறேன். பொதுவாக இந்த விவாதத்தில்... (தலைவர் மணியை அடித்தார்) தலைவரவர்களே, ஒரே ஒரு கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்த விவாதத்தின் ஆரம்பத்திலிருந்து, இந்தக் கலைக்காயர் சங்கம் எல்.ஈ. அவர் களுக்கு பெரிய தொல்லையாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். இதையெல்லாம் விசாரித்துப் பார்த்தேன். அந்தச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசி, ஒரு நபர் 700 பில்களைப் போட வேண்டுமென்று அக்ரிமென்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த அக்ரிமென்டுக்குப் பிறகும் மேற்கொண்டு செய்ய வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு ஓராண்டாக முடியாது, முடியாது என்று சொல்லி, அதற்குப் பிறகு இந்த நிலைமை ஏற்பட் டிருக்கிறது. இந்த நிலைமையெல்லாம் எப்படி ஏற்பட்டதென்று யோசித்தேன். நம்முடைய உறுப்பினர்கள் சென்று, அந்த அதிகாரிகளிடம் இந்த நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன என்று சொல்லும்போது, அந்த அதிகாரிகள், 'அந்தச் சங்கம்தான் செய்கிறது' என்று சொல்கிறார்கள். எல்.ஈ. அவர்களா பொய் சொல்வார்களென்று எண்ணி, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சம்பந்தப் பட்ட சங்கம்தான் இந்தக் காரியங்களைச் செய்கிறதென்று சொல்கிறார்கள். உண்மையில் எல்.ஈ. அலுவலில் யார் யார் இருக்கிறார்களென்று பார்க்கும்போது, அதில் குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்கள். இந்த அரசுக்குக் கெட்ட பெயரை உண்டாக்க வேண்டுமென்று அவர்கள் திட்டமிட்டு



1973 நவம்பர் 23] [திரு. வி. வெங்கா]

இந்தச் செயலைச் செய்கிறார்கள். எனவே அந்தத் துறையின் அமைச்சரவர்கள் கண்ணுங் கருத்துமாகவிருந்து இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அச்சிறுப்பாக்கத்தில் ஒரு விபத்து ஏற்பட்டது. அதற்கு இதுவரையில் நிவாரணம் அளிக்கப்படவில்லை. விபத்து ஏற்பட்ட நாளும், பெயரும் சொல்ல வில்லையென்றும், ஆவணங்களில் குறிப்பு கிடைக்கவில்லையென்றும் மின் வாரியத் தினர் சொல்கிறார்கள். இப்போது நான் கூறுகிறேன். 17-1-1971-ல் அச்சிறுப் பாக்கத்தினை அடுத்த பள்ளிப் பேட்டைக் கிராமத்தில் ஒயர் அறுந்து விழுந்து, அதன் மூலம் மாரி என்ற கலாய் பூசும் தொழிலாளி இறந்துவிட்டார். அவ ருடைய மனைவியார் வேறு வருமானம் இல்லாத காரணத்தால், 2 ஆண்டுகளாகப் பிச்சை எடுத்து வாழ வேண்டிய ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. இதை உடனடியாக மின்சார வாரியம் பரிசீலித்து, ஒரு இழப்புத் தொகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சந்தர்ப்பம் அளித்த தலைவரவர் களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

MR. CHAIRMAN: The House will now adjourn and meet again at 4 p.m. to-morrow.

6-55 பி.ப

The House then adjourned.

## 5. அவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

94 Notifications issued with G.O. Ms. No. 2530, Revenue, dated the 11th May 1973 in regard to an amendment to the Tanjore Pannaiyal Protection Rules, 1952, the Pannaiyal Protection (South Arcot) Rules, 1953, the Tamil Nadu Cultivating Tenants Protection Rules, 1955, the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Rules, 1956, the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Rules, 1959, the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Rules, 1962 and the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Rules, 1968. [Laid on the table of the House under section 16 (2) of the Tanjore Pannaiyal Protection Act, 1952 (Tamil Nadu Act XIV of 1952), under

section 7 (2) of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955), under section 17 (3) of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 (Tamil Nadu Act XXIV of 1956, under section 13 (2) of the Tiruchirappalli Kaieruvaram and Mattuvaram Act, 1958 (Tamil Nadu Act XXXVI of 1958), under section 61 (2) of the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, 1961 (Tamil Nadu Act 57 of 1961) and under section 12 (4) of the Tamil Nadu Cultivating Tenants (Special Provisions) Act, 1968 (Tamil Nadu Act 16 of 1968).]

95. Notification issued with Roc. No. 32778/73-E4, dated the 14th April 1973 in regard to extension of certain provisions relating to Building Regulations of the Tamil Nadu District Municipalities Act, 1920 to Balakrishnampatti Town Panchayat in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

96. Notification issued with G.O. Ms. No. 1639, Home, dated the 21st June 1973 in regard to rule 63 of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

97. Notification issued with G.O. Ms. No. 1606, Home, dated the 12th June 1973 in regard to an amendment to regulation 11 in Appendix III of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

98. Notification issued with G.O. Ms. No. 2193, Home, dated the 18th August 1973 in regard to an amendment to Form 'C' appended to the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10 (3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

99. Tamil Nadu Government's review on the working of the Tamil Nadu Small Industries Development Corporation Limited, Madras for the year ended 31st March 1972 together



with copies of the Second Annual Report and Statement of Accounts. [Laid on the table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956).]

*B. Reports, Notifications and other Papers.*

30. Report of the Committee on Public Undertakings for 1973–74 on the Audit Report on the Annual Account of the Tamil Nadu Housing Board for the year 1964–65.

31. Twenty-third Report of the Committee on Government Assurances of the Tamil Nadu Legislative Council.

## இணைப்பு I

[231 ஆம் பக்கத்தில் 71-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) புது டில்லியில் உள்ள உலக சுகாதார நிறுவனம், மத்தியச் சுகாதார கல்விக் கழகம், ஆகியவற்றின் உதவியைக் கொண்டு, சென்னையில் 1972 டிசம்பர் 18 லிருந்து 23 வரையில் சுகாதார, மக்கட் தொகைக் கல்வி பற்றி மாநில அளவில் விவாத அரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

(இ) புது டில்லியில் 1971 ஆம் ஆண்டில் தேசிய அளவில் நடைபெற்ற விவாத அரங்கைத் தொடர்ந்து இது உடனடியாக நடத்தப்பட்ட விவாத அரங்காகும். பள்ளி சுகாதாரம், மக்கட் தொகைக் கல்வி குறித்த தேசிய நிலையில் நடைபெற்ற விவாத அரங்கில் கொடுத்த பரிவுரைகளை பரிசீலித்து, இம்மாநிலத்தில் அந்தப் பரிவுரைகளைச் செயல்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை வகுக்கும் பொருட்டு, தேசிய நிலை விவாத அரங்கைத் தொடர்ந்து மாநில அளவிலான விவாத அரங்கு ஒன்றை நடத்தத் திட்டமிடப்பட்டது.

ஏராளமான திட்டக் கூட்டங்கள், மாநிலத்தில் திறன் மிக்கவர்களாலும், மற்றும் மக்கள் நல்வாழ்வு-கல்வித் துறை அதிகாரிகள் சிலராலும் நடத்தப் பட்டன. மத்தியச் சுகாதாரக் கல்விக் கழகத்திலிருந்து பெறப்பட்ட மூலத் திட்டம் மத்தியச் சுகாதாரக் கல்வி கழகக் குழு, மாநிலச் சுகாதார கல்விக் கழகக் குழு, மாநிலக் கல்வித் துறைப் பிரதிநிதிகள் ஆகியோரால் மிகக் கவன முடன் பரிசீலித்துப் பார்க்கப்பட்டது. உள்ளூர்த் தேவைகளின் அடிப்படை யில் விவாத அரங்குத் திட்டம் முடிவாக வகுக்கப்பட்டது.

மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநரும், பள்ளிக் கல்வித் துறை இயக்கு நரும், பொருத்தமான திட்டங்களைத் தயாரிப்பதில், நேரடியாக வழிகாட்டி உதவிபுரிந்தனர். சுமார் ஒரு திங்களுக்கு முன்னதாகவே, மத்தியச் சுகாதாரக் கல்விக் கழகத்திலிருந்து சுமார் 20 பின்னணி அறிக்கைகள் பெறப்பட்டன. இத்துடன் சுமார் 22 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. ஆக மொத்தப் பின்னணி அறிக்கைகளின் எண்ணிக்கை 42.



விவாத அரங்கைத் தொடங்குவதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னமேயே மத்தியச் சுகாதாரக் கல்விக் கழகத்திலிருந்து குழு ஒன்று வந்து சேர்ந்து, விவாத அரங்கு அறிக்கைகளை முடிவாகத் தயாரிப்பதற்கு உதவியாகவும் இருந்தது.

கல்வி-சுகாதாரத் துறைகளிலிருந்தும், தொண்டு நிறுவனங்களிலிருந்தும் 32 பிரதிநிதிகள் முகமையில் அனுப்பி வைக்கப்பட்டனர். பின்னணி அறிக்கை களைப் படித்துப்பார்த்து, விவாத அரங்கில் ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்குத் தயாராக வருவதற்கு உதவியாக இருக்கும் பொருட்டு இவற்றில் சில அறிக்கை கள் இவர்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட்டன.

மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறை இயக்குநர் இந்த விவாத அரங்கின் இயக்குநர். பள்ளிக் கல்வி இயக்குநர் இந்த விவாத அரங்கின் சக இயக்குநர். கல்வி-மக்கள் நல்வாழ்வுத் துறைகளிலிருந்து 3 திறனாய்வாளரும், இந்திய அரசிட மிருந்து 1 திறனாய்வாளரும், 32 பிரதிநிதிகளும் வந்திருந்தனர்.

இந்த விவாத அரங்கின் நோக்கம் இம்மாநிலத்துப் பள்ளிகளில் சுகாதார, மக்கட் தொகைக் கல்வியை முன்னிலும் சிறப்பாகப் பரப்புவதே ஆகும்.

குறிப்பிட்ட நோக்கங்களாவன :

1. இந்நாட்டில் சுகாதாரம், மக்கட் தொகைக் கல்வி முன்னேற்றம் குறித்து பல்வேறு கருத்துக்களின் ஆய்வுரையைக் கொண்டு, மாநில மக்கள் நல்வாழ்வு கல்வித் துறை சுகாதார, மக்கட் தொகைக் கல்வி நடைமுறைக் கூறுகளைப் பரிசீலித்தல்.

2. சுகாதாரம், மக்கட் தொகைக் கல்வி குறித்து இந்தியா உலகச் சுகாதார நிறுவனப் பிரிவுகளும் கடந்த ஐந்தாண்டுகளில் நடைபெற்ற விவாத அரங்குகள், கருத்தரங்குகள், மாநாடுகள் ஆகியவை சம்பந்தப்பட்ட பரிவுரைகளும் கொடுக்கப்படுவதன் பேரில் மாநில மக்கள் நல்வாழ்வு, கல்வித் துறைகள், ஒவ்வொரு துறையிலும் தனித் தனியாகவும், கூட்டாகவும் உள்ள வேலைப் பொறுப்புகள், பின்வருவனவற்றின் கீழ் ஒவ்வொரு நடவடிக்கைக்காகவும், திட்டத்துக்காகவும் கால இலக்குகள் முதலியவற்றைக் குறிப்பிட்டு 1973--74 ஆம் ஆண்டுக்குரிய சாதனைத் திட்டத்தை உருவாக்குதல்,—

[1973 நவம்பர் 23

(1) பாடத்திட்டம், (2) பாடப்போதனைப் பொருள்கள் மேம்பாடு, (3) பணி இருப்பு (பணி ஏற்றுக்கொள்வதற்கு முந்திய நிலையில்) ஆசிரியப் பணியாளரை ஆசிரியத் தொழிலுக்குத் தயார்படுத்துதல், (4) சோதனைத் திட்டங்கள், ஆய்வுகள், ஆராய்ச்சி, (5) பள்ளிக்கு வெளியே கூடும் கூட்டங்கள், (6) கல்வியில் ஒவ்வொரு நிலையிலும் ஒருங்கிணைப்பு.

டிசம்பர் 17-ல் விவாத அரங்கின் இயக்குநர், சக இயக்குநர், மத்தியக் குழு மாநிலக் குழு ஆகியவை சந்தித்து திட்ட விவரங்களை விவாதித்தனர்.

இந்த விவாதங்களில் எல்லா பிரதிநிதிகளும் முனைப்பாகக் கலந்து கொள்ள இயலும் பொருட்டு, இவர்கள் மூன்று தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டனர். குறிப்பிட்ட நோக்கங்களில் கொடுக்கப்பட்ட விவாத அரங்கு குறித்த பல்வேறு தலைப்புகளைக் கருதிப் பார்க்கவே தொகுதிகளாக இவர்கள் பிரிக்கப்பட்டனர். ஒவ்வொரு தொகுதியும் இரண்டு தலைப்புகளை ஆழ்ந்து கருதிப் பார்த்தது. ஒவ்வொரு தொகுதியிலும் மக்கள் நல்வாழ்வு, கல்வித் துறைகளுக்கும் தொண்டு நிறுவனங்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கவும் கவனம் எடுத்துக் கொள்ளப் பட்டது. ஒவ்வொரு தொகுதியும் அதன் தலைவரையும் பதிவாளரையும் தேர்ந்தெடுத்தது.

மூன்று தொகுதிகளுக்கும் ஒதுக்கப்பட்ட தலைப்புகள் பின்வருமாறு :—

தொகுதி—ஏ :

(1) பாடத்திட்ட மேம்பாடு.

(2) சோதனைத் திட்டங்கள், ஆய்வுகள், ஆராய்ச்சி.

தொகுதி—பி :

(1) பாடபோதனைப் பொருள்களைத் தயாரித்தல்.

(2) பள்ளிக்கு வெளியே கூடும் கூட்டம்.

தொகுதி—சி. :

(1) ஆசிரியப் பணியாளர் பயிற்சி.

(2) ஒருங்கிணைப்பு.



1973 நவம்பர் 23]

விவாத அரங்கின் அன்றாட தேவைகளைக் கவனிக்கும் பொருட்டு நான்கு குழுக்கள் அமைக்கப்பட்டன—

(1) பல்வேறு கூட்டத் தொடர்களை நடத்துவதற்குரிய பொறுப்பை விவாத அரங்கை நடத்துவதற்கான குழு எடுத்துக்கொண்டது.

(2) தொழிலாய்வு மாநாட்டு நடவடிக்கைகளை நாள்தோறும் நாளிதழில் பத்திரிகை ஆசிரியர் குழு வெளியிட்டது.

(3) சமூகநலக்குழு, இந்த வேலை சம்பந்தப்பட்ட திரைப்படக் காட்சிக்கு ஏற்பாடு செய்தது.

(4) பிரதிநிதிகளின் கருத்தை வரையறுத்த படிவம் ஒன்றில் சேகரிப்பதன் மூலம் விவாத அரங்கினைப்பற்றி மதிப்பீட்டாய்வுக் குழு மதிப்பிட்டது.

ஒவ்வொரு நாள் நடவடிக்கையையும் விவாதித்து அடுத்த நாள் கூட்டத்துக் கான நிகழ்ச்சி நிரல் வகுத்து முடிவு செய்ய பணியாளர் குழு நாள்தோறும் மாலை 4 மணிக்குக் கூடியது.

முழுமை பெற்ற கூட்டத் தொடர்கள் ஒன்பது நடைபெற்றன. முழுமை கூட்டத் தொடர்களில் தலைப்புகள் முகவுரைக்கப்பட்டு, தொகுதி விவாதங்களில் எடுத்துக்கொள்ளப்பட்டன. சிறப்புக் கூட்டத் தொடரில் ஒவ்வொரு தொகுதிப் பதிவாளர்கள், மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத் துறை இயக்குநரது தலைமையின் கீழ் தங்கள் தொகுதி அறிக்கைகளை முன் வைத்தனர். இதைப்போலவே, குழு அறிக்கைகளை குழுப் பிரதிநிதிகள் முன் வைத்தனர்.

1972 டிசம்பர் 21-ல் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பிரதிநிதிகள் அனைவருக்கும் விருந்து வைத்தார். 1972 டிசம்பர் 22-ல் விவாத அரங்குப் பணியாளர்க் குழு தங்கள் பணியைத் தொடர்ந்து மூன்று தொகுதிகளின் முக்கிய பதிவுரைகளைத் தொகுத்தது.

பிரதிநிதிகளின் கருத்துரைகளின் பேரில், கடைசி நாளன்று சிறப்புக் கூட்டத் தொடர் நடத்தப்பட்டது. அன்று காலை 9 மணியிலிருந்து 10-30 மணி வரையில், உணவு அறிவியல்-புவியியல் பேராசிரியர் டாக்டர் பரிக்ஸ்ட்ராம் "மக்கள் நல்வாழ்வு நோக்கில் உணவு" என்பதுபற்றி சிறப்புரை ஆற்றினர். உதவி இயக்குநர் (சத்துணவு) கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர்.

அரிசன நல அமைச்சர் முடிவுரை ஆற்றினர்.

[1973 நவம்பர் 23

விவாத அரங்கின் முடிவில், மத்திய சுகாதார கல்விக் கழக நிர்வாக அதிகாரி, மாநாட்டில் கலந்துகொண்ட திறனாய்வாளர்கள், பிரதிநிதிகள் எல்லாருக்கும் நாட்படி பகிர்ந்தளித்தார். பள்ளி, கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர் அலுவலகப் பிரதிநிதிகளும் மக்கள் நல்வாழ்வுத் துறை இயக்குநர் அலுவலகப் பிரதிநிதிகளும் சந்தித்து, தொகுதி அறிக்கைகளை ஒழுங்குபடுத்தினர்.

## இணைப்பு II

[232 ஆம் பக்கத்தில் 72-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) & (இ) : இளம்பிள்ளை வாதம் குறித்து 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் ஆய்வு ஒன்று சமூகக் கோணத்திலிருந்தும், கொள்ளை நோயியல் சிகிச்சை கண்ணோட்டத்துடனும் சென்னை, சிசு நல நிலையம் குழந்தைகளுக்கான மருத்துவமனையில் நடத்தப்பட்டது. இளம்பிள்ளை வாதத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட 3,591 குழந்தைகளுக்கு மேற்சொன்ன மருத்துவமனையில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவிலும், அக நோயாளி சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சையளிக்கப்பட்டது. இதுவே மேற்படி ஆய்வினை மேற்கொள்ள அடிப்படையாக அமைந்தது. இந்த ஆய்வின் முடிவில் கிடைத்த முக்கிய கூறுகள் பின்வருமாறு :—

நோய் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் :

மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள். } கிராமப்புறம் 8.3 சதவீதம்.
நகர்ப்புறம் 91.7 சதவீதம்.

நகர்ப்புறப் பகுதிகளில் நோய் பரவியிருத்தல் :

கீழ் வகுப்பு அல்லது நடுத்தர வகுப்பு மக்கள் மிக நெருக்கமாக வாழ்ந்து வரும் பகுதிகளில் இளம்பிள்ளை வாதநோய் அதிக அளவில் காணப்படுகிறது. அதாவது அண்ணாசாலை, பெரம்பூர் பேரக்ஸ், வேப்பேரி, கோடம்பாக்கம் முதலிய பகுதிகளில் உள்ளது போல், பழைய பெரிய வீடு ஒன்றில் பொதுவான குளியலறையுடன் 15 முதல் 20 குடும்பங்கள் வரை வசித்து வருகின்றன. இப்படிப்பட்ட இடங்களில் இளம்பிள்ளை வாதநோய் பெருமளவில் காணப்படுகிறது,



1973 நவம்பர் 23]

அண்ணா நகர், ஷெனாய் நகர் ஆகிய இடங்களில் உள்ளதுபோல் உயர் வகுப்பு மக்களும் உயர் நடுத்தர வகுப்பு மக்களும் வாழ்ந்து வரும் இடங்களில் இந்த நோய் குறைவாகக் காணப்படுகிறது.

நோய் பாதிக்கப்படும் இடங்கள் :

நரம்புத்தண்டு—76.5 சதவீதம்.

நரம்புத்தண்டு மூளையுடன் சேருமிடம்—22.2 சதவீதம்.

நரம்புத்தண்டின் மேல்முனை—1.3 சதவீதம்.

இளம்பிள்ளை வாதநோய் பாதிக்கப்பட்டிருப்பவர்களில் ஏறக்குறைய நான்கில் ஒரு பங்கினரிடம் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நோய் காணப்படுகிறது.

ஆடவரை நோய் பாதித்தல் :

இந்த வகை நோயினால் ஆடவரே அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர். இந்த நோய்ப் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் 60 சதவீதம் ஆடவர்களேயாகும்.

கால வேறுபாடு :

நவம்பர், டிசம்பர், ஜனவரித் திங்களில் ஏராளமான பேருக்கு இந்த நோய் ஏற்படுகிறது.

நோய் பாதிக்கப்பட்டுள்ள வயதினர் :

9 மாதம் முதல் 1½ ஆண்டு வயதுடைய குழந்தைகள் பெரும்பாலோரிடையே இந்த நோய் காணப்படுகிறது. மூன்று வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளிடையே இந்த நோய் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

வருமானத்தின் அடிப்படையில் விளையும் பொருளாதாரக் குறைபாடு :

நடுத்தர, உயர் நடுத்தர வருமானம் பெறுபவரிடையே இந்த நோய் பொதுவாகக் காணப்படுகிறது.

பொது மருத்துவர்களிடம் தடுப்பு ஊசி போட்டுக்கொள்ளும் சில குழந்தைகளுக்கு இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி விசாரித்ததில், பொது மருத்துவர்கள், மருந்தினை நல்ல நிலையில் வைத்துவராததே இதற்கு முக்கியக் காரணம் எனத் தெரியவந்தது.

பக்கவாத நோய் பாதிக்கும் பகுதிகள் :

நோய் பாதிக்கப்பட்டுள்ளவர்களில், அதாவது மருத்துவ மனைக்குப் புறத்தேயிருந்து, சிகிச்சை பெறும் நோயாளிகளில், 92 சதவீதத்தினருக்குக் கால்களில் முடக்கு வாதம் கண்டிருந்தது. மருத்துவ மனையில் தங்கியிருந்து

[1973 நவம்பர் 23

சிகிச்சை பெறும் நோயாளிகளில் பெரும்பாலோருக்கு உடலில் மேற் பகுதியிலும் முடக்கு வாதம் கண்டிருந்தது. இவ்வாறு உடலின் மேற்பகுதி இந்த நோயினால் பாதிக்கப்பட்டால் நோய் முற்றி உயிருக்கே ஆபத்து நேரிடும் என்று தெரிகிறது.

**இந்த நோய்க்காகச் சிகிச்சை பெற்று நலமாகி வருவோரின் சதவீதம் :**

நோய் பாதிக்கப்பட்டவர்களில் ஏறக்குறைய 86 சதவீதத்தினர் நன்கு சிகிச்சை பெற்று நலமடைந்துள்ளனர்.

## இணைப்பு III

[235 ஆம் பக்கத்தில் 61-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

### துறைத் தலைவர்கள்

ஐ.ஏ.எஸ். :

1. வேளாண்மைத் துறை இயக்குநர்
2. தொல்வேடிகள் துறை ஆணையாளர்
3. பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர்
4. உணவுபொருள் வழங்கு துறை இயக்குநர்
5. தொழிலாளர் நலத் துறை ஆணையாளர்
6. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்
7. பால் உற்பத்தி, பால்பண்ணை வளர்ச்சித் துறைகளின் ஆணையாளர்
8. வேலை வாய்ப்பு, மற்றும் பயிற்சித் துறை இயக்குநர்
9. மீனளத் துறை இயக்குநர்
10. கைத்தறி, பஞ்சாலைகள் இயக்குநர்
11. அரிசன நலத் துறை இயக்குநர்
12. இந்து அறநிலைய மற்றும் அறக்கட்டளைகள் (நிர்வாகத் துறை) இயக்குநர்



1973 நவம்பர் 23]

13. தொழில் வர்த்தகத் துறை இயக்குநர்
14. நிலச் சீர்திருத்த இயக்குநர்
15. நகராட்சிகள் நிர்வாக இயக்குநர்
16. பத்திரப் பதிவுத் துறை இயக்குநர்
17. புதுவாழ்வுத் துறை இயக்குநர்
18. கிராம வளர்ச்சித் துறை இயக்குநர்
19. சிறுசேமிப்புத் துறை இயக்குநர்
20. எழுதுபொருள் அச்சக இயக்குநர்
21. சர்க்கரை இயக்குநர்
22. நில அளவு, நிலவரி ஏற்பாடுகள் இயக்குநர்
23. போக்குவரத்து ஆணையாளர்
24. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை இயக்குநர்
25. கருவூலம், கணக்குத் துறை இயக்குநர்
26. நகர அமைப்புத் துறை இயக்குநர்
27. சமூக நலத் துறை இயக்குநர்
28. தூத்துக்குடி துறைமுகத் திட்ட இயக்குநர்

### துறைத் தலைவர்கள்.

ஐ.ஏ.எஸ். அல்லாதவர்கள்.

1. இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி
2. நகர்ப்புற நிலவரி, விவசாய வருமான வரி இயக்குநர்
3. கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்
4. சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணி இயக்குநர்
5. புதைபொருள் துறை இயக்குநர்

[1973 நவம்பர் 23

6. ரசாயன ஆய்வாளர் பரிசோதனை நிலைய இயக்குநர்

7. 'சின்கோனா'த் துறை இயக்குநர்

8. அரசு தலைமை மின்சக்தி ஆய்வாளர்

9. கல்லூரிக் கல்வித் துறை இயக்குநர்

10. தீயணைப்புத் துறை இயக்குநர்

11. தலைமை வனப் பாதுகாவலர்

12. ஆளுநர் மாளிகை நிர்வாக அலுவலர்

13. நில நீர்த் துறை இயக்குநர்

14. மக்கள் நல்வாழ்வு, குடும்பக் கட்டுப்பாட்டு இயக்குநர்

15. நெடுஞ்சாலைகள், மற்றும் கிராமப் பணித் துறைத் தலைமைப் பொறியாளர்

16. நாட்டு மருந்துத் துறை இயக்குநர்

17. சிறைச்சாலைகள் துறைத் தலைவர்

18. உயர் நீதிமன்றப் பதிவாளர்

19. செய்தி, மக்கள் தொடர்புத் துறை இயக்குநர்

20. சட்டக் கல்வித் துறை இயக்குநர்

21. உள்நிதிக் கணக்குகள் ஆய்வாளர்

22. மருத்துவக் கல்வித் துறை இயக்குநர்

23. அரும்பொருட்காட்சித் துறை இயக்குநர்

24. தேசிய மாணவர் படை இயக்குநர்

25. காவல் துறைத் தலைவர்

26. பொதுப்பணித் துறைத் தலைமைப் பொறியாளர்

27. தேசிய நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர்

28. கூவம் வளர்ச்சித் திட்ட தலைமைப் பொறியாளர்



1973 நவம்பர் 23]

29. பொது நலப் பொறியியல், நகராட்சிப் பணிகளின் தலைமைப் பொறியாளர்

30. பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட தலைமைப் பொறியாளர்

31. பரிசுச் சீட்டு இயக்குநர்

32. பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்

33. அரசு வாணிபத் திட்டங்கள் தலைமைத் தணிக்கையாளர்

34. புள்ளி விவரத் துறை இயக்குநர்

35. தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

36. கால்நடை மருத்துவக் கல்வி, ஆராய்ச்சித் துறை இயக்குநர்

37. கண்காணிப்பு, ஊழல் ஒழிப்புத் துறை இயக்குநர்

38. மாநில துறைமுகத் துறை அலுவலர்

39. விற்பனை வரி, மேல்முறையீட்டு நடுவர் மன்றத் தலைவர்

## இணைப்பு IV

[237 ஆம் பக்கத்தில் 62-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகளின் விற்பனை குன்றி வருதலுக்கான காரணங்கள் :—

1. ரூபாய் 1,000-க்கு மேற்படும் பரிசுகள் மீது 1—6—1972-ஆம் நாளிலிருந்து 34.5 சதவீத வருமான வரியையும், மேல்வரியையும் இந்திய அரசு விதித்ததால், பரிசுச் சீட்டுகள் விற்பனை குறைந்தது.

2. தமிழ்நாட்டில் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் கடுமையான போட்டி.

3. ஏனைய மாநிலப் பரிசுச் சீட்டுகளைத் தமிழ்நாட்டில் விற்பனை செய்வது குறித்து விதிக்கப்பட்ட தடை, உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவால் செயலற்றுப் போனதும், தமிழக அரசுப் பரிசுச் சீட்டுகளின் விற்பனை குறைந்ததற்கான காரணங்களாகும்.

[1973 நவம்பர் 23

## தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டு விற்பனையைப் பெருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.

1. 10--11--1972 ஆம் நாள் நடைபெற்ற 49-வது குலுக்கலிலிருந்து, தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டத்தின் பரிசுத் தொகை அமைப்பைத் திருத்தியமைத்து ஆணைகள் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன. ஆறுதல் பரிசுகள் உட்பட சாதாரண பரிசுகளின் மொத்த எண்ணிக்கை 1066-லிருந்து 1684 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பரிசு பெறும் எண்ணுக்கு முன்னும் பின்னும் உள்ள எண்களுக்கு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

முதல் பரிசுக்காக : 2 × 1,500 = 3,000

இரண்டாவது பரிசுக்காக : 4 × 500 = 2,000

2. தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம் குறித்த வர்த்தக விளம்பரங்கள் அகில இந்திய வானொலி மூலம் செய்யப்படுகின்றன.

3. தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம் பற்றி, ரூ. 57,250 செலவில், 500 அடி நீளத்தில் வண்ணச் செய்தித் திரைப்படம் ஒன்றை அரசு எடுக்கத் தீர்மானித்துள்ளது.

4. மைசூர், ஹரியானா, பஞ்சாப் ஆகிய அரசுகளுடன் பரிசுச் சீட்டு விற்பனை குறித்து பரஸ்பர ஏற்பாடுகளை மீண்டும் செயலுக்குக் கொண்டு வர அரசு கருதியுள்ளது.

## இணைப்பு V

[269 ஆம் பக்கத்தில் 48-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

முன்பு சில ஆராய்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. தற்போது சில செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் வருமாறு :—

(1) இந்த மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில், உவர்த் தன்மையால் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களின் தன்மை, சிக்கனமான முறைகளில் அவற்றைப் பயன்படுத்தும் முறை அவற்றை விளை நிலமாக்கல் ஆகியன இந்த ஆராய்ச்சியின் நோக்கமாகும்.



1973 நவம்பர் 23]

(2) கோயம்புத்தூர், வேளாண்மை பல்கலைக் கழகத்தில் தொடர்பான ஆராய்ச்சித் திட்டம் ஒன்று செயலில் உள்ளது.

(3) தேசிய செய்முறை விளக்க சோதனைகளின் கீழ், திருச்சி, மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர், வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும், களர்த்தன்மை, உவர்த்தன்மை ஆகியவைகளால் பாதிக்கப்பட்ட ஒரு ஏக்கர் நிலத்தை சோதனைக்கு எடுத்து, பண்படுத்தி, விளை நிலமாக்குவது பற்றி விளக்கிக் காட்டப்படுகின்றன.

(4) முன்பு உவர், களர் நிலங்களைப் பண்படுத்த தனி ஆராய்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இவற்றில் ஒன்று 1959 முதல் 1963 வரை இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் நிதியுதவி கொண்டு இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களிலும் எஞ்சிய திட்டங்கள் பெரும்பகுதி நிலங்களை (சுமார் 300 ஏக்கர்) பண்படுத்துவதற்கான முன்னோடித் திட்டமாகத் தென்னாற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்திலும் செயல்படுத்தப்பட்டன. இவற்றைத் தவிர, கோயம்புத்தூர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மண் அறிவியல் துறையைச் சேர்ந்த பட்ட மேற்படிப்பு மாணவர்கள் சில அடிப்படை ஆராய்ச்சிகளையும் நடத்தினர்.

# தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

---

**சனிக்கிழமை, 1973 நவம்பர் 24.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை **மண்டபத்தில்** பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### *Lady Willingdon Training College, Madras*

* 91. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Education be pleased to state the special constructions to be erected at the Lady Willingdon Training College, Madras in connection with its Golden Jubilee in 1973?

### வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி, சென்னை.

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

சென்னையிலுள்ள வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரியில், அக்கல்லூரியின் பொன்விழாவினையொட்டி, 1973-ஆம் ஆண்டில், கட்டப்படவிருக்கிற சிறப்புக் கட்டுமானங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பொன்விழாவை ஒட்டிச் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுமில்லை.

## Oriental Schools

*92. Q.—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) the number of Oriental Schools in the State;

(b) the amount of endowment each school has to create;

(c) whether there is a proposal to enhance the endowment; and

(d) if so, the details thereof?

### கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள் (ஓரியண்டல் பள்ளிகள்)

**திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்திலுள்ள கீழ்த்திசைக் கல்விப் பள்ளிகள் (ஓரியண்டல் பள்ளிகள்) எத்தனை ?

(இ) ஒவ்வொரு பள்ளிக்கும் இருக்க வேண்டிய கட்டளைத் தொகை யாது ?

(உ) இக்கட்டளைத் தொகையை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(எ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) 17 கீழ்த்திசைப் பள்ளிகள் உள்ளன.

(இ), (உ) & (எ) : 1972-73 வரை ரூபாய் 20,000 அறக்கட்டளை செலுத்த வேண்டுமென்ற விதியிருந்தது. 1973-74 லிருந்து கீழ்த்திசை மொழி உயர்நிலை பள்ளிகளுக்கு ஒரு இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கீழ்த் திசைப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, அதற்காக தனியாக என்டோமென்ட் ஏற்படுத்த வேண்டியதில்லை என்று இருந்தது என்று கேள்விப்படுகிறேன். அது வாஸ்தவமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, 1972-73-க்கு முன்னாலே ரூபாய் 20 ஆயிரம் கட்ட வேண்டுமென்று இருந்தது. இப்போது எல்லாப் பள்ளிகளுக்கும் நாம் ஒரு லட்சம் ரூபாய் என்று ஆக்கியிருப்பதன்



காரணமாக, அந்த விதியின் கீழ் வரவேண்டுமென்ற காரணத்திற்காக, இனிமேல் 1973-74-லிருந்து ஒரு லட்சம் அறக்கட்டளை ஏற்படுத்த வேண்டுமென்று போடப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** இது வரை நடந்து வருகின்ற பள்ளிகளுக்கும் இந்த ஒரு லட்சம் ரூபாய் கட்ட வேண்டுமா அல்லது அவைகளுக்கு விதிவிலக்கு உண்டா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இதற்கு முன்னால் ஏற்பட்ட பள்ளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் தேவையில்லை. இதற்கு முன்னால் ஏற்பட்டவைகளுக்கு அந்த விதிமுறைதான். ரூபாய் 20 ஆயிரம்தான் கட்ட வேண்டும்.

## Stagnation Allowance

@ * Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education be pleased to state the categories of teachers to whom the Stagnation Allowance has been recommended by the Second Pay Commission?

### பதவி உயர்வுத் தேக்கப் படி

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இரண்டாவது சம்பள ஆணைக்குழு, எந்தெந்த வகை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வுத் தேக்கப் படி (Stagnation Allowance) வழங்கப்பட வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இரண்டாவது சம்பளக் குழு அரசு ஊழியர்களுக்குத் தேக்கப் படி கொடுக்கப் பரிந்துரை செய்துள்ளது. இது அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். இச் சலுகை உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் மானியம் பெறும் தனியார் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

[1973 நவம்பர் 24

### *Refixation of salary for the Teachers*

@ * 64. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have ordered that broken periods of service in the existing scales of salary be taken into account for refixation of salary as per the recommendations of the Second Pay Commission;

(*b*) the number of cases of teachers serving in Aided Secondary Schools in the Madurai Educational District in whose cases such a procedure has not been followed; and

(*c*) the reasons therefor?

### ஆசிரியர்கள் சம்பளத்தை மீண்டும் வரையறுத்தல்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளவாறு விதத்தில் தொடர்ச்சியில்லாத பணிக் காலத்தை கணக்கில் எடுத்துக்கொள்ள சம்பளத்தை மீண்டும் வரையறுக்கும்போது ஏற்கனவேயுள்ள சம்பள வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளதா?

(இ) மதுரை கல்வி மாவட்டத்தில் மானியம் பெறும் இடைநிலைப் பள்ளி களில் பணிபுரியும் ஆசிரியர்களில் எத்தனை பேருடைய நேர்வில் இத்தகைய நடைமுறை பின்பற்றப்படவில்லை.

(உ) அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இல்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



1973 நவம்பர் 24]

### *Engineering Sections of the Government Board Secondary Schools*

@* 65 *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the strength of the pupils in 10th and 11th Standards in Engineering Sections of the Government Board Secondary Schools is very low;

(*b*) if so, whether ways will be found to make additional use of the services of the teachers in Engineering sections of the Government Board Secondary Schools, as their workload is very light; and

(*c*) whether this Government will issue orders recognising this scheme as equal to I.T.I. or Junior Polytechnic Certificates by adding the engineering subjects like Fitting, Metal Works and Electric Wiring in accordance with the Main Craft syllabus and making them Electives in 8th and 9th Standards?

### அரசாங்க போர்டு உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் கல்விப் பிரிவு

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசாங்க போர்டு உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் கல்விப் பிரிவில் மாணவர்களின் எண்ணிக்கை 10, 11-ஆம் வகுப்புகளில் மிகக் குறைவாக இருக்கிறது என்பது சரியா?

(இ) அப்படியெனில், அரசாங்க போர்டு உயர்நிலைப் பள்ளிகளிலுள்ள பொறியியல் கல்விப் பிரிவு ஆசிரியர்களின் போதனை நேரம் மிகக் குறைந்திருக்கும் நிலையில் அவர்களின் சேவையைக் கூடுதலாகப் பயன்படுத்த வழி முறைகள் காணப்படுமா?

(உ) அந்த அடிப்படையில் தற்போதுள்ள மெயின் கிராப்டு பாடத்திட்டப் படி பிட்டிங், மெட்டல் ஒர்க்ஸ், எலக்டிரிக் வயரிங் போன்ற பொறியியல் பாடங் களைக் கூடுதலாகச் சேர்த்து, 8, 9 வகுப்புகளில் விருப்பப் பாடங்களாக்க செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். ஒரு சில பள்ளிகள் தவிர பெரும்பாலான பள்ளிகளில் பொறியியல் பிரிவில் மாணவர் எண்ணிக்கை 10-க்கும் குறைவாக உள்ளது.

(இ) மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும், பொறியியல் பிரிவு ஆசிரியர்களின் வேலை செய்ய வேண்டிய பாடவேளையின் எண்ணிக்கையில் குறைவில்லாததால் போதனை நேரம் குறைய வழியில்லை.

(உ) இல்லை.

## *Common Service Register for the Teachers*

@ *66. Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have proposed to introduce the Common Service Register System for the teachers, since their service is one and the same irrespective of the places in which and administration under which they serve; and

(*b*) if so, when this system will be brought into force?

### ஆசிரியர்களுக்குப் பொதுவான ஊழியப் பதிவேடு

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆசிரியர்கள் எங்கு எந்த நிர்வாகத்தின் கீழ் பணி புரிந்தாலும் அவர்கள் ஆற்றும் பணி ஒன்றாக உள்ளதால், அவர்களுக்கான ஊழியப் பதிவேடு பொதுவானதாக (Common service register) வைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், இதை எப்போது முதல் அமுலுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டு மே மாதம் 17-ந் தேதி ஊட்டியிலே நடைபெற்ற கல்வி மகாநாட்டிலேயே கல்வி அமைச்சர் அவர்கள் இதை (ஆசிரியர் பொது ஊழியப் பட்டியல்) ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். இன்னும் நடை முறைப்படுத்தப்படாமல் இருக்கின்றது. பரிசீலனையில் உள்ள இந்தப் பிரச்சினையை எவ்வளவு காலத்திலே நடைமுறைப்படுத்துவதற்கு முன்வருவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, டாக்டர் பால் அவர்களுடைய தலைமையின்கீழ் அரசுக் குழு இந்தப் பரிந்துரையைச் செய்திருக்கின்றது. விடுப்பு சம்பந்தமான விதிமுறைகளிலும், கணக்கீடு சம்பந்தமான விதிமுறைகளிலும், வித்தியாசம் ஏதுமில்லாமலிருந்தால், குழு பரிந்துரை செய்தவாறு ஆசிரியர்கள் எங்கு எந்த நிலையில் பணியாற்றிக்கொண்டிருந்தாலும், ஏற்றவாறு ஒரு பொது ஊழியப் பதிவேட்டினை வைத்துக்கொள்ளலாம் என்று பள்ளிக் கல்வி இயக்குநர் பரிந்துரை செய்திருக்கின்றார். அரசினர் அதன்மீது சில குறிப்புகள் கேட்டிருக்கின்றார்கள். அந்தக் குறிப்புகள் வந்த பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

## *Participation of the Hon. Minister for Education in a Meeting*

@ * 67. Q.—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education be pleased to state whether it is a fact that action was taken against such of those teachers as were absent at the meeting held at Devakottai in which the Hon. the Minister for Education participated?

### மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலந்து கொண்ட கூட்டம்

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தேவகோட்டையில் கல்வி அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்திற்கு ஆசிரியர்கள் வரவில்லை என்றதால், வராத ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது உண்மையா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. செ. முத்துசாமி :** மாண்புமிகு தலைவரவர்களே, அப்படி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்து அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அது நீக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பொது மக்களுடைய நன்கொடையை, பொருள்களாக, தொகைகளாக வந்தவைகளை பொதுமக்கள் பார்வைக்காகக் கொண்டுவருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையர் சுற்றறிக்கையின் மூலம் ஆசிரியர்களைக் கோரியிருந்தார். சுற்றறிக்கையைப்

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

பார்த்த பின்னரும் அதன்படி நடக்கத் தவறிய ஆசிரியர்களை விளக்கம் கேட்டிருந்தார்கள். ஆசிரியர்கள் ஒரே விதமான விளக்கங்களை அனுப்பியிருக்கின்றார்கள். அது பரிசீலனையில் இருந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் வரும்போது ஆசிரியர்கள் வராமல், ஒரே மாதிரியான பதிலைத் தந்திருப்பதை ஒரு திட்டமிட்ட செயலாக அரசு கருதுகிறதா ? அதற்காகத் தனி நடவடிக்கை விரைவாக எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இரண்டு மூன்று குறிப்பிட்ட ஒன்றியங்களிலே அப்படியிருக்கின்றது. ஒரு சில ஆசிரியர்கள் வராமல் இருந்தார்கள். ஆக வருவதும் வராததும் அவர்களுடைய விருப்பம். இப்படிப்பட்ட மகாநாட்டிற்கு வருவதற்கு யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. ஆணையாளர் வேறுவிதமான கேள்வி கேட்டிருக்கின்றார். விளக்கம் கேட்டிருக்கின்றார். அதற்கு பதில் தந்திருக்கின்றார்கள் என்றும் சொல்கின்றார். அது ஒன்றிய ஆணையர் அளவில் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. பரிசீலனையின் முடிவு எப்படி வருகிறது என்று பார்த்து அதற்குமேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, அப்போது ஆசிரியர்கள் போராட்டம் ஒன்று நடந்துகொண்டிருந்த காரணத்தால், ஆசிரியர்கள் 'அரஸ்ட்' செய்யப்பட்டிருந்த காரணத்தால், தங்களுடைய உணர்ச்சியைக் காட்டுவதற்காகத்தான் இந்த மகாநாட்டில் ஆசிரியர்கள் கலந்துகொள்ளாமலிருந்தார்கள். மற்றப்படி கல்வி அமைச்சர் அவர்கள் எந்த மகாநாடு கூட்டினாலும், ஆசிரியர்கள் இதுவரையில் கலந்துகொள்ளாத நிலை ஏற்படவில்லை. ஆதலால் அந்த நிகழ்ச்சியைக் கருத்தில்கொண்டு, ஆசிரியர்கள் தங்களுடைய உணர்ச்சியைக் காட்ட, இம் மகாநாட்டில் கலந்துகொள்ளாமல் இருந்ததைக் கருத்தில் வைத்து எடுத்த இந்த நடவடிக்கையை நீக்குவதற்கான முயற்சியிலே அமைச்சரவர்கள் ஈடுபடுவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மகாநாட்டிலே பல ஆசிரியர்கள் கலந்துகொண்டார்கள். ஒரு சில ஆசிரியர்கள் கலந்துகொள்ளவில்லை. அந்த மகாநாட்டிலே பொதுமக்களிடமிருந்து வசூலித்த பொருள்கள், பணம் இவைகள் இருந்தன ; அவைகளை ஒப்படைக்கும்படி ஆணையாளர் கேட்டிருக்கின்றார் ; அவர்கள் வராவிட்டாலும் அந்தப் பொருள்களை





யாவது ஒப்படைத்திருக்கலாம் ; ஏன் அப்பொருள்களை ஒப்படைக்கவில்லை என்பதுதான் கேள்வி. மகாநாட்டிற்கு ஏன் வரவில்லை என்பது கேள்வியல்ல. அதைப் பொறுத்த பிரச்சினையில் விளக்கம் கோரப்பட்டிருக்கின்றது. அது ஆராய்ச்சியில் இருந்து வருகின்றது.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, பொருள்கள் மகாநாட்டில் காட்சிக்குக் கொண்டுவரப்படவில்லையே தவிர, பள்ளியிலேயே அவற்றை ஒழுங்காக வைத்திருக்கின்றார்கள் என்பதை அரசுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இப்போது கேட்கின்ற கேள்வி மகாநாட்டிற்கு ஏன் கொண்டுவரவில்லை என்பதுதான். அதற்கான பதில் என்ன ?

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, என்ன கேட்க வருகிறேன் என்பது தெரியாமலேயே, முன்னாலேயே நீங்கள் 'அப்ஸ்ரக்ட்' பண்ணிவிடுகிறீர்கள்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** நீங்கள் கேட்பதைத்தான் நானும் கேட்கிறேன்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, அப்படிச் சொல்வதென்றால், நான் கேள்வி கேட்பதை நிறுத்திக்கொள்கின்றேன்.

## *Educational Institutions in the Alagappa College Campus*

@* 68. *Q.*—THIRU G. SWAMINATHAN (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of Educational Institutions in the Alagappa College Campus, Sekkalai, Karaikudi;

(*b*) whether the staff employed in all these institutions are granted House Rent Allowance; and

(*c*) if not, the reasons therefor?

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.

## அழகப்பா கல்லூரி வளவுக்குள் உள்ள கல்வி நிலையங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் (திரு. எம். ராஜா அய்யர் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) காரைக்குடி, செக்காலை, அழகப்பா கல்லூரி வளவுக்குள் உள்ள கல்வி நிலையங்கள் எத்தனை?

(இ) இந்தக் கல்வி நிலையங்கள் அனைத்திலும் பணிபுரியும் பணியாளர்களுக்கு வீட்டு வாடகைப்படி வழங்கப்படுகிறதா?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) அழகப்பா கல்லூரியை மையமாகக் கொண்டுள்ள இடத்தில் மொத்தம் 8 கல்வி நிலையங்கள் உள்ளன. அவற்றில் 6 கல்வி நிலையங்கள் மட்டும்தான் (3 பள்ளிகள், 3 கல்லூரிகள்) அங்கீகாரம் பெற்றவை.

(இ) 2 பள்ளிகளில் 31–12–72 வரை வீட்டு வாடகைப்படி வழங்கப்பட்டு வந்தது. 1–1–73 முதல் வழங்குவதற்கு அரசின் ஆணை கோரப்பட்டுள்ளது. மற்ற 4 கல்வி நிலையங்களில் வீட்டு வாடகைப்படி வழங்கப்படவில்லை.

(உ) கல்வி ஆணை 584, நாள் 20–4–71 மற்றும் 1745, நாள் 12–10–71-ன்படி மேற்சொன்ன கல்வி நிலையங்கள் நகராட்சி எல்லைக்குள் அமையாததால் அந்நிலையங்களில் பணிபுரிவோருக்கு வீட்டு வாடகைப்படி வழங்க இயலாது.

## *College Unions*

@* 69. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the office-bearers of the College Unions are now being elected indirectly by the class representatives; and

(*b*) if so, the reason for introducing the policy of indirect election?

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.



## கல்லூரி மாணவர் சங்கங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கல்லூரி மாணவர் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்கள் தற்போது வகுப்பு மாணவர் பிரதிநிதிகளால் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர் என்பது உண்மையா?

(இ) ஆமெனில், மறைமுகத் தேர்தலை நடைமுறைக்குக் கொண்டு வந்ததற்கான காரணம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) பெரும்பான்மையான கல்லூரி மன்றங்களில் நேர்முகத் தேர்தல் முறையையே கடைப்பிடிக்கின்றனர். எனினும், இது அந்தந்தக் கல்லூரிகளில் முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும். அரசு இதில் தலையிட்டு உத்தரவு பிறப்பிப்பதற்கு இடமிராது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, மறைமுகமான தேர்தல் என்று நடைபெறுவதால், அந்தத் தேர்தல் நடைபெறும் வரையில் அந்தப் பிரதிநிதிகளை வேறு எங்கேயாவது தேர்தல் நாள் வரையில் அழைத்துச் சென்று அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து, அதற்குப் பிறகு அவர்களை ஓட்டுப் போடச் செய்வது அரசுக்குத் தெரியுமா? இதனால் மாணவர்களிடையே ஒழுங்கு கெடுவதும் அரசுக்குத் தெரியுமா? பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தல் நடைபெறும்போது, எப்படி உறுப்பினர்களை அழைத்துக்கொண்டு போய் எங்கேயாவது தங்கவைத்துக்கொண்டு, தேர்தல் சமயத்தில் அவர்களை அழைத்து வருவதைப்போல மாணவர்கள் சங்கங்களிலும் இந்த மறைமுகத் தேர்தல் காரணமாக இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருப்பதால், நேர்முகத் தேர்தல் முறையை மீண்டும் கொண்டுவருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்தத் தேர்தல்களே கட்சியின் அடிப்படையில் நடத்தப்படுவது போல வந்துவிட்டதால் வீண் மாச்சரியங்கள் ஏற்படுகின்றன. இப்போது உள்ள முறையிலும் சில பல கேடுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நேரடித் தேர்தலிலே ஒரு ஆயிரம், ஆயிரத்து ஐநூறு மாணவர்கள் இரண்டு மூன்று பிரிவினராகப் பிரிந்து ஒரு பிரிவு மற்றப் பிரிவுகளுக்கு எதிராக நின்று போட்டியிடுவதால், காழ்ப்பு உணர்ச்சிகளும் வளருகின்றன. மறைமுகத் தேர்தல்களிலே அந்தந்த வகுப்பு 10, 12 மாணவப் பிரதிநிதிகள் மட்டும் சேர்ந்து தலைவரைத் தேர்ந்தெடுப்பதால் களிலேயே ஒரு மாணவரைத் தேர்ந்தெடுத்து, பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட —இதிலும் சில தொல்லைகள் ஏற்பட்டாலும்—அவ்வளவு தொல்லைகள் ஏற்படுவ

தில்லை. எனவேதான் 'இண்டைரெக்ட்' முறை பரவாயில்லை என்று இருக்கின்றது. சுமார் 30, 40 கல்லூரிகளில் இந்த முறை கையாளப்பட்டு வருகின்றது. பிற கல்லூரிகளிலே மாணவர் தலைவர்கள் நேர்முகமாகத்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இதில்கூட அந்தந்தக் கல்லூரியின் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், மாணவர்கள் இவர்கள் கூடிப்பேசி ஒரு முறையை வகுத்துக் கொள்ளுகின்றார்கள். கூடுமானவரையில் மறைமுகத் தேர்தல் நடைபெறுவதில், சண்டை சச்சரவுகள் ஓரளவிற்குக் குறைந்திருக்கின்றன என்றே சொல்லலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, மாணவர்கள் சங்கங்கள் தேர்தலை நடத்தும்போது அனுவசியமான சண்டை சச்சரவுகள், வீண் பூசல்கள் எல்லாம் ஏற்பட்டு, கல்லூரியையே மூட வேண்டிய நிலைமையும் ஏற்பட்டிருப்பதை நாம் அறிவோம். மறைமுகத் தேர்தல் என்ற முறைக்கு வந்தபிறகுதான் இப்படிப்பட்ட மாச்சரியங்கள், அடித்துக் கொள்ளுதல், கத்திக்குத்து போன்ற நிலைமைகள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட கல்லூரி யூனியன்கள் எந்தக் காரணத்திற்காக ஆரம்பிக்கப்பட்டன, அன்றுள்ள காரணங்கள் இன்று மாறுபட்டுள்ள நிலையில் சரியானவைதானா, பொருத்தமானவைதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த யூனியன்களை ஆரம்பித்தது நல்ல நோக்கத்திற்காகத்தான். இது நீண்ட நெடுங்காலமாக கல்லூரிகளிலே இருந்து வந்திருக்கின்றது. ஆனால் அந்த நோக்கம் சீர்கேடுறச் செய்யும் அளவிற்கு இப்போது சூழ்நிலைகள் வளர்ந்துள்ளன. இந்தச் சீர்கேடுகளைக் குறைப்பதற்கான முயற்சிகளை எந்தெந்த வகையில் மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி யோசித்து, கல்லூரிக்குக் கல்லூரி சில பல முறைகளைக் கையாண்டு வந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட தேர்தல்களினால் மாணவர்களுடைய நேரம் வீணாகிறது என்று கருதி, தமிழகத்திலேயே கட்டுப்பாட்டுக்கும் பண்பாட்டுக்கும் சிறந்ததொரு கல்லூரி என்று சொல்லப்படும் பாளையங்கோட்டையிலுள்ள ஸெயின்ட் க்ஸேவியர் கல்லூரியில் இப்படிப்பட்டதொரு முயற்சியை உருவாக்கினார்கள் என்ற காரணத்திற்காக பெரும் கிளர்ச்சிகள் ஏற்பட்டு, அங்குள்ள 'லைப்ரெரி'யில் இருந்த புத்தகங்களிலே கால்வாசிப் புத்தகங்கள் எரிக்கப்படும் அளவிற்கு நிலைமைகள் உருவாகி, பின்னர் அவர்கள் தங்கள் முடிவை மாற்றிக்கொண்டு, கீழிறங்கி தேர்தலுக்கு ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. எனவே இதுபற்றி கல்லூரிகளே முடிவெடுத்துக்கொள்ளட்டும் என்று அவர்களுடைய முடிவிற்கே விட்டுவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது.





THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, will the Government think of imposing some restrictions on the expenditure which is being incurred in the elections to the Unions in Colleges and will the Government also see that some other restrictions which existed in olden times are brought into effect now? In olden times, there was a restriction to the effect that a person seeking election could only issue a pamphlet saying "So and so requests your vote"—that is all the canvassing he could do. Will the Government introduce this system because we now find that every time elections to the College Unions are held, there is such a widespread campaigning and also writing on the walls, writing on the roads and everywhere as if it is some election to the Legislature or something like that?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படிப்பட்ட தேர்தல்களை எப்படி அதிகப்படியான பணத்தைச் செலவிட்டு மிக ஆடம்பரமாகச் செய்கின்றார்கள் என்று குறிப்பிட்டார்கள். ஒரு கல்லூரித் தேர்தலிலே யானை, ஒட்டகம் போன்றவற்றையெல்லாம் வைத்து பிரச்சாரம் செய்தார்கள். இப்படிப்பட்ட பெருஞ்செலவுகளுக்கு இடமளிக்காமல் இருக்க சில கல்லூரிகளிலே முயற்சிகளை எடுத்து வருகின்றார்கள். தேர்வு நடைபெறும் நாளுக்கும் அதுபற்றி அறிவிப்பினை, அதாவது தேர்வுக்கான தேதியை அறிவிக்கும் நாளுக்கும் அதிக இடைவெளியில்லாத அளவிற்கு ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களிலே அதை நடத்திவிடலாம் என்று சில கல்லூரிகளிலே நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். இன்னும் சில கல்லூரிகளிலே மாணவர்களைக் கூட்டி வைத்து, சுவற்றில் எழுதுதல், சுவரொட்டிகள் அடித்தல் போன்றவை வேண்டாம் என்று எடுத்துச் சொல்லி அவர்களையும் அதற்கு இணங்க வைத்து ஆடம்பரத்தைத் தவிர்க்கும் முறையில் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட ஆடம்பரங்களைத் தவிர்த்து, அமைதியாக இவை நடைபெற வேண்டியதன் அவசியத்தை கல்லூரி இயக்குநர் மூலம் கல்லூரி முதல்வர்களுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது. இதில் 'ஓட் கான்வாஸிங்' மட்டும் இருக்கலாம், சுவரொட்டிகள் வேண்டாம் என்று சொல்லப்பட்டு, கல்லூரிகளிலேகூட கிட்டத்தட்ட இதை ஓரளவிற்கு ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள் என்றே சொல்லலாம்.

**திரு. எம். ஆறுமுகசாமி :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட மாணவர்கள் யூனியன் தேர்தல்களில் இவ்வளவு தொகை செலவழிக்கத்தக்க அளவிற்கு அவர்களுக்கு எங்கிருந்து பணம் கிடைக்கின்றது? அரசியல் கட்சிகள் ஏதாவது இவர்களுக்குப் பின்னாலிருந்து இதைச் செலவழிக்கின்றார்களா, அப்படியிருந்

தால், அப்படிப்பட்ட அரசியல் கட்சிக்காரர்களோடு பேசி, அவர்கள் இப்படி இதில் தலையிடாமலிருப்பதற்கு உடன்பாடு காண அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட தேர்தல்களுக்கு மாணவர்களே நேரடியாக வசூலிக்கின்றார்கள். இன்னும், தேர்தலுக்காக நிறுத்தும்போது, ஒரு 'கண்டிஷன்' போடுகின்றார்கள், 'உன்னால் இவ்வளவு தொகை செலவழிக்க முடியுமா, ஒரு ஆயிரம் இரண்டாயிரம் ரூபாய் வரையில் செலவழிக்க வசதியிருக்கின்றதா' என்று கேட்டு அப்படிப்பட்டவர்களைத்தான் நிறுத்துகின்றார்கள். இப்படிப்பட்ட பெருஞ்செலவுகளுக்கு வகையில்லாத முறையில் ஒரு சூழ்நிலையை உருவாக்கினால், அந்த அளவிற்கு நாம் மாச்சரியங்களைக் குறைக்கலாம்.

**திரு. எம். சங்கரலிங்கம் :** மாண்புமிகு தலைவரவர்களே, கல்லூரி மாணவர்கள் சங்கத் தேர்தல்கள் நேரிடைத் தேர்தலாகவும் மறைமுகத் தேர்தலாகவும் இப்படி இரண்டுவிதமாக நடைபெறுகின்றன. அண்மையில் மதுரைப் பல்கலைக் கழகத்திலிருந்து, ஒவ்வொரு கல்லூரி நிர்வாகத்தினருக்கும், முதல்வருக்கும் ஒரு சுற்றறிக்கையை அனுப்பி எந்தெந்தச் சங்கங்கள் எங்கே செயல்பட வேண்டும், எப்படி எப்படித் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், அதற்கு என்னென்ன விதிமுறைகளை வைத்துக்கொள்ளலாம் என்று கேட்டிருக்கின்றார்கள். இதே போன்று சென்னைப் பல்கலைக் கழகத்தினரும் அறிய முயற்சிப்பார்களா? மறைமுகத் தேர்தல்கள்தான் நன்மை பயக்கின்றன என்று மதுரைப் பல்கலைக் கழகத்தின் கீழ் வரும் கல்லூரிகள் பல தெரிவித்திருப்பதால், அது போன்ற கருத்து இங்கும் அறியப்பட்டிருக்கின்றதா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு கல்லூரி முதல்வராக இருக்கின்றார்கள். மதுரைப் பல்கலைக் கழகப் பகுதியில் எப்படி இதுபற்றிய கருத்துக்களை அறிந்தார்கள் என்ற விவரங்களைக் கொடுத்தால், சென்னைப் பல்கலைக் கழகத்திலும் அப்படிப்பட்டதொரு முறை இருக்கின்றதா என்று கேட்டு, அதே முறையை இங்கும் கொண்டு வர இயலுமா என்பதைப் பார்த்து, பரிந்துரை செய்யலாம்.



### *Tourist Project between Mahabalipuram and Kovalam*

@ * 70. *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether any financial assistance has been sought for under the United Nations Development Programme for a tourist project between Mahabalipuram and Kovalam; and

(*b*) if so, the details thereof?

### *மாமல்லபுரம்-கோவளம் ஆகியவற்றிற்கிடையே சுற்றுலாத் திட்டம்*

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் சார்பில்) :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாமல்லபுரம்-கோவளம் ஆகியவற்றிற்கிடையே சுற்றுலாத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதி உதவி ஏதும் கோரப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) இப்பகுதியை மேம்படுத்த நிதியுதவி அளிக்குமாறு மாநில அரசு இந்திய அரசினை வலியுறுத்தி வந்துள்ளது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டக் குழுவின் அறிக்கையைப் பொறுத்து இதற்கு நிதியுதவி அளிக்கப்படும் என்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

### *Watchmen in Tourist Bungalows*

*94. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the number of persons who are employed as watchmen in Tourist Bungalows in our State;

(*b*) the number among them have not yet been confirmed;

(*c*) for how long they have not been confirmed; and

(*d*) the action proposed to be taken by the Government regarding them?

---

@ 23—11—1973 வினாப்பட்டியலிலிருந்து நீக்கிப் போடப்பட்டது.

### பயண மாளிகையிலுள்ள காவலாளிகள்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பயண மாளிகை காவலாளிகள் நமது மாநிலத்தில் எத்தனை பேர் உள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேர் நிரந்தரமாக்கப்படாத நிலையிலுள்ளனர் ?

(உ) எத்தனை ஆண்டுகளாக நிரந்தரம் செய்யப்படவில்லை ?

(எ) அவர்களைப் பொருத்து என்ன நடவடிக்கை எடுக்க அரசு உத்தேசித்துள்ளது ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) பொதுப்பணித் துறையில் உள்ள பயண மாளிகைகளில் தற்போது மொத்தம் 82 காவலாளிகள் உள்ளனர்.

(இ), (உ) & (எ) அவர்களில் 18 காவலாளிகள் 24-11-1970 முடிய ஐந்தாண்டுகள் நிறைவாக பணியாற்றாமல் இருந்ததால் நிரந்தரப்பணி உரிமை பெறும் பணியாளர் தொகுதியின் கீழ் அவர்களைக் கொண்டுவர இயலவில்லை. 24-11-70-க்குப் பிறகு ஐந்தாண்டுகள் பணியாற்றிய வேலை முன்னீட்டுப் பணியாளர்களை நிரந்தரப்பணி உரிமை பெறும் பணியாளர் தொகுதியின் கீழ் கொண்டு வருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, எந்தச் சம்பள விகிதத்தில் அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, I do not have the details.

### *Order of Precedence for Occupation of Inspection Bungalows, etc., under the control of Public Works Department for the Members of Legislature and Parliament*

* 95. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether it is a fact that Members of State Legislature and Members of Parliament are placed below the Gazetted Officers of the Revenue Department in the order of precedence



for occupation of Inspection Bungalows, Travellers Lodges, Circuit Houses and Rest Houses, under the control of the Public Works Department; and

(*b*) if so, whether the Government will consider changing their order of precedence?

### பொதுப்பணித் துறையின் பொறுப்பிலுள்ள ஆய்வு மாளிகைகள் முதலியனவற்றில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பொதுப்பணித் துறையின் பொறுப்பில் இருக்கும் ஆய்வு மாளிகைகள், பயணி விடுதிகள், சுற்றுலா இல்லங்கள், ஓய்வு இல்லங்கள் ஆகியவற்றில் தங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலில் வருவாய்த் துறையின் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளுக்கு முதல் இடமும், மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு அதற்கு அடுத்த இடமும் அளிக்கப்படுகின்றதென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இத்தகைய முன்னுரிமை வரிசையை மாற்றுவது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) ஏற்கெனவே வெளியிட்டுள்ள முன்னுரிமை வரிசையை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, பொதுப்பணித் துறை பொறுப்பில் இருக்கும் ஆய்வு மாளிகைகள், பயணி விடுதிகள், சுற்றுலா இல்லங்கள் ஆகியவற்றில் தங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலில் தாசில்தார்களுக்குக் கீழே மாநிலச் சட்ட மன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்று போட்டிருக்கின்றார்கள். முதலிலே அமைச்சர்கள், Speaker and Chairman of the Legislative Assembly, Council, then Chief Secretary to the Government of Tamil Nadu துறைத் தலைவர்கள் என்றெல்லாம் போட்டு, பின்னர் ரெவின்யூ டிபார்ட்மெண்ட்டிலுள்ள கெஜட் பதிவு பெற்ற அதிகாரிகள் என்றும், அதற்குப் பிறகு சட்ட மன்ற பேரவை உறுப்பினர்கள், மேலவை உறுப்பினர்கள் என்றும் போடப்பட்டிருக்கின்றது. இப்போது தாசில்தார்கள் கெஜட் பதவிக்கு உயர்த்தப்பட்டிருப்பதால், அவர்களுக்குக் கீழேதான் சட்ட மன்ற உறுப்பினர்களும் மேலவை உறுப்பினர்களும் என்று ஆகின்றது. இது மட்டுமெல்லாமல், யாராவது ஒரு அதிகாரி வருகின்றார் என்றால், அந்த

இடத்திலுள்ள அவ்வளவு இடங்களையும் அவருக்காக ரிஸர்வ் செய்து விடுகின்றார்கள். பிறகு வேறு யாருக்கும் இடம் கிடைப்பதில்லை. பாண்டிச்சேரியில் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களை மாநிலத் துறை அதிகாரிகளுக்குச் சமமாக வைத்து முன்னுரிமை கொடுக்கும்படி அரசு உத்தரவிட்டிருக்கின்றது. அது போல இங்கேயும் முன்னுரிமைகளை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் கூறுவது நியாயமாக இருக்கலாம். ஆனால் அரசு அதிகாரிகள் ஒரு இடத்தில் தங்குவதானால், இப்படிப்பட்ட பொது இடத்தில்தான் தங்க வேண்டும். வேறு இடத்தில் தங்கினால், தனியார் இடத்தில் போய்த் தங்கினார் என்று குறை சொல்ல வேண்டிவரும். அதிகாரிகளுக்காக இடம் ஒதுக்கத்தான் வேண்டும் என்றாலும், அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்தைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, சட்ட மன்ற அங்கத்தினரும் ஏதாவது அலுவல் காரணமாகத்தான் போக நேரிடுகின்றது. அவர்களுக்கும் இடம் கிடைக்க வேண்டும். ஆனால் யாராவது உயர் அதிகாரி ஒருவர் வருகின்றார் என்றால், அந்தப் பயணிகள் விடுதி அல்லது டூரிஸ்டு பங்களாவில் உள்ள எல்லா இடங்களையும் பதிவு செய்துவிடுகின்றார்கள். நானே நாமக்கல்லுக்குப் போன போது இரவு மணி 9½. குடும்பத்துடன் சென்றிருந்தேன். ஆனால் அங்குள்ள பயணிகள் விடுதியிலுள்ள அறைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. கேட்டால் சென்னையிலிருந்து அதிகாரி ஒருவர் வர இருக்கின்றார், அவருக்காக ரிஸர்வ் செய்யப்பட்டுவிட்டது, உங்களுக்கு இல்லை என்று சொல்லிவிட்டார்கள். மூன்று அறைகளும் அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. எனக்கு இடமில்லை. குடும்பத்துடன் வேறு இடம் இல்லாத காரணத்தினால், வராண்டாவிலேயே படுத்து விட்டு மறுநாள் புறப்பட்டேன். இந்த நிலையில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் மேலவை உறுப்பினர்களுக்கும் தக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஏன் மூன்று அறைகளையும் அப்படிப் பூட்டி வைத்தார்கள் என்று தெரியவில்லை. இதுபற்றிய தகவல் எதுவும் என்னிடம் இல்லை. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டது பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன்.

THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, we have amended the Constitution to annul princely privileges. Why not our Government do something to destroy this privilege of precedence?





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, உரிமை யாருக்கு, அரசு அதிகாரிகளுக்கா அல்லது எம்.எல்.ஏ., எம்.பி.க்களுக்கா என்றால், பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்குக் கொஞ்சம் நல்ல இடம் வேண்டுமென்பதை ஒப்புக்கொள்கிறேன். அரசு இதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்பதைச் சொன்னேன்.

### *Vocational Training to the Students in Borstal Schools and Certified Schools*

* 96. *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any vocational training is given to the students in Borstal Schools and Certified Schools to which young delinquents convicted in Juvenile Courts are sent; and

(*b*) if so, the details thereof?

### பார்ஸ்டல் & சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ள மாணவர்கட்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி.

**திரு. டி. சந்தோஷம்:** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிறுவர்க்கான நீதிமன்றங்களில் தண்டனை அளிக்கப்பட்ட இளம் குற்றவாளிகள் அனுப்பப்படும் பார்ஸ்டல் பள்ளிகள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள மாணவர்கட்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகின்றதா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) (1) சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பப்படுகிறவர்களுக்கு கீழ்க்காணும் தொழில்களில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது:—

(1) தச்சுத் தொழில்.

(2) கருமார் தொழில்.

(3) புத்தகம் கட்டுதல் (Book Binding)

(4) பாண்டு இசைக்கருவி (Band)

(5) தோட்டத் தொழில்.

(6) தையல்.

(2) அரசினர் சீர்திருத்தப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு பள்ளிகளில் கீழ்க்காணும் வாழ்க்கைத் தொழில் பாடங்களில் பயிற்சி அளிக்கப் படுகிறது :—

(1) தையல்.

(2) நெசவு.

(3) பாய்முடைதல்.

(4) தச்சு.

(5) கருமார் தொழில்.

(6) புத்தகம் கட்டுதல்.

(7) உலோகத்தொழில்.

(8) கட்டிடம் கட்டுதல்.

(9) வேளாண்மை-தோட்டத் தொழில்.

(10) பூத்தையல் வேலை, பின்னல் வேலை.

(11) மாணவர்கள் சீர்திருத்தப் பள்ளியில் பாண்டு இசை உட்பட இசை.

(12) கோழி வளர்ப்பு.

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, the trades mentioned by the Hon. Minister are all old-fashioned and out-moded and not suited to the modern industrial age. Will the Government try to introduce training in electric-wiring, motor mechanism, radio mechanism and some such modern techniques which will help them in this modern industrial age?

THE HON. THIRU S. MADHAVAN: It is a good suggestion.

*Tamil Nadu Small Industries Development Corporation*

* 97. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the names of Chairmen of the Tamil Nadu Small Industries Development Corporation during the years 1967 to 1973; and

(*b*) the period for which each of them occupied the post?



தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1967 முதல் 1973 வரையில் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் யார் யார்?

(இ) அவர்கள் ஒவ்வொருவரும் எவ்வளவு காலத்திற்கு அப்பதவியை வகித்து வந்தனர்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) 1–5–70-ம் ஆண்டு அமைக்கப் பட்ட தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைமைப் பொறுப் பேற்ற அலுவலர்களின் பெயர்களும் அவர்கள் பதவி வகித்த காலங்களும் பின் வருமாறு :—

திரு. சி. ஜி. ரங்கபாஷ்யம், ஐ.எ.எஸ்., 1–5–70 விருந்து 14–4–71 முடிய;

திரு. எ. பத்மநாபன், ஐ.எ.எஸ்., 26–5–71 விருந்து 26–5–72 முடிய;

திரு. ஆர். நடராஜன், ஐ.எ.எஸ்., 26–5–72 விருந்து 29–1–73 முடிய;

திரு. சி. என். ராகவன், ஐ.எ.எஸ்., 29–1–73 விருந்து பொறுப்பேற்றுள் ளார்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கடந்த மூன்று ஆண்டுகளிலே திரு. ரங்கபாஷ்யம், திரு. பத்மநாபன், திரு. நடராஜன், திரு. ராகவன் ஆகிய அதிகாரிகள், ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக் கிறார்கள். தொழில் துறை என்பது ஒருவர் நீண்டகாலம் பணி புரிந்து செயல் பட வேண்டிய ஒன்றாகும். இந்த அதிகாரிகளை ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொருவராக மாற்றிக் கொண்டிருந்தால், அவர்கள் எப்படி நல்ல முறையில் தொழில் துறையை வளர்ப்பதற்குத் துணையாக இருப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, தொழில் துறையிலே அனுபவம் பெற்றவர்கள் தொடர்ந்து பல ஆண்டுகள் பணியாற்றுவதற்கு வாய்ப்பு, வசதி ஏற்பட வேண்டுமென்ற கருத்தை ஆதரிக்கிறேன். ஏற்கெனவே இந்த மன்றத்தில் திரு. சுவாமிநாதன் அவர்களுக்கு விளக்கியிருக்கிறேன். ஐ.எ.எஸ். அதிகாரிகளைப் போடும்போது, இந்தப் பிரச்சினை வருகிறது. அவர் களுடைய கேடர் மாறுமானால், செக்ரடரியாகவோ அல்லது மத்திய அரசில் அடிஷனல் செக்ரடரியாகவோ மாறுவதால், இப்படித் தொல்லைகள் ஏற்படு கின்றன.

*98. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Small Industries Development Corporation is constructing Industrial Estates; and

(*b*) if so, the reason for the same while Industries Department is also doing the same work?

*திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தொழிற் பேட்டைகளைக் கட்டி வருகிறதென்பது உண்மையா ?*

*(இ) ஆமெனில், தொழில் துறையும் அம்மாதிரியான பணிகளைச் செய்து வருகையில், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் இப்பணிகளை மேற்கொள்வதற்கான காரணங்கள் யாவை ?*

*மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.*

*(இ) தொழிற்பேட்டைகளை அமைக்க தமிழ்நாடு சிறுதொழில் மேம் பாட்டுக் கழகத்தைக் கேட்கப்பட்டதின் நோக்கம் இப்பணிகளுக்கு வங்கி நிதி யுதவிகளைப் பயன்படுத்தலாம் என்பதே.*

## *Letter published in "The Hindu"*

*99. *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a seditious letter, published in "The Hindu", dated 24th May 1973, written by one Nagasamy, U.D.C. in the Revenue Divisional Office, Ramanothapuram, using the pen name of "Aravoli" has been brought to the notice of the Government; and

(*b*) if so, the action taken thereon by the Government?





## 'இந்து' இதழில் வெளியிடப்பட்ட கடிதம்

*திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) இராமநாதபுரம் கோட்டாட்சி அலுவலகத்தில் பணியாற்றும் நாகசாமி (U.D.C.) அறஒளி' என்ற பெயரில் அரசுக்கு விரோதமாக 24—5—1973 நாளிட்ட 'இந்து' பத்திரிகையில் கடிதம் எழுதியது அரசின் கவனத்திற்கு வந்ததுண்டா ?*

*(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : (அ) சம்பந்தப்பட்ட கடிதத்தை எழுதியவரின் உண்மைப் பெயரைப் பற்றிய நம்பகமான தகவல்கள் கிடைக்கவில்லை.*

*(இ) இக்கேள்விக்கு இடமில்லை.*

*திரு. எஸ். எஸ். தென்னரசு : தலைவரவர்களே, பத்திரிகையிலே உள்ள கடிதத்தை எழுதியவர் தான் தான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார். ஏற்கெனவே காமராஜர் முதலமைச்சராக இருந்தபோது, டி.ஆர்.ஓ. பதவி கோமாளி பதவி என்று கடிதம் எழுதி, இவருக்கு எச்சரிக்கை கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த முறையும் அவர் மறுபடியும் அரசாங்கத்தைக் கடுமை யாகத் தாக்கி 'இந்து' பத்திரிகையில் கடிதம் எழுதியிருக்கிறார். அவர் இப்போது ராமநாதபுரத்திலிருந்து திருவாடானைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். இதற்கு மேல் அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, உறுப்பினர் அவர் ஒப்புக்கொண்டார் என்று சொல்கிறார். ஆனால் ராமநாதபுர மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி அவரை நேரில் விசாரணை செய்தார். அப்படி விசாரணை செய்தபோது, அவர் இப்பேர்ப்பட்ட கடிதம் எழுதவில்லை என்றும், அது தன் புனைப் பெயர் இல்லை யென்றும் மறுத்துள்ளதாகத் தகவல் இருக் கிறது. அதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட 'இந்து' பத்திரிகையில் கேட்டதிலே ஆசிரியர்களுக்கு எழுதப்படுகிற கடிதங்களை 3 திங்களுக்கு மேல் வைத்துக் கொள்வதில்லை என்று சொல்லப்பட்டதால், அது கிடைக்கவில்லை. ஆகவே இதுபற்றி நம்பகமான தகவல் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, அவர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். நம்பகமான தகவல் கிடைக்குமானால், கண்டிப்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் படும்.*

[1973 நவம்பர் 24

திரு. வே. தங்கப்பாண்டியன் : தலைவரவர்களே, அரசு ஊழியர்களில் சில பேர் நேரிடையாகவோ அல்லது புனைப் பெயரிலோ அரசாங்கத்தைப்பற்றிக் கடுமையாக விமரிசிக்கிறபோது, 1965-ல் இதற்காக பல அதிகாரிகள் வேலை நீக்கம் செய்யப்பட்டார்கள். தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார்கள். அந்த நிலையில் இப்போது நேரிடையாக அரசு மீது குற்றம் சாட்டுகிற அதிகாரிகள் மீது மாறுதல் என்ற தண்டனையோடு நிறுத்திக்கொள்கிறதா அல்லது அவர்களை வேலை நீக்கம் செய்வது என்ற முடிவிற்கான நடவடிக்கை எடுப்பதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, நம்பகமான தகவல் கிடைக்குமானால், ஏற்கெனவே இருக்கிற சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும். இதைப் பொறுத்த வரையில், நம்பகமான தகவல் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், இது போன்ற நடவடிக்கை, அதாவது மாற்றம் செய்வது, எடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கக் கொள்கைக்கு எதிராக யாராவது ஈடுபடுகிறார்கள் என்று நம்பகமான தகவல் இருந்தால், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

## *Pulses*

100. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the State Government have made any arrangements for the marketing of pulses in the State; and

(b) if so, the details thereof?

## பருப்பு வகைகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் பருப்பு வகைகளின் விற்பனைக்காக ஏற்பாடுகள் எவற்றையேனும் மாநில அரசு செய்துள்ளதா?

(இ) ஆமெனில், அவை பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, வட மாநிலங்களிலிருந்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனால் ஏறத்தாழ 2500 டன்னுக்கு பருப்பு வகைகள் வரவழைக்கப்பட்டு சில்லரைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டது.



1973 நவம்பர் 24]

## *Apple Production*

*101. Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any research into apple production has been undertaken in the State in recent times; and

(b) if so, the details thereof?

## ஆப்பிள் உற்பத்தி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. வெள்ளப்பாண்டியன் சார்பில்): மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மைக் காலத்தில் இம்மாநிலத்தில் ஆப்பிள் உற்பத்தி குறித்து ஆராய்ச்சி ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, கொடைக்கானலில் உள்ள ஆப்பிள் பழ ஆராய்ச்சி நிலையத்தில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சி நடத்தி வருகிறது.

## *Panchayat Union School Teachers*

*102. Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of THIRU K. S. GANAPATHI): Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether it is a fact that in the matter of sanction of secondary grade scales of pay, priority is given to those higher grade trained teachers who have come out successful in the Secondary Grade Training Examination overlooking the seniority of the secondary grade teachers working in higher grade posts in Panchayat Union Schools; and

(b) if so, the reasons therefor?

[1973 நவம்பர் 24

### ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்

**திரு. செ. முத்துசாமி (திரு. கே. எஸ். கணபதி சார்பில்):** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், ஹையர் கிரேடு பதவிகளில் பணியாற்றும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஊதியம் கொடுக்காமல் அவர்களது மூப்பு நிலையைப் புறக்கணித்து, ஹையர் கிரேடு பயிற்சி பெற்ற பின்னர் செகண்டரி கிரேடு தேர்வு எழுதி வெற்றி பெறுவோர்க்கு செகண்டரி கிரேடு ஊதியம் வழங்கப்படுவதில் முன்னுரிமை அளிக்கப்படுவது உண்மையா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) இடைநிலைத் தகுதி பெற்றிருந்தும், இளநிலை ஆசிரியர்களாகப் பணியாற்றி இளநிலை ஆசிரியர்களுக்கான சம்பள விகிதத்தையே பெற்று வருபவர்கள் இடைநிலை ஆசிரியர்களுக்கான சம்பளத்தை பெற்று பயனடையவேண்டும் என்ற நோக்கத்தில் அரசினர் அதிகமான இளநிலை ஆசிரியர் பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக 1967-68-ம் ஆண்டு முதல் படிப்படியாக மாற்றிக்கொண்டு வருவதோடு, 23—2—1972 நாளுக்குப் பின் எந்த ஒரு இளநிலை ஆசிரியர் பதவியிலும் ஒரு இடைநிலை தகுதிபெற்ற ஆசிரியரை அமர்த்தக்கூடாது என்று உத்திரவிட்டுள்ளனர். 23—2—1972-க்குள் இடைநிலை ஆசிரியரின் தகுதி பெற்றிருந்தும் அத்தேதியில் இளநிலை ஆசிரியர் சம்பளம் பெறும் ஆசிரியர்களை அவர்களுக்கிடையே உள்ள முதுநிலையைத்தான் கணக்கில் கொண்டு இடைநிலை ஆசிரியர் பதவிகளில் அமர்த்தவேண்டுமென்றும் அவர்கள் எந்த தேதியில் இடைநிலைத் தகுதி பெற்றனர் என்பதைக் கணக்கில் கொள்ளவேண்டியதில்லை என்றும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதையே ஊராட்சி ஒன்றியங்களில் பின்பற்றுகின்றனர்.

### *Making the Coimbatore Municipality a Corporation*

* 103. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to make the Coimbatore Municipality a Corporation; and

(*b*) if so, the stage at which the matter now stands?



1973 நவம்பர் 24]

### கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றுதல்

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் நகராட்சியை மாநகராட்சியாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆமெனில், இது தற்பொழுது எந்த நிலையில் உள்ளது ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, கோவை நகராட்சியை மாநகராட்சி ஆக்கலாமா என்பதுபற்றி ஏதாவது சர்வே எடுக்கப்பட்டு அது பற்றிய அறிக்கை அரசுக்கு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, கோவை நகராட்சியிலிருந்து அதை மாநகராட்சி ஆக்க வேண்டுமென்று தீர்மானம் போடப்பட்டு வந்திருக்கிறது. சிங்கநல்லூரைச் சேர்த்து மாநகராட்சி ஆக்க வேண்டுமென்றும் அங்கேயிருந்து அரசுக்குச்சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகள் பரிசிலனை செய்யப்பட்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, வேறு ஏதாவது நகரத்தை மாநகராட்சியாகக் கூடிய யோசனை இருக்கிறதா அப்படிப்பட்ட தீர்மானத்தை எந்த நகராட்சி முன்மொழிந்து அனுப்பியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தலைவரவர்களே, திருச்சியை மாநகராட்சியாக்க வேண்டுமென்று எங்களுக்குத் தீர்மானம் வந்திருக்கிறது. இதைப் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். ஒரு நகராட்சியை மாநகராட்சியாக மாற்ற வேண்டுமானால், 5 லட்சத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகையும் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானமும் வரவேண்டுமென்ற ஒரு விதி இருக்கிறது. அதற்கு உட்பட்டு இப்போது திருச்சி நகரசபையையும், திருவரங்கம் நகரசபையையும் இணைப்பது மாத்திரமல்லாது திருவரம்பூர் பகுதியை இணைக்கலாமா, பொன்மலை நகராட்சியை மாநகராட்சியோடு இணைக்கலாமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. ஜி. பராங்குசம் :** தலைவரவர்களே, முதலில் திருச்சி மாநகராட்சி ஆகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, நிச்சயமாக ஆகும் என்பதை அறியலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி கோவையைப் பற்றியது தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, கோவை, திருச்சி இவைகளை மாநகராட்சிகளாக ஆக்குவதாக இருந்தால், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவர் அதனுடைய அமைச்சராக இருக்கிற காரணத்தினால் திருச்சி முதலில் ஆகிவிடாது. முதலில் கோவை, அடுத்து தான் திருச்சி.

## Loans to the Agriculturists

* 104. *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU K. RAJARAM): Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the particulars of the amount of loans sanctioned to the agriculturists through (i) the District Central Co-operative Banks and (ii) State Land Development Bank from 1st April 1967 to 31st March 1972 yearwar; and

(*b*) the amounts outstanding as on 1st April 1972?

### உழவர்களுக்குக் கடன்

திரு. எல். பலராமன் (திரு. கே. ராஜாராம் சார்பில்): மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—4—1967 ஆம் நாளிலிருந்து 31—3—1972 ஆம் நாள் வரை (i) மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள், (ii) நிலவள வங்கிகள் ஆகியவற்றின் மூலம், உழவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகைகளின், ஆண்டு வாரியான விவரங்கள் யாவை?

(இ) 1—4—1972 ஆம் நாள் நிலவரப்படி நிலுவையாகவுள்ள தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மேலவை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

@ 420-423 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





## Co-operative Super Markets

* 105. *Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) the number of Co-operative Super Markets that are functioning in Madras City;

(*b*) whether they are running on profit;

(*c*) whether they are running on loss; and

(*d*) the details thereof?

### கூட்டுறவுச் சிறப்பங்காடிகள்

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னையில் எத்தனை கூட்டுறவுச் சிறப்பங்காடிகள் இயங்கி வருகின்றன?

(இ) அவைகள் இலாபத்தில் இயங்குகின்றனவா?

(உ) நட்டத்தில் இயங்குகின்றனவா?

(எ) அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) 'காமதேனு', 'காவேரி' என்ற இரு சிறப்பங்காடிகள் சென்னையில் இயங்கி வருகின்றன.

(இ) &(உ) 'காமதேனு' சிறப்பங்காடி தற்சமயம் லாபத்தில் இயங்குகிறது. 'காவேரி' சிறப்பங்காடி நட்டத்தில் இயங்குகிறது.

(எ) 1—7—1972 முதல் 31—3—1973 முடிய ஒன்பது மாதங்களில் காமதேனு சிறப்பங்காடி ரூ. 18,947 லாபம் பெற்றுள்ளது. ஆயினும் கூடிவரும் நட்டத்தொகை 30—4—1973 முடிய ரூ. 2.31 லட்சம் உள்ளது. 'காவேரி' சிறப்பங்காடியில் கூடிவரும் நட்டத்தொகை ரூ. 7 லட்சம் ஆகும்.

'காவேரி' சிறப்பங்காடியை மாற்றியமைத்து, நல்லமுறையில் நடத்துவதற்கான, செயற்குறிப்பு கவனத்திலிருக்கிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார்: தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்தில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு சிறப்பு அங்காடிகளில் சிந்தாமணியைத் தவிர மற்றவை சரிவர நடைபெறவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா?

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அப்படி அல்ல. கோவை சிறப்பு அங்காடி 'சிந்தாமணி' நல்ல முறையில் லாபத்தில் நடைபெறுகிறது. அதே போல் தஞ்சாவூரில் 'காவேரி' அங்காடி லாபத்தில் நடைபெறுகிறது. கடலூரில் 'சரவணபவா' அங்காடியும் லாபத்தில் நடைபெற்று வருகிறது. உதகமண்டலத்தில் 'கருணாநிதி' சிறப்பு அங்காடியும் நல்ல முறையில் லாபத்தில் நடைபெற்று வருகிறது. நாகர்கோவில் அங்காடியும் லாபத்தில்தான் நடக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, will the Government consider converting one of these big markets which we have either in Zam Bazaar or Kothavalchavadi or something like that into a big Super Market with all facilities like the ones which are obtaining in foreign countries for the reason that most of the existing Super Markets are very tiny in comparison with the quantity of commodities we can sell through them?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அவர் சொல்வது மேல்நாட்டு முறை. அந்த முறைகள் இன்னமும் இந்தியாவைப் பொறுத்தவரையில் ஆரம்பிக்கப்படவில்லை.

**திரு. கே. எஸ். அப்துல் வகாப் :** தலைவரவர்களே, சில சூப்பர் மார்க்கெட்டுகள் மட்டும் லாபத்தில் நடக்கின்றன என்றால் மற்றவை நஷ்டத்தில் நடக்கின்றன என்று பொருளா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, லாபத்தில் நடைபெற்று வருவதைக் குறிப்பிட்டால் மற்றவை நஷ்டத்தில் நடக்கிறது என்றுதான் பொருள்.

THIRU A. R. DAMODARAN : Mr. Chairman, Sir, apart from the question of running at a profit or loss may I know from the Hon. Minister whether any attempt will be made to improve the service that is afforded in these Co-operative Super Markets, because when we go there, the people who attend on us are so discourteous that we come away without buying anything? May I know whether specially trained staff will be put, so that they may be kind to the customers when they go to those shops?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இருக்கின்ற எல்லா சூப்பர் மார்க்கெட் அதிகாரிகளையும், பிரைவேட் மார்க்கெட்டில் இருக்கின்றவர்களையும் வரவழைத்து, இதைப்பற்றி விவாதித்திருக்கிறோம். கொள்முதல், விற்றுமுதல் இவைகளில் ஏற்படக்கூடிய வித்தியா





சங்களைப் போக்கவும், இன்னும் வியாபாரத்தை அதிகப்படுத்துவதற்கான வியாபார முறைகளை சீராக அமைப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம். சென்னை அங்காடிக்குச் சென்று அங்கே இருக்கின்ற தொழிலாளர்களைப் பார்த்துப் பேசி அங்கே வைக்கப்பட்டிருக்கின்ற சாமான்கள் மீது அழுக்கு படிந்திருப்பதை நீக்கி நல்ல முறையில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி, அதை இப்பொழுது முறைப்படுத்தி வருகிறோம். சென்ற மாதத்திலிருந்து தான் இது நடந்து கொண்டுவருகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** திரு. தாமோதரன் அவர்கள் கேட்டது அதுவல்ல. அங்கு பொருள்களை வாங்கப் போகிறவர்கள் மனக்கிலேசப்பட்டுத் திரும்பி விடுகிறார்கள், அதற்கு என்ன வழி என்பதுதான் அவர் கேட்ட கேள்வி.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அப்படி சில அங்காடிகளில் இருந்தது. அதை இப்பொழுது மாற்றியமைக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

THIRU S. NARAYANASWAMY : Mr. Chairman, Sir, is the Hon. Minister aware of the fact that a number of employees of the 'Kamadhenu' Super Market have been asked to make good losses due to general shortage and as a result a large number of them are worried deeply and, therefore, not giving proper service?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, 'காமதேனு'-வில் இப்படிப்பட்ட நஷ்டம் ஏற்பட்டது. தொழிலாளர்கள் போனஸ் கொடுக்க வேண்டும் என்று சொல்லி, அதற்காக வேலைநிறுத்தமே செய்தார்கள். இப்பொழுது தொழிலாளர்களைக் கூப்பிட்டு நிலைமையை எடுத்து விளக்கி, நஷ்டமில்லாமல் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. எல். பலராமன் :** தலைவரவர்களே, சென்னையில் இரண்டு சங்கங்கள் காவேரி, காமதேனு என்று இயங்கிக் கொண்டு வருகின்றன. ஒரே நகரில் இரண்டு இருப்பதால், அவைகளுக்குள் போட்டி இல்லாமல் நடைபெறுமா ? எந்தெந்தப் பகுதிக்கு எந்தெந்த சங்கம் என்று பிரித்து வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அப்பொழுதிருந்த நிலைமைக்கு ஏற்றவாறு அந்தந்தப் பகுதிக்குத் தகுந்தாற்போல் அமைத்திருக்கிறார்கள்.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, தாலுக்காவிற்கு ஒரு சூப்பர் மாக்கெட் இருக்க வேண்டுமென்று ஒரு யோசனை பரவலாகப் பேசப் பட்டது. அதைப்பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இதைப்பற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த ஊழியர்களுக்கு விற்பனை யின் மீது கமிஷன் கொடுத்தால், தனியார் நடத்தும் வியாபாரத்தைப்போல், சுறுசுறுப்பாக, வந்தவர்களைக் கவனித்து வியாபாரத்தை அதிகரிக்க ஊக்கம் அளிப்பதாக இருக்கும். போக்குவரத்துத் துறையில் அந்த மாதிரி ஊக்கம் அளிக்க ஆரம்பித்த பிறகு, நல்ல முறையில் நடத்தி, நிற்காமல் போன பஸ்களை நிறுத்தி, பஸ்ஸில் போகாதவர்களை எல்லாம் போக வைத்திருக்கிறார்கள். அதைப் போல் ஏதாவது கமிஷன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, போனஸ் என்று வைத்திருக்கிறோம். அந்த போனஸ் லாபத்திலிருந்துதான் கொடுக்கப்படுகிறது. லாபம் அதிகம் கிடைத்தால், போனஸ் தொகையும் அதிகரித்துக்கொண்டு போகும்.

### *Misappropriation of Funds in the Agricultural Credit Society in Kattur Village*

* 106. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any case of misappropriation of funds in the Agricultural Credit Society in Kattur Village, Ponneri Taluk, Chingleput District has been detected;

(*b*) if so, the amount and the nature of misappropriation; and

(*c*) the action taken thereon?



### காட்டூர் கிராமத்தில் விவசாயக் கடன் சங்கத்தில் பணம் கையாடல்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி வட்டம், காட்டூர் கிராமத்தில் விவசாயக் கடன் சங்கத்தில் பணம் கையாடல் செய்யப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு பணம் எப்படி கையாடல் செய்யப்பட்டுள்ளது ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) &(உ) கேள்விகள் எழ இடமில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்த சங்கத்தின் தலைவர் ரூபாய் இரண்டு லட்சத்தை கையாடியதாகவும், பின்னர் ராஜினுமா செய்ததாகவும் செய்தி வந்தது உண்மையா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அப்படி அல்ல. அந்த மாதிரிக் கையாடல் நடைபெறவில்லை என்று தணிக்கை செய்யப்பட்டு அறிக்கை வந்திருக்கிறது.

### *Fraud on Fertilizers in the Co-operative Credit Society at Nakkalakkottai*

* 107. *Q.*—THIRU S. S. THENNARASU : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any fraud on fertilizers has taken place in the Co-operative Credit Society at Nakkalakkottai, Sattur taluk, Ramanathapuram district; and

(*b*) if so, the action taken thereon by the Government?

## நக்கலக்கோட்டை கூட்டுறவு நாணயச் சங்கத்தில் உர மோசடி

**திரு. எஸ். எஸ். தென்னரசு:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுகாவில் உள்ள நக்கலக் கோட்டை கூட்டுறவு நாணயச் சங்கத்தில், உர மோசடி ஏதாவது நடந்திருக் கிறதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) கூட்டுறவு துணைப்பதிவாளர், சிவகாசி, கிராமவாசிகளை விசாரித்து, நக்கலக்கோட்டை கூட்டுறவு கிராமக் கடன் சங்கம் 1973-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் யூரியா உரத்தை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யாமல் தவறாகப் பயன்படுத்தியுள்ளதாகத் தெரியவந்திருப்பதால், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங் களின் சட்டப்பிரிவு 65-ன் கீழ் விசாரணை செய்ய ஆணையிட்டுள்ளார்.

**திரு. எஸ். எஸ். தென்னரசு:** தலைவரவர்களே, சென்ற ஆண்டு இதைப் போலவே தவறு நடந்திருக்கிறது. போலியாகத் தயாரிக்கப்பட்ட பில்கள் நூற்றுக்கு மேல் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஆகையினால் இந்த ஆண்டு இதே சொசைட்டிக்கு அதே தலைவர் மூலமாகத்தான் வினியோகிக்கப் பட்டிருக்கிறதா, அல்லது வேறு ஒருவர் மூலமாகக் கொடுக்கப்பட்டிருக் கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இப்பொழுது உர விற்பனையை தமிழ் நாடு கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டி நடத்துகிற காரணத்தால், இவைகளெல்லாம் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை. மத்திய வங்கியிலும் எந்த விதமான தவறும் ஏற்படாமலிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்று அறிகிறேன்.

**திரு. வே. தங்கப்பாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்த உர சம்பந்த மான தவறுகள் நடப்பதற்கு அங்கே சில அதிகாரிகள் காரணமாக இருந்தார் கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் மீது இலாகா சம்பந்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அப்படி இருந்தால் என்ன நடவடிக்கை என்று அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. விசாரணை முடிந்த பின்னர்தான் யார் குற்றவாளி என்று அறிந்து குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும்.

## *Meter System for the Parking of Cars*

*108 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether the Madras Corporation has sought the permission of the State Government to introduce meter system for the parking of cars in some thoroughfares; and

(*b*) if so, the details thereof?

## கார்களை நிறுத்துவதற்காக மீட்டர் முறை

**திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்):** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒரு சில பொது வழிகளில் கார்களை நிறுத்துவதற்காக மீட்டர் முறையைக் கொண்டுவர சென்னை மாநகராட்சி, மாநில அரசின் அனுமதியைக் கோரியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு மோட்டார் வண்டி விதிகள் தக்கவாறு திருத்தப்பட்டு அரசால் ஏற்பளிக்கப்பட்ட பின்னரே முக்கிய சாலைகளில் கார்களை நிறுத்தி வைப்பதற்கு மீட்டர் முறையைக் கொண்டுவர அனுமதியளிக்க இயலும். இக்கருத்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, எந்தவிதமான முக்கியப் பகுதி களில் மீட்டர்கள் பொருத்தலாமென்று மாநகராட்சி அரசுக்கு யோசனை அனுப்பியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நெரிசல் மிகுந்தும் முக்கிய சாலைகளாகவும் உள்ள இடங்களைத் தேர்ந்தெடுத்து அங்கே எல்லாம் மீட்டர் பொருத்தலாம் என்று மாநகராட்சி கருத்து தெரிவித்திருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, will the Government undertake to put these meters, because if it is entrusted to the Corporation, the meters themselves might disappear.

THE HON. THIRU S. RAMACHANDRAN: Mr. Chairman, Sir, the suggestion of the hon. Member will also be carefully looked into by the Government.

THIRU K. S. ABDUL WAHAB: Mr. Chairman, Sir, I want to know the explanation for the meter system.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கார்களை முக்கியமான இடங்களிலே அவர்கள் நிறுத்திவிட்டுப் போய்விடுவார்களே யானால், குறிப்பிட்ட அளவு காலதாமதமான பிறகு, தானாக இந்த மீட்டர் இவ்வளவு கட்டணத்தைக் கட்ட வேண்டும் என்று ஓடிக்கொண்டே இருக்கும். அதிக நேரம் கார்களை நிறுத்தி வைப்பார்களானால், அதிக ரூபாய் போட்டுக் கொடுக்க வேண்டும்.*

*மாண்புமிகு மேலவைத் தலைவர்: நேரமானவுடனே மணி அடிக்கும். காரை எடுக்கவில்லை என்றால், போலீஸ்காரர் வந்து 10 ரூபாய் பைன் போட்டு விடுவார்.* You need not go to the Court; there will be the Police to punish you.

### *Taxis*

*109 Q.—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether taxis from this State are permitted to ply in other States in the South under a single point tax; and

(b) if so, the details thereof?

### வாடகைக் கார்கள்

*திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) இம்மாநில வாடகைக் கார்கள் ஒருமுனை வரியின் கீழ் ஏனைய தென் மாநிலங்களில் விடுவதற்கு, அனுமதிக்கப்படுகின்றனவா?*

*(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?*





*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.*

*(இ) தமிழ் மாநிலத்திலிருந்து தென்னிந்திய மாநிலங்களில் ஓடும் சாதாரண டாக்ஸிகளின் எண்ணிக்கையின் விவரம் பின் வருமாறு:—*

| மாநிலத்தின் பெயர். | இதுவரை வழங்கப்பட்ட டாக்ஸிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| ஆந்திரப்பிரதேசம் | 133 |
| கேரளா | 228 |
| மைசூர் | .. |

### *Refresher Training for Government Car Drivers*

*110. Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether there is any proposal to give a refresher training to the Government car drivers to prevent the occurrence of a large number of accidents caused by the car drivers; and

(b) if so, the details thereof?

### அரசு கார் ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சி

*தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—*

*(அ) கார் ஓட்டுநர்களால் அதிக விபத்து ஏற்படுவதைத் தவிர்க்க அரசு கார் ஓட்டுநர்களுக்கு மறு பயிற்சிகள் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா?*

*(இ) ஆமெனில், விபரம் என்ன?*

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) இல்லை.*

*திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, கார் ஓட்டுநர்களுக்கு லைசென்ஸ் கொடுப்பதிலே பல கோளாறுகள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அந்த அலுவலகங்களிலே லஞ்சம் காரணமாக, சரியாகக் கார் ஓட்டத் தெரியாதவர்கள் லைசென்சுகள் வாங்கிவிடுகிறார்கள். அதன் காரண மாக விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன. ஆகவே அந்த முறையைச் சரியாக ஆக்குவதற்கு அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.*

[1973 நவம்பர் 24

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:* தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுவாக ஒரு குறையினைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இந்த டிரைவர்களுக்கு லைசென்ஸ் கொடுக்கும் முறையினை சீரமைக்க வேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்து, பல திட்டங்களை அமுலாக்கியிருக்கிறது. ஒவ்வொரு தடவையும், அவர்கள் தங்கள் லைசென்சை எடுக்கின்றபோதோ அல்லது புதுப்பிக்கின்றபோதோ 'ரியாக்ஷன் டைம் டெஸ்ட்', 'விஷன் டெஸ்ட்' போன்றவற்றுக்கெல்லாம் உட்பட வேண்டும் என்று அதற்காக விதிகளைத் திருத்துவதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. அதே போல ஏதேனும் ஒரு இழப்பு, 'ஃபேடல் ஆக்சிடன்ட்' ஏற்பட்டு அதிலே அந்த டிரைவர்கள் ஈடுபட்டுவிடுவார்களானால், மறுபடியும் அவர்களை 'மெடிகல் இன்ஸ்பெக்ஷனுக்கும்', 'விஷன் டெஸ்ட்டுக்கும்' உள்ளாக்க வேண்டும் என்று அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

*திரு. எம். சங்கரலிங்கம்:* தலைவர் அவர்களே, பயணிகளை ஏற்றிச் செல்கிற பஸ்களின் வேகத்தை மட்டுப்படுத்துவதற்கு ஸ்பீடா மீட்டரையே இத்தனை மைலுக்கு மேல் போகவிடாத நிலையை உருவாக்கி விபத்தைத் தவிர்க்க அரசு முன்வருமா?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:* தலைவர் அவர்களே, ஸ்பீடா மீட்டர் மட்டுமல்ல, சில சமயங்களில் மெதுவாகப் போவதாலேகூட விபத்துக்களிலே சிக்கிவிடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடும். ஆகவே Driving habits should be improved அந்த வகையிலேதான் டிரைவர்களைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய நடைமுறை விதிகளை கொஞ்சம் சீராக்குவதற்கும், அதிலே ஸ்டிரிக்டாக நடவடிக்கை எடுப்பதற்கும் அரசாங்கம் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது.

THIRU G. VASANTHA PAI: Mr. Chairman, Sir, does this apply to the bus-drivers or the car-drivers?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, it is for both.

*திரு. எல். பலராமன்:* தலைவர் அவர்களே, இந்த ஓட்டுநர்கள் அதிகமான வேகத்திலே ஓட்டாமலிருப்பதற்கு வெளிநாடுகளிலே அவர்களுடைய குடும்பங்களின் படங்களை அவர்களுக்கு முன்னால் வைத்திருப்பது போல, இங்கேயும் அவர்களுடைய குடும்பத்தினுடைய படத்தை அவர்களுக்கு முன்னால் வைப்பதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



1973 நவம்பர் 24]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:* தலைவர் அவர்களே, அவர்களுடைய குடும்பத்தினுடைய படங்களை முன்னாலே வைத்தால், அதனாலே சில சமயங்களில் பாசமும் ஏற்படும், பயமும் ஏற்படும். இரண்டுமே விபத்துக்களுக்குக் காரணமாக அமைகின்றன.

*திரு. ஜி. சுவாமிநாதன்:* தலைவர் அவர்களே, தனியார் கார்களிலேயும் ஓட்டுகிறார்கள். அப்பொழுது யாருடைய குடும்பத்தினுடைய படத்தை வைப்பது? காரின் சொந்தக்காரருடைய படத்தையா அல்லது ஓட்டுநருடைய படத்தையா?

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:* தலைவர் அவர்களே, இது மிகவும் சிக்கலான கேள்வி.

### *Cheran Bus Transport Corporation*

*111. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether an All- Party delegation met the Collector of Coimbatore district and submitted to him a representation regarding Cheran Bus Transport Corporation on 24th December 1972;

(*b*) if so, the subject-matter of the representation submitted; and

(*c*) the action taken thereon by the Government?

### சேரன் பேருந்து போக்குவரத்துக் கழகம்

*திரு. ஜி. சுவாமிநாதன்:* மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சர்வ கட்சியைச் சேர்ந்தவர்கள் சேரன் பேருந்து போக்குவரத்துக் கழகம் சம்பந்தமாக 24—12—1972 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து மனு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், எது குறித்து அம்மனு சமர்ப்பிக்கப்பட்டது?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) இந்த மனு தாராபுரத்தில் 18—12—1972 அன்று சேரன் போக்குவரத்துக் கழகத்தின் பணியாளர்களுக்கும் "தாராபுரம் பஸ் சர்வீஸ்" நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதல் பற்றியதாகும்.

(உ) புலனாய்வு நடத்திய பின்னர், தாராபுரம் காவல் நிலையத்தில் 292/72 ஆம் குற்ற எண்ணில் இ.பி.கோ. 147, 148, 448, 427, 336, 324, 326 ஆம் பிரிவுகளின் கீழ் 14 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது. அக்காவல் நிலையத்தில் 314/72 முதல் 316/72 வரையிலான சிறு வழக்கு எண்களில் தாராபுரம் பஸ் சர்வீஸைச் சேர்ந்த சுத்தம் செய்பவர் (cleaner) ஒருவர், சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த ஓட்டுநர் ஒருவர், பயணித் துணை ஒருவர் ஆகியோர் மீதும் இ.பி.கோ. 160-வது பிரிவின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இருந்தபோதிலும் இவ்விரு வழக்குகளிலும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் குற்றமற்றவர்களென விடுதலை செய்யப்பட்டனர்.

### Blue Lights in the Motor Vehicles

* 112. Q.—THIRU K. S. GANAPATHY and THIRU R. SAMBASIVAM : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the use of Blue Lights by the Motor Vehicles is an offence under the rules framed under Motor Vehicles Act, 1939; and

(b) if so, the number of cases in which charge sheets have been filed by the Police in this regard in Madras City during June and July 1973?

### மோட்டார் வாகனங்களில் நீல விளக்குகள்

திரு. கே. எஸ். கணபதி & திரு. ஆர் சாம்பசிவம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்—

(அ) மோட்டார் வெஹிக்கிள்ஸ் சட்டம் 1939-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி மோட்டார் வண்டிகள் நீல விளக்குகளைப் பயன்படுத்துதல் குற்றமா ?

(இ) ஆமெனில், 1973 ஆம் ஆண்டு, ஜூன், ஜூலை மாதங்களில் சென்னை நகரில், காவல் துறையினரால் இது சம்பந்தமாக குற்றப்பத்திரிகை தயாரிக்கப்பட்ட நேர்வுகள் எத்தனை ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 1940-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 296-ன்படி, மோட்டார் வாகனங்களின் முகப்புகளில் நீலவிளக்குகளைப் பயன்படுத்துதல் குற்றமாகும்;

(இ) (i) நீல விளக்குகளைப் பயன்படுத்தியதற்காக குற்றப் பத்திரிகை தயாரிக்கப்பட்ட நேர்வுகள் ஜூன் 16 ; ஜூலை 65.

(ii) நீல விளக்குகள் அல்லாமல் வேறு நிற விளக்குகளைப் பயன்படுத்தியதற்காக குற்றப்பத்திரிக்கை தயாரிக்கப்பட்ட நேர்வுகள்—ஜூன் 34; ஜூலை 35.

THIRU G. VASANTHA PAI : Mr. Chairman, Sir, are the Government aware that in the City of Madras, even today, there are a number of cars plying with these blue lamps on the radiator and also singing horns? Will the Government do something to stop it because I have heard that this sort of thing is used only to disperse crowds in most of the foreign countries?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Mr. Chairman, Sir, that is why the Government are already taking serious action and cases are also booked then and there.

மாண்புமிகு மேலவைத்தலைவர் : வினா 93 ஒத்தி வைக்கப்படுகிறது. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

### 2 1973–74 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த முதல் விவர அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவைத் தலைவர் அவர்களே, 1973–74 ஆம் ஆண்டுக்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் கண் வைக்க முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 7.67 கோடி ரூபாய் அளவுக்குத் துணை மானியக் கோரிக்கைகள் கேட்கப்பட்டுள்ளன. இதில் 4.98 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற் பட்டதாகும். எஞ்சிய தொகை, மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய

அரசுத் துறைத் திட்டங்கள், இவற்றுக்கென இம்மானியக் கோரிக்கையில் 3.05 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இக் கோரிக்கையில் கூறப்பட்டுள்ள முக்கியமான செலவினங்களைக் குறிப்பிட விழைகிறேன்.

2. வேலையில்லாத் திண்டாட்டம் எந்த அளவு பார்த்துள்ளதென்பது இந்த அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 3.35 கோடி ரூபாய் செலவில் கீழ்க்கண்ட திட்டங்களை மேற்கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளது :—

(i) அனைத்திந்திய அளவில் மத்திய அரசின் 'ஐந்து இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ், 1973–74-ல் 1.56 கோடி ரூபாய் செலவில் 10,200 ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்தல்.

(ii) இயந்திரங்களைத் தவணைக் கொள்முதல் செய்தல், பணிப் பட்டறைகள் நிறுவுதல், ஆலோசனைப் பணி, தொழில் தொடங்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தயாரித்தல் முதலிய திட்டங்களை 'ஐந்து இலட்சம் வேலை வாய்ப்புத் திட்டத்தின்' கீழ் நிறைவேற்றுவதற்காக, சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்திற்குக் கடனும் மானியமுமாக 66 இலட்சம் ரூபாய் அளவுக்கு வழங்குதல்.

(iii) படித்து வேலையற்றிருக்கிற 500 பேர் சொந்தத் தொழில் தொடங்கும் வகையில், கோழிப் பண்ணைகளை அமைப்பதற்காக, தமிழ் நாடு கோழி வளர்ச்சி நிறுவனத்துக்கு 5.5 இலட்சம் ரூபாய் மானியம் அளித்தல்.

(vi) படித்து வேலையற்றிருப்போருக்குத் தொழில் துறையில் உதவி செய்வதற்காக, 2.6 இலட்சம் ரூபாய் அளித்தல்.

(v) தொழில் நுட்பக் கூட்டுறவுச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக 30 இலட்சம் ரூபாய் அளித்தல்.

(vi) வளர்ச்சி வட்டார அளவில் 300 இடங்களில் வேளாண்–பொறியியல் கூட்டுறவு பணி நிலையங்களை 37.5 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தல்.

(vii) படித்து வேலையற்றிருப்பவருக்கு உதவி செய்வதற்காக 17 இலட்சம் ரூபாய் செலவில் பணிக் கொட்டகைகளைக் கட்டுதலும் குறைந்த வாடகை கொடுக்கும் பொருட்டு 7 இலட்சம் ரூபாய் அளித்தலும்.

(viii) புதிய தொழில் பேட்டைகளைக் கட்டுவதற்காக, சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்துக்கு 13.4 இலட்சம் ரூபாய் அளித்தல்;





இவை அனைத்தும் 16, 21, 23, 45, 52 ஆகிய மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

3. கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டபோது, ஏராளமான மறு விசாரணை மனுக்கள் வந்தமையால், நில அளவை—நிலவரி ஏற்பாட்டு நடவடிக்கைகளில் உள்ள குறைபாடுகளைப் போக்குவதற்காக, 12.5 இலட்சம் ரூபாய் செலவில், நில அளவை—நிலவரி ஏற்பாட்டுப் பணியாளர்களை அரசு நியமித்துள்ளது. வட ஆர்க்காடு, இராமநாதபுரம் மாவட்டங்களில் தனித் தனிப் பட்டா வழங்குவதற்காக, நில உட்பிரிவுத் திட்டத்தை முனைப்பாக மேற்கொள்ளுவதற்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு 5.7 இலட்சம் ரூபாய் செலவாகும்.

4. தமிழ் நாடு அரசு ஓய்வூதியம் பெறுபவர்களில் சென்னை மாநகரில் திங்களுக்கு 300 ரூபாய் வரை பெறுபவர்களுக்கும், நீலகிரி மாவட்டத்தில் இந்த வரையறையின்றி ஓய்வூதியம் பெறுகிற அனைவருக்கும் அரசுச் செலவிலேயே முன்னோடித் திட்டமாக பண அஞ்சல் மூலம் ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டம், மேலும் ஐந்து மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனால், கூடுதலாக 5.19 இலட்சம் ரூபாய் தொடர் செலவாகும். இத் தொகை 9-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளது. சத்துணவுத் திட்டத்தின்கீழ் இதுவரை சத்துணவு கொடுக்கப்படாதிருக்கும் இடங்களில், இத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டுவந்து, 50,000 சிறுர்களுக்கும் சூலுற்ற மகளிருக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சத்துணவு வழங்குவதற்காகவும் இக் கோரிக்கையில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பூம்புகார் வளர்ச்சிப் பணிகளுக்காக, 8.75 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கென 11-வது மானியத்தில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 20 சதவீத கொள்முதல் ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதற்காக பல்வேறு மாவட்டங்களிலும் கொள்முதல் பணிக்கும் சோதனைச் சாவடிப் பணியாளர்களுக்கும் ஆகும் செலவுக்காகவும் இதே மானியக் கோரிக்கையின்கீழ் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

6. காவலர் படையைச் சீரமைக்கும் திட்டத்தின் பகுதியாக, காவல் துறைக்குக் கம்பியில்லாத் தந்தி சாதனங்கள், அறிவியல் கருவிகள் முதலியவற்றை வாங்கும் பொருட்டு 65 இலட்சம் ரூபாய் அரசு அனுமதித்துள்ளது; 15-வது மானியக் கோரிக்கையில் இதற்குச் சட்டமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

7. திருச்சியில் பட்டமேற்படிப்பு நிலையத்தை ஏற்படுத்துவதற்காக, சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அரசு 10 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளது. மதுரைப் பல்கலைக் கழக அலுவலக வளாகத் திட்டப் பணிகளுக்காக, மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு 10 இலட்சம் ரூபாய் அரசு அனுமதித்துள்ளது. 16-வது மானியக் கோரிக்கையில் இவைகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது.

8. வரவு–செலவுத் திட்ட உரையில் நான் குறிப்பிட்ட வண்ணம், மறைமலைநகர் புதிய நகரமாக உருவாக்கப்படும். நெரிசல் மிக்க சென்னை மாநகரிலேயே மக்கள் மேலும் குவிவதற்கு மாற்றாக, அவர்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் இத்தகைய வளர் நகரங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அமைப்பை அரசு தோற்றுவித்துள்ளது. இதற்கு அளிக்கப்பட்டுள்ள மானியம் 18-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. வேர்க்கடலைப் பயிருக்குத் தரையில் இருந்தபடியே பூச்சிக்கொல்லி மருந்து தெளிக்கும் திட்டத்தைப் பல்வேறு மாவட்டங்களிலும் 1.37 இலட்சம் ஏக்கர் பரப்பில் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு 17 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது 19-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் உதவியுடன் தமிழ்நாட்டில் ஆடு வளர்ப்புத் திட்டத்தை 83 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ள அரசு அனுமதி வழங்கியுள்ளது. துணை மதிப்பீட்டில் 21-வது மானியக் கோரிக்கையின்கீழ் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

11. விடுதலை வெள்ளி விழாவைக் கொண்டாடும் வகையில், தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த 100 வெள்ளி விழாச் சிற்றூர்களில், ஊர் ஒவ்வொன்றிலும் 23 வீடுகளை, 46 இலட்சம் ரூபாய் செலவில் கட்டிக் கொடுப்பதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. மிகக் கீழ்த் தட்டிலுள்ள அரிசனங்களுக்கும் நிலமற்ற தொழிலாளர்களுக்கும் இவ் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இதற்கு வேண்டிய தொகை 29-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

12. நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறையில் பத்து ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ள காங்கித் தொழிலாளர்களின் பணியை 1973-ம் ஆண்டு ஏப்ரல் முதல் நாளிலிருந்து முறையான அரசுப் பணியின்கீழ் அரசு கொண்டு வந்துள்ளது. இதற்கு ஆண்டு தோறும் தொடர் செலவு 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஆகும். பாம்பன் கடற்காலுக்குக் (Pamban Strait) குறுக்கே பாலம் கட்டும் பணியைக் கவனிப்பதற்காக, 33-வது மானியக்



கோரிக்கையில் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. 11 இலட்சம் ரூபாய் செலவில் இதற்கு வேண்டிய பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதுவும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளது.

13. இராமநாதபுரம், தருமபுரி மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளில் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு முடிவடையாமலிருக்கும் மண்வளப் பணி, காடு வளர்ப்புப் பணி, சாலைப் பணி முதலியவற்றை நிறைவேற்றி முடிப்பதற்காக, 45 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

14. 1973 ஏப்ரல் முதல் குறைந்தபட்ச ஓய்வூதியம் 50 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு ஆண்டு தோறும் 30 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். இத் தொகை 37-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

15. இளைஞர் அணியில் 2,600 தொண்டர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கு 83 இலட்சம் ரூபாய் செலவாகும். வரவு–செலவுத் திட்ட உரைகளில் முன்னரே பலமுறை நான் குறிப்பிட்டவாறு, இத் திட்டம் படித்து வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து, அவர்களின் தொண்டினைப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டமாகும். இது 33-வது மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

16. தஞ்சாவூர் மாவட்டம், மசுவணியாற்றின் குறுக்கே மதகு ஒன்றை அமைக்க 20 இலட்சம் ரூபாயும் மதுரை மாவட்டம் பெரியகோம்பை ஆற்றின் குறுக்கே ஏரி ஒன்றை அமைக்க 19 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப் பட்டுள்ளன. துணை மதிப்பீடுகளில் இந்த பாசனத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

17. தலைமைச் செயலகத்தில் இடநெருக்கடி அதிகமாயிருப்பதால், கோட்டைப் பகுதிக்குள்ளேயே தலைமைச் செயலகத்துக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கென அரசு 1.2 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது. இக்கட்டிட வேலைத் திட்டத்துக்காக 47-வது மானியக் கோரிக்கையில் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. திருச்சியில் அரசு அலுவலக பல-மாடிக் கட்டிடம் ஒன்றை 14 இலட்சம் ரூபாய் செலவில் கட்டும் செயற்குறிப்பும் இம்மானியக் கோரிக்கையில் அடங்கியுள்ளது.

18. பேருந்துப் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கும்போது, தனிப்பட்ட உரிமையாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட இழப்பீட்டுத் தொகைகளையும், தமிழ் நாடு அரசுப் போக்குவரத்துத் துறையிடமிருந்து போக்குவரத்துக் கழகங்களுக்கு மாற்றப்பட்ட பேருந்துகள் பிற உடைமைகள் ஆகியவற்றின் மதிப்பையும், அந்தந்தக் கழகங்களில் அரசின் பங்கு மூலதனமாகவும், கடனாகவும் பிரிக்கப்பட்டன. பல்லவன் போக்குவரத்துக் கழகம், பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகம், சேரன் சாலைப் போக்குவரத்துக் கழகம், அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகியவைகளுக்கு கடன் பகுதியை வழங்க 52-வது மானியக் கோரிக்கையும் மூலதனப் பகுதியை வழங்க 45-வது மானியக் கோரிக்கையும் வகை செய்கின்றன. இதுவன்றி 52-வது மானியக் கோரிக்கையில், தமிழ் நாடு கோழி வளர்ப்புக் கழகத்துக்கு அனுமதிக்கப்பட்ட 10 இலட்சம் ரூபாய், சக்தி பைப் நிறுவனத்துக்கு அளிக்கப்பட்ட கடன் 23 இலட்சம் ரூபாய், சதர்ன் ஸ்ட்ராக்சுரல்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட கடன் 20 இலட்சம் ரூபாய் இவையும் சேர்க்கப்பட்டுள்ளன.

19. சென்ற ஆண்டு டிசம்பர் திங்களில் வெள்ளத்தாலும், சூறாவளியாலும் ஏற்பட்ட பெருஞ் சேதம் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும். அவற்றில் சேதமடைந்த வீடுகளைப் புதுப்பித்துக் கட்டுவதற்காக, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், சேலம் மாவட்டங்களில் தக்காவிக் கடனாக அரசு 67 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது. அடையாள நிதி ஒதுக்கத்தின் மூலம் இதற்கு மன்றத்தின் ஏற்பிசைவு 52-வது மானியக் கோரிக்கையில் வேண்டப்பட்டுள்ளது. கடந்த ஆண்டிலும், இந்த ஆண்டின் முதல் சில மாதங்களிலும் மின்சார வெட்டு இருந்ததன் காரணமாக, நூல் கிடைக்காமல் போகவே, பல மாவட்டங்களில் கைத்தறி நெசவாளர் வேலையற்றிருந்தனர். கைத்தறி நெசவாளர்களுக்குக் கடனாக 1 கோடி ரூபாய் வழங்க அரசு அனுமதி அளித்துள்ளது. இதற்கும் இப்போது ஒப்புதல் வேண்டப்படுகிறது.

20. சென்னை, பட்டினப்பாக்கத்தில் இப்போதுள்ள குடியிருப்புத் தொகுதிகளில், தமிழ் நாடு அரசுப் பணியாளர் வாடகை வீட்டு வசதித் திட்டத்தின்கீழ், கூடுதல் அங்கணங்கள் கட்டுவதற்காக, 23.4 இலட்சம் ரூபாய் செலவிட அரசு அனுமதி அளித்துள்ளது. இத் திட்டத்துக்கென்று கடன் வழங்க, இத்துணை மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளது.

21. துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ள செலவினங்களில் முக்கியமானவற்றை நான் இதுவரை எடுத்துக் கூறினேன். உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள விரிவான விளக்கக் குறிப்புகளில் . இவற்றிற்கான



விவரங்களைக் காணலாம். துணை மதிப்பீட்டில் சேர்த்துள்ள ஏனைய திட்டங்களைப் பற்றி தனியே விவரித்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்று கூறி, 1973–74 ஆம் ஆண்டின் முதல் துணை மானியக் கோரிக்கைகளை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

## 3. 1968–69 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை குறித்த விவர அறிக்கையினை அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அவைத் தலைவர் அவர்களே, 1968–69 ஆம் ஆண்டு மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றத்தின்கண் வைக்க முன்வந்துள்ளேன். அந்த ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின்கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருக்கிறது. அத்தகைய செலவினங்கள் பற்றிய விவரங்களை இம் மானியக் கோரிக்கையில் காணலாம்.

2. 1971–72 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு, 1968–69 ஆம் ஆண்டிற்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகியிருப்பதை குறிப்பிட்டுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்கு மானியக் கோரிக்கைகளை மன்றத்தின் முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்குகள் ஆய்வுக் குழு பரிவுரை செய்தது. அவ்வண்ணமே, 1968–69 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின்கண் வைக்கப்படுகிறது. மொத்தத்தில், மிகைச் செலவு 5.52 கோடி ரூபாயாக இருக்கிறது. இதில் பொதுக் கடனைத் திருப்பிச் செலுத்தும் செலவினம் சாட்டிய செலவினமாகும். இதுவே 4.53 கோடி ரூபாய் அளவுக்கு பெரிய இனமாக இருக்கிறது. ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணம் என்ன என்பது, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளது.

1968–69 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மாமன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

### 4. தனி உறுப்பினர் தீர்மானம்.

**கல்விச் சலுகைகள் ஏழை மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய நிலையிலிருக்கும் மாணவர்கள் அனைவருக்கும் நீட்டிக்கப்படுவது.**

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு தலைவரவர்களே, பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:—

"That this House recommends to the Government that all educational concessions, scholarships and other benefits be extended to all students who are poor and socially downtrodden irrespective of their caste or religion."

The Resolution was duly seconded.

MR. CHAIRMAN: Resolution moved—

"That this House recommends to the Government that all educational concessions, scholarships and other benefits be extended to all students who are poor and socially downtrodden irrespective of their caste or religion."

திரு. டி. சந்தோஷம்: மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய தொண்டை இன்றைக்காவது என்னோடு ஒத்துழைக்கும் என்ற முழு நம்பிக்கையோடு என்னுடைய தீர்மானத்தை விளக்கி அதற்கு ஆதரவாக ஒரு சில கருத்துக்கள் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தீர்மானத்தின் அடிப்படைக் கருத்து யாதெனின் ஹரிஜனங்களுக்கு, இந்துக்களுக்கு, இன்னும் இதர ஜாதியின் அடிப்படையில் சில ஜாதியினருக்கு வழங்கப்படும் உதவித் தொகை, ஸ்காலர்ஷிப், கல்விச் சலுகைகள், இன்னும் இதர நன்மைகள் இனிமேல் ஜாதி மதம் என்ற அடிப்படையில் வழங்கப்படாமல், பொருளாதார நிலையைப் பொருத்து, அதாவது அவர்களுடைய ஏழ்மை நிலையை, அவர்கள் சமுதாயத்தில் அடைந்திருக்கின்ற சூழ்நிலை இவைகளைக் கருதி, அந்த அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமென்பது. இந்தத் தீர்மானத்தை மேலெழுந்தவாரியாகப் பார்த்தால், ஏதோ ஹரிஜனங்களுக்கும் சில பிற்பட்ட வகுப்பினருக்கும் விரோதமாக இந்தத் தீர்மானம் வந்திருக்கின்றதோ என்று தோன்றலாம். ஆனால் உண்மையில் அது அப்படியல்ல. இந்தத் தீர்மானம் நிச்சயமாக ஏழை ஹரிஜனங்களுக்கும், ஏழை பிற்பட்ட சமூகத்தினருக்கும் ஆதரவாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றதே ஒழிய, இது அவர்களுக்கு விரோதமாகக் கொண்டு வட்ப்பட்ட தீர்மானம் அல்ல. நான் ஹரிஜனங்களின் முன்னேற்றத்தை ஆதரிக்கின்றவன். அவர்களும் எப்போதுமே என்னைப் பரிபூரணமாக ஆதரித்து வந்தார்கள். இது அவர்களுக்கு விரோதமாகக் கொண்டுவந்த



தீர்மானம் அல்ல. ஹரிஜனங்களுக்கு என்று வழங்கப்படும் சலுகைகளும், நன்மைகளும் உண்மையிலேயே வறுமையில் வாடுகின்ற, சேரியில் வாடுகின்ற விவசாயப் பண்ணைகளில் தொழில் செய்கின்ற அந்தத் தேவை மிக்க மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். ஹரிஜனங்களுக்கு என்ற பெயரால் வசதி மிக்க பல மேல் நிலையில் இருக்கின்றவர்கள் தட்டிக் கொண்டு போய்விடக் கூடாது என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றேன். முன் ஒரு காலம் இருந்தது. அப்போது இருந்த வசதிபடைத்த ஹரிஜனங்கள் எண்ணிக்கை விரல்விட்டு எண்ணக் கூடியதாக இருந்தது. மற்ற ஹரிஜனங்கள் ஏழைகளாக, சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது காலம் மாறிவிட்டது. இப்போது பல ஹரிஜனங்கள் கலெக்டர்களாகவும், போலீஸ் சூப்பிரண்டுகளாகவும், என்ஜினீயர்களாகவும், டாக்டர்களாகவும், மாவட்ட நீதிபதிகளாகவும், ஏன் உயர்நீதி மன்ற நீதிபதிகளாகவும், எம்.எல்.ஏ., எம்.எல்.சி., எம்.பி.க்கள் ஆகவும், இப்படி பல உயர்ந்த பதவியில் இருந்து வருகின்றார்கள். ஆனால் இந்தச் சூழ்நிலையில் ஹரிஜனங்களுக்கு என்று ஜாதியின் அடிப்படையில் சலுகைகள் ஒதுக்கப்படுமானால், நான் நினைக்கிறேன், இந்தச் சலுகைகள் கலெக்டர் மகனுக்கும், இன்னும் இதர உயர் நிலையில் உள்ளவர்களுடைய குழந்தைகளுக்கும் தான் சேருமே அல்லாது உண்மையில் அது போய்ச்சேரவேண்டிய இடமாகிய சேரியில் வாழ்கின்ற ஏழை ஹரிஜனங்களுக்கு அது போய்ச் சேராது என்பதுதான் என்னுடைய நம்பிக்கை. நடைமுறையில் இருக்கின்ற ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். ஏதாவது ஒரு கல்லூரியில் எம். எஸ்ஸி-யில் இரண்டு சீட்டுகள் அல்லது எம்.பி.பி.எஸ்-ஸில் இரண்டு சீட்டுகள் இருக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள். அல்லது டெபுடி கலெக்டர் உத்தியோகத்திற்கு, நேர்முகத் தேர்வு ஹரிஜனங்களுக்கு நடத்தி, தேர்ந்தெடுத்து அமர்த்த ஒரு இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த இடத்திற்கு ஒரு ஹரிஜன கலெக்டருடைய மகன், ஒரு ஹரிஜன டாக்டருடைய மகன், ஒரு ஹரிஜன எம்.எல்.ஏ.-வினுடைய மகன், அவர்களைப்போல் ஒரு ஹரிஜன ஏழைப் பண்ணையாள் மகன் இவர்களெல்லாம் சேர்ந்து விண்ணப்பம் செய்கின்றார்கள் என்றால், அந்த நேர்முகத் தேர்விலே யாருக்கு வெற்றி கிடைக்கும் என்று நான் கேட்கின்றேன். நான் என்ன நினைக்கிறேன்? நிச்சயமாக அந்தப் பண்ணையாள் மகனுக்கு அது கிடைக்காது. கலெக்டருடைய மகனுக்கோ, எம்.எல்.ஏ.-னுடைய மகனுக்கோ இதர பெரிய பதவியில் உள்ளவருடைய மகனுக்கோதான் கிடைக்குமே தவிர, உண்மையில் இந்த இடங்கள் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கப் பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறாது

என்று நினைக்கிறேன். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, தகப்பனாருடைய செல்வாக்கு. அதன் மூலம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சிபாரிசு. இரண்டு, ஒருவேளை அந்தச் செல்வாக்கும் அந்தச் சிபாரிசும் தலையிடாமல் இருந்தால்கூட, அந்த மேல் வகுப்பில் இருக்கின்ற அந்த மாண வர்கள் ஒரு பெரிய குடும்பத்திலிருந்து வந்தவர்கள். நேர்முகத் தேர்வில், இண்டர்வியூவில், நிச்சயமாக அந்தச் சேரியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஏழை ஹரிஜன மாணவனைக் காட்டிலும் மற்றவர்கள் நல்லவிதமாக பதில் அளிப்பார்கள். ஆக இண்டர்வியூவில் அதிக மார்க்குகள் கிடைக்கும். அவர் கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வாய்ப்பு ஏற்படும். அந்த ஏழை ஹரிஜன மாணவருக்குக் கிடைக்காது. ஆகவே ஜாதி அடிப்படையில் மட்டும் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுமேயானால், பணக்கார அல்லது நல்ல அந்தஸ்தி லுள்ள ஒரு சில குடும்பங்களிலிருந்து வருகின்ற ஹரிஜனங்களுக்குத்தான் அந்தச் சலுகைகள் போய்ச் சேருமே தவிர, உண்மையிலேயே குடிசையிலே வாழ்கின்ற ஏழை ஹரிஜனங்களுக்குப் போய்ச்சேராது என்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன். மற்றொரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன், கற்பனை யான உதாரணம்தான். நடைமுறையிலும் சாத்தியம் உள்ளதுதான். ஒரு ஹரிஜன கலெக்டர் இருக்கின்றார் என்று வைத்துக்கொள்வோம். அவருடைய நேர்முக எழுத்தர், பர்சனல் கிளார்க் ஒரு பிராமணர். அவருடைய கடைநிலை ஊழியர், பியூன், ஒரு கிருத்துவர். இந்த மூன்று பேர்களுக்கும் குழந்தைகள் இருக்கின்றார்கள் என்ற வைத்துக்கொள்வோம். இந்த மூன்று பேரும் கல்லூரி யில் சேர்ந்து படிக்கப் போகின்றார்கள். அங்கே ரூ. 1,500 மாதச் சம்பளம் வாங்குகின்ற ஹரிஜன கலெக்டருடைய குழந்தைக்கு கல்விச்சலுகை, ஸ்காலர்ஷிப் உண்டு. ஆனால் ரூ. 250 மாதச் சம்பளம் வாங்குகின்ற பிராம்மண எழுத்தர் மகனுக்குக் கிடையாது; ரூ. 150 மாதந்திரச் சம்பளம் வாங்குகின்ற கிருத்துவ பியூன் மகனுக்கும் கிடையாது. இது நியாயமா? இந்த நிலை நீக்கப் பட வேண்டாமா? இந்த அநீதியான முறை மாற்றியமைக்கப்பட வேண்டாமா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இதையொட்டி மற்றொரு உதாரணத்தைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சேரியிலே அடுத்தடுத்த குடிசைகளிலே இரண்டு பங்காளிகள் குடியிருக் கின்றார்கள். ஒரே மூதாதையருடைய வம்சத்தைச் சேர்ந்தவர்கள், ஒருவன் பெயர் ராக்கப்பன். அவன் இந்து. அடுத்த குடிசையில் இருப்பவன் பெயர் ராயப்பன். அவன் கிருத்துவன். இந்த இரண்டு பேர்களிலே . . .

(குறுக்கீடு)





. . . ராயப்பன் என்று சொல்லிவிட்டேனா? வேறு எந்தப் பெயரையாவது வைத்துக்கொள்ளுங்கள். சந்தோஷம் என்று வைத்துக்கொள்வோமா? சரி, சந்தோஷம் என்றே வைத்துக்கொள்வோம். இந்த இரண்டு பேர்களுடைய குழந்தைகளுமே கல்லூரிக்குச் சென்றால், பி.ஏ. அல்லது பி.எஸ்ஸி.-யில் சேர்ந்தால், ராக்கப்பனுடைய குழந்தைக்குச் சலுகைகள் உண்டு. ஆனால் இந்த சந்தோஷத்தின் குழந்தைக்கு மட்டும் மதத்தின் அடிப்படையிலே அந்தச் சலுகைகள் மறுக்கப்படுகின்றன. ஆனால் சந்தோஷத்தின் குழந்தை உண்மையில் கல்வியில் ஆர்வமுள்ளவனாக, திறமையுள்ளவனாக இருக்கலாம். உண்மையிலேயே இவன்தான் ஏழையாகக் கூட இருக்கலாம். ராக்கப்பன் குழந்தைக்கு கல்விச் சலுகைகளைக் கொடுத்து, சந்தோஷத்தின் குழந்தைக்கு மாத்திரம் கொடுக்காதது நிச்சயமாக அநீதி என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இருந்த மாவட்டத்லே, மதுரையில் ஒய்.எம்.சி.ஏ.-யில் ஒரு கருத் தரங்கு நடத்தினோம். இரண்டு நாட்கள் நடந்தது. அந்தக் கருத்தரங்கிலே பேசிய பொருள் என்ன? 'ஸ்டுடன்ஸ் அன்ரெஸ்ட்'. இதிலே முதல் நாளிலே நான்கு பெரியவர்கள், அதாவது கல்லூரி முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவர்கள் எல்லோரும் பேசினார்கள். இரண்டாவது நாள் கருத்தரங்கிலே நான்கு மாணவர்கள் பேசினார்கள். அந்த நான்கு மாணவர்கள் பேசியபோது கூறிய கருத்து என்ன தெரியுமா? அவர்கள் சொன்னார்கள் இந்த மாணவர்கள் மத்தியிலே ஒழுக்கக்கேடு, ஸ்டிரைக் இவைகள் எல்லாம் அனாவசியமாக ஏற்படுவதற்குக் காரணமே, ஜாதியின் பெயரால் மட்டுமே, கல்வி கற்க விருப்பமில்லாதவர்களுக்கும் கல்வி கற்கத் தகுதியற்றவர்களுக்கும், ஸ்டடியில் ஆப்டிட்யூட் இல்லாதவர்களுக்கும் நிறைய ஸ்காலர்ஷிப் வழங்கிவிடுவது. அவர்கள் படிப்பதற்காக வருவதில்லை, ஏதோ ஸ்காலர்ஷிப் வாங்கிக்கொண்டு உல்லாசமாகப் பொழுதைப் போக்கலாம் என்ற நோக்கத்தோடு மாத்திரம் கல்லூரியில் வந்து சேர்ந்துவிடுகின்றார்கள். அவர்கள் தான் அனாவசியமான ஸ்டிரைக்குகளைத் தூண்டுகிறார்கள். அவர்களாலேதான் இந்த ஒழுக்கக்கேடுகள் எல்லாம் நடக்கின்றன என்று அந்த மாணவப் பிரதிநிதிகளில் ஒருவர் கூறினார். ஆகவே இந்தக் கல்விச் சலுகைகளை மதத்தின் அடிப்படையிலே, அவர்களுடைய ஸ்டடி ஆப்டிட்யுட்-ஐக் கருதாமல், தகுதியைக் கருதாமல், வறுமையைக் கருதாமல், தேவையைக் கருதாமல், இன்டிஸ்கிரிமினேட்டாக, ஒரு கண்மூடித் தனமாக வழங்குவதன் மூலமாக இப்படிச் சில கேடுகள் ஏற்படுகின்றன. இறுதியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நாம் சொல்லுகிறோம், ஜாதிகளை ஒழிக்க வேண்டுமென்று. சமத்துவ சமதர்ம

[திரு. டி. சந்தோஷம்] [1973 நவம்பர் 24

சமுதாயம்தான் நமது இலட்சியம் என்று அடிக்கடி மேடைகளிலே கூறுகின்றோம். ஆனால் நடைமுறையில் ஜாதியின் அடிப்படையில்தான் கல்விச் சலுகைகளைக் கொடுக்கிறோம். இதன் விளைவு என்ன என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அது ஜாதி உணர்வினைத் தூண்டுகின்றது. மாணவர்களுடைய இளம் உள்ளங்களிலே ‘Caste conseiousness’ உருவாக்குகிறது. அவர்களுடைய மனதிலே வாழ்விலே, ஜாதி என்பது நிரந்தரமாக இருந்துவிடுகிறது. இப்படிப்பட்டதொரு அடிப்படை இருக்க வேண்டுமா என்பதை இப்போதே நாம் சிந்திக்க வேண்டும்.

நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. இந்தத் தீர்மானத்தின் அடிப்படை நோக்கங்கள் வெளிப்படையாக அறிந்துகொள்ளத்தக்கவைதான். இதிலே நான் நீண்டதொரு விளக்கத்தைத் தர விரும்பவில்லை. நமது மாநிலத்தில் நாம் சோஷலிஸத்தை நோக்கி வெற்றி நடைபோட்டுச் செல்லுகிறோம் என்று பெருமைப்படுகிறோம். ஆனால் சோஷலிஸத்தை இறுதி இலட்சியமாகக் கொண்டுள்ள ஒரு நாட்டிலே ஜாதி மதம் என்பவை இந்த அளவிற்கு வற்புறுத்தப்பட வேண்டுமா, ஜாதி மத அடிப்படையில்தான் மனிதனுடைய கருத்துக்களும் எண்ணங்களும் உருவாக வேண்டுமா? கல்விச் சலுகைகள் போன்றவற்றினை இன்னும் ஜாதியின் அடிப்படையில் தான் வழங்கிக்கொண்டிருக்க வேண்டுமா என்பதைத் தயவு செய்து இந்த நேரத்தில், தலைவரவர்களே, ஆட்சியில் உள்ள பொறுப்புமிக்கவர்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு காலத்தில் இந்த அடிப்படையிலே சில சலுகைகளைக் கொடுப்பதற்கு நியாயம் இருந்தது. ஆனால் இப்போதுள்ள மாறுபட்ட நிலையில் அவை இன்னமும் வற்புறுத்தப்பட வேண்டுமா? நாம் சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அந்த நிலையில் நாம் இப்பிரச்சினைகளை பொருளாதார அடிப்படையில் அணுக வேண்டும். ஒருவர் எந்த ஜாதி அல்லது மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், அவர் உண்மையிலேயே வறுமையில் உள்ளவரா, அவருக்குக் கல்வி கற்க விருப்பம் இருக்கின்றதா, அவருக்கு வேண்டிய திறமை இருக்கின்றதா என்பதையெல்லாம் பார்த்து, அந்த அடிப்படையில் அவருக்குச் சலுகைகள் கொடுக்கப்பட வேண்டுமேயன்றி ஜாதியின் அடிப்படையில் மட்டும் கொடுப்பது எந்த விதத்திலும் நியாயமாகாது என்றே இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதை எந்த நேரத்தில் வற்புறுத்தலாம் என்றால், இரண்டு ஏழைகள், வேறு ஜாதியைச் சார்ந்தவர்கள், ஒரே திறமை மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்றால், அந்த நேரத்தில் யாருக்கு முன்னுரிமை கொடுப்பது என்று இருந்தால், அப்போது வேண்டுமானால் அந்த அடிப்படையில் கொடுக்கலாமே தவிர,



1973 நவம்பர் 24] [திரு. க. அறிவழகன்]

ஜாதியின் அடிப்படையிலேயே இந்தச் சலுகைகளைக் கொடுப்பது நியாயத்திற்கு விரோதமானதாகும் என்பதே என்னுடைய கருத்து. இது சோஷலிஸக் கருத்துக்கும் முரணானது என்று குறிப்பிட விரும்புகிறேன். எனவே ஜாதி அடிப்படை என்பதை விட்டுவிட்டு, பொருளாதார அடிப்படையில் மட்டும் இப்படிப்பட்ட சலுகைகளை வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

இதைச் சொல்லும் இதே நேரத்தில், இதற்கான மாற்றுத் திட்டம் என்று எது ஒன்றையும் நான் இங்கே குறிப்பிட விரும்பவில்லை. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டுமென்று மட்டும்தான் சொல்லுகின்றேன். பொருளாதார அடிப்படையில் இந்த மாற்றங்கள் இருக்க வேண்டுமென்று நான் இப்போது சொல்லும் இந்தக் கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளுமானால், அந்த அடிப்படையில் அதை எப்படி அமைக்கலாம் என்பதை யோசிப்பதற்கு மேலதிகாரிகளைக் கொண்டதொரு குழுவினை அரசு அமைத்து, ஒரு மாதம் இல்லை, இரண்டு மாதங்களிலே அக்குழு ஒரு மாற்றுத் திட்டத்தைத் தயாரித்துக் கொடுக்க வேண்டும் என்று உத்தரவிடுவது சிரமமாக இருக்காது. இப்படி ஒரு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுவந்து, அதை வரும் கல்வியாண்டிலிருந்தே நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நல்ல கருத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் இந்த நியாயமான கோரிக்கையை முழு மனத்தோடு ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு தலைவரவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்து அமருகிறேன்.

திரு. க. அறிவழகன்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் கொண்டுவந்துள்ள இந்தத் தீர்மானத்தின் கீழ் ஒரு சில கருத்துக்களைச் சொல்வதற்கான வாய்ப்பினைக் கொடுத்ததற்காக தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படை நோக்கம் ஜாதி மத வேறுபாடுகள் மாற வேண்டும் என்பதாகத்தான் இருக்கும் என்று கருதி, இவ்வாறு ஜாதி சமய வேறுபாடுகளைக் களைவதற்கான எல்லா முயற்சிகளிலும் நாடும், மக்களும், அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதில் எனக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. அதே நேரத்தில் சமுதாயத்தில் ஏழையாகவும் பின் தங்கியவர்களாகவும் உள்ளவர்களுக்கு, எம்மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்

தாலும் ஏழையாக உள்ள எல்லோருக்கும், கல்வியில் பின் தங்கிய நிலையிலுள்ள எல்லோருக்கும் சலுகைகள் ஒரு மனதாக வழங்கப்பட வேண்டுமென்று இந்தத் தீர்மானம் வற்புறுத்துகின்றது. இதிலே இரண்டு பிரச்சினைகள் இருக்கின்றன.

ஒன்று, இந்து சமுதாயத்தினைச் சார்ந்த ஏழைக் குழந்தைகள் அனைவருக்கும், ஆதித் திராவிட மக்கள், பின் தங்கிய நிலையிலுள்ள மக்கள், அனைவருக்கும் இப்படிப்பட்ட சலுகைகள் முழுமையாகத் தரப்படுகின்றனவா, அந்த அளவிற்கு நமது நிதி நிலை இருக்கின்றதா என்பது முதல் கேள்வி யாகும். இரண்டாவது, அதே நிலையில் வருந்திக்கொண்டிருக்கின்ற, வாழ்க்கையில் மிகவும் பின்தங்கியிருக்கின்ற சமுதாயத்திலுள்ளவர்கள் சிலர், ஒரு சில காரணத்தினால் மதம் மாறிய காரணத்தினால், இந்தச் சலுகைகளைப் பெறமுடியாததொரு சூழ்நிலை இருக்கிறது. அரிசன மக்கள் வாழும் பகுதிகளுக்கு நான் சென்றிருந்த நேரங்களிலே, இந்து சமுதாயத்தைச் சார்ந்த ஏழை அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகள், அங்கே உள்ள கிருத்துவ சமுதாயத்தைச் சார்ந்த ஏழைக் குழந்தைகளுக்கும் கிடைக்கக்கூடாதா என்று நான் எண்ணியதுண்டு. ஆதித் திராவிடர்களாக இருந்து பின்னர் கிருத்துவர்களாக மதம் மாறியதன் காரணம், அவனது தந்தை காலத்திலோ அல்லது பாட்டன் காலத்திலோ அப்படி மதம் மாறியதற்குக் காரணம், அந்த நேரத்திலே அவர்களுக்கு அப்படி மாறினால் கல்விச் சலுகைகள் கிடைக்கின்றன என்பதுதான். அப்படி மதம் மாறியவர்கள் இன்றையதினம் சமுதாயத்தில், இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள சில சட்டங்களின் காரணமாக, அந்தக் கல்விச் சலுகைகளைப் பெற முடியாததொரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இப்போது அவர்களுக்கு அந்தச் சலுகைகள் மறுக்கப்பட்டதன் விளைவாக இப்படி மதம் மாறிய அந்தச் சமுதாயத்தினர் கல்வித் துறையில் எந்த விதமான முன்னேற்றத்தையும் பெற முடியாததொரு சூழ்நிலையில் இருக்கின்றார்கள். ஆனால் இதே நிலையில் ஏழைகளாக உள்ள வேறு சில சமுதாயத்தினருக்குப் பல சலுகைகள் வழங்கப்படுகின்றன. இந்து சமுதாயத்திலேயே 'கௌண்டர்' என்று போட்டுக்கொண்டால், அவர் உயர்ந்த ஜாதியைச் சார்ந்தவர், அவருக்குச் சலுகை கிடையாது. ஆனால் அவருடைய பாட்டனாரோ அல்லது தகப்பனாரோ 'கௌண்டன்' என்று போட்டுக்கொண்டிருந்தால், அவர் தாழ்ந்த ஜாதியைச் சார்ந்தவராகக் கருதப்பட்டு, பல சலுகைகளைப் பெறுகின்றார். இந்த நிலைகள் எல்லாம் காலப்போக்கிலே மாற்றப்படத்தான் வேண்டும் என்பதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லையென்றே கருதுகின்றேன். இந்தத் தீர்மானத்தின்படி நாம் முழு மாற்றங்களைச் செய்யக்கூடிய நிதி வசதிகளைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், என்றைக்காவது ஒரு நாள் இப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டு வரத்தான் வேண்டும்,



இந்த மாற்றங்களை நாம் அடையத்தான் வேண்டும், எல்லாம் எல்லோருக்கும் என்ற சூழ்நிலை வரவேண்டும் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. மேலை நாடுகளிலே 16 வயது வரையில் எந்தவிதமான பாகுபாடும் பாராமல் எல்லோருக்கும் சமவாய்ப்பளித்து கல்வியளிக்கின்றார்கள். அது போன்று நமது நாட்டிலும் நாம் வகுத்துக்கொண்டுள்ள இந்திய அரசியல் சட்டப்படி நாட்டிலுள்ள அனைவருக்கும் கல்வித்துறையில் ஒரு குறிப்பிட்ட அளவிற்குச் சமமான கல்விச் சலுகைகளும் அரசாங்க உதவித் தொகையோடு அளிக்கப்படும் உணவும் அளிக்கப்பட்டு வருகின்றன. அரசியல் சட்டப்படி அனைவருக்கும் கல்வி என்ற நோக்கத்தை. பத்து அல்லது பதினைந்து ஆண்டுக்காலத்திலே நிறைவேற்றியிருக்கவேண்டிய ஒன்றை, நாம் நிறைவேற்றி முடிக்க முடியாத சூழ்நிலையில், இன்னும் நாட்டிலுள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாயக் கல்வியினைத் தந்தாக வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். இந்திய அரசியல் சட்டப்படி வேற்றுமை பாராமல் எல்லா பிள்ளைகளுக்கும் அடிப்படைக் கல்வியினை அளிப்பதில் எந்த விதமான வேற்றுமையும் காட்டப்படக்கூடாது என்பதை நான் இந்த மன்றத்தில் வற்புறுத்தக் கடமைப்பட்டுள்ளேன். ஆனால் உயர்நிலைக் கல்விக்குப் பிறகு கல்லூரிக் கல்வி என்று வரும்போது, அதில் எப்படிப்பட்ட சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான் மிக முக்கியமான பிரச்சினையாக அமைந்திருக்கின்றது. இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். மேலும் இன்றைக்கு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் விஷயத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களிடையே ஏழைக் கிருத்துவர்களுக்கு அங்கே எந்த விதமான சலுகையும் கொடுக்கப்படுவதில்லை. மேலும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புவது செகண்டரி கிரேடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே இதற்கு முன்பு நமது அரசு வழங்கி வந்த கொடை இப்போது நிறுத்தப்பட்டிருக்கின்றது. இதற்குச் சொல்லப்படுகின்ற காரணம், நாம் ஆசிரியர்களாக அவர்களுக்குப் பயிற்சி அளித்து, பின்னர் அவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தரும் சூழ்நிலையில்லை. வேண்டுமானால் ஆசிரியர் பயிற்சி வேண்டுவோருக்குப் பயிற்சி தருகிறோம், ஆனால் கொடை வழங்கி அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியமில்லை என்று பதிலிறுக்கப்பட்டது. நாம் சற்றுச் சிந்திக்க வேண்டும். நமது நாட்டிலே இடை நிலை ஆசிரியர்களாக ஆக வேண்டும் என்று விரும்பும் எல்லோரும் வாழ்விலே மிகவும் பின் தங்கியவர்களாக, வசதி குறைந்தவர்களாகத்தான் இருக்கின்றார்கள். எனவேதான் இந்தப் படிப்பிற்கு முன் வருகின்றார்கள் என்பதை நாம் அனைவருமே அறிந்திருக்கிறோம். இதை அறிந்திருந்தும் அவர்களுக்கு உள்ள

சிறு உதவிகளையும் நிறுத்திவிடுவது என்பதை மீண்டும் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்பது எனது தாழ்மையான கருத்தாகும். அதிலும் நமது நாட்டிலே உள்ள ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை விரல்விட்டு எண்ணிவிடக்கூடும். படிக்கும் மாணவர்களுடைய எண்ணிக்கையும் மிகக் குறைவே. எனவே மிக்க ஏழைக் குடும்பங்களிலிருந்து ஆசிரியர் பயிற்சிக்கு வரக்கூடிய அந்த மாணவர்களுக்கு இப்போது நிறுத்தப்பட்டுள்ள சலுகைகள் அளிக்கப்பட வேண்டுமென்று இந்த மன்றத்தில் இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஒரு காலத்தில் மதச் சார்பு காரணமாக மத வேறுபாடுகளிலே, மதம் மாறியவர்களிலே, கிருத்துவச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் அவர்கள் கல்வித் துறையிலே மிக முற்போக்கான இடத்தை அடைந்து விட்டவர்கள் என்ற நோக்கம் இருந்தது. உயர்திரு சந்தோஷம் அல்லது அவர்களுடைய உறவினர்களைப் பார்க்கிற நேரத்தில், உண்மையிலேயே அந்த இடத்தை அவர்கள் அடைந்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய சமுதாயத்தினுடைய ஜாதி வேறுபாடுகள் கிருத்துவ சமுதாயத்திலும் இருக்கின்றன என்று உணருகிற நேரத்தில், மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிற மக்கள் நிச்சயமாக கிருத்துவ சமுதாயத்தில் இருக்கிறார்கள் என்ற காரணத்தினால், கல்வித் துறையிலே அவர்கள் பெரும் முன்னேற்றம் அடைய முடியவில்லை என்று காண்கிறேன். ஆக, எல்லோருக்கும் எல்லா விதமான சலுகைகளும் அளிக்கத் தக்க வசதி நம் அரசுக்கு இல்லையென்றாலும், அதிலே மிகுந்த ஏழைகள், வாழ்க்கையிலே வசதியற்றவர்களாக இருக்கிறவர்களுக்கு, அவர்கள் கிருத்துவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும், முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும், வேறு எந்த மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும், மைனாரிட்டிகளுக்கு நாம் பெரும் உதவிகளை, தனிப்பட்ட உரிமைகளைத் தர வேண்டுமென்று பேசிக்கொண்டிருக்கிற, அரசியல் சட்டத்தை ஏற்றுக் கொண்டிருக்கிற, இந்தச் சூழ்நிலையில் சலுகைகளைத் தருவதிலே ஒன்றும் முழுத் தவறில்லை என்பது என்னுடைய எண்ணமாகும். ஆனால் இந்தச் சலுகைகள் ஆதித் திராவிட மக்களோடு போட்டி போட்டுக் கொண்டு பெறக் கூடிய சலுகைகளாக நிச்சயமாக அமைந்து விட முடியாது. இந்திய உப கண்டத்தில் இருக்கிற ஏறத்தாழ 15 கோடி ஆதித் திராவிட மக்களைப் பார்க்கிற நேரத்தில், அவர்கள் பின் தங்கியிருக்கிற சூழ்நிலையில், அவர்களில் பெரும் பகுதியினர் இந்து சமுதாயத்தைச் சேர்ந்த ஆதித் திராவிட மக்களாக சேரிகளிலே வாழ்கிறார்கள். என்றென்றைக்கும் அவர்கள் வாழ்க்கையிலே முன்னேற முடியாது என்று இன்றைக்கும் அவர்களைப் பார்க்கிற நேரத்தில் தோன்றுகிறது. இந்தச் சூழ்



நிலையில் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகளை வேண்டுமானால் இன்னும் அதிகப்படுத்தலாம். ஆனால் மற்ற சமுதாயத்திற்குத் தரப்படுகிற சலுகைகள், முக்கியமாக கிருத்துவ சமுதாயத்திற்கு அதைச் சேர்ந்திருக்கிற ஏழைக் குடிமகனுக்குக் கொஞ்சம் சலுகைகளைக் கொடுக்கத் தொடங்கலாம் என்பது என்னுடைய எண்ணமாகும்.

நண்பர் மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் எல்லாவிதமான உரிமைகளும் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு வேளை ஆதித் திராவிட மக்களுக்கு பல்வேறு கல்லூரிகளிலே அட்மிஷன் தருகிற நேரத்திலே அவர்களுக்கு இடம் ஒதுக்கப்படுவது போல, இவர்களுக்கும் ஒதுக்கப்பட வேண்டுமென்று சொல்வார்களானால், அது அவ்வளவு பொருந்தி வராததாகும். இத்தனை இடங்கள் ஒதுக்கித் தான் தீர வேண்டுமென்று சொல்வது பொருந்தாததாகும். ஆனால் அதே நேரத்தில் மைனாரிட்டி வகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன என்று வற்புறுத்துவதிலே முழுப்பொருள் இருந்தாலும், கல்வி நிலையங்களை நடத்துவதிலே தங்களுடைய கல்வி நிலையங்களில் இருக்கிற ஆசிரியர்களை நடத்துவதில் அவர்கள் எவ்வளவு தூரம் ஜனநாயகப் பண்போடு நடந்துகொள்ளவேண்டுமோ அப்படி நடந்து கொள்வதில்லை. இப்படி ஜனநாயகப் பண்புகளோடு, தங்களுடைய பள்ளிகளில் தங்களுடைய மதத்தைச் சார்ந்த ஆசிரியர்களின் மீது நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் நியாயமான முறையில் நடவடிக்கை எடுக்கின்ற பெருந்தன்மையும் அவர்கள் பெற்றாக வேண்டும். அதே போன்று கிருத்துவ சமுதாயம், அவர்கள் நடத்துகிற பள்ளிகளிலே—ஒருவேளை எல்லாப் பிள்ளைகளுக்கும் உதவி வழங்குகிற திட்டம் அரசிடம் இருந்தாலும்—மற்ற எல்லா சமுதாயத்தினருக்கும் உதவி வழங்குகிற ஒரு புறத் திட்டத்தையும் கொண்டு வர வேண்டும். இரு பக்கமும் உதவிகள் தொடங்கியாகவேண்டும். அப்படித் தொடங்கப்படுவதற்கு ஒரு அடிப்படை நோக்கமாக இந்தத் தீர்மானம் இருந்தாலும், அதே நேரத்தில் இந்தத் தீர்மானம் எல்லா விதமான வசதிகளையும், வாய்ப்புகளையும் தர வேண்டுமென்று சொல்கிற காரணத்தினால், இந்தத் தீர்மானத்தை நான் முழுதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைச் சொல்லி, ஆனால் இந்தத் தீர்மானத்தினுடைய அடிப்படையான கருத்து ஒரு காலத்தில் வந்துதான் தீரவேண்டுமென்பதை நான் எடுத்துச் சொல்லி இந்த அளவில் அமைகிறேன்.

* **தவத்திரு குன்றக்குடி அடிகளார் :** மாண்புமிகு தலைவரவர்களே, பாராட்டுதலுக்குரிய உறுப்பினர் அருமை நண்பர் திரு. சந்தோஷம் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் விரிந்த உயர்ந்த மனப்பான்மையோடு பார்க்கிறபோது, நூற்றுக்கு நூறு வரவேற்கத் தக்கது. ஆனால் இதை லட்சிய பூர்வமாக ஏற்றுக் கொள்ளலாமே தவிர, இன்றைக்கிருக்கிற யதார்த்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், அவர்கள் சில பெயர்ப்பட்டியலைப் போட்டுச் சொன்னார்கள்—இவ்வளவு பேர்கள் உயர்நீதி மன்றத்திற்கு வந்திருக்கிறார்கள், ஆட்சித் தலைவராக வந்திருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். மொத்த அரிஜன் தொகையையும் வந்திருக்கிற உயர் பதவிகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு விழுக்காடு போட்டுப் பார்த்தால் இந்தப் பதவி உயர்வுகள் தசாம்சப் புள்ளியில் வருமே தவிர, நூற்றுக்கு இத்தனை என்று எண்ணிட்டுப் பார்க்கக் கூடிய விழுக்காடாக வராது. அப்படி வந்திருக்கிற விழுக்காட்டையும், கிருத்துவ மதம் மாறிய அரிஜனங்களுக்கும், இந்து அரிஜனங்களுக்கும் மக்கள் தொகை அடிப்படையில் விழுக்காடு போட்டுப் பார்த்தால், இந்து சமூகத்தைச் சேர்ந்த அரிஜன் மாணவர் எண்ணிக்கை அல்லது உத்தியோகஸ்தர் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கும் என்ற எனது கருத்தில் மாண்புமிகு நண்பர் திரு. சந்தோஷம் அவர்கள் உடன்படுவார்கள் என்று நம்புகிறேன். அவர் மிகப் பெரிய சித்தாந்தங்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். மிகப் பெரிய சோஷலிச சமுதாயத்தை நோக்கிப் போகிறபோது, தடைகள் ஏன், தளைகள் ஏன் என்று கேட்டார்கள். அது மிக நியாயமான கேள்வியாக அரசியல் பார்வையிலே தோன்றும். ஆனால் ஒருவர் 100 அடிக்கு முன்னால் நின்று கொண்டிருக்கிறார். இன்னொருவர் 100 அடிக்குப் பின்னாலே நின்று கொண்டிருக்கிறார். இந்த 100 அடிக்குப் பின்னால் நிற்கிறவர் முதலில் 100 அடிக்கு முன்னால் இருக்கிறவரைச் சாருகிற வரையில், முன்னாடி இருக்கிறவரை ஓடாமல் தடுப்பது ஒரு தவிர்க்க முடியாத சமூக நீதி, ஒரு சோஷியல் ஜஸ்டிஸ் ஆகும் என்று கருதுகிறேன். அதுவும் குறிப்பாக அரிஜன் சமுதாயத்தைப் பொறுத்த வரையிலே, கிருத்துவ சமுதாயத்திலே இன்னும் அவர்களை அரிஜன் என்று சொல்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. பொதுவாக இந்திய நாடு விடுதலை பெற்ற பிறகு, இந்து மதத்தினுடைய சாபக்கேடு, ஒரு கறை படிந்த வரலாறாக, இந்து மதச் சமயத் தலைவர்களும், கோயில்களும் வெறும் புரோகிதத்திலே போனதால், கோடிக்கணக்கான மக்கள் பாழான சேரிகளிலே விடப்பட்டார்கள். மத ரீதியாக அவர்களுக்கிருந்த கறையை, அவர்களுக்கிருந்த குறையை நீக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் மிகப் பெரிய சமரசத்தை, ஏசுவையும், அல்லாவையும் பிரார்த்தனை மேடைகளில் கூப்பிட்ட





காந்தியடிகள் அரிஜன் என்ற பெயரைச் சூட்டி அவர்களைத் தனிப்பட்ட முறையிலே கரையேற்ற வேண்டுமென்று இந்த திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்த அண்ணல் காந்தியடிகளோ அல்லது அமரர் நேருஜி அவர்களோ, அதைப் போலவே அதைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிற நமது தமிழக அரசோ, எந்தவிதமான மத வேறுபாடுகளும் இல்லையென்று சொன்னாலும் கூட, கிருத்துவ சமுதாயத்தைப் பொறுத்த வரையில், அவர்கள் ஏழையாக இருந்தாலும் கூட, இன்றைக்கு நான் ஒரு சமய நிறுவனத்தைச் சேர்ந்தவன் என்றாலும், வெட்கமில்லாமல் உண்மையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில், அவர்களுக்கு சர்ச்சும் ஆதரவாக இருக்கிறது, அரசும் ஆதரவாக இருக்கிறது. இன்னும் கோயில்கள், மடங்கள் இந்து அரிஜனங்களுக்கு ஆதரவு தருகிற இடங்களாக மாறவில்லை. நம்முடைய மாண்புமிகு அறநிலைய அமைச்சரவர்கள் அண்மைக் காலமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். ஆனாலும் இன்னும் கூட அரசுக்கு அரசுத் துறைக் கல்லூரிகளுக்கு அற நிலையங்களுடைய பணத்தை எடுத்து டைவர்ட் பண்ணாமல் இந்து அற நிலையக் கல்லூரிகளை அதிகப்படுத்தி, இந்து அற நிலையங்களே கல்லூரிகள் நடத்துகிற முறையை ஏற்படுத்தி, ஒருவர் நான் இந்து அரிஜன் என்று சொன்னால் கோயில்களும், மடங்களும் அவருக்கு உத்தரவாதம் கொடுக்கக் கூடிய சமுதாய அமைப்பு என்றைக்குத் தோன்றுகிறதோ, அன்றைக்குத்தான் கிருத்துவ அரிஜன், இந்து அரிஜன் என்ற வேற்றுமை மறையுமே தவிர, அது வரை மாறாது. இந்த மடங்கள், கோயில்களைப் பொறுத்தவரை, நம்முடைய அறநிலைய இலாகா இன்னும் கடுமையான வழியை நடைமுறைப்படுத்தி அந்தப் பணங்களை அரசு நிறுவனங்களுக்கு மாற்றாமல், அந்தந்த அறநிலையங்களே கல்லூரிகளை நடத்த வேண்டும், மாணவர் இல்லங்களை நடத்த வேண்டுமென்று செய்ய வேண்டும். ஒரு கிருத்துவ அரிஜன் மாணவன் ஐ. ஏ. எஸ். பயிற்சி பெறுவதற்கு, தேர்ச்சி பெறுவதற்கு கிருத்துவ மிஷனில் கல்லூரி வைத்திருக்கிறார்கள். ஆனால் இந்து அரிஜன் மாணவனுக்கான விடுதியை கோயில்கள் அல்லது மடங்கள் நடத்துவது என்பது கூட இன்னும் முடியாத ஒன்றாக இருக்கிறது. காரணம், பழக்கங்கள் மாறவில்லை. இந்தச் சூழ்நிலையில் இந்து அரிஜன், கிருத்துவ அரிஜன் என்பதை உயர்ந்த லட்சிய நோக்கில் பகுத்துப் பார்க்க முடியாமல் போனாலும் கூட, அவர்கள் இருக்கிற நிலைமை, பின் தங்கிய நிலைமையாக, மிகப் படுமோசமான நிலைமையாக இருக்கிறது. இவர்கள் நிராதரவாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உத்தரவாதம் தரக்கூடிய ஒன்றேயொன்று இன்றைக்கு அவர்களுக்குப் பாதுகாப்புத் தருவது ஒன்று தான். வேறு ஒன்றும் இருக்க முடியாது.

சென்ற தடவை நம்முடைய மேல் சபைக்கு நண்பர் திரு. சந்தோஷம் வந்திருந்தார்கள் என்று நினைக்கிறேன். இல்லாது போனாலும் கூட, அப்போது விவாதம் நடந்தது. இப்போது அண்மைக்காலமாக, தமிழக அரசு, கல்வித் துறைச் சலுகையை பொறுத்தவரை, அரிஜனங்களுக்கும், மதம் மாறியிருந்தால் கொடுக்கலாம், இந்தத் தலை முறையில் மதம் மாறியவர்களாக இருந்தாலும் கொடுக்கலாம் என்று ஏற்கெனவே இருந்த விதியை மீறிச் செய்திருக்கிறது. இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் போன தடவை நம்முடைய அரசைத் திருப்பிக் கேட்டுக்கொண்டோம். மதம் மாறிவிட்டார், இவர் ஒரு கிருத்துவர் என்று சர்ச் சான்று கொடுத்தால் போதுமானது. ஆனால் கிருத்துவ மதத்திலிருந்து இந்து மதத்திற்கு ஒருவர் மாறி வந்தார் என்று சொன்னால், கெஜட் நோடிபிகேஷன் வேண்டும், சமுதாயம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்ற தடைகளை விதித்து அவர் எந்தக் காரணத்தை முன்னிட்டும் வரமுடியாத நிலைமையில் ஒரு பலவத்தமான நிர்ப்பந்தங்களாக இவைகள் இருக்கின்றன. ஆக, அரசு இதை மாற்ற வேண்டுமென்று சொன்னோம். எனவே நம்முடைய உயர்ந்த நோக்கங்கள் ஜாதி மத வேறுபாடற்ற ஒருபெரிய சமுதாய அமைப்பு என்பதில் நானும் நண்பர் திரு. சந்தோஷத்தோடு ஒத்துழைக்கவும் அவர் கருத்துக்கு இசைந்து உடன்படுகிறேன். ஆனால் இன்றையதினம் இருக்கின்ற நிலைமையில் இந்த இந்து—அரிஜன் தொகை கணிசமான விழுக்காடாக இருக்கிறது என்று கூறுவதில் தவறில்லை என்று தெளிவாகக் கூறலாம். கடலாடி தேர்தல் வழக்கு எனக்கு இப்போது நினைவுக்கு வருகிறது. அலங்காரம் என்பவர், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். அவர் மதம் மாறியவர் மதம் மாற்றப்பட்டவர் ஒருவர் ரிசர்வ் தொகுதியில் நின்றது செல்லாது என்று உயர்நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றது. நானே மதம் மாற்றியதாலும், என்னுடைய சமுதாயத்தினுடைய சிக்கலான பிரச்சினையாக இருந்தாலும், நானே உயர்நீதி மன்றத்திற்குச் சென்றேன். எதிர்க் கட்சி வழக்கறிஞர் திரும்பத் திரும்ப என்னை, பதினைந்து மணித் துளிகள் கேட்டார், "எந்த ஜாதியில் சேர்ந்தீர்கள்" என்று. "மதத்தில் தான் சேர்ந்தேன்" என்றேன். மறுபடியும் "எந்த ஜாதியில் சேர்ந்தீர்கள்" என்று கேட்டார். நான் திரும்பவும் "மதத்தில் தான் சேர்ந்தேன்" என்று சொன்னேன். திரும்பவும் "எந்த ஜாதியில் சேர்ந்தீர்கள்" என்று கேட்டார். நான் மூன்றாவது தடவை கோபத்தில், "ஜாதியில் எனக்கு நம்பிக்கை இல்லை, மதத்தில் நான் சேர்ந்தேன்" என்று சொன்னேன். "சட்டம் அப்படி இருக்கிறதே" என்று கேட்டார். "சட்டத்தை மாற்ற வேண்டுமென்று முயற்சிப்பேனே தவிர, நான் ஜாதியில் சேர்க்கவில்லை" என்று சொன்னேன். இந்து சமுதாயத்தில் ஜாதி வேற்றுமை இருப்பதால், நம்முடைய சட்ட மன்றத்தில்





ஏகோபித்து நிறைவேற்றப்பட்ட அர்ச்சகர்களுடைய முறை மாற்றுத் திட்டத்தை உயர் நீதி மன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே கிருத்துவ சமூகத்தில் அரிஜன், வழக்கத்தின் காரணமாகச் சுட்டிக் காட்டப்படுகிறானே தவிர இந்து சமூகத்தில் உண்மையில் அரிஜன் என்று சொல்லப்படுகிறான், அழைக்கப்படுகிறான், வாழ்விக்கப்படுகிறான் என்ற நிலைமை இன்னும் முற்றாக—வெளிப்படையாகச் சொல்லப்போனால் கடவுள் நம்பிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், இதிலே பெரியார் போன்றவர்கள் இன்னும் பலபேர் முயற்சி செய்தாலும்—அசைக்க முடியாது போல் தோன்றுகிறது. இந்தச் சூழ்நிலையில் இந்து அரிஜனங்களுக்கு இப்பொழுது வழங்கப்படுகின்ற சலுகைகளைக் குறைப்பது அவ்வளவு சரியல்ல நல்லது அல்ல. வேண்டுமானால் கலெக்டர் மகன், இன்னும் ஒருவருடைய மகன், உதாரணத்திற்கு திரு. சந்தோஷம் அவர்கள் குறிப்பிட்டது போல், உயர் நிலைக்கு வந்திருக்கலாம். கலெக்டராக வேண்டுமானால் அதிர்ஷ்டவசமாக வந்திருக்கலாம். அவருடைய மகன் கலெக்டராக வருவான் என்று சொல்ல முடியாது. ஒரு கால் கலெக்டருடைய மகனுக்குக் கிடைக்கிறது, தோட்டியர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற குறை இருந்தால், அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தால், வருமான வரி சான்றிதழ் கொடுக்க வேண்டுமென்று புதிய விதி வைக்கலாம். அதிலே தவறில்லை, அது மட்டுமல்ல. பேரனைத் திருத்த வேண்டுமானால், பாட்டியைத் திருத்து என்று சொல்வார்கள். எனவே ஒருவன் உயர்ந்த நிலைக்கு வந்து விட்டதாலே, அந்தச் சமூகமே மாறிவிட்டது என்று யாரும் கருதிட முடியாது. மாவட்ட ஆட்சித் தலைவராக வந்துவிட்ட ஒரு ஹரிஜனனுடைய வீட்டை சேரியில் போய் நண்பர் திரு. சந்தோஷம் அவர்கள் பார்ப்பாரேயானால் அவருடைய வாழ்க்கைச் சூழ்நிலை பெரியதாக மாறிவிடவில்லை என்பது தெரியும். அவர் கூட சில இடங்களில் வெள்ளை வேட்டி அரிஜன் என்று ஒதுக்கப்பட்டு விடுவார் அல்லது அவரே ஒதுங்கிப் போவார். இந்தக் குறைகளை எண்ணுகின்றபோது, நோக்கங்களாலே ஏற்றுக்கொள்வது என்றாலும், இன்றையதினம் இருக்கின்ற இந்து சமூகத்தினுடைய, ஹரிஜன சமூகத்தினுடைய சூழ்நிலை வாழ்க்கையில் பின்தங்கிய நிலைமையில் உள்ளவர்களுக்கு அவர்களுடைய மதங்களே உத்தரவாதம் கொடுக்குமளவுக்கு முற்போக்கான அமைப்பாகத் தோன்றாத நிலைமை இருக்கின்றபோது, அவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளில் எந்தவிதமான விழுக்காடும் குறைப்பதோ, ஜாதி, மத வேறுபாடு இல்லாமல் சலுகைகளை வழங்குவதோ சித்தாந்தத்தில் உயர்ந்த நோக்கமானாலும் நடைமுறைக்கு, இந்த பலஹீனமான சூழ்நிலைக்கு ஏற்றதில்லை. நண்பர் உறுப்பினர் திரு. அறிவழகன் அவர்கள் சமாதானத்திற்கு வேண்டுமானால் சில ஆலோசனைகளைச் சொல்லி யிருக்கலாம்.

சிறுபான்மை என்ற அடிப்படையில் சலுகைகளை மேலும் வழங்க வேண்டுமானால், அப்படிச் செய்யலாம். இது அரசியல் சட்டப்படி உத்தரவாதம் கொடுக்கப்பட்டது. அந்தப் பாதுகாப்பு இருக்கிறது. இங்கே தான் பெரும்பான்மை என்று இருப்பதாலே அவர்களுடைய ஒதுக்கீடுத் தொகைகளைப் பார்தால், கடலில் பெருங்காயம் கரைத்ததுபோல் இருக்கிறதே தவிர, வேறு இல்லை..

கல்லூரிகளில் உபகாரச் சம்பளம் கொடுப்பதாலே அமைதியற்ற நிலைமை இருக்கிறது என்பது பெரும்பாலும் மேட்டுக்குடி மக்களால் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகின்ற குற்றச்சாட்டாக இருக்கிறது. காலப்போக்கில் எங்கு பார்த்தாலும் சுதந்திர எழுச்சி, நான் பேச வேண்டும், நான் எழுத வேண்டும் என்று உலக நாடுகளில் பெரிதும் இளைஞர்கள் எழுச்சி பெறுகிறார்கள். செய்திகளும் திரும்பத் திரும்பப் போடுகிறார்கள். பொது நோக்கான அரசியல் நம்முடைய நாட்டில் இல்லாத நிலை இருப்பதால், அரசியல் கட்சி மாச்சரியங்கள் இருப்பதால் அந்தப் பொது நோக்கத்தில் பாடுபடுகின்ற வகையில் பயிற்சி உண்டாகாத வரையில் அமைதியின்மையைத் தடுக்க முடியாது. அண்மையில் ஒரு சம்பவம் நம்முடைய மாண்புமிகு பிற்பட்ட நலத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நம்புகிறேன். புதுக்கோட்டை கல்லூரியில் உள்ள மாணவர்கள் விடுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. காரணம் கேட்டால், புதுக்கோட்டை கல்லூரி மாணவர்கள் விடுதியில் தாழ்த்தப்பட்ட மாணவர்கள் மட்டுமே இருக்கிறார்கள். பேக்வேர்ட் பாய்ஸ் இல்லை. பேக்வேர்ட் பாய்ஸ் சேர்க்கலாம் என்று சொன்னால் ஆட்சேபிக்கிறார்கள். ஏற்கெனவே நான் மத்திய சேம நலக் குழுவில் இருக்கின்ற போது, எந்த வசதியாக இருந்தாலும், முன்னேறிய வகுப்பினர்க்கும் பத்து விழுக்காடு பின்தங்கிய வகுப்பினர்க்கும் பத்து விழுக்காடு இருக்க வேண்டும், தாழ்த்தப்பட்டவர்களும் இருக்க வேண்டும், அவர்களுக்குள் கூட்டுக் கலவை உறவு இருக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது. புதுக்கோட்டை கல்லூரியில் என்ன காரணம் பற்றியோ தாழ்த்தப்பட்டவர்கள் விடுதிதான் இருக்கிறது. பின்தங்கியவர்கள் எண்ணிக்கை இல்லை யென்று சொல்லப்படுகிறது. அப்படிச் சேர்ந்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பின்தங்கிய வருப்பைச் சேர்ந்தவர்களுக்கும் சண்டை என்று சொல்கிறார்கள்.

இப்பொழுது ஒரு புதிய பாணி சில கல்லூரிகளில் கையாளப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அந்தந்தக் கல்லூரிகளில் அந்தந்த வட்டாரத்தைச் சேர்ந்தவர்களையேதான் எடுக்க வேண்டும். வெளி வட்டார மாணவர்களுக்கு





இடம் கொடுக்கக் கூடாது என்று கருதப்படுவதாகும். அந்த வட்டார மாணவர்களுக்கு இடம் கிடைக்காது என்று சொல்லப்படுமேயானால், ஆட்சேபணை இல்லை. ஆனால் ஒரு 25, 30 விழுக்காடு மற்ற, அண்டை வட்டாரத்திலிருந்து எடுத்துக்கொண்டால் அவர்களுடைய தகுதிகளை இவர்கள் கற்றுக்கொள்ளவும், இவர்களுடைய பெருமைகளை அவர்கள் கற்றுக்கொள்ளவும் பயன்படும். இதையெல்லாம் கல்வித் துறை ஆராய்ந்து மாவட்டத்திற்கு மாவட்டம் மாணவர்கள் சென்று படிப்பதற்கான வசதி செய்து தரவேண்டும். அப்பொழுதுதான் சமூக, சமுதாய மறுமலர்ச்சி உண்மையான முறையில் ஏற்படும். அப்பொழுது தான் பாலோடு தண்ணீர் கலந்ததுபோலவும், இனிப்போடு சுவை சேர்ந்தது போலவும் ஒன்றுபடுகின்ற காலத்தில், ஐடண்டிபிகேஷன் என்று சொல்லப்படுவது உண்மையாக ஏற்பட்டு நீண்டகால இணைப்பை ஏற்படுத்த நம்முடைய தாழ்த்தப்பட்டோர் நலத் துறையும் பின்தங்கியோர் நலத் துறையும் சேர்ந்து ஒரு ஒத்த சூழ்நிலையை உருவாக்க காலவரை வைக்கலாம் என்று கூறி, உறுப்பினர் அவர்களுடைய யோசனை ஏற்கக்கூடியதாக இல்லை என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்றபோது, ஜாதி அல்லது சமயம் ஆகியவற்றைப் பாராமல் கல்விச் சலுகைகள், படிப்புக்கான உதவிப் பணம், மற்றும் ஏனைய பயன்கள் அனைத்தும் பின்தங்கிய நிலையில் உள்ள ஏழை மக்கள் அனைவருக்கும் அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியிருப்பதாக நினைக்கிறேன். தீர்மானத்தைப் பற்றி விளக்கம் அளிக்கின்ற போது ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திலிருந்து 'இண்டர்பிரடேஷன்' கூறுவதிலிருந்து அது தெரியும். ஜாதியற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று குறிக்கோள் வைத்து, நம்முடைய திட்டமாகக் கொண்டு செயல்படுகின்ற இயக்கத்தினுடைய கடைசித் தொண்டன் என்ற நிலையில் ஒரு ஜாதியற்ற சமுதாயத்தை உருவாக்குவது எவ்வாறு என்பதை நான் உணருகிறேன். இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னர், ஆளுகின்ற அன்னியன் அகன்ற பிறகுதான் இதையெல்லாம் செய்ய முடியும் என்று நம்பினார்கள். அன்னியனை அகற்றிய பிறகு 1950-ல், குடியரசுச் சட்டத்தைக் கொண்டுவந்த பிறகு சமுதாயக் கொடுமையால் ஹரிஜன் என்ற ஒரு காரணத்திற்காக கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் ஜாதியின் காரணமாக நகருக்குள் ஏற்றுக் கொள்ளப்படாமல், கோவில்களில் ஏற்றுக்கொள்ளப்படாமல், மற்றும் எந்தவிதமான நன்மைகளுக்கும் உரியவர்களாக்கப்படாமல் ஒதுக்கப்பட்டிருந்தவர்களை

யெல்லாம் முன்னேற்றி, எல்லோரும் ஒத்துக்கொள்ளும் முறையில் செயல்பட்டு வருகிறோம். நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தில் 15-ஆவது பிரிவில் ஜாதி, மத சமுதாய வேறுபாட்டின் காரணமாக ஒருவரும் ஒதுக்கப்படக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'Nothing in this Article or in clause (2) of Article 29 shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward classes of citizens or for the scheduled castes and the Scheduled Tribes'. என்று திருத்தம் செய்து கொண்டார்கள். அந்த முறையில் ஒவ்வொரு மாநில அரசாங்கமும் அந்தந்த மாநிலத்தில் சமுதாய ரீதியில் பின் தங்கியிருக்கின்றவர்களையும், கல்வி நிலையில் பின்தங்கியிருக்கின்றவர்களையும் முன்னேற்றுவதில், தனித்தனியாகத் திட்டங்கள் தீட்டிக் கொள்வதில், இந்த 15வது ஷரத்து குறுக்கே நிற்காது என்று திருத்தம் செய்து கொண்டார்கள். அந்த அடிப்படையில்தான் பிற்பட்ட சமுதாய நலத் துறையின் சார்பில்—ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசும் வழங்குகிறது—இவர்களுக்கெல்லாம் கல்விச் சலுகை, உத்தியோகங்களில் இடம் ஒதுக்குதல், கல்லூரிகளில் இடம் ஒதுக்கி மேல் படிப்புக்கு வசதி செய்து கொடுத்தல் ஆகியவற்றைச் செய்து வருகிறது. இன்று 25 ஆண்டுகளுக்கப்பால்—1947-ல் சுதந்திரம் அடைந்தோம்—திரும்பச் சிந்தித்து சில சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து எல்லோருக்கும் பயன்படுகின்ற நிலையில் அமைக்க வேண்டுமென்று கருதுவது இன்றியமையாதது. நாம் செய்ததில் என்னென்ன தவறு ஏற்பட்டு விட்டது, இன்னும் என்னென்ன திருத்தம் நாம் செய்ய வேண்டுமென்று சிந்திப்பது அவசியமாகிவிட்டது. தீர்மானம் கொண்டு வந்த மாண்புமிகு உறுப்பினர், கலெக்டருடைய மகன் சேரியில் பிறந்திருக்கலாம், இப்பொழுது அவன் வாழ்வது மாளிகையாகவிருக்கலாம், ஆனால் அதே சேரியில் ஒரு குடிசையில் இருக்கக்கூடிய ஹரிஜனுக்கு ஒப்பாகத்தான் நடத்தப்பட்டு சலுகை இருப்பதாகச் சொன்னார். பிற்பட்ட சமுதாய நலத் துறையிலிருந்து அளிக்கப்பட்டிருக்கும் அரசு ஆணைகள் அப்படி இல்லை. பிற்பட்ட சமுதாயத்தில் வருமானம் ரூ. 2,500-க்குக் குறைவாக உடையவர்களாக இருந்தால் தான் கல்விக்கு உபகாரச் சம்பளச் சலுகைகளை அடைவார்கள். ஹரிஜன வகுப்பில் இருந்தால் இரண்டாயிரம் ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உடையவர்களுக்குச் சலுகை அளிக்கப்பட்டு வருகிறது. எல்லோருக்குமே எஸ்.எஸ்.எல்.சி. வரையில் இலவசக் கல்வி, பி.யு.சி. இலவசக் கல்வி, பட்டப் படிப்பு வருகின்றபோது கல்லூரியில், எனக்குத் தெரிந்த வரையில் சொல்கிறேன், ரூபாய் 2,500-க்குக் குறைந்த வருமானம் உடையவர்களுக்குத்



தான் இந்தச் சலுகையெல்லாம் அளிக்கப்படுகிறதே தவிர, மற்றவர்களுக்கு இல்லை. இதே சலுகைகளை அளிக்க ஒரு பட்டிகை ஜாதி என்று சொல்லி, பிற்பட்டவர் ஜாதி என்று ஒரு பட்டியலும், ஷெட்யூல்டு ஜாதி என்று ஒரு பட்டியலும் வைத்திருக்கிறோம். அதை சதவிகிதத்தில் பார்த்தால் அதிகமாக இருக்கலாம். ஆனால் அந்த ஷெட்யூல்டு காஸ்ட்—அரிஜன வகுப்பினர்—இன்னும் எதிர்பார்த்த அளவு முன்னுக்கு வரவில்லை. ஆனால் பிற்பட்டவர் ஜாதி என்று சொல்லியிருக்கிறோமே, அவர்கள் எல்லோருமே ஏகதேசமாக ஒருபோலவே தான் இருக்கிறார்கள் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. ஷெட்யூல்டு காஸ்ட் என்ற ஜாதியினர் இன்னும் நாம் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேறவில்லை; அந்த வகுப்பிலே சிலர், அத்தி பூத்தது போல, கலெக்டர் போன்ற ஆபீசர்களாக இருக்கிறார்களே தவிர, சேரியிலே இருக்கிறவர்கள் இன்றும் புழுவாகவே வாழ்கிறார்கள். இப்பொழுது குடிசை மாற்று வாரியம் வைத்திருப்பதுபோல், சேரி மாற்று வாரியம் அமைத்து, ஒவ்வொரு சேரியிலுள்ளவர்களுக்கும், உயர்ந்த ஜாதி மக்கள் வாழ்கிற இடத்திலே வீடுகளை அமைத்துக் கொடுக்க வேண்டும். தனியாக சேரி அமைத்து வீடுகள் கட்டிக்கொடுத்தால், சேரி அப்படியேதான் இருக்கும். ஊரிலே இருக்கின்ற பிராம்மண சேரி, வெள்ளாளர் சேரி, கவுண்டர் சேரி—சேரி என்றால் சேர்ந்து வாழ்கிற இடம் என்று பொருள்—என்ற இந்த இடங்களுக்கு நடுவே ஐந்தாறு வீடுகளைக் கட்டி, இவர்களை அங்கே கொண்டு போய்ச் சேர்த்து அவர்களை இரண்டறக் கலக்கச் செய்யவேண்டும். இதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆழமான கருத்து. ஆனால் இப்பொழுது நாம் விவாதிப்பது கல்விச் சலுகையைப் பற்றித் தான். இந்த மாதிரித் திட்டத்திலே நமது நண்பர் அவர்களுக்குப் எதிர்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. அவர்களுடைய பேச்சிலே, கல்விச் சலுகையை எல்லா வகுப்பிலுமுள்ள, எல்லா ஜாதிகளிலுமுள்ள ஏழைகளுக்கு அளிக்க வேண்டும் என்று சொன்னார்கள். இந்தக் கருத்து எல்லோரும் ஒப்புக்கொள்கிற நல்ல கருத்துத்தான். இப்பொழுது யார் யாருக்கெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறோமோ, அவர்களுக்கெல்லாம் அப்படியே வழங்க வேண்டும். இன்னும்கூட கொஞ்சம் கூடுதலாகவே வழங்கலாம். அதிலே தவறு இல்லை. ஆண்டுக்கு 6,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ள ஒரு அரிஜனக் குடும்பத்திலிருந்து ஒரு பையன் கல்லூரியில் படித்தால், சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஸ்காலர்ஷிப் ரூ. 600-க்கும் மேல் வருகிறது. ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறுக்குக் கீழே வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த ஒரு அரிஜன மாணவன் படித்தால், ஸ்டேட் கவர்ன்மென்ட் ஸ்காலர்ஷிப் ரூ. 300-க்கு மேலே வருகிறது. ஒரு சமயத்தில் ஒரு ஸ்காலர்ஷிப்பைத்தான்

எடுத்துக் கொள்ள முடியும். அதேபோல பிற்படுத்தப்பட்ட வகுப்பிலே இருந்து வருகிற மாணவனுக்கு ரூ. 125 ஸ்காலர்ஷிப் வருகிறது. அதுமாதிரி ஸ்காலர்ஷிப் பணத்திலே ஏதாவது ஒரு முறையை வேண்டுமானால் ஏற்படுத்தி விட்டு, ஏழைக் குழந்தைகள் எல்லோருக்கும் கல்விக்காக நிதி வசதி அளிப்பதில் ஸ்காலர்ஷிப் அளிப்பது அல்லது அரைச் சம்பளச் சலுகை அல்லது முழுச் சம்பள சலுகை கொடுப்பது போன்ற சலுகைகளை நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், அமைச்சரவையும் சிந்தித்துச் செயல்படுத்த வேண்டும். நாம் ஜாதியற்ற சமுதாயத்தையும், பாரபட்சமற்ற, ஏழை எளியவன் என்ற நிலை இல்லாத ஒரு சமுதாயத்தையும் உருவாக்குகிற திட்டத்தில் இருக்கிறோம். அந்தப் படியிலும் காலை எடுத்துவைத்துவிட்டோம் என்பதைக் காட்டும் வகையில் நாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஜாதிகளே சனாதன காலத்தில் தோன்றியவை. இப்போது அல்ல. இது பழங்காலத்திலே உருவான ஒன்று. இப்பொழுது ஜாதி வேறுமாதிரி உரு எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, ஜாதி ஒவ்வொரு தேர்தலிலும் எப்படி வலுப் பெறுகிறது என்பதை நாம் மறுப்பதற்கில்லை. இப்பொழுது ஜாதி ஒழிகிறது, வலு குறைகின்றது என்று எண்ணுகிறோம். ஜாதி ஒழிய வேண்டுமென்று சொல்வதிலே யார் முன்னாலே இருக்கிறார்கள் என்றால், குறைந்த எண்ணிக்கையுள்ள ஜாதியார்கள்தான். கூடுதல் எண்ணிக்கை உள்ள ஜாதியார்களுக்கெல்லாம் ஜாதி இருப்பதுதான் நன்மை. அதுதான் தேர்தலிலே அவர்களுக்கு நன்மை. முன்பு ஜாதிக் கொடுமைகள் எவ்வளவோ ஏற்பட்டன. அரசர்கள் ஆள்கிறபோது, உயர்ந்த ஜாதி என்று இப்பொழுது சொல்லிக்கொண்டிருக்கிறவர்கள் எல்லாம், அரசர்களின் பக்கத்திலே இருந்துகொண்டு அதிகச் சலுகைகளைப் பெற்று, ஜாதியை வளர்த்துக் கொண்டிருந்தார்கள். ஜனநாயகத்திலே எண்ணிக்கை மிகுதியான ஜாதிகளுக்குத்தான் அதிகமான சலுகைகள், அதிக சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருப்பதாலே, ஜாதி ஒழிந்து கொண்டிருக்கிறது என்று யாராவது சொன்னால் நம்மை நாம் ஏமாற்றிக்கொண்டிருக்கிறோம் என்பதுதான் பொருள். ஜாதி ஒரு புதிய உருவம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதை எப்படி ஒழிக்க வேண்டும் என்பதற்கு என் சொந்தக் கருத்துக்கள் பல இருந்தாலும், அதைச் சொல்வதற்கு இடமில்லையென்று விட்டு, இந்தக் கல்விச் சலுகைகளை யெல்லாம் எல்லா ஏழை மாணவர்களுக்கும் வழங்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்துவது நல்லது என்று எண்ணுகிறேன். நான் முன்பு பேராசிரியராகவும், இப்பொழுது ஒரு கல்லூரி முதல்வராகவும் இருக்கிற காரணத்தால் சொல்கிறேன்; சில குழந்தைகள் படிப்பதில்



திறமையான குழந்தைகளாக இருக்கின்றன. ஆனால் அவர்களுக்கு எந்த விதமான கல்விச் சலுகையும் இல்லை. காரணம் வேறு ஜாதியில் பிறந்து விட்டதுதான். அதே நேரத்தில் படிப்பதிலே அக்கறை இல்லை. ஐந்தாவது முறையாக எஸ்.எஸ்.எல்.சி. தோற்றுவிட்டு ஒரு குழந்தை வருகிறது. அதற்குக் கல்வி சலுகை இருக்கிறது. ஃபீஸ் இல்லை. ஸ்காலர்ஷிப் உண்டு. இரண்டு குழந்தைகளும் வருகின்றன. எஸ்.எஸ்.எல்.சி.-யிலோ பி.யு.சி.-யிலோ ஃபர்ஸ்ட் கிளாசில் பாசாகி, எல்லாவற்றிலும் டி-ப்ளஸ் வாங்கிவிட்டு, மெடிகல் காலேஜுக்கோ, அக்ரிகல்சர் காலேஜுக்கோ 'அப்ளை' செய்ய யோக்யத்தை இருந்தும், பி.எஸ்ஸி. படிக்க வருகிறபோது, ஃபீஸ் கட்டித்தான் படிக்க வேண்டும், சில ஜாதியினர். அதே சமயத்திலே பி.யு.சி.-யிலே ஏழாவது தடவை தோற்றுவிட்டு வந்தவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட ஜாதியிலே பிறந்து விட்டதால் சலுகை இருக்கிறது. வேறு வழியே இல்லாமல், மாத வருமானம் ரூ. 200-க்குக் குறைவாக உள்ள குடும்பத்திலிருந்து வந்திருந்தால்—2,000 ரூபாய் என்று அரிஜனப் பையனுக்கு வைத்திருக்கிறோம். பேக்வார்டு கிளாசுக்கு 2,500 ரூபாய் என்று வைத்திருக்கிறோம். அந்த அளவிற்குக் கூட வருமானம் இல்லாத குடும்பக் குழந்தைகளாக இருந்து, அவர்கள் படிப்பிலே முதல் தரமாக இருந்து, எஸ்.எஸ்.எல்.சி. யிலே 400-க்கு மேலே மதிப்பெண் பெற்றிருந்து, பி.யு.சி. யிலே செகண்டு கிளாசாவது வாங்கியிருந்தால், அந்தக் குழந்தைகளுக்கும் கல்விச் சலுகை கொடுக்க வேண்டுமென்ற தத்துவத்தை ஏற்றுக்கொள்கிற சூழ்நிலை உருவாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் பல மாணவர்கள் கல்வியிலே அக்கறையில்லாமல் ஸ்காலர்ஷிப்பை வாங்குவதற்காக வருகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். அது நூற்றுக்கு நூறு உண்மை என்று சொல்லிக் கொள்வது இந்த சந்தர்ப்பத்திலே என்னுடைய கடமை என்று நினைக்கிறேன். கல்லூரிகளிலே ஸ்காலர்ஷிப் எல்லாம் வந்து கொடுத்து முடிந்துவிட்டது. பார் யாருக்கெல்லாம் ஸ்காலர்ஷிப் ஸ்டேட் கவர்ன்மென்டிலே இருந்து வந்திருக்கிறது, சென்ட்ரல் கவர்ன்மென்ட்டிலேயிருந்து வந்திருக்கிறது என்று பட்டியல் போட்டேன். இரண்டு மாதமாகக் கல்லூரிக்கு வராத ஒரு மாணவன் ஸ்காலர்ஷிப்பை வாங்கிக் கொண்டுபோக தன்னுடைய தகப்பனாரையும் அழைத்துக்கொண்டு வந்தான். ஏன் இதுவரை வராதவன் வந்தான் என்றால், ஸ்காலர்ஷிப் வந்திருக்கிறது, அதை வாங்கிக்கொண்டு போக வந்தான். மறுநாள் முதல் வரப் போவதில்லை. இந்த மாதிரி மாணவர்கள் இருக்கிறார்கள். ஸ்காலர்ஷிப்புக்காக, வருகிறவர்கள், இப்படிப் பட்டவர்கள்தான் ஸ்டிரைக் முதலியன செய்கிறார்கள். படிப்பதில்லை, மார்க் வாங்குவதில்லை,

என்று பெரியவர்களிடத்திலே சொன்னால், அவர்கள் சொல்கிறார்கள், 600 ரூபாய் வருகிறது, 300 ரூபாய் வருகிறது, பையனாலேதான் வருகிறது, அவனைக் கண்டிக்க முடியவில்லை என்கிறார்கள். ஆகவே இந்தத் திட்டம் சில பயன் படாத நிலங்களிலே பாய்ந்துகொண்டிருக்கிறது, பயன்படவேண்டிய நிலங்களில் பாயாமலும் தடைப்படுகிறது. இதை எல்லாப் பகுதிக்கும் பிரித்துக் கொடுத்து, கொடுக்கிறபோதும் தோற்றுவிட்டால் இல்லையென்று வைக்க வேண்டும். இப்பொழுது பி.ஏ. வகுப்பிலே புதிய முறையைத் தேர்வில் வைத்திருக்கிறோம். முதல் ஆண்டிலே எல்லாப் பாடத்திலேயும் தோற்றாலும், இரண்டாம் ஆண்டுக்குப் போகலாம், முன்பு இன்டர்மீடியட், பி.ஏ. இருக்கிற போது, இன்டர்மீடியட்டை கம்ப்ளீட் செய்துவிட்டுத்தான் பி.ஏ. க்குப் போக வேண்டும். இன்டர்மீடியட்டிலே பார்ட் போய்விட்டது என்றால், நான்கு 'அட்டம்ப்ட்' செய்தாவது 'கம்ப்ளீட்' செய்யவேண்டும். ஆனால் இப்பொழுது உள்ள திட்டத்திலே பி.ஏ. முதல் ஆண்டில் எல்லாப் பாடத்திலும் தோற்றாலும் இரண்டாவது ஆண்டு படிக்கலாம். இரண்டாவது ஆண்டிலே எல்லாப் பாடத்திலேயும் தோற்றாலும் மூன்றாவது ஆண்டுக்குப் போகலாம். மூன்றாவது ஆண்டிலே தோற்று விட்டாலும் பிராக்கட்டிலே பி.ஏ. போட்டு மாணவர் தலைவராகவே இருக்கலாம். அப்படிச் சலுகை வைத்திருக்கிறோம். இது பல்கலைக் கழக மானியக் குழு செய்தது. அரசாங்கத்திற்குத் தொடர்பே இல்லை. ஆகையினாலே பி.ஏ. முதல் ஆண்டு முடிந்து இரண்டாவது ஆண்டு போகச் சொல்லும்போது, அவர்கள் பாசாகி இருந்தால்தான் சலுகை உண்டு என்று சொல்கிற நிலை வேண்டும். இதைப் போல், பதவிகளுக்கு இடங்களை ஒதுக்குவதுபற்றிச் சொன்னார்கள். நேரம் இல்லாததாலே, இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. சி. ஆர். கோலப்பா**: மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, இந்தத் தனி நபர் தீர்மானத்தை நமது மதிப்பிற்குரிய பெரியவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். உள்ளபடியே அவருடைய கருத்துக்களுக்கு வேறுபட்ட சில கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், பொருளாதாரத் துறையை வைத்துச் சலுகை அளிப்பது என்பது முடியாத காரியம் என்பதை இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். காரணம் தமிழ் நாட்டிலே பல ஜாதிகள் இருக்கின்றன. அவர்கள் ஏற்றத் தாழ்வு நிறைந்த சமுதாயத்திலே மிகவும் கஷ்டமான நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். உள்ளபடியே நான் கூறுகிறேன். இந்த அவையிலே நான் ஒரு சலவைத் தொழிலாளியாக இருக்கிறேன். அது சரியல்ல, வண்ணான் சமூகத்தைச் சேர்ந்தவனாக இருக்கி



றேன், என்னுடைய பொருளாதாரத்தையும் ஒரு ஐயர் வகுப்பில் இருக்கின்ற ஒருவருடைய பொருளாதாரத்தையும் வைத்து, இருவரும் சமமானவர்கள் என்று கருதுவது அவ்வளவு பொருத்தமாக இருக்காது என்பதை இந்த அவையில் கூற விரும்புகிறேன். காரணம், அவர்கள் ஒரு உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்கள்; நான் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவன் என்ற எண்ணம் தமிழ் நாட்டில் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமைகளை வைத்துக்கொண்டு, தமிழ் நாட்டிலே, பொருளாதார அடிப்படையிலே சலுகை அளிக்க வேண்டுமென்று கூறுவது என்னைப் போன்ற தாழ்ந்த சமூகத்திலுள்ள மக்கள் அதை எதிர்த்துப் போராடக் கூடிய நிலைமையை உண்டாக்கும் என்பதனை நான் இந்த அவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உள்ளபடியே நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டை வெள்ளைக்காரன் எத்தனையோ ஆண்டுகள் அரசாண்டு வந்தான். 20 ஆண்டுக்காலம் காங்கிரஸ் கட்சி இந்த நாட்டிலே ஆட்சி செய்துகொண்டு வந்தது. இருந்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, நமது கலைஞர் டாக்டர் அவர்கள் இந்த ஆட்சியில் முதலமைச்சராக வந்த பிறகுதான் 2 சலவைத் தொழிலாளிக்கு டெபுடி கலெக்டர் வேலை கிடைத்தது என்பதை இந்த அவையில் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். உள்ளபடியே இந்தச் சமூக மக்களுக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் செய்து கொண்டு வரும் பல நல்ல சேவைகளை முறியடிக்கும் வகையிலே இந்தத் தீர்மானம் இருக்கிறதென்று நான் மன வருத்தத்தோடு கூறிக் கொள்கிறேன். உள்ளபடியே ஜாதியிலும், மதத்திலும் எனக்கு நம்பிக்கை கிடையாது. அதற்கான காரணத்தைக் கூற விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள், இந்த நாட்டிலே உள்ளவர்கள் தங்களைத் திராவிடன் என்று கூறிக்கொள்ள வேண்டும், வாக்காளர் பட்டியலில் திராவிடன் என்று தெரிவிக்க வேண்டும் என்று கூறினார்கள். ஆகையால் என்னுடைய பெயரை வாக்காளர் பட்டியலில் திராவிடன் என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் இந்த நாட்டிலுள்ள ஜாதி சமுதாயக் கோட்பாடுகளைக் கவனிக்கும்போது, இந்தச் சமூகத்துத் தனிச் சலுகை தேவைப்படுகிறதென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த நிலைமைகளில் நமது மதிப்பிற்குரிய கலைஞர் அவர்கள் தமிழ் நாட்டில் பிற்பட்டோர் நலக் குழுவை அமைத்தார்கள். அதன் மூலமாக இப்போது சட்டநாதன் அறிக்கை அரசாங்கத்தின் கவனத்தில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த அறிக்கையைப் பார்த்தால், பிற்பட்ட மக்கள் எந்த அளவுக்குக் கீழ் நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள், மேல் ஜாதிக்காரர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்பதெல்லாம் மிகத் தெளிவாகத் தெரியும். இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்ற இந்த நாட்டிலே, பொருளாதார அடிப்படையிலே சலுகைகள் அளிக்க வேண்டு

மென்பது உள்ளபடியே வரவேற்க முடியாதது என்பதை இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்அவர்கள் கொண்டு வரும் நல்ல திட்டங்களையெல்லாம் நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தத் தமிழ் நாட்டில் ஜாதிகள் இருக்கும் வரை, இந்தச் சலுகைகளும் இருக்க வேண்டுமென்று இந்த அவையிலே கூறி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ஆர். சக்திமோகன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர்கள் கொண்டுவந்திருக்கிற இந்தத் தனி நபர் தீர்மானத்தின் மீது சற்று முன் பேசிய உறுப்பினர்கள் அனைவரும் வெவ்வேறு விதமான கருத்துக்களைச் சொன்னார்கள். சாதி அல்லது சமயம் ஆகியவற்றைப் பாராமல் கல்விச் சலுகைகள், படிப்பு உதவிப் பணம் மற்றும் ஏனைய பயன்கள் அனைத்தும் ஏழை மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய நிலையிலிருக்கும் மாணவர்களுக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்று இந்த அவை அரசுக்குப் பரிந்துரை செய்கிறது என்பதுதான் தீர்மான வாசகம். கல்விச் சலுகை என்ற ஒன்றைத் தவிர ஜாதிக்கோ, மதத்திற்கோ, சமூகத்திற்கோ இந்தத் தீர்மானம் போகவில்லை. தவத்திரு அடிகளார் அவர்கள் கூறியமாதிரி, இது இந்து மதத்தை மட்டும் பிடித்த சாபக் கேடல்ல; இந்தியாவையே பிடித்த சாபக்கேடாகும். இந்தியாவிலே பல மதங்கள் உண்டு. அதில் எந்த மதத்தைத் தனியாகப் பிரித்துப் பார்த்தாலும், மதங்கள் அத்தனையும் சமம் என்ற அளவில் இல்லை. ஒவ்வொரு சமயத்திலும் பல்வேறு ஜாதி, பல்வேறு பிரிவு என்று இருக்கிறது. இது இந்திய மண்ணுக்கு ஏற்பட்ட சாபக்கேடு என்றுதான் கருத வேண்டும். கிருஸ்துவ மதத்தின் அடிப்படையில் நடக்கும் நாடுகளிலே மதத்தைதவிர எந்தவிதமான ஜாதி வேறுபாடும் கிடையாது. அதே போன்று இஸ்லாமிய சமயத்திலே, இந்தியாவைத் தவிர, வேறு நாடுகளில் இவ்வளவு சாதி வேறுபாடு கிடையாது. அந்த நாடுகளில் மத அடிப்படையில்தான் ஆட்சி நடைபெறுகிறது. ஆனால் இந்தியாவில் மட்டும், கிருத்துவ மதமானாலும் பல இனங்கள், பல பிரிவுகள்; இஸ்லாமிய மதமானாலும் அதேபோல பல வர்க்கப் பிரிவுகள் இருக்கின்றன. ஒருவருக்கொருவர் தொடர்பு கிடையாது. சமண மதத்திலும் இப்படித்தான் இருக்கிறது. மதங்களைப்பற்றி லெனின் குறிப்பிடுகிறபோது, மதம் அபினைப் போன்றது என்று சொல்கிறார். அதே லெனின் வேறொரு இடத்தில் 'இசம்' களால் சாதிக்க முடியாத காரியங்களை மதம் சாதித்துவிடுமென்றும் கூறியிருக்கிறார். அந்த அடிப்படையில் மதங்களைப்பற்றி ஆராய்ந்தால், அதற்கு நீண்ட



பெரும் உரையைப் பெருக்க வேண்டும். அதோடு அது நீண்ட விவாதமாக மாறி, அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் தனித்தனி விளக்கங்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென்பதால் அந்த நிலைக்குப் போக நான் விரும்பவில்லை. மதத்தோடு மட்டும் நின்றால் விவகாரமே இல்லை. ஆண்டவன் பொதுவாக மனிதனைத்தான் படைத்தான். ஜாதியைப் படைக்கவில்லை. மனிதன், தன்னுடைய சூழ்நிலைகளுக்கேற்ப தொழில் முறையில் தன்னைப் பிரித்துக் கொண்டான். சாதியை வைத்துச் சில சலுகைகளை ஆரம்ப காலத்திலேயே பெற்றுக்கொண்டான். ஆங்கிலேயர் ஆட்சியிலேயே, மத அடிப்படையில் சாதிகளையும் ஓரளவுக்குப் பிரித்து, அந்த ஆட்சிக்குச் சாதகமாக யார் இருக்கிறார்களோ அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்பட்டன. இந்தியாவில் இந்து மதத்துக்கு அப்படியொரு ஏற்பாடு இல்லாத காரணத்தால், அது நசித்துப் போகும் நிலைக்கு வந்தது. அடிகளார் அவர்கள் இந்து மதச் சாபத்தைப் பற்றி வருந்தினார்கள். இந்து மதத்தைப் பாதுகாக்க, இந்து மக்களைப் பாதுகாக்க, மக்கள் வட்டாரத்தில் ஒழுங்கைப் போதிக்க மடாலயங்கள் அமைக்கப்பட்டன. இன்று இந்து மடாலயங்கள் தெய்வ நெறிக்காக, தெய்வப் பாங்குக்காக எந்த அளவுக்குச் செயல்படுகின்றன என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்து மதஸ்தாபனங்கள் சரிவரச் செயல்படாததால் இந்த அளவுக்கு இந்து மதம் கேட்பாரற்ற நிலைக்குப் போய்விட்டது. மனித இன அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றோ, பின் தங்கிய இனம் என்றோ ஒன்று கிடையாது. அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் தங்களுடைய ஆட்சிப் பொறுப்பையும், அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு தமக்குச் சாதகமாக பிற்பட்ட இனத்தை உருவாக்கி, அவர்களுக்குப் பெரிய கொடுமைகளை இழைத்து வந்தார்கள். பிறகு அந்தப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, தனிப்பட்ட முறையில் சலுகைகள் கொடுக்க வேண்டுமென்ற நடைமுறை ஏற்பட்டது. இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கணிசமான அளவுக்கு அவர்களுக்கு உதவிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. பிற்பட்ட இனத்திற்கு அதிகமான கல்விச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தச் சலுகைகள் அனைத்தும் உண்மையிலேயே தகுதி வாய்ந்த மக்களுக்குப் பயன்படுகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். உண்மையிலேயே அந்த உதவிகள் அவர்களுக்குப் போய்ச் சேர்வதில்லை. அந்த உதவிப் பணமானது, வசதியுள்ளவர்களுக்கும், மேலிடத்திலிருந்து சிபாரிசு கொண்டு வருபவர்களுக்கும், பணம் உள்ளவர்களுக்கும், உயர் நிலையில் உள்ளவர்களுக்கும் தான் போய்ச் சேருகிறது. தவத்திரு அடிகளார் அவர்கள் சொன்னமாதிரி, இதற்குக்காரணம் 'ன்' 'ர்' என்ற எழுத்தில் உள்ள வித்தியாசம்தான். உதாரணமாக 'வடுகன்' என்று சொன்னால், அவன் பணக்காரனாக இருந்தாலும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவன், உதவியுண்டு. ஆனால் அதே சமயத்தில்

வடுகர் என்று சொன்னால், அவர் பரம ஏழையாக இருந்தாலும், முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவர், உதவி இல்லை. இப்படி சில இடங்களில் இருக்கிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்டுள்ள மக்கள், பொருளாதாரத்தில் கீழ் நிலையிலுள்ள மக்கள்—இவர்களில் யாராக இருந்தாலும் ஜாதி சமுதாயத்தைப் பார்க்காது உதவி செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தை பாராட்டித்தான் ஆகவேண்டும். முற்போக்கு சமூகத்தில் உள்ளவர்கள் அத்தனை பெரும் பணக்காரர்களாகவோ, பெரிய படிப்பாளிகளாகவோ அல்லது பெரிய உத்தியோகத்தில் இருப்பவர்களாகவோ இல்லை. பணக்காரர்கள் என்று சொல்லும்போது, யாராக இருந்தாலும் அவர்களிடத்தில் ஜாதி வேறுபாடு தலைகாட்டுவதில்லை. பதவியில் இருப்பவர்களுக்கு, ஜாதியில் தாழ்ந்தவர்கள் என்று யாரும் மரியாதை தராமலில்லை. பெரும்பாலான முற்போக்கு சமுதாயங்கள் மைனாரிட்டிதான். அந்த மைனாரிட்டி சமூகத்திற்குத் தனிப்பட்ட சலுகைகள், பாதுகாப்புகள் கொடுக்க வேண்டுமென்று அரசியல் நிர்ணயச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த முறையில் பார்க்கும்போது, பொருளாதார அடிப்படையில்தான் உதவி புரிய வேண்டும். ஜாதி எதுவாக இருந்தாலும், தாம் வசதியற்றவர்கள் என்பதற்கான சான்றுகளோடு வருவார்களேயானால், அவர்களுக்கு உதவி அளிக்கப்பட வேண்டும். பதவி பெறுவதற்கோ, வாழ்க்கை நடத்த முடியாமலிருந்தால் வாழ்க்கை நடத்துவதற்கோ, பொருளாதாரத் துறையில் மிகவும் கீழ்ப்பட்ட நிலையில் உள்ள ஒருவர் தக்க சான்றுடன் உதவி கேட்பாரேயானால், அவருக்கு அந்தச் சலுகைகளைக் கொடுக்க வேண்டும். பிற்போக்கு சமுதாயம், முற்போக்கு சமுதாயம் என்று பிரித்து முற்போக்கு சமுதாயத்தை ஒதுக்கி விட்டால், பிற்காலத்தில் முற்போக்கு சமுதாயமாக இருக்கின்ற மைனாரிடி மக்கள் ஏழைகளாகி அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சேர்ந்ததாகிவிடும். முற்போக்கு சமுதாயம் எனக் கூறப்படுகிற சமுதாயம் மைனாரிடியாகத்தான் இருக்கிறது. அந்த மைனாரிடி சமுதாயத்தைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் சர்க்காரைச் சார்ந்தது தான். ஆகவே நடைமுறையிலே இப்போது பிற்பட்ட மக்களுக்கு எவ்வளவு சலுகை கொடுக்கப்படுகின்றதோ அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி தகுதியானவர்களுக்கு அது போய்ச் சேர வேண்டுமென்ற ஒரு நிலையைக் கட்டாயப்படுத்துவதோடு, இப்போது பொருளாதார நிலையில் கீழ்ப்பட்டிருக்கின்ற மக்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கும் ஜாதி வித்தியாசம் பாராமல், கல்வி, இதர சலுகைகள் கொடுக்கப்படவேண்டுமென்று ஒரு முறையை நடைமுறைப் படுத்துவது எல்லா மக்களுக்கும், பொதுவாக அரசுக்கு, நல்லது எனக்கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.



* திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, அங்கத்தினர் திரு. சந்தோஷம் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய இந்தத் தனியார் தீர்மானத்தின் மீது நான் பேசுவதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைத்ததற்கு நான் மகிழ்ச்சியடைகின்றேன். நீண்டகாலமாக என்னுடைய உள்ளத்திலே தோன்றி இருத்தி வைத்திருக்கின்ற பல்வேறு எண்ணங்களை எடுத்துச் சொல்வதற்கு இது வாய்ப்பாக அமைந்தது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்திய நாடு மதச்சார்பற்ற நாடு என்று இந்திய அரசியல் சட்டத்திலே கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் மதச் சார்பற்ற நாடு என்று கூறிக்கொண்டு மத ஆதிக்கங்களும், ஜாதி ஆதிக்கங்களும் சமுதாயத்திலே தலை விரித்தாடி இந்த சமுதாயத்தை முன்னேற முடியாமல் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலை இருக்கின்றது என்பதைப் பற்றி நம்முடைய பெருமைக்குரிய நண்பர் திரு. சக்திமோகன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். ஜாதியை ஒழிப்பதற்காகத் தமிழகத்திலே, தமிழ் சமுதாயத்திலே, தமிழ் நாட்டிலே பிறந்த பல பகுத்தறிவாளர்களிலே இன்றைக்கும் அன்றைக்கும் தலையாயவராக இருப்பவர் தந்தை பெரியார் அவர்கள். அவர்கள் இன்று அந்தப் புரட்சியை உண்டாக்க வேண்டுமென்பதற்காகப் பாடுபட்டு வருகின்றார்கள். ஏன், மேலவைத் தலைவராக இருக்கக் கூடியவர்களே, இந்தப் பகுத்தறிவாளர்களுடைய சமுதாயத்திலே இருப்பவர்கள். அவர்கள் ஜாதி ஒழிப்பிலே, மதத்தைச் சாடுவதிலே தீவிர வீரராக இருந்து, அந்தக் காலத்திலேயே பிரச்சினைகளை எடுத்துச் சொன்னவர்கள். அவருடைய இயக்கத்திலே நாங்களெல்லாம் ஒன்றுபட்டு இருந்தவர்கள். அத்தகைய செயல்களிலே ஈடுபட்டிருந்த தலைவரின் தலைமையிலேயே இன்றைக்கு சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு ஏற்பட்டிருப்பது குறித்து நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: 'Secular state' என்றால் அரசாங்கத்திற்கு மதம் இல்லையே தவிர, மற்ற மதத்திற்கு அரசு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அதுதான் சரி.

திரு. செ. முத்துசாமி: நான் தலைவர் அவர்கள் சொன்னதைப் புரிந்து கொண்டுதான் பேசுகிறேன். மதச்சார்பு இல்லாத நாடு என்று சொல்கின்றார்கள். ஆனால் மதச் சார்பு இல்லையென்று சொல்லிவிட்டு ஒரு குறிப்பிட்ட மதத்தின் பெயரால் சண்டைகளும், கலவரங்களும் நடக்கும்போது, இந்த நாட்டிலே மதமே கூடாது என்று கோபப்பட்டுப் பேசியுள்ள அரசியல் வாதிகளையும், ஆட்சிப்பொறுப்பிலே உள்ளவர்களையும்தான் பார்க்கின்றோம். அது சம்பந்தமான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இந்த நாட்டிலே இன்னும் தீர்வுகள் காண முடியவில்லை. இந்தமாதிரியான அடிப்படை நிலை இருக்க வேண்டுமென்ப

தில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று நாம் பிள்ளைகளுக்குக் கற்றுத் தருகிறோம். ஜாதிகள் இருக்கும் வரையில், கல்வியில் பிற்பட்டவர்கள், சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் ஆகியோருடைய நலன்களைப் பாதுகாக்க வேண்டும், ஜாதியை ஒழிக்கவேண்டுமென்று சொல்லும் தந்தை பெரியார் அவர்கள் கம்யூனல் ஜி.ஓ. கொண்டுவர வேண்டுமென்று போராடியிருக்கின்றார்கள் என்பதை நினைவில் கொண்டு பேசுகின்றேன். இன்றைக்கு இருக்கக்கூடிய தமிழ் நாடு அரசாங்கம் சமுதாயத்திலே பிற்பட்டு இருப்பவர்களுடைய, பின்னுக்குத் தள்ளப்பட்டவர்களுடைய, ஹரிஜனங்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களை வைத்திருக்கின்றார்கள். அதை நான் முழுமனதோடு வரவேற்கின்றேன். அதே சமயத்திலே ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால் இருக்கக்கூடிய இந்த நிலைமைகள் மாற்றப்பட வேண்டுமென்பதிலே நான் உடன்படுகின்றேன். அதே சமயத்திலே பொருளாதார ரீதியிலே பார்க்கும்போது, ஏழ்மை வாழ்வில் இருக்கக்கூடியவர்கள், வாழ வழியில்லாமல் இருப்பவர்கள், 24 மணி நேரம் உழைத்துக்கொண்டிருக்கும் விவசாயக் கூலிகள், ஏழைப் பாட்டாளிகள், உழைப்பதற்குத் தயாராக இருக்கக்கூடிய ஏழைகள், இவர்களுடைய பிள்ளைகளுக்கெல்லாம், மேல் ஜாதி என்று பிரிக்கப்பட்டு அந்த ஜாதியில் பிறந்து விட்ட ஒரு காரணத்தினாலேயே பள்ளிக் கல்விச் சலுகைகள் கொடுக்கப்படாமல் இருக்கக்கூடிய ஒரு நிலைமையை இந்த நாட்டிலிருந்து அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். சரியான வாய்ப்பு அந்தப் பிள்ளைகளுக்குக் கிடைக்காமல் இருக்கின்றது. இந்தக் கொடுமை இந்த நாட்டை விட்டு அகல வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கின்றேன். இதுவும் ஒரு கொடுமைதான். ஜாதியிலே பிற்பட்டவர்களாக இருக்கக்கூடியவர்கள், சமுதாயத்திலே பொருளாதார ரீதியிலே முன்னேற வழியில்லை என்பதற்காக அந்தக் காலத்திலே கொண்டுவரப்பட்ட ஒரு ஜாதி முறைதான் அது. சோசலிச தத்துவத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்ற இந்த நாட்டிலே இல்லாதவன், இருப்பவன் என்ற நிலையிலேதான் ஜாதிப் பிரிவினை நடைமுறையில் இருந்து வருகின்றது. இன்றைக்கு ஜாதிகளை எப்படித் தங்கள் பாதுகாப்புக்காகப் பயன்படுத்திக் கொள்கின்றார்கள்? எங்கு சென்றாலும் ஜாதியில் மேட்டுக்குடி மக்கள் இருக்கின்றார்கள். மேட்டுக்குடி மக்கள் கீழே இருக்கக்கூடிய மக்களை தங்களுடைய பண்ணைகளிலே வைத்திருக்கின்றார்கள். அந்தப் பண்ணைகளிலே உழைத்துக்கொண்டிருக்கின்றவனுக்கும் ஒரே சலுகை, பண்ணையினுடைய முதலாளியாக இருக்கக்கூடியவனுக்கும் ஒரே சலுகை. இப்படி இன்றைக்கு இருக்கின்ற இந்தச் சூழ்நிலை மாற்றப்பட்டாக வேண்டும். இது சோசலிச நாடு. உழைக்கின்ற அத்தனைப் பேர்களுக்கும் வேலை கொடுக்கவேண்டியது, அதற்கு உத்தரவாதத்தைக் கொடுக்கவேண்டியது இந்த



அரசின் கடமையாகும். அரசியல் சட்டத்திலே அடிப்படை உரிமையிலே சொல்லப்படாததால்தான் இன்றைக்கு இருக்கக்கூடிய ஜனநாயக அரசு எல்லாதரப்பட்ட மக்களுக்கு, உழைப்பவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு ஒரு உத்தரவாதத்தை அளித்து வேலை கொடுக்க வேண்டுமென்ற அவசியமற்ற ஒரு துர்பாக்கியமான நிலை இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். படிக்கக்கூடிய குழந்தைகளுக்குச் சலுகைகள் கோட்டா முறையில் இருப்பதை நீக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்கின்றேன். எல்லோருக்கும் கல்வி-எல்லோருக்கும் வேலை என்ற அந்தக் கருத்தில் நான் உடன்படுகின்றேன். பல நாடுகளிலே கல்விக் கூடங்களை எடுத்துக்கொண்டு அரசாங்கமே குழந்தைகள் அனைவரையும் பயிற்றுவிக்கக்கூடிய நிலைமையில், அவர்களுக்கு ஹாஸ்டல் வசதிகள் அளிக்கின்ற நிலைமையில் இருக்கின்றது. அவர்களுக்கு இருக்கக்கூடிய திறமைகளுக்கு ஏற்றாற்போல் உத்தியோகங்களைத் தரக்கூடிய நிலைமை பல நாடுகளிலே அரசியல் ரீதியாக வகுக்கப்பட்டிருக்கின்றது என்று சொல்லிக்கொள்கிறேன். இதுதான் நாகரீகமான நாடு ஆகும். தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இங்கே சொன்னார்கள். இது ஒரு உத்தரவாதமற்ற சமுதாயமாக இருக்கின்றது. அப்படி உத்தரவாதமற்ற சமுதாயத்தில் இருப்பவர்களுக்குச் சொத்துடைமையில் ஆறாக் காதல் இருக்கின்றது என்று சொன்னார்கள். சொத்துடைமை மீது மட்டுமல்ல, மதத்தின் மீதும் ஆறாக் காதல் கொண்டிருக்கிறார்கள். மதத்தின் கொடுமை, ஜாதியின் கொடுமை இவைகள் இந்த நாட்டை விட்டு அகல வேண்டும். அதை அகற்றுவதற்கு ஒரு புரட்சிகரமான தலைமையினை உருவாக்கி எத்தகைய தியாகங்களைச் செய்தாவது நிச்சயமாக அதை அகற்ற வேண்டிய அளவிற்கு இந்த நாடு நெருக்கடியில் தள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவன்போடு சொல்லிக்கொள்கின்றேன். ஜாதியின் பெயராலே இருக்கக்கூடிய சலுகைகளை நீக்க வேண்டுமென்று நான் சொல்கிறேன். காரணம், ஜாதியைக் காட்டி ஏழைகளாக இருக்கக்கூடியவர்களுடைய பிள்ளைகளைக் காட்டியும், பணக்காரர்களாக இருக்கக்கூடியவர்கள்தான் பிற்பட்டவர்கள் என்ற போர்வையிலே இருக்கக்கூடியவர்கள் வசதியுள்ள குடும்பத்தினர்தான் அந்தச் சலுகைகளை அனுபவிக்க முடிகிறது. இன்னொரு கொடுமை இருக்கிறது என்று நான் சொல்கின்றேன். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தற்போதுள்ள சலுகை அடைய முடிவதில்லை. உச்ச வருமானம் ரூபாய் 2,500 என்று வைத்திருக்கின்றார்கள். அந்த ரூ. 2,500 சம்பளத்தை அவர்கள் மனுவில் காண்பிக்க வேண்டியிருக்கின்றது. இந்த ரூபாய் 2,500 பல ஆண்டுகளுக்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு வருமானம். ஆனால், இன்றைக்குச் சம்பளங்கள் உயர்த்தப்பட்டுள்ளது. பணவீக்கமும் ஏற்பட்டிருக்கின்றது. இந்த வருமான வரம்பு இன்றைக்கும் ரூ. 2,500 என்று வைக்கப்பட்

டிருக்கின்றது. வியாபாரத்தில் இருப்பவர்கள் ஆயிரம் ரூபாய்தான் வருமானம் என்று சொல்லி சான்றுகள் வாங்கிக் கொடுத்துவிடுகிறார்கள். உத்தியோகத்திலே இருப்பவர்களுக்கு அந்தச் சலுகைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. காரணம் அவர்களால் அவர்கள் வருமான விவரத்தை மறைக்க முடிவதில்லை. ஆதலால் இந்த வருமான உச்ச வரம்பை உயர்த்த வேண்டும் என்பதை இந்த நேரத்திலே பிற்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இதே சமயத்தில், முதலமைச்சர் அவர்கள் பிற்பட்ட மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுவதை அறிவிக்கும்போது நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஆனால் இதுவே அடிப்படைப் பிரச்சினையைத் தீர்த்துவிடாது. அதே மாதிரி இந்த நாட்டிலே இரண்டிலுமே சேராமல் ஒரு ஜாதியின் பெயரால் மேற்பட்டவர்கள் என்று சொல்லப்பட்டு, அதே சமயத்தில் சமுதாயத்திலே தாழ்ந்த நிலையில் இருக்கக்கூடிய ஏழைகள், வருமானம் இல்லாத கூலிகளாக இருப்பவர்களுடைய பிள்ளைகளுக்கும் சலுகை அளிக்க வேண்டும். அதை நீங்கள் மறுக்க வேண்டாமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கின்றேன். அந்தச் சலுகைகளை அவர்களுக்கு அளிக்க இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக மறுக்கமாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். சாதாரணமாக ஏழைகளை அவர்கள் கணக்கில் கொண்டு, ஏதாவது ஒரு திட்டத்தை வைத்து அந்த ஏழைகள் வாழ்வதற்கு வாய்ப்பினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஹரிஜனங்கள், பார்வார்ட், பேக்வார்ட் வகுப்பினருக்கு இவ்வளவு இடங்கள் பள்ளிக்கூடங்களில், உத்தியோகங்களில் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களுக்கு காம்படிசன், போட்டித் தேர்வு நடக்கின்றது. அந்தத் தேர்வில் ஏற்கெனவே முன்னேறியிருக்கின்றவர்கள், கல்வி பெறக்கூடிய சூழ்நிலையில் இருப்பவர்கள், பொருளாதார ரீதியில் நல்லபடியாக இருக்கின்ற காரணத்தால் வெற்றி பெற்றுவிடுகின்றார்கள். ஆனால், ஏழைகளாக, கூலிகளாக எல்லா ஜாதியிலும் இருக்கக்கூடிய தாழ்ந்த ஜாதியில் இருக்கக்கூடியவர்களுடைய பிள்ளைகளுக்கும் வாய்ப்புக் கிடைக்காமல் போய்விடுகின்றது. ஆனால் அதே ஜாதியில் பொருளாதார ரீதியில் மேற்பட்டுள்ளவர்கள் போட்டியில் சுலபமாக வெற்றி பெறுகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இந்தச் சலுகைகள் சம்பந்தமாக 'முற்பட்டவர்கள்', 'பிற்பட்டவர்கள்' என்று சொல்லும்போது அது பொருளாதார ரீதியில் 'முற்பட்டவர்கள்', பிற்பட்டவர்கள்' என்றுதான் இருக்க வேண்டும். இன்றில்லாவிட்டாலும் எதிர்காலத்தில் என்றாவதொரு நாள் ஏழைகள் பணக்காரர்கள் என்ற நிலை மாறக்கூடும். ஆனால் இன்றுள்ள சூழ்நிலை இது. இன்று பணக்காரன், ஏழை என்ற பெரும் வித்தியாசங்கள் இருக்கும்போது, அது பொருளாதார அடிப்படையி



லேயே அமைய வேண்டுமே அல்லாது, ஜாதி அடிப்படையில் இருப்பது நியாயமாகாது. எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் உத்தியோகம் என்ற நிலைமைகளை உண்டாக்கும்போது, பாரதிதாசன் பாடினானே, 'எல்லோருக்கும் எல்லாம் எனும் திக்கு நோக்கி செல்லுகிறது இவ்வையம்' என்று, அந்தப் புரட்சிக் கவிஞன் பாடிய கருத்தினைச் செயலாக்கத்தக்க முறையில், நமது இந்திய அரசும் தமிழக அரசும் முன்நின்று பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழக அரசினைத்தான் நான் கேட்டுக்கொள்ள முடியும், கேட்டுக் கொள்ளுகிறேன். இதை ஒரு முக்கியமான பிரச்சினை என்று கருதி இதை வலியுறுத்துகின்றேன். பகுத்தறிவு வாதத்தை முன்வைத்து வளர்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிப்பொறுப்பில் இருக்கும்போது, இந்தச் சமுதாயக் கொடுமைகள், ஜாதிச் சனியன்கள் இவற்றை அகற்றுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். கிறுத்துவ மதத்திலுள்ளவர்களுக்குக் கட்டுப்பாடு இருக்கின்றது. முஸ்லீம் மக்களுக்கும் இருக்கின்றது. ஆனால் இந்து சமுதாயத்திலுள்ளவர்கள் விஷயத்தில் அது கொஞ்சம் சரியில்லை என்று அடிகளார் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒற்றுமை-வேற்றுமைகளை எடுத்துக் காண்பிப்பதற்காகத்தான் சொன்னார்களே தவிர, இந்த மூன்றுமே தேவையில்லாத ஒன்று, மனித சமுதாய வளர்ச்சிக்கு இவை தேவையில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதைச் சொல்லுவதில் நான் வெட்கப்படவில்லை. நாட்டிலே ஜாதி மதபேதங்கள் இருக்கும்வரையில் நாடு முன்னேற்றமடைய முடியாது. இக்கருத்தினை ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க விதத்தில் இங்கே கூட அமைச்சரவையில் ஒரு சிந்தனை ஏற்பட்டது, ஆனால் பொருளாதார அடிப்படையில் சலுகைகளைக் கொடுப்பது என்றால், அதை எப்படிச் செயல்படுத்துவது என்பதில்தான் குழப்பமாக இருக்கின்றது என்று சில நேரங்களிலே சொல்லியிருக்கின்றார்கள். எப்படியிருந்தாலும், வசதியற்ற ஏழைகள், பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள் இவர்களுடைய நிலைமைகளை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நமது அமைச்சரவையும் கருத்தில்கொண்டு ஏழைகளுக்கு இதுவிஷயத்தில் ஏதாவது செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஜாதி அடிப்படையில் என்று சொல்லும்போது, மிக வசதி படைத்த, பல கிராமங்களுக்குச் சொந்தமான, ஜமீன்தார் குடும்பத்திலிருந்து வந்த காலம் சென்ற டாக்டர் சுப்பராயன் அவர்களும் ஒன்று, அதே ஜாதியில் பிறந்து கூலி வேலை செய்து பிழைத்த குடும்பத்தில் பிறந்த நானும் ஒன்று என்பதில் என்ன நியாயம் இருக்க முடியும் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஏதோ நான் சிறிது கஷ்டப்பட்டுப் படித்து ஆசிரியர் தொழிலுக்குத்தான் என்னால் வர முடிந்தது. பின்னர் என்னை வருத்திக்கொண்டு சிறுசேமிப்பினைக்கொண்டு என் உடன் பிறந்தவனைக் கல்லூரியில் படிக்க வைத்தேன். ஆக, ஜாதியின் அடிப்படையில் நாங்கள்

(நானும், டாக்டர் சுப்பராயன் அவர்களும்) இருவருமே ஒன்றுகிவிட முடியுமா? மன்றாடியார் அவர்களும் அவரது பண்ணையிலேயே கூலி வேலை செய்யும் அவரது ஜாதியைச் சேர்ந்த பண்ணையாட்களும் ஒன்றுகி விடமுடியுமா? பெரிய தொழிலதிபர் சேஷசாயி குடும்பத்தில் பிறந்தவரும், அதே ஜாதியைச் சார்ந்த வேறு சிலர் அதே நிறுவனத்தில் தினக் கூலிகளாகப் பணிபுரிகின்ற வர்களும் ஒன்றுகி விட முடியுமா? இவர்கள் இருவருக்குமே ஜாதியின் அடிப்படையில் ஒரே விதமான சலுகைகளை அளிப்பது என்பது எந்தவிதத்தில் நியாயமாக இருக்கமுடியும்? மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று அவர்களுடைய சிந்தனைக்கு இதை முன்வைக்கின்றேன். இப்படிப்பட்ட சிந்தனையின் மறுமலர்ச்சி, இன்றைக்கு இந்தத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும், என்றைக்காவது மக்களிடையில் ஏற்படத்தான் செய்யும். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஜாதியின் அடிப்படையில் என்று இல்லாமல், பொருளாதார ரீதியில் வசதியற்றவர்கள், ஏழைகள், இவர்களுக்கென ஒரு திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு தலைவர் மணியடித்தார்.)

மேலும் மைனுரிட்டியின் பெயரால், ஜாதி மதத்தின் பெயரால் நடத்தப்படும் பள்ளிகளிலே போதனைகளையும் அறிவுரைகளையும் கல்வியின் பெயரால் அவற்றைத் தடுக்க முடியாத அளவிற்கு மதபோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. இப்படிப் பள்ளிகளிலே இளம் உள்ளங்களிலே மதம் பெருமளவிற்கு ஊடுருவல் செய்கின்றது. இதை நீக்குவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஏழை மக்களுக்கு பொருளாதார அடிப்படையிலே நீதி வழங்க வேண்டுமென்று கூறும் இந்தத் தீர்மானத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு இன்றைக்கு தனியார் தீர்மானமாக வருவதை அரசு நிறைவேற்ற யோசித்தாலும், எதிர் காலத்தில் அதற்கான சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது எடுத்துக்கொண்டுள்ள தனி நபர் தீர்மானங்களிலே முதல் தீர்மானத்தின்மீதான விவாதமே இன்றைய நாள் முழுவதும் சென்று விடும் என்ற நிலைமையில், மேற்கொண்டு இரண்டு தீர்மானங்களும் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்ற காரணத்தினால், அவற்றின் மீதான விவாதங்களை வரும் வியாழன் அன்று அதாவது 29---11---1973 அன்று வைத்துக்கொள்ளலாம் என்ற கருத்து சொல்லப்படுகின்றது. இக்கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் 29---11---1973 அன்று கூட்டம் இல்லை என்பதற்கு பதிலாக அன்றைக்கு மேலவைக் கூட்டம் நடப்பதாக எடுத்துக்கொண்டு மற்ற இரண்டு தீர்மானங்களை இதே வரிசைமுறையில் அன்றைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.





**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இதை அவை அனுமதிக்கின்றதா?

அவை அனுமதியின் பேரில் 29—11—1973 அன்று இந்த இரண்டு தீர்மானங் களும் இதே வரிசை முறையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தோஷம் அவர் கள் கொடுத்துள்ள இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதாக நான் முதலில் இல்லை. ஆனால் இன்று இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்தத் தீர்மானத்தின்மீது பேசியதைப் பார்த்த பிறகு, அவர்களுடைய உணர்ச்சி களைக் கவனித்தபிறகு, இந்தத் தீர்மானத்தின்மீது நானும் பேசலாம் என்ற உணர்ச்சி ஏற்பட்டு இப்போது ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகின்றேன்.

எனது மதிப்பிற்குரிய நண்பர் திரு. ஆறுமுகசாமி அவர்கள் கடந்த சில நிமிஷங்களாக யார் பேச இருக்கிறார் என்று பார்த்து, அவர் இதைத்தான் பேசுவார் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றார். காரணம் பேசப்போகின்றவர் யார் என்று தெரிவித்துவிட்டால், இந்தத் தீர்மானத்தின் மீது அவருடைய கருத்து இதுவாகத்தான் இருக்கும் என்று கண்டுபிடிக்க முடியும் என்ற எண்ணத்தில் அவர்கள் அதைச் சொல்லுகின்றார்போலும். பேச இருக்கின்ற உறுப்பினர் மேல்வகுப்பினராக இருந்தால், இந்தத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவார், பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவராக இருந்தால் அவர் இந்தத் தீர்மா னத்தை எதிர்த்துப் பேசுவார், மிகவும் பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவராக இருந்தால் மிகவும் கண்டித்து எதிர்த்துப் பேசுவார் என்று, அவர் கொண்டுள்ள சோஷலிசக் கருத்தின் அடிப்படையிலே, அவர் புரிந்துகொண்டுள்ள சோஷலிசக் கருத்தின் அடிப்படையிலே, அவர் தம்முடைய தத்துவத்தை எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கின்றார். அது அவர்களுடைய கணிப்பாக இருக்கட்டும். அது பிரச்சினை இல்லை. ஆனால் நான் சொல்ல விரும்புவது, இந்தப் பிரச்சினை மீது இப்படிப்பட்டதொரு நீண்ட விவாதம் வந்திருக்கத் தேவையில்லை. நமது மதிப்பிற்குரிய நண்பர்கள் இந்தத் தீர்மானத்தைச் சரியாகப் படித்தார்களா,

[திரு. ஜி. சுவாமிநாதன்] [1973 நவம்பர் 24

